அக்னிப் பிரவேசம்

எண்டமூரி வீரேந்திரநாத்

கௌரி கிருபானந்தன்

அக்னிப்பிரவேசம்

எண்டமூரி வீரேந்திரநாத்

கௌரி கிருபானந்தன்

1

நவம்பர் 12, வியாழக்கிழமை,

ராயப்பேட்டையில் ஒரு மகப்பேறு ஆசுபத்திரி.

நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த அறையைத் தவிர ஆஸ்பத்திரி முழுவதும் நிசப்தமாய் இருந்தது.

அந்த அறையில் மட்டும் என்றுமே நிசப்தத்தைக் காணமுடியாது. பிறப்பு இறப்புக்கு நடுவே போராட்டம் அங்கே நிரந்தரமாய் எதிரொலித்துக் கொண்டே இருக்கும். ஒரு ஜீவனின் உயிரை சோதித்தபடி மற்றொரு ஜீவன் பிறக்கும் இடம் அதுதான். பெண்ணாகப் பிறந்தவள் எந்த சங்கோஜமும் இல்லாமல் தன் வலியை வெளிப்படையாய் ஒப்புக்கொள்ளும் இடமும் அதுதான்.

அந்த அறையில் நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்கள் இருவர் இருந்தார்கள். பக்கத்து அறையில் லேடி டாக்டர் உறங்கிக் கொண்டிருந்தாள். நர்ஸ் ஒருத்தி பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருந்த இரு பெண்களையும் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள். எத்தனையோ கர்ப்பிணி பெண்களை அந்த சமயத்தில் அனுசரணையாய் நடத்தியிருக்கும் மென்மை அந்தக் குரலில் இழையோடி இருந்தது.

அந்த அறையிலேயே இன்னொரு நர்சும் உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் பெயர் ஆதிலட்சுமி.

பிரசவ வேதனை அனுபவித்துக் கொண்டிருக்கும் இரு பெண்களுக்கும் ஏறக்குறைய ஒரே வயதுதான் இருக்கும். பிரசவ நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

தேவையான சமயத்தில் எழுப்பும்படி சக நர்ஸிடம் சொல்லிவிட்டுப் போய்ப் படுத்துக் கொண்டுவிட்டாள் ஆதிலட்சுமி. அவள் ஒரு சினிமா பைத்தியம். அன்று மாலைதான் முதல் ஆட்டம் சினிமாவுக்குப் போயிருந்தாள். பக்கத்துப் பக்கத்தில் இரண்டு தியேட்டர்கள். ஒன்றில் எம்.ஜி.ஆரின் படம். மற்றொன்றில் சிவாஜியின் படம். பூவா தலையா போட்டுப் பார்ப்பது அவளுடைய மற்றொரு பழக்கம். டாஸ் போட்டுப் பார்த்துவிட்டு எம்.ஜி. ஆரின் படத்திற்குப் போனாள்.

பிரசவ வேதனை பட்டுக் கொண்டிருந்த இரண்டு பெண்களில் ஒருத்தியின் பெயர் நிர்மலா. ஒல்லியாய், சிவப்பாய் இருந்தாள். பணக்கார வீட்டுப் பெண்ணைப் போலத் தொற்றமளித்தாள். வலி தாங்க முடியாமல் உரத்த குரலில் கத்திக் கொண்டிருந்தாள்.

பக்கத்து கட்டிலில் இருந்தவள் அருந்ததி. திடமாய், தெம்பாய் இருந்தாள். வலியை வெளியில் காட்டிக் கொள்ளாமல் பொறுத்துக் கொண்டிருந்தாள். 'ஆணா பெண்ணா என்று கடந்த ஒன்பது மாதங்களாய் நீடித்துக் கொண்டிருந்த சஸ்பென்ஸ் விரைவில் தீர்ந்து விடப் போகிறது இருவருக்கும்.

இருவருக்கும் வலி அதிகரித்தது. நர்ஸ் இருவரையும் சமாதானப் படுத்திக்கொண்டே ஆதிலக்ஷ்மியையும் எழுப்பினாள்.

நல்ல கனவில் ஆழ்ந்திருந்த ஆதிலட்சுமி கண்களைக் கசக்கிக் கொண்டே எழுந்து கொண்டாள். அவள் கனவில் பணக்காரனின் மகன் திருடனாய் வளர்ந்து எம்.ஜி.ஆர். ஆகி ஹீரோயினுடன் டூயட் பாடிக் கொண்டிருந்தான்.

நர்ஸ்கள் இரண்டு பேரும் ஆளுக்கொரு பெண்ணின் அருகில் நின்று பணிவிடை செய்தபடி தைரியம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதற்குள் டாக்டரும் வந்துவிட்டாள்.

நிமிடங்கள் பாரமாய் கழிந்து கொண்டிருந்தன.

திடீரென்று நிர்மலா வீலென்று கத்தினாள். அதுவரை வலியை அடக்கிக் கொண்டிருந்த அருந்ததியும் கூட! அவ்வளவு நேரமாய் அனுபவித்து வந்த துன்பம், டென்ஷன் எல்லாம் ஒரேயடியாய்த் துடைத்தெறிந்தாற்போல் போய் விட்டது. இரு பச்சிளம் குழந்தைகளின் அழுகைக் குரல் கேட்டது. சரியாய் அதே சமயத்தில் கடியாரம் பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது.

இவ்வுலகத்தின் சுக துக்கங்களை, சந்தோஷத்தை, வேதனையை பகிர்ந்துக் கொள்வதற்கு ஒரு வினாடி கூட வித்தியாசம் இல்லாமல் இரு குழந்தைகளும் ஒரே நேரத்தில் இந்தப் பூமியின் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கின.

அனுபவிக்கும் அதிர்ஷ்டம் இருந்துவிட்டால் இந்த வாழ்க்கை முழுவதும் இல்லாத சந்தோஷம் வேறு இல்லை. ஜாதகம் மட்டும் சரியாக இல்லை என்றால் வாழ்க்கை முழுவதும் நரகம்தான். அதிர்ஷ்டத்தையும், ஜாதகத்தையும் நம்பிக்கொண்டு இருக்காமல் தன்னுடைய ஆற்றல் மீது நம்பிக்கை வைப்பவர்களுக்கு இந்த உலகத்தைப் போன்ற சவால் வேறு இல்லை.

ஆதிலட்சுமி இரு குழந்தைகளையும் வாஷ்டப் அருகில் எடுத்துச் சென்றாள்.

அப்பொழுத்துதான் அவளுக்கு அந்த யோசனை வந்தது. அதில் எந்த சுயநலமும் இல்லை. எந்த நோக்கமும் இல்லை. ஏதோ த்ரில்! அவ்வளவுதான்.

அவள் பார்த்த சினிமாவில் திருடன் ஒருவன் தன் மகனை இடம் மாற்றி விடுகிறான். திருடனின் மகன் திருடனாய் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நிரூபிக்கிறான்.

இங்கே அவ்வாறு இல்லை. அப்படி எதுவுமே இல்லை. இருவரும் தன்னிடம்தான் இருக்கிறார்கள். மாற்றிப் பார்த்தால் எப்படி இருக்கும் என்ற எண்ணம்! திரும்பவும் அது தவறு இல்லையா என்ற குற்ற உணர்வு.

அவள் நாணயத்தைக் கையில் எடுத்துக் கொண்டு 'தலை விழுந்தால் மாற்றி விடுகிறேன்' என்று எண்ணிக்கொண்டே காற்றில் வீசிவிட்டு உள்ளங்கையில் பிடித்துக் கொண்டாள்.

தலை விழுந்தது.

ஆதிலட்சுமி திரும்பிப் பார்த்தாள். இரண்டாவது நர்ஸ் குழந்தைகள் பிறந்த நேரத்தைக் குறித்துக் கொண்டிருந்தாள். அவள் ஒன்றையடுத்து இன்னொன்றாய் குழந்தைகளைக் கொண்டுவந்து இரு தாய்மார்களுக்குப் பக்கத்தில் படுக்க வைத்தாள்.

நிர்மலாவுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை. அவள் பக்கத்தில் படுக்க வைத்த குழந்தையின் இடது துடையில் சிறிய மச்சம் ஒன்றைப் பார்த்தாள் ஆதிலட்சுமி. தான் இன்று செய்த காரியத்திற்கு அடையாளமாய் அருந்ததியின் பக்கத்தில் இருந்த குழந்தையின் (அந்தக் குழந்தை நிர்மலாவின் மகள்) இடது துடையின் மீதும் சிறிய அடையாளம் ஒன்றைக் குறியிட்டாள். இருபத்தைந்து வருடங்கள் கழித்து இந்த அடையாளத்தைக் கொண்டுதான் அவள் தாயையும் மகளையும் ஒன்று சேர்த்து வைக்கப் போகிறாள்.

அந்த விதமாய் ஒரு சினிமாவைப் பார்த்துவிட்டு வந்து, சும்மா 'என்னதான் நடக்கும் பார்ப்போம்' என்ற நியாயமற்ற குறும்பு

எண்ணத்தால் ஒரு நர்ஸ் செய்த காரியம் இரு பச்சிளம் குழந்தைகளின் வாழ்க்கையை மாற்றி விட்டது.

ஆனால் இந்த அக்கினிப்பிரவேசம் கதை அந்த விதி மாறுபாட்டைப் பற்றியது இல்லை.

****

நிர்மலா முதலில் கண்களைத் திறந்தாள்.

“இதோ பார்த்துக் கொள் உன் குழந்தையை” என்று ஆயா தூக்கிக் காண்பித்தாள்.

“பெண்குழந்தையா!” நிர்மலா சோர்வுடன் கண்களை மூடிக் கொண்டாள்.

“பெண் குழந்தையா என்று அவ்வளவு வேண்டாத வெறுப்புடன் சொல்லாதே. எதற்காக இந்த ஏமாற்றம்? உன்னை உன் மகள் பார்த்துக் கொள்வது போல் நாளைக்கு உன் கணவனும், மகனும் கூட பார்க்க மாட்டார்கள்” என்றாள் ஆயா அனுபவம் கற்பித்த பாடத்தினால்.

பேச்சுக்குரல் கேட்டு அருந்ததியும் கண்களைத் திறந்தாள். எதிர்பார்ப்புடன் ஆயாவைப் பார்த்தாள்.

“நீயும் உன் குழந்தையைப் பார்த்துக் கொள். ரோசாப்பூ போல் எவ்வளவு அழகாய இருக்கிறாள் தெரியுமா?”

“ரொம்ப அழகாய் இருக்கிறாள் சிஸ்டர்” நன்றியுடன் நோக்கினாள் அருந்ததி.

“உங்கள் இருவரின் குழந்தைகளும் ஒரே நேரத்தில் பிறந்தார்கள். இருவரின் ஜாதகமும் ஒன்று போல் இருக்கும். என் இத்தனை வருட சர்வீசில் இது போல் நடந்ததே இல்லை” என்றாள் டாக்டர் குழந்தைகளின் பிறந்த நேரத்தை குறித்த ரிஜிஸ்டரைப் பார்த்துக் கொண்டே.

அருந்ததி நிர்மலாவைப் பார்த்து முறுவல் பூத்தாள். நிர்மலா பதிலுக்கு முறுவலித்துவிட்டு கண்களை மூடிக் கொண்டாள்.

ஸ்ட்ரெச்சர் மீது அருந்ததி பக்கத்தில் குழந்தையை படுக்க வைத்து ஜெனரல் வார்டுக்குக் கொண்டு போனாள் ஆயா.

“தங்கப் பதுமையாட்டம் மகள் பிறந்திருக்கிறாள். அய்யாவிடம் சொல்லி இனாம் வாங்கித் தரணும்.” போகும் போது சொன்னாள் ஆயா.

“அப்படியே வாங்கித் தருகிறேன்” என்றாள் அருந்ததி. அவளுக்கு களைப்பு அதிகமாக இருந்தது. கண்கள் சொக்கிக் கொண்டு வந்தன. பக்கத்தில் குழந்தையைப் பார்க்கும் போது தூங்குவது சரி இல்லை என்று தோன்றியது.

குழந்தை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. போர்வையை எடுத்து குழந்தைக்கும் சேர்த்துப் போர்த்திவிட்டாள். ‘பழம் புடைவையைக் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இடுப்பு வலி எடுத்ததும் அரக்க பறக்க வந்தாகி விட்டது’ என்று நினைத்துக் கொண்டாள்.

******

நிர்மலாவுக்காக முன் கூட்டியே ரிசர்வ் செய்திருந்த குளிர்சாதனம் பொருத்தப்பட்ட அறைக்குள் அவளைக் கவனமாய் அழைத்துச் சென்றாள் ஆயா. அவளுக்காக நியமிக்கப்பட்ட நர்சு

எல்லாவறையும் ஏற்பாடாய் வைத்திருந்தாள். நிர்மலாவை படுக்கையில் படுக்க வைத்து, வீட்டிலிருந்து கொண்டு வந்த கம்பளியைப் போர்த்தி விட்டாள். குழந்தைக்கு உடை அணிவித்து தொட்டிலில் படுக்க வைத்தாள்.

குழந்தைப் பற்றி நிர்மலாவுக்குக் கவலை இல்லை. அவள் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

கணவனை எதிர்பார்க்க வேண்டிய தேவைகூட இல்லை என்று தெரியும்.

******

வார்டில் எல்லோரையும் பார்த்தபடி வந்து கொண்டிருந்த விஸ்வத்தை தொலைவிலிருந்தே கண்டுவிட்டாள் அருந்ததி. அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

“மொத்தத்தில் நீங்கதான் ஜெயித்தீங்க.” அவன் அருகில் வந்ததும் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

“உனக்கு எப்போதும் நான் ஜெயிப்பதும் நீ தொற்பதும்தானே பிடிக்கும். இரவு முழுவதும் ரொம்ப கஷ்டப்பட்டாயா?” குழந்தையின் சுருட்டை முடியைத் தடவிக் கொண்டே அன்புடன் கேட்டான்.

“ரொம்பத்தான் கஷ்டப்பட்டேன். இப்போ ஒன்றும் தெரியவில்லை. எப்படி -இருக்கிறாள் உங்கள் மகள்?”

“தங்கச்சிலையாட்டாம், என்னைப் போலவே இருக்கிறாள்.” சிரித்தான் அவன். தொடர்ந்து “ஜாடை எல்லாம் இப்போ தெரியாது என்று நினைக்கிறேன். முதலில் கொஞ்சம் காபி குடி” என்று டம்ளரில் விட்டு அவளிடம் தந்தான். ‘என்னைப் போலவே’

என்று அவன் சொன்னதைக் கேட்டுப் பக்கத்தில் இருந்த நர்ஸ் சிரித்துக் கொண்டாள்.

விஸ்வம் பையிலிருந்து பழைய உடையை எடுத்து குழந்தைக்கு ஜாக்கிரதையாய் அணிவித்தான். பழைய புடவையை கிழித்து ஒன்றை படுக்கையின் மேல் விரித்து குழந்தையை அதில் படுக்க வைத்தான். மற்றொன்றை எடுத்துப் போர்த்தினான்.

“இப்போதிலிருந்தே மகளுக்கு சிசுரூஷை தொடங்கி விட்டீங்களே.”

“ஆமாம் பின்னே! என்ன இருந்தாலும் என் தங்கக்கட்டி இல்லையா? பாவானா.. பெயர் நன்றாக இருக்கிறதா?”

“ரொம்ப நல்லா இருக்கு.” திருப்தியாய் சிரித்தாள் அருந்ததி.

****

“அய்யா வந்தாங்களா?” தூங்கி எழுந்ததும் கேட்டாள் நிர்மலா.

“இல்லீங்கம்மா. டிரைவர் வந்தான். குழந்தைக்கு வேண்டியதெல்லாம் கொண்டு வந்து கொடுத்தான். முடிந்தால் மாலையில் வருவதாக சொல்லச் சொன்னாராம்.”

நிர்மலாவின் விழிகளிலிருந்து கண்ணீர் துளி ஒன்று உதிர்ந்து போர்வையில் கலந்து விட்டது. ‘ஒருக்கால் மகன் பிறந்து இருந்தால் வந்திருப்பாரோ என்னவோ.’ நர்ஸ் கொடுத்த மாத்திரையை விழுங்கிவிட்டு ஹார்லிக்ஸ் குடித்துவிட்டு திரும்பவும் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். குழந்தைக்கு ‘சாஹிதி’ என்று பெயர் வைத்தது போல் கனவு வந்தது அவளுக்கு.

****

அருந்ததி குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரி படிகளில் இறங்கிக் கொண்டிருந்தாள். இன்னொரு பக்கத்திலிருந்து நிர்மலா வந்து சேர்ந்தாள். குழந்தையை நர்ஸ் தூக்கிக் கொண்டு வந்தாள்.

இருவரின் பார்வையும் கலந்தன. ஒருவருக்கொருவர் எந்த உறவு இல்லை என்றாலும் ஏதோ தெரியாத நெருக்கம்! அவ்விருவரையும் ஆதிலட்சுமி பார்த்துக் கொண்டிருந்தாள். சொல்லி விடுவோமா என்று நினைத்தாள். ஊஹூம்! இப்போது கூடாது. இருபத்தைந்து வருடங்கள் கழித்து சொல்ல வேண்டும். இருவரின் முகவரியும் தன்னிடம் இருக்கிறது. அன்று சொன்னால் எவ்வளவு அதிசயமாக இருக்கும் அந்தக் காட்சி! கண்ணீர்த் துளிகள்... சந்திப்பு.. "இருவரையும் என் குழந்தைகள் போல் பார்த்துக் கொள்கிறேன்' பணக்காரி சொல்வது.. தொலைவில் நின்றுகொண்டு ஆனந்தக் கண்ணீர் மல்க செய்த தவறுக்கு பச்சாத்தாபம் அடைந்தபடி தான்.. இவ்விதமாய் யோசித்துக் கொண்டிருந்தாள் ஆதிலட்சுமி.

"எந்தப் பக்கம் போகணும் நீங்க?" நிர்மலா கேட்டாள்.

"திருவல்லிக்கேணி. நீங்க?"

"அடையார்."

இந்த உரையாடலினால் ஏற்பட்ட தாமதத்திற்கு படிகள் கீழே பியட் காரில் காத்திருந்த சந்திரன் பொறுமையற்றவனாய் பார்த்தான். அதைக் கவனித்த நிர்மலா "போய் வருகிறேன்" என்று படிகளின் இறங்கி சென்றுவிட்டாள்.

பின்னாலேயே விஸ்வம் கொண்டு வந்த ரிக்ஷாவில் ஏறிக்கொண்டாள் அருந்ததி.

இரண்டு வாகனங்களும் எதிர் எதிர் திசையில் நகர்ந்தன, இரு குழந்தைகளின் எதிர்காலத்தைப் போலவே.

******

“குழந்தை பிறந்த நேரத்தை குறித்தார்களா? நக்ஷத்திரம் என்ன?” மனைவிடம் கேட்டான் விஸ்வம்.

“அந்த நர்ஸ் யாரோ ரொம்ப நல்லவளாய் இருக்கிறாள். வினாடியுடன் சேர்த்து நேரத்தை குறித்துக் கொடுத்தாள்” என்று பேப்பரை எடுத்துக் கொடுத்தாள்.

அதே நேரத்தில் காரில் போய்க் கொண்டிருந்த நிர்மலாவும் குழந்தை பிறந்த நேரத்தைப் பார்த்தாள். இரண்டு பேப்பரிலும் இருந்த நேரம் ஒன்றுதான், ஜோதிட சாஸ்திரத்தைப் பரிகாசம் செய்வது போல்.

2

விஸ்வத்தை கிராமப் பள்ளிக்கூடத்திற்கு டிரான்ஸ்பர் பண்ணி விட்டதால் குடும்பம் சொந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தது. சிறிய ஓட்டுவீடுதான் என்றாலும் துப்புரவாய் இருந்ததுசுற்றிலும் . நாலாபக்கமும் காலி இடம் இருந்ததுமுன் பக்கம் முழுவதும் . .பூச்செடிகள் அருந்ததி கடந்த ஒரு வருடமாய் ரொம்ப பலவீனமாய் போய்க் கொண்டிருந்ததால் டாக்டரிடம் காட்டினார்கள்கேன்சர் என்று சந்தேகப்பட்டு உடனே . கருப்பையை நீக்கவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள் . பதினைந்து நாட்களுக்கு முன்பு அருந்ததிக்கு பட்டணத்தில் ஆபரேஷன் நடந்தது.
தம்பி தங்கைகள் கைகால் அலம்பிக் கொண்டு வந்த பிறகு ஆளுக்கு இரண்டு பிஸ்கெட்டுகளை கொடுத்தாள் பாவனாபி .றகு

அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டே தானும் படித்து முடித்தாள்.

“பாட்டீஅப்பா இன்னும் வரவில்லையே ஏன் !?” கவலையுடன் கேட்டாள் தங்கை.

“வந்து விடுவான்ஆபரேஷன் முடிந்த பிறகு அம்மாவை . அழைத்துக்கொண்டு வருவதாக சொன்னான் இல்லையா? இன்றைக்கோ நாளைக்கோ வர வேண்டியதுதான்.” பாட்டி சொன்னாள்.

“பாட்டீஅம்மாவுக்கு குணமாகி விடும் இல்லையா !? ஆபரேஷன் என்றால் ரொம்ப தளர்ந்து போய் இருப்பாள் இல்லையா?”

“கொஞ்சம் தளர்ந்துதான் போயிருப்பாள்இரண்டு மூன்று . மாதங்கள் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளணும் என்று டாக்டர் சொல்லி .இருக்கிறாராம்”

“அக்காஅப்பா வந்தாச்சு !” பாலு கத்தியதைக் கேட்டு எழுந்து வாசலுக்கு ஓடினாள் பாவனாவாசலில் தென்பட்ட காட்சியைப் . பார்க்கும் போது அவளால் கண்ணீரை அடக்க முடியவில்லை. வாசலில் ரிக்ஷா வந்து நின்றதுஅதிலிருந்து எலும்புக்கூடு போல் . இருந்த அருந்ததியை இறக்கி கைத்தாங்கலாய் நடத்தி அழைத்து வந்துக் கொண்டிருந்தான் விஸ்வம்ஒரு மாதம் முடிவதற்குள் . பதினைந்து வயது கூடி விட்டது போல் காட்சி தந்தான்கூடத்தில் . .இருந்த கட்டிலில் அருந்ததியைப் படுக்க வைத்தான்

“பாலூ, பாபி, டிக்கிஇதென்னது ..? ஏன் தொலைவிலேயே இருக்கீங்க? இப்படி வாங்க” என்று அழைத்தாள் அவள் . எல்லோரும் நிசப்தமாய்ப் போய் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

“அம்மாஉனக்கு வலி குறைந்து விட்டதா !?” கேட்டான் பாலு.

“குறைந்துவிட்டது கண்ணாநீ எப்படி இருக்கிறாய் .? நன்றாக படிக்கிறாயா? நம் தோட்டம் எப்படி இருக்கு?”

“ரொம்ப நன்றாக இருக்கும்மாதினமும் வீட்டில் காய்க்கும் . .காய்களைதான் பாட்டி சமைக்கிறாள்”

“ஆமாம் அம்மாஅதான் அவ்வளவு நல்லா .நீ ரொம்ப நல்லவள் . .காய்க்கிறது” சொன்னாள் தங்கை.

தன் வலியைக் காட்டிக் கொள்ளாமல் குழந்தைகளுடன் பேச்சில் ஈடுபட்டுவிட்ட அருந்ததியைப் பார்த்தான் விஸ்வம்பாவனா . தொலை◌ிவிலிருந்து தாயையே பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மா தனக்கு சிறுவயதில் சாதம் ஊட்டியதிலிருந்து எல்லாமே நினைவில் இருந்தது பாவானாவுக்குஅம்மாவும் ., அப்பாவும் எல்லாவற்றுக்கும் போட்டிப் போடுவார்கள்அம்மாக்கள் . மட்டுமே செய்வார்கள், செய்யவேண்டும் என்ற வேலைகளை கூட விஸ்வம் செய்து வந்தான்.

எல்லா வீடுகளிலும் தந்தை வெளிவேலைகள் பண்ணுவதும், குழந்தைகள் தாயிடம்தான் நெருக்கமாக இருப்பதையும் பார்த்திருக்கிறாள்ஆனால் தன் வீட்டில் அவ்வாறு . இருந்ததே இல்லைபள்ளிக்கூடத்து வேலைகள் முடிவடைந்து வீட்டுக்கு . வந்த பிறகு விஸ்வம் வீட்டை விட்டு நகரமாட்டான்மனைவி . கைக்குழந்தையை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தால், தாய் தம்மை விட்டு தொலைவில் போய்விட்டதாய், முன்னணி குழந்தைகள் ஏக்கம் கொண்டு விடாமல் அவர்களுடனே இருப்பான்.

அந்த வீடு எப்போதும் சிரிப்பும் கும்மாளமுமாய் ஆனந்த உலகம் போல் காட்சி தரும் .மாமியார் மருமகள் சண்டை இல்லை . .கணவன் மனைவி சச்சரவுகள் இல்லை குழந்தைகளுக்கு

இடையோ போட்டியோ பொறாமையோ இருந்தது இல்லை . இப்பொழுது என்னவோ அம்மா இப்படி ஆகிவிட்டாள்பாவனா . .தந்தையைப் பார்த்தாள்
கதவு மறைவில் நின்றுகொண்டு யாரும் பார்க்காதவாறு கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தான் விஸ்வம் . அம்மாவைப் பார்க்கும் போது ஏற்பட்ட வேதனையை விட தந்தையின் கண்ணீர்தான் அவளை மிகவும் நெகிழ்ந்து போகச் செய்தது.

“அப்பா!” என்று அழைத்தபடி அருகில் சென்றாள்.

“என்னம்மா பாவானா? பரவாயில்லைஅம்மாவுக்கு . .சீக்கிரமாகவே குணமாகி விடும் கொஞ்சநாள் நாம் ஜாக்கிரதையாய் பார்த்துக் கொண்டால் போதும்” என்றான் அவளுக்கு ஆறுதல் சொல்வது போல்.

“பின்னே நீ ஏம்பா அழுகிறாய்? உன்னை இந்த மாதிரி பார்த்தால் எனக்கு கவலையாய் இருக்கு.”

‘ச்சேநான் எதுக்கு அழப் போகிறேன் .ச்சே..? சரியாய் தூங்கவில்லை இல்லையா? அதான் இப்படி.” முகத்தில் முறுவலை பூசி மெழுகிக் கொண்டான்.

“எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அழக்கூடாதுதைரியமாய் . இருக்கணும் என்று நீ தானேப்பா சொல்லுவாய்?”

அப்பொழுதான் புரியத் தொடங்கியது அவனுக்கு, தன் மகள் மனதளவில் வயதுக்கு மீறி வளர்ந்துவிட்டாள் என்று.

****

பார்த்துக் கொண்டிருந்த போதே ஒருவருடம் ஓடிவிட்டது . அருந்ததியின் நிலைமை கொஞ்சம் சீரடைந்ததுஆனால் எந்த . நிமிடம் என்ன நடக்குமோ தெரியாத நிலை அவளுடையது .

.திடீரென்று வயிற்றுவலியால் துடிதுடித்துப் போய் விடுவாள் மருந்து சாப்பிட்டு தானாக குறையும் வரை பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர யாராலும் எதுவும் செய்ய முடியாது. பால்ய பருவம் அப்பாவித்தனத்திற்கு எடுத்துக்காட்டாய் இருக்கலாம்ஆனால் சில . நிகழ்ச்சிகள், அபிப்ராயங்கள் அந்த சமயத்தில்தான் வாழ்நாள் முழுவதும் தங்கி விடுவதுபோல் இதயத்தில் பதிந்து போய்விடும்தந்தையின் உயர்குணம் . எடுத்துக் காட்டக் கூடிய சம்பவம் ஒன்று பாவனாவின் சிறுபிராயத்தில் நடந்தது.
விஸ்வம் ஊரிலிருந்து வந்த மறுநாளே அருந்ததிக்கு கடுமையான வயிற்றுவலி வந்து, உடனுக்குடன் கேன்சர் ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியதாயிற்றுகுறைந்தது . இரண்டு மாதங்களாவது அங்கே தங்கியிருந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள்அந்த இரண்டு மாதங்களும் விஸ்வம் . தவித்த தவிப்பு எல்லோரின் மனதையும் கரைத்து விட்டது . அருந்ததிக்குக் கொஞ்சம் குறைந்ததும் வீட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

அவ்வளவு பதற்றமான நிலைமையிலும் பாட்டியும், தாத்தாவும் அம்மாவுடன் வேகுநேரமாய் அறையில் பேசிக்கொண்டிருந்தார்கள்பிறகு அவர்கள் இருவரும் . தந்தையை உள்ளே அழைத்ததைப் பார்த்துவிட்டு, பாவானா ஆச்சரியமடந்தவளாய் ஆர்வத்துடன் கதவிற்கருகில் வந்து நின்றாள்.

“பாவனாவின் படிப்பு கேட்டுப் போகிறதுவயதுக்கு மீறிய . பாரத்தை அவள் தலையில் போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறதுஇன்னொரு பக்கம் இவளுடைய . உடல்நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகிறது . நாங்களும் போய்விட்டால் பார்த்துக் கொள்பவர்கள் யாருமே

இல்லை" என்றார் தாத்தா முன்னுரை வழங்குவது போல். "எங்களுடையது தீர்வு இல்லாத பிரச்சனை மாமாயார்தான் . என்ன செய்ய முடிய◌ும்?"

"இவ்வளவு சின்ன வயதிலேயே உனக்கு எந்தச் சுகமும் இல்லாமல் போய் விட்டதுநீ . இன்னொரு கல்யாணம் பண்ணிக்கொள் தம்பீநீ .அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன் . ஊம் என்று சொன்னால் என் தம்பியின் மகள்சுந்தரியைத்தான் .. உனக்குத் தெரியுமே, சந்தோஷமாய் ஒப்புக்கொள்வார்கள்."

"மாமாஇப்படிச் சொல்வது உங்களுக்கே நியாயமாய் இருக்கா !?" விஸ்வம் கோபமாய்க் கேட்டான்.

"கோபம் வேண்டாம்நான் சொல்வதை முழுவதுமாகக் . கேட்டுவிட்டுப் பிறகு நிதானமாய் யோசித்துப் பார் . அருந்ததியைப் பார்த்துக்கொண்டு, குழந்தைகளுக்கும் உனக்கும் உறுதுணையாய் இருந்துகொண்டு எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வதற்கு ஒரு பெண் தேவை. போகட்டும் நம் உறவினரில் அப்படி யாராவது இருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லைசுந்தரிக்கு முப்பது வயதாகி . விட்டது . கல்யாணம் பண்ணிக் கொடுக்கும் எண்ணம் அவள் அண்ணனுக்கு .இல்லை தந்தை உயிரோடு இல்லைதாயும் இன்றை .க்கோ நாளைக்கோ என்று இருக்கிறாள். எல்லோருக்கும் பாரமாகிவிட்டாள்அப்படிப்பட்ட பெண்ணாய் இருந்தால் . நன்றியோடு குழந்தைகளை நன்றாகப் பார்த்துக்கொள்வாள் . அவளுக்கு அருந்ததி மீதும் குழந்தைகள் மீதும் ரொம்பப் பிரியமும்கூடஇது எங்கள் தீர்மானம் மட்டுமே . இல்லை . அருந்தத◌ியின் விருப்பமும் கூட."

"நீங்க சொல்லி முடித்துவிட்டால் இனி என் அபிப்பிராயத்தைச் சொல்லி விடுகிறேன்எனக்கும் .சுந்தரி அருந்ததியின் தங்கை .

..தங்கை போல்தான் சுந்தரிக்கு ஆட்சேபணை இல்லையென்றால் அவளை எங்களுடன் அழைத்துப் போகிறேன். தங்கையாய் பார்த்துக் கொள்கிறேன்இர .ுப்பதில் அவளுக்கும் போடுகிறேன்அவள் . எங்களுக்குப் பாரம் என்ற உணர்வு ஒருநாளும் ஏற்படாதுகல்யாணம் பண்ணி . வைக்கும் உத்தேசம் இருந்தால் நல்லதுதான்வரன் ஏதாவது குதிர்ந்தால் . அனுப்பிவைத்து விடுகிறேன்என்னால் முடிந்த உதவியைச் . .செய்கிறேன்" அவன் அருந்ததியின் பக்கம் திரும்பினான் .

"உனக்கு இப்படிப்பட்ட யோசனை எப்படி வந்தது என்று எனக்குப் புரியவில்லைநான் எப்பொழுதாவது சந்தோஷமாய் . இல்லாதது போல் நடந்து கொண்டேனா?"

"அது இல்லைங்ககாலையில் எழுந்தது முதல் நீங்க சமையல் . செய்வது, குழந்தைகளை குளிப்பாட்டி விடுவது எல்லாம் பண்ணுவதைப் பார்த்து மனம் பொறுக்காமல் அம்மாவிடம் சொன்னேன்நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று . இப்பொழுதுதான் எனக்கு நன்றாகப் புரிகிறது."

"கணவன் மறுமணம் பண்ணிக்கொள்ள மாட்டேன் என்று சொல்வதை அதிர்ஷ்டமாய் பாவிக்கும் நிலையிலிருந்து பெண்கள் இன்னும் கொஞ்சம் வளரணும் அருந்ததி. அவர்கள் என்னுடைய குழந்தைகள்நான் .அவர்களின் பொறுப்பு என்னைச் சேர்ந்தது . சமையல் செய்தாலும், குளிப்பாட்டி விட்டாலும் அதைத் தவறாக நினைக்காதே. நீங்களும் அப்படி நினைக்காதீங்ககுழந்தைகளை . இங்கே விட்டுப் போவதில் கூட எனக்கு விருப்பம் இல்லை . அவர்கள் என்றுமே யாருக்கும் பாரமாக இருக்கக்கூடாது . .இனிமேல் இப்படிப்பட்ட பேச்சை எடுக்காதீங்க"

விஸ்வம் வெளியே வரும் சந்தடி கேட்டு பாவனா சட்டென்று நகர்ந்து கொண்டாள். 'தந்தை கடவுளுக்கு ஒப்பானவர்அவர் .

எங்களுக்கு தந்தையாய் இருப்பது எங்கள் அதிர்ஷ்டம்அவர் . என்றுமே மனம் நோகாமல் பார்த்துகொள்ள வேண்டும் . அவருடைய பொறுப்பில் தானும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள்.

தந்தையிடம் மதிப்பு ஏற்பட்டதோடு, தனக்கு கணவனாக வரவேண்டியவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற யோசனைக்கு வித்திடபட்டதை அவள் அறிந்திருக்கவில்லை. அவள் வாழ்க்கையில் அவளுக்கு முதல் நண்பன் தந்தைதான் . ஆண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியவன்பெரும் . மதிப்புக்கு உரியவன் . அவன் .அவள் வாழ்க்கையில் இரண்டாவது ஆண் கணவன் எப்படிப்பட்ட எண்ணத்தைத் தோற்றுவிப்பானோ காலம்தான் முடிவு செய்ய வேண்டும்.

****

விஸ்வத்தில் இரண்டாவது மனைவியாக இல்லாமல் மனைவியின் தங்கையாகவே அவ்வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள் சுந்தரி.
சில நாட்களிலேயே அவ்வீட்டாருடன் கலந்துவிட்டாள் . அக்காவுக்கு நர்சாக பணிவிடை, வீட்டு வேலை, சமையல் வேலை எல்லாம் தான் ஒருத்தியாகவே பார்த்துக் கொண்டாள். ஆரம்ப காலத்தில் விஸ்வம் அதிகாலையிலேயே எழுந்து பெண்கள் செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் செய்வதைப் பார்த்து வெட்கப்பட்டாள் சுந்தரிமெதுவாய் . ஒவ்வொரு காரியத்திலேயும் பங்கெடுத்துக் கொண்டு வீட்டு வேலைகளிலிருந்து முற்றிலும் அவனுக்கு விடுதலை கொடுப்பதற்கு அரும்பாடு பட வேண்டியிருந்தது. அவனைப் பார்த்தால் வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

பிறந்த வீட்டில் வேற்று மனுஷி போல் நடத்தப்பட்டு,

வேண்டாதவளாய் சுட்டிகாட்டப்பட்டு இத்தனை நாளும் நரகத்தை அனுபவித்து வந்தாள்இந்த . வீட்டில் கிடைத்த கௌரவம் அவள் கனவிலும் எதிர்பார்க்க முடியாத உயர்ந்த அனுபவம்.

பாவனாவிடம் அவளுக்குத் தனிப்பட்ட பிரியம்.

“பாவனாஇப்படி .பரீக்ஷை நெருங்கிக் கொண்டு வருகிறது ! கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்தால் எப்படி?” அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள் சுந்தரி. அதற்குள் பாவனா ஒன்பதாவது வகுப்புக்கு வந்து விட்டிருந்தாள்.

“ஏன் சித்தி? அப்பா இன்னும் வரவில்லைஒன்பது . மணி .மணிக்கெல்லாம் வந்துவிடுவதாய் சொன்னார் பதினொன்று ஆகிறதே”

“ஏதோ வேலையாய் போவதாகச் சொன்னாரே? தாமதம் ஆனாலும் ஆகலாம் என்று கூட சொன்னார் இல்லையா?”

“உனக்குப் புரியாது சித்திஅப்பா வருவதற்குக் கொஞ்சம் தாமதம் . ஆனாலும் எனக்குக் கவலையாய், இருக்கும்” என்றாள் பாவனா .

‘இந்த அன்பை, பாசத்தை உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா?’ என்ற தொனி வெளிப்பட்டது அவள் குரலில்.

சுந்தரி பாவனாவை ஒரு வினாடி கண்ணிமைக்காமல் பார்த்தாள் . அவளும் வயதில் ரொம்ப மூத்தவள் ஒன்றும் இல்லைஆனால் . உலக ஞானம் அதிகமாய் இருந்ததுநிறைய . புத்தகங்களைப் படிப்பாள்.

தந்தையின் மீது அன்பு இருப்பதில் தவறு இல்லைஆனால் . பாவனா, அளவுக்கு அதிகமாய் தந்தையை நேசித்துக் கொண்டிருக்கிறாள் .‘இப்படி ‘அளவுக்கதிகமாய் நேசிப்பதை’ நிறைய பேரிடம் கண்டிருக்கிறாள் அவள்முக்கியமாய் .

ஹாஸ்டலில் தங்கி படிக்கும் பெண்களிடம் குறிப்பிட்ட ஒருவரைத் தம் “ஐடியல் ஷி” யாய் தேர்ந்தெடுத்துக்கொண்டு, தொடர்ந்து அந்த மூன்று ஆண்டுகளும் அவளுடைய பாராட்டைப் பெறவேண்டும் என்று நினைப்பார்கள்அது ரூம்மேட் ஆக . .இருக்கலாம் லெக்சரர் ஆகவும் இருக்கலாம் .‘அவள் இன்றி தன்னால் வாழ முடியாது’ போன்ற வார்த்தைகளை டைரியில் எழுதிக் கொள்வதும், தன் வாழ்க்கை அவள் மீதுதான் ஆதாரப்பட்டிருக்கிறது என்பது போல் நடந்து கொள்வதையும் அவள் கண்டிருக்கிறாள்தாழ்வுமனப்பான்மை ., ஆதாரப்படும் குணம்இவைதான் இது போன்ற .. மனிதர்களை உருவாக்குமோ என்னவோ என்று நினைத்துக் கொண்டாள் சுந்தரி. கொஞ்சம் வயது வந்த பிறகு எதிராளியிடமிருந்து உந்துதல் பெறலாமே ஒழிய, அதற்குப் பிறகாவது தமக்குத் தாமே பண்பைச் சீர்த்திருத்திக் கொள்ள முடியாத நபர்கள் வாழ்க்கையில் மிக மதிப்பு வாய்ந்த, பதினாறு முதல் இருபத்திநான்கிற்கு உட்பட்ட வயதை இதுபோன்ற வழிபாட்டு உணர்வுடன் கழித்து விடுவார்கள்.

பாவனா விஷயத்தில் சுந்தரிக்கு பயமாக இருந்ததுஅந்தப் . பெண்ணிற்கு தனிப்பட்ட அபிப்பிராயங்கள் என்று எதுவும் இல்லைரொம்ப சாதாரணமான . பெண்காலத்துடன் . அவளால் மாற முடியாதுஏதோ நாட்கள் சாதாரணமாய்க் கழிந்து போய்க .் கொண்டு இருக்கிறதே என்ற எண்ணம்தான் அவளுக்குத் திருப்தியைக் கொடுத்து வந்ததுஅது . சுந்தரிக்குப் பிடிக்கவில்லை. காலம் முன்னைப் போல் இல்லைமுன்பில்லாத எத்தனையோ . பிரச்சனைகளை தற்காலத்தில் பெண்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்பது அவள் உத்தேசம்ஆனால் . இதொன்றையும் சொல்லாமல் தன் எண்ணங்களை

தனக்குள்ளேயே மறைத்துக் கொண்டு, “பைத்தியக்கார யோசனைகளை விட்டுவிட்டு படிப்பின் மீது கவனத்தைச் செலுத்தினால் நல்லது” என்றாள் சுருக்கமாய்.

“பாஸாகி விடுவேன் சித்தி” என்றாள் பாவனா அது ரொம்ப சாதாரண விஷயம் என்பது போல்.

“ஏதோ பாஸாவது இல்லை பாவனா .நன்றாகப் படிக்கணும் . .உறுதியோடு படிக்கணும் நல்ல மார்க் வாங்கணும்படிப்பு . பெண்களுக்கு எவ்வளவு முக்கியம் என்று உனக்குப் புரியவில்லைஅந்தப் படிப்பு முடிக்காததால் நான் எவ்வளவு . கஷ்டப்பட்டேன் என்றும் உனக்குத் தெரியாதுபொருளாதார . பக்கபலம் இல்லாமல் பெண்களுக்கு சுதந்திரம் இல்லை பாவனா.”

“அப்படி என்றாள் நீ எங்க வீட்டில் கூட சந்தோஷமாய் இல்லையா? இங்கே சுதந்திரம் கிடையாதா?”

“நான் அப்படிச் சொல்லவில்லைஇந்த அதிர்ஷ்டம் எல்லா . இடத்திலும் கிடைத்து விடாதுநம் வீடுதான் உலகமே என்று . எப்போதும் நீ இந்த நான்க .எண்ணிவிடாதே ூ சுவர்களுக்கு இடையில் இருந்து விட முடியாதுவேலை இல்லாவிட்டாலும் . படிப்பாவது இருந்தால் என்றாவது பயன்படும்என் . .அனுபவத்தால் சொல்கிறேன்”

பாவனா சிரித்துவிட்டு “உன் அனுபவம் உன்னை ரொம்பவும் பயமுறுத்தி விட்டது சித்திஎவ்வளவோ பேர் இந்த உலகத்தில் . சந்தோஷமாக இல்லையா?” என்றாள்சுந்தரி . மேற்கொண்டு வாதாடவில்லை.மௌனமாய் இருந்துவிட்டாள் .

எந்த எதிர்கால அனுபவம், பாவனாவுக்கு அந்த சந்தோஷத்தின் பொருளை உணர்த்தப் போகிறதோ காலம்தான் நிர்ணயிக்க வேண்டும்.

பாவனா பத்தாம் வகுப்புக்கு வந்துவிட்டாள்இதழ் விரியும் . ரோஜாவைப் போல் அவள் அழகு மலர்த் தொடங்கியது . தொட்டால் கன்றிப் போய்விடும் போன்ற மாந்தளிர் மேனி. அவளைப் பார்க்கும் போது அருந்ததிக்கு மகிழ்ச்சியாகவும், வியப்பாகவும் இருக்கும்இவள் உண்மையிலேயே தன் . .மகள்தானா என்ற சந்தேகம் கூட ஏற்படும் அந்த மூக்கைப் பார்த்தால் எங்கேயோ பார்த்தாற் போன்ற நினைவு வரும் . உடனே தன் யோசனைக்குத் தானே சிரித்துக் கொள்வாள் . அவளுக்கு மட்டும் அபாரமான நினைவாற்றல் இருந்திருக்குமானால், தன்னோடு கூட ஒரே அறையில் பிரசவித்தப் பெண்ணின் மூக்கல்லவா இது என்று நினைவுக்கு வந்திருக்கும்.

பாவனா பத்தாம் வகுப்பு பாஸ் பண்ணிவிட்டாள்அதுகூட சுந்தரி . .வலுக்கட்டாயமாய் உட்கார வைத்துப் படிக்கச் செய்ததால்தான் "இந்த வருஷம் பாவனாவுக்குக் கல்யாணம் முடித்து விடுவதுதான் நல்லது என்று தோன்றுகிறது." மனைவியும், சுந்தரியும் ஒன்றாக இருக்கும்போது சொன்னான் விஸ்வம்.

"உங்க விருப்பம் எப்படியோ அப்படியே செய்யுங்கள்நான் . போவதற்குள் அவளுடைய கல்யாணத்தைப் பார்க்கிற அதிர்ஷ்டமாவது கிடைக்கட்டும்" என்றாள் அருந்ததி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தபடி.

"வேண்டாம் அத்தான்பாவனாவுக்கு அப்படி என்ன . வயதாகிவிட்டது? பதினாறு வயது கூட நிரம்பவில்லை . இப்போதிலிருந்தே கல்யாணம், குழந்தை என்று பாரத்தை அவள் தலையில் போடாதீங்க" என்றாள் சுந்தரி.

"எனக்குக் கூட அவளைப் படிக்க வைக்கணும் என்றுதான்

இருக்குஆனால் நம் ஊரில் . ஒரே ஒரு ஜூனியர் காலேஜ்தான் இருக்குஆண்பிள்ளைகளோடு .அதுவும் கோ எஜுகேஷன் . சேர்ந்து படிக்க வைப்பதில் எனக்கு விருப்பம் இல்லை" என்றான் விஸ்வம்.

சுந்தரி திகைத்துப் போனாள்விஸ்வம் இப்படி யோசிப்பான் . .என்று அவள் நினைக்கவில்லை

"நாலுபேருடன் சேர்ந்து பழகினால்தானே அவளுக்கு உலக அனுபவம் வரும்" என்றாள்.

"உனக்குத் தெரியாது சுந்தரி .இது அந்த காலம் இல்லை . இளம்வயது பெண், அதுவும் கொஞ்சம் அழகாய் இருந்துவிட்டால் இந்த ஆண்பிள்ளைகள் எப்படியெல்லாம் தொந்தரவு செய்வார்களோ நான் பார்த்திருக்கிறேன்ஏற்கனவே அவள் . .வெறும் கோழை"

"நான் படிக்கிறேன் அப்பாஎன் சிநேகிதிகள் எல்லோரும் . கல்லூரியில் சேருகிறார்கள்" என்றாள் பாவானா செல்லம் கொஞ்சுவது போல்கல்லூரி மாணவி ஆகி . விட வேண்டும் என்ற துடிப்பு அவளுக்குஅதானே தவிர படிப்பில் அவ்வளவு . நாட்டம் கிடையாது.

"போகட்டும்நல்ல வரன் ஏதாவது வந்தால் .சேர்த்து விடுங்கள் . அப்போது நிறுத்தி விடலாம்" என்றாள் அருந்ததி.

"ஆகட்டும்பார்ப்போம் ." என்றான் விஸ்வம் அரை மனதுடன்.

அதிர்ஷ்டவசமாய் அந்த வருடமே அவ்வூரில் பெண்கள் கல்லூரியைத் திறந்து விட்டதால் பிரச்சினை தீர்ந்துவிட்டது . கல்லூரி .பாவனா இன்டரில் சேர்ந்தாள் ஊருக்குக் கொஞ்சம் தொலைவில் இருந்தது.

பத்து ஆண்டுகளாய் வீட்டையும், வீட்டிற்கு அருகிலேயே இருந்த

பள்ளிக்கூடத்தையும் தவிர வேறு எதுவுமே தெரியாத பாவனாவுக்கு சிறகு முளைத்து விட்டாற்போல் இருந்தது. உலகதத்தைப் போலவே நூல் நிலையங்களிலும் நல்ல புத்தகங்கள், சாதாரண புத்தகங்கள் என்று இரண்டு வகை உண்டுமனிதனை சாதாரண வாழ்க்கை ஈர்ப்பது . போலவே சாதாரண புத்தகங்கள் கவர்ந்துவிடும். இவ்வளவு நாளாய் புத்தகங்களைப் படிப்பதற்கு விஸ்வம் அவளை அனுமதித்தது இல்லை. சுந்தரிதான் படித்துவிட்டு அவ்வப்பொழுது கதைகளைச் சொல்லுவாள். பாவனா முதல் முதலில் படித்த புத்தகம் கோபிசந்த் எழுதியது . அதைப் படித்துவிட்டு மூன்று நாட்கள் அந்த எழுத்தாளரைத் திட்டித் தீர்த்தாள். இப்படிப் பட்ட கதைகளை ஏன் எழுத வேண்டும் என்று நோந்துகொண்டாள்காதல் . கதைகள், சஸ்பென்ஸ், த்ரில்லர் கதைகள்தான் அவளுக்கு மிகவும் பிடித்தன. பாவானாவுக்கு நாட்கள் வேகமாகக் கழிந்து கொண்டிருப்பது போல் தோன்றியதுவாழ்க்கை நிம்மதியைக் ., சந்தோஷமாக போய்க் கொண்டிருந்தது. தானும், தன் வீடும், தோட்டமும், கடலும் அழகான கலை உருவங்கள் போல் தோற்றமளித்தன. அந்த கலை எல்லைக்குள் அவளை விரும்பி வருபவன் காதல் என்ற அஸ்திவார்த்துடனும், அன்பு என்ற சுவர்களுடனும், நேசம் என்ற மேற்கூரையுடனும் வீட்டைக் கட்டுவான்அந்த வீட்டின் . எல்லைக்குள் வளரும் புல் கூட கலையழகுடன் நாட்டியமாடும் . .கலப்படமற்ற காற்று சுருதி சேர்க்கும் “நீ இப்பொழுதெல்லாம் கனவுலகில் ஆழ்ந்துப் போய் விடுகிறாய் . அது அவ்வளவு நல்லது இல்லை” என்றாள் சிநேகிதி சைலஜா. வகுப்புகள் இல்லாததால் இருவரும் ஏரிக்கரையில்

உட்கார்ந்திருந்தார்கள்.

“என்னுடையது கனவு உலகம் இல்லை சைலூவீட்டை அழகாக ! சீர் திருத்தி அமைத்துக் கொள்வது, சுற்றுச் சூழ்நிலையை அனுகூலமாய் மாற்றிக் கொள்வது எல்லாம் நம் கையில்தான் இருக்கிறதுநான் ஒன்றும் ராஜபோகத்தைப் பற்றி கனவு . .காணவில்லை எனக்கு வரப் போகும் கணவன் என்னை எனக்காகவே காதலிப்பான்எங்களுக்குள் . பரஸ்பரம் புரிந்துக்கொள்ளும் தன்மை இருக்கும்கனவுகளை . நினைவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற உறுதி இருக்கும்மிகச் . .சிறிய விருப்பம் இது”

“எல்லாமே நாம் நினைத்தாற்போல் நடக்காது பாவனா . பெண்களைப் பொறுத்தவரையில் வாழ்க்கை பெரிய சஸ்பென்ஸ் எல்லைகள் .கடலைப் போல ஆழமானது . இல்லாததுஉள்ளே . என்ன இருக்கிறது என்று நம் கண்களுக்குத் தெரியாது.”

“கடலிலிருந்துதானே எல்லையற்ற செல்வத்தை எடுக்கிறோம் . .நம்முடைய முயற்சியைப் பொறுத்து பலன் இருக்கும்”

“வாயால் சொல்வதும், கனவு காண்பதும் எளிதுஅநுபவித்துப் . .பார்த்தால் தவிர கஷ்டம் புரியாது”

“ஏன் புரியாது? எல்லாமே புரியும்இப்போ எங்களுக்கு . அனுபவமே கிடையாது என்கிறாயா? எங்க வீட்டுச் சூழ்நிலையைப் பார்அம்மா பன்னிரண்டு வருடங்களாய் . கேன்சர் நோயால் அவஸ்தைப் பட்டுக் கொண்டு இருக்கிறாள் . அப்பாவின் வருமானமும் சொற்பம்தான்ஆனாலும் எங்க . வீட்டில் சுகத்திற்கும◌், சந்தோஷத்திற்கும் என்ன குறைவு? எவ்வளவு அன்னியோன்னியமாய் இருக்கிறோம் என்று நீதான்

பார்த்து வருகிறாயே?”

“உங்க வீட்டு எல்லை மிகவும் சிறியது பாவனாஅதுதான் . உலகம் என்று நீ எண்ணிவிடக் கூடாதுஎல்லோரும் உங்க . அப்பாவைப் போல் இருந்துவிட மாட்டார்கள்.”

“எல்லோரும் இருந்து விட மாட்டார்கள்தான்ஆனால் சிலராவது . .இருப்பார்கள் அப்படிப்பட்டவரைத் தான் அப்பா தேடிக் கொண்டு இருக்கிறார்அவருடைய தேர்வில் . எனக்கு நம்பிக்கை இருக்கிறது.”

“அப்படிப்பட்ட தந்தை இருப்பது உன் அதிர்ஷ்டம்நீ விரும்பியது . போலவே வரன் அமைய வேண்டும் என்று நானும் எதிர்பார்க்கிறேன்.”

‘எல்லோருக்கும் தன் குடும்பத்தின் மீது பொறாமை, அவர்கள் வீட்டில் அப்படி இல்லை என்பதால்அதனால் அவள் . கஷ்டப்பட்டால் பார்த்து சந்தோஷப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள்’ என்று எண்ணிய பாவனா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

விஸ்வம் வரன் வேட்டையில் ஆழ்ந்துவிட்டிருந்தான்அவள் . இன்டர் படிப்பு முடிவடைய இன்னும் சில மாதங்களே இருந்தன . அதற்குள் எல்லா ஏற்பாடுகளையும் பண்ணி வைத்துவிட்டால், விடுமுறையில் கல்யாணத்தை முடித்து விடலாம் என்று நினைத்திருந்தான் அவன்.

3

உலகமே ஆனந்த மயம் என்று எண்ணிக கொண்டிருந்த அவள் எண்ணத்தில் அன்று மாலையே இடி விழுந்தது. அஃப்கோர்ஸ்! ரொம்ப சின்ன இடிதான்.

“சுந்தரி இருக்கிறாளா? என் பெயர் மூர்த்தி, சுந்தரியின் அண்ணன்” என்றான் அவன்.

“வாங்க.. உட்காருங்க. சித்தியைக் கூப்பிடுகிறேன்” என்று உள்ளே ஓடினாள் பாவனா.

“அண்ணாவா? எதுக்காக வந்தான் இப்போது?” யோசனையுடன் வெளியே வந்தாள் சுந்தரி. கூடத்திற்கு வந்தவள் “நீ போ காலேஜுக்கு. உனக்கு நேரமாகிவிடும்” என்றாள்.

மாலையில் பாவனா வீட்டிற்குத் திரும்பி வந்த போது விஸ்வம் கூடத்திலேயே உட்கார்ந்து இருந்தான். அவன் முகம் கம்பீரமாய் இருந்தது.

பாவனா சமையல் அறைக்குப் போனாள். சுந்தரியின் முகத்தில் சிரிப்பைக் காணவில்லை. மௌனமாய் காய்களை நறுக்கிக் கொண்டிருந்தாள்.

“என்ன நடந்தது? ஏன் எல்லோரும் ஏதோ போல் இருக்கீங்க?” என்று கேட்டாள்.

“ஒன்றும் இல்லை. நீ போய் படி. எனக்கு வேலை இருக்கு.” தொந்தரவு பண்ணாதே என்பது போல் பதில் கொடுத்தாள். சுந்தரி என்றுமே அவ்வாறு இருந்தது இல்லை. பாவனா எழுந்து தாயிடம் போனாள். அருந்ததியின் வாடிய முகத்தில் வேதனை கோடுகள் தென்பட்டன.

“என்னம்மா நடந்தது? ஏன் இப்படி இருக்கிறாய்?” எல்லோரும் கோபமாய் இருக்கீங்களே ஏன்?”

“மூர்த்தி மாமா வந்தான். சுந்தரியை அழைத்துக் கொண்டு போவதாக சொல்கிறான்.”

“எதுக்காகவாம்?”

“அவனுடைய அம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லையாம். படுத்தப் படுக்கையாய் இருக்கிறாளாம். பார்த்துக்கொள்ள யாருமே இல்லையாம். மாமி வேலைக்குப் போகிறாளாம். காலையில் போனால் மாலையில்தான் திரும்பி வருவாளாம். வீட்டில் யாராவது இருக்கணும் இல்லையா?”

“அப்போது என்னவோ சரியாய் பார்த்துக் கொள்ளாமல் சனியன் பிடித்தவள் என்று அனுப்பி விட்டார்கள். இப்போது தேவை ஏற்பட்டதுமே அந்த சனியன் பிடித்தவள் வேண்டியிருக்கிறதாமா? அனுப்ப வேண்டாம் அம்மா” என்றாள் பாவனா ஆவேசமாய்.

“அனுப்ப வேண்டாம் என்று சொன்னால் எப்படி நடக்கும் பாவானா? அவளுடைய அம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லை என்றால் சுந்தரியைத் தவிர வேறு யார் பார்த்துக் கொள்ள முடியும்? நீயே சொல்லு. நாம் நம்முடைய சுகத்தை மட்டுமே பார்த்துக்கொள்வது ரொம்ப தவறு” என்றாள் அருந்ததி.

‘வேலைக்காக மட்டுமே பெண்’ என்ற உணர்வு முதல் முறையாய் ஏற்பட்டது பாவனாவுக்கு.

“இவ்வளவு நாளும் அண்ணி வேலைக்குப் போனால் வீட்டையும், குழந்தைகளையும் அம்மா பார்த்துக் கொண்டாள். அப்போது நான் வேண்டாத பாரமாய் தோன்றினேன். இப்போது அம்மா படுத்த படுக்கையாகி விட்டதால் என் நினைவு வந்து விட்டது. ஏதோ சாக்கு சொல்கிறார்களே ஒழிய எனக்கு அம்மாவைப் பார்த்துக்கொள்ள நேரம் இருக்காது. குழந்தைகளை பார்த்துக் கொள்ளவும், சமையல் செய்யவும்தான் நேரம் சரியாக இருக்கும்” என்றாள் சுந்தரி.

“அப்படி என்றால் வரமாட்டேன் என்று சொல்லி அனுப்பி விடு சித்தி.”

“என்னால் எப்படிச் சொல்ல முடியும்? இந்த வீட்டில் தங்கியிருக்கும் உரிமை எனக்குக் கிடையாதே”

“ஏன் அப்படிப் பேசுகிறாய் சுந்தரி? அவர்களுக்கு வேண்டிய சமயத்தில் அனுப்பாமல் போனால் எங்களைத்தான் சொல்லுவார்கள். உன்னை அனுப்பி வைக்க மாட்டேன் என்று சொல்லும் உரிமை எங்களுக்கு ஏது? வீணாய் பழி போடாதே’ என்றாள் அருந்ததி.

அப்பொழுதுதான் புரிந்தது பாவனாவுக்கு. சுந்தரிக்குப் போவதில் விருப்பம் இல்லை. ஆனால் அப்பாவும், அம்மாவும் சமுதாயத்திற்கு பயந்து போகச் சொல்கிறார்கள். வலுக்கட்டாயமாய் அனுப்பி வைக்கிறார்கள்.

“ஒரு காலத்தில் அத்தானுக்கு என்னைக் கட்டி வைப்பதற்குத் தயாராய் இருந்தார்கள். கல்யாணம் பண்ணிக்கொண்டு நான்

இந்த வீட்டிற்கு வந்திருந்தால் என்ன செய்திருப்பார்கள்? மாமியார் வீட்டை விட்டுவிட்டு வந்து அம்மாவைப் பார்த்துக்கொள் என்று சொல்லி இருப்பார்களா?"

"அப்படி நடந்திருந்தால் உன் சார்பில் வாதாடும் உரிமை எனக்கு இருந்திருக்கும். இப்போது நிலைமை அப்படி இல்லை. நீ போய்த்தான் தீரணும் சுந்தரி. உன் அண்ணன் எவ்வளவு கீழ்த்தரமாய் பேசினானோ உனக்குத் தெரியாது." கதவு அருகில் வந்து நின்ற விஸ்வம் சொன்னான்.

அன்றிரவு படுக்கப்போகும்போது தன் வருத்தத்தை எல்லாம் வெளிப்படுத்தினாள் சுந்தரி.

"அந்த வீட்டில் எனக்கு மதிப்பே இல்லை பாவனா. இங்கே ஒருத்தருக்குப் பாரமாய் இருக்கிறோம் என்ற நினைப்பே எனக்கு வந்தது இல்லை. நீங்களும் அப்படிப்பட்ட ஸ்தானத்தை கொடுத்திருக்கீங்க. அங்கே அப்படி இல்லை. அண்ணி சொல்கிறபடி நான் நடந்து கொள்ளணும். சாப்பாடு கூட அவள் சாப்பிட சொல்லும் போதுதான், அவள் போடுவதைதான் சாப்பிட வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் நரகம்தான் அந்த வீட்டில்."

"போக மாட்டேன் என்று சொன்னால் என்ன பண்ணி விடுவார்கள்?" ஆவேசமாய் கேட்டாள் பாவனா.

'உங்க அப்பாவுக்கு எனக்கும் ஏதோ ரகசியமான உறவு இருப்பதாய் சொல்லுவார்கள். கல்யாணம் பண்ணிக்கொண்டால் சொத்தில் பங்கு கொடுக்கணும் என்பதால் இப்படி வெச்சுக்கிட்டான் என்று பழி போடுவார்கள்." இருட்டை வெறித்துப் பார்த்தபடி உணர்ச்சியற்ற குரலில் சொன்னாள் சுந்தரி.

******

சுந்தரி போன பிறகுதான் அவள் இல்லாத குறை முழுவதுமாகத் தெரியத் தொடங்கியது. விஸ்வம் ஸ்கூலுக்கு வைஸ் பிரின்ஸ்பால் ஆகிவிட்டான். சுந்தரி இருந்த போது மிடுக்காய் பள்ளிப் பொறுப்பு முழுவதும் தலையில் போட்டுக் கொண்டான். இப்பொழுது கழட்டிக் கொள்ள முடியவில்லை. பாவனாவுக்கு ஒரு நிமிடம் கூட ஒய்வு இல்லாமல் வேலை இருந்துகொண்டே இருந்தது. ஒரு பக்கம் காலேஜ் படிப்பு, இன்னொரு பக்கம் வீட்டு வேலைகள் என்று நலிந்துப் போய்க் கொண்டிருந்தாள். என்றும் இல்லாதபடி தம்பி, தங்கைகள் மீது எரிந்து விழத் தொடங்கினாள்.

ஒரு நாள் மாலையில் தன் வேதனையை சைலஜாவிடம் பகிர்ந்து கொண்டாள்.

“உங்க அப்பா சுந்தரியை அனுப்ப முடியாது என்று திட்டவட்டமாய் சொல்லியிருந்தால் நன்றாய் இருந்திருக்கும்” என்றாள் சைலஜா.

“அவரால் எப்படிச் சொல்ல முடியும்?”

“ஏன் சொல்லக் கூடாது. சுந்தரிக்குப் போகவே விருப்பம் இல்லை. அவள் மேஜர் என்பதால் வலுக்கட்டாயமாய் அவள் அண்ணன் அவளை அழைத்துப் போக முடியாது. உங்கள் சப்போர்ட் கொஞ்சமாவது இருக்கும் என்று தெரிந்தால், அவளால் தன் அண்ணனுடன் சண்டை போட முடிந்திருக்கும். அந்தப் பெண்ணை நீங்க ஒரு இயந்திரமாய் பயன்படுத்திக் கொண்டு இருக்கீங்க, அவ்வளவுதான்.”

“அவளுடைய அம்மாவுக்கு ஏதாவது ஆகிவிட்டால் அந்த பழி எங்கள் மீதுதான் வரும் என்று அப்பா பயந்தார். அது மட்டுமே

இல்லை. அப்பாவுக்கு சுந்தரியை அனுப்புவதில் விருப்பம் இல்லை என்று அந்த மாமா இல்லாத பழியைச் சுமத்தினார்."

"ஐந்து ஆண்டுகள் உங்களுக்காக தன் சக்தியெல்லாம் தாரை வார்த்தாளே? அவளுக்காக அந்த அளவுக்குப் பழியையாவது தாங்கிக்கொள்ள முடியவில்லையா உங்களால்? அவ்வளவு தூரம் முடியாமல் போனால் அந்த தாயையே இங்கே அனுப்பச் சொல்லியிருந்தால் புத்தி வந்திருக்கும்."

"நானும் அதைத்தான் சொன்னேன். அம்மா என்ன சொன்னாள் தெரியுமா? என் ஒருத்திக்கே அப்பாவால் மருந்து வாங்க முடியவில்லை. இன்னொரு நோயாளியின் பாரத்தைத் தலையின் போட்டுக்கொள்கிற நிலையின் அவர் இல்லை என்று. அதுவும் உண்மைதானே? அதனால்தான் சுந்தரி சித்தியை வலுக்கட்டாயமாய் அனுப்பி வைத்தோம். யோசித்துப் பார்த்தால் ரொம்ப வருத்தமாய் இருக்கு. இது போன்ற பிரச்சனைகள் ஏன் வருமோ புரியவில்லை" என்றாள் வருத்தத்துடன் பாவனா.

"கரெக்ட்! நானும் அதைத்தான் எப்போதும் சொல்லி வருகிறேன். நிலைமை என்றுமே நமக்கு அனுகூலமாய் இருக்காது. செய்ய நினைத்த காரியத்தைச் செய்ய முடியாமல் போய் விடும். பண்ணக் கூடாத காரியத்தைப் பண்ண வேண்டியிருக்கும். யாருமே இதற்கு விதிவிலக்கல்ல. நான்கு நாட்களுக்கே நீ இவ்வளவு வேதனைப் படுகிறாயே? சம்பளம் கிம்பளம் எதுவும் இல்லாமல் உங்கள் வீட்டில் எல்லா வேலைகளையும் செய்தாள். உங்கள் சந்தோஷத்திற்காக தவித்துப் போனாள். தேவையான சமயத்தில் ஆதரவு கொடுக்கச் சொல்லி வாய்விட்டுக் கேட்டபோதும் உங்களால் பண்ண முடிந்ததா? நாலுபேர் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்ற பயம். வாழ்க்கை என்றால் கணவன்

மனைவி இருவருக்கு மட்டுமே சம்பந்தப்பட்டது இல்ல. சமூகத்தின் பாதிப்பு இல்லாத வீடு இருக்க முடியாது. இன்னும் நான்கு நாட்கள் கழித்து பக்கத்து வீட்டைப் பார்த்து நீ பொறாமைப் பட்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. நம் அம்மா கூட உடல்நலத்தோடு இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று. உங்க அப்பாவின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. அவர் சலித்துக் கொண்டாலும் வியப்படைய வேண்டியது இல்லை. உன் எதிர்பார்ப்புகள் எப்போதும் பெரிய அளவில் இருக்கும். அது அவ்வளவு நல்லது இல்லை."

"சொற்பொழிவு போதும். நிறுத்திக்கொள். தவறிப்போய் உன்னிடம் என் கஷ்டத்தைப் பற்றிச் சொன்னேன்" என்று வேகமாய் எழுந்தாள் பாவனா. அவளால் எதையுமே தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் தந்தையை ஏதாவது சொல்லிவிட்டால் மட்டும் அவளால் பொறுத்துக் கொள்ளவே முடியாது. அதுவும் சைலஜா போன்ற வேற்றுப்பெண்!

ஒருபக்கம் பரீட்சைகள் நெருங்கிக் கொண்டிருந்தன. இன்னொரு பக்கம் வீட்டு வேலைகளால் மிகவும் நலிந்து போய்க் கொண்டிருந்தாள். பரீட்சைகள் முடிந்து லீவ் விட்டார்கள். அந்தச் சமயத்தில்தான் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

4

வகுப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோறும் பிகினிக் சென்றார்கள். ஏறக்குறைய இருபத்தைந்து மாணவிகளுடன் கம்பார்ட்மென்ட் கலகலப்பாய் இருந்தது. வயதானவர்கள் முதல் நேற்று மீசை முளைத்த விடலைகள் வரையில் அந்தப் பெட்டிதான் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது.

மாணவிகளும் சுதந்திரமாய் குறும்பு சேட்டைகள் செய்துகொண்டும், வம்பு பேசிக்கொண்டும், கண்ணில் பட்ட

ஆண்பிள்ளைகளுக்கு பட்டப்பெயரை சூட்டிக் கொண்டும் ரகளை செய்து கொண்டிருந்தார்கள்.

பாவனாவின் பார்வை இரண்டு வரிசைகளைத் தாண்டி ஜன்னல் ஓரமாய் உட்கார்ந்திருந்த இளைஞன் மீது பட்டது. அவனுக்கு பதினேழு வயது இருக்கலாம். நிறம் கொஞ்சம் கம்மியாய் இருந்தாலும் பார்க்க லட்சணமாகவே இருந்தான். எவ்வளவு நேரமாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தானோ தெரியாது. அவள் தன்னைப் பார்த்ததுமே பார்வையைத் திருப்பிக்கொண்டு ஜன்னல் வழியாய் பார்க்கத் தொடங்கினான். வெளியே மரங்களும், வயல்களும், டெலிபோன் கம்பங்களும் வேகமாய் பின்னுக்குப் போய்க் கொண்டிருந்தன.

பாவனாவும் கொஞ்ச நேரம் வெளியே பார்த்துவிட்டுத் திரும்பவும் அவன் இருக்கையை நோக்கித் திரும்பினாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் இந்த தடவை பார்வையைத் திருப்பிக் கொள்ளாமல் அவளையே பார்க்கத் தொடங்கினான். பெண்களுக்கே உரிய பதற்றத்துடன் அவள் சட்டென்று பார்வையைத் திருப்பிக்கொண்டாள்.

சைலஜாவுடன் பெசிகொண்டிருந்தாள் என்ற பெயரே ஒழிய அவள் பார்வை இடையிடையே அவ்விளைஞனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

ஏறக்குறைய அரைமணி நேரம் இதே விதமாய்க் கழிந்தது. ரயில் ஒரு பெரிய ஸ்டேஷனில் நின்றதால் நிறைய பெண்கள் டிபனுக்காக இறங்கினார்கள். பாவனா தன் இருக்கையிலேயே இருந்துவிட்டாள். பத்திரிகையை கையில் எடுத்துப் புரட்டிக்கொண்டே இடையே அந்தப் பக்கமாய் பார்த்தாள். கடந்த அரைமணி நேரமாய் பரஸ்பரம் பார்த்துக் கொண்ட அறிமுகத்தால் வந்த தைரியத்தால் அவ்விளைஞன் மெல்லச் சிரித்தான்.

அவள் உடனே புத்தகத்திற்குள் தலையைப் புதைத்துக் கொண்டுவிட்டாள். அவள் இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. எழுத்துக்கள் மங்கலாய் தென்பட்டன. அவள் தேறிகொள்ள ரொம்ப நேரமாயிற்று.

அவள் அழகு இதழ் விரித்த மல்லிகைப் பூப்போன்றது. பதினாறு வயது இளம் பருவம் அந்த அழகிற்கு கன்னித்தன்மையைச் சேர்த்தது. அவள் கல்லூரிக்குப் போகும் போதோ, லைப்ரரிக்குப் போகும் போதோ பசங்கள் கமெண்ட் அடிப்பது புதிது அல்ல. ஆனால் இந்த மாதிரி ஒரு இளைஞன் அவளை நோக்கி ஆர்வம் போங்க நேசத்துடன், நெருக்கத்துடன் பார்ப்பது இதுதான் முதல் தடவை. ரசனைகள் மிகுந்த தன்னுடைய உலகத்தை மற்றவர்கள் புரிந்துகொள்ள வில்லையே என்ற வருத்தம் அவன் கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவள் அந்த இளைஞனின் பக்கம் பார்க்கும் நிலைக்கு உயர்ந்துவிட்டாள். அவன் சிரித்தபோது தலை குனிந்தபடி சிரித்தாள். அதை அவன் கவனித்து விட்டான் என்பதையும் புரிந்து கொண்டாள். காதலில் இன்னும் அனுபவப்படவில்லை என்பதால் அவன் இன்னும் சைகை காட்டும் நிலைக்கோ, காற்றில் முத்தம் கொடுக்கும் நிலைக்கோ வளர்ச்சியடையவில்லை.

ரயில் திரும்பவும் புறப்பட்டது.

அவள் பக்கத்தில் இருந்த சைலஜாவுடன் பேசத் தொடங்கினாள். பேச்சு வழக்கத்தைவிட அதிகமாகவே இருந்தது. ஏனோ காரணம் புரியவில்லை. பேசிக்கொண்டே இடையிடையே அவனைப் பார்ப்பாள். அவனும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் சட்டென்று சைலஜாவின் பக்கம் திரும்பி பேச்சைத் தோடருவாள். இரவு வரையிலும் இதே நிலை தொடர்ந்தது.

பத்துமணியானதும் எல்லோரும் உறங்கி விட்டார்கள். த்ரீ டயர் கம்பார்ட்மெண்ட் அது. அவளுடையது கீழ் பெர்த். விளக்கை அணைத்த அரைமணி நேரத்திற்குள் அவள் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். ஒரு மணியளவில் விழிப்பு வந்த போது அவள் எழுந்து பாத்ரூமை நோக்கிப் போனாள்.

கதவைத் திறந்துகொண்டு திரும்பி வரும்போது அந்த இளைஞன் தென்பட்டான். அவள் இதயத்துடிப்பு நின்று விடும் போல் இருந்தது. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. அவன் நிலைமையும் அது போலவே இருந்தது. பயத்தால் தடுமாறியபடி சிரித்தான். அவளுக்கு அங்கிருந்து போய்விட வேண்டும் போல் இருந்தது. அதிர்ஷ்டவசமாய் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

“உ... உங்க பெயர்?” என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை. அவனைத் தாண்டிக்கொண்டு தன் இருக்கைக்கு வந்து படுத்துக் கொண்டாள். வெகுநேரம் வரை அவள் இதயம் படபடத்துக் கொண்டே இருந்தது. நள்ளிரவில் மெதுவாய்த் திரும்பி அவன் சீட்டை நோக்கிப் பார்த்தாள். இருட்டில் அவன் விழித்துக்கொண்டு இருக்கிறானா அல்லது தூங்குகிறானா என்று தெரியவில்லை. மேலும் கொஞ்ச நேரம் அப்படியே பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு ஒன்றும் புரியாமல் கண்களை மூடிக்கொண்டாள். உறக்கம் அவள் காதலை வெற்றிக் கொண்டு விட்டது.

வீட்டுக்குத் திரும்பி வந்தபிறகுகூட இரண்டு மூன்று முறை அந்த இளைஞன் நினைவுக்கு வந்தான். பிறகு அவனைப் பற்றி முற்றிலும் மறந்து போகவில்லை என்றாலும் அந்த எண்ணம் அவ்வளவாகத் துன்புறுத்தவில்லை.

சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு அவள் ஒரு வாரப்பத்திரிகையைப் படித்தபோது நின்று போயிருந்த அந்த சம்பவத்திற்கு மற்றொரு திருப்பம் வந்தது.

******

“பேனா நட்பு” என்ற தலைப்பில் அந்த வாரப்பத்திரிகை ஒரு பகுதியை நடத்திக் கொண்டிருந்தது. இளைஞர்களும், இளம் பெண்களும் தம் மனப்போராட்டங்களை, முதலில் ஏற்பட்ட காதலை, அந்தரங்க உணர்வுகளை அந்தப் பகுதியில் எழுதி வந்தார்கள்.

லீவு நாட்களில் கண்ணில் தென்பட்ட எல்லா புத்தகங்களையும் அவள் படித்து வந்தாள்.

‘பேனா நட்பு’ பகுதியில் அந்தக் கடிதம் அவள் கவனத்தைக் கவர்ந்தது. அது..

‘என் கனவின் ஒளியான ரயில் சுந்தரிக்கு,

ஏப்ரல் இருபதாம் தேதி என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாள். அன்றைக்கு சென்ட்ரல் வரைக்கும் ரயிலில் பயணம் செய்த பெண்களுக்குள் ஒருத்தி என் மனதில் நின்றுவிட்டாள். நீலப் பாவாடையின் மீது வெண்ணிற தாவணி அணிந்திருந்த அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தேன். அவள் இல்லாவிட்டால் என் வாழ்க்கையே வியர்த்தம் என்று தோன்றுகிறது.

என் அன்பே! என்மேல் இரக்கம் காட்ட மாட்டாயா? உன் முகவரி தெரியாது. எந்த ஊர் என்றும் தெரியாது. கண்களை மூடினாலும் திறந்தாலும் நீ தான் நினைவுக்கு வருகிறாய். என்னை நீ பார்த்த பார்வை என் இதயத்தை ஊடுருவிக்கொண்டு போய்விட்டது.

திருமணம் என்று பண்ணிக்கொண்டால் உன்னைத்தான் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று அந்த நிமிஷமே முடிவு செய்துவிட்டேன். ரயிலில் எல்லோரும் இறங்கிப் போன பிறகு நீ உட்கார்ந்து இருந்த இருக்கைக்குப் போய் அந்த இடத்தை கையால் ஸ்பர்சித்தேன். அந்த இருக்கைக்கு அடியில் வாடிய முல்லை தென்பட்டது. அது இன்றுவரை என்னிடம் பத்திரமாய் இருக்கிறது. என் காதலியின் தலையிலிருந்து உதிர்ந்த மல்லிகையைக் காட்டிலும் விலை மதிப்பானது இந்த உலகத்தில் வேறு கிடையாது. எங்கெங்கோ இருக்கும் காதலர்களை எல்லாம் ஒன்று சேர்த்து வைக்கும் இந்தப் பத்திரிகைக்கு என் நன்றி. இதனை என் சிநேகிதி படிக்க வேண்டும் என்றும், எனக்கு தன் காதலை தெரிவிக்க வேண்டும் என்றும் வேண்டுகிறேன்.

என் இதயவீணையில் காதல் தந்திகளை மீட்டிவிட்டு, என்னை தேவதாஸ் ஆக்கிவிட்டு போன சுந்தரியே! உனக்காக வழிமேல் விழி வைத்துக் காத்துக்கொண்டே வாழ்நாளைக் கழித்துவிட விரும்பும்

உன் காதலன்,

சுதர்சன், வற்றல்குண்டு,

அவள் வழிகளில் நீர் நிறைந்தது. பல முறை படித்தாள். இரண்டு நாட்கள் வரை அவள் மனதில் அதுவே சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தது. அன்றைக்கு சைலஜாவிடமிருந்து கடிதம் வந்தது. அதற்கு பதில் எழுதினாள், வழக்கம் போல் யோகக்ஷேமத்தை தெரிவித்து.

பக்கத்திலேயே பத்திரிக்கை கிடந்தது. இன்னொருமுறை அப்பகுதியைப் படித்தாள். இதயத்தில் காதல் பொங்கி ததும்பத் தொடங்கவே அதற்கு மேல் தாங்க முடியாதவளாய் பேப்பரை எடுத்து நான்கு வரிகளை எழுதினாள்.

சுதர்சன் அவர்களுக்கு,

நீங்கள் என்னை எந்த அளவிற்குக் காதலிக்கிறீர்களோ அதையும் விட அதிகமாய் நான் உங்களைக் காதலிக்கிறேன். ஆனால் எனக்கு தைரியம் இல்லை. என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் நினைவாகவே இருக்கிறேன். தயவுசெய்து என்னை மறந்து விடுங்கள். சுதர்சன்! எனக்காக உங்கள் வாழ்க்கையைப் பாழடித்துக் கொள்ளாதீர்கள். எப்போதாவது விதி கூட்டி வைத்தால் திரும்பவும் சந்திப்போம். திருமணம் பண்ணிக்கொள்ளாமல் இருக்காதீர்கள். என் மீது ஆணை!

அவள் தன் முகவரியை எழுதுவதற்குப் பயந்தாள். கவரின் மீது சுதர்சனின் முகவரியை எழுதினாள்.

அவள் மனதிற்குத் திருப்தியாக இருந்தது. தன்னால் ஒருத்தரின் வாழ்க்கை வீணாகிவிடக் கூடாது. அதுதான் அவள் எண்ணம். ஆனால் அவள் எண்ணம் அந்த விதமாய் நிறைவேறவில்லை. காரணம்...

சிநேகிதிக்கு எழுதிய கவரில் சுதர்சனுக்கு எழுதிய கடிதத்தையும், சுதர்சனின் முகவரி இருந்த கவரில் சைலஜாவுக்கு எழுதிய கடிதத்தையும் தவறுதலாக வைத்துவிட்டு போஸ்ட் பண்ணிவிட்டாள்.

அதற்குப் பிறகு சில நாட்கள் அவளை சுதர்சன் நினைவுகள் துரத்திக் கொண்டிருந்தன. தான் ரயிலில் ஏறியது முதல் இறங்கியது வரைக்கும் நடந்தவற்றை நினைவுப் படுத்திப் பார்த்துக் கொள்வாள். அவள் கதவுக்கு அருகில் நின்ற போது அவன் பெயரைக் கேட்டது, அவள் பயந்து ஓடியது, அவன் தன்னைப் பார்த்துச் சிரித்தபோது தான் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டது எல்லாவற்றையும் வரிசையாய் நினைவுப் படுத்திக் கொள்வாள்.

இரவு நேரத்தில் கனவுகளும் வரும். அவளும் சுதர்சனும் சேர்ந்து போருட்காட்சிக்குப் போனது போலவும், அங்கே ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டே நிறைய கதைகளை பேசியது போலவும் கனவு வந்தது. பத்திரிகையில் வெளிவந்த அவன் கடிதத்தைப் பலமுறை படித்திருப்பாள். 'Love is nothing but recognition' என்றார் ஒரு எழுத்தாளர். சாதாரணமான ஒரு பெண்ணை அவன் அடையாளம் கண்டு கொண்டதும், அவ்வளவு தூரத்திற்கு யோசிக்கத் தொடங்கியதும் அபூர்வமான உணர்வு.

அவன் தன் வீட்டிற்கு வந்து தந்தையிடம் தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதாக கேட்பது போலவும் ஊகித்துக் கொண்டாள். ஆனால் அது நடக்காத காரியம். அவள் தந்தை எவ்வளவு பழமைவாதியோ அவளுக்குத் தெரியும். அதனால்தான் அவள் தன் முகவரியை எழுதவில்லை. பல ஆண்டுகள் கழித்து அதே ரயிலில் மனைவி, குழந்தைகளுடன் அவன் தென்பட்டாற்போலவும், "இதெல்லாம் உன்னால்தான். நீ சொன்னது போல் வேறு வழியில்லாமல் இந்தத் திருமணம் பண்ணிக்கொண்டேன் பாவனா" என்று அவன் சொன்னது போலவும் ஊகித்துக் கொண்டாள்.

ஆனால் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

இன்னொரு நான்கு நாட்களில் தேர்வின் முடிவுகள் வரும் என்ற போது சைலஜா ஊரிலிருந்து திரும்பி வந்தாள். "இதோ உன்னுடைய கடிதம்" என்று பாவனாவிடம் ஒரு கவரை நீட்டினாள்.

"என்ன கடிதம்?" வியப்புடன் கேட்டாள் பாவனா கையில் வாங்கிக்கொண்டே.

“தவறுதலாய் எனக்கு வந்துவிட்ட, சுதர்சனுக்கு நீ எழுதிய கடிதம்” என்று நடந்ததை எல்லாம் சொன்னாள். பாவனா திகைத்துப் போனவளாய் கேட்டுக்கொண்டாள். இந்த விஷயமெல்லாம் மூன்றாவது நபருக்குத் தெரிந்துவிட்டதில் அவள் மனதில் குற்ற உணர்வு ஏற்பட்டது. ரயிலில் என்ன நடந்தது என்று சொன்னாள். இதுபோன்ற விஷயத்தில் எதிராளிக்கு தன்னுடைய ரகசியம் கொஞ்சம் தெரிந்துவிட்டது என்று சந்தேகம் வந்தாலும் முழுவதுமாக சொல்லிவிடுவது சாதாரணமாக நடப்பதுதான்.

முழுவதுமாக கேட்டுவிட்டு சைலஜா சொன்னாள். “அந்தப் பத்திரிகையில் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் வந்த கடிதத்தை நானும் பார்த்தேன். நீ எந்த நிறத்தில் பாவாடை தாவணி அணிந்து இருந்தாய் என்று எனக்கு நினைவு இல்லை. நம்முள் யாராவது இருக்கலாம் என்று நினைத்தேன். உன் கடிதம் வந்ததும் அது நீ தான் என்று தெரிந்துவிட்டது. பாவனா இவ்வளவு பெரிய மனுஷி ஆகிவிட்டாளா என்று எண்ணிக் கொண்டேன்”

பாவனா பதில் பேசவில்லை. கொஞ்ச நேர நிசப்ததிற்குப் பிறகு “நான் அவனுக்குக் கடிதம் எழுதினேன்” என்றாள் சைலஜா.

பாவானா அதிர்ந்து போய் “என்னது?” என்றாள் கலவரத்துடன்.

“ஆமாம். உன் கடிதம் எப்படியும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அவன் முகவரி பத்திரிகையில் இருந்தது. உண்மையில் உன் கடித்தத்தையே இன்னொரு கவருக்குள் வைத்து, தவறுதல் நடந்துவிட்டது என்று தெரிவித்து அனுப்பி இருக்கலாம். ஆனால் என் பெயரில் என் முகவரியைத் தந்து எழுதினேன். உடனே அவன் பதிலும் எழுதி விட்டான். இதோ அந்த பதில்” என்று கொடுத்தாள்.

நடுங்கும் விரல்களுடன் பாவனா அதைப் பிரித்துப் பார்த்தாள்.

“அன்புள்ள சைலஜா!

பாலைவனத்தில் திரிந்துக் கொண்டிருக்கும் பயணிக்கு ஊற்று தென்பட்டாற்போல் இருந்தது உங்கள் கடிதம். நாம் இருவரும் ஒன்று சேரவேண்டும் என்று அந்தக் கடவுளே எழுதி வைத்து விட்டாற்போலும். சைலஜா! எவ்வளவு அழகான் பெயர்! உங்கள் கடிதம் வந்த அன்றைக்கே அந்தப் பெயரை என் நோட்டுப் புத்தகத்தில் ஆயிரம் தடவை எழுதிவிட்டேன். உங்கள் பெயரில் முதல் எழுத்து எஸ். என்னுடைய பெயரும் எஸ் என்ற எழுத்தில்தான் தொடங்குகிறது. நம்முடையது அபூர்வ தொடர்பு என்பதை இது காட்டுகிறது. உண்மையில் அன்றைக்கு ரயிலில் முதல் பார்வையிலேயே உங்களைக் காதலித்துவிட்டேன் சைலஜா!

சைலூ! என் காதல்ராணி! நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு இருட்டை வெறித்துப் பார்ப்பது எனக்குப் பிடித்தமானது. எனக்கு நான்கு அக்காக்கள் இருக்கிறார்கள். பெரியவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது. இரு அண்ணன்கள் இன்னும் படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

எனக்குக் கையெழுத்தைக் கொண்டு மனிதர்களின் சுபாவத்தை எடைபோடத் தெரியும். உன்னுடைய சுபாவம் நிர்மலமானது என்று சொல்ல முடியும். எந்த முடிவாய் இருந்தாலும் யோசித்து நிதானமாக செயல்படுவாய். உன் கையெழுத்து போல் எழுதுபவர்கள் நட்புக்கு உரியவர்கள். அப்படிப்பட்ட பெண்ணை காதலிப்பவனுக்கு அதிர்ஷ்டம் கைகூடி வரும்.. உன் கடிதத்தை பிரேம் போட்டு மாட்டி வைத்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றுகிறது. வீட்டில் இருப்பவர்கள் பார்த்து விடுவார்களே என்று பயந்து சும்மா இருக்கிறேன். பதில் எழுதுவாய் இல்லையா?

சுதர்சன்

பாவனா அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு திகைத்துப் போனாள்.

சைலஜா சிரித்துவிட்டு “சாரி” என்றாள்.

“பரவாயில்லை.” அதற்குமேல் என்ன சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லை.

‘நான் சாரி சொன்னது அதற்கு இல்லை. அவன் கடிதத்தில் நீ என்று எண்ணிக்கொண்டு என் பெயரைப் புகழ்ந்து இருக்கிறான். அந்த இரண்டுமே எனக்கு சம்பந்தப்பட்டவை. அந்த ஆர்வத்தில் அவனுக்குத் திரும்பவும் கடிதம் எழுதினேன்.”

பாவனா மின்சாரம் தாக்கியது போல் அப்படியே நின்றுவிட்டாள். சைலஜா மேலும் தொடர்ந்தாள்.

“அதற்கு அவன் பதில் எழுதினான். எங்கள் இருவருக்கும் இடையே கடிதப் போக்குவரத்து அந்த விதமாய் இந்த இரண்டு மாதங்களாய் தொடர்ந்து கொண்டிருந்தது.”

“பாவம்! அவன் உன்னை நான் என்று நினைத்து விட்டிருப்பான். நீ ரொம்ப தவறு செய்துவிட்டாய் சைலூ! அவனுக்கு அனாவசியமாக ஆசையைக் கற்பித்து விட்டாய். கடிதத்தைக் கொண்டு பார்த்தால் அவன் மிகவும் மென்மையான சுபாவம் படைத்தவன் என்று தெரியவில்லையா? அவ்வளவு நேர்மையான காதலனை அழ வைப்பது நல்லது இல்லை.”

“ஆமாம். எனக்கும் அப்படித்தான் தோன்றியது. அதனால்தான் நேரில் சந்தித்தேன், நடந்த தவறைச் சொல்லுவதற்காக.”

“சந்தித்தாயா?”

“ஆமாம்.”

“என்ன சொன்னான்?” டென்ஷன் தாங்க முடியாமல் கேட்டுவிட்டாள்.

சைலஜா ரொம்ப நிதானமாய் சாதாரணமான குரலில் சொன்னாள். “ரொம்ப மாறிப் போய் விட்டீர்களே என்றான்.”

பாவனாவின் முகத்தில் இரத்தம் வற்றிவிட்டாற்போல் இருந்தது. “நிஜமாகவா?” என்றாள்.

“ஆமாம். எப்பவோ மூன்று மாதகளுக்கு முன்னால் உன்னை ரயிலில் பார்த்துக் காதல் வயபட்டுவிட்டான். திடீரென்று அந்தப் பெயருடன் நான் போய் நின்றதுமே குழம்பிப் போய்விட்டான். ஆனால் உடனே நடந்ததை எல்லாம் சொன்னேன். உனக்குத் திருமணம் ஆகிவிட்டது என்று சிறிய பொய்யையும் சொன்னேன். கொஞ்சம் வருத்தப்பட்டான். அதற்காக ரொம்பவும் ஏமாற்றமடையவில்லை என்று வைத்துக்கொள். என் கையெழுத்தை பாராட்டியதற்கு தாங்க்ஸ் சொன்னேன். இருவரும் சேர்ந்து ஹோட்டலுக்குப் போய் காபி குடித்தோம். நன்றாகப் பேசினான். இருபது வயது இருக்கக் கூடும் இல்லையா. கபில்தேவ் பற்றியும், அனில்கபூர் பற்றியும் நிறைய பேசினான். அவ்விருவரும் அவனுக்கு ரொம்ப பிரியமானவர்கள். வேடிக்கை என்னவென்றால் எங்களுக்கு இடையே உன்னைப்பற்றிய பேச்சே வரவில்லை. எத்தனையோ விஷயங்களைப் பேசிக்கொண்டோம். திரும்பி வரும் சமயத்தில் அதைத்தான் சொன்னேன்.

“உன்னுடன் பேசிக் கொண்டிருந்த இரண்டு மணி நேரமும் இரண்டு வினாடிகள் போல் பறந்தோடி விட்டது சுத்தா!’ என்று. நான் அவனை செல்லமாய் சுத்தா என்று கூப்பிடத்

தொடங்கியிருந்தேன். அவனுக்கும் அதுதான் விருப்பமாம். உடனே கடிதம் எழுதச் சொன்னான். காத்திருக்க முடியாமல் ரயிலில் திரும்பி வரும்போதே கடிதம் எழுதிவிட்டேன். அதற்குப் பதிலும் வந்துவிட்டது. இதைப் படித்துப் பார்.”

நடுங்கும் விரல்களுடன் பாவனா அதை வாங்கிப் படிக்கத் தொடங்கினாள்.

“சைலூ!

நீ கிளம்பிப் போன பிறகு எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. நாம் பேசிக்கொண்ட வார்த்தைகளே திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்து கொண்டிருந்தன. ஒருக்கால் உன்னுடன் சிநேகம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றுதான் கடவுள் உன்னை இதுபோல் கடிதம் எழுத வைத்திருப்பார். இல்லாவிட்டால் அந்தப் பெண் எனக்கு எழுதிய கவரில் உன் கடிதத்தை வைப்பானேன்? நடந்ததை எல்லாம் நீ சொன்னது உன் தூய்மையான மனதைக் காட்டுகிறது. நீ போன பிறகும்கூட இன்னும் என்னோடு உட்கார்ந்து காபி குடித்துக்கொண்டே ‘சுத்தூ! என்று கூப்பிடுவது போலவே இருக்கிறது. அந்த இரண்டு மணி நேர உரையாடலில் நம் இருவரின் ரசனைகளும் ஒரே மாதிரி இருப்பதைக் கவனித்தேன். உன்னைப் போன்ற சிநேகிதி கிடைத்தது என் அதிர்ஷ்டம். போகும் போது வழியில் ரயிலிலேயே எனக்குக் கடிதம் எழுதினாய் என்றாள் என் சிநேகம் கூட உனக்குப் பிடித்துதான் இருக்கிறது என்று புரிகிறது. உடனே பதில் எழுது.

இப்படிக்கு சுதர்சன்

பாவனா படித்து முடித்துவிட்டு மெதுவாய் நிமிர்ந்தாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த சைலஜா சொன்னாள்.

“ரயில் சுந்தரி என்றும், நான் வழிபடும் தேவதை நீதான் என்றும் சொன்ன உன் நண்பன் இப்பொழுது என் சிநேகிதன். ரயிலில் உன்னைப் பார்த்ததை அதிர்ஷ்டமாய் பாவித்தவன், கவரில் என் கடிதம் வருவதை தற்போது அதிர்ஷ்டமாய் நினைக்கிறான். நான் அவனை குறை சொல்லவில்லை பாவானா! பெண்ணை ஏமாற்றுவது, வலையில் போட்டுக்கொள்வது போன்ற திட்டங்கள் கொண்ட இளைஞனாகவும் நான் அவனை கருதவில்லை. அவனுக்கு அவ்வளவு வயதுகூட இல்லை. காதலிக்க வேண்டும், காதலிக்கப்பட வேண்டும் என்ற துடிப்பு மட்டுமே உள்ள வயது அது. அவன் உன்னைக் காதலிக்கவில்லை. ‘காதலிப்பது’ என்ற உணர்வை மட்டுமே காதலித்திருக்கிறான். உன் ஸ்தானத்தில் நான் காதலிக்கத் தொடங்கியதுமே என்னைக் காதலிக்கத் தொடங்கிவிட்டான். அவன் காதலுக்கு வடிகாலாய் அந்த வாரப் பத்திரிகை கண்ணில் பட்டுவிட்டது, அவ்வளவுதான்.

உன் விருப்பு வெறுப்பு என்னவென்றோ, உன் பழக்க வழக்கங்கள் என்னவென்றோ, உன் படிப்பு என்னவென்றோ கூடத் தெரியாமல் ஒரே ஒரு முறை ரயிலில் பார்த்துவிட்டு நீதான் என் தேவதை என்று எழுதிய அந்த பையனின் ‘capasity to love’ என்னவென்று பார்க்கலாம் என்று இவ்வாறு நாடகம் நடத்தினேன்.. பாவனா! என்னை மன்னித்துவிடு.

அவன் காதல் வெள்ளம் உன்னிடமிருந்து என் பக்கம் திரும்பும் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் அவனை “சுத்தூ” என்று அன்பு ததும்ப விளித்தேன். அவன் மீது ஆர்வம் இருப்பது போல் பேசினேன். திரும்பவும் இன்னொரு தடவை சொல்கிறேன். அவன் வயது அப்படிப்பட்டது. நீ கேட்கலாம், நம் வயதுகூட அப்படிப்பட்டதுதானே என்று. ஆனால் பெண் எப்போதுமே தற்காப்பு நிலையில் இருக்க வேண்டும். வயதையும் விட

சீக்கிரமாய் வளர்ந்து விட வேண்டும். இல்லாவிட்டால் நஷ்டமடைந்து விடுவோம். ஒன்று மட்டும் உண்மை. இதெல்லாம் உனக்காகத்தான் பண்ணினேன் பாவனா!

உன் கடிதத்தைப் பார்த்ததுமே நான் பயந்துவிட்டேன். ஒருத்தன் நம்மைக் காதலிப்பதாய் சொன்னதுமே அவ்வளவு தூரம் நெகிழ்ந்து போக வேண்டியது இல்லை. 'காதல் தியாகத்தை விரும்பும்' என்பதெல்லாம் அந்தக் காலத்துப் பேச்சு. காதல் உறுதியைக் காட்ட வேண்டும். முதலில் தன்மீது தனக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். இரண்டாவது அடுத்தவர் மீது நம்பிக்கை வேண்டும். அப்படிப்பட்ட உறுதி இருந்துவிட்டால் இனி வேதனைக்கு வழியில்லை. உன்னை இந்த வேதனையிலிருந்து தப்பிக்கச் செய்வதற்காகத்தான் நான் அவனுக்குக் கடிதம் எழுதினேன்."

கண்ணீர் மல்க பாவனா சிநேகிதியைப் பார்த்தாள். ஆனால் அது துக்கத்தினால் வந்த கண்ணீர் அல்ல. அன்பால் வெளிவந்த கண்ணீர்! "இதை.. இதையெல்லாம் எங்கிருந்து கற்றுக் கொண்டாய் சைலூ?"

"புத்தகங்களிலிருந்து. நம் பெற்றோர்கள் நம்மைப் புத்தகங்களைப் படிக்க அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் தேடித் பார்க்கும் பொறுமை இருந்தால் சஸ்பென்ஸ், த்ரில்லர் நாவல்களில் கூட வாழ்க்கைக்கு வேண்டிய நெறிமுறைகள் இருக்கும். புத்தகம்தான் உண்மையான நண்பன் என்று சும்மா சொல்லவில்லை."

"நான் அவனை பார்த்ததும், சிரித்தும் தவறு என்கிறாயா? எனக்கு ஏனோ அவனைப் பார்ப்பது பிடித்து இருந்தது."

“இளமையில் ஈர்ப்பு இருப்பது தவறு இல்லை. அந்த அளவுக்குக் குறும்பு சேட்டைகள் பண்ணவில்லை என்றால் அது பதினாறு வயது பருவம் எப்படி ஆகும்? ஒரு நிமிஷம் இரு” என்று சொல்லிவிட்டுப் பக்கத்தில் இருந்த தன் வீட்டிலிருந்து ஒரு புத்தகத்துடன் திரும்பி வந்தாள்.

‘என்ன புத்தகம் அது?”

“முந்தா நாள் எழுத்தாளர்களின் கூட்டத்திற்குப் போயிருந்த போது ஒரு எழுத்தாளர் இந்த கொடேஷனை எழுதிக் கொடுத்தார். எனக்கு மிகவும் பிடித்துவிட்டது” என்றாள். பாவனா அதை வாங்கிப் படித்தாள்.

“For the man, an attraactive girl, and for the woman an attraactive man, are the prizes they are after! ‘Attractive usually mans a nice package of quality which are Popular and sought after on the personality market. But as two persons become well acquainted, their intimacy loses more and more its miraculous intial excitement.”

அவளுக்கு இரண்டு மூன்று தடவைப் படித்தப் பிறகுதான் புரியத் தொடங்கியது. பிறகு அவள் சிநேகிதியை நோக்கித் திரும்பினாள். மனதில் இருந்த கவலையெல்லாம் திடீரென்று மாயமாகி விட்டாற் போலிருந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்து மனம்விட்டு சிரித்துக் கொண்டார்கள்.

“உண்மையில் நான் எவ்வளவு முட்டாளாய் நடந்துகொண்டு இருக்கிறேன் என்று நினைத்துப் பார்த்தால் எனக்கே சிரிப்பு வருகிறது.”

“திரும்பவும் அதையே சொல்லாதே. அந்த அளவுக்காவது சேட்டை பண்ணனும். ஆனால் அதையே சீரியஸாக எடுத்துக் கொள்வது...” என்று மேலும் ஏதோ சொல்லப் போனாள் சைலஜா.

“போகட்டும் விடு. ஏதோ நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் அதைப்பற்றி என்ன?” என்றாள் பாவனா.

அவ்வளவு எளிதில் முடிந்து விடவில்லை அது.

5

பாவனா இன்டர் மூன்றாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றாள். ஏற்கனவே எல்லோரும் எதிர்பார்த்த விஷயம் என்பதால் யாருக்கும் வருத்தம் ஏற்படவில்லை. தொடர்ந்து மேல்படிப்புப் படிக்கும் ஆர்வம் கொஞ்சம் இல்லாமல் போய்விட்டது. வீட்டுப் பொறுப்பு முழுவதும் அவள் தலையில் விழுந்தது. விஸ்வம் வரன் தேடவேண்டும் என்று முடிவு செய்தான். பாவனாவின் அழகிற்கு வரன் கிடைப்பது கஷ்டம் இல்லை என்று நினைத்துவிட்டான்.

ஆனால் பள்ளிக்கூடம், வீடு, இருக்கும் ஊர் இவற்றைத் தவிர வேறு எதுவும் அறிந்திராத விஸ்வத்திற்கு மகளுக்குக் கல்யாணம் பண்ணுவது தான் நினைத்தது போல் அத்தனை சுலபம் இல்லை என்று அனுபவத்தில் தெரிய வந்தது.

மனைவிக்கு கேன்சர் நோய் வந்ததால் கேன்சர் எவ்வாறு பரவுகிறது என்று தெரிந்துகொள்ள முடிந்தது அவனால். ஆனால் வரதட்சிணை என்ற ஜாட்டியம் சமுதாயத்தில் எவ்வளவு வேகமாய், ஆழமாய் பரவியிருக்கிறது என்று தெரியவில்லை.

“மகளுக்குக் கல்யாணம் பண்ண வேண்டும் என்று நினைக்கிறேன். ஏதாவது வரன் இருந்தால் சொல்லுங்கள்’ என்று

கேட்டால் அவர்கள் கேட்கும் முதல் கேள்வி "வரதட்சணை எவ்வளவு தர முடியும் உன்னால்?" என்பதுதான்.

"என் மகள் ரொம்ப அழகாய் இருப்பாள். படித்தும் இருக்கிறாள். வீட்டு வேலைகளை நேர்த்தியாய் செய்வாள்" என்பான்.

"அதெல்லாம் யாருக்கு வேண்டும்? ஒவ்வொரு மணமகனுக்கும் ரேட் பிக்ஸ் ஆகியிருக்கு. இனி குமாஸ்தாக்கள், வங்கி அதிகாரிகள், டாக்டர்கள் என்றால் போகப் போக ரேட் அதிகமாகிக் கொண்டே போகும். பெண் அழகாய் இருந்தால் மட்டும் என்னவாம்? அழகை கடித்து விழுங்கப் போகிறோமா?" என்று சிரித்தார்கள். "வேறு யாரிடமும் இப்படிப் பேசாதே" என்று இடித்துக் காட்டவும் செய்தார்கள்.

ஒரு வருடம் கழிந்த பிறகும் பாவனாவைப் பண்ணிக் கொள்வதற்கு ஒருத்தருமே வரவில்லை. நாட்கள் அதே ரீதியில் கழிந்து போய்க் கொண்டே இருந்தன.

*****

"அருந்ததி! பரபரப்புடன் உள்ளே வந்தான் விஸ்வம்.

"என்ன விஷயம்?" களைப்புடன் திரும்பிப் பார்த்தாள் அருந்ததி. அவள் முகத்தைப் பார்த்ததும் அவன் உற்சாகம் பாதியாகி விட்டது.

"என்னவோ சொல்ல வந்தீங்களே. என்ன?" கேட்டாள் அருந்ததி.

"ஒன்றும் இல்லை. பாவனாவைப் பெண்பார்க்க பிள்ளை வீட்டார் நாளைக்கு வருகிறார்கள்."

“அப்படியா. மாபிள்ளை பையன் என்ன செய்கிறானாம்?” உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டே கேட்டாள் அருந்ததி.

பாவனா எழுந்து மெதுவாய் வெளியே வந்துவிட்டாள். ஆனால் கதவிற்கு அருகிலே அவள் பாதங்கள் நின்றுவிட்டன. விவரங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம்.

“வங்கியில் வேலை பார்க்கிறான். சீக்கிரத்திலேயே ஆபீசர் கூட ஆகி விடுவானாம். நம்ப பிச்சுமணிதான் கொண்டு வந்தான் இந்த வரனை.”

“நாளைக்காவது எனக்குக் கொஞ்சம் உடல்நிலை சரியாக இருந்தால் நன்றாக இருக்கும். பிச்சுமணியின் மனைவியை நாளைக் காலையிலேயே வீட்டுக்கு வரச் சொல்லுங்க. அப்படியே ஏதாவது ஸ்வீட், பழங்களை வாங்கிக் கொண்டு வந்து விடுங்கள். கடவுள் கிருபையால் இந்த வரன் முடிந்துவிட்டால் நன்றாக இருக்கும்.”

“நம் பாவனாவுக்கு என்ன குறைச்சல்? கடைந்தெடுத்த தந்தச்சிலை! கட்டாயம் அவர்களுக்குப் பிடித்துவிடும். சரி, நான் வெளியே போய்விட்டு வருகிறேன்.”

தந்தை எழுந்துக் கொள்வதை கவனித்துவிட்டுப் பின்னால் தோட்டத்தை நோக்கி நழுவி விட்டாள் பாவனா. அவள் இதயம் வேகமாக துடித்தது. தன் வாழ்க்கையில் பெண்பார்க்கும் படலம் தொடங்கப் போகிறதா?

பெண்பார்த்தல் நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாளே ஒழிய, இதுவரை சுயமாய் அனுபவம் கிடையாது. சுந்தரி எப்போதும் தன் அனுபவங்களைப் பற்றிச் சொல்லி சிரிக்க வைத்துக் கொண்டிருப்பாள்.

சுமார் ஐம்பது பேர் பிள்ளை வீட்டார் வந்துப் பார்த்துக் கூட யாருக்குமே அவளைப் பிடிக்கவில்லையாம். கடைசியில் திருமணமாகாமலேயே நின்றுவிட்டாள்.

ஆனால் தானும் சுந்தரியும் ஒன்றா? தனக்குக் கொஞ்சமோ நஞ்சமோ படிப்பு இருக்கிறது. ஓரளவுக்காவது செலவு பண்ணக் கூடிய தந்தை இருக்கிறார். பாவனா உள்ளே போய் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். மாசில்லாத அழகு. தந்தை சொன்னது போல் அழகானப் பெண் வேண்டும் என்று விரும்புகிறவர்கள் யாராலுமே மறுக்க முடியாத சௌந்தர்யம்!

பாவனாவுக்கு அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. அவர்களுக்கு எதிரே எப்படி உட்காருவது? எப்படி பதில் சொல்லுவது? எப்படிச் சொன்னால் நன்றாக இருக்கும்? பையனை நேருக்கு நேர் பார்க்கலாமோ கூடாதோ. அதுசரி, எந்தப் புடவையைக் கட்டிக்கொள்வது? தன் நிறத்திற்கு சிவப்பு வண்ணப் புடவை நன்றாக இருக்கும். ஆனால் சிவப்பு வர்ணம் அவ்வளவு நல்லது இல்லையோ? டேஞ்சர் நிறம் என்று நினைத்து விடுவார்களோ. இளம் ரோஜா நிறம் நன்றாக இருக்கும். ஆனால் அது மேனியின் வண்ணத்தில் கலந்து போய்விடும். இனி அவளிடம் எஞ்சி இருப்பது சிவப்பு பார்டர் கொண்ட பச்சை நிறப் புடவை. ஆமாம், அதுதான் நன்றாக இருக்கும். அதை உடுத்திக் கொண்ட பொழுதெல்லாம் எல்லோருடைய பார்வையும் அவள் மீதே நிலைத்திருக்கும். இந்தச் சமயத்தில் சுந்தரி இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? எல்லாவற்றையுமே அவளே பார்த்துக் கொள்வாள். யோசனையிலேயே பாதி இரவு தாண்டிவிட்டது.

அதற்குப் பிறகு எப்போது தூங்கினாளோ அவளுக்கே தெரியாது.

“இந்தப் புடவை கட்டிக்கொள்” என்று பிச்சுமணியின் மனைவி அடர்த்தியான நீல நிறப் புடவையைக் கொடுத்தாள். அதைக் கட்டிகொண்டதுமே அவள் அழகு இருமடங்காகி விட்டாற்போல் இருந்தது. கூந்தலில் ஒரே ஒரு ரோஜாவை சூடிக் கொண்டாள்.

வெளியே பேச்சுக் குரல்கள் கேட்டன.

“அட! அவர்கள் வந்துவிட்டார்கள் போல் இருக்கு.” பரபரப்புடன் வெளியே போனார் தந்தை.

“அக்கா! மாப்பிள்ளை ரொம்ப ஜோராய் இருக்கிறார். சினிமா ஹீரோ போல் இருக்கிறார். அம்மா, அப்பா, அக்கா கூட வந்திருக்கிறார்கள். ரொம்ப பணக்காரர்கள் போலும். உடம்பு முழுவதும் நகைகள் போட்டுக் கொண்டு இருக்காங்க. அவர்கள் கட்டியிருக்கும் பட்டுப்புடவை ரொம்ப ஜோராய் இருக்கு அக்கா!”

பாவனாவின் மனதில் உத்வேகம் நிரம்பி இருந்தது. வியர்த்துக் கொட்டியது. பல யுகங்கள் கழிந்தாற்போல் இருந்தது. பிறகு பிச்சுமணியின் மனைவி வந்தாள்.

“வாம்மா” என்று உடன் அழைத்துச் சென்றாள். அவள் சொன்னது போல் பாயில் உட்கார்ந்து கொண்டாள்.

“உன் பெயர் என்னம்மா?” கேட்டது ஒரு பெண்ணின் குரல்.

“பாவனா” மெல்லிய குரலில் பதிலளித்தாள்.

“எது வரையில் படித்திருக்கிறாய்?” ஆண் குரல். மணமகனாய் இருக்க வேண்டும்.

“இன்டர் பாஸாகி இருக்கிறேன்.” அரைவினாடி நேரம் கடைக்கண் பார்வையில் பட்ட உருவம் அவள் உடலை

புல்லரிக்கச் செய்தது. சினிமா ஹீரோவைப் போல் சிரித்துக் கொண்டிருந்தான்.

“அப்புறம் ஏன் விட்டு விட்டீர்கள்? மேற்கொண்டு டிகிரி படித்திருக்கலாமே?” அந்தக் குரலில்தான் எவ்வளவு கனிவு! எவ்வளவு மரியாதை!

“வீட்டு நிலைமை அனுகூலமாக இல்லை.”

அதற்குப் பிறகு அவர்கள் என்ன கேட்டார்கள் என்றோ, தான் என்ன பதில் சொன்னோம் என்றோ அவளுக்கே தெரியாது.

“இனி நீ உள்ளே போம்மா.” ஹாலை விட்டு வந்துவிட்டாளே தவிர அவள் மனம் அங்கேயே இருந்தது. அவர்கள் என்ன பேசிக் கொண்டு இருக்கிறார்கள்?

“தாம்பூலம் மாற்றிக் கொள்வோம். ஏற்பாடு பண்ணுங்கள்” என்றார் மாமனார்.

“மற்ற விஷயங்கள் எல்லாம்..... என்னால் அதிகமாக கொடுக்க முடியாது. இவளுடைய உடல்நிலை காரணமாக கொஞ்சம்கூட சேர்த்து வைக்க முடியவில்லை.”

“அதையெல்லாம் யார் கேட்டார்கள்? பெண் தங்க விக்கிரகம் போல் இருக்கிறாள். எங்களுக்கு வேறு எதுவும் தேவை இல்லை. பெண் எங்கள் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தால் போதும்” என்றாள் மாமியார்.

“எல்லாம் எங்க மகளின் அதிர்ஷ்டம்.” அருந்ததியின் முகம் மலர்ந்துவிட்டது.

“உங்க அதிர்ஷ்டம் உங்களுடையது அல்ல. எங்களுடையது. எங்க அண்ணியை இன்னொரு தடவை பார்க்கிறேன்.” நாத்தனார் எழுந்து உள்ளே வந்தாள். பாவனா ஜன்னலை விட்டு நகர்ந்து கொண்டாள்.

“எங்களுக்கு உன்னை ரொம்பப் பிடித்துவிட்டது. உனக்கு அண்ணாவைப் பிடித்திருக்கா? இந்த விஷயத்தை அவனே கேட்டு வரச் சொன்னான்.”

பாவனா வெட்கத்தால் தலை குனிந்தாள்.

“உனக்கு எந்த மாதிரி நகைகள் பிடிக்கும்? எந்த நிறம் பிடிக்கும்? எல்லாவற்றையும் சொல்லிவிடு. நானே செலக்ட் செய்கிறேன். தங்கமாய் இருந்தாலும், பட்டுப் புடவையாய் இருந்தாலும் உன் நிறத்துடன் போட்டிப் போட முடியாது.”’

“அப்படிப் பேசாதீங்க. எனக்கு வெட்கமாய் இருக்கு.”

“அதெல்லாம் முடியாது. உன்னை எப்போதும் இப்படி டீஸ் செய்துகொண்டே இருப்பேன். நாத்தனார் என்றால் சும்மாவா?”

“எனக்கு எந்த நகையும், புடவையும் வேண்டாம். ஒரே ஒரு விருப்பம்தான்.” மறுபடியும் வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம் பாவனாவுக்கு.

“என்ன?” அந்தப் பெண் சீரியஸாய் கேட்டாள்.

“ஒன்றும் இல்லை. அப்பாவைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. அவ்வப்பொழுது என்னை பிறந்தவீட்டுக்கு அனுப்பி வைப்பீங்களா? ஒருநாள் இருந்துவிட்டு திரும்பி வந்துவிடுவேன்.”

“அதென்ன பிரமாதம்” என்றாள் அவள் சிரித்துக் கொண்டே.

“அக்கா! அக்கா!” உலுக்கியபோதுதான் விழிப்பு வந்தது அவளுக்கு.

“எவ்வளவு நேரமாய் எழுப்பினாலும் எழுந்து கொள்ளவில்லையே?” தங்கை சொல்லிக் கொண்டிருந்தாள். எழுந்து மளமளவென்று கொல்லைப்புறம் போனாள் பாவனா. பிள்ளைவீட்டார் காலை பத்து மணிக்கு வருவதாய் சொல்லியிருந்தார்கள். ‘விடியற்காலையில் வரும் கனவு பலிக்கும் என்று சொல்வார்கள்.’ நினைத்துக் கொண்டே தயாராகத் தொடங்கினாள் பாவனா.

****

அரசாங்க ஆஸ்பத்திரி..

எந்த ஆஸ்பத்திரியில் முப்பதாண்டு காலமாக நர்ஸ் ஆக வேலை பார்த்து வந்தாளோ, அந்த ஆஸ்பத்திரியில் நோயாளியாய்ப் படுத்திருந்தாள் ஆதிலட்சுமி.

தன்னுடைய இறுதி நேரம் நெருங்கி விட்டதென்று அவளுக்குத் தெரிந்து விட்டது.

“கண்ணா!” என்றாள். மகன் அருகில் வந்தான்.

“உன்னிடம் ஒரு விஷயம் சொல்லணும். இது என் மனதைப் பல ஆண்டுகளாய்த் துளைத்தெடுத்துக் கொண்டே இருக்கிறது. சாகப் போவதற்கு முன்னால் உன்னிடமாவது சொன்னால்தான் என் மனம் நிம்மதி அடையும்.”

“என்னம்மா?” என்றான்.

அவள் சொல்லத் தொடங்கினாள். பதினாறு ஆண்டுகளுக்கு முன்னால் தான் பண்ணிய காரியத்தையும், அதனால் இரு குழந்தைகளின் வாழ்க்கை எவ்வாறு மாறியது என்று விவரங்களைச் சொன்னாள். தொடையில் போட்ட அடையாளத்தையும் சொன்னாள்.

“தெய்வம் என்னைப் பழி வாங்கிவிட்டது. நானே போய் எல்லோரையும் சேர்த்து வைக்கணும் என்று இருந்தேன். ஆனால் என்னையே அழைத்துக் கொண்டு போகிறது அந்த தெய்வம். நீ போய் உண்மை விஷயத்தைச் சொன்னால் தவிர மேல் உலகத்தில் இருக்கும் என் ஆன்மா சாந்தியடையாது.”

“யாரும்மா அவர்கள்?”

“ஒருத்தியின் பெயர் நிர்மலா. அவள் அட்ரெஸ் அடையாரில் சரியாகத்தான் இருக்கு. அந்தப் பெண் சாஹிதியைக் கூட நான் பார்த்திருக்கிறேன். இன்னொருத்தியின் பெயர் அருந்ததி. அவள் அட்ரெஸ்தான் கிடைக்கவில்லை. வீடு மாறிவிட்டார்கள் போலிருக்கு. எப்பொழுதோ பதினாறு வருஷங்களுக்கு முன்னால் நடந்த விஷயம் இல்லையா. அவளுடைய மகளுக்கு பாவனா என்று பெயர் வைத்ததாக நினைவு. கொஞ்சம் விசாரித்து, அவரவர்களின் குழந்தைகளை அவரவர்களிடம் சேர்பித்துவிடு. நான் செய்த பாவ காரியத்திற்கு மனப்பூர்வமாக பச்சாதாபம் அடைகிறேன் என்றும், என்னை மன்னித்து விடச் சொல்லி கேட்டுக் கொண்டதாக சொல்.”

“சரிம்மா. இனி நீ பேசாதே. எதைப்பற்றியும் யோசித்துக் குழம்பாதே. ரெஸ்ட் எடுத்துக்கொள்.”

ஆதிலட்சுமி கண்களை மூடிக் கொண்டாள். அடுத்த ஒருமணி நேரத்தில் அவள் உயிர் பிரிந்துவிட்டது.

******

சொன்ன நேரத்திற்கு இரண்டு மணி நேரம் தாமதமாய் வந்தார்கள் பிள்ளை வீட்டார். அதற்குள் பாவனா மூன்றாவது முறையாக மேக்கப் பண்ணிக்கொண்டாள்.

வந்தவர்களை மரியாதையுடன் வரவேற்று ஹாலில் உட்கார வைத்தான் விஸ்வம். தங்கை கிருஷ்ணவேணி அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தாள். அருந்ததி அருகில் அமர்ந்து கொண்டு அவர்களிடம் குசலம் விசாரித்தாள்.

எவ்வளவு கட்டுப் படுத்திக் கொண்டாலும் பாவனாவுக்கு லேசாக வியர்த்தது. கைக்குட்டையால் ஒற்றிக்கொண்டாள்.

“அக்கா!” உள்ளே வந்தாள் கிருஷ்ணவேணி. ‘மாப்பிள்ளைப் பையன் கொஞ்சம் கூட நன்றாக இல்லை. வந்தவர்களில் யாருமே நன்றாக இல்லை” என்றாள் வருத்தப்பட்டுக் கொள்வது போல். கனவு உலகத்தில் முதல் மேகத்திரை விலகி, வாழ்க்கையில் முதல் உண்மையை வெளிச்சப் படுத்தியது.

“போகட்டும் விடு. அழகாய் இல்லாவிட்டாலும் நல்ல குணம் இருந்தால் போதும்” என்றாள்.

அவள் கண்முன்னால் ஒரு காட்சி நிழலாடியது.

“நான் அழகாய் இல்லை. ஆனால் உனக்காகக் உயிரையும் தருவேன். உன்னை என் கண்ணின் இமையைப் போல் அருமையாய், பொக்கிஷமாய் பாதுகாப்பேன்“ என்று கண்ணீர் மல்கிய விழிகளுடன் வேண்டிக் கொண்டிருந்தான் ஒரு இளைஞன்.

வெளியே ஹாலில் காட்சி வேறு விதமாய் இருந்தது.

திருமணம் முடிவாகும் முன் சம்பந்தி வீட்டில் கையை நனைக்கக் கூடாது என்ற பழமொழியைக் கேள்விப்பட்டது இல்லையோ, அல்லது இந்த இடம் திகையுமோ திகையாதோ, கிடைத்த வாய்ப்பை நழுவ விடுவதில் விருப்பம் இல்லையோ,. வைத்திருந்த பலகாரங்களை எல்லாம் ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். காபியும் குடித்து முடித்த பிறகு "இனி பெண்ணை வரச் சொல்லுங்க" என்றார் பிள்ளையின் தந்தை மிடுக்காய்.

"பயப்படாமல் பதில் சொல்லணும் பாவனா. தலை குனிந்தபடியே உட்கார்ந்து கொண்டு இருக்கணும்" போன்ற தேர்வுப் பாடங்களை எல்லாம் கடைசி முறையாய் புகட்டிவிட்டு வெளியே அழைத்துக் கொண்டு வந்தாள் பிச்சுமணியின் மனைவி.

நான்கடி எடுத்து வைப்பதற்குள் பாவனாவின் இதயம் படபடத்தது. அந்த நாளில் அக்கினிப் பிரவேசம் பண்ணும் போது சீதையின் மனம் எப்படி இருந்ததோ தெரியாது. ஆனால் அவள் மட்டும் அந்த நாலடிகளையும் நெருப்பின் மீது நடந்து வந்தாற்போலவே உணர்ந்தாள்.

ஆறு ஜோடிக் கண்கள் அவளை உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும் பரிசோதித்தன. பெண்ணாய்ப் பிறந்தது தான் பண்ணிய பெரிய குற்றம் என்பது போல், பண்ணிய குற்றத்திற்கு தண்டனைக் கொடுக்கச் சொல்லி வேண்டுவது போலவும் தலைகுனிந்தபடி உட்கார்ந்து இருந்தாள் பாவனா.

"உன் பெயர்?" அது ஒரு பெண்ணின் குரல்தானா என்று வியப்படையும் விதமாய் கர்ணகடூரமாய் இருந்தது.

"பாவனா!"

"என்ன படித்து இருக்கிறாய்?"

“இண்டர் பாசாகி இருக்கிறேன்.”

“எங்கே? ஆம்பிளைப் பசங்க படிக்கும் காலேஜிலேயா?” இது ஆண் குரல். பையனின் தந்தை போலும்.

“இல்லைங்க. பெண்கள் கல்லூரியில்தான்.”

“பிழைத்தோமடா சாமி.” அது ஒரு பெரிய ஜோக்கைப் போல் எல்லோரும் பெரிதாக சிரித்தார்கள்.

“சரி, சமைக்க கிமைக்கத் தெரியுமா? கொஞ்சம் நிமிர்ந்து பதில் சொல்லும்மா.” பையனின் பெரிய அக்காவின் உத்தரவு!

பாவனா மெதுவாய் நிமிர்ந்தாள். “வரும். எல்லாம் செய்வேன்.”

“ஆமாம் பின்னே.” பிச்சுமணி சொன்னார். “அம்மா நோயாளி இல்லையா. செய்யாமல் எப்படி முடியும்?”

பாவனாவின் மனதில் சுருக்கென்றது. பன்னிரண்டு ஆண்டுகளாய் தாய் படுத்தப் படுக்கையாய் இருப்பது உண்மைதான். ஆனாலும் அவள் அவஸ்தை படுவதைக் காண சகிக்காமல் வருந்துவாளே தவிர அவள் ஒரு நோயாளி என்று யாருக்குமே தோன்றியது இல்லை. பாவனா ஓரக்கண்ணால் அவர்கள் பக்கம் பார்த்தாள். அரை டஜனுக்கும் குறையாமல் இருந்தார்கள். குரலில் மட்டுமே இல்லை, உருவத்திலும் கூட கொஞ்சம் கூட நாகரீகமோ, பண்போ தெரியவில்லை.

“எழுந்து நில்லும்மா ஒரு தடவை” என்ற குரலுக்கு பாவனா தந்தையை நோக்கித் திரும்பினாள். எழுந்திரு என்பது போல் கண்ணாலேயே ஜாடைக் காட்டினான் விஸ்வம்.

அவள் மெதுவாய் எழுந்து நின்றாள்.

“கொஞ்சம் தூரம் நடந்துக் காட்டு.”

பாவனாவின் தலையில் சம்மட்டியால் அடித்தாற்போல் இருந்தது. அந்த அதிர்ச்சியிலேயே நான்கு அடிகள் எடுத்து வைத்தாள்.

“அந்த தலைமுடி சொந்தம்தானா? சவுரியா?”

“சொந்தம்தான். பாவனாவுக்கு தலைமுடி நல்ல அடர்த்தி, நீளமும் ஜாஸ்தி.” பக்கத்தில் இருந்த அருந்ததி சொன்னாள்.

“எங்களோடதும் ஒருகாலத்தில் அடர்த்தியாகத்தான் இருந்தது. கல்யாணமாகி குழந்தை குட்டி பிறந்த பிறகு அப்படியேவா இருக்கும்?

ஆமாம். அழகு, தோற்றம், ஆரோக்கியம், வயது, பணம் .. எதுவுமே சாசுவதம் இல்லை. ஆனால் கல்யாணம் ஆக வேண்டிய பெண்ணுக்கு மட்டும் இவற்றில் எது இல்லாமல் போனாலும் கஷ்டம்தான்.

இந்த பெண்பார்க்கும் படலம் பெரும்பாலான பெண்களுக்கு சங்கடமாய் தோன்றாது. அது அப்படித்தான் என்ற எண்ணம் மனதில் ஸ்திரப்பட்டு போயிருக்கும்.

பையனின் அக்காக்கள் தம்மை பெண்பார்த்த அனுபவங்களை நினைவு கூர்ந்து கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பாவனா பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

‘மாப்பிள்ளைப் பையன் எதுவுமே கேட்கவில்லை. கேட்கச் சொல்லுங்கள்” என்றார் பிச்சுமணி கல்யாணத் தரகர் என்ற ஹோதாவில்.

“நான் கேட்பதற்கு பாகி என்ன இருக்கிறது? எல்லாம் அவர்களே பங்கு போட்டுக்கொண்டு கேட்டு விட்டார்களே?” என்றான் அவன் சிரித்துக் கொண்டே.

“இனி நீ உள்ளே போம்மா.”

அனுமதி கிடைத்ததுமே பாவனா அறைக்குள் சென்றுவிட்டாள். “நான்கு நாட்களில் செய்தி சொல்லி அனுப்புகிறோம்” என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள் அவர்கள்.

பிச்சுமணி வாசல்வரை சென்று டாக்சி சார்ஜ் கொடுத்து அனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

“விஸ்வம்! அவர்களுக்குப் பெண்ணை ரொம்பப் பிடித்துவிட்டது என்று நினைக்கிறேன். சம்மதித்து விட்டாற்போல் தான் பேசினார்கள்” என்றார்.

“ஆனால் பையன் பார்ப்பதற்கு கொஞ்சம் கூட நன்றாக இல்லையே?” என்றாள் அருந்ததி கவலையுடன்.

‘அப்படி நினைத்தால் எப்படி? பையன் கருப்பாய் இருந்தாலும் நல்ல குணம் கொண்டவன். கேட்ட பழக்கம் எதுவும் இல்லை. பெண் அழகாய் இருக்கணும் என்று நினைத்தானாம். அதனால் வரதட்சிணை அதிகமாய் கேட்காமல் சம்மதிக்க வைப்பான் என்று நினைக்கிறேன். ஒரு வருஷமாய் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். பள்ளிக்கூட வாத்தியார் என்ன பெரிசா கொடுத்து விடுவான் என்று எண்ணிக்கொண்டு ஒருத்தன் கூட பெண் பார்க்க வரவில்லை. அப்படி இருக்கும் போது ஆபீசர் ஆகப்போகும் இந்த பையன் மேல் இல்லையா?” என்றார் சுந்தரம்.

”அந்த நாத்தனார்கள் என்னங்க கொஞ்சம் கூட நாகரீகமே இல்லாமல்..” என்றால் பிச்சுமணியின் மனைவி.

‘பையன் வேலை நிமித்தமாய் வேறு ஊரில் இருப்பான். இவர்கள் எப்போதாவது நாலுநாள் தங்கிவிட்டுப் போவார்களே தவிர சாசுவதமாய் இருந்து விடமாட்டார்கள். எல்லோருமே வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். அந்த விஷயத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை” என்றார் பிச்சுமணி. அதற்குள் அந்த வரன் குதிர்ந்து விட்டாற்போலவே பேசிக் கொண்டார்கள் அவர்கள்.

6

பாவனாவுக்கு சுந்தரி எழுதுவது,

பாவனா! எப்போதும் க்ஷேம சமாசாரங்களை விசாரித்துவிட்டு கடிதத்தைத் தொடங்கி, நலமாய் இருக்கிறேன் என்று நாலு வரிகளுடன் முடித்து விடுவதாக கோபித்துக் கொண்டு கடிதம் எழுதியிருந்தாய். என்னைப் போன்றவர்களுக்காக அரசாங்கம் கார்ட் விலையை ஏற்றவில்லை. ஆனாலும் அந்த சொற்ப தொகைக்காக, பத்து தடவைக் கேட்டு வாங்க வேண்டிய நிலையில் உள்ள நான் அடிக்கடி கடிதம் எப்படி எழுதுவேன்?

சம்பளம் தேவை இல்லாமல் வேளா வேளைக்கு எல்லாவற்றையும் செய்து தரும் மனைவி, தலையில் பணமூட்டையை வைத்துக் கொண்டு வருவாள் என்று சில ஆண்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்று நீ படித்து இருப்பாய்.

அந்தந்த நேரத்திற்கு எல்லாம் செய்து தருவதற்கு வேலைக்காரியாய் உழைக்க தோதாய் இருப்பாள் என்று சில

ஆண்கள் தங்கைகளுக்குக் கல்யாணம் செய்து வைக்க மாட்டார்கள். இதை நீ எங்கேயுமே படித்திருக்க மாட்டாய். என் அண்ணன் இந்த இரண்டையுமே செய்து விட்டான். மனைவியை சந்தோஷப் படுத்துவதற்காக ஞாயிற்றுக்கிழமை அன்று அவள் சமையல் அறைக்கு வந்துவிட்டால் போதும் 'லீவு நாளாவது கஷ்டப்படாமல் இருக்கக் கூடாதா. இப்படி வந்து உட்கார்' என்று இரக்கம் காட்டுவான். குழந்தைகளை என்னிடம் விட்டுவிட்டு மனைவியுடன் சினிமா, டிராமா என்று ஊர் சுற்றுவான். நாளுக்கு பதினெட்டு மணி நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் உழைக்கும் எனக்கு ஒய்வு தேவையில்லை. அவள் ஒருநாளைக்கு ஏழு மணிநேரம், வாரத்தில் ஆறு நாட்களும் கஷ்டப்பட்டால் கை நிறைய சம்பளம் வரும். ஆனால் எனக்கு தபால் கார்ட் வாங்கித் தருவதற்காக பத்துதடவை யோசிப்பார்கள்.

வீட்டில் உனக்கு வரன் பார்க்கிறார்கள் என்று தெரிய வந்தது. உன் தந்தையின் மீது உனக்கு எவ்வளவு அன்பு என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் தாய் தந்தை சாசுவதம் இல்லை. தங்கப்பதுமையாய் இருக்கும் உன்னை யாராக இருந்தாலும் கண்ணை மூடிக்கொண்டு பண்ணிக் கொண்டு விடுவார்கள். போய் சுகமாய் இரு. அவனையும் சந்தோஷமாக வைத்துக்கொள். என் அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன். பெண்ணுக்குக் கணவனின் வீட்டைப் போன்ற பாதுகாப்பான இடம் வேறு இல்லை.

அவன் அழகானவனாய், பணம் காசு படைத்தவனாய் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. மனைவியாய் உரிமையை சம்பாதித்துக் கொண்டு விட்டாயானால் போதும். வாழ்க்கை செட்டில் ஆகிவிட்டாற்போல் தான். நீ படித்து வேலைக்கு செல்பவளாக இருந்திருந்தால் இன்னும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் இப்போது இந்த விதமாய்

சந்தோஷப்பட்டுக் கொள்வேன். விரைவில் கல்யாணப் பத்திரிகையை அனுப்பி வைப்பாய் என்று எதிர்பார்க்கிறேன்.

சுந்தரி

கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு கவலையுடன் உட்கார்ந்திருந்தாள் பாவனா. வாழ்க்கையில் செட்டில் ஆன பிறகு கணவனிடம் சொல்லி சித்திக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். சுந்தரியின் நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே போகிறது.

அவள் அந்த யோசனையில் ஆழ்ந்திருந்த போது விஸ்வம் பரபரப்போடு உள்ளே வந்தான். எப்போதும் போல் 'குடிக்கத் தண்ணியைக் கொடு' என்று கேட்கவில்லை. முகத்தில் முறுவல் கூட இல்லை. நேராக அருந்ததியிடம் போனான். பாவனா சந்தேகமடைந்தவளாய் போய் கதவு அருகில் நின்று கொண்டாள்.

'வரதட்சிணை இருபதாயிரம், நாத்தனார் நான்கு பேருக்கும் பத்தாயிரம் சீர் வரிசை, பையன் வெளி ஊரில் வேலையாய் இருப்பதால் வீட்டிற்குத் தேவையான பர்னிச்சர், பாத்திர பண்டம் எல்லாம் வாங்கிக் கொடுத்தால் போதுமாம். எல்லாம் சேர்த்து எழுபதாயிரம் ஆகும் என்று பிச்சுமணி கணக்குப் போட்டான். என்ன செய்வது?"

"அவ்வளவு பணமா? எங்கிருந்து கொண்டு வருவீங்க? இப்போதே என் மருத்துவச் செலவுக்காக நிலத்தை அடமானம் வைத்திருக்கீங்க."

"ஆமாம். இருக்கும் நான்கு ஏக்கரில் இரண்டை விற்றாலும் கடன் போக இருபதாயிரம் மிஞ்சுமோ என்னவோ. ஆபிசில் கடனுக்கு

மனு போட்டு இன்னொரு இருபதாயிரம் வாங்க முடியும். அதுக்கு மேல் என்னால் முடியாது என்று சொல்லச் சொன்னேன்."

"பெண்ணை பையனுக்கு ரொம்பவும் பிடித்திருக்கு. கொஞ்சம் குறைத்துக் கொள்வார்களோ என்று கேட்டுத் தெரிந்து கொள்ளுங்களேன்."

"லாபம் இல்லை. அறுபது, எழுபது ரோக்கமாகவே தருகிறோம் என்று க்யூவில் நிற்கிறார்கள் அங்கே. அவர்களுக்கு நம் பெண்ணின் அழகு ஒரு பொருட்டு இல்லை."

"சரி, விட்டுத் தள்ளுங்க. பையன் எப்படியும் பார்க்க நன்றாகவே இல்லை. வேறு வரன் பார்ப்போம். எதற்கும் வேளை வரணும்" என்றாள் அருந்ததி.

"அதுவும் உண்மைதான்."

சம்பந்தம் தவறிப் போனதில் பாவனாவுக்கு வருத்தமும் இல்லை. சந்தோஷமும் இல்லை. திரும்பவும் காத்திருத்தல்.

*****

ஐந்தாவது முறை பெண்பார்க்கும் நிகழ்ச்சி. ஒரு வருட காலத்தில் நான்கு பெண் பார்க்கும் நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த அனுபவத்தால், இந்த முறை எந்தப் பயமும், சங்கோஜமும் இல்லாமல் போய் விட்டது. அவர்கள் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் தலை குனியாமல் பதில் சொன்னாள். அன்றைக்கு வந்தவர்கள் ரொம்ப பணக்காரர்கள். சொத்து எவ்வளவு அதிகமாய் இருந்தால் வரதட்சிணை அவ்வளவு அதிகமாய் கொடுக்க வேண்டியிருக்கும் என்று விஸ்வம் அவர்களை வரவேற்பதற்குக் கூட தயங்கினான். ஆனால்

அவர்களுக்கு வரதட்சணை தேவையில்லை. பெண்ணின் ஜாதகம் போருந்தி விட்டது என்று தெரிந்ததுமே அவனுள் உற்சாகம் ஏற்பட்டுவிட்டது. தாமதம் ஆனாலும் நல்ல வரன் கிடைத்ததற்கு மகிழ்ந்து போனான். பாவனாவைப் பார்த்துவிட்டால் அவர்களால் மறுத்து விட முடியாது என்ற நம்பிக்கை அவனுக்கு. வந்தவர்களும் திருப்தி அடைந்து விட்டாற் போல்தான் தென்பட்டார்கள். அருந்ததி கூட உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு அவர்களுக்கு அருகில் உட்கார்ந்து இருந்தாள்.

பெண் பார்த்தல் முடிந்துவிட்டது. பாவனா உள்ளே போய்விட்டாள்.

“நீங்க தவறாக நினைக்கவில்லை என்றால் பெண்ணுடன் ஒரு வார்த்தை தனிமையில் பேசணும்” என்றாள் மாப்பிள்ளையின் பெரிய அக்கா.

“பரவாயில்லை. உள்ளே போங்க” என்றாள் அருந்ததி.

அறைக்குள் நுழைந்த இரு பெண்களையும் பார்த்துவிட்டு எழுந்து நின்றாள் பாவனா.

“என்னம்மா, என் தம்பியை உனக்குப் பிடித்திருக்கா?” சிரித்துக் கொண்டே அருகில் வந்தாள் அவள்.

பாவனா மேலும் வெட்கமடைந்தாள். ‘தூது அனுப்பியிருப்பானோ? என்னுடன் தனியாய் பேச விரும்புகிறானோ?’ என்று எண்ணிக் கொண்டாள் தனக்குள். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அவள் கனவு பலிக்கப் போகிறது என்று தோன்றியது.

ஒருத்தி எழுந்து போய்க் கதவைச் சாத்தி விட்டு வந்தாள். பாவனாவுக்கு ஏனோ பயமாக இருந்தது. 'இதேன்னது? பேச வேண்டும் என்றால் கதவைச் சாத்துவானேன்?'

"ஒன்றும் இல்லையம்மா. இதற்கு முன்னால் ஒரு பெண்ணைப் பார்த்தோம். சிவப்பாய், அழகாய் இருந்தாள். ஆனால் அப்புறம்தான் தெரிந்தது, அந்தப் பெண்ணுக்கு ஏதோ தோல் நோய் இருந்த விஷயம். அதனால்தான் ஒருமுறை உடைகளை நீக்கிக் காட்டும்மா, பார்த்து விடுகிறோம்." அவள் மிகச் சாதாரணமாய் மெதுவாய் எடுத்துச் சொன்னாள். ஆனாலும் அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் துப்பாக்கிக் குண்டாய் வெடித்தது. பாவனாவின் மேனி சிலிர்த்தது. ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"வெட்கப்படத் தேவையில்லை. நாங்களும் பெண்கள்தானே."

"எனக்கு எந்த நோயும் இல்லைங்க" என்றாள் மிரண்டு போனவளாய். வெளியில் சென்று தந்தையிடம் சொல்லக்கூட முடியாத நிலை.

"பயப்படவேண்டியது எதுவும் இல்லை. எல்லாம் முடிவாகி விட்டாற் போலத்தான். எங்கள் திருப்திக்காக. எங்க அப்பாவின் சந்தேகத்தை தீர்த்து வைப்பதற்காக."

பாவனாவுக்கு என்ன பண்ணுவதென்றே புரியவில்லை. அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தான் உள்ளே வந்திருக்கிறார்கள். தாய், தங்கையின் முன்னிலையில் கூட புடவையை மாற்றிகொள்ளும் பழக்கம் அவளுக்கு இல்லை. இப்பொழுது முன்பின் அறியாத பெண்களுக்கு முன்னால், அவர்கள் தன் உடலை சோதிக்கும் போது தான் பொம்மையைப் போல் நிற்க

வேண்டுமா? சீ.. இதேன்னது? எல்லாம் முடிந்த பிறகு இதை மறுத்துவிட்டால் வேண்டாம் என்று சொல்லி விடுவார்களோ? அப்பொழுது தான் பச்சாதாபம் அடைய வேண்டியிருக்குமோ. என்ன வேண்டுமானாலும் ஆகட்டும் என்று எண்ணிய பாவனா ஒவ்வொரு உடையாய் அவிழ்க்கத் தொடங்கினாள். அவள் வேறு விதமாக நினைக்கக் கூடாது என்று சிரித்தபடி பேசிக்கொண்டே இருந்தார்கள்.

ஐந்து நிமிடங்களின் வேலை முடிந்து விட்டது. அவர்கள் திருப்தியுடன் தலையை அசைத்தார்கள். பாவனா உடைகளை அணிந்து கொண்டாள். அவளுக்கு ஏனோ அந்தச் சமயத்தில் தனக்கும் ஒரு வேசிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று தோன்றியது.

“எல்லா விதத்திலும் பிடித்து விட்டது. சமையல், வீட்டு வேலைகள் எல்லாம் செய்வாயாமே. தையல், பூவேலைபாடு எதுவும் கற்றுக் கொள்ளவில்லையா?”

“அம்மாவுக்கு உடல்நிலை சரியாய் இல்லை. அதனால் வேறு எதுவும் கற்றுக்கொள்ள நேரம் கிடைக்கவில்லை. எல்லா வேலைகளையும் நான்தான் செய்யணும்.”

“ஆமாம், உங்க அம்மாவுக்கு என்ன உடம்பு?”

பாவனா தயங்கினாள். அருந்ததிக்கு கேன்சர் என்று தெரிந்து நிறைய சம்பந்தங்கள் பின்வாங்கி விட்டன. அதனால் யாரிடமும் அவர்கள் அதைப்பற்றி கேட்டால் தவிர சொல்லுவதில்லை.

ஆனால் வாழ்நாள் முழுவதும் அவர்களுடன் சேர்ந்து இருக்க வேண்டியவளாயிற்றே! அவளால் எப்படி போய் சொல்ல முடியும்?

“கேன்சர்! திடீரென்று வலியால் துடித்துப் போய் விடுவாள். சமையல் செய்ய முடியாது.”

‘அப்படியா? இந்த விஷயத்தை தரகர் சொல்லவே இல்லையே?” இருவரும் வெளியே போய் விட்டார்கள். பாவனா பயந்தபடி ஜன்னல் அருகில் போய் நின்றுகொண்டாள்.

அவர்கள் தந்தையை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

‘அதெல்லாம் ஒன்றும் இல்லைங்க. கடைசி பையன் பிறந்த போது சின்ன ஆபரேஷன் நடந்தது. அதைச் சரியாக செய்யாததால் உள்ளே இன்ஃபெக்ஷன் ஆகிவிட்டதாம். அது கேன்சரில் கொண்டு போய் விட்டுவிட்டது. இந்த விஷயம் எங்களுக்குத் தெரிய வருவதற்குள் தாமதமாகி விட்டது. ஆபரேஷன் செய்து கருப்பையை எடுத்து விட்டார்கள்.”

மனைவியின் உடம்பைப் பற்றி யாரிடமும் இதுபோல் விளக்கம் சொன்னதில்லை விஸ்வம். கேட்டுக் கொண்டிருந்த பாவனாவுக்கு துக்கம் பொங்கி கொண்டு வந்தது.

“செய்தி சொல்லி அனுப்புகிறோம்.” அவர்கள் போய் விட்டார்கள். அவர்களின் பதில் புரிந்துவிட்டது.

அருந்ததி சலனம் இல்லாமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள். பாவனா ஓட்டமாய் ஓடிவந்து அவள் மடியில் தன்னைப் புதைத்துக் கொண்டாள். கரடு கட்டிய துக்கம் உருகிக் கண்ணீராய் வெளியேறிக் கொண்டிருந்தது.

“என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலியின் வயிற்றில் பிறந்ததற்கு உனக்கு இது தான் தண்டனை. குழந்தைகளின் படிப்புக்கும், கல்யாணத்திற்கும் கூட என் உடல்நிலை தடையாய் இருக்கும் என்று தெரிந்திருந்தால் அப்போதே தற்கொலை

பண்ணிக்கொண்டு இருப்பேன்." அவள் கண்களிலிருந்து பொலபொல வென்று கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது.

"அதில்லை அம்மா.. அவங்க... அவங்க.." பாவனா தேம்பிக்கொண்டே நடந்ததை எல்லாம் சொன்னாள். வந்தவர்களை வழியனுப்பி விட்டு உள்ளே வந்து கொண்டிருந்த விஸ்வத்தின் செவிகளில் இவ்வார்த்தைகள் விழுந்தன.

பாவானாவும், அருந்ததியும் குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தார்கள்.

அவனோ சிலையாய் நின்றுவிட்டான்.

7

"சார், உங்களுக்குக் கடிதம்" என்று ப்யூன் மேஜை மீது போட்டுவிட்டுப் போய்விட்டான். பைலுக்கு நடுவில் நாளேடை வைத்துக்கொண்டு சீரியஸாய் படித்துக் கொண்டிருந்த பாஸ்கரனுக்கு அந்த உரையைப் பார்த்ததுமே கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது என்று புரிந்துவிட்டது. பரபரப்புடன் பிரித்தான்.

ஒரு மாதத்திற்கு முன்னால் ஏதோ பத்திரிகையில் வந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, தனக்கு பிடித்தமான பூவின் பெயரையும், ஐந்து ரூபாயையும் அனுப்பி இருந்தான். அந்த ஜோதிடர் எழுதி அனுப்பியிருந்த அவனுடைய எதிர்காலப் பலன் அது.

'நீங்கள் ரொம்ப புத்திசாலி. ஆனால் வெளியில் மிகச் சாதாரணமாய்த் தென்படுவீர்கள். உங்கள் ஞானத்தையும், திறமையையும் பத்துபேர் அடையாளம் கண்டுகொள்ளும் சமயம் வந்துவிட்டது. மனைவியின் மூலமாய் லாபம் வரக்கூடிய வாய்ப்பு

இருக்கிறது. மேலும் பத்து வருடங்களுக்கு கிரகபலம் நன்றாக உள்ளது. லட்சாதிபதி ஆவீர்கள்.'

படித்ததுமே அவன் முகம் பிரகாசமடைந்தது. இதற்கு முன்னால் தெருவில் கிளி ஜோசியம் பார்த்துக் கொண்ட போதுகூட இதுபோன்ற பலன்தான் வந்தது. திடீரென்று அதிர்ஷ்டம் அவனை வழியில் குறுக்கிட்டு விட்டது. ஒரு நண்பனுக்குக் கடன் தந்துவிட்டு, இனி அது திரும்பி வரப்போவதில்லை என்று நினைத்துக் கொண்டிருந்த போது அது நல்ல படியாய் திரும்பி வந்தது. ஆபிசில் ரொம்ப நாளாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அரியர்ஸ் பணம்கூட கைக்கு வந்தது. தாயின் மரணம் ஒன்றைத் தவிர எல்லாமே நல்ல பலன்தான்.

இந்த முறை பேப்பரில் வந்த செய்தி அவனை ஈர்த்துவிட்டது.

"சென்னை நகர வாசிகளுக்கு மகத்தான வாய்ப்பு

உலகப்புகழ் பெற்ற ஜோதிட மேதை டாக்டர் அவதார் பாபா நகரத்திற்கு வந்திருக்கிறார். அவர் காவேரி ஹோட்டலில் நான்கு நாட்கள் தங்கியிருப்பார். தம் எதிர்காலத்தை உள்ளத்து உள்ளபடி விலாவாரியாய் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள், காலை ஒன்பது மணியிலிருந்து இரவு ஏழு மணி வரையிலும் எந்தச் சமயத்திலும் வரலாம்."

பக்கத்தில் அவதார்பாபா பிரதமருடனும், புகழ் பெற்ற திரைப்பட நடிகருடனும் இருந்த போட்டோக்கள் கிழே வெளிவந்தன.

அந்த பாபாவைப் பற்றி பத்திரிகைகளில் ஏற்கனவே படித்திருக்கிறான். தேர்தலுக்கு முன்னால் அவருடைய அறிக்கைகள் நிறைய வந்து கொண்டிருக்கும்.

தன்னுடைய அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறதென்று தெரிந்து கொள்வதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று தீர்மானித்தான்

பாஸ்கர். அடுத்தநாள் காலை எட்டுமணிக்கெல்லாம் ஹோட்டல் காவேரியில் இருந்தான். பாபாவின் அறைக்கு முன்னால் அதற்குள் ஒரு சிறிய கும்பல் கூடியிருந்தது.

பாஸ்கர் நூறுரூபாய் பீசு கட்டிவிட்டு டோக்கன் வாங்கிக்கொண்டான். நம்பர் ஒன்பது. லக்கி நம்பர்! எல்லாம் நல்லபடியாய் சேர்ந்து வருகிறது என்று எண்ணியபடி உள்ளூர சிரித்துக்கொண்டான். அறைக்குள் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. எல்லோரையும் உள்ளே அழைத்து ஆரத்தி எடுத்தார் பாபா. வரிசையாக எல்லோரையும் பார்க்கத் தொடங்கினார்.

பாஸ்கரின் முறை வரும்போது மணி பத்தடித்து விட்டது. அவதார் பாபா பாஸ்கரின் கைப் பிடித்து பத்து நிமிஷங்கள் வரையில் பரிசோதித்தார். பிறகு அவன் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு ரொம்ப நேரம் கணக்கிட்டார். பரீட்சை ரிசல்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மாணவனைப் போல் உட்கார்ந்து இருந்தான் பாஸ்கர்.

பாபா அவன் முகத்தை உற்றுப் பார்த்தார். பாஸ்கருக்குப் பயம் ஏற்பட்டது.

“பயப்படாதே அப்பனே.” முறுவல் பூத்தார் பாபா. “உன் அதிர்ஷ்டத்தைப் பார்த்து எனக்கு தலை சுற்றுகிறது. ஒரு பெண் மூலமாய் உனக்கு தனயோகம் ஏற்படவிருக்கிறது. கொஞ்சம் நஞ்சம் இல்லை. லட்சம் லட்சமாய்! இவ்வளவு அதிர்ஷ்ட ஜாதகத்தை நான் இதுவரையில் பார்த்ததே இல்லை.”

பாஸ்கரின் இதயம் சந்தோஷத்தால் குதித்துக் கும்மாளமிட்டது. பாபாவுக்கு சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணிவிட்டுத் திரும்பப் போன அவனை மறுபடியும் கூப்பிட்டார் அவர்.

‘என்ன சுவாமி?”

“ஒன்றும் இல்லை. அதிர்ஷ்ட ஜாதகத்தின் மேல்தான் எல்லோருடைய கண்ணும் படும். திருஷ்டி தோஷம் ஏற்படாமல் இருக்க சுவாமிக்குப் பூஜை செய்வது நல்லது. என் செகரெட்ரியிடம் பூஜைப் பெட்டி இருக்கும். வாங்கிக் கொண்டு போய் அதில் விவரித்துள்ளபடி சிரத்தையாய் பூஜை பண்ணு. பாக்கியரேகை நிலைத்து இருக்கும்.”

“அப்படியே செய்கிறேன் சுவாமி” ஐநூறு ரூபாய் விலைமதிப்புள்ள அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டு சந்தோஷமாய் வெளியே வந்தான்.

பகல் பன்னிரண்டு மணியாகிவிட்டது. அப்பொழுது போனாலும் ஆபீசர் ஒன்றும் சொல்ல மாட்டார். ஆனால் பாஸ்கருக்கு ஆபீசுக்குப் போகும் மூட் இருக்கவில்லை. தான் கண்ட கனவெல்லாம் பலித்துவிடும் என்று உறுதியாய் தோன்றியது. அந்தப் பாழாய் போன வேலையை இனி அதிகநாள் தொடர வேண்டிய தேவை இல்லை. அவனுக்கு நகரத்து தெருக்களில் நாட்டியமாடியபடி ஓட்டமெடுக்க வேண்டும் போல் இருந்தது. இந்தச் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு தற்சமயம் தங்கைகூட ஊரில் இல்லை. அந்த விஷயம்தான் அவனுக்கு வருத்தமாய் இருந்தது.

கொஞ்ச தூரம் நடந்து போனதும் நிமிர்ந்து பார்த்தான் அவன். ஏதோ ஆஸ்பத்திரி! அதைப் பார்த்ததும் தாயும், அவளுடைய கடைசி விருப்பமும் நினைவுக்கு வந்தது. அந்த இரண்டாவது பெண்மணியின் பெயர் அருந்ததி. அவளுடைய முகவரி கிடைக்குமா என்று தேட வேண்டும். இன்னொரு முறை முயன்று பார்த்துவிட்டால் இந்த லீவு நாட்களை ஒரு பயனுள்ள காரியத்திற்காக செலவழிதாற்போல் இருக்கும்.

தாயின் நெருங்கிய சிநேகிதியான மற்றொரு நர்ஸ் சாமுண்டியை தேடிப் பிடிக்க அவனுக்கு ஒருமணி நேரம் பிடித்தது. அவள்

உதவியுடன் ரிக்கார்டு ரூமுக்குப் போனான். அங்கிருந்த குமாஸ்தா அவளுக்குத் தெரிந்தவனாக இருந்ததால் வேலை சுலபமாகிவிட்டது.

பிறப்புச் சான்றிதழ் வாங்குவதற்காக தேவைப்படுவதாக போய் சொல்லி, அவனைக் கொண்டே சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த பழைய ரிக்கார்டு புத்தகங்களைப் புரட்டிப் பார்க்கச் செய்தான். தாய் சொன்னது போலவே அந்த தேதியின் இருவரின் பெயர்களும் இருந்தன. இரண்டு முகவரிகளும் சென்னையில்தால் இருந்தன. ஆனால் திருவல்லிக்கேணியில் அவர்கள் வீட்டைக் காலிப் பண்ணிவிட்டுப் போய் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. வேறு ஏதாவது க்ளூ கிடைக்கிறதா பார்ப்போம் என்று எல்லாவற்றையும் தேடித் பார்த்தான். லாபம் இல்லாமல் போய்விட்டது.

சோர்வடைந்து எல்லாவற்றையும் திருப்பி அடுக்கி வைத்துக் கொண்டிருந்த போது, அவன் கண்ணில் அந்தப் புத்தகம் தென்பட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து முனிசிபாலிடிக்காக ஜனன மரண விவரங்களை குறித்து வைக்கும் புத்தகம். அதன் முழுவதும் கார்ப்பன் காபிக்கள். அவசர அவசரமாய் புரட்டினான் அவன்.

அருந்ததி வைஃப் ஆப் விஸ்வம். ஆனால் திருவல்லிக்கேணி விலாசம்தான் இருந்தது. ச்சே.. என்று அந்தப் புத்தகத்தை மூடப் போனவான் அப்படியே நின்றுவிட்டான். காகிதத்தின் மறுபக்கத்தில் நிரந்தர விலாசம் என்ற இடத்தில் விஸ்வத்தின் சொந்த ஊர் விலாசம் இருந்தது.

******

பஸ் வேகமாய் போய்க் கொண்டிருந்தது. பாஸ்கரின் எண்ணங்கள் கூட அதே வேகத்தில் பறந்துக் கொண்டிருந்தன.

இந்த அலைச்சலுக்கெல்லாம் நூறு ரூபாய்க்கு மேலேயே செலவாகி இருக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றி விடவேண்டும் என்று அவன் ஒன்றும் தவித்துப் போய் விடவில்லை. இருபது வருடங்களுக்கு முன்னால் அவன் தாய் மனதளவில் எப்படி இருந்தாளோ அவனும் அதே மனநிலையில்தான் இருந்தான். நாலுபேரையும் ஒன்றாக உட்காரவைத்து இந்த உணமையைச் சொன்னால் அந்த இரண்டு தம்பதிகளும் எவ்வாறு திடுக்கிடுவார்களோ, அந்த இரண்டு பெண்களின் உணர்வுகளும் எப்படி இருக்குமோ, அதைப் பார்க்க வேண்டுமென்று அவன் மனம் கிடந்தது தவித்தது.

அவன் பஸ்ஸை விட்டு இறங்கும்போது மணி ஐந்தரை ஆகியிருந்தது. விஸ்வத்தின் விலாசத்தை வைத்துக் கொண்டு வீட்டைத் தேடி கண்டுபிடிப்பதற்குள் சூரியன் அஸ்தமிக்கும் வேளையாகிவிட்டது.

தொலைவில் வீடு. பராமரிப்பவர்கள் இல்லாத ஒரு சிறிய தோட்டம். உடைந்து போன பழைய கேட். கேட்டிற்கு இருபக்கங்களிலும் விஸ்வம், அருந்ததி என்ற பெயர் பலகை.

அவன் உடலில் ரத்தம் வேகமாகப் பாயத் தொடங்கியது. கேட்டின் மீது கையை ஊன்றியபடி அங்கே நின்று கொண்டிருந்த சிறுமியை நோக்கி “விஸ்வம் சார் இருக்கிறாரா?” என்று கேட்டான்.

“இல்லை.”

“எப்போது வருவார்?”

“தெரியாது. அதோ .. எங்க பெரிய அக்காவைக் கேளுங்கள்.”

பெரிய அக்கா என்றால் மூத்த மகள்!

பிறந்த முகூர்தத்திலேயே கோடீஸ்வரன் வீட்டிலிருந்து ஏழ்மையை நோக்கி நழுவிப் போய்விட்ட அந்தப் பெண்ணைப் பார்ப்பதற்காகத் திரும்பினான் அவன்.

அதே சமயத்தில் பூஞ்செடிகளுக்கு நடுவிலிருந்து எழுந்து நின்றாள் பாவனா. அஸ்தமிக்கும் சூரியனின் சிவந்த ஒளி அவன் முகத்தின் மீது பட்டு அற்புதமான அழகுடன் ஜொலிக்க வைத்துக் கொண்டிருந்தது.

அதே நேரத்தில் உள்ளே விளக்கைப் போட்டார்கள் யாரோ. அவன் மூளையிலும் பளிச்சென்று பல்ப் எரிந்தது.

******

பாவனாவின் மனநிலை சரியாகவே இல்லை.

தோட்டத்தில் இருந்த பூஞ்செடிகள் எல்லாம் வாடிவிட்டன. யாருக்குமே அதன் மீது இப்போது சிரத்தை இருக்கவில்லை. இந்த வரன் வேட்டை எல்லோரிடம் இருந்த உற்சாகத்தை கொன்று புதைத்துவிட்டது. ஒரு பெண்ணின் திருமணத்திற்கு இவ்வளவு பாடுபட வேண்டுமா?

ஒவ்வொரு தடவையும் பெண்பார்க்க பிள்ளை வீட்டார் வருவதும், வந்த போதெல்லாம் சக்திக்கு மீறிய செலவுகள், அதையும் மிஞ்சின பதற்றம். இந்த வரனாவது முடிந்து விடாதா என்ற எதிர்பார்ப்பு ஒருபக்கம்.

அவர்களிடமிருந்து பதில் வரும்வரையில் வாதவிவாதங்கள், யோசனைகள். இவ்வளவு நடந்த பிறகு இல்லை என்ற பதில் வந்ததுமே உற்சாகம் வடிந்து போய், ஏமாற்றத்தால் நாள் முழுவதும் அவர்களைத் திட்டித் தீர்ப்பது. விரக்தி மனப்பான்மை!

வேண்டாத எண்ணங்களுடன் தாயின் உடல்நலம் கெடுவது, தந்தையின் எரிச்சல்... எல்லாம் பழகிப் போய்விட்டன.

“திருமணம் ஆகும்வரையில் ஆண் நல்ல அவகாசத்திற்காக காத்திருக்க முடியும். பெண்ணை அப்படி விட்டு வைத்திருந்தால் நஷ்டம்” என்ற கொள்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட “மார்ஷல் லா ஆஃப் டிமான்ட் அண்ட் சப்ளை” வரதட்சிணை எல்லையை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டிருந்தது.

கனவுகள் எல்லாம் கனவுகளாகவே நின்றுவிட்டன. அழகான ராஜகுமாரன் இருந்த இடத்தில் “பணம்! பணம்!” என்று கைகளை விரித்தபடி கூக்குரலிட்டுக் கொண்டிருந்த அரக்கர்கள்தான் தென்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

“கல்யாண வேளை இன்னும் வரவில்லை” என்பது நடுத்தரக் குடும்பங்களில் ஆறுதல் அளிக்கும் பதில்.

“அக்கா! அக்கா!” பெரிய குரலில் கத்திக் கொண்டிருந்தாள் கிருஷ்ணவேணி.

‘எதற்காக அப்படித் தொண்டை கிழிய கத்துகிறாய்? எனக்கு செவிடு ஒன்றும் இல்லை.” எரிந்து விழுந்தாள் பாவனா.

“அம்மாவுக்கு வலி அதிகமாக இருக்கு. தூக்கத்திலேயே அழுதுக் கொண்டு இருக்கிறாள்.”

பகீரென்றது பாவனாவுக்கு. ஓட்டமாய் உள்ளே போனாள். அதற்குள் அருந்ததியின் உயிர் பிரிந்து விட்டிருந்தது. துக்கம் வலியினால் அல்ல. மூத்த மகளுக்குத் திருமணம் ஆகவில்லையே என்ற கவலையினால். இனி எந்த துக்கமும் இல்லாத மறுகரைக்கு அவள் ஆன்மா போய்ச் சேர்ந்து விட்டது.

*****

“ஜாதகம் நன்றாக பொருந்தியிருக்கு. எங்க பையன் பெண்ணை பிடித்து விட்டது என்று சொன்னான். இனி நீங்கள் போய்ப் பேசுங்கள். அவர்கள் சரி என்று சொன்னால் வருகிறோம். கையோடு தாம்பூலம் மாற்றிக்கொண்டு விடலாம்” என்றாள் பையனின் அத்தை.

ராமநாத சாஸ்திரியின் முகம் மலர்ந்துவிட்டது. “நானும் அவனிடம் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். கேட்டுக் கொள்ளவில்லை. எல்லோருக்கும் பணம்தான் பிரதானம் என்று வாதாடுவான். இப்போ என்ன சொல்லுவான் என்று பார்ப்போம்” என்றார் இடைத்தரகராய்.

“அப்படியா! அப்போ நானே வந்து பேசுகிறேன். வாங்க போவோம்” என்றான் மணமகன்.

அவர்கள் விஸ்வம் வீட்டிற்கு வந்து சேரும் போது, மாலை நான்காகி விட்டிருந்தது. தொலைவிலிருந்தே வீட்டின் முன்னால் எரிந்துக் கொண்டிருந்த நெருப்புச் சட்டி தென்பட்டது.

‘என்னது? என்ன நடந்தது?” ராமநாதன் சந்தேகத்துடன் வேகமாய் அந்தப் பக்கம் நடந்தார். வாசலில் அருந்ததியின் இறுதிப் பயணத்திற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. விஸ்வம் ஒரு பக்கமாய் உட்கார்ந்துகொண்டு புலம்பிக் கொண்டிருந்தான். குழந்தைகள் எல்லோரும் தாயின் பிணத்தின் மீது விழுந்து கதறிக் கொண்டிருந்தார்கள். பாவனா தந்தைக்கு அருகில் உட்கார்ந்து, அவருடைய துக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டபடி தன்னுடைய துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள்.

இருவரும் அவர்களை நெருங்கினார்கள். ராம்னாதனைப் பார்த்ததுமே விஸ்வத்தின் துக்கம் அதிகரித்தது. "பார்த்தீங்களா ராமநாதன்! பன்னிரண்டு வருடங்களாய் இருந்த நோய் உயிரை எடுக்கவில்லை. மகளின் கல்யாணம் முடியவில்லையே என்ற கவலை இரண்டே வருடங்களில் அந்த காரியத்தைச் செய்துவிட்டது. நான் சொல்லவில்லையா? பணம்தான் எல்லோருக்கும் முக்கியமாகிவிட்டது. அது இல்லாமல் பண்ணிக் கொள்பவன் யாருமே இல்லை."

"இருக்கிறான் விஸ்வம்! இதோ இந்தப் பையன் இருக்கிறான். நீங்க சொன்னதைத் தெரிந்துகொண்டு, உங்கள் வாதம் உண்மையில்லை என்று நிரூபிக்கிறேன் என்று வந்தான்."

"ஆமாம். இந்தச் சமயத்தில் வந்ததற்கு மன்னியுங்கள். இப்படி நடந்தது எங்களுக்குத் தெரியாது. எனக்கு வரதட்சணையோ சீர்வரிசையோ எதுவும் தேவை இல்லை. உங்க மகளை நான் பண்ணிக் கொள்கிறேன், உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால்."

விஸ்வம் நம்பமுடியாதவனாய் பார்த்தான். "செக்ரடேரியட்டில் வேலை பார்ப்பது இந்தப் பையன்தானா?" அவ்வளவு துக்கத்திலேயும் வியப்படைந்தவனாய் கேட்டான்.

"ஆமாம். இந்தப் பையன்தான். நான் சொன்ன சம்பந்தம் இதுதான்" என்றார் ராமநாதன் பெருமையாய்.

விஸ்வம் மனைவியின் முகத்தைப் பார்த்தான். அவன் துக்கம் இன்னும் அதிகமாகிவிட்டது.

“நான் ஒருநாள் முன்னதாய் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். உங்கள் எல்லோரையும் சிரித்த முகத்துடன் பார்த்திருப்பேன். இந்த துரதிர்ஷ்டம் என்னுடையது மாமா!” அவன் உறவுமுறையைக் கொண்டாடினான்.

விஸ்வம் தன்னை அறியாமலேயே அவனை அணைத்துக் கொண்டான். “எங்க அருந்ததியின் ஆன்மா அமைதி அடைந்திருக்கும் கண்ணா” என்றான் அவன் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழிந்தது. துக்கமும், ஆனந்தமும் ஒன்று சேர மனைவியின் முகத்தைப் பார்த்தான். இந்த உலகத்து பந்தங்களுக்கு அதீதமாய் இருந்தது அது.

*****

பாவனாவுக்கு இன்னும் எல்லாம் கனவு போலவே இருந்தது.

எப்போதும் போலவே அம்மாவுக்கு வந்த வலி கொஞ்ச நேரத்தில் குறைந்து விடும் என்று மருந்துக் கொடுத்து படுக்க வைத்ததும், அவள் நிம்மதியாக உறங்குகிறாள் என்று நினைத்து சந்தோஷப்பட்டதும், அதற்குள் அது மீளா உறக்கம் என்று தெரிந்ததும் அவளுக்கு பெரிய அதிர்ச்சி.

வீட்டில் முதல் சாவு. அதுவும் மிக நெருக்கமான தாய் தந்தையருள் ஒருவரின் மரணம், எப்படிப்பட்டவரையும் மனம் தளரச் செய்துவிடும். ஆனால் பாவனாவை அதையும் விட மனம் தளரச் செய்தது தந்தையின் துக்கம்தான். அப்படிப்பட்ட நிலையில் இருந்தபொழுது அந்த இளைஞன் வந்தது, திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது கனவில் நடந்தது போல் நிகழ்ந்து முடிந்துவிட்டது.

நாட்கள் வேகமாய் ஓடின. மணமகனும், அவன் அக்காவும் குடும்பத்தோடு வந்தார்கள். திருமணம் மிக எளிமையாய் நடந்து

முடிந்துவிட்டது. எங்கும், எந்தப் பிரச்னையும் கிளம்பவில்லை. விஸ்வம் துக்கத்தை விழுங்கிக்கொண்டு எல்லாவற்றையும் நடத்தி முடித்தான்.

******

பால் தம்ளருடன் அறைக்குள் அடி எடுத்து வைத்தாள் பாவனா. வெண்ணிற பட்டுப் புடவையில் அவள் அழகு இரு மடங்காய் சோபித்தது.

வெட்கத்துடன் நாலடிகள் எடுத்து வைத்தவள் அப்படியே நின்றுவிட்டாள்.

அவன் மெதுவாய் எழுந்து வந்து தம்ளரை வாங்கிக் கொண்டான். பாவனா அவன் கால்களில் விழுந்து வணங்கினாள் பக்தியுடன்.

‘ச்சே.. என்ன இது? இதெல்லாம் யார் சொல்லிக் கொடுத்தார்கள் உனக்கு?” தம்ளரை மேஜைமீது வைத்துவிட்டு அவளைத் தூக்கி நிறுத்தினான்.

“யாரும் சொல்லித் தர வேண்டிய அவசியமே இல்லை. இரண்டு வருடங்களாய் நிறைய பேர் வந்து வந்து என்னைப் பார்த்துவிட்டுப் போனார்கள். யாரிடமும் மனுஷத்தன்மையே தென்படவில்லை. மனிதர்கள் மீதே நம்பிக்கை போய்விட்ட சமயத்தில் நீங்க தெய்வம் மாதிரி வந்தீங்க. தெய்வத்தின் பாதங்களை வணங்குவதில் தவறு இல்லையே?”

“நான் தெய்வம் இல்லை. சாதாரண மனிதன். என்னை அதுபோல் வானத்தில் உட்கார் வைக்கதே.”

“சாதாரண மனிதர்களுடன் உங்களை ஒப்பிடாதீர்கள். அவர்கள் எல்லோரும் பணத்திற்காக அடித்துக் கொள்வார்கள். பணத்தைத் தவிர அவர்களுக்கு வேறு உலகமே தெரியாது.”

“உன்னை மனைவியாய் அடைந்தது என் அதிர்ஷ்டம் என்று நான் நினைக்கறேன். பார்ப்போம் யாருடைய வார்த்தை உண்மை ஆகிறது என்று.” சிரித்தான் அவன்.

“சரி, முதலில் பாலைக் குடியுங்கள். ஆறிவிடும்.”

“குடிக்கிறேன், ஒரு நிபந்தனையின் பேரில்.”

“என்ன அது?” கேட்டாள்.

“என்னாங்க.. நீங்க என்றெல்லாம் கூப்பிடுவது நன்றாக இல்லை. நீ என்னை பெயர் சொல்லியே கூப்பிடணும்.”

“பெயர் சொல்லி கூபிடுவதா? ஊஹூம், என்னால் முடியாது.” வெட்கத்துடன் பதிலளித்தாள் பாவனா. தான் படித்த காதல் கதையில் கதாநாயகன் இதுபோலவேதான் கேட்டான் என்பது நினைவுக்கு வந்தது அவளுக்கு. கனவின் சிறகுகள் மெதுவாய் விருந்துக் கொண்டன. மனம் ஆனந்த ஊஞ்சலில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

“ஏன் முடியாது? என் பெயர் பாஸ்கர் ராமமூர்த்தி . பாஸ்கர் என்றோ மூர்த்தி என்றோ கூப்பிடு. உன் இஷ்டம்” என்றான் அவன்.

8

அடையாரில் மிக நவீனமான் பங்களா அது. சுற்றிலும் பெரிய காம்பவுண்ட் சுவர்கள். உள்ளே இரு பக்கமும் பசுமையான புல்வெளி. ஒரு பக்கம் டென்னிஸ் கோர்ட், இன்னொரு பக்கம் ரோஜாத் தோட்டம். காம்பவுண்டு சுவர்களைச் சுற்றிலும் ஒட்டினாற்போல் வளர்ந்திருந்த அசோகமரங்கள். அணுவணுவாய் செல்வச் செழுப்பை எடுத்துக் காட்டிக்கொண்டு, பார்த்ததுமே பணக்காரர்களின் வீடு என்று எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது. அந்தச் செல்வத்தைக் காப்பாற்றுவதற்காக என்பது போல் வாசலில் கூர்க்காவுடன் உள்ளே பெரிய அல்சேஷன் நாயும் இருந்தது.

பணத்தால் மனிதன் வாங்க முடிந்த எல்லா வித நவீன சாதனங்களும் அந்த வீட்டில் இருந்தன. அப்பொழுதுதான் ஒப்பனை செய்து கொண்ட திரைப்பட நடிகையைப் போல் அந்த பங்களா செயற்கை நாகரிகத்துடன் மிளிர்ந்துக் கொண்டிருந்தது. அழகாய் இல்லாதது அந்த வீட்டில் வசித்து வந்த மனிதர்களின் மனங்கள் மட்டும்தான். மனதில் இல்லாத சந்தோஷத்தை கண்கள் மூலமாய் எடுத்துக் காட்டுவது ஒன்றுதான் பணத்தால் வாங்க முடியாதாது. அதனால்தான் அவள் எப்போதும் கண்களை மூடிக்கொண்டு பூஜை பண்ணிக்கொண்டோ அல்லது தூங்கிக் கொண்டோ இருப்பாள்.

சாஹிதியை பார்த்துக் கொள்வதற்கு ஒரு ஆயாவும், படிப்புச் சொல்லிக் கொடுத்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைப்பதற்கு கவர்னஸ் ஒருத்தியும் இருந்தார்கள். அதைத் தவிர அந்த வீட்டில் எல்லா வேலைகளுக்கும் தனித்தனியாக வேலைக்காரர்கள் இருந்தார்கள்.

இரவு பதினோரு மணி அடித்தது. நீல நிற காண்டெஸ்ஸா கார் கேட் அருகில் வந்து நின்றதுமே கூர்க்கா சல்யூட் அடித்து கேட்டைத் திறந்தான்.

வீட்டு வாசலுக்கு அருகில் சிம்மாசலம் தயாராய் நின்று கொண்டிருந்தான். சந்திரன் காரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு, இறங்கி மெதுவாய் நடந்து வந்தான். அவனிடமிருந்த சிறப்பு குணம் அதுதான். எவ்வளவு குடித்தாலும் தள்ளாட மாட்டான். உளறமாட்டான். அவன் வந்து சோபாவில் உட்கார்ந்ததுமே சிம்மாசலம் பூட்சையும் சாக்சையும் அவிழ்த்தான். நிர்மலா அறையிலிருந்து வெளியே வந்தாள். சிம்மாசலம் அங்கிருந்து உள்ளே போய்விட்டான். அந்த இடத்தில் நிசப்தம் பயத்தை ஏற்படுத்தும் விதமாக இருந்தது. அந்த நிசப்ததிலிருந்து அவள் குரல் மெதுவாய் ஒலித்தது.

“நீங்க எதுக்குக் கல்யாணம் பண்ணிக் கொண்டீங்க?”

எதிர்பாராத அந்தக் கேள்விக்கு குழப்பத்துடன் நிமிர்ந்து பார்த்தான். பதினைந்து நாட்களுக்குப் பிறகு பத்தாயிரம் மைல்கள் தூரத்திலிருந்து வந்திருக்கும் அவனைப் பார்த்து அவள் கேட்ட முதல் கேள்வி அது. அவளுடைய மூட் சரியாக இல்லை என்று உணர்ந்து கொண்டான். உடனே பதில் சொல்லவில்லை.

“உங்களைத்தான்? கல்யாணம் எதுக்குப் பண்ணிக்கொண்டீங்க? குழந்தையை எதுக்கு பெற்றுக் கொண்டீங்க?” குரலை உயர்த்தி அதட்டுவது போல் கேட்டாள்.

அதற்குள் அவன் கொஞ்சம் சுதாரித்துக் கொண்டுவிட்டான். அஃபென்சை டிஃபென்ஸ் மூலமாய் சரிக்கட்டிக் கொண்டு போவது அவனுக்குப் பழக்கம் இல்லாதது. வியாபாரப்புள்ளி அவன். தனக்கு என்று ஒரு வாதத்தை உருவாக்கிக் கொள்ள முடியும் அவனால்.

“நீ என்னை எதுக்குப் பண்ணிக்கொண்டாய்?” அவனும் அதே தொனியில் கேட்டான்.

நிர்மலா அடியுண்டவள் போல் பார்த்தாள்.

அவன் சோபாவிலிருந்து எழுந்தான். “என் பணத்தைப் பார்த்துதானே? அழகான பங்களா, விலை உயர்ந்த நகைகள்.. புடவைகள்.. அவற்றை அணிந்துகொண்டு பெருமையாய் சுற்றுவதைதானே நீ விரும்பினாய்? நீ விரும்பியதை எல்லாம் தந்துவிட்டேன். வேறு என்ன வேண்டும் உனக்கு? கல்யாணம் கல்யாணம் என்று அழுவார்கள் ஆகும் வரையில். அதற்குப் பிறகு எதுக்குப் பண்ணிக்கொண்டோம் என்று அழுவார்கள். பெண்களுக்கு அழுவதைத் தவிர வேறு எதுவும் தெரியாது” என்றான்.

அவனிடமிருந்து அப்படிப்பட்ட பதிலை எதிர்பார்க்காத நிர்மலாவின் கண்களில் நீர் சுழன்றது. ஆனாலும் சமாளித்துக் கொண்டாள். “நான் ஒன்றும் பிச்சைக்காரக் குடும்பத்திலிருந்து வரவில்லை. எங்க அப்பாவும் நல்ல பணக்காரர்தான். நானும் சிறுவயதிலிருந்தே காரில் சுற்றியவள்தான்” என்றாள் ரோஷத்துடன்.

”பின்னே என்னை இல்லாமல் இருபத்திநான்குமணி நேரமும் உன் காலடியில் விழுந்துக் கிடக்கிறவனை விலை கொடுத்து வாங்கியிருக்கலாமே?”

‘நீங்களும்தான் இருபத்தி நான்கு மணி நேரமும் உங்களுடன் சேர்ந்து கிளப்பில் டான்ஸ் ஆடி, சீட்டு விளையாடும் அந்த மேனாமினுக்கியைப் பண்ணிக்கொண்டு இருப்பதுதானே?”

“ஷட் அப்! அந்தக் கல்யாணத்திற்கு நீதான் தடையாக இருந்தாய்.”

“தடையாய் இருந்தது நான் இல்லை. உங்க கோழைத்தனம். காதலித்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதாய் நம்ப வைத்துவிட்டு, கடைசியில் கல்யாணப் பேச்சு வரும் போது தந்தையை சம்மதிக்க வைக்க முடியாமல் போனதால் என் காலில் வந்து விழுந்தீங்க. உங்களைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள விருப்பம் இல்லை என்று சொல்ல வேண்டிய தேவை எனக்கு என்ன வந்தது? நான் எதற்கு கெட்ட பெயர்வாங்கிக் கொள்ளணும்? அதோடு மாமா வந்து காலில் விழாத குறையாய் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். தந்தையை சம்மதிக்க வைக்க முடியாமல் போனால் அப்போதே சொத்தை விட்டுவிட்டு போய் அவளையே பண்ணிக்கொண்டு இருக்க வேண்டியது.”

“ஆமாம். இப்படிப்பட்ட சாக்கைச் சொல்லித்தான் கல்யாணத்திற்கு சம்மதித்தாய். நான் வேறு ஒருத்தியை காதலித்தாலும் அதில் உனக்கு ஆட்சேபணை இருக்கவில்லை. எந்த விதத்திலும் சொத்து உங்கள் கையை விட்டுப் போய்விடக் கூடாது. அதுதானே வேண்டும்? அதோடு அழகாய் இருக்கிறோம் என்ற கர்வம் உனக்கு. உன்னை மறுத்துவிட்டு அந்த தாரிணியிடம் எதைப் பார்த்து மயங்கி விட்டேன் என்று உன் ஈகோ அடிபட்டு விட்டது. அதனால்தான் என்னைப் பண்ணிக்கொண்டாய்.”

திருமணம் என்பது வாழ்க்கையில் மிக முக்கியமான திருப்பம். வேறொரு நபருடன் வாழ்நாள் முழுவதும் சேர்ந்து இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தும் கூட கொழைத்தனத்தினால், வேறு ஏதோ பலவீனதினால் திருமணம் செய்துகொண்டு, அதற்குப் பிறகு தினந்தோறும் இவ்வாறு ஒருவரை ஒருவர் குறை

சொல்லிக்கொண்டும், வெறுத்துக்கொண்டும், தேவைக்காக இரவு நேரத்தில் படுக்கையைப் பகிர்ந்து கொண்டு, குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனையோ பேர். அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்க்கையின் மதிப்பைப் பற்றி எதுவும் புரியாது. அதற்கு அந்த ஜோடிதான் எடுத்துக்காட்டு.

நிர்மலா அரும்பாடு பட்டு ஆவேசத்தை அடக்கிக்கொண்டு "நான் உங்களை நாள் முழுவதும் என்னோடு கூடவே இருங்கள் என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு குழந்தையின் தந்தையாய் உங்கள் பொறுப்பைப் புரிந்துகொள்ளச் சொல்கிறேன்" என்றாள்.

"வேண்டியதை எல்லாம் பார்த்துக்கொள்ள நீ சும்மாதானே இருக்கிறாய். நான் வெறு தனியாய் பார்த்துக்கொள்ள என்ன இருக்கிறது?"

"நான் பார்த்துக் கொண்டால் போதுமா? நீங்க பதினைந்து நாட்கள் வெளிநாட்டுக்குப் போய்விட்டீங்க. வந்து இரண்டு நாட்கள் ஆகிறது. இருந்தாலும் பம்பாயிலேயே இருந்து விட்டீங்க. இந்த ஊருக்குக் காலையிலேயே வந்திருக்கீங்க. ஆனாலும் வீட்டுக்கு வந்து சேரும்போது இரவு பதினொருமணி. நேற்று சாஹிதியின் பிறந்தநாள். அந்த விஷயம்கூட உங்களுக்கு நினைவு இல்லை. பணம்... பணம்.. பணம்.. அவ்வளவுதான்! சம்பாதிப்பதற்காக கஷ்டப்படுவது, அந்தக் கஷ்டத்தை மறப்பதற்காகக் குடிப்பது. 'அப்பா என் வரவில்லை?' என்று அவள் கேட்கும் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. பொய் சொல்ல வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி விட்டீங்க. பிறந்தநாள் அன்றைக்காவது அந்த பிஞ்சு மனதை சந்தோஷப்படுத்த வேண்டிய கடமை உங்களுக்கு இல்லையா?"

“பதினைந்து நாட்கள் கழித்து வீட்டுக்கு வந்தால் எப்படிப்பட்ட வரவேற்பு கிடைக்கும் என்பதைப் பார்த்துவிட்டேன். இனி சினிமா வசனங்கள் போதும். எனக்கு தூக்கம் வருகிறது.” விருட்டென்று தன் படுக்கையறைக்குள் போனான் சந்திரன்.

நிரம்லா அந்த இடத்திலேயே சோபாவில் உட்கார்ந்து ரொம்ப நேரம் அழுது கொண்டிருந்தாள். அந்தஸ்தில் ஏற்றத்தாழ்வு இருந்த போதிலும் தன்மீது அன்பு வைத்திருந்த மாமாவின் வார்த்தையைத் தட்ட முடியாமல் இந்தத் திருமணத்தைப் பண்ணிக்கொண்டாள். திருமணம் ஆகிவிட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று தாய் தைரியம் சொன்னாள். அவ்விதமாய் சில நாட்கள் நன்றாகத்தான் இருந்தான் சந்திரன். சாஹிதியை உண்டான பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை. ரொம்ப மாறிவிட்டான். தாரிணிக்கு திருமணம் ஆகிவிட்டதென்றும், வெளிநாட்டுக்குப் போய்விட்டாள் என்றும் கேள்விப்பட்டாள். அதுதான் காரணமா? அப்பொழுதிலிருந்தே இதே கதைதான். குறைந்தபட்சம் அந்தக் குழந்தைக்காவது இந்த சச்சரவுகள் தெரியாமல் இருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டாள்.

ஆனால் தந்தையின் கார் ஹாரனைக் கேட்டுவிட்டு உற்சாகமாய் எழுந்து வந்த சாஹிதி அறையை விட்டுவெளியே வரப் போனவள், அவர்களின் சண்டையைக் கேட்டுவிட்டு பயந்துபோய் அந்த இடத்திலேயே நின்றுவிட்டாள் என்பது நிர்மலாவுக்குத் தெரியாது. அவர்களுடைய சண்டையை முழுவதுமாக கேட்டுவிட்டாள் என்றும், நடந்தவற்றை ஓரளவுக்குப் புரிந்துகொண்ட அந்த பிஞ்சு மனதில் அந்த சின்ன வயதிலேயே வாழ்க்கையைப் பற்றி அளவு கடந்த பயமும், கோழைத்தனமும் நிரம்பி விட்டதென்றும் அவளால் ஊகிக்க முடியவில்லை.

சாஹிதிககு உறக்கம் வரவே இல்லை. நிர்மலா ஹாலைவிட்டு வெளியே வந்து தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டதைப் பார்த்த பிறகு வந்து படுக்கையில் விழுந்தாள்.

‘அம்மாவும், அப்பாவும் ஏன் இப்படி சண்டை போடுகிறார்கள்? டாடி எப்போதும் ஏன் அப்படி மம்மியை அழவைத்துக் கொண்டு இருக்கிறார்?’ என்று நினைத்துக்கொண்டாள் அந்தச் சிறுமி. தாய் எங்கேயுமே போக மாட்டாள். தன் பள்ளிகூடதிற்குக்கூட வர மாட்டாள். பூஜை பண்ணிக்கொண்டோ, புத்தகங்களைப் படித்துக்கொண்டோ உட்கார்ந்திருப்பாள். தந்தை எப்போதுமே வீட்டில் இருக்கவே மாட்டார். பக்கத்து வீட்டில் எப்போதும் குழந்தைகள் அம்மா அப்பாவுடன் புல்தரையில் விளையாடிக் கொண்டு இருப்பார்கள். சேர்ந்து வெளியே போவார்கள். எப்போதும் சிரித்துக்கொண்டே இருப்பார்கள். தன்னுடைய தாய் தந்தையும் அதுபோலவே இருந்தால் எவ்வளவு நன்றாக ரிக்கும்! இவ்வாறு எண்ணிக்கொண்டே உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

தூக்கத்தில் சில்லென்று கை ஒன்று தன்மீது படவே சாஹிதி மெதுவாய் கண்களைத் திறந்து ‘மம்மி’ என்று கூப்பிடப் போனவள் நிறுத்திக்கொண்டாள். வந்தது மம்மி இல்லை, டாடி.

“டாடீ!” மெதுவாக கூப்பிட்டாள்.

“சாரி பேபி. உன் பிறந்த நாளுக்கு வரவில்லை என்று அழுதாயா? வர முடியாமல் போய்விட்டது” என்றான். அவன் குரலில் நேர்மை இருந்தது.

“இல்லை டாடி. அழவில்லை. அழுகை வந்தது. ஆனால் எல்லோரும் பார்த்தால் நன்றாக இருக்காது என்று அடக்கிக்கொண்டேன்.”

விடிவிளக்கு வெளிச்சத்தில் அவன் கண்களில் லேசாய் நீர் திரையிட்டு பளபளத்தது. தன்னால் ஏன் வரமுடியவில்லை என்றும், பம்பாயில் எவ்வளவு முக்கியமான கூட்டம் இருந்தது என்றும் சொல்லுவோமா என்று தடுமாறினான்.

ஆனால் உடனேயே அந்த எண்ணத்தைக் கைவிட்டு, "குட் கர்ல்! படுத்துத் தூங்கு. நேரமாகிவிட்டது" என்று நெற்றியில் முத்தம் பதித்துவிட்டு அங்கிருந்து போய்விட்டான்.

தந்தை கூட நல்லவர்தான். அவர் வீட்டிற்கு வந்ததுமே அம்மா அதுபோல் கத்தாமல் இருந்திருக்கணும்' என்று நினைத்துக்கொண்டாள் சாஹிதி. எது நல்லது எது கேட்டது, தவறு யாருடையது என்று புரியாத குழப்ப நிலை. அவள் வயது அதற்குக் காரணம் இல்லை.

இந்த உலகத்தில் எந்த இருவருக்கும், எந்த இரு கட்சிகளுக்கும், எந்த இரு நாடுகளுக்கும் ஏன் தகராறு வருகிறது என்று யாராலுமே சொல்ல முடியாது. அவரவர்கள் பொறுத்த வரையில் அவர்கள் செய்வதுதான் சரி.

காலையில் எழுந்ததுமே படுக்கையின் மீது ஒரு பெரிய பாக்கெட் தென்பட்டது.

"எது? நேற்று இரவு இல்லையே?" என்று நினைத்துக் கொண்டே சாஹிதி மேல் கவரைப் பிரித்தாள். உள்ளே அட்டைப்பெட்டியில் ஒன்றரையடி உயரமுள்ள அழகான பொம்மை இருந்தது. பொன்னிற தலைமுடி, பிங்க் கலரில் பிராக். பின்னால் திருப்பிப் பார்த்த போது பட்டன தென்பட்டது. அதை அழுத்தியதும் லேசாய் சிரிப்பு சத்தம் கேட்டது.

“ஹலோ! ஐ ஆம் பமீலா. டூ யூ லைக் மி? ஐ லைக் யூ. ஐ யாம் யுவர் பிரெண்ட்.”

சாஹிதி வியப்புடன் கிறீச்சிட்டாள். அந்தக் குழந்தையின் முகம் சந்தோஷத்தால் ஜொலித்துக் கொண்டிருந்தது. அந்தப் பேசும் பொம்மையை மார்போடு அழுத்திக் கொண்டாள். ‘டாடீ ... நல்ல டாடீ! என்மீது டாடிக்கு எவ்வளவு பிரியம்!’ என்று எண்ணிக்கொண்டாள்.

தான் இறந்த பிறகு தன்னுடைய மகளுக்கு வாழ்நாள் முழுவதும் சிநேகிதியாக இருக்கப் போகிறது என்று நாற்பது டாலர் கொடுத்து அந்த பொம்மையை வாங்கும் போது சந்திரன் ஊகித்து இருக்கவில்லை.

******

சின்ன வயதில் மனிதனில் வாழ்க்கையில் நடக்கும் சிறிய சம்பவங்களே அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சாஹிதிககு ஒரு நாள் அப்படிப்பட்ட சம்பவம்தான் எதிர்ப்பட்டது.

சாஹிதி அழகானவள் இல்லை. விஸ்வம், அருந்ததி இருவரின் சாயலைகளைக் கொண்டு பிறந்துள்ள அவளிடம் பெரிய மனிதர் வீட்டு குணாதிசயங்கள் இல்லை. முக்கியமாய் நிர்மலாவிடமிருந்த மிடுக்கும், பெரிய மனித தோரணையும் அவளிடம் படியவில்லை. எதிர்காலத்தில் அதுதான் அவளுள் ஒருவிதமான தாழ்வுமனப்பான்மைக்கு வழி வகுத்தது.

தாயும் தந்தையும் எதிரும் புதிருமானவர்கள். சந்திரன் மேடீரியளிஸ்ட். நிர்மலா சந்தேகப்படுவது போல் அவன் என்றுமே தாரிணியிடம் கண்மூடித்தனமான காதலில் ஆழ்ந்து விடவில்லை. வருமானம் அவன் அகத்தை திருப்திப் படுத்திக்கொண்டிருந்தது. தன்னுடைய வெற்றியில் தன்னோடு

தன் மனைவியும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்பது அவன் விருப்பம். ஆனால் நிர்மலாவுக்கோ வெறு விதமான, பெயருக்கு ஏற்றாற்போல் எளிமையான வாழ்க்கையில் விருப்பம். அவ்விதமாய் இருவரின் வழிகளும் வேறுவேறாகி விட்டன.

யாருடைய வாதம் சரியானது என்றோ, யார் யாரால் பாதிக்கப் படுகிறார்கள் என்றோ அச்சிறுமிக்கு தெரியாது. வேதனை மட்டும்தான் மனதில் எஞ்சி நின்று கொண்டிருந்தது. தன்னுடைய ஏமாற்றத்தை மறப்பதற்காக சந்திரன் வியாபாரத்தை தஞ்சம் அடைந்தான். எதைத் தஞ்சமடைய வேண்டும் என்று தெரியாத வயது சாஹிதிககு.

சிறுகாற்றில் உறுதியுடன் நிற்பதற்காக முயற்சி செய்கிறது அகல்விளக்கு. ஒரு பலமான காற்று வந்து அதை அணைத்துவிட்டுப் போகிறது.

கற்பழிப்பு தேவையில்லை. திருமணம் அவசியம் இல்லை. ஒரு குழந்தையின் மனதில் முத்திரை பதிந்து போய் விடுவதற்கு சிறிய அலையே போதுமானது.

அந்த அலையின் பெயர் பிரமஹம்சா.

அப்பொழுதுதான் கோவிலிலிருந்து திரும்பி வந்த நிர்மலா தோட்டத்து நாற்காலியில் உட்கார்ந்து பழரசம் அருந்திக் கொண்டிருந்தாள்.

இருட்டிக் கொண்டிருந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. பாட்டு பாடிக் கொண்டிருந்த சாஹிதி ஏதோ யோசனை வரவே தாயிடம் வந்தாள்.

‘மம்மி! நட்சத்திரங்கள் ஏன் மின்னுகின்றன?”

“அவை மின்னுவதில்லை கண்ணம்மா. பற்றி எரிகின்றன. அந்த வேதனை நம் கண்ணுக்குத் தெரியக் கூடாது என்று வைரம் போல் ஜோலித்தபடி பிரமையை ஏற்படுத்துகின்றன. ரொம்ப தூரத்தில் இருப்பதால் அப்படித் தோன்றுகின்றன.”

“நான் பெரியவள் ஆனதும் பைலட் ஆகப போகிறேன். டாடியிடம் சொல்லி ராக்கெட் வாங்கச் செய்து அதுகிட்டே போய் அந்த நெருப்பை அணைத்து விடுகிறேன்.”

“ரொம்ப நல்ல கற்பனைதான். ஆனால் அது சாத்தியமில்லை. நாளைக்கு உங்க டீச்சரைக் கேள். ஏன் என்று சொல்லுவாள்.”

நிர்மலா அதிகம் படித்தவள் இல்லை. சாஹிதி இதுபோன்ற கேள்விகளைக் கேட்கும் போதெல்லாம் பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொண்டு விடுவாள். தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களுக்கு படிப்பதற்கு வயது ஒரு தடை இல்லை. தேவையற்ற வேதனையில் மூழ்கி நாளெல்லாம் கழிப்பதை விட புதிதாக கற்றுக்கொள்வதில் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றிக்கொள்ள முடியும் என்று நிறைய பேருக்குத் தெரியாது. நிர்மலா ரொம்ப சாதாரணமான பெண். கணவனின் அன்பைப் பெறமுடியாமல் போனதற்கு மாற்று மருந்து கடவுளின் மீது நம்பிக்கை வைப்பது ஒன்றுதான் என்று அவள் நம்பினாள். கடவுள் அனுக்கிரகம் செய்தால் கணவன் “என்னை மன்னித்துவிடு நிர்மலா” என்று தானாகவே நெருங்கி வருவான். அந்தத் தெய்வம் எந்த உருவில் அனுக்கிரகம் பண்ணுவாரோ தெரியாது. அதனால் எல்லா தெய்வங்களையும் அவள் வணங்கி வந்தாள்.

****

“காரை அனுப்பி வைக்கச் சொன்னால் ஏன் அனுப்பவில்லை?” சந்திரன் கோபமாகக் கேட்டான். அவன் எப்போது வந்தான் என்று இருவருமே கவனிக்கவில்லை.

“கோவிலுக்குப் போயிருந்தேன். தாமதமாகிவிட்டது. திரும்பி வந்ததுமே அனுப்பினேன்” என்றாள் நிர்மலா. அவன் கார் ரிப்பேரில் இருந்தது.

“சுவாமி அறை முழுவதும் எல்லா விக்கிரகங்களை தங்கத்தால் பிரதிஷ்டை பண்ணி வைத்திருக்கிறாய். காலை நாலு மணிக்கே எழுந்து பூஜை பண்ணுகிறாய். குடி மூழ்கி விட்டாற்போல் இன்னும் எந்த கோவிலுக்குப் போகணும்? எனக்குத் தேவை என்று தெரிந்துகூட நீ காரை அனுப்பாமல் போனதற்குக் காரணம் என்ன? நீ என்னதான் நினைத்துக் கொண்டு இருக்கிறாய்?” தீவிரமான் குரலில் கேட்டான்.

பின்னால் சந்திரனின் நண்பன் ராஜேஷ், அவன் மனைவி, மகன் நின்று கொண்டிருந்தார்கள். அவளுக்குப் புரிந்துவிட்டது. கார் தேவைப்பட்டது அவர்களுக்கக்தான். நடந்த தவறுக்கு தண்டனையாய் அவர்களுக்கு முன்னால் அவமானப்படுத்த வேண்டும் என்பது சந்திரனின் உத்தேசம்.

“இன்மேல் எப்போதும் காரைப் பயன்படுத்த மாட்டேன். கோவிலுக்குப் போகணும் என்றால் பஸ்ஸில் போய்க் கொள்கிறேன்” என்றாள் ரோஷத்துடன்.

“அந்தக் காரியத்தைச் செய்து எங்களைக் காப்பாற்று. ஆனாலும் கணவனே கண்கண்ட தெய்வம் என்று தெரிந்தும் இந்த பெண்கள் இப்படி கோவில் குளம் என்று சுற்றுவானேன்?”

பக்கத்தில் இருந்த ராஜேஷின் மனைவி “அந்த பெண்கள் கூட்டத்துடன் என்னைச் சேர்த்து விடாதீங்க சந்திரன்” என்றாள் சிரித்துக் கொண்டே.

நிர்மலாவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. “பின்னே எங்கள் பதி தெயவத்தின் கவனம் வெறு பெண்ணின் பக்கம் திரும்பக்கூடாது என்று அந்த தெய்வத்தை வேண்டிக்கொள்ளாமல் இருக்க முடியாது இல்லையா” என்றாள் அதே வேகத்துடன். பதிலடி கொடுப்பது கடவுள் அவளுக்கு தந்த வரம்..

ராஜேஷுக்கு அவள் இரண்டாவது மனைவி. அவளுக்குகூட அது இரண்டாவது திருமணம்தான். வேடிக்கை என்னவென்றால் முதல் கணவனிடமிருந்து அவளுக்கு விவாகரத்து வாங்கிக்கொடுத்து இவ்விருவரின் திருமணத்தை நடத்தி வைத்தது சந்திரன்தான். அவளுக்கும் சந்திரனுக்கு நடுவில் ஏதோ உறவு இருப்பதாய் வதந்தி

அவள் எண்ணம் புரிந்ததுமே சந்திரன் கோபத்தால் கொதித்தெழுந்தான். அவன் கை வேகமாய் மேலே எழும்பிற்று.

அதற்குள் “மம்மி! அவனைப் பார்” என்ற சாஹிதியின் கூச்சலைக் கேட்டுவிட்டு எல்லோரும் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

ராஜேஷின் மகன் தொட்டிலில் கிடந்த பமீலா போம்மையிடம் போய் காலைப் பிடித்துத் தலைகீழாய் தொங்கவிட்டு ஆட்டியபடி கேலியாய் சிரித்துக் கொண்டிருந்தான். வெளியில் தெரிந்து கொண்டிருந்த அதன் உள்ளாடையைப் பார்த்து “ஷேம்.. ஷேம்” என்று கத்திக் கொண்டிருந்தான்.

ராஜேஷும் அவன் மனைவியும் அந்தக் காட்சியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். சாஹிதி ஓட்டமாய் போய்

பொம்மையைப் பிடுங்கிக் கொண்டாள். திரும்பவும் பறிக்க முயன்ற அந்தச் சிறுவனை மாறி மாறி அடித்தாள். சந்திரன் வியப்பிலிருந்து மீண்டவனாய் விரைந்து சென்று சாஹிதியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

நிர்மலா வேகமாய் போய் அவனைத் தள்ளிவிட்டு சாஹிதியை இழுத்து அனைத்துக் கொண்டாள்.

“மம்மி! எனக்கு அந்த பொம்மை வேண்டும்.” ராஜேஷின் மகன் அழுது கொண்டிருந்தான்.

எங்கே அவன் பிடுங்கிக்கொள்வானோ என்று பலமாய் அழுத்திக்கொண்டாள் சாஹிதி. அவளுக்கு துக்கம் வரவில்லை. பயம் அதை வென்றுவிட்டது.

“நாளைக்கே வாங்கித் தருகிறேன். கார் வந்து விட்டது போல் இருக்கு. வாங்க போவோம். இந்த வீட்டில் யஜமானருக்கு மட்டுமே இல்லை. வந்த விருந்தாளிகளுக்கும் வரவேற்பு சரியாக இருக்காது.” சந்திரன் வாசலை நோக்கி நடந்தான்.

“மம்மி! அவன் பமீலாவை எப்படி தூக்கினானோ பார்த்ததாயா? இப்படித் தானா நடந்துகொள்வது? பமீலாவை தலைகீழாய் தூக்கி ஷேம் ஷேம் பண்ணி விட்டான்.” தேம்பி தேம்பி அழுது கொண்டே பமீலாவின் உடைகளை சரி செய்தாள் சாஹிதி.

நிர்மலா வேதனையுடன் மகளை அருகில் எழுத்து அணைத்துக் கொண்டாள். பமீலாவை யாரவது பொம்மை என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் சாஹிதியால் பொறுத்துக் கொள்ள முடியாது. அவ்வளவு தூரம் உயிர்த் தோழியாகி விட்டிருந்தது அது.

“அழாதேம்மா. அடுத்த தடவை அவன் நம் வீட்டுக்கு வந்தால் நன்றாக அடித்து விடலாம்.”

“ஏம்மா? ஏன் அப்படி நடந்து கொண்டான்? அவனுக்கு மூளை சரியாக இல்லையா?”

“ஆண்பிள்ளை இல்லையா. அதான் பெண்களை அழ வைப்பதுதான் அவர்களுக்கு சந்தோஷம்.” சமாதானப்படுத்திக் கொண்டே உள்ளே அழைத்துச் சென்றாள் நிர்மலா.

சாஹிதி சிறு பெண் என்றும், அப்படிப் பட்ட பெண்ணிடம் சுய இரக்கத்தைப் பற்றி உபதேசம் பண்ணக் கூடாது என்றும், அவ்வளவு பெரிய வார்த்தைகளைப் பேசக்கொட்டாது என்றும் நிர்மலாவுக்குத் தெரிதிருக்கவில்லை. நிறைய பேர் வீடுகளில் இதுபோல் நடந்து கொண்டுதான் இருக்கும்.

அன்று இரவு சாஹிதிக்கு தீவிரமாய் ஜுரம் வந்துவிட்டது. உறக்கத்தில் ஒரே புலம்பல். ராஜேஷின் மகன் வந்து பலவந்தமாக பமீலாவைப் பிடுங்கிக் கொண்டு போய் தூக்கில் போடுவது போலவும், தந்தையும், ராஜேஷ் அங்கிளும் தொலைவில் நின்று சிரித்தபடி பார்த்துக் கொண்டிருப்பது போலவும் பயங்கரமான கனவு வந்தது.

அவள் அழுது கொண்டு இருந்த போது தந்தை வீட்டை விட்டு வெளியே தள்ளி விடுகிறார். அவளும் பமீலாவும் நாதியற்றவர்களாய் தெருவில் பிச்சை எடுக்கிறார்கள். தெருவில் பசங்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து பமீலாவைத் தரச் சொல்லி துன்புறுத்துகிறார்கள். தராததால் கல்லால் அடிக்கிறார்கள்.

அந்த சம்பவம், அதைத் தொடர்ந்து வந்த ஜுரம் சாஹிதியின் மனதில் பலமான் முத்திரையைப் பதித்துவிட்டன. அவள் கோபம்

அவளுள் துவேஷதைத் தூண்டவில்லை. பயத்தை ஏற்படுத்தியது. எதுவும் செய்ய முடியாத கோழைத்தனத்தை உண்டாக்கியது.

இந்த இரண்டுமே வாழ்நாள் முழுவதும் அவளை விட்டுப் போகவே இல்லை.

9

"அம்மா! யாரோ வந்திருக்காங்க." சொன்னான் சிம்மாசலம். படித்துக் கொண்டிருந்த புத்தகத்திலிருந்து நிமிர்ந்து பார்த்தாள் நிர்மலா. நேரம் இரவு ஒன்பது மணி அடிக்கவிருந்தது.

"இப்பொழுதா? அய்யா இல்லை என்று சொல்லு."

"சொன்னேன் அம்மா. உங்களிடம் பேச வேண்டும் என்று சொல்கிறார்" என்றான். நிர்மலா சலிப்புடன் எழுந்து வெளியே வந்தாள். சோபாவில் உட்கார்ந்திருந்த அவனை எங்கேயோ பார்த்த நினைவு.

"நான்தான் பரமஹம்சா. என்னைத் தெயரியவில்லையா?" கேட்டான் அவன் சிரித்துக் கொண்டே.

நிர்மலாவுக்கு நினைவு வந்து விட்டது. சந்திரனின் கிளாஸ்மேட். அவனைத் திருமணத்தின் போது பார்த்திருக்கிறாள் அவ்வளவுதான்.

"வணக்கம்." வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டாள் சங்கடத்துடன்.

"எங்கே இவன்? எத்தனை முறை போன் பண்ணினாலும் கிடைக்கிறதே இல்லை. இந்த நேரத்தில் எப்படியும் வீட்டுக்கு

வந்து விடுவான் என்றும், நேராகவே கேட்டு உலுக்கி எடுத்து விடலாம் என்றும் வந்தேன்.”

“இன்னும் வீட்டுக்கு வரவில்லை” என்றால் நிர்மலா சுருக்கமாய்.

அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

“வரும் வரைக்கும் உட்கார்ந்து இருக்கிறேன். நாளைக்குத் திரும்பிப் போய்விடப் போகிறேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?” என்றான் சிரித்துக் கொண்டே.

தொலைவில் எங்கேயோ ஆந்தை ஒன்று விகாரமாய் கத்திக் கொண்டே போயிற்று.

“ஆட்சேபணை எதற்கு? உட்காருங்கள். சாப்பிட்டீங்களா? சாப்பிடறீங்களா?”

“சாப்பாடு ஆகிவிட்டது. ஒரு கப் தேநீர் கொடுத்தால் சந்தோஷப்படுவேன்.”

“அதற்கென்ன வந்தது?” நிர்மலா சிம்மாச்சலதைக் கூப்பிட்டுச் சொன்னாள்.

“உங்களுக்கு ஒரு பெண் குழந்தை இருப்பதாய்க் கேள்விப்பட்டேன். எங்கே?” கேட்டான் அவன்.

“உள்ளே இருக்கிறாள். அழைத்துக் கொண்டு வருகிறேன்.” போனாள் நிர்மலா.

பிரமஹம்சாவைப் பார்த்ததுமே யாருக்குமே மரியாதை ஏற்பட்டுவிடும். அவன் ரொம்ப ஏழை என்றும், கஷ்டப்பட்டுப்

படித்து முன்னுக்கு வந்தவன் என்றும் மாமா சொல்லி கேள்விப் பட்டிருக்கிறாள். அவர்தான் அவன் படிப்பிற்கு உதவியும் செய்து இருக்கிறார். அந்த நன்றி அவனிடம் இன்னும்கூட இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள் நிர்மலா.

பமீலாவைத் தூக்கிக் கொண்டு வந்தாள் சாஹிதி.

“வாம்மா பேபி. உன் பெயர் என்ன?” அருகில் இழுத்துக் கொண்டான் அவன்.

“சாஹிதி. என் சிநேகிதியின் பெயர் பமீலா. வணக்கம் அங்கிள்.” பொம்மையின் இரு கைகளையும் ஒன்று சேர்த்துச் சொன்னாள் சாஹிதி.

‘வெரிகுட்! உனக்காகச் சின்ன பரிசு வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். இந்த அங்கிள் ரொம்ப ஏழை” என்று ஜெபியிலிருந்து சிறிய பக்கெட் ஒன்றை எடுத்துக் கொடுத்தான்.

“இது என்ன அங்கிள்?”

“மினி பியானோ! பட்டனை அழுத்தினால் பாட்டு வரும்.” செய்து காட்டினான்.

“நல்லாயிருக்கு அங்கிள். தாங்க்யூ.. பமீலாவின் பிறந்தநாள் வருகிறது. அன்றைக்கு வாசிக்கிறேன் இதை.”

பிரமஹம்சா அந்தச் சிறுமியைப் பரிவோடு பார்த்தான். அவன் கண்கள் எப்போதும் அன்பைப் பொழிந்து கொண்டிருக்கும்.

“ஆகட்டும். நீ போய்ப் படுத்துக்கொள்.” அனுப்பி வைத்தாள் நிர்மலா. அதற்குள் தேநீர் வந்தது.

“குழந்தைகளைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.” தேநீர் குடித்துக் கொண்டே சொன்னான் அவன்.

“உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். குழந்தைகள் இல்லையா?”

“இருக்காங்க. இரண்டுமே ஆண் குழந்தைகள். ஆனால் அவர்களுடன் சேர்ந்து சந்தோஷமாய் வாழும் அதிர்ஷ்டம் எனக்கு இல்லை” என்றான் அவன் வருத்தம் கலந்த குரலில்

அவனுடைய கண்களில் ஜொலிப்பு குறைவு. எந்த உணர்வையும் வேதாந்த ரீதியில்தான் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அவை.

“ஏன் அப்படி?” வியப்புடன் கேட்டாள் அவள்.

“அது அப்படித்தான். என்னைப் போன்ற வாழ்க்கை பகையாளிக்கும் வேண்டாம். என் மனைவிக்கு எப்போ பார்த்தாலும் நோய் தான். பிறந்த வீட்டிலேயே இருப்பாள்.”

“ஓஹோ! அப்படியா.” வெறு என்ன பேசுவதென்று அவளுக்குப் புரியவில்லை.

“இவன் ஏன் இன்னும் வரவில்லை? எப்போதுமே இப்படித்தானா?” கேட்டான்.

“அவ்வப்பொழுது சீக்கிரமும் வருவார்” என்றாள் நிர்மலா. அவன் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தான். பத்துமணி ஆகிவிட்டதாய் கடியாரத்தின் இசை ஒலித்தது.

“மனித வாழ்க்கை ரொம்ப விநோதமானது மிசெஸ் நிர்மலா! தேவையானது கிடைக்காது. கிடைத்ததை அனுபவிக்க முடியாது.

எட்டாத கணிக்காகத் தவித்துப் போவோம்.” யோசனையிலிருந்து மீண்டவனாய் சொன்னான் பரமஹம்சா.

நிர்மலா பதில் பேசவில்லை. தன் முகத்தில் இருக்கும் உணர்வுகளைப் படித்தறிந்து விடாமல் இருக்கத் தலையைக் குனிந்து கொண்டாள். அப்படி தலையைக் குனிந்த போது அவள் பார்வை அவளை அறியாமலேயே மார்பின் சேலை மீது படிந்தது. அவள் நல்ல தேகவாகு கொண்டவள். சட்டென்று தலைப்பை சரி செய்து கொண்டாள்.

“இவன் இன்னும் தாரிணியை மறக்கவில்லை போலும். உங்களைப் போன்ற உத்தமியைப் பண்ணிக்கொண்டும் தானும் சுகப்படாமல் உங்களுக்கும் சுகம் இல்லாமல் செய்கிறான். வரட்டும், கேட்கிறேன்.”

“வேண்டாம் விடுங்கள். நான்தான் சொல்லிக் கொடுத்தேன் என்று நினைத்துக் கொள்வார். உங்களைப் பற்றிச் சொல்லுங்கள். உங்க மனைவிக்கு என்ன உடம்பு?”

இரக்கத்திற்கு பதில் இரக்கம் காட்டி விட வேண்டும் என்ற துடிப்பில் கேட்டாள்.

“அகம்பாவம் என்ற நோய். நான் ஒன்றும் இல்லாதவன் என்று முன்பே தெரியும். ஆனால மனைவி, குழந்தைகளைப் போஷிக்க வழியில்லாத ஏழை மட்டும் இல்லை. இருப்பதைக் கொண்டு திருப்தியாய் வாழனும் என்பேன் நான். பிறந்தவீட்டு சொத்து முழுவதும் எனக்குத் தானே. அவர்களுடன் சேர்ந்து இருந்து அனுபவிப்போம் என்பாள் அவள். இருவரின் எண்ணங்களும் வெறு வெறு என்று தெரிந்துவிட்டது. என்னுடைய வருமானத்தில் நான் திருப்தியாக வாழ்கிறேன். அவர்களுடைய சொத்தை அனுபவித்துக் கொண்டு அவள் அங்கே

சந்தோஷமாக இருக்கிறாள். பிரச்சினைத் தீர்ந்தது" என்று சிரித்தான்.

'கவலையை மனதிலேயே அடக்கி வைத்துக் கொண்டு வெளியே நிம்மதியாக சிரிப்பது தெய்வீகம் ஆகும்' நினைத்துக் கொண்டாள் நிர்மலா. அவன் மீது இரக்கம் ஏற்பட்டது. தன்னைப் போலவே வேதனையில் இருக்கிறான் என்பதால் நெருங்கியவனாய் தோன்றியது. பரமஹம்சாவின் முகத்தில் ஒருவிதமான் தேஜஸ் தென்பட்டது. வேதனையை உள்ளே அடக்கி வைத்திருப்பதால் ஏற்பட்ட வேதாந்தமாய் இருக்கலாம்.

வெளியே கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. சிம்மாசலம் ஓடினான்.

"உங்க நண்பர் வந்துவிட்டார். நான் போகிறேன்" எழுந்து படுக்கை அறைக்குள் போய்விட்டாள் நிர்மலா.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு வந்த நண்பனை அன்போடு அணைத்துக்கொண்டு "வாடா.. உள்ளே போய் உட்கார்ந்து கொள்வோம்" என்று தன்னுடைய படுக்கையறைக்கு அழைத்துச் சென்றாள் சந்திரன்.

பிரமஹம்சாவுக்கு அந்த வீட்டின் நிலைமை நன்றாகப் புரிந்துவிட்டது.

****

சாஹிதி காரை விட்டிறங்கி தலை குனிதவாறு பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்தால். பத்து வருடங்களாக அந்தப் பள்ளியில் படித்து வந்தாலும் ஒவ்வொரு நாளும் பயந்துகொண்டேதான் அடியெடுத்து வைப்பாள். கும்பல் கும்பலாய் உட்கார்ந்து கொண்டு உற்சாகமாய் கும்மாளம் அடித்துக் கொண்டிருக்கும்

மாணவிகளைப் பார்த்தால் அவளுக்குப் பயம். அக்கம் பக்கம் பார்க்காமல் நேராகப் போய் வகுப்பில் தன் இடத்தில் உட்கார்ந்துவிட்டால் பிறகு நகரவே மாட்டாள்.

வயதுடன் அறிவும் வளர்ந்த பிறகு பல்வேறுபட்ட மனிதர்களின் குயுக்திகளை கண்டு வெறுப்படைந்து, யாருடனும் கலந்து பழக முடியாமல் தனிமையை விரும்புவார்கள் சிலர். பத்து பேருடன் ஒன்றாகப் பிறந்து அந்த சச்சரவுகளைத் தாங்க முடியாமல் தனிமையை இஷ்டப்படுபவர்கள் சிலர். குடும்பத்தில் சரியான அன்பும் ஆதரவும் கிடைக்க வேண்டிய சமயத்தில் கிடைக்காமல் அவர்களாகவே தனிமைக்குப் பழக்கப்பட்டுப் போய், வயது கூடிய போதிலும் நாலு பேருடன் கலந்து பழக முடியாமல் வருந்துபவர்கள் சிலர்.

சாஹிதி மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவள். பதினாறு வயதிலேயே பற்று இல்லாமல் போவது பெரிய நோய்.

சாஹிதி வகுப்பறையில் உட்கார்ந்து இருந்த அதே சமயத்தில் கொஞ்சம் தூரத்தில் இருந்த ஸ்டாஃப் ரூமில் அவளைப் பற்றித்தான் உரையாடல் நடந்து கொண்டிருந்தது. பரீட்சைப் பேப்பர்களைத் திருத்திக் கொண்டிருந்த தமிழ் டீச்சர் சொன்னாள்.

“இந்தப் பெண்ணைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். பரீட்சை பேப்பர்களை நன்றாக எழுதுவாள். ஆனால் வகுப்பில் மட்டும் வாயை திறக்கவே மாட்டாள். உற்சாகமாய் தென்பட மாட்டாள். ஓரல் பரீட்சையில் மிகக் குறைந்த மதிப்பெண்கள் வாங்குவாள்.”

“அப்படி எழுதுவதற்குக் கூட மூட் இருக்கணும் போலிருக்கு. சில சமயம் நன்றாக எழுதுவாள். வெறு சில சமயம் வேற்றுத்தாளைக் கொடுத்துவிட்டுப் போய்விடுவாள். வகுப்பில் கணக்கைப் போடச் சொன்னாள் எல்லோரும் முதலில் பண்ணிக் காட்ட வேண்டும்

என்று துடித்தால் இவள் மட்டும் எல்லோருக்கும் முன்னால் பண்ணிவிட்டாலும் கூட சொல்ல மாட்டாள். காட்டவும் மாட்டாள். ஜடத்தைப் போல் நடந்து கொள்வாள்" என்றாள் கணக்கு டீச்சர்.

'நான் அந்தப் பெண்ணைக் கவனித்து இருக்கிறேன். ரொம்பவும் தாழ்வு மனப்பான்மை இருக்கு. ஒருக்கால் வகுப்பில் எல்லோரையும் விட ஏழைப் பெண் என்பதாலோ என்னவோ?" என்றாள் இங்கிலீஷ் டீச்சர். அவள் நிறைய சைக்காலஜி புத்தகங்களைப் படித்திருப்பதாய் சொல்லிகொள்வாள்.

"அவர்கள் ஏழை ஒன்றும் இல்லை. சாஹிதி ஸ்கூலுக்கு காரில்தான் வருகிறாள். அவர்கள் வீடு பெரிய அரண்மனையைப் போல் இருக்கும்" என்றாள் கணக்கு டீச்சர்.

"அப்படிச் சொல்லுங்க. ரொம்பப் பணக்கார்களுக்கு வரும் சிக்கல் இதுதான். பெற்றோருக்கு குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள நேரமே இருக்காது. ஆயாக்களிடம் விட்டு விடுவார்கள். கிளப்புகளைச் சுற்றி அலைந்து கொண்டிருக்கும் தாய் தந்தைக்கு இந்த விஷயம் தெரியவே தெரியாது." தன் சைக்காலஜி அறிவால் தவறை உடனே பூசி மேழுகிவிட்டாள்.

"உங்கள் கருத்தை என்னால் ஏற்றிக்கொள்ள முடியாது. இந்தக் காலத்தில் பணக்காரர்களின் போக்குகூட மாறி வருகிறது. தம் குழந்தைகள் நகரத்திலேயே சிறந்த பள்ளியில் சேர்ந்து படிக்கணும். எல்லாவற்றிலும் முதலாவதாய் வரணும். விளையாட்டு, பாட்டு, கலை எப்படி எல்லாவற்றிலும் நல்ல பெயர் எடுக்கணும் என்று நினைக்கிறார்கள். அதுக்காக ஆயிரக்கணக்கில் செலவு செய்கிறார்கள். இனி சாஹிதி விஷயத்திற்கு வந்தால் அவர்கள் இருக்கும் தெருவில் தான் எங்கள் வீடும் இருக்கு. அவளுடைய அம்மா வீட்டை விட்டு வெளியே

வரவே மாட்டாள். மாலை வேளையில் மகளுடன் தோட்டத்திலேயே உட்கார்ந்து இருப்பாள். அப்பாவைப் பற்றிக்கூட நான் தவறாய் எதுவும் கேள்விப்பட்டதில்லை" என்றாள் இன்னொரு டீச்சர்.

இவர்களின் உரையாடலை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள் சயின்ஸ் டீச்சர் கோமளா. அவளுக்கு சாஹிதியிடம் ஏதோ தெரியாத அபிமானம்.

மணி அடித்ததால் அவர்கள் உரையாடல் நின்றுவிட்டது. ஆனால் கோமளாவின் மனதை மட்டும் அந்த யோசனைகளை நீங்கவே இல்லை. அவள் சாஹிதியிடம் பேசுவதற்கு தீர்மானித்துக் கொண்டாள்.

****

சாஹிதி கண்களைத் திறந்தாள். எங்கும் இருட்டு. ரேடியம் டயல் கடியாரம் மணி ஒன்றைத் தாண்டிவிட்டதை அறிவித்தது. அவள் கண்கள் யாருக்காவோ தேடின. ஊஹூம், யாருமே இல்லை.

சுமார் பத்து ஆண்டுகளாய் அவளுக்கு இதுபோல் தூக்கத்திலிருந்து திடீரென்று விழிப்பு ஏற்படுவது பழக்கம் ஆகியிருந்தது. தந்தைக்காக தேடுவாள். அன்று இரவு தந்தை தன் அறைக்கு வந்தது, அன்பாய் பேசியது மறக்க முடியாத அனுபவம்.

'ஏன் டாடீ! எல்லோருடைய அப்பாக்களைப் போல் வீட்டில் இருக்க மாட்டேன் என்கிறாய்? என்னை அருகில் இழுத்து வைத்துக் கொண்டு பேசுவதே இல்லையே? அம்மாவை நன்றாக நடத்துவது இல்லையே? ஏன்?' என்று கேட்க வேண்டுபோல் இருந்தது.

அவர் மட்டும் அப்படிப்பட்ட வாய்ப்பை தந்ததே இல்லை. மம்மியுடன் தோட்டத்தில் உட்கார்ந்து இருக்கும் போதோ, டீச்சரிடம் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதோ வருவார். விசாரிப்பார். எது வேண்டுமானாலும் உடனே வாங்கி அனுப்பி வைப்பார். தானே சுயமாக கையில் கொடுக்க மாட்டார்.

சாஹிதி படுக்கையை விட்டு எழுந்து கொண்டாள். தந்தையின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. லேசாக பேச்சுக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது. கதவுக்கு அருகில் போய் எட்டிப் பார்த்தாள். உள்ளே அம்மாவும் கூட இருந்தாள்.

“போதும் நிறுத்திக்கொள்ளுங்கள். ராத்திரி முழுவதும் இப்படியே குடித்துக் கொண்டு இருக்கப் போறீங்களா? டாக்டர் கூட சொல்லி இருக்கிறார். ஏன் இப்படி உடம்பைப் பாழாக்கிக் கொள்றீங்க?” என்றாள் நிர்மலா.

“போனால் போகட்டும். என்னால் இந்த டெண்ஷனைத் தாங்க முடியவில்லை. குடியில் மறப்போம் என்றால் உன்னுடைய ரகளை வேறு. போய் படுத்துக்கொள். என்னை தொந்தரவு செய்யாதே.” பாட்டிலிலிருந்து மேலும் கொஞ்சம் ஊற்றிக்கொண்டான். அவனுக்கு வியாபாரத்தில் ஐம்பது லட்சம் வரை நஷ்டம் வந்துவிட்டது. அந்த விஷயத்தை மனைவியிடம் சொல்லவில்லை.

“உங்களை குடிக்க விட மாட்டேன்.” போய் டம்ளரைப் பிடுங்க முயன்றாள். வேகமாய் அவளைப் பிடித்துத் தள்ளினான் சந்திரன்.

“நான் குடித்தால் என் உடம்பு பாழாகி விடுமே என்று பயமா? அல்லது வியாபாரத்தில் நஷ்டம் வர வழைக்கிறேன் என்ற வருத்தமா? பயப்படாதே சொத்து நிறைய இருக்கு. பத்து லட்சம் இன்ஷூரென்ஸ் வரும்.”

தாயின் விசும்பல் சத்தம் கேட்டது. நிசப்தமாய் சாஹிதி தன் அறைக்கு வந்துவிட்டாள் ஏனோ தெரியவில்லை, அவளுக்கு டீச்சரின் நினைவு வந்தது.

மறுநாள் காலையில் பள்ளிக்குப் புறப்படுவதற்கு முன்னால் ரோஜா தோட்டத்திற்கு அருகில் நின்றாள். வித விதமான நிறங்களில் பூக்கள் இதழ் விரித்திருந்தன. ஒன்றைப் பறித்துக் கொண்டு போய் டீச்சரிடம் தந்தால்? ஊஹூம்.. அவ்வளவு தைரியம் இல்லை.

போய் காரில் உட்கார்ந்து கொண்டாள். துக்கம் பொங்கிக் கொண்டு வெளியே வந்தது. தன்னைவிட சிறியவர்கள் சுவாதீனமாய் நாலுபேருடன் சேர்ந்து டீச்சரை விஷ் பண்ணிவிட்டு வரும் போது தனக்கு மட்டும் ஏன் இந்த பயம் என்று நினைத்துக் கொண்டாள்.

'diffendability' என்ற விஷ விருட்சம் தன்னுள் முளைவிட்டு மெதுவாய் துளிர்த்துப் பரவிக் கொண்டே இருக்கிறது என்று அவளுக்குத் தெரியாது. எந்த சைக்காலஜிஸ்ட் அவளைப் பார்த்ததும் உடனே 'I am not o.k. You are o.k' என்ற ;நிலையில் அவள் இருப்பதை சொல்லி விடுவார்கள்.

"விஜயா.. முப்பத்தைந்து.. வெரி புவர். வகுப்பில் பாடத்தைக் கவனிக்காமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால் மார்க்ஸ் இப்படித்தான் வரும். விமலா... நாற்பத்தி இரண்டு... பாஸ் மார்க்ஸ் வந்தால் போதாது. இன்னும் கஷ்டப்படணும். வந்தனா.. அறுபத்தி ஒன்று, பரவாயில்லை. ஆனால் இன்னும் நல்ல மார்க்ஸ் வாங்கணும்."

கோமளா டீச்சர் ஒவ்வொருத்தரையும் பெயர் சொல்லி கூப்பிட்டு மதிப்பெண்களை சொல்லிவிட்டு பேப்பரை தந்து

கொண்டிருந்தாள். சாஹிதியின் இதயம் படபடத்துக் கொண்டிருந்தது. தனியாய் போய் பேப்பரை வாங்கணும். ஒருக்கால் பெயில் ஆகி இருந்தால்? டீச்சர் எல்லோருக்கும் முன்னால் திட்டிவிட்டால் என்ன செய்வது? அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. இதயத்தின் துடிப்பு காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

“சாஹிதி!” டீச்சரின் குரல் கேட்டதுமே தன்னை அறியாமல் எழுந்து நின்றாள். முகத்தில் இருந்த ரத்தமெல்லாம் வற்றிவிட்டது போல் வெளிறிவிட்டது.

“எண்பத்தொன்பது முதல் மதிப்பெண்!” வகுப்பில் எல்லோரும் கை தட்டினார்கள். நடுங்கியவாறே பேப்பரை வாங்கிக் கொண்டாள். உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது.

“வெரிகுட்! கீப் இட் அப்!” சிரித்துக்கொண்டே மேலும் ஏதோ சொல்லப் போன கோமளா நிறுத்திக் கொண்டாள். “என்ன ஆச்சு சாஹிதி? உடம்பு சரியாய் இல்லையா?” தோளில் கையைப் பதித்துப் பரிவோடு கேட்டாள்.

“ஒன்றும் இல்லை டீச்சர். நன்றாகத்தான் இருக்கிறேன்.” லேசாக நடுங்கினாள்.

‘ரொம்ப நன்றாக எழுதி இருக்கிறாய். கையெழுத்து கூட அழகாய் இருக்கு. போ.. போய் இடத்தில் உட்காரு.”

சீட்டில் உட்கார்ந்து கொண்ட பிறகுகூட சாஹிதியின் கைகள் ரொம்ப நேரம் நடுங்கிக் கொண்டே இருந்தன. டீச்சர் பாடத்தைத் தொடங்கினாள். அதொன்றும் சாஹிதியின் செவிகளில் விழவே இல்லை. டீச்சர் அவளைப் பாராட்டினாள். முக்கியமாய் அவள் டீச்சரின் கவனைதைக் கவர்ந்து விட்டாள். அதுபோதும்!

“சாஹிதி! எல்லோரிடமிருந்தும் ஹோம்வர்க் நோட்டு புத்தகங்ககளை கலெக்ட் பண்ணு.” டீச்சர் சொன்னதுமே எழுந்து நின்றாள். கிளாஸ் லீடருடையது அந்த வேலை. அவள் இன்று வரவில்லை.

ஒன்பதாம் வகுப்பிற்கு வரும் வரையிலும் பண்ணியிராத அந்த வேலையை அன்றைக்குச் செய்தாள்.

பீரியட் முடிந்து விட்டதாய் மணி அடித்தார்கள். “என்னோடு ஸ்டாஃப் ரூம் வரைக்கும் எடுத்துக்கொண்டு வாம்மா.” சொன்னாள் கோமளா.

புத்தகங்களை ஏந்திக் கொண்டு ஆவலுடன் நடந்து கொண்டிருக்கும் போது ஏதோ இனம் புரியாத பயம், உத்வேகம். ஸ்டாஃப் ரூமில் வேறு யாரும் இல்லாதது அதிர்ஷ்டம்தான். புத்தகங்ககளைப் பெற்றுக் கொண்டு தாங்க்ஸ் சொன்னாள் டீச்சர். “பாரும்மா. அரை பரீட்சை வரப் போகிறது. முதல் இடம் வரணும் என்று எல்லோருமே போட்டிப் போட்டுக் கொண்டு படிப்பார்கள். உனக்குப் போட்டி அதிகமாய் இருக்கும். இப்படியே கஷ்டப்பட்டுப் படி. திரும்பவும் முதல் இடம் உனக்குத்தான் கிடைக்கணும். ஓ.கே.?”

“எஸ் டீச்சர்! முயற்சி செய்கிறேன்.” அரும்பாடுபட்டு எப்படியோ வாயைத் திறந்து சொன்னாள்.

“சாஹிதி!” அந்த அழைப்பில்தான் எத்தனை கனிவு! “உங்க வீட்டில் வித விதமான நிறங்களில் ரோஜாச் செடிகள் இருக்கிறதாமே. எனக்குக் கொஞ்சம் கட்டிங்க்ஸ் கொண்டு வந்து தருவாயா?”

“கண்டிப்பாய் டீச்சர்! நாளைக்கே கொண்டு வருகிறேன்.” உற்சாகமாய் பதில் சொன்னாள்.

அன்று முழுவதும் அவளை அறியாமலேயே இதழில் குறுநகை படர்ந்து கொண்டே இருந்தது. வீட்டிற்குப் போனதுமே பமீலாவுக்கு அழுத்தமாய் முத்தம் கொடுத்தாள். பிறகு தன் புத்தகங்களை எடுத்து சீரியசாய் படிக்கத் தொடங்கினாள்.

டீச்சரின் பிரபாவம் பிள்ளைகள் மீது எவ்வளவு தூரம் இருக்கும் என்பதற்கு அதுவே ஒரு உதாரணம். அரைப் பரீட்சையில் மட்டுமே அல்ல, முழுப் பரீட்சையிலும் கூட சாஹிதி முதல் இடம் பெற்றாள். கோமளா டீச்சர் தனியாய் அழைத்து வாழ்த்துக்கள் சொன்ன போது பூரித்துப் போய்விட்டாள்.

அதற்குப் பிறகு சாஹிதி படிப்பில் முதல் வகுப்பிலிருந்து கீழே இறங்கவே இல்லை.

10

நிர்மலா எல்லா வார, மாதப் பத்திரிகைகளை வாங்கி வரச் செய்வாள். அதுதான் அவளுடைய பொழுதுபோக்கு. மதுரையிலிருந்து வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தவள் ஓரிடத்தில் அப்படியே நின்று விட்டாள். அதில் பரமஹம்சாவின் போட்டோ இருந்தது.

பரமஹம்சா வருடத்திற்கு ஒருமுறையோ இரு முறையோ வருவான். வரும் பொழுதெல்லாம் அவளுக்கு தைரியமளிக்கும் வார்த்தைகளைச் சொல்லிவிட்டுப் போவான். சந்திரனின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்வான். தம்பதிகளுக்கு இடையே ஒற்றுமை ஏற்படுவதற்காகப் பாடுபடுவான்.

ஆனால் இந்த வருடம் முழுவதும் வரவே இல்லை. அவள் பரபரப்புடன் கட்டுரையைப் படித்தாள். மதுரையில் ஆறு மாதங்களுக்கு முன்னால் நிறுவப்பட்டிருந்த "பக்த சேவா சமாஜம்" பற்றிய கட்டுரை அது.

சுமார் ஐந்து பேருடன் தொடங்கபட்ட இந்த சமாஜம், இரண்டு மாதங்களுக்குள்ளேயே ஐநூறு பேர் அங்கத்தினருடன் வளர்ச்சி அடைந்துவிட்டது. தினந்தோறும் காலையிலும் மாலையிலும், பண்டிகை நாட்களில் நாள் முழுவதும் அங்கே பிரார்த்தனை நடக்கும். குடும்பப் பொறுப்புகளில் மூழ்கிவிட்ட இன்றைய சமுதாயத்தில் அமைதி, தூய்மை வீட்டில் கிடைக்காததால் தினமும் கொஞ்ச நேரமாவது பக்தியாய் கடவுள் தியானத்தில் கழிப்பது அசாத்தியமாகிவிட்டது. கோவிலுக்குப் போனாலும் அங்கேயும் அமைதி கிடைப்பதில்லை.

இந்த பக்த சேவா சமாஜத்தில் எந்த சந்தடியும், பரபரப்பும் இருக்காது. எந்த சமயத்தில் வேண்டுமானாலும் போகலாம். நிசப்தமாய் கடவுளை தியானம் பண்ணலாம். அதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள்.

பக்தியானது மனதை எப்போதும் சுறுசுறுப்பாய் வைத்திருக்கும். பிரார்த்தனை டென்ஷனை போக்கடித்து மனதை தூயமையாய் வைத்திருக்கும். அமைதியான சூழ்நிலையில் எந்த தடங்கலும் இன்றி மனிதன் கடவுளை தியானம் செய்ய முடிந்தால், அது கொஞ்ச நேரமாக இருந்தாலும் சரி, வாழ்க்கையில் மாறுபாட்டை ஏற்படுத்த வல்லது.

புதிய சமுதாயத்தை நிறுவுவதற்கு, மறைந்து கொண்டிருக்கும் பழைய கலாச்சாரங்களை திரும்பவும் நிலை நாட்டுவதற்கு இந்த சமாஜம் செய்து வரும் சேவை மகத்தானது. இப்படிப்பட்ட எண்ணம் வந்ததே பெரிய விஷயம். அதை நடைமுறையில்

கொண்டுவந்த திரு பரமஹம்சா பாராட்டிற்கு உரியவர். மக்களுக்கு இடையில் பக்தி உணர்வை வளர்ப்பதற்கும், அந்த உணர்வு இருப்பவர்களுக்கு தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதுதான் தன் வாழ்க்கையின் லட்சியம் என்று அவர் நம் நிருபரிடம் தெரிவித்தார்.

நிர்மலாவுக்கு பரமஹம்சாவிடம் பக்தி ஏற்பட்டது. ஒருமுறை வந்து விட்டுப் போனால் நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

அன்று மாலையே வந்தான் அவன்.

"வாங்க, உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். பத்திரிகையில் பார்த்தேன். ரொம்ப பெரிய ஆளாயிட்டீங்க. நாங்க நினைவில் இருப்போமா என்று சந்தேகம் வந்தது" என்றாள் வரவேற்றுக் கொண்டே. அவன் வருகை அவளுக்கு சந்தோஷத்தை, நிம்மதியை அளித்து.

அவன் கண்களில், முகத்திலும் கூட மாற்றம் தெரிந்தது. புதுவிதமான ஒளியுடன் அவன் கண்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன.

"நான் ரொம்ப சாதாரண மனிதன். உங்களைப் போன்ற உத்தமர்களை எப்படி மறந்துபோவேன்? நீங்க என்னைப் பற்றி யோசித்துக் கொண்டு இருக்கீங்க என்று ஏனோ எனக்குத் தோன்றியது. ராத்திரி பூஜையில் இருந்த போது உங்கள் அழைப்பு கேட்டது. வந்து விட்டேன்" என்றான் அவன்.

நிர்மலா அவனை பக்தியோடும், ஆர்வத்தோடும் பார்த்தாள். அவன் ஒரு அபூர்வ மனிதனாய்த் தோன்றினான்.

“சந்திரன் எப்படி இருக்கிறான்? உடம்பு சரியாக இல்லையோ?”

“ஆமாம்.” கவலையுடன் சொன்னாள். “நீங்களாவது கொஞ்சம் சொல்லுங்கள். குடிப்பது அதிகமாகிவிட்டது. என் பேச்சை கேட்பதே இல்லை.”

“என் பேச்சை அவன் கேட்க மாட்டான். தினமும் ஒரு மணி நேரம் என்னுடன் பிரார்த்தனையில் உட்கார்ந்து கொண்டால் போதும். எந்த மருந்தும் இல்லாமல் அவன் நோய் குணமாகிவிடும். என் பேச்சைப் பொருட்படுத்த மாட்டான். என்னால் செய்யக் கூடியது எதுவும் இல்லை.”

“அதற்கு ஏதாவது ஒரு வழி செய்யுங்கள். என் பேச்சை கேட்கமாட்டார். பூஜை புனஸ்காரம் பிடிக்காது. கேலி செய்வார்.”

“சிறுவயதிலிருந்தே அவன் அப்படித்தான். அவனை இப்பொழுது மாற்றுவது கடினம். சரி, ஏதாவது வழியை யோசித்துப் பார்க்கிறேன்” என்றான். அவன் அதுபோல் வாக்களிததுமே அவள் மனம் இலேசாகிவிட்டது. சந்திரன் வீடு திரும்பும் வரையில் காத்திருக்காமல் வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

சந்திரனிடம் பரமஹம்சா வந்ததைச் சொன்னாள் அவள். “அவன் ஒரு ஃபிராட்.. நம்பாதே” என்று எடுத்தெறிந்துப் பேசினான் சந்திரன்.

***

கோடை லீவு முடிந்துவிட்டது. பள்ளிக்கூடம் திறக்கும் நாள் வந்தது. பள்ளிக்குப் புறப்பட்டாள் சாஹிதி. தோட்டத்தில் பூத்த மல்லிகை மலர்களை பறித்து வந்து மாலையாய்த் தொடுத்தாள்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு டீச்சரைப் பார்க்கப் போகிறோம் என்ற உற்சாகம் தொகை விரித்தாட காரில் ஏறிக்கொண்டாள்.

ஸ்கூலுக்குள் அடியெடுத்து வைத்ததுமே அவள் கண்கள் டீச்சரைத் தேடின. எங்கேயும் தென்படவில்லை. பிரார்த்தனை முடிந்த பிறகு வகுப்புக்குள் நுழையும்போது யாரோ சொல்லிக் கொண்டிருந்தது கேட்டது. "கோமளா டீச்சர் ரிஸைன் பண்ணிவிட்டுப் போய்விட்டாளாம்" என்று. கையிலிருந்த ரோஜா மலர் நசுங்கி கீழே விழுந்தது.

டீச்சர் இனி வரமாட்டாள். தென்படமாட்டாள் என்ற உண்மையை உடனே ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அன்று முழுவதும் எதையோ இழந்தாற் போலவே உடகார்ந்து இருந்தாள்.

டீச்சர் உடுத்துக் கொள்ளும் புடவைகளைக் கவனித்துவிட்டு அவளுக்கு ரோஜா நிறம் மிகவும் பிடிக்கும் என்று தெரிந்துகொண்டு அந்த நிறத்திலேயே டிரஸ் வாங்கிக்கொண்டாள். அவள் கையில் இருந்த சிறிய வாட்ச் போலவே தானும் வாங்கி கட்டிக் கொண்டாள். டீச்சரின் செருப்பைப் போலவே தானும் வாங்கிக் கொள்ள ஆசைப்பட்டு ஒரு நாள் முழுவதும் கடைத்தெருவில் அலைந்து திரிந்து வாங்கிவிட்டாள். அவையெல்லாம் இப்போது அவளைப் பார்த்துப் பழித்துக் கொண்டிருதன. ஒருநாள் லீவு வந்து விட்டால் போதும். டீச்சரைப் பார்க்காமல் எப்படி உயிர் வாழ்வது என்று நினைத்துக் கொள்வாள். இனி என்றுமே டீச்சரைப் பார்க்க முடியாது என்று நினைத்ததுமே துக்கம் பொங்கி வந்தது.

டிபன் கூட சாப்பிடாமல் போய் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டாள். அவளுக்குத் திரும்பத் திரும்ப அன்று ராஜேஷின் மகன் பமீலாவைப் பிடுங்கித் தூக்கியெறிந்த காட்சி நினைவுக்கு வந்து கொண்டிருந்தது. அவளுக்கு எது மிகவும் விருப்பமானதோ அதையே தன்னிடமிருந்து பிரித்துவிட எல்லாவிதத்திலும் முயற்சி

நடந்து வருகிறது என்ற உணர்வுதான் அவளை மிகவும் வருத்தப்படச் செய்தது.

அதற்குள் ஏதோ யோசனை வந்தாற்போல் ரோஜாச் செடிகள் இருந்த இடத்தை நோக்கிப் போனாள். ஐந்து நிமிடங்கள் கழித்து "சாஹிதி! இன்னும் டிபன் கூட சாப்பிடாமல் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறாயே?" என்று மகளைத் தேடிக்கொண்டு வந்த நிர்மலா சாஹிதியின் நடவடிக்கையைப் பார்த்து பதற்றமடைந்தாள்.

"என்ன இது? பூக்களை எல்லாம் ஏன் இப்படி நாசம் பண்ணுகிறாய்? பைத்தியம் பிடித்துவிட்டதா உனக்கு?" என்று மகளைப் பிடித்து இழுத்தாள்.

"வேண்டாம்மா. நம் வீட்டில் இனி ரோஜாச் செடிகளே வேண்டாம். தோட்டக்காரனிடம் எல்லாவற்றையும் பிடுங்கி எறிந்து விடச் சொல்லு. இல்லாவிட்டால் நானே பிடுங்கிப் போட்டு விடுகிறேன்."

நிர்மலா புரியாமல் விழித்தாள். "ஆகட்டும். அப்படியே செய்யச் சொல்கிறேன். நாளைக்கே சொல்லி பிடுங்கி எறிந்து விடச் சொல்கிறேன். நீ உள்ளே வா" என்று கையைப் பிடித்தாள். அவள் உடம்பு அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

ஒரு வாரம் வரைக்கும் அவளுக்கு ஜுரம் குறையவே இல்லை. பைத்தியம் பிடித்தது போல் உளறிக் கொண்டிருந்தாள். டாக்டர் கொடுத்த மருந்துகள் வேலை செய்தாற்போல் தெரியவில்லை. நிர்மலாவுக்கு பரமஹம்சா தந்துவிட்டுப் போன வீபூதி நினைவுக்கு வந்தது. அதை கொண்டு வந்து நெற்றியில் இட்டாள். பாலில் கலந்து குடிக்கச் செய்தாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு

ஜுரம் குறையத் தொடங்கியது. நிர்மலா மனதிலேயே பரமஹம்சாவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

‘மம்மி! நான் இனி ஸ்கூலுக்குப் போகப் போவதில்லை” என்றாள் சாஹிதி ஜுரம் குறைந்த இரண்டாவது நாள்.

‘சரி, உன் விருப்பம் போல் செய்” என்றாள் நிர்மலா. ‘நீ ஜுரமாய் படுத்துக் கொண்டிருந்த போது உன் கிளாஸ்மேட் ஒரு பெண் வந்தாள். உனக்கு ஸ்கூல் அட்ரெசுக்குக் கடிதம் வந்ததாய்ச் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனாள். இரு, கொண்டு வருகிறேன்.”

கடிதத்தின் மீது முத்து முத்தாய் இருந்த எழுத்துக்களைப் பார்த்ததுமே சாஹிதியின் முகம் மலர்ந்து விட்டது. அது கோமளா டீச்சரின் கையெழுத்து. பரபார்ப்புடன் பிரித்துப் படித்தாள்.

சாஹிதி,

நலமாய் இருப்பாய் என்று நம்புகிறேன். வருத்தப் படுகிறாயா? சொல்லாமல் போக வேண்டி வந்து விட்டது. சாரி சாஹிதி. வயது ஏற ஏற அறிமுகமாகும் நபர்களும் அதிகரிக்கிறார்கள். அனுபவங்கள் பெருகுகின்றன. எந்த பந்தமும் இல்லாமலேயே இணை பிரியாதவர்கள் ஆகி விடுகிறார்கள் சிலர். பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதும், பிரியும் போது வருத்தப் படுவதும் மனித சுபாவம். ஆனால் வாழ்க்கையில் வேண்டியது வெறும் அன்பும், பிரியமும் மட்டுமே இல்லை. எண்ணங்கள் தான் முக்கியம். மனிதர்கள் தொலைவிற்குப் போய்விட்டதாலேயே அன்பு போய் விடாது. ஐ லைக் யூ. நீ எங்கே இருந்தாலும் உன்னை நான் மறக்கமாட்டேன்.

எனக்குத் திருமணம் ஆகிவிட்டது. நல்ல செய்திதான் என்றாலும் அது உனக்கு வருத்தத்தை ஏற்படுத்தும் என்றுதான்

சொல்லவில்லை. ராஜினாமா கடிதத்தை அனுப்பும் போது உன்னைப் பற்றித்தான் யோசித்தேன் என்று சொன்னால் நம்புவாயா? நான் பம்பாயில் செட்டில் ஆகிவிட்டேன். அதனால்தான் இந்தக் கடிதம்.

உன்னை விரும்பும் ஒருத்தியாய், டீச்சராய் நான் சொல்லக்கூடியது ஒன்றுதான். நீ நன்றாகப் படிக்க வேண்டும். உன் முதல் இடத்தை விட்டு விடக் கூடாது. இது என் விருப்பம். அதுதான் நீ எனக்குத் தரும் பரிசு. நிலை நாட்டுவாய் என்று நம்புகிறேன். உன் முன்னேற்றத்தை கடிதம் மூலமாய் தெரியப்படுத்தினால் சந்தோஷப்படுவேன்.

ஆசிகளுடன் கோமளா

கடிதத்தை படித்து முடித்த பிறகு சாஹிதிக்கு துக்கம் வந்தது. அது ஆனந்தத்தோடு கூடிய துக்கம். டீச்சர் அவளை மறந்து போகவில்லை.

அவளை நினைவு வைத்துக்கொண்டு தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியிருக்கிறாள். அது போதும்.

‘மம்மி! நான் நாளை முதல் ஸ்கூலுக்குப் போகிறேன்.” பெரிதாக கத்தியபடி சொன்னாள்.

டீச்சருக்கு உடனே கடிதம் எழுத உட்கார்ந்து கொண்டாள். மனதிலேயே பக்கம் பக்கமாய் எழுதினாள். பிடிக்கவில்லை. தன் அன்பை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை. எதிரே இருந்த வெள்ளைக் காகிதம் பழிப்பது போல் இருந்தது.

ஊசியை எடுத்து விரலில் அழுத்தமாய் குத்திக் கொண்டாள். சொட்டுச் சொட்டாய் துளிர்த்த இரத்தத்தால் “ஐ லவ் யூ டீச்சர்” என்று எழுதி போஸ்ட் பண்ணினாள்.

சுய இரக்கத்திற்கு அது உச்சநிலை.

டீச்சர் என்ற வார்த்தை மிக உயர்ந்த அர்த்தத்தை குறிக்கிறது. டீச்சருக்குத் தெரியாதது எதுவும் இல்லை என்ற எண்ணம் நிறைய குழந்தைகளிடம் இருக்கும். வாஸ்தவத்தில் அது உண்மைக்குப் புறம்பான விஷயம்.

கொமளவின் வயது இருபத்தியாறு. அவளுக்கே வாழ்க்கையைப் பற்றி சரியாக தெரியாது. டீச்சராக வேலைப் பார்த்து வந்தவள், திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தப் போய்விட்டாள். டீச்சர் என்ற முறையில் தன்னுடைய மாணவிக்கு நன்றாகப் படி என்று அறிவுரை வழங்கி கடிதம் எழுதினாள். அவளுடைய கருத்தின்படி கல்விதான் நிறைய பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காட்ட வல்லது. இருக்கலாம். ஆனால் அது ஒன்று மட்டுமே போதுமானதாய் இருந்தால் இவ்வளவு மனிதர்களும் இத்தனை பிரச்னைகளால் வருந்த வேண்டியிருக்காது. வேறு ஏதோ ஒன்று வேண்டும். அந்த 'வேறேதோ' என்னவென்று சாஹிதிக்கு எந்த டீச்சரும் சொல்லித் தரவில்லை. வாழ்க்கைதான் சொல்லிக் கொடுத்தது. அதுவும் கொஞ்சம் கால தாமதமாக.

11

பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தாள் சாஹிதி. இனி இரண்டு மாதம் எங்கேயும் போகாமல் வீட்டிலேயே இருக்கலாம் என்று நினைக்கும் போதே திருப்தியாய் இருந்தது.

தாய் பூஜையில் இருந்தாள். அதேதோ நாற்பது நாள் நோன்பு. தினமும் உபவாசம். இரவில் மட்டும் பழமும் பாலும் அருந்தி வந்தாள். அந்த நோன்பு யார் பண்ணச் சொன்னார்கள் என்று சாஹிதிக்குத் தெரியாது. ஆனால் தாயை அந்த நிலையில் பார்க்கும் போதெல்லாம் தந்தையின் மீது அளவு கடந்த கோபம் வந்தது.

சாஹிதி என்ன பண்ணுவதென்று புரியாமல் தோட்டத்தை நோக்கி நடந்தாள். புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு

ஊஞ்சலில் உட்கார்ந்தாள். ஆனால் அதைப் படிக்கத் தோன்றவில்லை. தந்தைப் பற்றிய யோசனையில் மூழ்கி இருந்தாள். அதற்குள் காண்டெஸ்ஸா கார் கேட் வழியாய் உள்ளே வருவது தென்பட்டது. சந்திரன் எப்போதும் போல் ஹாரன் அடிக்கவில்லை. காரை விட்டு இறங்கியவன் சாஹிதி பார்த்துக் கொண்டிருந்த போதே படிகளில் ஏற்ப போனவன் அப்படியே நின்றுவிட்டான். அவன் கைகள் காற்றில் எதையோ பிடிப்பதற்கு முயற்சி செய்வது போல் அலை பாய்ந்து கொண்டிருந்தன.

‘தந்தை அதற்குள் குடித்துவிட்டு வந்திருக்கிறாரா, என்ன?’ என்று எண்ணிக்கொண்டே சாஹிதி தன்னை அறியாமல் அந்தப் பக்கமாய் அடியெடுத்து வைத்தாள். அவள் தந்தை அருகில் போவதற்குள் அவர் இருகைகளாலும் மார்பை அழுத்திக் கொண்டே கீழே சரிந்துவிட்டார்.

சாஹிதிக்குப் பயம் ஏற்பட்டது. ஓட்டமாய் ஓடிப போய் பிடித்துக் கொண்டாள். கோபத்தை எல்லாம் மறந்து விட்டாள். வலியால் துடித்துக் கொண்டிருந்தான் சந்திரன்.

“சிம்மாசலம்... மம்மி..” அவ்வளவு பெரிய குரலில் என்றுமே கத்தியது இல்லை.

‘டாடீ! என்னவாச்சு டாடீ?”

“வலிக்கிறது சாஹிதி.” வாயிலிருந்து வார்த்தை கூட சரியாக வெளிவரவில்லை. வேலைக்காறாக்கள் எல்லோரும் ஓடிவந்தார்கள். அவனை உள்ளே தூக்கிக் கொண்டு போய்ப் படுக்க வைத்தார்கள். சாஹிதி போன் பண்ணி டாக்டரிடம் தெரிவித்தாள். அவர் உடனே வருவதாய்ச் சொன்னார். பயந்து போன சாஹிதி வேறு எதைப் பற்றியும் யோசிக்க முடியாமல் பூஜை அறைக்குள் ஓடினாள்.

‘மம்மி! டாடீக்கு என்னவோ ஆகிவிட்டது. சீக்கிரம் வாயேன்.”

“என்ன இது? பூஜையறைக்குள் செருப்பு காலோடு வந்துவிட்டாய்?” கோபமாய் கத்தினாள் நிர்மலா.

“என்னவென்று தெரியவில்லை மம்மி. டாடீ கீழே விழுந்துவிட்டார். வந்து பாரு.” கோபமாய் கத்தினாள். இது வழக்கம்தான் என்பது போல் நிர்மலா சுவாமி மாடத்திலிருந்து குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்துக்கொண்டு, பூவை எடுத்து தலையில் சூடிக் கொண்ட பிறகுதான் வெளியே வந்தாள்.

அதற்குள் டாக்டர் வந்துவிட்டார். அப்பொழுதுதான் அவன் குடித்துவிட்டு வரவில்லை என்றும் உண்மையாகவே உடல்நலம் சரியாக இல்லை என்றும் நிர்மலா புரிந்து கொண்டாள். உடனே அழுதபடி அவனை நெருங்கினாள்.

“பரவாயில்லை. மைல்ட் ஹார்ட் அட்டாக். கொஞ்ச நாள் முற்றிலும் ஒய்வு தேவை. மருந்துகளை அனுப்பி வைக்கிறேன். நர்சையும் ஏற்பாடு செய்யட்டுமா?” கேட்டார் டாக்டர்.

“தேவையில்லை. நானே பார்த்துக் கொள்கிறேன்” என்றாள் நிர்மலா. அவள் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. சந்திரன் கண்களை மூடிய நிலையில் படுத்திருந்தான்.

நள்ளிரவு தாண்டிவிட்டது. சாஹிதிக்கு விழிப்பு வந்தது. எவ்வளவு முயன்றாலும் தூக்கம் வரவேயில்லை. மெதுவாய் எழுந்து தந்தையின் அறைக்குப் போனாள். சந்திரன் உறங்கிக் கொண்டிருந்தான். பக்கத்து சோபாவில் தாயும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். பூஜை புனஸ்காரங்களுடன் களைத்துப் போய் இளைத்து விட்டிருந்தாள் அவள். சாஹிதி அந்தப் பக்கமாய் வந்து உட்கார்ந்து கொண்டாள். தந்தையின் பக்கத்திலேயே சோபாவில்

தாய். அவ்விருவரையும் ஒன்றாகப் பார்த்துக் கொண்டு அவள்! அந்தக் காட்சி ரொம்ப அபூர்வமாகத் தோன்றியது. என்றும் இல்லாதவாறு பாசப்பிணைப்பு தம் மூவருக்கும் இடையில்.

“சாஹிதி!”

தந்தையின் அழைப்பைக் கேட்டு திடுக்கிட்டாள்.

“தூக்கம் வரவில்லையா? இப்படி அருகில் வாம்மா.” அவர் குரலில்தான் எவ்வளவு பரிவு! இவ்வளவு நாளாய் அது எங்கே போய் ஒளிந்து கொண்டிருந்தது?

“இல்லை டாடீ!” என்று அருகில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவள் குரல் தழுதழுத்தது.

“குடிக்க கொஞ்சம் தண்ணீர் கொடும்மா”

பக்கத்திலேயே இருந்த டம்பளரை எடுத்துக் குடிக்கச் செய்தாள்.

“பரீட்சை நன்றாக எழுதினாயா? தினமும் இரவில் ரொம்ப நேரம் வரையில் விழித்துக் கொண்டு படித்து வருகிறாயே. கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்.”

“நன்றாக எழுதினேன் டாடீ! முதல் வகுப்பு நிச்சயம்.”

“வெரிகுட்! நன்றாகப் படி. நீ எது வரையில் படிக்க விரும்புகிறாயோ, அவ்வளவும் படி. வெளிநாட்டுக்குப் போவதாக இருந்தாலும் சரி.”

“அப்படியே ஆகட்டும் டாடீ.”

“போய் படுத்துக்கொள் சாஹிதி. ரொம்ப நேரமாகி விட்டது. எனக்கு பரவாயில்லை. கவலைப் படாதே. பத்து நாட்களில் எழுந்து நடமாடுவேன்.”

“இனி ஒருபோதும் குடிக்காதீங்க டாடீ.” துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெதுவாய் சொன்னாள். இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

சந்திரன் மெல்லச் சிரித்துவிட்டு “சரி” என்றான்.

“என் மேல் ஆணை!”

“உன் மேல் ஆணை, போதுமா? போய்ப் படுத்துக்கொள்.”

அவள் அறைக்கு வந்து படுத்துக் கொண்டாள். சந்தோஷத்தாலும், திருப்தியாலும் மனம் பூரித்து விட்டிருந்தது. இது செண்டிமெண்டா? அல்லது குடும்ப வாழ்க்கையில் இருக்கும் அன்பின் சக்தியா? எதுவாக இருந்தாலும் அன்று இரவு அவள் நிம்மதியாக உறங்கினாள்.

****

சந்திரன் நன்றாக தேறிவிட்டான். ஆனாலும் டாக்டர்கள் அவனை கட்டிலை விட்டு இறங்க அனுமதிக்கவில்லை. பரமஹம்சா வந்தான். நிர்மலா அவனுக்குக் கடிதம் எழுதி வழைத்திருக்கிறாள் என்று யாருக்கும் தெரியாது. அது மட்டுமே இல்லை. அவன் வந்திருப்பதாய் சந்திரனுக்குத் தெரியப் படுத்தவும் இல்லை. அவனைக் கொண்டு பூஜைகள் செய்ய வைப்பது தெரிந்தால், சந்திரன் ஆவேசப்படுவான் என்று நிர்மலாவுக்குத் தெரியும். பிரசாதத்தை மட்டும் சாப்பாட்டில் கலந்து அவனுக்குத் தெரியாமல் கொடுத்து வந்தாள்.

நான்கு நாட்களிலேயே சந்திரனுக்குக் கொஞ்சம் தெம்பு வந்து விட்டது. எல்லாம் நார்மலாக இருந்தது.

“கொஞ்சம் அப்பாவைப் பார்த்துக்கொள். நான் கோவிலுக்குப் போய் வருகிறேன்” என்றாள் நிர்மலா. அவள் நிறைய கடவுள்களுக்கு வேண்டிக் கொண்டிருந்தாள்.

“சரி மம்மி” என்று போய் தந்தையின் அறையில் உடகார்ந்து கொண்டாள். ஆரஞ்சு சாற்றைப் பிழிந்து குடிக்கக் கொடுத்தாள். சந்திரன் கண்களை மூடியபடி படுத்திருந்தான். ஏனோ தந்தை கொஞ்சம் சோர்வாக இருப்பது போல் தோன்றியது அவளுக்கு. ஒரு முறை டாக்டருக்குப் போன் பண்ணுவோமா என்று நினைத்தாள். தாய் வந்த பிறகு கேட்டுவிட்டுப் பண்ணுவோம் என்று சும்மாயிருந்து விட்டாள்.

சோபாவில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த சாஹிதி, தந்தையின் முகத்தில் தோன்றிய மாறுபாட்டைக் கவனிக்கவில்லை. அவள் பார்க்கும் போது அவன் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியிருந்தது. சாஹிதி ஓடிப்போய் டாக்டருக்குப் போன் பண்ணிவிட்டு வந்தாள். அவள் திரும்பி வந்த போது அவன் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான். அவள் பயம் கொஞ்சம் தணிந்தது.

“டாடீ! வலிக்கிறதா? மருந்து கொடுக்கட்டுமா?” அருகில் சென்று கேட்டாள். அவன் பதில் பேசவில்லை.

தந்தையின் உறக்கத்தைக் கெடுக்க விரும்பாமல் சாஹிதி அருகிலேயே உட்கார்ந்து கொண்டாள். டாக்டர் வந்தார்.

“இப்போ கொஞ்சம் தேவலை போலிருக்கு டாக்டர். தூங்கிக் கொண்டு இருக்கிறார்.”

அவர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு அவள் முகத்தை வருத்தத்துடன் நோக்கினார். “மம்மி எங்கே பேபி?”

“கோவிலுக்குப் போயிருக்கிறாள். இப்போ வந்து விடுவாள்.”

அவளிடம் எப்படிச் சொல்லுவது என்று அவருக்குத் தெரியவில்லை. “நீ வெளியே போய் உட்காரும்மா. அப்பாவிடம் நான் இருக்கிறேன்.”

சாஹிதி புரியாதவள் போல் பார்த்தாள். “எதுக்கு?”

“உயிர் போய்விட்டதும்மா. அவர் இனி இல்லை.”

ஒரு வேதனைக் கீற்று.. துக்கத்தால் இரண்டாய் பிளந்த ஓலம்! இதயத் தீயில் எரிந்து சாம்பலாகிவிட்ட அன்பு! மழையாய் பொழிந்த நயனங்கள்! அவள் அப்படியே நின்றுவிட்டாள்.

நிர்மலா உள்ளே வந்தாள். அதற்குள் அவளுக்கு விஷயம் தெரிந்து விட்டதென்று அவள் முகமே பறைச்சாற்றியது. கணவனுக்குப் பக்கத்திலேயே சரிந்துவிட்டு அழத் தொடங்கினாள். கையிலிருந்த பிரசாதம் நழுவி கீழே விழுந்தது.

‘ஸ்பெஷலாக பூஜை பண்ணி பிரசாதம் கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடுங்க. ப்ளீஸ்.. சாப்பிட மாட்டீங்களா” என்று பைத்தியம் பிடித்தவள் போல் புலம்பிக் கொண்டிருந்தாள். சாஹிதிக்கு அவளைப் பார்த்தால் பயமாக இருந்தது.

“மம்மி!” என்று போய் மடியில் விழுந்து கதறினாள். அதற்குள் பரமஹம்சா உள்ளே வந்தான். இரண்டு நிமிடங்கள் கண்களை மூடிக் கொண்டு மௌனமாய் நின்றான்.

“சாஹிதி!” எழுந்துக்கொள் குழந்தாய்” என்று அவளை எழுப்பி உட்கார வைத்தான்.

“நிர்மலா! வாங்க சுவாமி அறையில் போய் உட்கார்ந்து கொள்ளுங்கள். அங்கேதான் மனதிற்கு நிம்மதி கிடைக்கும்.” அவள் இரு தோள்களையும் பற்றி எழுப்பினான். தோளைச் சுற்றிக் கைப் போட்டு நடத்தி அழைத்துக் கொண்டு போனான். மேல்தலைப்பு சரிந்து விழுந்ததை கூட கவனிக்க முடியாதபடி துக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். ஆறுதல் சொல்லுவது போல் ஒரு கையால் அணைத்தபடி நடத்தி அழைத்துச் சென்று கொண்டிருந்தான் அவன். அவள் மார்பின் மீது அவன் கைப் பதிந்து இருந்ததை யாரும் கவனிக்கவில்லை. அவன் உதடுகள் கடவுளின் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தன.

நண்பனின் மரணம் அவனை மிகவும் தளரச் செய்து விட்டதென்று அவன் முகமே சொல்லியது. அந்த வேதனையை பிரார்த்தனையின் மூலமாக தாங்கிக்கொள்ள அவன் முயற்சி செய்து கொண்டிருந்தான்.

சாஹிதியின் இதயத்தில் எங்கேயோ ஏதோ குத்தியது போன்ற வேதனை! அந்த வேதனை தந்தையின் மரணத்தால் மட்டுமே வந்தது அல்ல.

.சந்திரனின் பிணத்தை ஹாலில் பாயில் கிடத்தினார்கள். சிம்மாசலம் தலைமாட்டில் தீபத்தை ஏற்றி வைத்தான். அந்த வெளிச்சம் பிணத்தின் முகத்தில் பட்டு விகாரமாய்த் தென்பட்டுக் கொண்டிருந்தது. ஊதுபத்தியின் புகையும், பிணத்தின் மீது தெளிக்கப்பட்ட கற்பூரமும் சேர்ந்து அறையில் பரவியிருந்த வேதனை நிறைந்த சூழ்நிலையை விரட்டியடிக்க செய்து கொண்டிருந்த முயற்சி பலனளிக்க

வில்லை. அந்த நறுமணத்திலும் மரணத்தின் சாயல் பதிந்துக் கொண்டிருந்தது.

அவற்றுக்கெல்லாம் அதீதமான நிலையில் நிர்மலா சுவாமி அறையில் உட்கார்ந்து இருந்தாள். அவள் பார்வை சலனமற்று நிலைத்திருந்தது. பரமஹம்சா அவளுக்கு எதிரே உடகார்ந்து கொண்டு தியானம் செய்து கொண்டிருந்தான். ஹாலில் இருந்த காட்சியைவிட அறையில் தென்பட்ட இந்தக் காட்சிதான் எல்லோரையும் கவர்ந்து கொண்டிருந்தது. யார் யாரோ வந்தபடி இருந்தார்கள். நின்று கூடி பேசிக் கொண்டிருந்தார்கள். கணவன் இறந்து போனால் அழுது புலம்பாமல் பக்தியில் மூழ்கிவிட்ட அவளைப் பார்த்தால் அபூர்வமாகத் தோன்றியது. மதிப்பு ஏற்பட்டது.

சாஹிதி மட்டும் தந்தையின் பிணத்திற்கு அருகில் உட்கார்ந்து இருந்தாள். மௌனமாய் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் எண்ணங்களைச் சிதறடித்தபடி உறவினர்கள் அவள் அருகில் வந்தார்கள். அவளை அங்கிருந்து எழுப்பி உள்ளே அழைத்துச் சென்றார்கள். காண்டெஸ்ஸா காரில் தவிர எதிலும் பயணம் செய்திராத சந்திரனை இறுதிப் பயணத்திற்குத் தயார் செய்தார்கள். நிர்மலாவை வலுக்கட்டாயமாக வெளியே அழைத்து வந்தார்கள். முகத்தில் குங்குமத்தை அப்பினார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போது சந்திரனின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது.

எப்போதுமே தனியாய் பயணித்துக் கொண்டிருந்த சந்திரனின் இறுதி பயணத்திற்கு பந்துக்கள் எல்லோரும் கும்பலாய் வந்து சேர்ந்தார்கள். ஊர்வலம் தொலைவில்; போய் மறையும் வரையில் சலனமில்லாமல் அப்படியே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் சாஹிதி.

******

பத்து நாட்கள் கழிந்து விட்டன. சந்திரன் உயிருடன் இருந்த வரையிலும் உறவினர்கள் யாரையுமே நெருங்க விடவில்லை. தன் வெறுப்பை எல்லாம் அவர்களைத் தொலைவில் வைத்துத் தீர்த்துக் கொண்டான். ஆனால் இறுதிச் சடங்குகளுக்காக எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். ஏற்பாடுகள எல்லாம் பலமாக நடைபெற்றுக் கொண்டு இருந்தன. சாஹிதிக்கு அதையெல்லாம் பார்க்கும் போது உடல் பற்றி எரிவது போல் இருந்தது.

தாயை பல விதமாய் துன்புறுத்திக் கொண்டிருந்தபோது குறுக்கிடாத இந்தக் கோழைகள், இன்று அவர் போய் விட்டது தெரிந்ததுமே அவள் பொட்டை அழித்து, வளையல்களை உடைத்தெறிந்து, பூவைப் பிய்த்தெறிந்து மகிழ்ச்சி அடைவதற்காக வந்திருக்கிறார்கள்.

“பெண்களுக்கு பூவும், போட்டும், வளையல்களும் அலங்காரச் சின்னங்கள். அவள் பிறந்தது முதல் இருப்பவைதான். ஆனால் கணவன் போனதுமே அவன் கட்டிய தாலியுடன் இவற்றையும் நீக்கச் செய்து அலங்கோலப் படுத்தி திருப்தி அடைகிறார்கள்.”

டீச்சர் ஏதோ ஒரு சமயத்தில் சொன்ன வார்த்தைகள் இவை. சாஹிதிக்கு பெரிய மாமாவிடம் மட்டும்தான் கொஞ்சம் பழக்கம் உண்டு.

அவரிடம் இதைப் பற்றி வாதம் புரிந்தாள். இதையெல்லாம் செய்யாமல் தடுக்கச் சொன்னாள். அவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. போய் பரமஹம்சாவிடம் சொன்னார்.

‘சாஹிதி!” பரமஹம்சா அவள் தலை மீது கையைப் பதித்து ஆறுதல் சொல்லுவது போல் பரிவாகச் சொன்னான். “எதற்காக இந்த ஆவேசம்? வெள்ளத்துடன் எதிர்நீச்சல் போடுவது தவறு குழந்தாய். நம் முன்னோர்கள் எவ்வளவோ யோசித்து, சர்ச்சைகள் செய்து ஏற்படுத்திய சடங்குகள் இவை. உலகத்திலேயே தலைச் சிறந்த நூல்கள் நம் தர்ம சாஸ்திரங்கள். கடவுள் அம்மாவின் நெற்றியில் என்ன எழுதி வைத்திருக்கிறாரோ அதன்படிதான் நடக்கும். இதெல்லாம் முற்பிறவியில் செய்த கர்மாவின் பலன்கள்.

இதையெல்லாம் நீக்கி விடுவதால் அவள் சந்தோஷத்தையும், சுகத்தையும் துடைத்தெறிந்து விடுவதாக அர்த்தம் இல்லை. அவளை எப்போதும் சந்தோஷமாக வைத்திருக்க நாம் இருக்கிறோம். ஆவேசத்தை அடக்கிக் கொண்டு உன் அறைக்குள் போய் இரு. இதையெல்லாம் பார்க்காதே. போதுமா?”

‘அது இல்லை அங்கிள்..” ஏதோ சொல்லப் போனாள்.

“சாஹிதி! அவர்கள் செய்வது தவறு இல்லை. நம் ஆசாரங்களை, சம்பிரதாயங்களை இல்லை என்று மறுக்கும் அளவுக்கு பெரிய மனுஷி இல்லை நான். அதிகமாகப் பேசாதே. என்னை வருத்தப்பட வைக்காதே.” நிர்மலாவின் வார்த்தைகளைக் கேட்டதும் சாஹிதியின் ஆவேசம் அடங்கி விட்டது.

ஆவேசத்தை அடக்கி வைத்தால் இதயம் எரிமலையாய் மாறி என்றாவது பொங்கி விடலாம். அல்லது பொங்கும் பாலில் நீரைத் தெளித்தாற்போல் அடங்கிப்போய்க் கோழைத்தனத்திற்கு அடிகொலிடவும் கூடும். சாஹிதியைப் போன்ற இன்ட்ராவர்ட்டுகளின் விஷயத்தில் இரண்டாவதுதான் என்றுமே நடக்கும்.

****

பத்தாம் வகுப்புப் பரீட்சை ரிசல்டுகள் வெளிவந்தன. சாஹிதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றாள். அதை முன்பே எதிர்பார்த்து இருந்ததால் அவளுக்கு எந்த பரபரப்பும் ஏற்படவில்லை. அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளவும் யாருமே இல்லை. நிர்மலா இன்னும் பழைய மனுஷி ஆகவில்லை. தினமும் பதினைந்து மணிநேரம் பூஜையிலே ஆழ்ந்து விடுவாள். அந்தப் பக்தியே அவளுக்கு சந்தோஷத்தை அளிக்கும் போது எப்படி மறுப்பு சொல்ல முடியும் என்பது பரமஹம்சாவின் வாதம். அதுவும் உண்மைதான் என்று தோன்றியது சாஹிதிக்கு.

“சாஹிதி!”

அவள் நிமிர்ந்து பார்த்தாள். பரமஹம்சா! அவன் அவளுடைய அறைக்கு வருவது இதுதான் முதல் தடவை.

“கங்கிராஜுலேஷன்ஸ்! எனக்கு ரொம்ப சந்தோஷமாய் இருக்கும்மா.”

“தாங்க்யூ அங்கிள்.’ வெட்கத்துடன் எழுந்து நின்றாள்.

“உட்காரும்மா.” அவன் இரு தோள்களையும் பற்றி உட்காரவைத்தான். தானும் எதிரே உட்கார்ந்து கொண்டான்.

“முதல் வகுப்பில் நீ தேர்ச்சி பெற்று இருக்கிறாய். இப்படி தனியாய் அறைக்குள் உட்கார்ந்து இருக்கலாமா? போம்மா, உன் சிநேகிதிகளை எல்லோரையும் கூப்பிடு. இன்று மாலை வீட்டில் பார்ட்டி கொடுப்போம். அல்லது ஹோட்டலில் ஏற்பாடு செய்யச் சொன்னால் செய்து விடுகிறேன். இன்றைக்கு எல்லோரும் ஜாலியாக பொழுது போக்கணும்.”

“வேண்டாம் அங்கிள். எனக்கு அவ்வளவு நெருங்கிய சிநேகிதிகள் யாருமே இல்லை.”

“அப்படி என்றால் சரி. இன்றைக்கு நாமே பார்ட்டி வைத்துக் கொள்வோம். அம்மாவையும் உன்னையும் நான் வெளியே அழைத்துக் கொண்டு போகிறேன்.”

“அம்மாவையா?” வியப்புடன் கேட்டாள் அவள்

“ஆமாம். எவ்வளவு நாட்களுக்கு அவளை வீட்டிலேயே கைதியாய் வைத்திருப்போம்? மெல்ல மெல்ல அவளை சாதாரண மனுஷியாய் மாற்றணும். இது நல்ல வாய்ப்பு.”

“ஆனால் டாடி இருந்தபோது கூட நாங்க என்றுமே பார்ட்டிகளுக்கெல்லாம் போனது இல்லை அங்கிள். மம்மிக்கு அதெல்லாம் பிடிக்காது.”

“நான் சொன்னால் வருவாள். முயற்சி செய்வதில் தவறு இல்லையே? மாலை எழுமணிக்கேல்லாம் தயாராக இரு. நான் நிர்மலாவிடம் பேசிவிட்டுப் போகிறேன்.” அவன் போய்விட்டான்.

சாஹிதியின் மனம் அவன்பால் நன்றியால் நிரம்பிவிட்டது. அந்த நாள் அவளுக்கு நன்றாக நினைவு இருந்தது. தந்தையின் இறுதிச் சடங்குகள் முடிந்த அன்றைக்கு உறவினர்கள் எல்லோரும் கூடினார்கள். நிர்மலா, சாஹிதி இருவரின் பொறுப்பையும் யார் ஏற்றுக் கொள்வது என்ற பிரச்சனை. வியாபாரத்தை அருகில் இருந்து நடத்த முடிந்தால் பரவாயில்லை. ஆனால் விற்றால் அவ்வளவாய் பணம் வரப் போவதில்லை. நிலைமை அவ்வாறு இருந்தது. நிர்மலாவின் உறவினர்கள் எல்லோரும் கிராமத்தில்

நிரந்தரமாய் தங்கி இருப்பவர்கள். வியாபாரத்தை நிர்வகிக்கும் அளவுக்கு திறமை இல்லாதவர்கள். சொத்துதான் இருக்கிறதே என்று ஆதரவு கொடுக்க முன் வந்தால் அதன் மூலம் பொறுப்புகள் தலையில் வந்து விழக்கூடும் என்ற பயம் அவர்களுக்கு.

“போனால் போகட்டும். வீட்டையும் விற்றுவிட்டு என்னோடு வந்து விடுங்கள்” என்றார் நிர்மலாவின் பெரிய அண்ணா.

“சாஹிதியை நன்றாகப் படிக்க வைக்கணும் என்று நினைக்கிறேன். இங்கேயே இருக்கிறேன் அண்ணா” என்றாள் நிர்மலா.

“அதற்கென்ன வந்தது? ஹாஸ்டலில் சேர்த்து படிக்க வைப்போம்.”

“அவள் ஏற்கனவே கொழை. தனியாய் இருக்க அவளால் முடியாது.” நிர்மலாவுக்கு அந்தப் பட்டிகாட்டிற்குப் போகச் சிறிதும் விருப்பம் இல்லை.

“அவ்வளவு கோழையாய் இருப்பவளுக்குப் படிப்பு எதற்கு? நிறுத்திவிட்டு நல்ல வரனாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைத்து விடுவோம்” என்றார் இன்னொரு அண்ணா.

சாஹிதியின் இதயத்தில் இடி விழுந்தாற்போல் இருந்தது. எல்லோருமாகச் சேர்ந்து அவளுடைய படிப்பை நிறுத்து விடுவார்களோ? இயலாமையுடன் தாயின் பக்கம் பார்த்தாள். அவள் எதுவும் சொல்ல முடியாமல் தலையைக் குனிந்துகொண்டாள். அப்பொழுது பரமஹம்சா தான் அவர்களுக்குக் கை கொடுத்தான்.

“நீங்கள் யாருமே சிரமப்பட தேவையில்லை. முதலில் இந்த சர்ச்சையே வேண்டியது இல்லை. நான் சந்திரனின் சிறுவயது நண்பன். அவனுடைய வியப்பாரத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்தவன். கடவுளின் கிருபையால் சமீபத்தில் எனக்கு பணம் நிறையவே வந்து சேர்ந்து இருக்கிறது. இவர்களுடையது என்று எதுவும் இல்லா விட்டாலும் இவர்களுடைய பொறுப்பை எடுத்துக் கொள்ளக் கூடிய நிலையில்தான் இருக்கிறேன். நிர்மலாவுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் நான் இவர்களுக்கு கார்டியனாக இருக்கிறேன்.”

அங்கிருந்த எல்லோருக்கும் பரமஹம்சாவிடம் அளவற்ற மதிப்பு இருந்தது. தனிப்பட்ட முறையில் அவனை தெரியாவிட்டாலும் அவனுடைய கடவுள் பக்தி மூலமாய் பிரபலம் ஆகி விட்டிருந்தான். எல்லோரும் அவனுடைய அபிபிராயத்தை ஏற்றுக்கொண்டார்கள். நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். எல்லோரையும் விட அதிகமாய் சந்தோஷமடைந்தது தான்தான் என்று தோன்றியது சாஹிதிக்கு.

ஹோட்டலில் பரமஹம்சா மதுபானம் அருந்தியதுகூட இயல்புக்கு மாறுபட்ட விஷயமாகத் தோன்றவில்லை.

****

சாஹித்தி இன்டரில் சயின்ஸ் க்ரூப் எடுத்துக்கொண்டால். சயின்ஸ் எடுத்துக் கொண்டு இன்டர் படிக்கும் மாணவ மாணவிகளில் தொண்ணூறு சதவீதம் டாக்டர் ஆகிவிட்டாற் போலவே கனவு காணத் தொடங்கி விடுவது வழக்கம். டாக்டரைத் தவிர வேறு லட்சியம் இருக்காது. ஆனால் சாஹிதி உண்மையிலேயே புத்திசாலி.

ஒருநாள் அவள் கல்லூரியிலிருந்து வீட்டுக்கு வந்த போது வினோதமான காட்சி ஒன்று தென்பட்டது. பூஜை அறைக்குள்

பரமஹம்சா யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். அவள் உள்ளே நுழைந்தாள். உள்ளே யாருமே இல்லை.

“யாருடன் நீங்க பேசிக் கொண்டு இருக்கீங்க அங்கிள்?” நிர்மலா சமையல் அறையில் எங்கேயோ இருந்தாள்.

பரமஹம்சாவின் கண்கள் ஒருவிதமான ஒலியுடன் ஜொலித்துக் கொண்டிருந்தன. “கடவுளுடன்” என்றான்.

அவள் “உண்மையாகவா?” என்றாள்.

அவன் சிரித்தான்.

“கடவுள் உங்கள் கண்களுக்கு தென்படுவாரா?”

அவன் சிரித்துவிட்டு “நானே கடவுளின் அம்சம். சமீபத்தில்தான் அந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டேன். மானிடர்களுக்கு சுக சந்தோஷங்களை வழங்குவதற்காக கடவுள் என்னை அனுப்பி இருக்கிறார்.”

“என்னால் நம்ப முடியவில்லை.”

“நம்பவேண்டாம். நம்பச் சொல்லி நானும் உன்னை கட்டாயப் படுத்தவில்லையே?”

அவளால் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை. “கடவுள் உங்களிடம் என்ன பேசினார்?” என்றாள்.

“இந்த வீட்டில் சந்தோஷமும், அமைதியும் நிலைநாட்டும்படியாக செய்யச் சொன்னார். இப்படி வாம்மா சாஹிதி.”

அவள் அருகில் சென்றாள். சிறு குழந்தையைக் கொஞ்சுவது போல் அவளை அணைத்துக் கொண்டு இரு கன்னங்களிலும் முத்தம் பதித்தான். “உன்னைப் பெரிய ஆளாய் ஆக்கும் பொறுப்பு என் மீது இருக்கிறது. அதைக் கண்டிப்பாக நிறைவேற்றுவேன். இது தெய்வத்தின் உத்தரவு” என்றான்.

சாஹிதி இரு கன்னங்களையும் அழுத்தமாய் துடைத்துக் கொண்டாள்.

“நான் சொன்னது போல் செய்வாயா?”

“கண்டிப்பாய் செய்கிறேன் அங்கிள்.”

“வாழ்நாள் முழுவதும்?

“இதென்ன அங்கிள்? நீங்க சொன்னதை நான் என்றைக்கு மறுத்து இருக்கிறேன்? நான் என்ன செய்யணும்?”

“எனக்கும் தெரியாதும்மா. தெய்வத்திடமிருந்து உத்தரவு வரணும்.” அவன் குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் இட்டான்.

கற்பூரத்தை ஏற்றி தனக்குத்தானே தீபாராதனை காண்பித்துக் கொண்டு, தனக்கே நைவேத்தியம் சமர்பித்துக் கொண்டான். பிறகு அந்த பிரசாதத்தை எடுத்து அவள் வாயில் ஊட்டிவிட்டு “தீர்காயுஷ்மான்பவ” என்று ஆசீர்வாதம் செய்தான்.

12

சாஹிதி ரொம்பக் கஷ்டப்பட்டு படித்துக் கொண்டிருந்தாள். வீட்டுச் சூழ்நிலையில் கூட நிறைய மாற்றங்கள் வந்து விட்டன. பரமஹம்சா அடிக்கடி வந்து கொண்டிருந்தான். நிர்மலாவிடம் வியாபார விவரங்களைச் சொல்லுவான். சாஹிதிக்கு வேண்டியதைக் கேட்டுத் தெரிந்து கொள்வான். ஆலோசனை வழங்குவான்.

சாஹிதிக்கு அவன் வருகை எப்பொழுதும் சந்தோஷத்தைத் தந்து கொண்டிருந்தது. அவன் இருந்தால் எல்லோருமாய்ச் சேர்ந்து பேசிக்கொண்டே சாப்பிடுவார்கள். தந்தை உயிரோடு இருந்த வரையில் அப்படிப்பட்ட அனுபவமே அவளுக்கு ஏற்பட்டதில்லை. அந்த சந்தோஷத்தை அனுபவிக்கும் போதெல்லாம் தான் இழந்து விட்டது என்னவென்று தெரியத் தொடங்கியது. எல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமானது தாயின் முகத்தில் புன்னகையும், உற்சாகமும்தான். அவற்றின் அர்த்தத்தை முற்றிலுமாய் தெரிந்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு அவள் இன்னும் வளர்ச்சியடையவில்லை.

இன்டர் முதலாம் ஆண்டு முடிவடைந்தது. காலம் ரொம்ப வேகமாக கழிந்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது சாஹிதிக்கு. அந்த விடுமுறையில் முதல் முறையாய் மாமாவின் ஊருக்குப் போனாள் சாஹிதி. கிராமத்துச் சூழ்நிலை நன்றாக இருக்கும் என்றும், இந்த இயந்திர வாழ்க்கையிலிருந்து ஒரு மாறுதல் அவசியம் என்றும் கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தான் பரமஹாம்சா.

உண்மையிலேயே சாஹிதிக்கு அந்தச் சூழ்நிலை ரொம்பவும் பிடித்து விட்டது. பச்சைப் பசேலென்ற வயல்கள், கொத்துக்

கொத்தாய்க் காய்த்துத் தொங்கிய மாந்தோப்புகள், மரத்தில் கட்டிய ஊஞ்சல்கள், புது விதமான விளையாட்டுகள்...எல்லாமாய்ச் சேர்ந்து புத்தம்புது உலகத்திற்குள் காலடி எடுத்து வைத்தாற்போல் இருந்தது. எல்லாவற்றையும் விட தான் வாங்கி வந்த பரிசுப் பொருட்களை அவரவர்களின் பெயரைக் கூப்பிட்டுக் கொடுத்த போது அவர்கள் முகத்தில் தென்பட்ட திருப்தியும், நன்றியும் அவள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தந்தது. அந்த யோசனைகூட பரமஹம்சனுடையதுதான். ஒவ்வொருவரைப் பற்றியும் கேட்டுத் தெரிந்துகொண்டு அவரவர்களுக்கு ஏற்ற பொருட்களைத் தேர்ந்தெடுத்து வாங்கித் தந்தான் அவன்.

விடுமுறை முடிந்து விட்டது. சாஹிதி புதிய உற்சாகத்துடன் திரும்பி வந்தாள். வீட்டில் கூட சில மாற்றங்கள் தென்பட்டன. முக்கியமாக நிர்மாலாவிடம் உற்சாகம் இருமடங்காகி இருந்தது. பரமஹம்சாவும் அவளுடன் சேர்ந்து பூஜைகளில் பங்கெடுத்துக் கொண்டு அவளுக்குத் துணையாய் இருந்து வந்தான்.

சாஹிதி கல்லூரிக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். முதல் ஆண்டு மதிப்பெண்கள் வெளிவந்தன. சாஹிதி நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தாள். சயின்ஸ் சப்ஜெக்டில் அவள்தான் முதல் இடம். பரமஹம்சா மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். போனில் கூப்பிட்டு பேசினான்.

“இன்றைக்குத் திரும்பவும் உனக்குப் பார்ட்டி தரணும். கூடவே ஒரு பரிசும் தரப் போகிறேன். அது உனக்கு பிடிக்குமா இல்லையா என்று கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகுதான் தருவேன்’ என்றான்.

“உங்களுக்கு என் விருப்பு வெறுப்பு எல்லாம் நன்றாகத் தெரியும். என்னையும் விட உங்களுக்குத்தான் தெரியும். நீங்க தரப்போவது

எதுவாக இருந்தாலும் எனக்கும் பிடிக்கும் என்று நம்புகிறேன் அங்கிள்" என்றாள் சாஹிதி.

"பிடிக்கவில்லை என்றால் மட்டும் தயக்கம் இல்லாமல் வெளிப்படையாய் சொல்லவேண்டும், சரிதானே?"

"கண்டிப்பாய். மம்மியிடம் சொல்லட்டுமா மாலை பார்ட்டியைப் பற்றி?"

"வேண்டாம். இன்றைக்கு மம்மி ஒருபொழுது. நாமிருவரும் மட்டுமே போவோம்."

"சரி அங்கிள்." போனை வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தாள் சாஹிதி. அந்த பரிசு என்னவாக இருக்கும்? மணமகனைத் தேர்ந்தெடுத்து விட்டேன் என்று சொல்லுவாரா? ஊஹூம், தன்னை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம்தான் அவருக்கு. அதுவாக இருக்காது. சாஹிதி உள்ளூர சிரித்துக் கொண்டாள். ஒருக்கால் ஏதாவது டைமன்ட் செட் ஆக இருக்கலாம்.

பரமஹம்சா வருவதற்குள் தயாராக இருந்தாள். நிர்மலாவிடம் சொல்லிவிட்டு அவளை அழைத்துச் சென்றான். அவனுடன் தனியாய் வெளியே செல்வது இதுதான் முதல் தடவை. உள்ளூர கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. அவனே டிபன் வகைகளுக்கு ஆர்டர் கொடுத்தான். தன்னிடம் பேசுவதற்கு ஏனோ தயங்குவது போல் அவளுக்குத் தோன்றியது.

சாப்பிட்டு முடித்தார்கள். அவளுக்குப் பிடித்தமான கஸாட்டா ஐஸ்க்ரீம் வரவழைத்தான்.

"நான் சொன்ன பரிசைப் பற்றி கேட்கவில்லையே ஏன்?"

“நீங்களே சொல்லுவீங்க என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.”

“சாஹிதி!” அவன் குரல் கம்பீரமாக இருந்தது. “இது நான் உனக்குத் தரும் பரிசா அல்லது உன்னிடம் கேட்கும் வரமா என்று எனக்கே புரியவில்லை. உனக்குப் பிடிக்கவில்லை என்றால் உன் மனதை நோகடித்துவிட்டேனே என்ற வேதனை என்னை விட்டு நீங்கவே நீங்காது. ஆனால் கேட்காமலும் இருக்க முடியவில்லை என்னால். அதனால்தான் இன்னொருமுறை கேட்டுக் கொள்கிறேன். உனக்குப் பிடிக்கவில்லை என்றால் தயவு தாட்சிண்யம் இன்றி சொல்லிவிடு. நான் ஒன்றும் வருத்தப்பட மாட்டேன். அந்த விஷயத்தை இருவருமே மறந்து விடுவோம். எப்போதும் போல் நண்பர்களாக இருப்போம்.”

“சொல்லுங்க அங்கிள். தயங்காதீங்க.” அது என்னவென்று தெரிந்துகொள்ளும் ஆர்வம் அதிகமாகிவிட்டது அவளுக்கு.

“ஒன்றும் இல்லை.” அவள் கண்களையே உற்றுப் பார்த்தபடி சொல்லத் தொடங்கினான் அவன். “உங்க அம்மாவைப் பற்றித்தான். அவளுக்கு அப்படி ஒன்றும் ரொம்ப வயதாகவில்லை. வாழ்க்கையில் எந்தச் சுகத்தையும் அனுபவிக்கவில்லை. மனதளவில் மிகவும் தளர்ந்து விட்டிருக்கிறாள். நீண்ட வாழ்க்கை இன்னும் முன்னால் இருக்கிறது. இப்பொழுதாவது அவள் இழந்து விட்டதைத் திருப்பித் தரணும் என்று தோன்றுகிறது. இது என்னுடைய கோரிக்கை இல்லை. கடவுளின் சங்கல்பம் என்று நினைக்கிறேன். அவளை..”

“ஊம்.. சொல்லுங்கள்.”

“அவளை நான் கல்யாணம் பண்ணிக்கொள்ள நினைக்கிறேன், உங்கள் இருவருக்கும் ஆட்சேபணை இல்லாவிட்டால்தான்” என்றான் பரமஹம்சா.

சாஹிதிக்கு ஐஸ்க்ரீமை விட இனிமையான உணர்வு மனதில் நிரம்பி வழிந்தது. இமயம் போன்ற உயர்ந்த பண்புடைய அவனுக்கு, நன்றியை எப்படிச் சொல்லுவது என்று புரியாமல் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“என்னம்மா? உனக்குப் பிடிக்கவில்லையா?”

“பிடிக்காமல் என்ன அங்கிள்? என்ன சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. உங்கள் காரணமாய் அம்மாவிடம் சமீபத்தில் வந்த மாற்றங்களுக்கே சந்தோஷப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். இனி இது போலவும் நடந்துவிட்டால், அம்மா மனப்பூர்வமாக சிரித்தபடி வீட்டில் வளைய வந்தால் அதைவிட வேறு என்ன வேண்டும் எனக்கு? அம்மாவிடம் நீங்க பேசினீங்களா அங்கிள்?”

“இல்லைம்மா. இது எங்கள் இருவருக்கும் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை. வயது வந்த, விவரம் தெரிந்த பெண் நீ. உன் அபிப்ராயத்தை முதலில் தெரிந்துகொண்டு அதற்குப் பிறகுதான் மம்மியிடம் இந்தப் பேச்சை எடுப்பதாக இருக்கிறேன்.”

“எனக்கு ரொம்ப சந்தோஷமாய் இருக்கு. மம்மியைச் சம்மதிக்க வைப்பதற்கு என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்.”

‘தற்சமயம் நீ எதுவும் செய்யாதே. நான் முதலில் பேசுகிறேன். அவள் மறுத்தால் அப்பொழுது யோசிப்போம். பேரர்!”

கூப்பிட்டான் பரமஹம்சா. "இந்த ஐஸ்க்ரீம் உருகிவிட்டது. எடுத்துக்கிட்டுப் போய் வேறு கொண்டுவா."

அவ்வளவு சீரியசான உரையாடலுக்கு நடுவில் கூட அத்தனை சின்ன விஷயத்தை அவன் கவனித்தது பொறுப்பு மிகுந்த அவன் குணத்தை காட்டியது.

"இன்னொரு விஷயத்தையும் உனக்குத் தெளிவுப் படுத்தணும்.ச எனக்குக் கல்யாணம் ஆகி இரண்டு மகன்கள் இருக்கும் விஷயம் உனக்கும் தெரியும். அவர்கள் ரொம்ப நாளாய் என்னுடன் வசிப்பதில்லை. உங்க அம்மாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு முன்னால் அவர்களிடமிருந்து எந்த விதமான ஆட்சேபணையோ, தடங்கலோ, விரும்பத் தகாத சம்பவமோ எதிர்ப்பட்டு விடக் கூடாது. அந்த விஷயத்தில் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்குக் கொஞ்ச நாள் பிடிக்கலாம். என் மகன்களில் ஒருவன் டாக்டர், இன்னொருத்தன் இன்ஜனியர். இருவருமே செட்டில் ஆகி விட்டார்கள்."

"உங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அப்படியே செய்யுங்கள் அங்கிள். என்னால் செய்யக் கூடியது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். செய்கிறேன்." மனப்பூர்வமாகச் சொன்னாள் சாஹிதி. பிறகு தன்னுள் எண்ணிக்கொண்டாள். 'இப்படிப்பட்ட நபர்கள் எல்லோர் வாழ்க்கையிலும் எதிர்பட்டுவிட மாட்டார்கள். பரமஹம்சாவைப் பற்றி கோமளா டீச்சருக்கு விவரமாய் எழுத வேண்டும். ஆண்கள் எல்லோருமே கயவர்கள் இல்லை என்றும் தெரிவிக்க வேண்டும்.'

பார்ட்டியிலிருந்து இருவரும் திரும்பி வரும்போது நிர்மலா வெளியே எதிர்பார்த்தபடி நின்றிருந்தாள்.

நன்றாய இருட்டி விட்டது. வெளியே மழை வரும் அறிகுறிகள் தென்பட்டன. வீடு திரும்பியதுமே நிர்மலா கடிதத்தை நீட்டினாள். கோமளா டீச்சர் எழுதிய கடைசிக் கடிதம் அது. அவள் இறந்துவிட்டதாய் மறுநாள் தந்தி வந்தது.

****

“சாஹிதி!” பரமஹம்சா இரக்கம் ததும்பும் குரலில் விசாரிப்பது போல் அருகில் வந்தான். “ஏனம்மா? எப்படியோ இருக்கிறாய்?”

“மனம் சரியாய் இல்லை அங்கிள்.”

அவன் தலையில் கையைப் பதித்துத் தடவிக் கொடுத்தான். “இளம் வயதில் இருப்பவள் மனம் சரியாய் இல்லை என்று சொன்னால் அதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்கணும். நீ யாரிடமாவது மனதைப் பறிக் கொடுத்திருக்க வேண்டும். அல்லது யாராவது உன்னைக் காதலிப்பதாய் சொல்லி இருக்க வேண்டும்” என்று சிரித்தான்.

உண்மையில் சாஹிதிக்கு தான் இளம்பெண் என்ற விஷயமே அதுவரையில் நினைவுக்கு வந்தது இல்லை. படிப்பைத் தவிர வேறு எந்த உலகமுமே தெரியாது அவளுக்கு. முதல் முறையாய் அவன் வாயிலிருந்து அந்த வார்த்தைகளைக் கேட்ட பொழுது வெட்கமும், சங்கோஜமும் ஏற்பட்டன. தடுமாற்றத்தோடு தலை குனிந்தாள்.

“தந்தையைப் போன்றவன் நான். என்னிடம் சொல்வதற்குக் கூட பயப்படுகிறாயா?”

அப்பொழுதுதான் அவளுக்கு துக்கம் வந்தது. இண்ட்ராவர்ட் சுபாவம் கொண்டவர்களின் இதயத்தில் துக்கம் வெள்ளமாய் பொங்கி வெளிப்படுத்துவதற்கு அந்த அளவுக்கு இரக்கம்

போதும். பதினாலு முதல் இருபதுக்கு இடைப்பட்ட வயதில் ஆண்களிலும் சரி பெண்களிலும் சரி இவ்விதமாய் ஆதாரப்படும் குணம் உண்டு.

எப்பொழுதும் தமக்குள் தாமே பார்த்துக் கொண்டும், தம்மைப் பற்றியே யோசித்துக் கொண்டும் உலகம் முழுவதும் தம்மையே கண்காணித்து வருவதாய் ஊகித்துக் கொண்டும் இருப்பார்கள். இரக்கம் ஒரு குளிர்ந்த காற்று போல் அந்த துன்பத்தைத் தாக்கும் போது ஆடி மாதத்து கார்மேகம் போல் கண்ணீர் மழை போழிவதுதான் இவர்களின் சுபாவம்.

இந்த இரக்கத்தை இவர்கள் யாரிடமிருந்து வேண்டுமானாலும் பெற்றுக் கொள்வார்கள். அக்கம் பக்கத்து வீடுகளில் இருக்கும் உடன்பிறவாத அண்ணன்கள், தந்தையைப் போன்ற நிலையில் இருக்கும் வாத்தியார்கள்.. இப்படி யாரிடமிருந்து வேண்டுமானாலும். இந்த உடன் பிறவா சகோதரர்கள் சாதரணமாக லேடீஸ் ஹாஸ்டலுக்கு முன்னால் நின்று கொண்டு நாலைந்து பெண்கள் புடை சூழ தென்படுவார்கள். இவர்களுக்கு அய்யாகுண்டு முதல் ஐன்ஸ்டீன் வரையில் தெரியாத ஆசாமிகளே இருக்க மாட்டார்கள். தம்முடைய எண்ணங்களை, கருத்துகளை அடுத்தவர் மீது திணித்தபடி அவர்களை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வார்கள். எதிராளியை மீட்பதற்காகவே கடவுள் தம்மை படைத்திருப்பதாய் எண்ணிக்கொள்வார்கள்.

“சொல்லும்மா, என்ன நடந்தது?”

“எங்க கோமளா டீச்சர் செத்துப் போய் விட்டாள் அங்கிள்” என்றாள். “தற்கொலை பண்ணிகொள்ளப் போவதாய் கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்து விட்டாளாம். ஆனால் கணவன்தான் கொலை செய்திருக்க வேண்டும். டீச்சர் ரொம்ப நல்லவள் அங்கிள். பொறுமை என்றால் என்னெவென்று எங்களுக்குக் கற்றுக் கொடுத்தாள் அங்கிள். அவளுடைய பொறுமை நசித்துப்

போகும்படி துன்புறுத்திய அந்தக் கணவனைக் கொன்றுப் போட்டு விடணும் போல் இருக்கு. எவ்வளவு வேதனை அனுபவித்து இருந்தால் இந்த முடிவுக்கு வந்திருப்பாள்?"

"யாருடைய விதி எப்படி எழுதி வைத்திருக்கிறதோ அப்படித்தான் நடக்கும். யாராலும் அதை மாற்ற முடியாதும்மா."

"விதி இல்லை அங்கிள், அவள் கணவன்."

"இல்லை அம்மா. நீ தவறாக புரிந்து கொண்டு இருக்கிறாய். அங்கே நடந்தது என்ன என்று உனக்குத் தெரியாது. பொறுமையும், நற்பண்பும் பெண்களுக்கே இயல்பான ஆபரணங்கள். அவற்றி இழந்துவிட்ட பெண்ணைத் துரதிர்ஷ்டம் துரத்தத் தொடங்கி விடுகிறது. கணவனைத் திருத்தி நல்ல வழிக்குக் கொண்டு வருவது பெண்ணின் கடமை. சீதை, அனசூயாக்கள் பிறந்த புண்ணிய பூமி இது. பத்தினித்தன்மை நம் கொள்கை. கர்ம சித்தாந்தத்தை நம்பியவர்கள் யாருமே வேதனைப்பட மாட்டார்கள். கர்மாதான் என்னை உங்களிடம் இழுத்து வந்தது. கர்மாதான் என்னை உனக்கு இந்த விதமாய் போதிக்கச் செய்கிறது."

இந்த இறுதி வார்த்தைகள் மட்டும் உண்மை.

"கோமளாவின் மரணத்தை விதி எழுதி வைத்திருப்பதால், என்னை கடவுள் அவளிடம் அனுப்பவில்லை. இல்லாவிட்டால் என் மனோபலத்தின் மூலமாக உன் தாயை மாற்றியது போல் அவளையும் கஷ்டத்திலிருந்து மீட்டிருப்பேன். எதிராளியின் மனதில் இருப்பதைத் தெரிந்து கொள்ளும் சக்தியை கடவுள் எனக்கு அருளியிருக்கிறார். இந்த உலகத்தில் இவ்வளவு பேர் இப்படி கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது எனக்கு வேதனையைத் தருகிறது. என்னால் முடிந்த வரையில் அவர்களுக்கு உதவி

செய்வது என் கடமை. அதற்காக என் சுகத்தைக் கூட தியாகம் செய்கிறேன். இப்பொழுது நான் அங்கே எல்லோரையும் விட்டுவிட்டு இங்கே அடிக்கடி வருகிறேன் என்றால் அதற்குக் காரணம் உங்க குடும்பத்தைத் துக்கத்திலிருந்து மீட்பதற்காகத்தான் என்று கடவுள் எனக்கு சொல்லியிருக்கிறார். கூடிய சீக்கிரம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கிடைத்து விடும். உங்க டீச்சரின் விஷயம் என்கிறாயா? அதான் சொன்னேனே, அதை மறந்துவிடு. படிப்பில் கவனத்தைச் செலுத்து."

மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவள் போல் சாஹிதி தலையை அசைத்தாள்.

அந்த விதமாய் 'தர்க்கம்' இருந்த இடத்தில் 'கர்ம சித்தாந்தம்' அவள் மனதில் நன்றாய் படிந்து போய்விட்டது.

****

"சிம்மாசலம்" கூப்பிட்டாள் சாஹிதி. கடைத் தெருவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சிம்மாசலம் திரும்பிப் பார்த்தான்.

"என்ன சின்னம்மா? காரை கொண்டு வரச் சொல்லட்டுமா?"

"வேண்டாம். இந்தக் கடிதத்தை தபாலில் போட்டு விடு. மறந்துவிடாதே."

"யாருக்கும்மா கடிதம்?" அங்கேயே உட்கார்ந்திருந்த நிர்மலா கேட்டாள்.

"மாமாவுக்குதான் அம்மா."

'என்ன எழுதினாய்?" சந்தேகத்துடன் கேட்டாள் நிர்மலா.

சாஹிதி அவளை வியப்புடன் நோக்கினாள். நிர்மலா ஒருநாளும் இப்படி கேட்டது இல்லை. “ஒன்றும் இல்லை அம்மா. கோமளா டீச்சர் பற்றியும், பரமஹம்சா அங்கிளைப் பற்றியும்.”

“அங்கிளிடம் கேட்டாயா?”

“அங்கிளை எதுக்கும்மா கேட்கணும்?”

“என்ன இருந்தாலும் இனி அங்கிளைக் கேட்காமல் எந்த காரியத்தையும் பண்ணக் கூடாதும்மா. அவர் என்ன சொல்லுவாரோ தெரியாது.”

“என்னது? என்னைப் பற்றியா பேசிக் கொண்டு இருக்கீங்க?” பரமஹம்சா வாசல் அருகில் நின்றபடி கேட்டான்.

சாஹிதிக்கு அந்த விஷயம் மட்டும் எப்போதும் வியப்பாகவே இருக்கும். பரமஹம்சா எப்பொழுதும் வர வேண்டிய நேரத்தில் பிரத்யட்சமாகி விடுவான்.

நிர்மலா கடிதத்தைப் பற்றிச் சொன்னாள். பிரமஹம்சாவின் முகம் கம்பீரமாக மாறியது.

‘இப்படி உட்காரு சாஹிதி. சிம்மாசலம்! அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு நீ போய்க்கொள்.”

சிம்மாசலம் போகும் வரையில் அவன் ஒன்றுமே பேசவில்லை. நிர்மலா எழுந்து உள்ளே போய்விட்டாள். பரமஹம்சாவின் முகம் பிரசன்னமாயிற்று.

“பார்த்தாயா சாஹிதி! உங்க மம்மிக்கு என்மீது எவ்வளவு நம்பிக்கை என்று? நான் எந்த முடிவை எடுத்தாலும் மறுக்க மாட்டாள். ஆனால் நீயும் விவரம் தெரிந்தவள். உன்

அபிப்பிராயத்தைக் கூட தெரிந்துகொள்ள வேண்டிய தேவை எனக்கு இருக்கு. நான் சொல்வதைக் கேட்டுவிட்டு யோசித்துப் பார்த்துவிட்டு உன் தீர்மானத்தைச் சொல்லணும், சரிதானே?"

'சொல்லுங்கள் அங்கிள்" என்றாள் சாஹிதி. தான் தவறு செய்து விட்டோம் என்ற எண்ணம் அப்பொழுதுதான் அவளுக்கு ஏற்பட்டது.

"உன் மனதில் உள்ள உணர்வுகளை, முக்கியமாய் சந்தோஷமான செய்திகளை உன் சிநேகிதிகளுடனோ, உறவினர்களுடனோ பகிர்ந்து கொள்வதில் தவறு இல்லை. அந்த விஷயத்தில் உன்னை கட்டுபடுத்த முயன்றால் அது என் சுயநலம் ஆகி விடும். ஆனால் நான் முதலிலேயே உன்னிடம் சொல்லி விட்டேன். நாம் எடுத்துக் கொண்டிருக்கும் தீர்மானத்தை செயல் படுத்துவதற்கு கொஞ்ச நாள் ஆகும். அது வரையில் இந்த விஷயம் யாருக்கும் தெரிவிக்காமல் இருப்பது தான் நல்லது என்பது என் உத்தேசம். காரணங்கள் இரண்டு. ஒன்று நான் வாங்கிக் கொள்ளப் போகும் விவாகரத்துக்கும் இந்தக் கல்யாணத்திற்கும் சம்பந்தம் இருப்பதாய் யாருக்கும் சந்தேகம் வந்துவிடக் கூடாது. இரண்டாவதும், மிக முக்கியமானதும் என்னவென்றால் உங்க மாமா முதலியவர்கள் கிராமத்து ஆசாமிகள். மனதளவில் நாம் வளர்ந்தது போல் அவர்கள் வளரவில்லை. அவர்கள் இந்த விஷயத்தில் குறிக்கிட்டாலும் குறிக்கிடலாம். அதனால் இந்த விஷயத்தைத் தற்போதைக்கு ரகசியமாகவே வைத்துக் கொண்டு, திருமணம் ஆனதும் எல்லோருக்கும் சொல்லுவது நல்லது என்பது என் உத்தேசம். அதற்குப் பிறகு அவர்கள் என்ன சொன்னாலும் நாம் பொருட்படுத்த வேண்டியது இல்லை. இது என் ஒருத்தனின் அபிப்பிராயம்தான் . நீயும் யோசித்துப் பார்."

ஒவ்வொரு விஷயத்தையும் தன் சட்டத்திற்குள் அடக்கி தர்க்க ரீதியாக சொல்லுவது பரமஹம்சாவுக்குக் கடவுள் தந்த வரம்.

அவன் வாதத்தில் உண்மை இருப்பது புரிந்தது. மறுபேச்சு பேசாமல் கடிதத்தை வாங்கிச் சுக்கு நூறாக கிழித்தாள்.

“சாரி அங்கிள். நான் செய்தது தவறுதான். யோசித்துப் பார்க்காமல் எழுதிவிட்டேன். நீங்க சொன்னதெல்லாம் உண்மைதான். எனக்கு அந்த யோசனையே வரவில்லை” என்றாள் மன்னிப்பு கேட்பது போல்.

‘வெரிகுட்! உன்னிடம் இந்த மாதிரியான எண்ணம்தான் எனக்கு வேண்டியது. போய் படிம்மா. பரீட்சை நெருங்கி விட்டது. நன்றாகப் படிக்கணும்.”

‘சரி அங்கிள்.” எழுந்து உள்ளே போய்விட்டாள். பரமஹம்சா நிர்மலாவின் அறைக்குள் போனான். கதவுகள் சாத்திக் கொண்டன. அந்த விஷயத்தைக் கவனித்தாலும் சாஹிதி வருத்தப்படவில்லை.

சாஹிதிக்குத் தெரியாத விஷயம் ஒன்றுதான். முதல்நாள் இரவு அவள் கடிதம் எழுதியதை கவனித்த தாய், உடனே அந்த விஷயத்தை பரமஹம்சாவுக்குப் போன் பண்ணி தெரிவித்து விட்டாள் என்றும், அதனால்தான் உடனே அவன் புறப்பட்டு வந்தான் என்றும், அவன் திடீர் விஜயம் ஆச்சரியப்பட வேண்டிய சமாசாரம் இல்லை என்றும்.

13

இன்டர் பரீட்சைகளை நன்றாக எழுதினாள் சாஹிதி. முதல் வகுப்புக் கண்டிப்பாய் வரும். மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்றால் நுழைவுத் தேர்வுகள் உண்டு. அதற்காக விடுமுறையில் கோச்சிங் கிளாசில் சேர வேண்டும். நிர்மலாவை அந்த விஷயமாக கேட்டாள்.

‘அங்கிள் வரட்டும் சாஹிதி. அவரைக் கேட்டுவிட்டு சேர்ந்துகொள்” என்றாள் நிர்மலா.

“நுழைவுத் தேர்வுக்கு இன்னும் ஒரு மாதம்தான் இருக்கும்மா. உடனே சேர வேண்டும். அங்கிள் இன்னும் ஒரு வாரத்திற்கு வரமாட்டேன் என்று சொன்னார். நான் போய் சேருகிறேன் மம்மி” என்றாள் சாஹிதி.

‘வேண்டாம் சாஹிதி. கேட்காமல் சேருவது நல்லது இல்லை. நன்றாகவும் இருக்காது. நம் விவகாரங்களை எல்லாம் அவரே பார்த்துக் கொண்டு இருக்கும் போது, ஒரு வார்த்தைக் கூட சொல்லாமல், நாமே முடிவு செய்தால் வருத்தப்படுவார். அவர் வரட்டும். அப்படியே மிஞ்சிப் போனால் வீட்டிலேயே ட்யூஷனுக்கு ஏற்பாடு செய்கிறேன்.”

“அது இல்லை மம்மி..” ஏதோ சொல்ல வந்தாள்.

‘வேண்டாம். கட்டாயப்படுத்தி என் மனதை நோகடிக்காதே. அதற்குப் பிறகு அவர் வருந்தினால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.”

“அது இல்லை அம்மா. அங்கிள் வேண்டாம் என்று சொன்னால் அப்பொழுதே விட்டு விடுகிறேன். ஆனாலும் அங்கிள் மறுக்க மாட்டார்.”

“என்னவாக இருந்தாலும் அவரிடம் சொல்லாமல் ஒரு காரியம் பண்ணுவது எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்.”

சாஹிதி பதில் பேசாமல் அங்கிருந்து போய்விட்டாள். எங்கோ ஏதோ அபசுருதி ! தந்தை இருந்தபோது தாய் என்றுமே இவ்வாறு பேசியது இல்லை. அவர் ஏதாவது வேண்டாம் என்று சொன்னாலும் வாதாடுவாள். இப்பொழுது அங்கிள் எது சொன்னாலும் அதுதான் வேதம். முந்தாநாள் சிம்மாசலம் விஷயத்தில் கூட அப்படித்தான் நடந்தது. பரீட்சை சந்தடியில் அவள் கவனிக்கவில்லை. ஊருக்குப் போய்விட்டு வருவதாய் சொல்லிவிட்டுப் போனவன் வரவேயில்லை. மம்மியிடம் அதைப் பற்றி கேட்டபோது வேலையிலிருந்து நீக்கிவிட்டதாய்ச் சொன்னாள். ஒருவாரத்தில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனவன் இருபது நாட்களுக்குப் பிறகுதான் வந்தானாம்.

“என்னம்மா இது? ஏதாவது அவசர வேலை ஏற்பட்டு தங்கிவிட்டானோ என்னவோ?”

“உடல்நிலை சரியாக இல்லைன்னு ஏதோ ஒரு சாக்கு சொன்னான். ஆனாலும் அங்கிளுக்கு ரொம்ப கோபம் வந்து விட்டது. சுவாமி அறையில் சுருட்டுப் புகைத்தானாம்.”

சிம்மாசலதிற்கு சுருட்டுப் புகைக்கும் பழக்கம் உண்டு. ஆனால் சுவாமி அறைக்குள் புகைக்கும் அளவுக்கு கெட்டவன் இல்லை. பதினைந்து ஆண்டுகளாய் அந்த வீட்டில் வேலை பண்ணிக் கொண்டிருக்கிறான். ஒரு சிறிய காரணத்திற்காக அவனை வேலையிலிருந்து நீக்கியது வருத்தத்தைத் தந்தது.

’சீ.. ஏன் இப்படி யோசிக்கிறாள்? அங்கிளை சந்தேகிப்பதா? அவர் எந்த விஷயமாக இருந்தாலும், யோசித்துப் பார்த்துவிட்டு நல்லது கெட்டது உணர்ந்துதான் முடிவை எடுப்பார். சிம்மாசலத்தின் மூலம் எந்த தவறு நேர்ந்ததோ தெரியவில்லை. அப்படி நேர்ந்து இருந்தால் அது மன்னிக்க முடியாத குற்றமாகத்தான் இருந்திருக்கும்’ என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டாள்.

பத்து நாட்களுக்குப் பிறகு வந்தான் பரமஹம்சா. நிர்மலா எல்லா விஷயங்களையும் சொல்லிவிட்டால் போலும். அவன் சாஹிதியின் அறைக்கு வந்தான்.

“என்னம்மா, மேடிசினில் சேரணும் என்று ஆசைப் படுகிறாயாமே? கோச்சிங் இல்லாவிட்டாலும் உனக்கு சீட் கிடைக்கும். அப்படி முடியாவிட்டாலும் லட்சம் லட்சமாய் கொடுத்து உனக்கு சீட் வாங்கித் தந்து விடுகிறேன். ஆனால் ஒரு விஷயத்தை யோசித்துப் பாரும்மா. உன்னுடையது மென்மையான சுபாவம். ரத்தத்தைக் கண்ணால் பார்க்க முடியாது உன்னால். யாரவது வலியால் துடித்தால் பார்த்து நடுங்கி விடுவாய். சமீபத்தில் யாரோ சைக்கிளில் விழுந்து அடிபட்டுக் கொண்டதும் அழுது விட்டாய். நாளைக்கு பெரிய விபத்தில் உடம்பெல்லாம் காயத்தோடு யாரவது வந்தால் தைரியமாய், துணிச்சலுடன் நின்று வைத்தியம் பண்ண முடியுமா உன்னால்? யோசித்துப் பார். அந்தத் தொழிலுக்கு நியாயம் செய்ய முடியும் என்ற நம்பிக்கை உனக்கு இருந்தால், எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. படிப்புகூட சாதாரணமானது இல்லை. போஸ்ட் கிராட்யுயேஷன் பண்ணாவிட்டால் மதிப்பு கிடையாது. கிராமத்தில் ஐந்து வருடங்கள் சர்வீஸ் பண்ண வேண்டியிருக்கும். அங்கே இருக்கும் அரசியல்களை சமாளிக்கத் தெரியணும். அதெல்லாம் தேவை இல்லை என்று வைத்துக் கொள். பணம் செலவழித்து ஒரு நர்சிங் ஹோம் கட்டித்

தந்துவிட முடியும் என்னால். ஆனால் உனக்கு அதில் திருப்தி கிடைக்குமா? இது அவ்வளவு சுலபமாய் எடுத்துக் கொள்ளக் கூடிய முடிவு இல்லை. வாழ்க்கையில் இது ஒரு முதல் படி. முக்கியமான திருப்பம்."

அதென்னவோ தெரியாது. பரமஹம்சாவின் வாதத்தில் என்றுமே உண்மை இருக்கும். எதிராளியை யோசிக்க வைக்கும். எல்லாவற்றையும் மீறி அவன் சொன்னதுதான் சரி என்று தோன்றும். சாஹிதி உடனே தன் முடிவைச் சொல்லிவிட்டால். பி. எஸ். ஸி. யில் சேருவதாய்.

சாஹிதி கல்லூரியில் சேர்ந்து ஒருவருடம் ஆகிறது பரமஹம்சா எப்போதும் போல் வந்து போய்க் கொண்டிருந்தான். எல்லா விவகாரங்களையும் ஒழுங்காய் பார்த்துக் கொண்டான். வீட்டில் எந்த விஷயமாக இருந்தாலும் அவன் சொன்னபடியேதான் நடந்துக் கொண்டிருந்தது. ஆனால் திருமண விஷயத்தை மட்டும் யாருமே எடுக்கவில்லை.

ஒருநாள் பரமஹம்சா சாப்பிட்டத் தட்டில் அதை அலம்பாமலேயே தாய் சாப்பிட்டதை சாஹிதி பார்த்தாள். அத்தனை அன்பை அவள் உள்ளத்தில் வைத்திருந்தாள் என்று அதுவரை தெரியவில்லை. தந்தை அவள் தாயின் அன்பை உணரமுடியாமல் போனது துரதிர்ஷ்டம்தான். திருமணத்திற்கு ஏன் இன்னும் தாமதம் என்று நினைத்துக் கொண்டாள். அன்றைக்கு பரமஹம்சாவே அதைப் பற்றிய பேச்சை எடுத்தான். நிர்மலா, சாஹிதி இருவருமே அவ்விடத்தில் இருந்தார்கள் அந்த சமயத்தில்.

"என் குடும்பவிவகாரம் இப்போதைக்கு முடியும் போல் தோன்றவில்லை. கோர்ட்டில் இவ்வளவு தூரம் இழுத்தடிப்பார்கள் என்று நினைக்கவில்லை. பெரிதாய் வாய்கிழிய பேசிவிட்டு இப்பொழுது பின்வாங்குகிறேன் என்று நினைக்கப் போறீங்களே என்று எனக்கே கில்டியாய் இருக்கு. இந்த நிமிடமே நான்

திருமணத்திற்குத் தயார். ஆனால் பப்ளிக் ஆக எல்லோருக்கும் தெரியும் விதமாக பண்ணிக்கொள்ள முடியாது என்னால். உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சிம்பிளாய் பண்ணிகொள்கிறேன்."

"எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை" என்றால் நிர்மலா தாழ்ந்த குரலில்.

"நீ என்ன சொல்கிறாய் சாஹிதி? நிலைமை சரியான பிறகு வெளியில் எல்லோருக்கும் தெரிவிப்போம். குறைந்தபட்சம் இப்படி செய்தாலாவது நம் மனதிற்கு அமைதி கிட்டும் இல்லையா?"

"சரி அங்கிள். உங்கள் இஷ்டம். முஹூர்த்தம் எப்போ என்று சொல்லுங்கள். ஏற்பாடுகள் செய்து விடுகிறேன்" என்றாள் உற்சாகத்துடன்.

பரமஹம்சா பஞ்சாங்கத்தை எடுத்து ஏதோ கணக்கு போட்டான். "வெள்ளிக்கிழமை இரவு ஒன்பதரை மணிக்கு நல்ல முகூர்த்தம்" என்றான்.

சாஹிதி உற்சாகமாய் எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள். அன்று மாலையே வேலைக்காரர்கள் எல்லோரையும் ஏதோ சாக்கு சொல்லி வெளியே அனுப்பி விட்டார்கள். பழைய ஆட்கள் யாருமே இல்லை. இருந்தாலும் சிம்மாசலம் இருந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது சாஹிதிக்கு. அவனுக்கு அந்த வீட்டுடன் சொன்ன முடியாத பந்தம் இருந்தது.

முகூர்த்த நேரத்திற்குத் தாயை சுயமாய் அலங்காரம் செய்தாள். போட்டு எவ்வளவு அழகைத் தருகிறது என்று விப்படைந்தவளாய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்து விட்டாள் சாஹிதி. நிர்மலாவின் முகம் ரொம்ப களையாய்

இருக்கும். கொஞ்சம் அலங்கரித்துக் கொண்டால் போதும். மிக அழகாய்த் தென்படுவாள். சாஹிதிக்கு அக்காவைப் போல் தோன்றுவாள்.

பரமஹம்சாவின் முகத்தில் ஆனந்தம் தாண்டமாடிக் கொண்டிருந்தது. குறிப்பிட்ட முகூர்த்த நேரம் வந்ததும் கேசட்டில் மங்கள இசையை வைத்தார்கள். மாலையை மாற்றிக் கொண்டார்கள். பரமஹம்சா நிர்மலாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான். அந்தத் திருமணத்திற்கு ஒரே சாட்சி சாஹிதி. அவள் போட்டோக்களை எடுத்தாள். பரமஹம்சா தடை சொல்லவில்லை.

படுக்கையறையை அவளே சுயமாய் அலங்கரித்தாள். பரமஹம்சா படுக்கை அறைக்குள் நுழையும் முன் தடுத்து நிறுத்தினாள் சாஹிதி.

"அங்கிள், நீங்கள் பண்ணிய இந்த தியாகத்திற்கு என்ன கொடுத்தாலும் எங்களால் நன்றிக்கடனை தீர்க்கமுடியாது. பெற்ற தந்தைகூட என்னிடம் அன்பு காட்டவில்லை. சொத்தை மட்டும் விட்டுவிட்டுப் போனார். உங்களிடமிருந்து நான் எதிர்பார்ப்பது அன்பும், அபிமானமும்தான். அவை எனக்குக் கேட்காமலேயே கிடைத்து விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. அதனால்தான் உங்களுக்குப பரிசு..... ஊஹூம் பரிசு இல்லை, பொறுப்பை ஒப்படைக்கிறேன்."

"என்ன சாஹிதி? என்ன பொறுப்பு?" வியப்புடன் கேட்டான். நிர்மலாவுக்கும் விஷயம் என்னவென்று புரியவில்லை.

"எங்கள் சொத்து எல்லாவற்றுக்கும் நீங்களே கார்டியனாய், எங்கள் வியாபார விஷயங்களை பார்த்துக் கொள்வதற்கு முழு உரிமையும் உங்களுக்குத் தரும் உறுதிப் பத்திரங்கள். இரண்டு

நாட்களாய் நம் லாயருடன் கலந்தாலோசித்து இதை எழுதி வாங்கி வந்தேன்." அவன் கைகளில் வைத்தாள்.

"ஆனால் சாஹிதி, இப்போதே எல்லா விவகாரங்களையும் நான்தானே பார்த்துக் கொண்டு வருகிறேன். இன்னும் இந்த பார்மாளிடீஸ் எதற்கு? இந்தத் திருமண விஷயத்தை லாயரிடம் சொன்னாயா?"

"இல்லை அங்கிள். உலகத்தாரின் பார்வையில் நீங்க எனக்கு யாரோ. ஆனால் என்னுடைய் கண்ணோட்டத்தில் தந்தையாய் என் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கீங்க. இதுவும் உங்க கையில்தான் இருக்கணும். என் சந்தோஷத்திற்காக இதைச் செய்தேன். மறுக்காதீங்க."

பரமஹம்சாவின் கண்களில் நீர் துளிர்த்தது அருகில் வந்து இரு கைகளால் அவள் முகத்தைத் தூக்கி நெற்றியில் முத்தம் பதித்தான். நன்றிக்கு வார்த்தைகள் தேவையில்லை.

அன்று இரவு சாஹிதியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஒரு நல்ல காரியத்தைத் தன் கையால் செய்து முடித்த சந்தோஷத்தில் அவளுக்கு தூக்கமே வரவில்லை. ஒரே ஒரு குறை. தன் சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ள பமீலாவைத் தவிர பக்கத்தில் யாருமே இல்லை. தன் உணர்வுகளை எல்லாம் டைரியில் எழுதினாள்.

மறுநாள் கல்லூரிக்குப் போனாள். மாலையில் கல்லூரியிலிருந்து திரும்பி வரும்போது பரமஹம்சா வீட்டில் இல்லை. நிர்மலா எப்போதும் போல் ஹாலில் உட்கார்ந்து பாகவதம் படித்துக் கொண்டிருந்தாள்.

தாயைப் பார்க்கும் போது சாஹிதிக்கு அதிர்ச்சியாக இருந்தது. “என்னம்மா இது? நெற்றியில் போட்டு இல்லையே, ஏன்?” என்று கேட்டாள்.

நிர்மலா மென்மையாக சிரித்தாள். “வேலைக்காரர்கள் எல்லோரும் சந்தேகப்பட மாட்டார்களா? நன்றாக இருக்காது, வைத்துக்கொள்ளதே என்று அங்கிள் சொல்லிவிட்டார். உண்மைதானே. அதான் எடுத்து விட்டேன்.”

தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டாற்போல் சாஹிதிக்கு வாயில் வார்த்தைகள் வரவில்லை. அந்த வாதனையில் உண்மை இருந்தது நிஜம்தான். ஆனால் எந்த சௌபாக்யத்திற்காக அவள் இவ்வளவு தியாகம் பண்ணியதாய் நினைக்கிறாளோ அதற்குக் கொஞ்சம் கூட மதிப்பே இல்லையா? அங்கீகாரம் கிடையாதா?

கொஞ்ச நேரத்திலேயே அவள் தேறிக்கொண்டு விட்டாள். சில உண்மைகளை ஜீரணித்துக் கொள்வதற்குக் கொஞ்சம் சமயம் தேவைப்படும்.

இரவு ஒன்பது மணிக்கு வந்தான் பரமஹசா. மூவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். பரமஹம்சாவும், நிர்மலாவும் உற்சாகத்துடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். சாஹிதியால் ஏனோ மனப்பூரவமாக அந்த சந்தோஷத்தில் பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை.

வேலைக்காரர்கள் எல்லோரும் படுத்துக்கொள்ள போனதும், நெற்றியில் போட்டு வைத்துக் கொண்டாள் நிர்மலா. பால் தம்ளரை எடுத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள் சாஹிதி.

ஏனோ நேற்று போல் அந்தக் காட்சி சந்தோஷத்தை அளிக்கவில்லை.

14

இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. பிரமஹம்சா எப்போதும் போலவே வந்து போய்க் கொண்டிருந்தான். ரகசியமாய் குடும்பம் நடத்திக் கொண்டுதான் இருந்தான். முன்னைக் காட்டிலும் சாஹிதியிடம் அன்பாய் பழகினான். ஓரிருமுறை எல்லோருமாய் சேந்து வெளியே சாப்பிட்டார்கள். சினிமாவுக்குப் போனார்கள். சாஹிதிக்கு எது வேண்டும் என்றாலும் சுயமாய் அழைத்துக் கொண்டு போய் வாங்கித் தந்தான். ஒருமுறை புத்தகக்கடையில் அவனுடைய நண்பன் தென்பட்டான்.

“என் மகள் சாஹிதி” என்று அறிமுகம் செய்து வைத்தான் பரமஹம்சா. சாஹிதி சந்தோஷத்தால் பூரித்துப் போனாள். அந்த விஷயத்தைச் சொன்னபோது நிர்மலாவின் முகத்தில் தென்பட்ட சந்தோஷத்தை, திருப்தியைப் பார்த்ததும் தன் தியாகத்திற்கு பலன் கிடைத்து விட்டதாய் அகமகிழ்ந்து போனாள்.

அன்று முதல் தேர்வுகள். வழியில் ஏதோ வேலையாய் காரை நிறுத்தி கடைக்குப் போனாள். நல்ல பேனா ஒன்றை வாங்கிக் கொண்டு வெளியே வரும்போது தொலைவில் அறிமுகமான உருவம் ஒன்று தென்பட்டது. அப்பொழுதுதான் சிம்மாசலம் கடைக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

“சிம்மாசலம்!” அவள் அழைததைக் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். ஒருவினாடி நேரம் அவன் முகத்தில் மலர்ச்சி தோன்றி மாயமாயிற்று. அவளைக் கவனிக்காதது போலவே முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டான். சாஹிதி அதற்குள் அவனை நெருங்கிவிட்டாள்.

“சிம்மாசலம்? முகத்தை ஏன் திருப்பிக் கொண்டு விட்டாய்? என் மேல் கோபமா?”

“உங்கள் மீது கோபம் கொள்ளும் அளவுக்கு நான் ஒன்றும் பெரிய மனிதன் இல்லை சின்னம்மா.”

“உன்னை வேலை விட்டு நீக்கி விட்டதாய் எனக்குத் தெரியாது சிம்மாசலம். உன்மீது ஆணை! அப்புறமாய் மம்மிதான் சொன்னாள்.”

“சரி போகட்டும் விடுங்க சின்னம்மா. நீ சௌக்கியம்தானே?” அவன் குரலில் பரிவு தென்பட்டது. “பமீலா நல்லா இருக்கா?”

“நல்லா இருக்கு சிம்மாசலம். உன் விஷயம் என்ன? எங்கே வேலை செய்கிறாய்?”

‘ஒரு சேட்டின் வீட்டில் வேலை செய்கிறேன். அங்கே நன்றாய்தான் இருக்கு சின்னம்மா. பரமஹம்சா ஐயா வந்துகிட்டு இருக்கிறாரா?”

“வந்துக்கொண்டிருக்கிறார் சிம்மாசலம். வியாபாரத்தை எல்லாம் அவர்தான் பார்த்துக் கொள்கிறார். ரொம்ப நல்லவர் இல்லையா?”

சிம்மாசலம் அவள் கண்களை உற்றுப் பார்த்தான். “ஆமாம் சின்னம்மா. ரொம்ப நல்லவர். அதான் என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.”

“அவர் நீக்குவதாவது? நீதான் சுவாமி அறையில் சுருட்டு புகைத்து தவறு செய்து விட்டாய். அவர் அதையெல்லாம் சகித்துக் கொள்ள மாட்டார் என்று உனக்குத் தெரியாதா?”

“அப்படிச் சொன்னாரா சின்னம்மா உங்களிடம்? விஷயம் அது இல்லை.”

“அப்படி என்றால் வேறு என்ன? உண்மையைச் சொல்லு. அப்போதே நினைத்தேன் வேறு ஏதோ காரணம் இருக்கும் என்று.” பரபரப்புடன் கேட்டாள் சாஹிதி.

“அது இல்லை சின்னாம்மா. எனக்குத் தெரியக்கூடாத விஷயங்கள் தெரிந்துவிட்டது எனது அவருக்குக் கோபம் வந்துவிட்டது.”

அப்பொழுது புரிந்தது அவளுக்கு. பரமஹம்சாவும், நிர்மலாவும் நெருக்கமாக இருந்தது அவன் கண்ணில் பட்டிருக்கும். எதற்கும் நல்லது என்று அவனை வேலையை விட்டு நீக்கியிருப்பார்கள்.

“அந்த ரகசியம் என்னவென்று எனக்குத் தெரியும் சிம்மாசலம். அது தவறு என்று நான் நினைக்கவில்லை. அவர் மம்மியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதாய் சொல்லி இருக்கிறார்.” பெருமையாய் சொன்னாள்.

“எத்தனை பேரை பண்ணிக் கொள்வார்? அவருக்குக் கல்யாணம் ஆன விஷயம் உங்களுக்குத் தெரியாதா?”

“தெரியும். இரண்டு மகன்கள் இருப்பதும் தெரியம். ஆனால் மனைவி அவருடன் இருப்பதில்லை. ரொம்ப நாட்களுக்கு முன்பே பிரிந்து போய் விட்டார்கள்.”

“அப்படி என்றால் முதல் முதலில் நடந்த கல்யாணம் ஒன்று மட்டும்தான் உங்களுக்குத் தெரியும் போலிருக்கு. போன வருஷம் அவர் பண்ணிக்கொண்ட இரண்டாவது கல்யாணத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்.”

“சிம்மாசலம்! நீ என்ன சொல்கிறாய்? அபாண்டமாய் எதையாவது சொல்லாதே.” கோபமாய் சொன்னாள் சாஹிதி.

“இல்லை சின்னம்மா. இப்போழுதாவாது விழித்துக் கொள்ளுங்கள். அப்பாவோட சொத்து விவகாங்களை கூட அவர்தான் பார்த்துக் கொள்கிறார் என்று தெரிய வந்தது. போன வருடம் லீவு போட்டுவிட்டு என் மகளைப் பார்க்கப் போயிருந்த போது அவர் இன்னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதைக் கண்ணால் பார்த்தேன். அந்த விஷயம் எனக்குத் தெரிந்து விட்டது என்றுதான் என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.”

காலடியில் பூமி நழுவியது போலவும், தலையில் இடி விழுந்தாற் போலவும் இருந்தது சாஹிதிக்கு. ‘சென்ற வருஷம் என்றால் அம்மாவைத் திருமணம் பண்ணிக் கொள்கிறேன் என்று வாக்களித்த பிறகுதான். முதல் மனைவியிடமிருந்து விவாகரத்திற்கு முயற்சி பண்ணிக் கொண்டு இருப்பதாய் சொன்ன சமயத்தில்தான்..’

“இது உண்மைதானா?” தனக்குள் முணுமுணுத்துக் கொள்வது போல் கேட்டாள்.

“சாமி சத்தியமாய் உண்மைதான் சின்னம்மா. வேண்டுமானால் நீயே கேட்டுக்கொள். அவள் பெயர் ராஜலக்ஷ்மி. நல்ல வசதி படைத்த குடும்பத்திலிருந்து வந்தவள்.”

சாஹிதி தூக்கத்தில் நடப்பவள் போல் வந்து காரில் உட்கார்ந்து கொண்டாள். கார் பரீட்சை ஹாலுக்கு முன்னால் வந்து நின்றது. அதற்குள் எல்லோரும் எழுதத் தொடங்கிவிட்டார்கள். தன்னுடைய பேப்பரை எடுத்துக்கொண்டு சோர்வுடன் எழுத உட்கார்ந்தாள்.

இரண்டரை மணி நேரம் முடிவடைந்து விட்டதாய் மணி அடித்தது. அவளுக்கு முன்னால் வெள்ளைத் தாள் அப்படியே இருந்தது. பரீட்சையில் தோல்வியடைந்து விடுவோம் என்று தெரியும்.

வருத்தப்படவில்லை.

அந்தத் தாளையே தந்துவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்தாள். ஏதோ தெரியாத வெறுப்பு! எரிச்சல்!

அந்த எரிச்சல் அவள் அதல பாதாளத்தில் விழுந்து விடுவதற்கு முதல் படியாய் இருந்தது. அந்த வருடம் அவள் ஃபெயில் ஆகிவிட்டாள்.

****

வீட்டிற்கு வந்ததும் வராததுமாய் தாயின் மடியில் தலையை வைத்துக்கொண்டு ஹோவென்று கதறினாள் சாஹிதி. நிர்மலா கலவரமடந்தவளாய் 'என்ன நடந்தது? என்னதான் நடந்தது?" என்று கேட்டாள்.

விசும்பிக் கொண்டே தனக்குத் தெரிந்த விஷயத்தை முழுவதுமாக தாயிடம் சொன்னாள் சாஹிதி.

ஆழமான நிசப்தம்!

அந்த நிசப்தத்தைச் சிதறடித்தபடி நிர்மலா மெதுவாய் சொன்னாள். "எனக்கு இந்த விஷயம் தெரியும் சாஹிதி."

அந்த வார்த்தைகளைக் கேட்டு சாஹிதிக்கு துக்கம் வரவில்லை. ஆச்சரியம் ஏற்படவில்லை.

மாறாக பயம் ஏறபட்டது.

பயந்து போனவளாய் தாயைக் குழப்பத்துடன் பார்த்தாள்.

பரமஹம்சா அவள் கழுத்தில் ரகசியமாக மூன்று முடிச்சு போட்டுவிட்டு, அதற்குப் பிறகும் அவன் இன்னொரு திருமணம் பண்ணிக் கொண்டிருக்கிறான் என்று தாய்க்குத் தெரியும். ஆனாலும் சும்மா இருந்திருக்கிறாள்.

அதையும்விட முக்கியமான விஷயம்...

இந்த விஷயத்தைத் தன்னிடம் ... சொ ...ல்ல...வி .... ல்லை.

******

பரமஹம்சா பதினைந்து நாட்களாய் வீட்டிற்கு வரவில்லை. நிர்மலா கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

சாஹிதிக்குக் கோபம் தணிந்து போய் அதற்குப் பதில் தாயின் மேல் இரக்கமும், என்ன நடந்திருக்கும் என்ற ஆர்வமும் ஏற்பட்டது. பரமஹம்சா அந்த யுக்தியை பலமுறை பயன்படுத்தி இருக்கிறான். பத்து, பதினைந்து நாட்கள் கண்ணில் படாமல் போய் விடுவான். தன் ஊடலை அந்த விதமாய் மறைமுகமாய் காட்டுவான். பிறகு வந்து முறுவலுடன் எதிராளியை மன்னித்து விடுவான்.

சாஹிதி அன்றைக்கு கல்லூரியை விட்டு வெளியே வந்த போது வேலைக்காரன் வரண்டாவில் குடையுடன் காத்திருந்தான்.

சாஹிதியின் மனம் முழுவதும் சந்தோஷத்தால் நிரம்பி விட்டது. மழை வரப் போகிறது என்று குடையைக் கொடுத்து

அனுப்பியிருக்கிறாள் தாய். எவ்வளவு பிரச்சனைகள் இருந்த போதிலும் தாய் அவளை மறந்து போகவில்லை. திருமணம் பண்ணிக்கொன்டாலும் தாயின் நினைப்பெல்லாம் அவள் மீதுதான்.

கார் நின்றதுமே பார்ட்டிகொவில் உற்சாகமாய் இறக்கினாள். பக்கத்திலேயே இன்னொரு கார் இருந்தது. புத்தம் புதிய கார்!

“இது யாருடைய கார்?”

“பரமஹம்சா அய்யாவுடையது.”

சாஹிதியின் முகத்தில் இருந்த சிரிப்பு மாயமாகிவிட்டது.

“மம்மி எங்கே?”

“பரமஹம்சாவுடன் அறையில் இருக்காங்கம்மா.”

காபி கோப்பையை அவள் கையில் வைத்துவிட்டுக் கோபமாய் போய் கதவை ஓங்கி தட்டினாள் சாஹிதி. திறந்தே இருத்தது கதவு.

பரமஹம்சா சோபாவில் சரிந்தபடி உட்கார்ந்து இருந்தான். நிர்மலா அவன் காலடியில் உட்கார்ந்து கொண்டு உள்ளங்காலில் மருந்து தடவிக் கொண்டிருந்தாள். எதிர்பாராமல் சாஹிதியைப் பார்த்ததுமே நிர்மலா தடுமாற்ற மடைந்தாள். பரமஹம்சா மட்டுமே லேசாய் சிரித்தான்.

“வாம்மா சாஹிதி! ஏன் அங்கேயே நின்றுவிட்டாய்? ரொம்ப இளைத்துப் போய் விட்டாய்.” அந்த குரலில் பரிவு வழிந்தோடியது.

சாஹிதி அதொன்றையும் போருட்படுத்தாதவளாய் தாய் செய்து கொண்டிருந்த காரியத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு அவன்மேல் ஏன் இவ்வளவு பக்தி? தந்தைக்கு இவ்விதமாய் பணிவிடை செய்து கண்டதே இல்லை.

அவள் எண்ணங்களை உணர்ந்து கொண்டு விட்டாற்போல் "உங்க அங்கிள் செய்த காரியத்தைப் பாரும்மா. புது கார் வாங்கிய பிறகு, திருப்பதிக்குப் போகணும் என்றால் காரிலேயே போகலாம் இல்லையா. நடந்து போனாராம். செருப்புக் கூட போடாமல் மலை ஏறி இருக்கிறார்." அவள் வார்த்தைகள் தன் செயலுக்கு விளக்கம் தருவது போல் இல்லை. அந்தக் குரலில் அவன்பால் பக்தி உணர்வு மட்டுமே வெளிப்பட்டது

"அங்கேயே ஏன் நின்றுவிட்டே சாஹிதி! அருகில் வாம்மா." பரமஹம்சா மற்றொரு முறை அழைத்தான்.

"நீங்க செய்த காரியம் எனக்குப் பிடிக்கவில்லை. உங்கள் மீது வெறுப்பாய் இருக்கிறது" என்றாள் சாஹிதி. அவள் என்றுமே அவ்வாறு பேசியது இல்லை. ரொம்ப சாது என்று பெயர் எடுத்திருந்தாள். அப்படிப்பட்டவள் அந்த விதமாய் பெசியதுமே நிர்மலா அதிர்ந்துவிட்டாள்.

"சாஹிதி!" என்று கத்தினாள் கோபமாய்.

"நீ சும்மா இரு நிர்மலா! அவளுடன் நான் பேசுகிறேன். இப்படி வாம்மா. உனக்கு எந்த விஷயத்தில் கோபம் வந்துள்ளது என்று என்னால் புரிந்து கொள்ள முடியும். நடந்தது என்ன என்று சாவதானமாய் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகும் தவறு என்னுடையதுதான் என்ற முடிவுக்கு வந்தாய் என்றால், எப்படிப்பட்ட தண்டனை கொடுக்கணும் என்று நீயே முடிவு செய்."

அவன் பேச்சில் இருந்த நேர்மை, அதற்கும் மிஞ்சிய உருக்கமும் அவளைக் கொஞ்சம் அமைதிப் படுத்தியது. ஆனால் இடத்தை விட்டு நகரவில்லை.

“சாஹிதி! அங்கிள் அவ்வளவு அன்போடு கூப்பிடும்போது அங்கேயே நின்று விட்டாயே ஏன்? வேலைக்காரர்களுக்கு முன்னால் என்னை அவமானப்படுத்த துணிந்து விட்டாயா? வந்து அருகில் உட்கார்ந்து என்ன நடந்தது என்று தெரிந்துகொள்.” நிர்மலாவின் குரலில் இருந்த வேதனைக்கு அவள் முற்றிலும் உருகிப் போய்விட்டாள். போய் சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

“காபி குடித்தாயாம்மா?” பரமஹம்சா கேட்டான்.

“இல்லை” என்றாள் மெல்லிய குரலில். அவன் யோசிப்பது போல் மனைவியை நோக்கித் திரும்பினான்.

“அடடா.. மல்லிகா இன்னும் தரவில்லையா? வந்ததுமே தரச் சொல்லி இருந்தேனே? இரு, நானே போய் கொண்டு வருகிறேன்.” நிர்மலா வெளியே போய் விட்டாள், அதுதான் முக்கியமான வேலை என்பதுபோல்.

“சாஹிதி!” அன்பு ததும்பும் குரலில் அழைத்தான் அவன். “என்மீது உனக்குக் கோபமாய் இருக்கலாம். கயவன் என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுப் போயிருக்கலாம். நீ மட்டுமே இல்லை. உன் நிலைமையில் வேறு யார் இருந்தாலும் சரி, என்னைக் குத்திக் கொன்று போட்டிருப்பார்கள். நீ இவ்வளவு சாதாரணமாக இருக்கிறாய் என்றால் அது அமைதியான உன் சுபாவதைக் காட்டுகிறது. உன் தாயைப் போலவே நீயும் என்னைப் புரிந்துகொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.” அவன்

குரல் தழுதழுத்தது. சாஹிதிக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. தர்மசங்கடமாய் இருந்தது.

அவன் மேலும் சொன்னான். "நான் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கும் ராஜலக்ஷ்மி ரொம்ப துர்பாக்கியசாலி. முப்பத்தைந்து வயது முடிந்து விட்ட போதும் கல்யாணம் ஆகவில்லை. நெருங்கியவர்கள் யாரும் இல்லை. ரொம்ப ஏழைப் பெண். தூரத்து உறவுக்காரர்கள் அவளைத் தொந்தரவு பண்ணத் தொடங்கினார்கள். துன்பம் தாங்க முடியாமல் என்னிடம் வந்தாள். தினமும் பஜனை நடக்கும் போது கவலையுடன் தென்படுவாள். பக்தி மூலமாய் முக்தியைப் பெறுவது சுலபம் என்று அவளுக்கு நான் எப்பொழுதும் உபதேசம் செய்து கொண்டிருந்தேன். அவளுக்கு என்மீது அபிமானம் இருக்கு என்று தெரியுமே தவிர, அது இன்னொரு கோணத்திலிருந்து வரும் என்று நான் நினைத்திருக்கவில்லை. தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொல்லி அவள் கேட்ட போது ஆச்சரியப்பட்டேன். அப்படி எல்லாம் யோசிப்பது தவறு என்று எடுத்துச் சொன்னேன். அன்றிரவு அவள் தற்கொலை செய்துகொள்ள முயன்றாள். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த எனக்கு அந்த விஷயம் எப்படித் தெரிந்ததோ எனக்கே தெரியாது. எழுந்து போனேன்.

அவளைக் காப்பாற்ற முடிந்தது. அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது, அவளை நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளணும் என்பது கடவுளின் உத்தரவு என்று. வந்து உங்க மம்மியிடம் சொன்னேன். அவளும் புரிந்து கொண்டு சம்மதித்து விட்டாள். இப்போ சொல்லும்மா. நான் பண்ணியதில் தவறு ஏதாவது இருக்கா?"

சாஹிதி தலை குனிந்தாள். என்ன சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லை. அவள் கண்முன்னால் ஒரு துர்பாக்கியசாலி தூக்கு போட்டுக் கொள்ளும் காட்சி நிழலாடியது.

அதற்குள் அவன் மேலும் சொன்னான். “அந்த சமயத்தில் என் மனதில் எவ்வளவு போராட்டம் நடந்தது என்று உனக்குத் தெரியாது. ஆனால் அவளுடைய திருப்தியைப் பார்த்த பிறகு நான் பண்ணியது நல்ல காரியம்தான் என்று தோன்றியது. உங்க அம்மாவுக்குத் தெரியாமல் பண்ணியிருந்தால் தவறு. உங்க மம்மிக்கு எல்லா விஷயமும் தெரியும். அவள் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறாள் என்று நீதான் பார்க்கிறாயே?”

அந்த வார்த்தை மட்டும் உண்மை! தந்தை உயிருடன் இருந்த பொழுது இல்லாத சந்தோஷம் இப்பொழுது அவளுடைய முகத்தில் தென்படுகிறது. சாஹிதி முற்றிலும் உருகிப் போய்விட்டாள்.

“சாரி அங்கிள்! தெரியாமல் ஏதேதோ சொல்லிவிட்டேன்” என்று அவரிடம் சொல்லிவிட்டுத் தன அறைக்கு வந்துவிட்டாள். பரமஹம்சா சொல்லும் பொழுது எல்லாம் உண்மைதான், தவறு இல்லை என்று தோன்றியது. ஆனால் பிற்பாடு உண்மைக்கு புறம்பாக ஏதோ இருப்பது போல் வேதனையாய் இருந்தது.

முதல் மனைவியிடமிருந்து விவாகரத்து கிடைக்காதவரையில் திருமணம் பண்ணிக்கொள்ள முடியாது என்றவன், ராஜலக்ஷ்மியை நாலுபேருக்கு முன்னால் பகிரங்கமாய் எப்படித் திருமணம் பண்ணிக்கொண்டான் என்று கேட்க மறந்துவிட்டாள். தாய் அவனுக்குக் கார் வாங்கிக் கொடுத்திருக்கும் விஷயத்தைக் கூட.

15

அன்றிரவு நிர்மலாவை அருகில் அழுத்து அணைத்துக் கொண்டு பரமஹசா சொன்னான். “உன்னைப் பார்த்தால் பதினெட்டு வயதில் மகள் இருக்கிறாள் என்றால் யாருமே நம்பமாட்டார்கள் . இருபத்தைந்து வருஷமாய் இந்த அழகை எல்லாம் எனக்காகவே பாதுகாத்து வைத்திருக்கிறாய் என்று நினைக்கும் போதெல்லாம் என் தேகமெல்லாம் சிலிர்த்துப் போகிறதுஇன்னும் சொல்லணும் . என்றால் உன்னுடன் கழித்த நேரம்தான் எனக்காக நான் வாழ்கிற நேரமாய் தோன்றுகிறது.”

பரமஹம்சாவின் வாயிலிருந்து இப்படிப் பட்ட வார்த்தைகளைக் கேட்கும் போதெல்லாம் நிர்மலாவுக்கு தான் இத்தனை நாளாய் எதை இழந்து விட்டோம் என்று புரியத் தொடங்கியது . அவன்பால் பக்தி மேலும் இருமடங்காய்ப் பெருகத் தொடங்கியது.

அவள் கணவன் உயிருடன் இருந்த பொழுது அவளைத் தொடுவது செக்ஸ் தேவைப்படும் போதுதான்அந்தச சில நிமிஷ . சுகத்தைத் தவிர, பிறகு அந்த உணர்வு கொஞ்சம் நேரம் கூட நிலைத்து இருக்காதுஅவன் கொடுத்த சுகத்திற்கு நன்றி . தெரிவிப்பது போலாவது அவனை நேசிக்க வேண்டும் என்ற எண்ணம் கூட என்றுமே வந்தது இல்லைஅது . ஒரு நித்தியக் கடமை மட்டுமேஎந்த உணர்வுகளும் இடம் பெறாத ஒரு . !நடவடிக்கை அப்படிப்பட்ட வாழ்க்கை அனுபவத்திற்குப் பிறகு இந்த சுகமும், அவன் காட்டிய நன்றியும் அவளை தன்மயக்கத்தில் ஆழ்த்திவிட்டனஅவன் மேலிருந்த அன்பு . நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருந்தது.

அன்பின் உச்ச நிலை காமம் என்பார்கள்அன்பு இல்லாமல் இரு . உடல்கள் ஒன்று சேர்ந்தால் அது வெறும் செக்ஸ்அப்படி . அல்லாமல் ஆழ்ந்து நேசிக்கும் இருவரின் சங்கமம் செக்ஸில்

உள்ள இனிமையை முழுமையாய் வழங்குகிறதுஅதைப் . பெறுவது புதிய அனுபவமாக இருந்ததால் நிர்மலா தன்னையே தான் மறந்து போய்க் கொண்டிருந்தாள்சந்திரன் அந்தக் கொஞ்ச . நேரம் மட்டும் அவளுடன் இருந்துவிட்டுத் தன் அறைக்குப் போய்விடுவான்பரமஹம்சா அப்படி அல்லாமல் . அவளை அணைத்தபடி படுத்துக் கொள்வான்அவளுக்கு வேண்டியது . அப்படிப்பட்ட பாதுகாப்புதான் அவளுடைய . 'பாதுகாப்பற்றதன்மை' அவன் நெருக்கத்தில் மாயமாய் மறைந்து போய்க் கொண்டிருதது.

அவளுடைய கவலை எல்லாம் ஒன்றுதான்ராஜலக்ஷ்மிக்காக . மதுரையில் அவள் வீட்டில் அவன் அதிகமாய் தங்க வேண்டியிருக்கிறதுவேறோருத்தியுடன் அவன் இருக்கிறான் . என்ற பொறாமை இல்லைஅவள் கண்ணோட்டத்தில் .

பரமஹம்சாஅவளைப் போன்ற பெண்களைக் காப்பாற்றுவதற்காக, கடவுளால் அனுப்பப்பட்ட தூதன்ஆனால் . அவன் உள்ளூரிலேயே இருந்தால் நன்றாக இருக்கும் என்பது அவள் எண்ணம்ஆனால் அவனிடம் இந்த . விஷயத்தை எப்படிச் சொல்லுவது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை. ஒருநாள் அவனே "உன்னிடம் ஒருவிஷயம் பேசணும் நிர்மலா" என்றான்சம்பளத்தை உயர்த்தச் சொல்லி மேலதிகாரியிடம் . .கேட்கும் பணிவுடன் கேட்டான் "என்னவென்று சொல்லுங்கள்தயக்கம் எதுக்கு .?" அதைவிட பணிவாய் பக்தியுடன் கேட்டாள் அவள்.

"ஒன்றும் இல்லைமதுரையில் இருக்கும் போதெல்லாம் என் . மனம் உன்மீதுதான் இருக்கிறதுஉன்னிடம் வந்து விட . ஆனால் .வேண்டும் என்று தவிப்பாய் இருக்கும் அங்கே ராஜலக்ஷ்மியைத் தனியாய் விட்டுவிட்டு வருவதற்கு பயம் . இங்கேயே வந்து செட்டில் ஆகிவிட்டால் என்ன? அதோடு

அங்கே இருந்தால் விஜய் வந்து அடிக்கடி பணம் கேட்டுத் தொல்லைக் கொடுக்கிறான்" என்றான் வேதனை கலந்த குரலில். தன் மனதில் நினைப்பதையே அவன் அவ்வாறு வெளிப்படுத்தும் போதெல்லாம் அவளுக்கு அவனிடம் உள்ள தெய்வாம்சம் நினைவுக்கு வரும்விஜய் அவனுடைய முதல் மனைவியின் . மகன்அவன் தொல்லையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு . இரண்டாவது மனைவியை மூன்றாவது மனைவி இருக்கும் ஊருக்கு அழைத்து வந்து விட வேண்டும் என்பது அவனுடைய திட்டம்.

"கண்டிப்பாய் அழைத்துக்கொண்டு வாங்ககாந்தி நகரில் நம் வீடு . அங்கேயே .அவர்களை காலி பண்ணச் சொல்கிறேன் .இருக்கு .இருந்து விடலாம்"

"வேண்டாம் நிர்மலாஎனக்காகக் இப்போதே நிறைய . வேண்டாம் .செலவழிக்கிறாய் என்று சொன்னாலும் கேட்டுக்கொள்ளாமல் காரை ஏஅவ்வளவு .செய்ய வைத்தாய் .சி. வாடகையை எனக்காக நீ இழப்பதில் எனக்கு விருப்பம் இல்லை . உங்க சொத்துக்கு கார்டியனாய் இருந்து, அதை மென்மேலும் வளர்க்க வேண்டியவனே தவிர அதை சூறையாடுவதற்கு இல்லைவேறு இடத்தில் சிறிய வீட்டை வாடகைக் .கு எடுத்துக் கொள்கிறேன்."

"ஊஹூம்எங்களுக்காக எவ்வளவோ .நான் சம்மதிக்க மாட்டேன் . .செய்யறீங்க எதுக்காக? நாங்க உங்களைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தில்தானே? இவ்வளவு ஆன பிறகும் நாம் தனித் தனி என்று எப்படி நினைக்க முடிகிறது உங்களால்? இந்த விஷயம் தெரிந்தால் சாஹிதியும் ரொம்ப வருத்தப் படுவாள்." அவள் குரல் தழுதழுத்தது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவன் அந்த ஊருக்கே குடி வந்து நிரந்தரமாய் செட்டிலாகி விட்டான்.

******

ஒருநாள் சாஹிதி கல்லூரியிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்த பொழுது பரமஹம்சாவின் கார் வெளியே நிறுத்தி இருந்தது தென்பட்டதுஅது . பழக்கப்பட்டுப் போன விஷயம் என்பதால் அவள் எப்பொழுதும் போலவே உள்ளே நுழைந்தாள். முன் அறையிலேயே பெரிய மாமா தென்பட்டார்அவள் முகம் . .மலர்ந்தது

“எப்போ வந்தீங்க மாமா?” என்று கேட்டபடி பக்கத்தில் வந்து உடகார்ந்து கொண்டாள்.

“காலையிலேயே வந்து விட்டேன்கோர்ட் வேலையை . முடித்துக்கொண்டு, மதியம் இங்கே வந்தேன்இனி கோர்ட் சுற்றி . .அலைய வேண்டிய வேலை வந்து சேர்ந்துவிட்டது“

“மம்மி எங்கே?”

“மம்மியும், பரமஹம்சாவும் பூஜையில் இருக்காங்களாம்.”

“அப்படி என்றால் நீங்க வந்த பிறகு மம்மி தென்படவே இல்லையா? சாப்பிட்டீங்களா?”

“ஓட்டலில் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன்வேலைக்காரன் . .டிபன் காபி தந்தான்

தன் முகத்தில் வெளிப்பட்ட வேதனை அவர் கண்ணில் படாதவாறு தலையைக் குனிந்து கொண்டாள் .‘போய் மம்மியை அழைத்துக் கொண்டு வருகிறேன் மாமா” என்றாள்.

“வேண்டாம் அம்மா பரமஹம்சாவின் பூஜை .என்றால் தவத்திற்குச் சமம்தொந்தரவு . பண்ணாதேநான்தான் இரவு . .பரவாயில்லை .வரையில் இருக்கப் போகிறேனே”

சாஹிதி பதில் பேசவில்லைமேலும் ஒருமணி நேரம் கழிந்த . பிறகும் கூட அவர்கள் வெளியே வரவில்லைஅதற்கு மேல் . பொறுக்க முடியாதவளாய் சாஹிதி எழுந்து கொண்டு "நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன் மாமாஒன்றும் சொல்ல . மாட்டார்கள்" என்று போய்க் கதவை தடதடவென்று தட்டினாள். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு நிர்மலா கதவைத் திறந்தாள் . அவசரமாய் சுற்றிக் கொண்டது போல் புடவை ஏனோதானோவென்று இருந்ததுகூந்தல் கலைந்து . இருந்தது. "என்ன?" என்றாள் கொஞ்சம் கலவரமடைந்தவளாய், கோபத்தை அடக்கிக்கொண்டே.

'பெரியமாமா வந்து ரொம்ப நேரமாகி விட்டதுஇரவு திரும்பிப் . போய் விடுவாராம்" என்றாள் சுருக்கமாய்.

"அப்படியாகொஞ்ச நேரம் .இதோ வந்து விடுகிறேன் . .பேசிக்கொண்டு இரு" உள்ளே போய் கதவைச் சாத்திக் கொண்டாள்.

"முடிந்துவிட்டதாம் மாமா.வந்து விடுவாள் ." தன் முகத்தில் இருந்த உணர்வுகளை அவர் கவனிக்காமல் இருப்பதற்கு பெரும் முயற்சி தேவைப்பட்டது அவளுக்கு.

ஐந்து நிமிடங்கள் கழித்து நிர்மலா வெளியே வந்தாள். வந்ததுமே அண்ணாவிடம் குசலம் விசாரித்தாள்அவ்வளவு . நேரமாய் வந்து பார்க்காமல் போனதற்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டாள்சமையல் அறைக்குச் சென்று . சமையல் பண்ணச் சொல்லிவிட்டுத் திரும்பி வந்து பேசத் தொடங்கினாள். பத்து நிமிடங்கள் ஆவதற்குள் உள்ளே மணி அடிக்கும் சத்தம் கேட்டது.

"பூஜை முடிந்து விட்டது போலிருக்கு அண்ணாஒரு முறை போய் . பார்த்துவிட்டு வருகிறேன்" என்று அறைக்குள் போனாள்.

“அப்பாடாஇவ்வளவு நாள்களுக்குப் பிறகு உங்க அம்மாவின் ! முகத்தில் சந்தோஷத்தைப் பார்க்கிறேன்பரமஹம்சா . உங்களுக்கு அறிமுகம் ஆனது உங்கள் அதிர்ஷ்டம்.” அவர் வார்த்தை முடியக்கூட இல்லைநிர்மலா வெளியே . பொங்கி வரும் .வந்தாள் சிரிப்பை அடக்கிக் கொள்வதற்கு தாய் செய்த முயற்சியைப் பார்த்த சாஹிதி கலவரமடைந்தவளாய் மாமாவின் முகத்தைப் பார்த்தாள்அவர் ஏதோ புத்தகம் . படிப்பதில் ஆழ்ந்து போய் விட்டிருந்தார்ஆனால் அது அத்துடன் . .நிற்கவில்லை பதினைந்து நிமிடங்களுக்கு ஒருமுறை ஏதோ விளையாட்டு போல் உள்ளே மணி சத்தம் ஒலித்ததும், அவள் ஓட்டமாய் ஓடிப் போவதும், ஐந்து நிமிடங்களுக்கு பிறகு முகம் சிவக்க குறுஞ்சிரிப்புடன் அவள் வெளியே வருவதும் நடந்தன . அவர் அதைக் கவனிக்கவில்லையே தவிர, கவனித்த சாஹிதிக்கு மானம் போய்விட்டது போல் இருந்தது. சாப்பாடு பரிமாறப்பட்டதுஆனாலும் ப .ிரமஹம்சா வெளியே வரவில்லைஅழைப்பதற்காக . உள்ளே போன நிர்மலா கொஞ்ச நேரத்தில் அவள் மட்டும் வெளியே வந்தாள். “முடியப் போகிறது அண்ணா.உங்களைச் சாப்பிடச் சொன்னார் !” மளமளவென்று பரிமாறத் தொடங்கினாள். “என்னம்மா இது? கன்னத்தில் அதென்ன ரத்தம்?” கலவரமடைந்தவராய் கேட்டார். “ஒன்றும் இல்லை அண்ணாநகத்தால் கீறிக் கொண்டு விட்டேன் ! என்னவோ .போலிருக்கு எரிச்சலாய் இருக்கே என்று பார்த்தேன்.” அவசரமாக அழுத்தித் துடைத்துக்கொண்டாள். அவர் அதை அவ்வளவாய் பொருட்படுத்தவில்லைஆனால் . பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த சாஹிதி தெளிவாய்ப் பார்த்தாள்த .ாயின் கன்னத்தில் பற்கள் அழுத்திய காயம்அந்தத் !

தட்டில் மட்டும் சாதம் இல்லாமல் கற்கள் இருந்தாலும் அவள் ஆத்திரமாய் பிடித்த பிடிக்கு மாவாக்கி விட்டிருக்கும். அண்ணா கிளம்புவதற்காக புறப்பட்டதும் நிர்மலா மறுப்பு எதுவும் சொல்லவில்லை. சாஹிதிக்கும் அவர் கிளம்புவதுதான் நல்லது என்று தோன்றியதால் மௌனமாக இருந்துவிட்டாள்அவர் . புறப்பட்டுக் கொண்டிருந்த போது பரமஹம்சா அறையை விட்டு வெளியே வந்தான்பட்டு வேட்டி ., நெற்றியில் குங்குமம், உடம்பு முழுவதும் சந்தனமாய் தெய்வத்தின் மறு உருவம் போல் இருந்தான்மாமா அவனை . வணங்கிவிட்டுப் போய்விட்டார். அவர் போனதுமே சாஹிதியின் ஆவேசம் கட்டுமீறி வெளியே வந்தது .“மம்மிமாமா ! வந்து அவ்வளவு நேரமாகியும் கூட நீ வெளியே வந்து விசாரிக்காமல் இருந்தது நன்றாக இல்லை” என்றாள் தாயைப் பார்த்து. ‘சாஹிதிஏனம்மா இந்த ஆவேசம் !?” பரமஹம்சா அருகில் வந்து கொஞ்சுவதுபோல் தோளில் கையை வைத்தபடி கேட்டான் . அவன் கையை வேகமாய் தள்ளிவிட்டு“மம்மி! நான் உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்இன்மேல் இதுபோல் ஒருநாளும் . பண்ணாதேஇருக்கும் கொஞ்ச நஞ்ச உறவுகளையும் . தொலைத்து விடாதே” என்று சொல்லிவிட்டு, விருட்டென்று தன் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள். அன்றிரவு சாஹிதிக்கு நல்ல ஜுரம் வந்துவிட்டதுஆனாலும் . யாரையும் எழுப்பவில்லைதன்னைத்தானே தண்டித்துக் . கொள்வது போல் நடுங்கியபடி அப்படியே படுத்திருந்தாள் . அந்தக் குளிரிலேயே .இன்னும் நன்றாக விடிந்திருக்கவில்லை கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்வீடு முழுவதும் . .நிசப்தமாய் இருந்தது பரமஹம்சாவின் அறைக்கதவு வெளியே சாத்தியிருந்ததுஅப்படி என்றாள் நேற்று . இரவே போய்விட்டான் போலும்.அவள் நிர்மலாவின் அறைக்குப் போனாள் .

கட்டில் மீது படுத்திருந்தாள் நிர்மலாஇரவு முழுவதும் . அழுதிருப்பது போல் அவள் கண்கள் சிவந்து உப்பியிருந்தன . சாஹிதியைப் பார்த்ததுமே அவள் விசும்பி விசும்பி அழுதுக் கொண்டே "சாஹிதி? எதற்காக இந்த தண்டனை எனக்கு? அவர் மனம் நொந்து நேற்று இரவு சாப்பிடாமல் போய் விட்டார் . என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுஉன் விருப்பம் . ஆனால் .போல் திட்டித் தீர்த்துக்கொள் கடவுளைப் போன்ற அவரை மட்டும் ஒன்றும் சொல்லாதே."

சாஹிதி விக்கித்துப் போய்விட்டாள் .தவறு செய்தது அவர்கள் . ஆனால் இப்பொழுது குற்றவாளியாய் தான் கூண்டில் நிற்க வைக்கப் பட்டிருக்கிறாள்நேற்றைய . ஜுரத்தை விட இந்த வார்த்தைகள் தான் மேலும் சோர்ந்துபோகச் செய்தன. எப்படியோ வாயைத் திறந்து "அழாதே அம்மாமாமா என்ன . நினைத்துக் கொள்வாரோ என்ற வருத்தத்தில் அப்படிப் பேசிவிட்டேன்" என்றாள்.

"மாமா ஒன்றும் நினைத்துக் கொள்ளவில்லைஉங்க . அங்கிளுக்குதான் கோபம் வந்துவிட்டதுதிரும்பிப் போய் . இப்போ நான் என்ன செய்வது .விட்டார்?" அவள் அழுகை ஓயவில்லை.

"வராமல் எங்கே போய்விடுவார்? எல்லாம் தானே வருவார்." கோபித்துகொண்டு போய்விட்ட மாப்பிள்ளைக்காக அழும் மகளைத் தேற்றும் தாயைப் போல் சாஹிதி சொன்னாள். ஒரே பாய்ச்சலில் நிர்மலா கட்டிலை விட்டுக் கீழே இறங்கி வந்தாள்.

"உன்னைக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன் சாஹிதிபோய் . அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வாநீ . அழைக்காவிட்டால் அவர் வரவே மாட்டார் .

அவர் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்கும் வரையில் நான் பச்சைத் தண்ணீர் கூட தொடமாட்டேன்" என்று தாய் இருகரங்களையும் ஜோடித்தபடி வேண்டிக்கொண்ட போது சாஹிதி திகைத்துப் போனாள்.
ஜுரத்தால் உடல் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்ததுபாடுபட்டு .
சமாளித்துக்கொண்டு'சரிம்மா, போய் அழைத்து வருகிறேன்" என்றாள்.
சூரியன் இன்னும் வெளியே வருவதற்கு முன்பே தன் தாயின் சக்களத்தியின் வீட்டிற்கு சாஹிதி புறப்பட்டாள்ஜுரம் இன் .னும் முழுவதுமாக தணியவில்லை அவளுக்கு.
****

சாஹிதி தயக்கத்துடனே அழைப்பு மணியை அழுத்தினாள்அந்த . வீடு தன் தந்தையின் வீடுதான் என்று தெரியும்ஆனால் . என்றுமே அங்கே வர வேண்டிய தேவை ஏற்பட்டது இல்லை . பரமஹம்சா அந்த வீட்டில் குடியிருக்கும் விஷயம் கூட இப்பொழுதுதான் அவளுக்குத் தெரிய வந்தது.
வேலைக்காரி கதவைத் திறந்தாள்.
"யார் வேண்டும்?"
"பரமஹம்சா."
"அப்படி உட்காருங்க." சோபாவைக் காட்டி உள்ளே போய்விட்டாள்.
பரமஹம்சா வரவில்லை.ராஜலக்ஷ்மி வந்தாள் .
ரொம்ப அழகாய் இருந்தாள் அவள்வயது கூட முப்பதுக்குள் .
தான் இருக்கும்போல் தோற்றமளித்தாள்பரமஹம்சா .
.சொன்னதற்கு முற்றிலும் மாறுபட்டிருந்தாள்
"அவர் இல்லைநீ யாரும்மா .வெளியே போயிருக்கிறார் .? என்ன வேலையாய் வந்திருக்கிறாய்?"

“என் பெயர் சாஹிதிமம்மி அங்கிளை .நிர்மலாவின் மகள் . .அழைத்துக் கொண்டு வரச் சொன்னாள்”

“ஓஹோஅவளுடைய மகளா நீ !? என் கணவரை வலையில் போட்டுக்கொண்டு போதாத குறைக்கு அழைத்துவரச் சொல்லி மகளை வேறு அனுப்பியிருக்கிறாளா? அவளும் ஒரு பெண்தானா?” ஆவேசமாய் கத்திக் கொண்டிருந்தாள். சாஹிதிக்கு ஒருவினாடி அவள் என்ன பேசுகிறாள் என்றே புரியவில்லைபுரிந்த . அடுத்த வினாடியே அவள் காரில் வந்து விழுந்தாள்கார் வீட்டை அடைந்ததோ ., தன் அறைக்கு ஓட்டமாய் ஓடி வந்ததோ கூட அவளுக்குத் தெரியாதுஎதிரே மேஜைமீது . டிசெச்ஷன் பாக்ஸ் தென்பட்டதுஅதிலிருந்து கூறிய கத்தியை . வெளியே எடுத்து உள்ளங்கையில் அழுத்திக்கொண்டாள்வலி . தெரியவில்லை என்றாலும் ரத்தம் ஆறாய ஒழுகத் தொடங்கியது. வழியும் ரத்தத்தைப் பார்த்துக்கொண்டே அவள் அழத் தொடங்கினாள்அதைப் . பாரநாய்ட் என்பார்களோ அல்லது ‘ஸ்கிஜோ ப்ரேனியா’ என்பார்களோ மனவியல் நிபுணர்களுக்குத் தான் தெரியும்.

அது ஆரம்பம் மட்டும்தான்.

16

பாவனாவுக்கு இன்னும் புது மணப் பெண்ணுக்குரிய வெட்கம் போகவில்லை.

பாஸ்கர் ராமமூர்த்தி அவளை அன்பாகத்தான் நடத்தி வந்தான். அன்று ஏனோ கணவன் பரபரப்புடன் இருந்ததை கவனித்தாள். காலையிலேயே அவன் புறப்பட்டுப் போய்விட்டான். அவன் போனது நிர்மலாவின் வீட்டிற்கு.

மாமனாரின் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்த பிறகு அவன் இவ்வளவு நாளாய் காத்திருந்தது நல்ல நாளுக்காக. தன் மனைவியின் மூலமாய் வந்துக் குவியப் போகும் லட்சக்கணக்கான சொத்துக்காக முகூர்த்த நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

பாவானாவின் உண்மையான தந்தை சந்திரன் இறந்துவிட்டான் என்றும், வேறு யாரோ கார்டியன் அந்த விவகாரங்களை எல்லாம் பார்த்து வருகிறான் என்றும் தெரிய வந்தது. அது கொஞ்சம் அதிருப்தியைத் தந்தாலும், தாய் உயிருடன் இருக்கிறாள் இல்லையா என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டான். உண்மையை எடுத்துச் சொல்லப் போகும் அந்த முகூர்த்த நேரத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கும் போதே அவன் மனம் ஒரு நிலையில் இல்லாமல் பரபரத்தது. தாயும் மகளும் சந்திக்கப் போகும் காட்சியைக் கற்பனையில் கண்டு களித்தபடியே அந்தப் பங்களாவுக்குள் அடியெடுத்து வைத்தான்.

முன் ஹாலில் பரமஹம்சா உட்கார்ந்திருந்தான்.

“என் பெயர் பாஸ்கர் ராமமூர்த்தி. உங்களிடம் கொஞ்சம் பேசணும்” என்றான் அவன். அந்த விசாலமான ஹாலில் பரவியிருந்த நிசப்தம் அவனை பயமுறுத்தியது. அவ்வளவு பெரிய ஹாலில் அவர்கள் இருவர் மட்டுமே இருந்தார்கள்.

பிரமஹம்சா நிமிர்ந்து அவனைப் பார்த்தான். “சொல்லு தம்பி! என்ன விஷயமாய் பேசணும்?”

பாஸ்கர் ராமமூர்த்திக்கு அவனைப் பார்த்ததும் வியர்த்துக் கொட்டியது. நிர்மலாவைச் சந்தித்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று தோன்றியது. பல லட்சங்களுக்கு கார்டியனாக இருக்கும் ஒருவன் இப்படி இருப்பான் என்று அவன் எதிர்பார்த்திருக்க வில்லை. நெற்றியில் குங்குமம், கழுத்தில் ருத்ராட்ச மாலையுமாய் பார்த்த மாத்திரத்தில் முனிவரைப் போல் தோற்றமளித்தான். ஆனால் உடைகள் மட்டும் எல்லோரையும் போல் இருந்தன.

“சீக்கிரமாய் சொல்லுப்பா. எனக்கு பூஜைக்கு நேரமாகிறது” என்றான் பரமஹம்சா.

”இறந்து விட்ட சந்திரனின் சொத்துக்கு நீங்கள்தான் கார்டியனாய் இருக்கீங்க என்று தெரிந்தது. அந்த விஷயமாய் பேச விரும்புகிறேன்” என்றான் துணிச்சலைக் கூட்டிக்கொண்டு.

பிரமஹம்சா பதில் பேசவில்லை. பொருள் போதிய பார்த்தான். அவ்வளவுதான். எந்த உணர்வுகளும் இல்லாத அந்த முகத்தைப் பார்த்த போது கொஞ்சம் அதைரியமாக இருந்தது.

“சொத்தைப் பற்றிப் பேசணும் என்று வந்திருக்கிறேன்” என்றான் திரும்பவும்.

“சொல்லு, கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். அந்த விவரங்கள் உனக்கு எதற்காக தேவை என்று தெரிந்து கொள்ளலாமா?”

“சொத்து விவரம் மட்டுமே இல்லை என்று வையுங்கள். அவர்களுடைய மகள் சாஹிதியைப் பற்றிய ரகசியம் எனக்குத் தெரியும்.”

பரமஹம்சா அதிர்ந்துவிடவில்லை. கவனமாய்ப் பார்த்திருந்தால் அவன் கண்களில் தென்பட்ட மாறுபாட்டை பாஸ்கர் ராமமூர்த்தி கண்டு பிடித்திருக்கலாம். ஆனால் அந்தக் கண்களை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தான் அவன்.

“அது என்ன ரகசியம்?” அந்தக் குரலில் எந்த விதமான தடுமாற்றமோ சந்தேகமோ இருக்கவில்லை.

“அவள் சந்திரனுக்கும், நிர்மலாவுக்கும் பிறந்த குழந்தை இல்லை. அவர்களின் குழந்தை வேறொரு இடத்தில் வளர்கிறாள். அதுக்கு என்னிடம் சாட்சியம் இருக்கிறது.”

பரமஹம்சா அவனைக் கூர்ந்து பார்த்தான். நன்றாக படித்தவனாய் தான் தோன்றினான். பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து வந்தவனாய் தோன்றவில்லை.

“அப்படியா? எங்கே அந்த சாட்சியம்? காட்டு.” அவன் நேரடியாய் கேட்டு விடவும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டான் பாஸ்கர் ராமமூர்த்தி.

“எங்க அம்மா இறக்கும் முன் எனக்கு இந்த விஷயத்தைச் சொன்னாங்க. முதலில் அவள் ஏதோ த்ரில்லுக்காக இந்த மாதிரி குழந்தைகளை மாற்றி இருக்கிறாள். குழந்தையின் தொடையில் மச்சத்தைப் பற்றி கூட சொன்னாங்க.” பாஸ்கர் ராமமூர்த்தி பொறுமையாய் இருபது வருடங்களுக்கு முன்னால் நடததைச் சொன்னான். பரமஹம்சா முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

“முடிந்துவிட்டதா?” இறுதியில் கேட்டான்.

“நான் சொல்வது சத்தியம். அவர்கள் இரண்டு பேரின் பிறப்புச் சான்றிதழ்களின் காப்பியைப் பாருங்கள். ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் பிறந்தார்கள். எங்க அம்மா பண்ணிய குறும்புச் செயலால் இரண்டு குழந்தைகளின் தலையெழுத்தும் மாறிப் போய் விட்டது. சாஹிதி பணக்கார வீட்டுக்கு வந்துச் சேர்ந்தாள்.”

“இன்னொரு பெண் ஏழையின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாளா?”

“ஆமாம். அவர்கள் ரொம்ப ஏழை. தந்தை ஸ்கூல் வாத்தியார். தாய் கேன்சர் நோயில் இறந்துவிட்டாள்.”

“அப்படியா? கதை ரொம்ப நன்றாய் இருக்கு. இதற்காக ரொம்பக் கஷ்டப்பட்டு இருக்கிறாய் என்று சொல்லு.”

“இது கதை இல்லைங்க. வேண்டுமானால் இந்தப் போட்டோவைப் பாருங்கள். சந்திரன், நிர்மலாவின் ஜாடை நன்றாக தெரிகிறது” என்று பாவனாவின் போட்டோவைக் காட்டினான். அந்தப் பெண் அழகாய் இருந்தாள். ஆனால் நிர்மலா, சந்திரன் இருவரின் ஜாடை அச்சுபோல் இருப்பதாகத் தெரியவில்லை.

“இந்தப் பெண் சந்திரனின் மகள் என்கிறாயா? இதுதானா உன்னிடமுள்ள சாட்சியம்?” சிரித்தான் பரமஹம்சா. “இதோ பார் தம்பி! உனக்கு ஏதாவது உதவி வேண்டும் என்றால் நேரடியாக கேள். இப்படிப்பட்ட கட்டுக்கதை எல்லாம் சொல்லத் தேவையில்லை.”

“இல்லைங்க. இதெல்லாம் உண்மை. எனக்கு வேண்டியது உதவி இல்லை. சொத்து! என் மனைவியின் சொத்து.”

“அப்படி என்றால்?”

“பாவனா என் மனைவி.”

“ஓஹோ! இதுதானா உன் திட்டம்? இப்போ புரிந்துவிட்டது. பாவம், ரொம்பத்தான் கஷ்டப்பட்டு விட்டாய். நான் போலீசாரைக் கூபிடுவதற்கு முன்னால் போய்விடு. உன்னைப் பார்த்தால் எனக்கு இரக்கமாய் இருக்கு.”

“என்ன சார் இது? இப்படி எடுத்தெறிந்துப் பேசறீங்க? நான் சொன்னதெல்லாம் உண்மை சார்.”

“நீ சொன்னது எல்லாம் உண்மையாகவே இருந்தாலும் உன்னால் நிரூபிக்க முடியாது. இந்த மச்சங்கள், பிறப்புச் சான்றிதழ்கள் கோர்ட்டில் நிற்காது. உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? எங்க சாஹிதி பிறந்த தேதி நவம்பர் பதிமூன்று இல்லை. மே பதினைந்து. ஸ்கூல் ரிக்கர்டுகளைப் புரட்டிப் பார்த்தால் உனக்கு அந்த விஷயம் அப்போதே புரிந்திருக்கும். பாவம், டூப்ளிகேட் சர்டிபிகேட்க்காக ரொம்பவும் சிரமப்பட்டிருகிறாய்.”

பாஸ்கர் ராமமூர்த்தியின் முகம் கறுத்தது. சாஹிதியின் பிறந்த தேதி பள்ளிக்கூடத்தில் வேறொன்றாய் இருந்தால், தான் அந்த விஷயத்தை நிரூபிக்க வேண்டும் என்றால் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும். அவன் எதிர்பாராத திருப்பம் இது. அவனுக்கு வியர்த்துக் கொட்டத் தொடங்கியது. இதையெல்லாம் அவன் எதிர்பார்க்கவில்லை. பாவனா தன் மகள் என்று தெரிந்ததுமே நிர்மலா ஓடி வந்து சின்ன வயதில் தவறிவிட்ட தன் மகளை

கட்டிக்கொள்வாள் என்றும், அந்தச் சந்திப்பு மிக அருமையாய் இருக்கும் என்றும் நினைத்துக் கொண்டிருந்தான்.

பாவனாவுடன் தனக்கும் இந்த வீட்டில் ராஜோபசாரம் நடக்கும் என்றும் எண்ணியிருந்தான். இந்த சாட்சியங்களை, லிடிகேஷன்களை எதிர்பார்க்கவில்லை.

பரமஹம்சாவுக்கு அவனைப் பற்றிக் கொஞ்சமாய் தெரிய வந்தது.

“என்ன தம்பி? சொத்து வரும் என்று அந்தப் பெண்ணைக் கல்யாணம் கட்டிக் கொண்டாயா?”

பாஸ்கர் ராமமூர்த்தி ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தான். “நான் சொன்னதெல்லாம் உண்மைதான் சார். அவர்கள் பிறந்ததேதி சர்டிபிகேட் எனக்கு ஆஸ்பத்திரியிலிருந்து தான் கிடைத்தது. அந்த ரிக்கார்டுகள் எல்லாம் இன்னும் அங்கேதான் இருக்கு. கோர்ட்டுக்குப் போனால் எல்லாம் வெளியே வரும்.”

“கோர்ட்டில் எல்லோருக்கும் முன்னால் உன் மனைவியின் தொடையில் இருக்கும் மச்சத்தைக் காட்டச் சொல்லப் போகிறாயா?” பரமஹம்சா மெல்லச் சிரித்தான். “நீ எவ்வளவு கஷ்டப்பட்டாலும் லாபம் இல்லை. சந்திரன் தன் சொத்தை எல்லாம் மனைவியின் பெயரில்தான் எழுதி வைத்திருக்கிறான். அவள் அதை மகளுக்குத்தான் கொடுக்கணும் என்ற அவசியம் இல்லை. சொத்து முழுவதும் உன் கைக்கு வரும் என்று எப்படி நினைத்தாய்?”

“ஜோதிடம்! அவதார் பாபா எனக்கு ஜோசியம் சொல்லி இருக்கிறார். மனைவியின் மூலமாய் லட்சக் கணக்கான சொத்து

கைக்கு வரும் என்று. அவர் வார்த்தை பொய்க்காது. எனக்குத் தெரியும்."

"அப்படியா? நான் யாருன்னு தெரியுமா? ஜோதிடர்களுக்கே கடவுள்! என்னைப் பற்றி எப்போதும் கேள்விப்பட்டு இருக்க மாட்டாய். நான் சொல்கிறேன் சரியான ஜோசியம். ஒருவாரத்திற்குள் உனக்கு மூன்று கண்டங்கள் இருக்கு. அந்த மூன்றிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தால் பிழைத்துக் கொள்வாய். அப்பொழுது கூட உனக்கு மன நிம்மதி இருக்காது. ஒவ்வொரு நாளும் நரகத்தை அனுபவிப்பாய். போ.. என் ஜோசியம் தவறு என்று நிரூபிக்க முடிந்தால் திரும்பி வா. அப்பொழுது பேசிக்கொள்வோம்" என்று உள்ளே போய் விட்டான்.

பாஸ்கர் ராமமூர்த்தி இயலாமையுடன் வெளியே வந்தான். தன் திட்டம் இப்படி தவுடுபொடி ஆகிவிடும் என்று கனவிலும் எண்ணியிருக்கவில்லை. இந்த கார்டியனை சந்திக்காமல் நிர்மலாவையே சந்தித்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆம், இந்த யோசனை அவனுக்குத் தட்டாமல் போனது துரதிர்ஷ்டம். நாளைக்கே நிர்மலாவைச் சந்திக்க வேண்டும். பெற்ற தாயின் வயிறு! பாவனாவைப் பார்த்தால் உருகிப் போகாமல் இருக்காது.

எவ்வளவு யோசனையில் இருந்த போதிலும் அவன் ஸ்கூட்டரை மெதுவாகத்தான் ஒட்டிக் கொண்டிருந்தான். சாதாரணமாகவே அவன் மெதுவாகத்தான் ஒட்டுவான். இன்று அந்த ருத்ராட்ச மாலை அணிந்த நபர் சொன்னதைக் கேட்டதும் பயந்தவாறு மெதுவாய் ஒட்டிக் கொண்டிருந்தான். எதிரே ட்ராபிக் சிக்னல் தென்பட்டது. அவன் அருகில் போகும் போது சிவப்பு விளக்கு எரிந்தது. ஸ்கூட்டரை நிறுத்தாமல் முன்னோக்கி ஓட்டினான்.

இடது பக்கத்திலிருந்து ஒரு கார் வேகமாய் வந்து கொண்டிருந்தது. பாஸ்கர் கலவரமடைந்தான். பிரேக் போடக் கூட நேரம் இருக்கவில்லை.

கார் கிறீச்சென்று நின்றது. அவன் துள்ளிக் கீழே விழுந்தான். தன் கதை முடிந்துவிட்டது என்றுதான் நினைத்தான். ஆனால் அதிர்ஷ்டவசமாக தலையில் அடிபடவில்லை. கால் சுளுக்கிகொண்டு விட்டது. கையில் கீறல் ஏற்பட்டது.

மக்கள் சுற்றிலும் கூடி விட்டார்கள். "என்ன அவசரம்? சிவப்பு விளக்கு எரிவதைக் கூட போருட் படுத்தவில்லை. டிரைவர் சமயத்தில் பிரேக் போட்டதால் தப்பிக்க முடிந்தது. இல்லாவிட்டால் இந்நேரம் நேராய் சுவர்க்கதிற்குப் போய்ச் சேர்ந்திருப்பீங்க."

அவனுக்கு அந்த வார்த்தைகள் எதுவும் காதில் விழவில்லை. பரமஹம்சா சொன்னதுதான் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'நான் ஜோதிடர்களுக்கே கடவுள்!' என்ற வார்த்தைகள் செவிகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கும் போது அவனுக்கு நினைவு தப்பிவிட்டது.

*****

பாஸ்கர் ராமமூர்த்திக்கு நினைவு திரும்பிய பொழுது மேலும் அரைமணி ஆகிவிட்டிருந்தது.

கிழிந்த ஆடையுடன், முழங்கையில் காயத்துடன் வந்து கொண்டிருந்த கணவனைப் பார்த்ததுமே பாவனா கலவரமடைந்தவளாய் "என்ன நடந்ததுங்க?" என்று கேட்டாள்.

அப்பொழுது அவர்களுக்குத் திருமணமாகி ஒரு வாரம்தான் ஆகியிருக்கும்.

அவனுக்கு மட்டும் அவள் தன்னைப் பிடித்த சனியாய் தோன்றினாள். லட்சங்களை எதிர்பார்த்து எதிர்காலத்தில் பணக்காரன் ஆகிவிடுவோம் என்று கனவுகண்டு, சல்லிக்காசு வரதட்சணை வாங்கிக்கொள்ளாமல் இந்த தரித்திரத்தைக் கட்டிக்கொண்டான். இப்போ நடந்தது என்ன? இரண்டுங்கெட்டான் ஆகிவிட்டான்.

வேறு யாரையாவது பண்ணிக்கொண்டு இருந்தால் வரதட்சணையாவது கிடைத்திருக்கும். அவன் ஏமாந்து போய்விட்டான்.

எல்லோரும் தன்னைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதோ! அவன் மனைவியே சிரிக்கிறாள். மேலும் “என்ன நடந்தது?” என்று வேறு கேட்கிறாள்.

ரா...ட்..ச..சி!

இவ்வாறு நினைத்துக் கொண்டிருந்த பாஸ்கர் ராமமூர்த்தி அருகில் வந்து நின்ற பாவனாவை கையை நீட்டி பலமாக அடித்தான். கன்னத்தில் வந்து விழுந்த அடிக்கு பாவனா சுருண்டு கீழே விழுந்தாள்.

கணவன் தன்னை ஏன் அவ்வாறு அடித்தான் என்று அவளுக்குப் புரியவில்லை. அவள் ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவளாகவே இருக்கலாம். பணம் காசு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவள் வீட்டில் ஒருவருமே அவளை ஒருவார்த்தை எடுத்தெறிந்து பேசியது கிடையாது. அப்படிப்பட்ட அன்பு நிறைந்த குடும்பத்திலிருந்து வந்த பெண், காரணமில்லாமல் கணவன் அடித்ததும் சிலையாய் நின்றுவிட்டாள்.

“கொஞ்சம் உப்பு கொண்டு வந்து திருஷ்டி சுற்றி அடுப்பில் போடு” என்றான் பாஸ்கர் ராமமூர்த்தி எரிந்து விழுந்தபடி. அவள் அப்படியே செய்தாள்.

அவன் போய் படுத்துக்கொண்டான். நள்ளிரவு தாண்டியது.

அவள் அப்படியே முழங்காலில் தலையைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு ஏனோ இது அபசுருதியாய் தோன்றியது.

வரதட்சணை இல்லாமல் பாஸ்கர் ராமமூர்த்தி தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதாய் முன்வந்த போது பூரித்துப் போய்விட்டாள். ஆனால் முதல் நாளே... முதல் இரவு அன்றே...

“எல்லோரும் உங்களை எப்படி கூப்பிடுவார்கள்?” கேட்டாள் பாவனா. அறையில் ஊதுபத்தியின் நறுமணம் பரவியிருந்தது.

“வீட்டில் எல்லோரும் மூர்த்தி என்று கூப்பிடுவார்கள். ஆபீசில் பாஸ்கர் என்று அழைப்பார்கள்.”

“அப்படி என்றால் நான் ராமு என்று கூப்பிடுகிறேன். அந்த அழைப்பு என் ஒருத்திக்கி மட்டுமே சொந்தமாக இருக்கவேண்டும். சரிதானே?”

அவன் முகம் கறுத்து விட்டது. “வேண்டாம். எனக்குப் பிடிக்காது. என் தங்கை ஒருத்திதான் அப்படி கூப்பிடுவாள். அவளுக்கு மட்டும்தான் அந்த உரிமை உண்டு. அப்படி வாக்குக் கொடுத்திருக்கிறேன்.”

அவள் புரியாதவளாய் “உங்களுக்குத் தங்கை இருப்பதாய் எனக்குத் தெரியாதே?” என்றாள்.

“தங்கை என்றால் சொந்த தங்கை இல்லை. சிறு வயதிலிருந்தே எங்கள் பக்கத்து வீட்டில் இருக்கிறவள். எங்களுக்குள் நல்ல பழக்கம் உண்டு.”

“கல்யாணத்துக்கு வந்ததாய்த் தெரியவில்லையே?”

“வசதிகள் போறாமல் கஷ்டபடுவாள் என்று அழைத்துக் கொண்டு வரவில்லை” என்றான் அவன். “எங்க அம்மா நர்ஸ் இல்லையா. எப்போதும் ட்யூட்டிக்குப் போய்விடுவாள். நான் பெரும்பாலும் அவர்கள் வீட்டில்தான் இருப்பேன். அவங்கம்மா எனக்கு எல்லாமே பண்ணுவாள். இப்போ அந்தம்மா இல்லை. அவளுடைய நன்றிக்கடனை என்னால் தீர்த்துக்கொள்ளவே முடியாது.” அவன் கண்கள் கலங்கிவிட்டன. என்ன காரணம் என்று அவளுக்குத் தெரியவில்லை. தலையணையில் முகம் புதைத்துக்கொண்டு அப்படியே இருந்துவிட்டான். அவளுக்குப் பயமாக இருந்தது.

“என்னங்க!” என்றாள்.

“ஊம்.”

“என்னவாச்சு?”

“ஒன்றும் இல்லை” என்று அவளை நிமர்ந்து பார்த்தான் “பாவனா! உன்னை ஒன்று கேட்கட்டுமா?” என்றான்.

பாவானாவின் இதயத்தில் பாறாங்கல்லை அழுத்தினாற்போல் இருந்தது. பழைய நினைவுகளை, காதலைப் பற்றியும் கேட்டால் என்ன சொல்வது என்று நினைத்துக் கொண்டாள். ரயிலில் தன்னைப் பார்த்துவிட்டு, பத்திரிகையில் காதல் கடிதம் எழுதிய

சுதர்சனைப் பற்றிக் கேட்டால் என்ன சொல்லுவது? சொல்லவில்லை என்றால்? சத்தியம் பண்ணு என்று கேட்டு விட்டால்?

“கேளுங்கள்” என்றாள் எப்படியோ மனதைத் திடப்படுத்திக்கொண்டு.

“எதிர்பாராமல் உனக்கு லட்சக் கணக்கான சொத்து வந்து சேர்க்கிறது என்று வைத்துக்கொள். என்ன பண்ணுவாய்?”

அவள் நிம்மதியாய் மூச்சு விட்டாள். “எனக்கு சொத்து எங்கிருந்து வரும்? லாட்டரி சீட்டு வாங்கும் பழக்கம் கூட இல்லையே?” என்றாள் சிரித்துக்கொண்டே.

“வந்தது என்று வைத்துக்கொள். அதில் பாதியைத் தங்கைக்கு எழுதித் தருவாயா?”

“பாதி என்ன? முழுவதையுமே தந்து விடுகிறேன். போதுமா?”

“சொன்ன வார்த்தையைக் காப்பாற்றணும், தெரியுமா?”

“இப்போதே எழுதித் தரட்டுமா?” முறுவலுடன் கேட்டாள்.

“நம் வீட்டுக்குப் போன பிறகு எழுதி வாங்கிக் கொள்கிறேன்.” அது உண்மைதான் என்பது போல் சிரிக்காமல் சீரியஸாய் சொன்னான்.

அவள் பதில் சொல்லவில்லை.

“நீ ரொம்ப நல்லவள். அதான்தான் கல்யாணம் என்று பண்ணிக்கொண்டால் உன்னைத்தான் பண்ணிக்கொள்ளனும்

என்று நினைத்தேன். உன்னை என் தங்கைக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்று பயந்தேன். ஆனால் போட்டோவைக் காட்டியதுமே ஒ.கே. என்று சொல்லிவிட்டாள்."

அவள் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். அவன் அவளைப் பற்றிக் கேட்கவில்லை. இந்த அரைமணி நேரத்தில் பத்து தடவையாவது 'தங்கை' என்று குறிப்பிட்டிருப்பான். அந்த அளவுக்கு அவன்மீது தாக்கம் ஏற்படுத்திய அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

"அவள் எதுவரையில் படித்திருக்கிறாள்?"

"பத்தாம் வகுப்பு படித்துவிட்டு விட்டுவிட்டாள்."

அவள் அவனை வியப்புடன் பார்த்தாள். தான் அதிகமாய் படிக்கவில்லை என்ற தாழ்வு மனப்பான்மை அவளிடம் இருந்து வந்தது. இப்பொழுது கொஞ்சம் சமாதானமாயிற்று.

அவன் அவளை அருகில் இழுத்துக் கொண்டான். அவள் வெட்கத்தால் முகம் சிவக்க அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவள் மெல்ல மெல்ல வெட்கத்தை விட்டுவிட்டு அவனுடன் ஒத்துழைத்தாள். அவனுடைய ஆவேசத்தில் கோரிக்கை இருந்ததே தவிர சாமர்த்தியம் இருக்கவில்லை. இரண்டு நிமிடங்கள் முயற்சித்து, பக்கத்தில் சரிந்துவிட்டான். "நான்... நான்" என்று முணுமுணுத்தான். அவளுக்குப் புரியவில்லை. புரியும் வயதோ, அனுபவமோ, உலக ஞானமோ கூட இல்லை.

17

ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்குப் போனதுமே “வா.. போய் தங்கையை வீட்டிற்கு அழைத்து வருவோம். சாப்பிட வரச் சொல்லி நீதான் கூப்பிடநணும்” என்று எப்படிப் பேச வேண்டும் என்பதைச் சொல்லித் தந்து திரும்பத் திரும்ப எச்சரித்தான்.

இரண்டு வீடுகள் தாண்டியிருந்தது வசந்தியின் வீடு. இரண்டே இரண்டு குறுகிய அறைகள். சாமான்கள் எல்லாம் தாறுமாறாய் சிதறிக் கிடந்தன. சுத்தமே இல்லை. ‘வசதிகள் போதாமல் கஷ்டப்படுவார்கள் என்று அழைத்து வரவில்லை’ என்று முதல் இரவில் கணவன் சொன்னபொழுது பணக்காரர்களாய் இருப்பார்கள் என்று ஊகித்துக்கொண்டாள். வீட்டைப் பார்த்தால் நேர்மாறாக இருந்தது..

அவள் யோசனையில் ஆழ்ந்திருந்தபோதே உள்ளேயிருந்து வசந்தி வந்தாள்.. பாவனா அவளைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்துவிட்டாள். பத்தாம் வகுப்பு என்றதுமே சின்னப் பெண் என்று நினைத்திருந்தாள். ஆனால் அவள் வயது இருபத்தைந்துக்கு மேலே இருக்கும். கருப்பாய், குள்ளமாய் இருந்தாள். முகத்தில் அங்காங்கே அம்மைத் தழும்புகள் இருந்தன.

பாவனா அவளுக்கு வணக்கம் தெரிவித்தாள். அதனைப் பொருட்படுத்தாமலேயே வசந்தி “அண்ணா!” என்று ஓடிப் போய் பாஸ்கர் ராமமூர்த்தியின் கைகளில் சரிந்தாள். பாவனா சிலையாய் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள். ஏதோ திரைப்பட காட்சியைப் போல் இருந்தது அது.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவர்கள் பழையபடி ஆனார்கள். வசந்தி பாவனாவை ஏறயிறங்கப் பார்த்துவிட்டு “உன் பெண்டாட்டி அழகாய்த்தான் இருக்காடா ராமு” என்றாள்.

‘ராமு’ என்ற அழைப்பை அவள் வாயிலிருந்து வந்ததைக் கேட்டதும் பாவனாவின் மனம் சுருக்கென்றது. தன் உணர்வுகளை வெளியில் காட்டிக் கொள்ளாமல் “இன்றைக்குச் சாப்பிட வாருங்கள்” என்றாள்.

“என்ன? கோழி பிரியாணி பண்ணியிருக்கிறாயோ?”

அவள் கேலியாய் கேட்கிறாள் என்று எண்ணிக்கொண்டு “இல்லை. கத்தரிக்காய் கறி, தக்காளி ரசம்” என்றாள்.

“அப்படி என்றால் வரமாட்டேன்.”

பாவனா என்ன செய்வது என்று புரியாமல் கணவனைப் பார்த்தாள். “என் மனைவிக்கு புத்தியில்லை. அடுத்தத் தடவை பண்ணுவாள். உனக்காக நல்ல புடவை வாங்கியிருக்கிறேன். வர மாட்டாயா?”

“என்ன புடவை? ஜார்ஜெட்டா?”

“இல்லை. ஷிபான்.”

“வா.. வா. போவோம் வா.” அதை ஒரு ஜோக்காய் எண்ணிக்கொண்டு புறப்பட்டாள் வசந்தி.

அவர்கள் இருவரும் முன்னால் நடந்து போய்க் கொண்டிருக்கையில் பின் தொடர்ந்து போனாள் பாவனா.

******

பாவனாவைப் பரிமாறச் சொல்லிவிட்டு இருவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். சமையலைப் பற்றியும்,

கல்யாணத்தைப் பற்றியும் கிண்டல் அடித்துக் கொண்டே சாப்பிட்டு முடித்தார்கள்.

புதிதாய் திருமணம் பண்ணிக்கொண்டு வேறு இடத்திற்கு வந்திருக்கும் அவள், அவ்வளவு வருத்தப்படுவாள் என்று யோசித்துப் பார்க்காமல் கேலியாய் பழிப்புக் காட்டியபடி பேசிக் கொண்டிருந்தார்கள். புதுக் குடித்தனதிற்குப் போகும்போது பெண்ணுடன் துணையாய் யாரையாவது ஏன் அனுப்பி வைக்கிறார்கள் என்று புரிந்தது பாவனாவுக்கு.

அவர்கள் சாப்பிட்டு முடித்ததும், தானும் போட்டுக்கொண்டு சாப்பிட்டு விட்டு முன் அறைக்கு வந்தாள். தங்கையின் மடியில் தலை வைத்துக் கொண்டு ஊர் வம்பு பேசிக்கொண்டிருந்தான் அருமை அண்ணன். அவள் கோபமாய் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் கெஞ்சுவது போல் சொல்லிக் கொண்டிருந்தான். பக்கத்திலேயே ஷிபான் புடவை இருந்தது.

பாவானா மௌனமாய் உள்ளே போய்விட்டாள்.

தலைப்பை விரித்துப் போட்டுக்கொண்டு தரையில் படுத்துக் கொண்டாள். வெளியே வசந்தியின் கோபம் தணிந்துவிட்டது போலும். சிரிப்புச் சத்தம் காதில் விழுந்து கொண்டிருந்தது.

******

ஆபீசுக்குப் போவது.. வீட்டிற்குத் திரும்பி வருவது.. சாப்பிடுவது.. படுக்கையில் படுப்பது.. ஏதோ பண்ண வேண்டும் என்று நினைப்பது.. பண்ண முடியாமல் போவது.. உறங்கி விடுவது. இதுதான் அவனுடைய தினசரி நிகழ்ச்சி நிரல்.

பாவனா படித்தவள் அல்ல. அவளுக்கு சைக்கோ அனாலிசிஸ் தெரியாது.

வசந்தி தைரியசாலி. வாய்த் துடுக்குதனத்தால் எல்லா காரியங்களையும் சாதித்துக் கொள்வாள். தன்னிடம் இல்லாத தைரியத்தை அவளிடம் கண்ட பாஸ்கர் ராமமூர்த்தி அவளுக்கு அபிமானியாகி விட்டான். அவள் அவனுக்கு ராக்கி கட்டினாள். அவன் அண்ணன் ஆகிவிட்டான். இத்தனை நாளும் தன்னுடைய கைக்குள் அடங்கி இருந்த 'அண்ணன்' திருமணம் பண்ணிக்கொள்ளப் போவதாய் சொன்னதும், அதுவும் தான் பெண்ணைப் பார்த்து ஒ.கே. சொல்லாமலேயே அவன் சம்மதித்துவிட்டு வந்ததும் வசந்தியிடம் பொறாமையை ஏற்படுத்தின. அதனால் வந்ததுமே பாவனாவைப் பேச்சினாலேயே ஒரு பதம் பார்த்தாள்.

பாஸ்கர் ராமமூர்த்தி பரமஹம்சாவிடம் போய்விட்டு வந்த பத்து நாட்களுக்குப் பிறகு இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது.

பரமஹம்சா காரில் வந்து கொண்டிருந்தான். ஸ்கூட்டர் ஒன்று அவனைத் தாண்டி முன்னோக்கிப் போயிற்று. அதை பாஸ்கர் ராமமூர்த்தி ஒட்டிக்கொண்டிருந்தான். அவன் பரமஹம்சாவைப் பார்க்கவில்லை. பரமஹம்சாவுக்கு அவனுடைய மூன்று கண்டங்களைப் பற்றி தான் சொன்ன ஜோசியம் நினைவுக்கு வந்தது. காரின் வேகத்தைக் கொஞ்சம் அதிகரித்து அவன் பக்கமாய் ஒட்டிக்கொண்டு போய், முறுவலுடன் ஸ்டீரிங்கை பக்கவாட்டில் திருப்பி, பழையபடி போய்விட்டான்.

இந்த முறை பெரிய விபத்தே நடந்துவிட்டது பாஸ்கர் ராமமூர்த்திக்கு.

பாவனா போய்ச் சேரும்போது ஜெனெரல் வார்டில் கட்டிலில் படுத்திருந்தான் ராமமூர்த்தி. வசந்தியின் கைகளின் முகத்தைப் புதைத்துக் கொண்டு சிறுபிள்ளையைப் போல் அழுது கொண்டிருந்தான்.

அவன் அழுதது விபத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியால் அல்ல. ஜோசியம் உண்மையாகி, தனக்குச் சொத்து வருமோ வராதோ என்று! அவன் கண்முன்னால் பரமஹம்சாவின் உருவமே நிழலாடிக் கொண்டிருந்தது. நர்ஸ் அவர்களை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் பாவனா அங்கே போனாள்.

“பரவாயில்லையா சிஸ்டர்? ஒன்றும் பயமில்லையே?” பாவனா நர்ஸிடம் கேட்டாள்.

“ஒன்றும் பயப்பட வேண்டியது இல்லை. கால் பிராக்ச்சர் ஆகிவிட்டது. அவ்வளவுதான். அடிபட்டதுமே நினைவு தப்பிவிட்டதால் அப்சர்வேஷனில் வைத்திருக்கிறார்கள். கணவன் மனைவிக்கு அவ்வளவு கூட கட்டுப்பாடு இல்லாவிட்டால் எப்படி?” என்றாள் நர்ஸ்.

‘நான்தான் மனைவி, அவள் தங்கை’ என்று சொல்ல நினைத்த வார்த்தைகள் நாக்கின் நுனியில் வரையில் வந்து நின்றுவிட்டன.

கணவனிடம் போய் “என்னங்க? எப்படி நடந்தது இந்த விபத்து?” என்று கேட்டாள்.

“இப்போ இன்னொரு தடவை பண்ணிக் காட்டச் சொல்கிறாயா? கொஞ்ச நேரம் கண்ணில் படாமல் எங்கேயாவது போய்த் தொலை” என்று கத்தினான். அந்தக் கத்தலைக் கேட்டு எல்லோரும் இந்தப் பக்கமாய் பார்த்தார்கள். பாவனா அவமானத்தால் குன்றிப் போய்விட்டாள்.

“கல்யாணம் பண்ணிக் கொண்டது முதல் சனியன் என் தலையில் ஏறி உட்கார்ந்து விட்டது.” முணுமுணுத்துக் கொண்டிருந்தான்

அவன். வசந்தி அவன் தலையை வருடிக் கொடுத்தபடி தேற்றிக் கொண்டிருந்தாள்.

வார்டில் இருந்த நோயாளிகளின் நிலைமை பயங்கரமாய் இருந்தது. உடல் முழுவதும் ரத்த காயம், கட்டுகள். இதையெல்லாம் பார்த்து கணவன் மேலும் பயந்துவிட்டான் என்று எண்ணி, "வசந்தி! ஸ்பெஷல் ரூம்கள் ஏதாவது கிடைக்குமா என்று கேட்டுப் பார்க்கலாமா?" பயந்துகொண்டே மெதுவாக சொன்னாள்.

"போம்மா. சும்மா உட்கார்ந்து இருக்காமல் போய் கேட்டுப் பாரேன்." பழிப்பது போல் சொன்னாள் வசந்தி.

பாவனா பயந்தவாறு பார்த்தாள். வசந்தி கர்வம் மேலிட சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஏளனம் இருந்தது.

நீச்சல் தெரியாதவனைப் பிடித்து வலுக்கட்டாயமாக தண்ணீரில் தள்ளிவிட்டால் அவனை அறியாமலேயே கையை கால்களை உதைத்துகொண்டு கரையேறுவதற்கு முயற்சி செய்வான். வசந்தியின் அலட்சியமும், ஏளன தோரணையும் பாவனாவின் இதயத்தில் தூங்கிக் கொண்டிருந்த தைரியத்தைத் தூண்டிவிட்டது.

எழுந்து எதிரே தென்பட்ட டாக்டர் அறைக்குப் போனாள். அதற்கு முன்னால் இருந்த நர்ஸிடம் உதவியைக் கேட்போம் என்பது அவள் உத்தேசம். உள்ளே அவள் இருக்கவில்லை. இளம் டாக்டர் ஒருவன் உட்கார்ந்து சீரியஸாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

"எஸ்" என்றான் நிமிர்ந்து. ஒரு நிமிஷம் அவன் பார்வை அவள் முகத்தின் மீதே நிலைத்துவிட்டது.

“டாக்டர்!” கூப்பிட்டாள் பாவனா, அவள் குரல் அவளுக்கே கேட்காத அளவுக்கு மெதுவாய்.

“ஊம், என்ன சொல்லுங்கள்.” அதற்குள் தேறிக்கொண்டவன் கேட்டான்.

“என் கணவருக்கு ஸ்பெஷல் ரூம் ஏதாவது கிடைக்குமா என்று..”

“எந்த பெட் பேஷண்ட்?”

அவள் விவரங்களைச் சொன்னாள்.

“அதாவது எமெர்ஜென்சி வார்ட பேஷண்ட். சாதாரணமாய் ஸ்பெஷல் ரூம் யாருக்கும் தர மாட்டாகள். ஆனால் இந்த பில்டிங்கிற்கு அப்பால் ஆர்.எம்.ஒ. அவர்களின் ஆபிஸ் இருக்கு. போய் அங்கே விசாரித்துக் கொள்ளுங்கள்.”

பாவனாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த பில்டிங் மாயன் கட்டிய மாளிகையைப் போல் இருந்தது அவளுக்கு.

“டாக்டர்! எனக்கு இந்த ஊர் புதுசு. இந்த ஆஸ்பத்திரி அதைவிட புதுசு. ப்ளீஸ், கொஞ்சம் உதவி பண்ண முடியுமா?” மெதுவாய் கேட்டாள்.

அவள் குரலில் இருந்த உருக்கதிற்குதான் கரைந்து விட்டானோ அல்லது கண்களில் தென்பட்ட தீனம்தான் அவனை அசைத்து விட்டதோ தெரியாது. உடனே எழுந்து கொண்டான். “என்னுடன் வாங்க” என்று வழி நடந்தான்.

தொடர்ந்து காரியங்கள் எல்லாம் வேகமாய் நடந்து முடிந்தன. அரைமணி கழித்து பாஸ்கர் ராமமூர்த்தி ஸ்பெஷல் அறையில் இருந்தான்.

“டாக்டர்!”

போகத் திரும்பிய அவன் பாவனாவின் குரல் கேட்டு நிமிர்ந்தான்.

“தாங்க்யூ டாக்டர்! உங்கள் உதவியை மறக்க மாட்டேன்.” இரு கைகளையும் கூப்பினாள்.

“அதற்கென்ன வந்தது சிஸ்டர்! என்னால் முடிந்ததை செய்தேன். நீங்க இந்த அளவுக்கு நன்றி சொல்லத் தேவை இல்லை. நான் டாக்டர் கூட இல்லை. நாலாவது ஆண்டு மாணவன். வருகிறேன்” என்று கூறி போய்விட்டான்.

அதுவரை நிகழ்ந்ததை, பாவனா அவற்றை திறம்பட நடத்திய விதத்தையும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த வசந்தி, அவன் போனதுமே “நான் போய் எத்தனையோ தடவை கேட்டபோதும் வாயைத் திறக்கவில்லை அந்த டாக்டர். இவளைப் பார்த்துவிட்டு எப்படி ஐஸ்கட்டியாய் உருகிவிட்டான் பார்த்தாயா ராமு” என்றாள் வெறுப்புடன்.

பாவனாவின் முகம் நிறமிழந்தது. அவள் அழகானவள்தான். ஆனால் இந்த அபவாதம்?

“அவனோடு அத்தனை நேரம் என்ன பேச்சு? இவ்வளவு நாளாய் வெளியே காலடி எடுத்துவைக்க வாய்ப்பு கிடைக்காமல், இப்போ வெளியே வந்ததும் தொடங்கிவிட்டாயா உன் தேவடியாள் புத்தியை?” என்றான் கோபமாய்.

அவள் திகைத்துப் போய்விட்டாள். கணவனுடைய புதிய அவதாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“பதில் சொல்ல மாட்டாள். ஊமைக்கொட்டான் போல் வாயே திறக்க மாட்டாள். நீ போய் நாம் சாப்பிடுவதற்கு ஏதாவது வாங்கிக்கொண்டு வா” என்றான் அவன்.

வசந்தி போய் பழம் வாங்கி வந்தாள். இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள்.

பாவனா வெளியே வந்தாள். லேபர் ரூமிலிருந்து ஒரு தாயின் கதறல் காதில் விழுந்து கொண்டிருந்தது. அவள் வெளி திண்ணையில் இயலாமையுடன் அப்படியே உட்கார்ந்துவிட்டாள். அதுவரையிலும் அடக்கி வைத்துக் கொண்டிருந்த அழுகை கட்டுமீறி வெளியேறியது. “அம்மா! அம்மா! என்னை ஏன் பெற்றேடுத்தாய்?” என்று கைகளால் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள்.

தான் எந்த லேபர் ரூமுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அழுது கொண்டு இருக்கிறாளோ, அந்தப் பிரசவ அறையில் இருபது வருடங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம்தான் தன்னை இன்று இந்த நிலைக்குக் கொண்டுவந்துள்ளது என்று பாவனாவுக்குத் தெரியாது.

18

வாழ்க்கையில் ஒவ்வொருவருமே ஏதோ ஒரு வயதில் உற்சாகத்துடன் ஒரு காரியத்தைச் செய்ய முற்படுவார்கள். அதைத் திருமணம் என்பார்கள்.

எந்த தகுதியும் இல்லாவிட்டாலும் மனிதனுக்கு திருமணம் பண்ணிக்கொள்ளும் அருகதை மட்டும் உண்டு. அது தெய்வம் தந்த எளிமையான வரம்.

ஆனால் பந்தத்தை நிலை நிறுத்திக் கொள்வது மட்டும் ரொம்ப கஷ்டம். பந்தம் நீடிக்கலாம். ஆனால் அது... எல்லோரும் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்றோ, ஒழுக்க நெறிமுறைகளுக்கு பயந்தோ, தனியே போய் வாழ முடியாது என்றோ, குழந்தைகளிடம் வைத்திருக்கும் அன்பின் காரணமாகவோ, 'ஏதோ ஒரு விதமாய் போய்க் கொண்டுதானே இருக்கிறது. இப்படியே இருந்துவிட்டுப் போகட்டும்' என்றோ, பிறந்த வீட்டுக்குப் போனால் இந்தச் சுகம் கூட இருக்காது என்றோ, மற்ற விஷயங்களில் அவர் நல்லவர்தான் (அவள் நல்லவள்தான்) இந்த ஒரு விஷயத்தில் மட்டுமேதான் பலவீனம் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டு இருப்பதாலோ, துணைவரிடம் இல்லாததை வெளியில் தேடிக்கொண்டு திருப்தி அடைந்து விடுவதன் மூலமாக விவாக பந்தத்தை வெற்றிகரமாக நீடிக்கச் செய்து கொண்டு வருவது துரதிருஷ்டமானது.

இருவரும் சேர்ந்து வாழ்வேண்டியிருக்கும் போது சில விஷயங்களில் விட்டுக் கொடுத்துக்கொண்டு போக வேண்டியதுதான். ஆனால் சமாதானமாகப் போக வேண்டிய குணங்களே அதிகமாக இருக்கும் போதுதான் இடைஞ்சல் வந்து சேரும். குழந்தைகள், வீடு, பாதுகாப்பு, ஆரோக்கியமான

தாம்பத்திய வாழ்க்கை ... இவையெல்லாம் மட்டும் இல்லை என்றால் விவாக பந்தம் என்பது என்றோ சிதைந்து விட்டிருக்கும்.

கணவன் மனைவி பந்தத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்த நிறுவனம் ஒன்று அனுப்பி வைத்த கேள்வித் தாளில் "உங்கள் குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கிறது?' என்ற கேள்விக்கு தொண்ணூறு சதவீதம் இல்லத்தரசிகள் 'திருப்திகரமாய்' என்று பதில் கொடுத்தாலும், 'உங்கள் கணவரிடம் உங்களுக்குப் பிடிக்காத குணம் ஒன்றைச் சொல்லுங்கள்' என்ற கேள்விக்கு "என்னைப் புரிந்துகொள்ளா முடியாமல் போனது' என்று தொண்ணூறு சதவீதம் பேர் பதிலளித்து இருப்பது கவனிக்கத் தக்கது.

மோரீன் கிரீன் கொள்கையின்படி தாம்பத்திய வாழ்க்கை ஆங்கில எழுத்து W வுடன் ஒப்பிடலாம். முதல் இரண்டு வருடங்கள் இருக்கும் ஆர்வம பிறகு மெதுவாக குறைந்து போய்விடும்.

நள்ளிரவில் குழந்தையின் அழுகை, யார் தூக்கிக் கொண்டு சமாதானப் படுத்துவது என்ற கேள்வி, செலவுகள், எரிச்சல்கள், இவற்றால் அன்புக் கொடு கீழே இறங்கி போகாமல் என்ன பண்ணும்? ஆனால் பத்து பன்னிரண்டு வருடங்கள் ஆகும்போது, சில பொறுப்புகள், பொருளாதார ரீதியில் கொஞ்சம் காலூன்றிக் கொள்வதால் திரும்பவும் அன்பு கூடுகிறது. குழந்தைகளுக்கு பதினெட்டு, இருபத்தி இரண்டு வயது வரும் [போது திரும்பவும் வரதட்சணை பிரச்சனைகள், குழந்தைகளின் எதிர்மறையான பதில்கள், ஒத்துப் போகாத கருத்துகள்.. திரும்பவும் கொடு கீழே இறங்கிவிடும். எல்லோரும் போய்விட்ட பிறகு ஒருத்தருக்கு ஒருத்தர் என்ற உணர்வுடன் திரும்பவும் ஆரோகணம் தொடங்கி விடுகிறது.

ஆனால் ஒவ்வொரு உண்மைக்கும் சில விதிவிலக்குகள் உண்டு. பெரும்பாலான தம்பதிகளின் வாழ்க்கை W ஆக இருக்கும் போது பாவனாவின் குடும்ப வாழ்க்கை ஆங்கில எழுத்து I ஆகிவிட்டது. கீழே இறங்கியதுடன் சரி. ஆரோகணம் தென்படும் அறிகுறிகளே இல்லை.

“அப்பாவைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை. ரொம்ப வேதனையாய் இருக்கு. போய் பார்த்து விட்டு வரலாம் வாங்க” என்று பாவனா கேஞ்சியபோது பாஸ்கர் ராமமூர்த்தி ஒப்புக்கொண்டான்.

அதற்கு முன்னால் அவனுக்கு ஆக்சிடென்ட் ஆன பொழுது கடிதம் போட்டாள். தந்தை விழுந்தடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். அவர் போனதும், ‘இவ்வளவு சின்ன விஷயத்திற்கு அவரை எதுக்கு வரச் சொன்னாய்?” என்று திட்டினான் அவன்.

அவள் தலை குனிந்தவாறு பதில் சொல்லவில்லை.

“நான் ரொம்ப பயந்தாங்குளி என்றும் சின்ன விஷயத்திற்கும் கலங்கிப் போய் விடுவேன் என்றும் உன் வீட்டாருக்கு பறைச் சாற்றணும் என்பது தானே உன் எண்ணம்?”

அவள் அதற்கும் பதில் சொல்லவில்லை.

அதற்குப் பிறகு சில நாள் கழித்து அவனுக்கு இரண்டாவது தடவை ஆக்சிடென்ட் ஆன போது அவள் தந்தைக்குத் தெரியப்படுத்தவில்லை. ஆஸ்பத்திரியிலிருந்து டிச்சார்ஜ் ஆகித் திரும்பி வந்த பிறகு வசந்தி சொன்னாள்.

“இவ்வளவு பெரிய ஆக்சிடென்ட் ஆகியும் உன் மாமனார் வரவில்லையே, ஏன் ராமு?”

“அப்பாவுக்கு இதைப்பற்றி அவள் கடிதம் போடவில்லையோ என்னவோ?”

“அம்மா, அப்பா இல்லாத மாப்பிள்ளை இல்லையா? பெற்ற பிள்ளையைப் போல் பார்த்துக் கொள்ள வேண்டாமா?”

அதே சம்யத்தில் பாவனா சமையலறை வேலைகளை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள். அவர்கள் பேசுவது காதில் விழுந்தது.

“பெற்ற பிள்ளையைப் போல் பார்த்துக் கொண்டால் சொத்து பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கும் இல்லையா.” சிரிப்புகள். “இல்லாவிட்டால் ஆஸ்பத்திரி செலவை எல்லாம் தான் கட்ட வேண்டியிருக்குமோ என்னவோ என்று பயம் போலிருக்கு.”

கேட்டுக் கொண்டிருந்த பாவானா வியந்து போனாள். மனிதனுக்கு இரண்டு நாக்குகள் உண்டு என்பதை அப்பொழுதுதான் கண்கூடாகக் கண்டாள். தங்கை சொன்னதை ஆமோதிக்க வேண்டும் என்பதற்காகவே, தான் சொன்னதையே இல்லை என்று மனசாட்சிக்கு விரோதமாய்ப் பேசுபவனா தன் கணவன் என்று திகைத்துப் போய்விட்டாள்.

அவளுக்கு சைலஜாவைப் பற்றிய நினைப்பு வந்தது. சுந்தரியின் நினைப்பு வந்தது.

தந்தையை மட்டுமே பார்த்துவிட்டு எல்லா ஆண்களும் அதுபோலவே இருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தாள். அவள் எல்லை ரொம்ப சின்னது. அவள் தந்தை ஒரு பெண் தனக்கு மனைவியாய் வருவதாகச் சொன்ன போது, வேண்டாம் என்று, தங்கையாய் பார்த்துக் கொண்டார், சுந்தரியை. இங்கே அவள் கணவன் ஒரு பெண்ணை தங்கச்சி என்று சொல்லிக்கொண்டே

கட்டிக்கொண்டும், முத்தமிட்டுக் கொண்டும் சகோதர பந்ததை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான்.

கணவனுடன் பிறந்த வீட்டுக்குக் கிளம்பினாள் பாவனா. ஸ்டேஷனில் எல்லோரின் கண்களும் அவள் மீதே இருந்தன. பாவனா நல்ல சிவப்பு. ஆரோக்கியமாய் அழகாய் இருப்பாள். இன்னும் திருமணம் ஆகாத கன்னிப்பெண் போலவே இருப்பாள். (அதில் மிகை எதுவும் இல்லையே) அதோடு அவள் மஞ்சள் நிற பார்டர் புடவையை உடுத்தி இருந்தாள். அவள் மேனியின் நிறமும், அந்த பார்டரும் ஒன்றோடு ஒன்று போட்டியிடுவது போல் இருந்தன,

த்ரீ டயர் கம்பார்ட்மெண்டில் கணவன் மனைவி இருவரும் உட்கார்ந்து இருந்தார்கள். ரயில் கிளம்ப இன்னும் சில நிமிடங்களே இருந்த போது கணவன் மனைவி ஜோடி ஒன்று கைக்குழந்தையுடன் அந்த கம்பார்ட்மெண்டில் ஏறியது. குழந்தைக்கு ஒன்றரை வயது இருக்கலாம். அவள் திரும்பவும் நிறைமாத கர்ப்பிணியாய் இருந்தாள். பருமனாய் கருப்பாய் இருந்தாள். கணவன் அந்தக் குழந்தையைச் சமாதானப்படுத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தான்.

“இப்படியா பால் கொடுப்பாங்க குழந்தைக்கு? அதுகூட தெரியாதா?” என்றாள் அவள். அந்த கம்பார்த்மென்ட் முழுவதும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது. எல்லோருக்கும் முன்னிலையிலேயே கணவனை அப்படிப் பேசினாள் என்றால் வீட்டில் அவன் நிலைமை இன்னும் எப்படி இருக்குமோ என்று நினைத்துக் கொண்டாள் பாவனா. அப்படி நினைத்த போது அவன்மேல் இரக்கத்தோடு, சிரிப்பும் வந்தது.

அவர்கள் வந்து எதிரே இருந்த சீட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். பால் பாட்டிலை குழந்தையின் வாயிலிருந்து

எடுத்து, பையில் வைக்கப் போனபோது அவன் நிமிர்ந்தான். அவனைப் பார்த்ததும் பாவனா அதிர்ந்து போய்விட்டாள்.

அவன் சுதர்சன்!

அதே சமயத்தில் அவனும் அவளைப் பார்த்தான்.

ஆனால் அவன் அவளை அடையாளம் கண்டுகொள்ள கொஞ்சம் நேரம் ஆயிற்று. சில ஆண்டுகளுக்கு முன்னால் அவன் எல்லைமீறி காதலித்தாலும், அது ஒரே ஒரு தடவை பார்த்ததுதானே! அதுதான் மறந்து விட்டான். அதோடு குடும்ப வாழ்க்கை அவன் தலையில் இருந்த முடியை அந்த வயதிலேயே நரைக்கச் செய்திருந்ததோடு காதல் மயக்கத்தை ஓங்கி அடித்து தணித்து விட்டிருந்தது.

அவளை அடையாளம் தெரிந்து கொண்ட பிறகு மட்டும் அவன் அவளையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அதை கவனித்துவிட்ட மனைவி "நீங்க இப்படி வந்து உட்காருங்க" என்று இடத்தை மாற்றி தான் அவன் சீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

பாவனாவுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அது அவனைப் பற்றி இல்லை. தன்னைப் பற்றியேதான்.

ஒருகாலத்தில் எத்தனையோ அபூர்வமாக தென்பட்ட அனுபவங்கள் கொஞ்சம் வயது வந்த பிறகு நினைத்துப் பார்த்தால் சிரிப்பு வருவது போல் தோன்றும். 'பேனா நட்பு' என்ற பெயரை நினைத்துப் பார்த்தாலே அவளுக்கு இப்பொழுது சிரிப்பு வந்தது. இப்பொழுது இவனைப் பார்த்தால் சைலஜா எப்படி அழ வைப்பாளோ? ஏற்கனவே அவள் குறும்புக்காரி!

“என் இதய வீணையில் காதல் தந்திகளை மீட்டிவிட்டு போய்விட்ட சுந்தரி... உனக்காக ஆயிரம் கண்களுடன் எதிர்பார்த்துக் கொண்டே வாழ்நாளெல்லாம் கழிக்கவேண்டும் என்று தீரமானித்துவிட்ட உன் காதலன்” என்று எழுதிய சுதர்சன், அதற்குப் பிறகு சைலஜாவைக் காதலித்து, இப்பொழுது, தற்சமயம் இந்த விதமாய் எதிர்ப்பட்டு இருக்கிறான் என்றால்...

மனிதர்களுக்கு காதல் என்றால் எவ்வளவு இளப்பமாகிவிட்ட்டது!

யோசனையில் ஆழ்ந்திருந்த அவள் ரயில் நகரத் தொடங்கியதைக் கவனிக்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்து அவள் பாத்ரூம் பக்கம் போனாள். வெளியே வரும்போது கதவிற்கு அருகில் அவன் நின்று கொண்டிருந்தான். ஒரு விதமான தன்னிரக்கத்தொடு “என்னை அடியாளம் தெரியவில்லையா?” என்றான். அவன் அந்த விதமாய் அங்கே நின்றிருப்பான் என்பதை எதிர்பார்க்காத பாவனா தடுமாற்றமடைந்தவளாய் தலையை அசைத்தாள்.

அவள் அவனைத் தாண்டிக்கொண்டு போகும் போது ‘சைலஜா எப்படி இருக்கிறாள்?” என்று கேட்டான். “நன்றாகத்தான் இருக்கிறாள்.” சுருக்கமாய் சொல்லிவிட்டுத் திரும்பப் போன அவள் சட்டென்று நின்றுவிட்டாள். எப்பொழுது வந்தானோ தெரியாது, பாஸ்கர் ராமமூர்த்தி அங்கே வந்து நின்று கொண்டு அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

****

“எவன் அவன்?” அறைக்குள் அழைத்து வந்து அவன் கேட்ட முதல் கேள்வி அது.

“எனக்குத் தெரியாது.”

அவள் கன்னம் சுளீரென்றது.

“தேவிடியா மகளே! நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர், பார்த்துக் கொண்டது, சிரித்துக் கொண்டது, நீ போனதுமே அவனும் உன் பின்னாடியே வந்தது எல்லாம் கவனிக்கவில்லை என்று நினைத்து விட்டாயா? சொல்லு, யார் அவன்?”

அவள் அழத் தொடங்கினாள். அவன் விடவில்லை.கையைப் பிடித்துத் திருகி சொல்லச் சொல்லி கட்டாயப்படுத்தினான். அவள் தேம்பிக் கொண்டே நடந்ததை எல்லாம் சொன்னாள். தன் தவறு எதுவும் இல்லை என்றும், கேவலம் ரயிலில் பார்த்துவிட்டு, காதலித்து வாழ்க்கையை நாசம் பண்ணிக்கொள்ள வேண்டாம் என்றும் கடிதம் எழுதியதாகவும் ஒப்புக்கொண்டாள். ஷைலஜாவும், அவனும் காதலித்துக் கொண்டதையும், சைலஜா அவனை அழ வைத்ததையும் கூட சொன்னாள்.

கேட்டுக் கொண்டிருந்த அவன் முகம் கடினமாக மாறியது. தன்னைக் கொன்றுப் போட்டு விடுவானோ என்று நினைத்தாள். ஆனால் அவன் வேறொன்றும் பேசவில்லை. அறையை விட்டு வெளியே போய்விட்டான்.

பிறந்த வீட்டுக்கு வந்தோம் என்ற சந்தோஷம் கூட இல்லாமல் போய்விட்டது. பாவனா வந்ததை அறிந்து சைலஜா வந்தாள். அவளுடன் பேசுவது கொஞ்சம் ஆறுதல்!

பாவானவின் தந்தைக்கு வயோதிக பாரம் அதிகமாகிவிட்டது. இன்னும் மகள்களின் திருமணம் நடத்த வேண்டுமே என்ற கவலை முகத்தில் வெளிப்படையாக தெரிந்து கொண்டிருந்தது.

“எப்படிம்மா இருக்கிறாய்?” மகளைக் கேட்டான் விஸ்வம்.

“நன்றாகத்தான் இருக்கிறேன் அப்பா” என்றாள்.

“மாப்பிள்ளை நன்றாக பார்த்துக் கொள்கிறாரா?”

“நன்றாகத்தான் பார்த்துக் கொள்கிறார் அப்பா.”

அவன் மகளைப் பார்த்தான். தலை குனிந்துகொண்டாள். அவள் நிலைமை அவனுக்குப் புரிந்துவிட்டது. தந்தைக்குப் புரிந்துவிட்டது என்று அவளுக்கும் புரிந்துவிட்டது.

இருவருமே ஆதரவற்றவர்கள்தான். சில உணர்வுகளைச் சொல்வதற்கு வார்த்தைகள் தேவையில்லை.

திரும்பிப் போகும்போது சைலஜா ஸ்டேஷனுக்கு வந்திருந்தாள். பாஸ்கர் ராமமூர்த்தி ஏதோ புத்தகங்கள் வாங்குவதற்காகப் போனான். ரயில் இன்னும் வரவில்லை.

சொல்லுவோமா வேண்டாமா என்ற சங்கடத்தில் கொஞ்சம் தடுமாறிய சைலஜா “உன் கணவர் கொஞ்சம் வினோதமான ஆளாய் இருக்கிறாரே?” என்றாள்.

பாவனா வியப்பும், பயமும் கலந்த குரலில் “என்ன நடந்தது?” என்று கேட்டாள்.

“ஒன்றும் இல்லை.”

“சொல்லாவிட்டால் என்மீது ஆணை!”

சைலஜா குரலைத் தாழ்த்தி “ஆண்களை அழ வைக்கிற குணம் என்னிடமிருந்து எப்பொழுதுதான் போகுமோ? ரொம்பவும் கேட்ட குணம்தானே இது?” என்றாள்.

“என்னதான் நடந்தது?” என்றாள் பாவனா கலவரத்தோடு.

‘ச்சே.. நீ பய்படுவது போல் ஒன்றும் ஆகவில்லை. உன் கணவர் அப்படி ஒன்றும் தீர புருஷன் இல்லை.”

“உண்மையில் என்னதான் நடந்தது?”

“இரண்டு நாளாய் உன் கணவனை கவனித்துக் கொண்டுதான் வந்தேன். கொஞ்சம் வித்தியாசமான ஆளாய் தென்பட்டார். கொஞ்சம் நெருங்கிப் பேசியதும் நல்ல பழக்கம் ஏற்பட்டு விட்டது. தன்னை நீ வாழ்க்கையில் இனி புரிந்துக்கொள்ளவே முடியாது என்றான். தன் வாழ்க்கை சீர்குலைந்து போய்விட்டது என்றான்.”

பாவனாவின் இதழ்கள் பற்களுக்கிடையில் நலிந்து போய்க் கொண்டிருந்தன. அவ்வளவு எரிச்சல் அவளுக்கு என்றுமே வந்தது இல்லை. இரண்டு நாள் அறிமுகத்தில் ‘தன்னைப்’ பற்றி அவளிடம் சொன்னது! தன் சிநேகிதியிடம் கூட அவள் அவனுடைய குறையைப் பற்றி சொல்லவில்லை.

அப்படி இருக்கும் போது அவன்.....

சைலஜா மேலும் சொன்னாள். “அந்த அளவுக்காவது ஆறுதலை எதிர்பார்த்தேன் என்றான். அவனுடைய பேச்சில் விரசமோ அல்லது மற்றவர்களைப் போல் என்னை வலையில் வீழ்த்தவேண்டும் என்ற முயற்சியோ இருக்கவில்லை. அவன் விரும்புவதெல்லாம் இரக்கம் மட்டும்தான். சுதர்சனைப் பற்றிச் சொல்லி என் மடியில் தலைவைத்துக் கொண்டு அழுதான்.”

“எ,,ன்ன..து?” நடுங்கும் குரலில் கேட்டாள் பாவனா. “இவ்வளவு குறுகிய அறிமுகத்தில்..”

அவள் பேச்சை இடைமறித்தாள் சைலஜா. “பாஸ்கர் ராமமூர்த்தி போன்றவர்களுக்கு யாருடைய ‘மடி’ என்பதெல்லாம்

தேவையில்லை. தலையை வைத்துக்கொண்டு அழுவதற்கு யாரோ ஒருத்தருடைய மடி தேவை. அவ்வளவுதான்" என்றாள். "முதலில் இதையெல்லாம் உன்னிடம் சொல்லக்கூடாது என்றுதான் இருந்தேன். ஆனால் என் மீதே எனக்கு அருவருப்பு ஏற்பட்டது. சிநேகிதியான உன்னிடம் சொன்னால் தவிர அந்த அருவருப்பு போகாது போல் இருந்தது. ஐ யாம் சாரி."

ரயில் புறப்பட்டது.

பாவனா மௌனமாய் ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

'பாஸ்கர் ராமமூர்த்தி போன்றவர்களுக்கு யாருடைய மடி என்பதெல்லாம் தேவையில்லை. தலையை வைத்துக்கொண்டு அழுவதற்கு ஒரு மடி வேண்டும். அவ்வளவுதான்" சைலஜாவின் வார்த்தைகளே எதிரொலித்துக் கொண்டிருந்தன.

திருமணம் ஆன புதிதில் அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ரொம்ப முயற்சி செய்தாள். பிள்ளைப் பருவத்திலிருந்து திருமணம் ஆகும் வரையில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அழகாய்க் கதையைப் போல் நாள் முழுவதும் சொல்லி வந்தாள். ஆனால் அவன் மட்டும் வாயைத் திறந்து ஒன்றுமே சொல்ல மாட்டான். அப்படியே அவன் ஏதாவது சொன்னாலும் அது வசந்தியைப் பற்றியோ, அவ்விருவரின் பந்தத்தைப் பற்றியோ அல்லது எதிர்காலத்தில் தாம் கழிக்கப் போகும் உல்லாசமான வாழ்க்கை பற்றியோ தான் இருக்கும். அவன் பேச்சையும், செயல்களையும் பார்த்தால் அவ்விருவருக்கும் இடையே இருப்பது அண்ணன் தன்கை உறவுதானா அல்லது, அந்த முக்காட்டிற்குள் ஆடும் நாடகமா என்ற சந்தேகம் கூட வராமல் போகவில்லை. ஆனால் அது வெறும் சந்தேகம் மட்டும்தான் என்று உறுதிப் படுத்திக்கொண்டாள். திருமணமான

இளம்தம்பதிகள் இரவும் பகலுமாய் படுக்கை அறையிலேயேதான் இருப்பார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறாள். ஆனால் பாஸ்கர் ராமமூர்த்திக்கு அந்த நினைப்பே ஒருநாளும் இருந்தது இல்லை. இதெல்லாம் கூட அவளுக்கு வருத்தத்தைத் தரவில்லை.

“ஒவ்வொரு மனிதனிடமும் குறைகள் இருக்கலாம். மாப்பிள்ளையிடமும் இருக்கலாம். அதையே கவனித்துக்கொண்டு அவனுக்கு வேதனையைத் தராமல் அவனிடம் உள்ள நல்ல குணத்தை நினைவில் வைத்துக்கொள்” என்று முதல் முறை கணவன் வீட்டிற்கு அனுப்பி வைக்கும் போது தந்தை சொன்ன வார்த்தைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்து பழக்கப்படுத்திக் கொண்டாள். ஆனால் இன்று அவன் நல்லவனா அல்லது கெட்டவனா என்று அவளால் ஒரு தீர்மானத்திற்கு வர முடியவில்லை.

*****

எதிர்பாராமல் பாஸ்கர் ராமமூர்த்தியின் அக்கா, அதான், குழந்தைகள் வந்து இறங்கினார்கள். அந்த நேரத்தில் அவன் வீட்டில் இல்லை. பாவனா அவர்களுக்கு எந்தக் குறையும் ஏற்பட்டு விடாமல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டாள். சகல மரியாதைகளையும் பண்ணினாள். ஒரு விதத்தில் அவள் சந்தோஷமும் அடைந்தாள். மூர்த்தியின் நடவடிக்கையைப் பார்த்து அவள் கண்டிப்பாள் என்று ஆசைப்பட்டாள். அவள் அத்தனை அன்பாய் பேசினாள்.

“தாயில்லாத பெண் நீ. சந்தோஷமாய் இருக்கிறாயா?’ என்று கேட்டாள் பரிவுடன்.

“நன்றாகத்தான் இருக்கிறேன். எந்தக் குறையும் இல்லை அக்கா.”

“அவன் ஆஸ்பத்திரியில் இருந்தது தெரிந்து என்னால் வர முடியாமல் போய் விட்டது. எவ்வளவு அவஸ்தை பட்டாயோ என்னவோ?”

“பரவாயில்லை அக்கா” என்றாள் பாவனா.

அவள் வீட்டை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு ‘அப்படி என்றால் வீட்டுக்கு இவன் எந்த சாமான்களையும் வாங்கவே இல்லையா? ஒரு பிர்ட்ஜ் இல்லை. சோபா செட இல்லை. வரட்டும், கேட்கிறேன்.”

‘எனக்கு வேண்டியது அதெல்லாம் இல்லை அக்கா. கொஞ்சம் அன்பும், பாசமும்தான். அதைக் கொடுக்கச் சொல்லுங்கள், போதும்’ என்று சொல்லிவிடுவோமா என்று நினைத்தாள். குறைந்தபட்சம் அவளாவது தன் வேதனையைப் புரிந்துகொண்டு வசந்தி விஷயத்தில் அவனைக் கண்டித்தால் போதும். குழந்தைகள் இருவரும் பாவனாவுடன் நன்றாக ஒட்டிக்கொண்டு விட்டார்கள். வீடு கலகலவென்று சந்தடியாக இருந்தது.

ஆனால் பாஸ்கர் ராமமூர்த்தி வந்ததுமே சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. அவர்கள் வந்ததை அறிந்து வசந்தியும் வந்து விட்டாள். எல்லோரும் அறைக்குள்ளேயே உட்கார்ந்திருந்தார்கள். வெளியே வரவே இல்லை. அதற்கு அடுத்த நாள் முதல் அக்காவின் பேச்சில் முற்றிலும் மாறுதல் வந்துவிட்டது

“என்ன? என் தம்பி வரதட்சணை வேண்டாம் என்று சொல்லி விட்டான். சரிதான். அதை கேட்டுவிட்டு உங்க அப்பா விட்டது தொல்லை என்று எண்ணிவிட்டாரா ? வீட்டுக்கு வேண்டிய சாமான்களையாவது வாங்கித் தரக் கூடாதா? வேறு

மாப்பிள்ளையாய் இருந்தால் ஐம்பதாயிரமாவது செலவழிக்கத் தயாராய் இருந்தார் இல்லையா? அதை வேறு விதமாகத் தரலாம் இல்லையா?"

"உங்க தம்பிதான் எதுவுமே வேண்டாம் என்று சொல்லி விட்டாரே. அதோடு அப்பா எங்க அம்மா போன துக்கத்தில் இருந்தார்."

"அதுக்காக? கல்யாணம் பண்ணிவைத்தாரா இல்லையா? ஏதோ அவன் ஆசைப்பட்டானே என்று நாங்களும் எதுவும் கேட்கவில்லை. அதுகூட தவறாகிவிட்டது போலிருக்கே?" அவள் நாள் முழுவதும் குத்திக் காட்டிக் கொண்டே இருந்தாள்.

வசந்தி அவளுக்கு உயிராகிவிட்டாள். அவர்களுக்கு ஊரெல்லாம் சுற்றிக் காட்டினாள். சினிமாவுக்கு அழைத்துச் சென்றாள். பாவனா அவர்கள் திரும்பி வரும் வேளைக்கு சமையலைப் பண்ணி வைத்திருப்பாள். சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் சுற்றப் போய் விடுவார்கள்.

அவர்கள் இருந்த நான்கு நாட்களும் பாவனா நரகத்தை அனுபவித்தாள். குழந்தைகள் மட்டுமே அவளுடன் நேருக்கமாகி விட்டார்கள்.

அன்றைக்கு எக்ஸிபிஷனுக்குப் போவதாய்த் திட்டம் போட்டார்கள் அவர்கள். குழந்தைகள் பிடிவாதம் பிடித்ததால் பாவனாவையும் வரச் சொல்லி அழைக்க வேண்டியிருந்தது. எக்ஸிபிஷனில் வசந்தியும், பாஸ்கர் ராமமூர்த்தியும் கைகளைக் கோர்த்துக்கொண்டு பேசியபடி நடந்து போவதைப் பார்த்து வெட்கத்தால் பாவனாவுக்கு மானம் போனாற்போல் இருந்தது. கூடவே அக்காவும் அத்தானும் இருக்கிறார்கள் என்ற நினைப்பு கூட இல்லை அவர்களுக்கு. அவன் ஐஸ்க்ரீம் வாங்கி வசந்திக்கு ஊட்டிவிட்டான். அவள் வலுக்கட்டாயமாய் அவனை

ஜெயின்ட் வீலில் ஏறச் செய்தாள். பாவனா முகம் கொடுத்து பேசாமல் இருந்ததைக் கவனித்து அவர்கள் மேலும் அதிகமாக ஆட்டம் போட்டார்கள்.

வீட்டிற்கு வந்த பிறகு ...

“உங்கள் நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை. அத்தனை பேருக்கு முன்னால் தரக்குறைவாய் நடந்து கொண்டது அருவருப்பாய் இருக்கு. முக்கியமாய் உங்க அக்கா குழந்தைகள் வயதுக்கு வந்தவர்கள்.”

“என்னடி பெரிதாக சொல்ல வந்துவிட்டாய்? என் நடத்தையில் குறை கண்டுபிடிக்கிறாயா? என் தங்கையோடு கொஞ்சம் ஜாலியாய் இருந்துவிட்டால் நீ ஏன் பொறாமையில் வெந்து சாகிறாய்?” பாஸ்கர் ராமமூர்த்தியின் கத்தலைக் கேட்டு எல்லோரும் அந்த அறைக்குள் வந்து விட்டார்கள்.

“என்ன விஷயம்? என்ன சொல்கிறாள்?”

“எனக்கு பாடம் சொல்லித் தருகிறாள் அக்கா. கல்யாணம் ஆவதற்கு முன்னால் எவனையோ காதலித்து இருக்கிறாள். ரயிலில் வெட்கமில்லாமல் சரசமாடி இருக்கிறாள். தங்கையோடு நான் கொஞ்சம் ப்ரீயாய் இருப்பது தவறாம். நீதி போதனை செய்கிறாள்.”

அக்காவின் கணவர் சரேலென்று எழுந்தார். “நான் அப்போதோ சொன்னேன், இந்த சம்பந்தம் நமக்கு வேண்டாம் என்று. சொத்து கைக்கு வரும் என்று துடியாய் துடித்தான். காலணா காசுக்குப் பயன்படாத ஜென்மம” என்றார்.

இரண்டு பெண்கள், அதுவும் வயது வந்தவர்கள் இருக்கும்பொழுது அவர் அப்படிப் பேசியது அருவருப்பாய் இருந்தது பாவனாவுக்கு. “நீங்க எனக்கு அண்ணனைப் போன்றவர். என் கஷ்டசுகங்களைத் தெரிந்துகொண்டு உறுதுணையாய் நிற்க வேண்டியவர். நீகளே இப்படிப் பேசுவது நன்றாக இல்லை” என்றாள்.

‘என்ன? எங்க அத்தானை, வீட்டிற்கு வந்த விருந்தாளியை அவமானப்படுத்துகிறாயா? எவ்வளவு தைரியம் உனக்கு?” பாஸ்கர் ராமமூர்த்தி அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தான்.

பிறகு யார் பெரிதாக கத்தினார்களோ தெரியாது. நள்ளிரவில் அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் எல்லோரும் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார்கள். பாவனாவுக்கு அந்த நான்குபேரும் மனிதர்களாய்த் தோன்றவில்லை. அவ்வளவு பேருக்கு முன்னால் அடித்ததற்கு அவமானம் கூட ஏற்படவில்லை.

தனிமை என்ற கடலின் அடித்தளத்தை நோக்கி அவள் கொஞ்சம் கொஞ்சமாய் இழுத்துச் செல்லப் படுகிறாள். மேலே இழுப்பதற்கு ஒரு கை வேண்டும். ஒரு சிறிய ஆறுதல் அவளுக்கு வேண்டும். புதைமணலில் இருந்து அவளை யாராவது இழுத்துவிட்டால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என்று தோன்றியது.

அப்படிப்பட்ட கை அவளுக்கு சீக்கிரத்திலேயே கிடைத்தது.

19

தன் தாயின் இரண்டாவது கணவனுடைய இரண்டாவது மனைவியின் வீட்டிலிருந்து அவமானத்துடன் திரும்பி வந்த பிறகு சாஹிதி தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு விட்டாள்.

தாங்க முடியாத அவமானம் என்ற புயலில் சிக்குண்டு அலைந்தது அவள் மனம். எவ்வளவுதான் மறக்க வேண்டும் என்று நினைத்தாலும், ராஜலக்ஷ்மியின் வார்த்தைகளே செவியில் சுழன்று வந்து கொண்டிருந்தன. மம்மிக்கு இந்த விஷயம் தெரிந்தால் எவ்வளவு வேதனைப் படுவாள்? அவள் பரமஹம்சாவை ஆழமாய் நேசிக்கிறாள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட அவமானத்தைத் தான்கிக்கொள்வாளா?

“சாஹிதி! கதவைத் திறம்மா. என்ன நடந்தது என்று சொல்லு.” நிர்மலா வெளியே நின்றபடி கெஞ்சினாள்.

“ஒன்றும் இல்லை அம்மா. அங்கிள் மாலையில் வருகிறேன் என்று சொன்னார். அப்போது பேசிக்கொள்ளலாம்” என்றாள்.

மாலை இல்லை. அன்று பிற்பகல் நேரத்தில் வந்துவிட்டான் பரமஹம்சா. சாஹிதி அவனைப் பார்த்தும் கூட மௌனமாய் இருந்தாள்.

நிர்மலா மட்டும் “நீங்க வர மாட்டீங்களோ, என்மீது கோபம் வந்து விட்டதோ என்று நினைத்தேன்” என்றாள் கண்ணீர் மல்க.

“எனக்குக் கோபமா?” சிரித்தான் அவன். “தெய்வத்திற்கு பக்தர்கள் மீது கோபம் வராது. அவ்வப்பொழுது பாடம் கற்றுத் தரணும்

என்று எண்ணி சின்னச் சின்ன தண்டனைகளைக் கொடுப்பார். அவ்வளவுதான். நான் வரும்வரையிலும் நீ சாப்பிட மாட்டாய் என்று எனக்குத் தெரியும். எங்கே, மகளையும் கூப்பிடு. எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவோம்."

நிர்மலா சந்தோஷமாகப் போய் சாஹிதியைக் கூப்பிட்டாள்.

"எனக்கு வேண்டாம் மம்மி. பசிக்கவில்லை. நீங்க சாப்பிடுங்கள்" என்றாள் சாஹிதி.

"மகளுக்கு என்மீது கோபம் இன்னும் தணியவில்லை போலிருக்கு. பைத்தியக்காரி! நீ சாப்பிடாவிட்டால் நான் பச்சைத் தண்ணீரைக் கூட குடிக்க மாட்டேன். நான் சாப்பிட வில்லை என்றால் உங்க மம்மி எவ்வளவு நாளானாலும் பட்டினி கிடப்பாள். என் காரணமாக உங்க அம்மாவைக் கஷ்டப்படுத்துவது நியாயம்தானா சாஹிதி?"

நிர்மலாவின் பிடிவாதம் பற்றி சாஹிதி நன்றாக அறிவாள். அந்த விஷயம் தெரிந்துதான் அவன் அதுபோல் பயமுறுத்துகிறான் என்று புரிந்தது.

நிர்மலாவுக்கு மட்டும் 'நீ சாப்பிடாவிட்டால் நான் பச்சைத் தண்ணீரைக் கூட குடிக்க மாட்டேன்' என்ற வார்த்தைகளே செவிகளில் சுழன்று வந்து கொண்டிருந்தன.

"பார்த்தாயா சாஹிதி! அங்கிள் ரொம்ப வருத்தப்படுகிறார். உனக்காகப் பட்டினி கிடக்கிறார். உன்மீது எவ்வளவு அன்பு பார்த்துக்கொள். எழுந்து வா."

சாஹிதி வேறு வழியில்லாமல் எழுந்து கொண்டாள். அவள் சாப்பிட்டு முடித்துவிட்டு எழுந்து கொள்ளப் போன பொழுது

‘கொஞ்ச நேரம் உட்கார் சாஹிதி. உன்னிடம் பேசணும்” என்றான் பரமஹம்சா.

சாஹிதி திரும்பவும் உட்கார்ந்து கொண்டாள்.

‘இப்பொழுதெல்லாம் உனக்குக் கோபம அதிகரிக்கத் தொடங்கி விட்டது. என்ன பண்ணுகிறாய் என்றும், என்ன பேசுகிறோம் என்றும் உனக்கே தெரியவில்லை. தேவையில்லாத விஷயங்களைப் பற்றி அதிகமாக யோசிக்கிறாய், இல்லையா?”

சாஹிதி பதில் பேசவில்லை. “என்ன பண்ணினாள்?” நிர்மலா பயந்துபோய் கேட்டாள்.

“அனாவசியமாக ராஜலக்ஷ்மியின் மீது கோபம் கொண்டு திரும்பி வந்துவிட்டாள். ராஜலக்ஷ்மி காலை முதல் ஒரே அழுகை. ஒன்றுமே சாப்பிடாமல் அழுதுகொண்டே உட்கார்ந்து இருக்கிறாள்.”

.”நிஜமாகவா? எவ்வளவு கேட்டும் பதிலே சொல்லவில்லை. அவ்வளவு கோபம் வருவானேன்?” நிர்மலா சாப்பிடுவதை விட்டுவிட்டுக் கேட்டாள்.

“நான் ஒன்றுமே சொல்லவில்லை. எல்லாம் அவளேதான் சொன்னாள். கேட்கச் சகிக்க முடியாத வார்த்தைகளைச் சொன்னதால் தாங்க முடியாமல் வந்துவிட்டேன்” என்றாள் சாஹிதி.

“ராஜலக்ஷ்மி ஒன்றுமே சொல்லவில்லையாம். உட்காரவைத்துக் கொஞ்ச நேரம் படிப்பைப் பற்றி கேட்போம் என்று நினைத்தாளாம். முதல் முறையாய் வந்திருக்கிறாள். பூரித்துப் போய்விட்டேன். வீட்டில் புதுப் புடைவை கூட இல்லை. வெறும்

கையேடு எப்படி அனுப்புவது? என்று அவள் வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கும் போது சாஹிதி கோபித்துக் கொண்டு சொல்லாமல் வந்து விட்டாள். அவள் மனசுக்கு எவ்வளவு கஷ்டம் ஏற்பட்டு இருக்கும்?"

"பொ ...ய்.." கத்தப் போனாள் சாஹிதி. வாயிலிருந்து வார்த்தை வெளியில் வரவில்லை.

'சாஹிதி! நீ... நீ இப்படி நடந்து கொண்டாயா?" நிர்மலா அழுது கொண்டே பாதி சாப்பாட்டில் தட்டிலேயே கையை அலம்பிவிட்டாள்.

"பார்த்தாயா, உங்க மம்மியை எவ்வளவு வருத்தப் படுத்துகிறாய் பார். ரொம்ப தவறு செய்கிறாய் சாஹிதி" என்றான் பரமஹம்சா.

"இல்லை அங்கிள். அந்த ஆண்டீ மம்மியைப் பற்றி ரொம்ப அசிங்கமாய் பேசினாள். இதுதான் உண்மை." சாஹிதிக்கு துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது.

'இல்லையம்மா. நீ தவறாகப் புரிந்து கொண்டு இருக்கிறாய். உடனே போன் பண்ணி சொன்னாள். உனக்குப் போன் பண்ணுவதாய் சொன்ன போது நான்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். நீ அவளிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளணும்."

"நான் என்ன தவறு செய்துவிட்டேன்? எதற்காக மன்னிப்பு கேட்கணும்?"

“பண்ணியது தவறுதான். அனாவசியமாய் இத்தனை பேரைக் கஷ்டப்படுத்துவது சரியில்லை. என்னுடன் வா . நீ வந்தால் தவிர ராஜலக்ஷ்மி சாப்பிட மாட்டாள்.”

“இந்தச் “சாப்பிடாமல் இருப்பது” என்ற சுழற்சி எப்பொழுது முடிவடையுமோ சாஹிதிக்குப் புரியவில்லை.

“கண்டிப்பாக வருவாள். அவள் அந்த காரியத்தைப் பண்ணாமல் என் மனம் நிம்மதி அடையாது. ப்ளீஸ் சாஹிதி! போய் வா எனக்காக.”

தலை குனிந்த சாஹிதி பரமஹம்சாவுடன் போய் லட்சுமியிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டாள். தன்னைப் பார்த்தும் அவள் கண்ணீருடன் வந்து கட்டிக் கொண்டதைப் பார்த்து சந்தேகம் வந்தது.

உண்மையிலேயே அவள் சைகிக் ஆகிவிட்டாளா?

தேவையில்லாமல் தவறாகப் புரிந்து கொள்கிறாளா? அன்றிரவு யோசனைகளால் அலைக்கழிக்கப்பட்டு உறக்கம் வராததால் சாஹிதி தூக்க மாத்திரையைப் போட்டுக்கொண்டாள்.

*****

மறுநாள் அவள் தாமதமாக எழுந்து கொண்டாள். மனம் முழுவதும் உல்லாசமாய் புத்துணர்ச்சியுடன் இருந்தாற்போல் தோன்றியது. நன்றாக தூங்கியதால் வந்த புத்துணர்ச்சி அது.

அன்றைக்கு கல்லூரியில் ஒரு சிநேகிதி சாஹிதியிடம் கேட்டாள். “கொஞ்சம் களைப்பாக தென்பட்டாலும் ரொம்ப புத்துணர்ச்சியுடன் இருக்கிறாயே? என்ன விஷயம்?” என்று

கண்ணைச் சிமிட்டிவிட்டு சிரித்தாள்.” ஓஹோ! அதுதானா விஷயம்” என்றாள்.

‘என்ன விஷயம்?” வியப்புடன் கேட்டாள் சாஹிதி.

“தெரியாது போல் பாசாங்கு பண்ணாதே.”

“உண்மையிலேயே தெரியாது. சொல்லு.”

“கஞ்சாதானே?”

“கஞ்சாவா? அப்படி என்றால்?”

“கஞ்சா சாப்பிட்டு இருக்கிறாய். அப்படிதானே?”

‘அப்படி என்றால் என்னவென்று எனக்குத் தெரியாதே?”

அப்பொழுது அவள் சொன்னாள். கல்லூரிக்குக் கொஞ்சம் தொலைவில் மிகச் சாதாரணமாய் தென்படும் சிறிய பெட்டிக்கடையில்ம் ரகசியமாக கஞ்சா கிடைக்கிறது. சிகரெட்டைப் போல் செய்து, அதை புகைத்தால் மனம் எங்கேயோ பறந்து போகும். கல்லூரியில் சில பேருக்கு அந்தப் பழக்கம் இருக்கிறது. மேலும் சிலரை அது மெல்ல மெல்லக் கவர்ந்து கொண்டிருக்கிறது.

சாஹிதிக்கு வியப்புடன், பயமும் ஏற்பட்டது. போதைப் போருட்களைப் பற்றிப் படித்திருக்கிறாள். மாபியா என்றும், இருட்டுலகத்தில் கிடைக்கக் கூடியது என்றும், ரௌடிகளும், கள்ளக்கடத்தல்காரர்களும் தான் அதைப் பயன்படுத்துவார்கள் என்றும் இதுவரை நினைத்திருந்தாள். தன் பெஞ்சியில் உட்காரும்

பக்கத்து மாணவ மாணவிகள் கூட இந்தச் சிகரெட்டைப் புகைக்கிரார்கள் என்றால் நம்பவே முடியவில்லை.

“என்ன? புகைத்துப் பார்க்கிறாயா?”

“ஐயோ! வேண்டாம்.”

“முதலில் பயமாக இருக்கும். ஒருமுறை பழக்கம் ஆகிவிட்டால்...”

“ப்ளீஸ்! என்னை விட்டுவிடு. எனக்க இந்த மாதிரி எல்லாம் பிடிக்காது’ என்று சாஹிதி அங்கிருந்து வந்து விட்டாள். வீட்டிற்குத் திரும்பி வந்த போது தாய் மாமாவுடன் பேசிக் கொண்டிருந்தாள். அவள் அந்த உரையாடலை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. “பையன் ரொம்ப நல்ல மாதிரி” என்று காதில் விழுந்ததும் அது தன்னைப் பற்றிய பேச்சுத்தான் என்று தெரிந்து விட்டது.

மற்ற பெண்களைப் போல் “இந்த சின்ன வயதில் எனக்குக் கல்யாணமா?” “சீ... நான் கல்யாணமே பண்ணிக்கொள்ள மாட்டேன். “அம்மாவை விட்டுவிட்டு என்னால் இருக்க முடியாது” என்றெல்லாம் அவள் நினைக்கவில்லை.

எப்பொழுது மெடிசினில் சேர முடியாமல் போய் விட்டதோ, அப்பொழுது முதல் அவள் மனதில் விரக்தி குடிகொண்டு விட்டது. பரமஹம்சா மேடிசினில் சேர வேண்டாம் என்று சொன்ன போது, அந்த வாதம் நன்றாக இருப்பது போல் தோன்றினாலும், பி.எஸ்.ஸி.யில் சேர்ந்த பிறகு, தன் பழைய கிளாஸ்மேட்டுகள், தன்னைவிட படிப்பில் பின் தங்கியிருந்தவர்கள் கூட மெடிசினில் சேர்ந்து படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த போது தான் செய்த தவறு நினைவுக்கு வரும்.

பரமஹம்சாவின் மீது கோபம் வரவில்லை. தன்மீதே தனக்குக் கோபம். தான் ஒரு முடிவை எடுத்துக் கொள்வது, பிறகு அது சரி .இல்லை என்று வருத்தப்படுவது. ஏன் எப்போதும் இதுபோலவே நடக்கிறது?

அவளுடைய தவறா அல்லது சுற்றிலும் உள்ள சூழ்நிலையின் தவறா என்று அவளுக்கே புரியவில்லை.

“வரதட்சணை கேட்டதைக் கொடுத்து விடலாம். பையன் நல்லவனாய் இருந்தாள் போதும்” என்று சொல்லிக் கொண்டிருந்தாள் தாய்.

சாஹிதிக்கு வரதட்சணை பற்றி தெளிவான கருத்து இருக்கவில்லை. அவளுக்கு இருக்கும் சொத்துக்கு அது ஒரு பிரச்சனையே இல்லை. இருப்பது ஒரே மகள் என்பதால் அதைப் பேச்சே வரப் போவதில்லை.

அடுத்த இரண்டு நாட்களில் திருமணத்தைப் பற்றிய உரையாடல் மேலும் சூடு பிடித்தது. பையன் இன்ஜினியர். கொஞ்சம் ஏழைக் குடும்பம் என்றாலும் நல்ல குடும்பம். பையனுக்கு ஒரு தங்கையும் அண்ணனும் இருந்தார்கள். யூனிவர்சிட்டி ஃபஸ்ட் ஸ்காலர்ஷிப் கிடைத்ததாம்.

சாஹிதி போட்டோவைப் பார்த்தாள். அவளுக்கு தனிப்பட்ட முறையில் எந்த உணர்வும் ஏற்படவில்லை. பையன் நன்றாகத்தான் இருக்கிறான் என்று நினைத்தாள். அதைவிட அவன் யூனிவர்சிட்டி ஃபஸ்ட் வந்தது பிடித்திருந்தது. ஒரு காலத்தில் அவள் அதற்காகக் கனவு கண்டிருகிறாள்.

மறுநாள் பரமஹம்சா வந்தபோது நிர்மலா அந்த விஷயத்தைச் சொன்னாள். ‘சாஹிதிக்கு அதற்குள் கல்யாணமா?” என்றான்.

“உங்களுக்கு அவள் சின்ன பெண்ணாய் தோன்றலாம்.”

“படிப்பு கூட முடியவில்லையே?” என்று ஏதோ சொல்லப் போனான்.

அவன் வார்த்தை முடிவதற்கு முன்பே “நல்ல வரனை பார்த்து வைத்துக் கொண்டால் பரீட்சை முடிந்த பிறகே பண்ணிவிடலாம்” என்றாள் நிர்மலா கெஞ்சுவது போல்.

பிரமஹம்சா மௌனமாய் இருந்துவிட்டு, “சரி ஆகட்டும். பையனை வரவழைத்துப் பார்த்த பிறகு முடிவு செய்கிறேன்” என்றான்.

பக்கத்து அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த சாஹிதிக்கு இந்த வார்த்தை ஏதோ போல் ஒலித்தது. ‘பையனை வரவ்ழைப்பதாவது’ என்றெண்ணிக் கொண்டாள்.

அதற்குப் பிறகு தாயும் மாமாவும் பெசிகொண்டதைக் கேட்க நேர்ந்தது. “அவர் ஒரு முறை பையனைப் பார்க்க விரும்புகிறார். வரச்சொல்லி எழுது அண்ணா” என்றாள் தாய்.

“அதற்கென்ன வந்தது? பெண்ணைப் பார்ப்பதற்கு எப்படியும் வருவான் இல்லையா?”

“அது இல்லை. பெண்ணைப் பார்ப்பதற்கு முன்னால் அவர் ஒருமுறை பையனைப் பார்க்கணுமாம். நம் வீட்டில் தேவையில்லை. அவர் இருக்கும் வீட்டில் போய்ப் பார்த்தாலே போதும்.”

மாமா சங்கடத்துடன் “அவர்கள் அதற்கு சம்மதிப்பார்களோ இல்லையோ” என்றார்.

“நல்லது கேட்டது எல்லாவற்றையும் பார்த்து முடிவு செய்வது அவர்தானே அண்ணா! ஒரே பார்வையில் ஆளை எடைபோட்டு விடுவார். அவருக்கு அந்தச் சக்தி இருக்கிறது. அவ்வளவு பணத்தை செலவு செய்து கல்யாணம் பண்ணும் போது பையனை நமக்குப் பிடிக்காவிட்டால் பின்னால் தொல்லையாகி விடாதா?”

“பெண்வீட்டுக்காரங்க, நாம் போய் கேட்கிறதுதான் நியாயம். அதை விட்டுவிட்டு பையனை இங்கே வரச் சொல்லுவது அவ்வளவு நன்றாக இருக்காது நிர்மலா. நீ யோசித்துப் பார்” என்றார் அவர்.

“இவர் எவ்வளவு பிசி என்று உனக்குத்தான் தெரியுமே அண்ணா! எவ்வளவோ பேர் வந்து அவரை தரிசனம் செய்து கொண்டு போகிறார்கள். அப்படி இருக்கும்போது மாப்பிள்ளையைப் பார்க்க இவர் போவது என்றால்....” சாட்சாத் சாயிபாபாவையே போகச் சொல்கிறாயே என்பது போல் பேசினாள் அவள்.

“அவர் எழுந்துகொண்டு ‘சரிம்மா, கேட்டுப் பார்க்கிறேன்” என்றார்.

20

“உன் மனதில் என்ன இருக்கிறது என்று என்னால் ஊகித்துக் கொள்ள முடிகிறது சாஹிதி. உனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை. அப்படித்தானே?” என்றான் பரமஹம்சா.

அவள் பேசவில்லை. கடந்த சில நாட்களாய் அவன் இதே வார்த்தைகளை சொல்லிக் கொண்டிருந்தான். திரும்பத் திரும்ப “உனக்கு விருப்பம் இல்லை போல் தோன்றுகிறது. அப்படித்தானே” என்று கேட்டுக்கொண்டே இருந்தான்.

உண்மையில் அது அவன் மனதில் இருக்கும் எண்ணம் போலவே தோன்றியது. ஏனோ அவனுக்கு இந்த திருமணத்தில் விருப்பம் இல்லை. அந்த விஷயத்தை வெளிப்படையாக சொல்லவும் மாட்டான். இதுபோல் கேட்டுக்கொண்டே இருப்பான்.

ஆனால் இவனுக்குப் பிடிக்காதது சாஹிதியின் திருமண முயற்சியா? அல்லது இந்த வரனைப் பிடிக்கவில்லையா? அதுதான் தெரியவில்லை.

பக்கத்திலேயே உட்கார்ந்து இருந்த நிர்மலா வெற்றிலையை மடித்து அவனுக்குத் தந்துகொண்டே "சாஹிதி! உனக்குப் பிடிக்கவில்லை என்றால் சொல்லிவிடும்மா" என்றாள். பரம்ஹம்சா உண்மையிலேயே மகளின் மனதையறிந்து பேசுகிறான் என்று நம்பினாள் அவள்.

என்ன பேசுவாள் சாஹிதி? 'இல்லை அம்மா. எனக்கு விருப்பம்தான். சீக்கிரமாய் திருமணம் செய்துகொண்டு போய்விடணும் என்று இருக்கு' என்று அவள் எப்படிச் சொல்லுவாள்?

அவளை அந்த சூழ்நிலையிலிருந்து மீட்பதற்காகக் கடவுளே அனுப்பி வைத்தது போல் வேலைக்காரன் வந்தான்.

"உங்களைத் தேடிக்கொண்டு யாரோ வந்திருக்கிறார்கள் ஐயா" என்றான்.

பரமஹம்சா புரியாமல் பார்த்தான். சாதாரணமாய் இந்த முதல் மனைவியின் (இல்லை இல்லை ..மூன்றாவது) வீட்டுக்கு அவனைத் தேடிக்கொண்டு யாரும் வரமாட்டார்கள். அப்படி இருக்கும்போது இந்த ராத்திரி வேளையில் வந்திருப்பது யாராய் இருக்கும் என்று புரியாமல் முன்னறைக்கு வந்தான். பின்னாடியே நிர்மலாவும் வந்தாள். ஹாலில் இருவர் உட்கார்ந்து இருந்தார்கள்.

அதில் கொஞ்சம் சிறியவனாய் தென்பட்ட இளைஞன் எழுந்து நின்று வணக்கம் தெரிவித்துவிட்டு “என் பெயர் குணசேகர்” என்றான்.

உள்ளேயிருந்து வரப்போன சாஹிதி சட்டென்று நின்றுவிட்டாள். சேகர் தன்னுடன் வந்த இன்னொரு நபரைச் சுட்டிக்காட்டி “இவர் எழுத்தாளர் பர்த்வாஜ்” என்றான்.

அப்பொழுது ஒரு வினோதம் நிகழ்ந்தது.

பரத்வாஜ் திடீரென்று இருக்கையை விட்டு எழுந்திருந்து பரமஹம்சாவின் காலைத் தொட்டுவிட்டு எழுந்தான்.

நிர்மலா அளவுகடந்த ஆச்சரியத்துடன் இந்த காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பரமஹம்சா பூஜைப் பண்ணும்போது சில பக்தர்கள் இதுபோல் அவருடைய பாததூளியை எடுத்துக்கொள்வதைக் கண்டிருக்கிறாள். ஆனால் இந்த சூழ்நிலை வேறு. தம்பதிகள் இருவருக்குமே வந்த இரண்டுபேரின் மீதும் அபிமானம் கூடியது. பரிவோடு முறுவல் பூத்தபடி பரமஹம்சா பரத்வாஜ் பக்கம் திரும்பினான்.

“மன்னிக்க வேண்டும். சாஹிதி என்ற பெண்ணின் தாய் மாமா சொன்னார். பையனை ஒருமுறை பார்க்கணும் என்று சொன்னீங்களாம். அதனால்தான் வந்தோம். பஸ் தாமதமாகிவிட்டது” என்றான் பரத்வாஜ்

நிர்மலா சங்கடத்துடன் பிரமஹம்சாவைப் பார்த்தாள். அண்ணனின் மீது கோபம்கூட வந்தது. ஏதோ வேலை இருப்பதாய் அழைப்பது வேறு. இப்படி வெறுமே பார்ப்பதற்காக வரச் சொல்லுவது வேறு.

“என்ன படிதிருக்கிறாய் தம்பி?” கேட்டான் பரமஹம்சா.

“இன்ஜினியரிங் படித்திருக்கிறேன்” என்றான் குணசேகர். பரம்ஹம்சா அந்த இளைஞனை உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும் பார்த்தான். சேகர் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தான்.

“கொஞ்சம் காபி கொண்டு வருகிறேன்” என்று எழுந்து கொண்டாள் நிர்மலா.

“அதெல்லாம் வேண்டாம். குணசேகர் காபி குடிக்க மாட்டான். எனக்கு இது காபி குடிக்கும் சமயம் இல்லை” என்றான் பரத்வாஜ் பணிவாய்.

“இன்னும் மேலே படிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதா?”

“இல்லைங்க. இப்பொழுதே அப்பாவின் மீது பாரம் வைத்து விட்டேன். ஏதாவது வேலை பார்த்துக்கொண்டால் உதவியாக இருக்கும்.”

“உனக்கு இன்னும் படிக்கணும் என்று விருப்பம் இருப்பது போல் என் மனம் சொல்கிறது.” கம்பீரமாய் சொன்னான் பரமஹம்சா. “அதில் தவறு இல்லை. நன்றாக படிக்கலாம். இந்த வீட்டு மாப்பிள்ளைக்குப் பணம் ஒரு பிரச்சனையா? கேட்டால் சிரிப்பார்கள். அமெரிக்காவுக்குப் போய் படிக்கலாம். இங்கேயே இந்த வீட்டில் இருந்துவிடலாம். இனி உன் தாய் தகப்பனைப் பற்றிக் கேட்கிறாயா? அவர்களுக்கு வேண்டிய பணம் தந்து விடலாம். உன் ரசனைகள், பொழுதுபோக்குகள் என்ன?”

“படிப்பது ஒன்றுதான்.”

“எதாவது பழக்கம் உன்னடா? சந்கோஜப்படாமல் சொல்லு. சிகரெட், சினிமா..”

“இல்லைங்க.”

“சாஹிதி ஒரே பெண். தந்தை இல்லாத பெண். ரொம்பச் செல்லமாய் வளர்ந்தவள். கெட்டிக்காரி. வேண்டிய அளவு சொத்து இருக்கிறந்து. அதனால்தான் இந்த வீட்டுக்கு வரும் மாப்பிள்ளை எல்லா விதத்திலேயும் குணவானாகவும், சொல்லும் பேச்சை கேட்பவனாகவும் இருக்க வேண்டும் என்பது என் உத்தேசம். இந்தக் குடும்பத்தைத் தாங்க வேண்டிய பொறுப்பு என் மீது இருக்கு. சாஹிதிக்கு இப்போதே கல்யாணம் பண்ணுவதில் எனக்கு விருப்பம் இல்லை. அவளுக்குத் தகுந்த பையன் அத்தனை சுலபமாக கிடைத்து விட மாட்டான் என்பது ஏன் அபிப்பிராயம். அதனால்தான் நான் முதலில் உன்னைப் பார்க்கணும் என்று நினைத்தேன். ஆளைப் பார்த்ததுமே அவனைப் பற்றிச் சொல்லிவிட முடியும் என்னால்.”

“கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். வரப்போகும் மாப்பிள்ளையைப் பற்றி எல்லா விஷயமும் தெரிந்துகொள்ள விரும்புவதில் தவறு இல்லை மிஸ்டர் பரமஹம்சா” என்றான் பரத்வாஜ்

பரமஹம்சா பெருமையுடன் சிரித்தான்.

“அதேபோல் குணசேகர் கூட இந்த வீட்டைப் பற்றித் தெரிந்து கொள்வதில் தவறு இல்லையே?” என்று முடித்தான்.

பரமஹம்சாவின் முகத்தில் இருந்த சிரிப்பு மாயமாகிவிட்டது.

“முதலில் .அந்த வீட்டுக்குப் போனோம். ராஜலக்ஷ்மி அம்மாள் எங்களைப் பற்றி தெரிந்துகொண்டு, முகத்தில் அறைவது போல் கதவைச் சாத்திவிட்டாள். ‘அவர் இங்கே ஏன் இருக்கப் போகிறார்? வெள்ளிக்கிழமை இல்லையா. அந்த வீட்டில்தான் பழியாய்க் கிடப்பார். அங்கே போய்கொள்ளுங்கள்’ என்று சொல்லிவிட்டாள். கடவுள் சொரூபியான நீங்கள் வெள்ளிக்கிசமை தோறும் இந்த மகாலக்ஷ்மி வீட்டில்தான் கழிப்பீங்க என்று தெரிந்து, உங்க லக்ஷ்மி பூஜைக்குக் குந்தகம் ஏற்பட்டு விடுமோ என்கிற பயம் இருந்த போதிலும் நாளைக்குத் திரும்பவும் எங்களுக்கு வேறு வேலை இருந்ததால் இரவோடு இரவாய் இங்கே வந்தோம். ஒருகாலத்தில் இந்த வீட்டில் வேலைப்பார்த்து, உங்களால் பணிநீக்கம் செய்யப்பட்ட வேலைக்காரந்தான் எங்களுக்கு இந்த வீட்டைக் காண்பித்தான்.”

சாஹிதி ஜன்னல் வழியாய் பரமஹம்சாவின் முகத்தில் ரத்தம் சுண்டிப் போய்விட்டதைப் பார்த்தாள்.

பரத்வாஜ் உரையாடலை மேலும் தொடர்ந்தான். “கடைத்தெருவில் விற்கும் பொருளைப் போல் என்னையே நான் போய் காட்டிக்கொள்வதா என்று எங்கள் குணசேகர் முதலில் ஆட்சேபணை சொன்னான். உன்னைப் பற்றி அவர்கள் தெரிந்துகொள்ள விரும்புவதில் தவறு இல்லை என்றேன் நான். அப்போ அந்தப் பெண்ணைப் பண்ணிக்கொள்வதற்கு முன்னால் அவர்களைப் பற்றி நானும் தெரிந்துக் கொள்ளணும் இல்லையா என்றான். அதுவும் உண்மைதானே என்று தோன்றியது. எழுத்தாளன் என்றால் எல்லா கோணத்திலிருந்தும் பார்க்கணும் இல்லையா? பாவம், உங்கள் நம்பகமான வேலைக்காரன் வழியைக் காட்டியபடி வந்து கொண்டிருந்த போது நாங்கள் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பொறுமையாய் பதில் சொன்னான். குணசேகர் ரொம்ப அதிர்ஷ்டசாலி. இந்த மாதிரி

வீட்டுக்கு மாப்பிள்ளையாய் வருவதற்குக் கொடுத்து வைத்திருக்கணும்."

சாஹிதி மூச்சை இழுத்து அடக்கிக்கொண்டாள். அவன் உண்மையிலேயே புகழ்கிறானா இல்லையா என்று புரியவில்லை. ஆனால் பரமஹம்சாவின் உதடுகள் ஆவேசத்தால் துடித்தது தெளிவாய்த் தென்பட்டது.

"நீங்கள் பரந்த மனதோடு இந்த வீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கீங்க. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் லக்ஷ்மி பூஜை பண்ணி வைப்பதுடன், இறந்துபோன உங்கள் நண்பரின் மகளுக்கு வரப்போகும் மாப்பிள்ளையைக் கூட முதலிலேயே பார்த்து இன்டர்வ்யூ எடுக்கறீங்க என்றால், அது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. இந்த விஷயத்தில் உங்கள் இரண்டாவது மனைவி ராஜலக்ஷ்மியின் போட்டி, பொறாமையைக் கூட நீங்கள் பொருட்படுத்த வேண்டியது இல்லை. உன்னதமான உணர்வுகளை சமுதாயம் என்றுமே புரிந்துகொள்ளாது இல்லையா? அப்படிப் புரிந்து கொள்ளாமல்தான் உங்கள் முதல் மனைவி விவாகரத்து பெற்றுக்கொண்டு இறந்துவிட்டாள். இதே விதமாக உங்கள் வேலைக்காரிக்காகக் கூட நீங்கள் லக்ஷ்மி பூஜை பண்ணி வைக்கப் போன போது, அந்த லேபர் காலனிக்காரர்கள் உங்களைத் தவறாக புரிந்து கொண்டார்கள்."

சாஹிதிக்கு கைதட்டி ஆரவாரம் செய்ய வேண்டும் போல் இருந்தது.

பரமஹம்சா நாற்காலியை விட்டு எழுந்திருந்தான். அவன் கண்களிலிருந்து தீப்பொறி பறந்து கொண்டிருந்தது.

பரத்வாஜ் மட்டும் சாவதானமாய் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே சொன்னான். "நான் சொன்னேன். 'குணசேகர்! பரமஹம்சா சாதாரணமானவர் இல்லை. கடவுளின் மறு அவதாரம். மதுபானம் அருந்துவதைக்கூட கடவுளுக்காகவே செய்வார். இந்த உலகத்தில் நமக்குத் தெரிந்து நான்கு பெண்களின் கஷ்டங்களைத் தன் தோளில் போட்டுக்கொண்டு இருக்கிறார். அப்படிப்பட்ட அன்பு உருவத்தின் கருணா கடாக்ஷத்தைப் பெறுவதற்குப் போனதுமே கால்களின் விழுந்து வணங்கு. அவர் மகிழ்ச்சி அடைவார் என்று. அவன் கேட்டுக்கொள்ளவில்லை."

"கேட் அவுட்!" என்று கத்தினான் பரமஹம்சா ஆவேசத்தில் அதிர்ந்தபடி.

சாஹிதிக்கு வானத்தில் பறப்பது போல் சந்தோஷமாக இருந்தது.

'இவ்வளவு நாட்களுக்குப் பிறகு பரமஹம்சாவை எதிர்க்கக் கூடிய ஒரு ஆள் தென்பட்டிருக்கிறான். பரமஹம்சாவைக் காட்டிலும் மென்மையாய், தன் வார்த்தைகளால் கன்வின்ஸ் செய்வது போல் நடித்துக்கொண்டே பழி வாங்குகிறான். முதல்முறையாக பிரமஹம்சா ஆவேசப்படுவதைப் பார்க்கிறாள்.'

சாஹிதிக்கு வியப்பாக இருந்தது. தன்னுள் பரமஹம்சா மீது இத்தனை வெறுப்பு இருக்கிறதா?

"போய் விடுங்கள். உடனே இந்த இடத்தை விட்டுப் போய் விடுங்கள்."

"அப்போ எங்க குணசேகர் உங்களுக்குப் பிடித்திருக்கானா, இல்லையா என்று சொல்லவே இல்லையே?"

“இன்னும் ஒரு நிமிஷம் இருந்தாலும் போலீசைக் கூப்பிட வேண்டியிருக்கும்” என்று கத்தினான். அவன் அவ்வளவு பெரிதாய் கத்தியது அதுதான் முதல் தடவை.

“என்னங்க?” என்றாள் நிர்மலா.

“போலீசாரும், கேசுகளும் தைரியசாலிகளை பயமுறுத்தாது. போலீசார் வந்தால் வண்டவாளம் முழுவதும் வெளிப்பட்டு விடும். நீங்க செய்த காரியத்துக்கு ஒருக்கால் சுப்ரீம் கோர்ட் உங்களை ஒன்றும் பண்ணாமல் போகலாம். உங்கள் பெண் பக்தர்கள் நாளைக்கு கோர்ட்டில் தங்களுக்கு நீங்க லக்ஷ்மி பூஜை பண்ணி வைக்கவே இல்லை என்று சொல்லலாம். ஆனால் எனக்கு மட்டும் நல்ல சப்ஜெக்ட் கிடைத்துவிட்டது. உங்களைப் போன்றவர்கள் கூட இருப்பார்களா என்று வாசகர்கள் சந்தேகப்படும் விதமாய் இந்த உண்மைகளை எழுதுகிறேன். போய் வருகிறோம்.”

அவர்கள் போனதும் சாஹிதி அந்த அறைக்கு வந்தாள்.

“டாமிட்! அவர்களை திக்குமுக்காட வைக்கிறேன். இதுதான் என் சாபம்” என்று கத்திக் கொண்டிருந்தான்.

சாஹிதி தாயை நோக்கினாள். அவள் அழுது கொண்டிருந்தாள்.

தம் வீட்டைப் பற்றி இதுவரையிலும் யாருக்கும் தெரியாது என்று எண்ணியிருந்தாள் சாஹிதி. இவ்வளவு சுலபமாய் மற்றவர்கள் தெரிந்து கொள்ள முடியும் என்று இப்பொழுதான் புரிந்தது. அது அவளுக்கு வருத்தத்தைத் தரவில்லை. உலகம் முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

இந்தச் சம்பவம் சாஹிதியிடம் நிறைய மாற்றங்களை ஏற்படுத்துயது. பரமஹம்சா கூட சாதாரணமான ஆள்தான்.

அவனையும் எதிர்க்க முடியும் என்ற உணர்வு அவளுக்கு துணிச்சலைத் தந்தது. ஆனால் அந்தத் துணிச்சல் நல்ல விதமாக செயல்படவில்லை.

அலட்சிய மனப்பான்மையும், தாயின் மீது அவமதிப்புமாய் மாறியது. அன்று இரவு அவள் தன் நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டாள்.

“எனக்கு அன்பு வேண்டும். தன்னலமில்லாத அன்பிற்காக என் மனம் தவித்துக் கொண்டிருக்கிறது. எனக்கு யாருமே இல்லை.”

சிலநாட்கள கழித்து அவள் மதிப்பெண்கள் வந்தன. நிர்மலா அதைப் பார்த்து நடுங்கிவிட்டாள். சாஹிதிக்கு எதிலேயுமே இருபதுக்கு மேல் வரவில்லை.

“என்ன இது?” கேட்டாள்.

“மதிப்பெண்கள்!” அலட்சியமாக பதிலளித்தாள் சாஹிதி.

“தெரியும். முன்பெல்லாம் முதல் ரேங்க் வருமே. இப்படி ஆகிவிட்டாயே, ஏன்?”

“வீட்டில் நீங்க சரசமாடுவதைக் காணச் சகிக்காமல்தான்.”

நிர்மலாவுக்கு மகள் பேசிய வார்த்தைகள் புரியவில்லை. புரிந்ததுமே முகம் சிவக்க, இழுத்து கன்னத்தில் ஒன்று கொடுத்தாள்.

வாழ்க்கையில் அதுதான் முதல் முறையாக கன்னத்தில் அடிவாங்கியது.

தன் அறைக்கு வந்து படுத்துக்கொண்டாள் சாஹிதி. அழுகை வரவில்லை. நிர்மலாவும் வந்து பேசவில்லை.

அன்று இரவு பரமஹம்சா வந்தான். தாய் என்ன சொன்னாளோ தெரியாது. அறைக்கு வந்து சமாதானப் படுத்தினான்.

“என்னால் உன்னைப் புரிந்துக்கொள்ள முடியும். மார்க்குகளுக்கு என்ன வந்தது? ஒருதடவை வரும், இன்னொரு தடவை வராமல் போகும். அம்மாவிடம் சொல்கிறேன் நான்” என்றான்.

சாஹிதிக்கு அவன்மேல் இருந்த கோபம் போய் அவன் கைகளில் தலையைப் புதைத்துக்கொண்டு அழத் தொடங்கினாள்.

அவள் வயதுதான் எவ்வளவு? கொஞ்சம் ஆறுதல் கிடைத்ததுமே கரைந்து போய் விட்டாள்.

“வாம்மா, சாப்பிடலாம்.”

அவள் அசையவில்லை.

“நீ சாப்பிடவில்லை என்றாள் நானும் சாப்பிட மாட்டேன். அது மட்டுமே இல்லை இன்னும் ஒரு நிமிஷத்துக்குள் நீ எழுந்துகொள்ள வில்லை என்றால் ஒரு வாரத்திற்கு சாப்பிடப் போவதில்லை என்று அம்பாளின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்.”

அவன் அப்படியே செய்து விடுவான் என்று தெரிந்ததால் சாஹிதி எழுந்து கொண்டாள். அவன் அவளை அப்படியே அணைத்துப் பிடித்துக்கொண்டே அறையை விட்டு வெளியே வந்தான்.

கதவைத் தாண்டும் போது திடீரென்று அவளுக்கு நினைவு வந்தது.

தந்தை இறந்த போது இந்த விதமாகத்தான் தாயை... சரியாய் இதே போஸில் தான் அணைத்துக்கொண்டு சென்றான் என்று. அவள் ந..டு..ங்..கி..போனாள்.

அதற்கு அடுத்த நாள் சிநேகிதியுடன் சேர்ந்து போய் முதல் முறையாய் 'கஞ்சா' வை ருசி பார்த்தாள் சாஹிதி.

சந்தோஷத்திற்காக இல்லை.. வெறுப்பு அதிகமாகிப் போனதால்.

21

சாஹிதிக்கு முதலில் அது ருசிக்கவில்லை. வயிற்றைப் பிரட்டியது. இரண்டாவது தடவை கொஞ்சம் நன்றாக இருப்பது போல் தோன்றியது. சிநேகிதி அவளை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். தான் கண்டுபிடித்த ஆனந்தம் அடுத்தவளுக்கு எப்படிப்பட்ட சந்தோஷத்தைத் தருகிறது என்று பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் கூடிய ஆர்வம் அது.

"நன்றாய் இருக்கு" என்றாள் சாஹிதி. "எனக்கு எந்த வருத்தங்களும் நினைவுக்கு வரவில்லை. காற்றில் பறந்து போய்க் கொண்டிருப்பது போல் இருக்கு. உனக்கு என் நன்றியை எப்படி சொல்லுவேன்?"

சிநேகிதி பெருமையுடன் சிரித்தாள்.

கொஞ்ச நேரம் ஆனந்தமாய் இருந்தது உண்மைதான். ஆனால் வீட்டிற்கு வந்து படுததுமே எரிச்சலாக இருந்தது. இதயம் பற்றி எறிவது போல் இருந்தது. தூக்கம் வரவில்லை. இன்னும் கஞ்சா வேண்டும் என்று தோன்றியதால் அப்படியும் இப்படியுமாக ரொம்ப நேரம் புரண்டுத் தவித்துக் கொண்டிருந்தாள். அதற்குப் பிறகு புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்க முயன்றாள். மனம் அதில் லயிக்கவில்லை. இன்னொரு டோஸ் கஞ்சா கிடைத்தால் நன்றாக இருக்கும் என்ற உணர்வு! நோட் புத்தகத்தில் எழுதிக்கொண்டாள், கஞ்சாவைப் பற்றி.

'எனக்கு ஏதோ வேண்டும் போல் இருக்கிறது. அது இல்லாவிட்டால் என்னால் உயிர் வாழ முடியாது.

இன்று இரவு எனக்கு என்ன வேண்டும் என்று தெரிந்தால் அம்மா உயிரோடு இருப்பாளா?"

அன்று இரவு அவள் ரொம்ப நேரம் கழித்து உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

மறுநாள் அவள் கல்லூரிக்குப் போன பிறகு ஏதோ வேலையாய் பரமஹம்சா அவள் அறைக்குள் போனான். நோட் புத்தகத்தின் பக்கங்கள் காற்றுக்குப் படபடத்துக் கொண்டிருந்தத்தைக் கண்டான்.

எடுத்துப் படித்தான். (இது தனிமையைப் பற்றி) "எனக்கு அன்பு வேண்டும். தன்னலமில்லாத அன்புக்காக என் மனம் தவித்துக் கொண்டிருக்கிறது. எனக்கு யாருமே இல்லை.

(இது கஞ்சாவைப் பற்றி) "எனக்கு ஏதோ வேண்டும்போல் இருக்கிறது. அது இல்லாமல் என்னால் உயிர் வாழமுடியாது. இன்றிரவு எனக்கு என்ன வேண்டும் என்று தெரிந்தால், அம்மா உயிருடன் இருப்பாளா?"

பரமஹம்சாவின் புருவங்கள் முடிச்சிட்டுக் கொண்டன. கடவுள் தனக்கு இந்த விஷயத்தை இவ்வளவு நாளாய் சொல்லாமல் போனதற்கு வருத்தம் அடைந்தான். இரண்டுமே தன்னைப் பற்றித்தான் என்று எண்ணிக்கொண்டான்.

*****

"எனக்கு ரொம்ப தெரிந்தவர்கள். ரொம்ப நல்ல குடும்பம். எல்லோருமே நன்றாய்ப் படித்தவர்கள்தான். நாகரிகம் தெரிந்தவர்கள். பையன் லாயர். பார்க்க லட்சணமாய் இருப்பான். சாஹிதிக்கு நல்ல பொருத்தம். போனமுறை வந்த போது இந்த மாதிரி என் தங்கையின் மகள் இருக்கிறாள் என்று விவரங்களைச் சொன்னேன். பையன் ஏதோ கல்யாணத்தில் சாஹிதியைப்

பார்த்திருக்கிறானாம். பிடித்திருக்கு என்று சொன்னான். வீட்டில் பையனின் விருப்பத்துக்கு மறுப்புச் சொல்ல மாட்டார்கள். நீயும் சரி என்றால், வரச் சொல்கிறேன். சாஹிதிக்குப் பிடித்துவிட்டால் உடனே முகூர்த்தத்தை வைத்து விடலாம்." நிர்மலாவின் அண்ணா உற்சாகமாய்ச் சொல்லிக்கொண்டே போனார்.

'சரி அண்ணா! வரச் சொல்லுவோம். முதலில் பரமஹம்சாவிடம் சொல்ல வேண்டாமா?" என்றாள் நிர்மலா.

அன்று மாலையில் பரமஹம்சா வந்தான். நிர்மலாவின் அண்ணாவைச் சுருக்கமாக விசாரித்தான்.

"நிர்மலா! இன்று ஏகாதசி. நாம் பூஜையில் உட்கார வேண்டாமா? வா" என்றான். நிர்மலா உடனே சுவாமி அறைக்குப் போய்விட்டாள். அவனும் பின் தொடர்ந்தான். இரண்டு மணி நேரம் உள்ளே பூஜை நடந்தது.

சாஹிதி கோபத்தோடும், வருத்தத்தோடும் உதட்டை பற்களால் அழுத்திக் கொண்டாள். உறவினர் யார் வந்தாலும் பரமஹம்சா இதே சடங்கைத்தான் அனுசரிப்பான். அவனுடைய ஈகோவை இந்த விதமாக திருப்திப் படுத்திக் கொள்வான்.

சாப்பாடு வேளைக்கு இருவரும் வெளியே வந்தார்கள். நிர்மலாவின் முகத்தில் களைப்பு. கண்களில் மட்டும் திருப்தி. பெரிய மாமா அவளைக் கொஞ்சம் சந்தேகமாய்ப் பார்த்ததைக் கவனித்தாள் சாஹிதி. வெட்கத்தால் அவள் முகம் சிவந்துவிட்டது.

சாப்பிடும் போது அவர் திரும்பவும் அதைப் பற்றிப் பேச்செடுத்தார்.

“அப்படியா? நல்ல இடம் என்று சொல்றீங்க. ஜாதகம் பார்க்காமல் எப்படிச் சொல்வது? வரவழைத்துக் கொடுங்கள். பார்த்துவிட்டுச் சொல்கிறேன்” என்றான் பரமஹம்சா.

“ஜாதகமா? எங்க வீட்டில் இவ்வளவு நாளாய் அந்த மாதிரிப் பழக்கம் எதுவும் இல்லையே?”

“இவ்வளவு நாளாய் நடந்ததைப் பற்றி நான் பேசவில்லை. உங்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். என் அபிப்பிராயத்தைக் கேட்டதால் சொல்கிறேன். ஜாதகப் பொருத்தம் இல்லாமல் கல்யாணம் பண்ணினால் அனர்த்தம்தான் ஏற்படும். இது அவர்கள் இரண்டு பேருக்கு மட்டுமே சம்பந்தப்பட்டது இல்லை. பிறக்கப் போகும் குழந்தைகளுக்குக் கூட. அதற்குப் பிறகு உங்கள் விருப்பம்” என்றான்.

நிர்மலா இடையில் புகுந்து “அப்படிச் சொல்லாதீங்க. நீங்க சொல்லிவிட்டால் இல்லை என்ற கேள்விக்கே இடமில்லை. உங்க அபிப்பிராயத்திற்கு மாறாக இந்த வீட்டில் எந்த காரியமும் நடக்காது. அண்ணா! அவர்களிடமிருந்து ஜாதகத்தைக் கேட்டு வாங்கிக்கொண்டு வா” என்றாள்.

“சரிம்மா. இருக்கா என்று கேட்டுப் பார்க்கிறேன்” என்றார் அவர். அவருடைய உற்சாகம் முழுவதும் வற்றி விட்டது. அந்த வீட்டில் தன்னுடைய இடம் என்ன என்று தெரிந்துகொண்டு விட்டார். ஆனாலும் அவர் அதை அவ்வளவாய் போருட்படுத்தவில்லை. நல்ல வரன் என்பதால் விட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் இருந்தார். மறுநாள் ஜாதகத்தைக் கேட்டு வாங்கி வந்தார்.

ஆனால் பரமஹம்சா ஜாதகத்தைப் பார்த்துவிட்டு ஒதுக்கிவிட்டான். “இந்தப் பையனின் ஜாதகம் பெண்ணுக்குப்

பொருந்தவே பொருந்தாது. தோஷம் கூட இருக்கு. முக்கியமாய் தாய் மாமாவுக்கு தீங்கு நேரும்" என்று சொல்லிவிட்டான்.

"எனக்கு ஒன்றும் நேராது. அந்த மாதிரி நம்பிக்கையே எனக்கு இல்லை." துணிந்து. சொன்னார் அவர்.

"என்ன அண்ணா! அப்படிச் சொல்லிவிட்டாய்? இந்த வரன் வேண்டாம். வேறு இடம் பார்த்துக்கொள்ளச் சொல்லி அவர்களிடம் சொல்லிவிடு" என்றாள் நிர்மலா.

அவர் அதிருப்தி அடைந்தவராய் போய்விட்டார்.

"சாஹிதியின் ஜாதகத்தைப் பார்த்தேன் நிர்மலா. இன்னும் இரண்டு மூன்று வருஷம் வரையில் கல்யாண வேளை வரவில்லை. நாம் சிரமப்பட வேண்டிய அவசியம் இல்லை. இந்த விஷயத்தை உன் அண்ணாவிடமும் சொல்லிவிடு."

"அப்படியா? அப்படி என்றால் படிக்க வைப்போம். இப்போதைக்கு எந்த வரனும் பார்க்க வேண்டாம் என்று அண்ணாவிடம் சொல்லி விடுகிறேன்" என்றாள் நிர்மலா.

"அதுமட்டுமில்லை. சாஹிதியின் கல்யாண விஷயத்தை என்னிடமே விட்டுவிடச் சொல்லு. நான் இருக்கும்போது மற்றவர்கள் எதற்காக வரன் பார்க்க வேண்டும்?" என்றான். சாஹிதி நோட்டுப் புத்தகத்தில் எழுதியிருந்ததை அவன் மறக்கவில்லை.

அன்று இரவே நிர்மலா தன் அண்ணாவிடம் சொன்னாள். ஆனால் அவர் இந்த விஷயத்தை அவ்வளவு சுலபமாக விட்டுவிட விரும்பவில்லை. சாஹிதியிடம் நேராகவே இதைப்பற்றிப்

பேசிவிட்டு, “அந்தப் பையனை உனக்குக் காண்பிக்கிறேன்?” என்றார்.

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவள் தலையை அசைத்தாள். இந்த உரையாடலை பரமஹம்சா கேட்டுவிட்டான் என்று அவர்களுக்குத் தெரியாது.

மாமா அடுத்த வாரமே அந்தப் பையனிடம் பேசினார். ஆனால் அவர்களுக்கு இதற்கு முன்னால் இருந்த ஆர்வம் இப்போது இல்லை. “அந்த சம்பந்தமா? வேண்டாம் விடுங்கள்” என்று மறுத்துவிட்டார்கள், மரியாதையுடனே.

மாமாவின் முகம் தொய்ந்து விட்டது. அதற்கு மேல் இந்த விஷயத்தை யாரிடமும் பிரஸ்தாபிக்கவில்லை. முதலில் அத்தனை உற்சாகம் காட்டியவர்கள் இப்போது ஏன் அவ்வாறு சொன்னார்கள் என்றும் அவருக்குப் புரியவில்லை.

இது நடந்த ஒருவாரம் கழித்து சாஹிதிக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் இவ்வாறு இருந்தது.

சாஹிதி அவர்களுக்கு,

வணக்கம் என் பெயர் குணசேகர். நினைவு இருக்கும் இல்லையா? நானும், பரத்வாஜும் உங்கள் வீட்டிற்கு வந்திருந்தோம். உங்கள் அங்கிள் வைத்த மாப்பிள்ளைப் பார்க்கும் பரீட்சைக்கு.

இந்தக் கடிதம் எழுதுவதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. உங்களுக்கு சமீபத்தில் ஒரு வரன் வந்தது. பையன் லாயர். அந்தப் பையனும் நானும் நண்பர்கள். இருவரும் ஒரே பெண்ணை பெண்பார்க்க போக இருந்ததைப் பற்றி யதேச்சையாக பேச்சுக்கிடையே தெரிந்துகொண்டு வியப்படந்தோம்.

அந்தப் பையன் வீட்டில் உங்கள் சம்பந்தம் வேண்டாம் என்று மறுத்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னால் அவர்களுக்கு வந்த ஒரு கடிதத்தை எனக்குக் காட்டினான். பண்பு நிறைந்தவர்கள் என்பதால் இந்தக் கடிதத்தைப் பற்றி வெளியில் யாரிடமும் சொல்லவில்லை. உங்களுக்குப் பின்னால் நடக்கும் விஷயங்கள் உங்களுக்குத் தெரியவேண்டும் என்ற உத்தேசத்தில்தான் அந்த கடிதத்தின் நகலை உங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். இந்தக் கடிதத்தை அனுப்பியது உங்களுடன் மேலும் அறிமுகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு மட்டும் இல்லை.

இப்படிக்கு குணசேகர்

அவள் நடுங்கும் விரல்களுடன் இன்னொரு கடித்தத்தைப் பிரித்தாள். யாரோ இடது கையால் எழுதி இருப்பது போல் கோணல் மாணலாய் இருந்தது கையெழுத்து.

“உண்மை விளம்பி எழுதுவது. சமீபத்தில் நீங்கள் பார்த்த நிர்மலா வீட்டு சம்பந்தம் அத்தனை நல்லது இல்லை. அவர்கள் வீட்டுப் பெண் சாஹிதியின் நடத்தையை பற்றி அக்கம் பக்கத்திலும் சரி, கல்லூரியிலும் சரி, யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள்., காந்திநகர் குவாலிடி ஐஸ்கிரீம் கடைக்காரனைக் கேட்டாலும் போதும்.”

சாஹிதியின் முகம் களையிழந்தது

நினைவுதப்பி போகாமல் இருக்க பெரும் முயற்சி தேவைப்பட்டது.

பெரிதாக கத்த வேண்டும் போல் இருந்தது. அப்படியே சரிந்து விழுந்தாள்.

பரமஹம்சா அவளை காந்திநகர் குவாலிட்டி ஐஸ்க்ரீம் ஷாப்பிற்கு நிறைய தடவை அழைத்துச் சென்று இருக்கிறான்.

****

“நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி. கடவுள் என்னைக் கருளையுடன் அருள்பாலித்து வருகிறார். எனக்கு ஏற்படும் பிரச்சனைகள் தானாகவே விலகிப் போய் விடுகின்றன. மற்றவர்களிடம் இல்லாத சிறப்பு ஏதோ என்னிடம் இருக்கு” என்று சொல்லிக்கொள்வார்கள் சிலர்.

‘நான் மிகவும் துரதிர்ஷ்டசாலி. எனக்கு இருக்கும் பிரச்சனைகள் இந்த உலகத்தில் வேறு யாருக்குமே இருக்காது” என்று சொல்லிக் கொள்வார்கள் வேறு சிலர்.

இருவரின் கருத்துகளும் அர்த்தமற்றவை. எதற்குமே பயன்படாத கருத்துகள் இவை இதை உதாரணம் காட்டுவதற்கு ஒரு நல்ல கதை இருக்கிறது.

ஒரு அரசனுக்கு இரு மகன்கள். அரசனுக்கு குணப்படுத்த முடியாத நோய் வந்து சஞ்சீவினி மூலிகை தேவைப்பட்டது. இரு மகன்களும் கிளம்பினார்கள். புறாவை பறக்கவிட்டு ஆளுக்கு ஒரு திசையாய்ப் புறப்பட்டார்கள். மூத்த மகனின் புறா ஒரு மலைமேல் போய் உட்கார்ந்து கொள்கிறது. “இவ்வளவு பெரிய மலையை எப்படி ஏறுவேன்? துரதிர்ஷ்டம் என்னை துரத்துகிறது” என்று அவன் கீழேயே வருத்தத்துடன் நின்றுவிட்டான். மற்றொரு புறா ஒரு புற்றின் மேல் உடகார்ந்தது. அதிர்ஷ்டம் புற்றுக்குள் மூலிகை உருவத்தில் உள்ளதோ என்னவோ என்று இரண்டாவது மகன் புற்றுக்குள் கையை விட்டான். உள்ளே இருந்த பாம்பு கொத்திவிட்டது.

நல்ல நீதி பாடம் கற்பிக்கும் கதை இது.

சாஹிதி... பாவானா..

இன்னும் உலகத்தில் நிறைய பேர் தெரிந்துகொள்ள வேண்டிய கதை இது.

******

‘சாஹிதி!”

கல்லூரிக்குப் புறப்படத் தயாரான சாஹிதி திரும்பிப் பார்த்தாள்.

“ஒன்றும் இல்லை. அங்கிளிடம் போய்ப் பணம் வாங்கிக்கொண்டு வா.

“என்னம்மா இது? உன்னிடம் பணம் இல்லையா?”

“ஊஹூம் இல்லை. சமீபத்தில் இரண்டாயிரம் தந்தார். உன் பீசு கட்ட வேண்டும் என்று சொன்னாய் இல்லையா? வேலைக்காரர்களுக்கு சம்பளம் தர வேண்டும். என்னிடம் கைவசம் பணம் இல்லை. போய்விட்டு வா.”

“எனக்கு அந்த வீட்டுக்குப் போக பிடிக்கவில்லை வேறு யாரையாவது அனுப்பு. டிரைவருக்கு வீடு தெரியும் இல்லையா. போகச் சொல்லு.”

“அது நன்றாக இருக்காது சாஹிதி! அங்கிளுக்கு இப்போதுதான் போன் பண்ணினேன். உன்னை அனுப்பச் சொன்னார். போகாவிட்டால் கேட்கிற கேள்விகளுக்கு எல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது. போய்விட்டு வாம்மா.”

“சரி.” விருப்பம் இல்லாமலேயே ஒப்புக்கொண்டாள் சாஹிதி. இப்படிப் பணத்திற்காக இன்னொருவரிடம் போக வேண்டிய

தேவை அந்த வீட்டில் இதுவரையில் ஏற்பட்டதில்லை. எல்லா பணத்தையும் அவன் தன் கணக்கில் வங்கியில் போட்டு வைத்துக் கொண்டிருந்தான்.

சாஹிதி போனபொழுது பரமஹம்சா பூஜையில் இருந்தான். ராஜலக்ஷ்மி நேரில் வந்து வரவேற்றாள். குசலம் விசாரித்தாள். வேண்டாம் என்றாலும் வலுக்கட்டாயமாய் காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

“ஏதாவது காரியமாய் வந்தாயா? இல்லாவிட்டால் வரமாட்டாயே?”

“ஆமாம். மம்மி செக் வாங்கிக்கொண்டு வங்கியிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு வரச் சொன்னாள்.”

‘எவ்வளவு வேணும்? என்னிடம் இருந்தால் தருகிறேன். அவருடைய பூஜை இப்போது முடியும் போல் தோன்றவில்லை.”

“ஐந்தாயிரம் வேண்டும்.”

“ஐந்தாயிரமா? அவ்வளவு செலவு பண்ணுவீங்களா உங்கள் வீட்டில்? என்ன பண்ணுவீங்க?” ஆச்சாரியமடைந்தவளாய் கேட்டாள்.

‘எனக்குத் தெரியாது. மம்மி கொண்டு வரச் சொன்னாள்.” சங்கடத்துடன் நெளிந்தாள் சாஹிதி.

‘செலவைக் கொஞ்சம் குறைத்துக்கொள்வது நல்லது என்று தோன்றுகிறது. இருப்பது இரண்டு பேர். அத்தனை வேலைக்காரர்கள் எதுக்கு? நான் மாதத்துக்கு இரண்டாயிரத்துக்கு மேல் செலவு பண்ண மாட்டேன். ஆனாலும்

உங்க அங்கிள் கொபித்துக் கொண்டேதான் இருப்பார். உங்க மம்மி கேட்டால் மட்டும் ஐந்தாயிரம் பத்தாயிரம் என்று கொடுப்பாரோ என்னவோ? எனக்கென்ன வந்தது? போய் எதையோ சொல்லுவாய். அவள் இவரிடம் சொல்லுவாள். எல்லாம் கிடக்க இவர் வந்து என்னை வசைபாடுவார்." பழிப்பது போல் சொன்னாள் அவள்.

சாஹிதி திகைத்துப் போய்விட்டாள். யார் யார்மீது சார்ந்து இருக்கிறார்கள் என்று அவளுக்குப் புரியவில்லை.

'அவரிடம் கேட்பது எங்களுடைய பணத்தைத்தான். லட்சக்கணக்கான் சொத்து! எல்லாம் அவர் கையில் தாரைவார்த்துத் தந்துவிட்டோம். அதிலிருந்து கொஞ்சம் தரச் சொல்லிக் கேட்கிறோம்' என்று சொல்ல நினைத்தவள் அரும்பாடுபட்டுத் தன்னை அடக்கிக் கொண்டாள்.

"என்னவோப்பா. நாளெல்லாம் கஷ்டப்படுகிறார்.ஒரு ஆயிரம் ரூபாய் தனக்காக செலவழித்துக் கொள்ளச் சொன்னால் கேட்டுக்கொள்ள மாட்டார். தினமும் ஐந்து மணி நேரம் பூஜையில் இருக்கிறார் இல்லையா? அந்த அறையை ஏ.ஸி. பண்ணிக்கொள்ளுங்கள் என்றால் காதில் வாங்க மாட்டார். உங்க மம்மியையாவது சொல்லச் சொல்லு. அவள் சொன்னால் மறுக்க மாட்டார். அவள் சொன்னால் பணத்தைக்கூட தாராளமாக செலவழிப்பார்."

சாஹிதிக்கு துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. ஈரத்துணியால் கழுத்தை இறுக்குவது என்றால் இதுதான் போலும்.

"உனக்குக் கல்யாணம் வேறு பண்ணவேண்டும். கொஞ்சம் சிக்கனமாக இருந்தால் நல்லது. ஆனாலும் பயம் இல்லை. உங்க

மம்மி கேட்டால் யாரும் மறுக்க மாட்டார்கள். உங்க அங்கிள் உனக்காக லட்சம் லட்சமாய் செலவழிப்பார்."

சாஹிதி அதற்குமேல் தாங்க முடியாதவளாய் சொல்லாமல் எழுந்து வந்து காரில் உட்கார்ந்துக் கொண்டாள். விஷயம் புரிந்துகொண்டாற்போல் டிரைவர் காரை வீட்டை நோக்கிச் செலுத்தினான்.

சாஹிதி திரும்பி வருவதற்குள் வீட்டிற்குப் போன் வந்து விட்டது போலும்.

"ஏன் சாஹிதி, அவ்வளவு தூரம் போய்விட்டு அங்கிளைச் சந்திக்காமலேயே திரும்பி வந்துவிட்டாயா? இதற்கு முன்னால் நடந்த ரகளையை மறந்துவிட்டாயா? ஏன் இப்படி செய்தாய்? என்ன பதில் சொல்வேன் நான்?" நிர்மலா விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள்.

"மம்மி! நீ எதுக்கு அழணும்? அவள் எப்படியெல்லாம் திட்டினாள் என்று தெரியுமா?"

"அங்கே போன போதெல்லாம் எதற்காக அவளுடன் வாதம் வளர்க்கிறாய்?"

"நான் ஒன்றும் வாதம் வளர்க்கவில்லை. வாயைத் திறக்கவே இல்லை. அவள்தான் அவளுடைய சொத்தை எல்லாம் நாம் செலவழித்து வருவது போல் பேசினாள். கேட்க முடியாமல் திரும்பி வந்துவிட்டேன்."

"அவள் அப்படிச் சொல்லியிருக்க மாட்டாள். நீதான் தவறாகப் புரிந்துகொண்ட இருப்பாய். முன்பு கூட அப்படித்தான் செய்தாய். திரும்பவும் போ சாஹிதி! என்மீது கொஞ்சமாவது அன்பு

இருந்தால் போய்விட்டு வா. இல்லா விட்டால் என் பிணத்தைதான் காண்பாய்.” அவள் அழுது கொண்டே அறைக்குள் போய்த் தாளிட்டுக்கொண்டு விட்டாள். சாஹிதி தூக்கத்தில் நடப்பவள் போல் திரும்பி வந்து காரில் உட்கார்ந்து கொண்டாள். சக்களத்திகள் இருவரும் இவ்வளவு அன்னியோன்யமாய் தன்னைப் போன்ற அற்ப ஜீவனை பந்தாடுவது அவளைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது.

இந்த முறை ராஜலக்ஷ்மி தென்படவில்லை. பரமஹம்சா முன் அறையிலேயே இருந்தான்.

“ஏம்மா, பூஜையிலிருந்து எழுந்து வருவதற்கு தாமதம் ஆகிவிட்டால் அதற்குப் போய் கோபம் கொள்ளலாமா?” சிரித்துக்கொண்டே அருகில் வந்து பணத்தை எடுத்துக் கொடுத்தான். “கேஷ் இருக்கு. எடுத்துக் கொண்டு போ. கல்லூரிக்கு நேரமாகிவிட்டது.”

பணத்தை வாங்கிக் கொண்டு வந்து நிர்மலாவிடம் கொடுத்தாள். அதற்குள் செய்தி எட்டியது போலும். அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்து இருந்தது.

சாஹிதி சாப்பிடாமலேயே கல்லூரிக்குப் போய்விட்டாள். முதல் வகுப்பு ப்ராக்டிகல்ஸ். என்ன பண்ண வேண்டும் என்றோ, என்ன பண்ணினாள் என்றோ எதுவும் தெரியவில்லை. பிப்பெட்டில் கான்ஸன்ட்ரேடட் சல்ஃபூரிக் ஆசிட் எடுத்தாள். பீகரில் ஊற்றப் போனவள் நின்றாள். அதைக் கையில் வைத்துக்கொண்டு மேலே இருந்த விரலை எடுத்துவிட்டாள். புஸ் என்ற சத்தம். அதைத் தொடர்ந்து சதை பொசுங்கிய நாற்றம் வந்த போதிலும் சாஹிதி வாயிலிருந்து கத்தல் எதுவும் வெளியில் வரவில்லை. அந்த காயத்தையே பார்த்தபடி வீட்டுக்கு வந்தாள். தன் அறைக்குப் போய் அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தாள்.

எப்பொழுது வந்தானோ தெரியாது. “அழுகிறாயா? சீ.. தவறு இல்லையா?” என்று பரமஹம்சா அவளிடம் வந்தான். தோளில் கையை வைத்து அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். “உன்னைப் பற்றி எனக்குத் தெரியும் குழந்தாய். இன்னும் கல்யாணத்தின் மேல் உன் கவனம் திரும்பவில்லை. அது தவறு இல்லை. இயற்கைதான்.” அவள் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான். “என் தங்கம் இல்லையா? இப்படி அழக்கூடாது. இனிமேல் எதுவானாலும் சரி, என்னிடம் சொல்லணும். தயங்கக் கூடாது” என்று கையை அவள் முதுகில் வைத்து தேற்றுவது போல் தடவிக் கொடுத்தபடி தாழ்ந்த குரலில் மேலும் சொன்னான்.

“சாஹிதி! நீ என்னைக் காதலிக்கிறாய் இல்லையா?” லட்சம் ஓல்ட் எலெக்ட்ரிக் ஷாக் அடித்தாற்போல், அத்தனை வேதனையிலும் அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவன் அவளைப் பார்க்கவில்லை. சூனியத்தைப் பார்த்தபடி “நான் உன் நோட்டுப் புத்தகத்தில் படித்தேன். உன் எண்ணம் புரிந்தது. அதுக்கும் முன்னாடியே கடவுள் என்னிடம் சொல்லிவிட்டார். உன்னைச் சரியாகப் புரிந்துகொள்ளக் கூடியவனும், உன்னைக் கொண்டாடக் கூடியவனும் நான்தான். நிர்மலாவிடம் இந்த விஷயத்தைச் சொல்லாதே. நானே சொல்கிறேன். அவள் மறுக்க மாட்டாள்/ கடவுளின் தீர்மானம் அப்படி இருந்தாள் அவள் மட்டும் ஏன் மறுக்கப் போகிறாள்?” என்று குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான். தடுக்கவும் திராணியற்றவளாய் அவள் சிலையாய் அப்படியே உட்கார்ந்து இருந்தாள்.

22

சூரியன் உதிக்கப் போவதற்கு அடையாளமாக கிழக்குத் திசையெல்லாம் செந்நிறக் கம்பளத்தை விரித்தாற்போல் இருந்தது. விஸ்வம் தன் வீட்டிற்கு முன்னால் இருந்த பூச்செடிகளுக்கு இடையே உட்கார்ந்திருந்தான். பக்கத்திலேயே ட்ரான்ஸிஸ்டரிலிருந்து பத்திப் பாடல் மெல்லிய குரலில் கேட்டுக் கொண்டிருந்தது.

கேட்டிற்கு அருகில் ரிக்ஷா நின்ற ஓசை கேட்டுக் கண்களைத் திறந்தான் விஸ்வம். பாவனாவும், பாஸ்கர் ராமமூர்த்தியும் சாமான்களுடன் இறங்கிக் கொண்டிருந்தார்கள். சந்தோஷத்தால் விஸ்வத்தின் கண்கள் பனித்தன. மாப்பிள்ளை தன் விருப்பத்தைத் தெரிந்து கொண்டாற்போல் பாவனாவை அழைத்துக் கொண்டு வந்தது அவனிடம் நன்றியுணர்ச்சியை ஏற்படுத்தியது. அருகில் வந்த பாவனாவை அன்புடன் அணைத்துக் கொண்டான். பாவனா கொஞ்சம் இளைத்து விட்டாற்போல் இருந்தது. ஆனாலும் அவள் கண்களில் சந்தோஷம் பளிச்சிட்டதைப் பார்த்த போது மனம் பூரித்து விட்டது.

“கடிதம் போட்டிருந்தால் ஸ்டேஷனுக்கு வந்திருப்பேன் இல்லையா?”

“அழகாய் இருக்கு மாமா! நாங்க என்ன சின்னக் குழந்தைகளா? அல்லது இதுதான் புது இடமா? உங்களை எல்லாம் பார்க்கணும் போல் இருந்தது. வந்து விட்டோம்” என்றான் மூர்த்தி. அந்தப் பதில் விஸ்வத்தின் சந்தோஷத்தை இருமடங்காக்கியது.

“ரொம்ப சந்தோசம்.” மகிழ்ந்து போனான் அவன்.

இரண்டு நாட்கள் சந்தோஷமாய்க் கழிந்துவிட்டன. மூன்றாவது நாள் ஆரம்பித்தான் பாஸ்கர் ராமமூர்த்தி.

“பாவனா! உங்க அப்பா இப்போ கொஞ்சம் தேறி இருக்கிறார் போல் இருக்கு இல்லையா?”

“ஆமாங்க. காலம்தானே அந்தக் காயத்தை மறக்கடிக்கணும்? அம்மா போய் ஒரு வருஷம் ஆகிவிட்டது.”

“ச்சே.. அதைச் சொல்லவில்லை. பொருளாதார ரீதியாய் கொஞ்சம் நன்றாய் இருக்கிறார் போல் தெரிகிறது. புது சாமான்கள் வாங்கி இருக்கிறார். கடனைக் கூட அடைத்து விட்டாற்போல் இருக்கு.”

‘ஆமாங்க. என் கல்யாணத்திற்கு அதிகமாய் செலவு பண்ணவில்லை இல்லையா? அதன் மூலவே பாதி தேறி விட்டார் என்று நினைக்கிறேன். அந்த விஷயத்தில் உங்கள் உதவியை என்றைக்குமே மறக்க முடியாது.” மன்ப்பூர்வமாகவே சொன்னாள் அவள்.

”அது இல்லை பாவனா! அப்பொழுது ஒன்றுமே வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். காரணம் வேறு இருந்தது என்று வைத்துக்கொள். எனக்கு ஏதோ பணம் வரும் என்று நம்பினேன். அதோடு கல்யாணத்திற்கு நிறைய செலவு பண்ணிவிட்டேன். இப்போ அதையெல்லாம் எப்படித் தீர்ப்பது என்று தெரியவில்லை. கடன்காரர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு தலைமறைவாகத் திரிவது பழக்கமாகிவிட்டது. இந்தப் பயணத்தை வைத்துக் கொண்டது கூட அவர்களுக்குப் பயந்துதான். உனக்குத் தெரியாது பாவனா! எவ்வளவு நரகத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கிறேன் என்று.” அவன் தொண்டை அடைத்தது.

“அப்படி என்றால் இப்போ என்ன செய்வது?” பயந்தவாறு கேட்டாள்.

“உங்க அப்பாவைக் கேட்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.”

“அப்பாவையா? அவரிடம் அவ்வளவு பணம் ஏது?”

“இதோ பார் பாவனா! உங்க அப்பாவைக் கஷ்டப்படுத்தணும் என்ற உத்தேசம் எனக்கு இல்லை. ஒரு இருபத்தையாயிரம் வரதட்சணை வேண்டும் என்று கல்யாணத்திற்கு முன்னாடியே கேட்டிருந்தால் என்ன பண்ணியிருப்பார்?”

பாவனா யோசித்தாள். “கண்டிப்பாகக் கொடுத்திருப்பார்.” ஒப்புக்கொண்டாள். மற்றவர்கள் எல்லோரும் லட்சக்கணக்கில் கேட்டதற்கு இது எவ்வளவோ குறைச்சல்தானே?

“நானும் அதையே தான் சொல்கிறேன். தேவை ஏற்படும் என்று தெரியாததால் அப்போது கேட்கவில்லை. இப்போது சங்கடத்தில் இருக்கிறேன். கேட்பதில் தவறென்ன? அப்படியும் அக்காவிடம் கேட்டேன். ‘ஏதோ கொள்கைக்காக வரதட்சணை வாங்கிக்கொள்ளாமல் விட்டுவிட்டு இப்போழுது எங்களை ஏன் கேட்கிறாய்?’ என்று கோபித்துக்கொண்டாள். இப்போது யாரைப் போய்க் கேட்பேன், சொல்லு.”

“ஆனால் அப்பாவுக்கு உங்கள் மேல் உயர்ந்த எண்ணம் இருக்கு. இப்போ போய்க் கேட்டால் என்ன நினைப்பார்?”

“அதனால்தான் உன்னையே கேட்கச் சொல்கிறேன். நான் கேட்டால் வரதட்சணை என்றாகிவிடும். நீ கேட்டால் உதவி

என்று நினைப்பார். எப்படிக் கேட்பாயோ, என்ன பண்ணுவாயோ, உன் இஷ்டம். அதன் மூலமாய் நம் கஷ்டம் தீர்ந்துவிடும். அப்புறமாய் சம்பளத்தைக் கொண்டு வந்து உன் கையில் கொடுத்து விடுகிறேன். சிக்கனமாய் எப்படி செலவு செய்வாயோ? அது உன் விருப்பம். என் செலவுக்கு மாதத்திற்கு எவ்வளவு தரணும் என்று நீ நினைக்கிறாயோ அதை நீயே தந்துவிடு."

பாவானா விரும்பியதும் இப்படிப்பட்ட நடத்தையைதான். 'இன்னும் பத்துரூபாய் கொடு' என்று அவன் கெஞ்சுவதும், தான் கொஞ்சம் அழவைத்துவிட்டுப் பிறகு தருவதும்! எத்தனை அழகான அனுபவம்?

"முயற்சி செய்கிறேன்" என்றாள்.

பாஸ்கர ராமமூர்த்தி அன்றைக்கே கிளம்பி போய்விட்டான்.

****

வாக்களித்துவிட்டாளே தவிர பாவனாவுக்குத் தந்தையிடம் அதைப் பற்றிப் பேசுவது அத்தனை சுலபமாக இருக்கவில்லை. அவள் கவலையுடன் இருப்பதைப் பார்த்துவிட்டு விஸ்வம் தானாகவே கேட்டான.

"ஏம்மா? மாப்பிள்ளை தனியாய் இருப்பார் என்று கவலையாய் இருக்கா?"

"இல்லை அப்பா. அதெல்லாம் ஒன்றும் இல்லை." தைரியத்தைக் கூட்டிக்கொண்டாள். "அப்பா! நான் ஒரு விஷயம் கேட்கட்டுமா?" அருகில் போய் உட்கார்ந்துகொண்டாள்.

“கேளும்மா? என்ன தயக்கம்? பிரச்சனை ஏதாவது இருந்தால் என்னிடமில்லாமல் வேறு யாரிடம் சொல்லுவாய்?”

‘கல்யாணத்துக்கு முன்னால் உங்க மாப்பிள்ளை இருபத்தையாயிரம் கேட்டிருந்தால் என்ன பண்ணியிருப்பீங்க?”

விஸ்வத்தின் புருவம் உயர்ந்தது. “ஏம்மா? வரதட்சணையைப் பற்றி ஏதானும் பேச்சு வந்ததா?”

“இல்லை அப்பா. அவர் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் அவருக்குக் கடன் இருக்கு. கல்யாணத்தின் போது அக்காவிடமிருந்து பத்தாயிரம் கடன் வாங்கினாராம். போன வாரம் அவங்க வந்து வாய்க்கு வந்தபடி பேசிவிட்டுப் போனாங்க. எனக்கே வருத்தமாய் இருக்கு.”

“என்ன இது? அப்போ நான் துருவித் துருவி கேட்ட போதுகூட ஒன்றுமே சொல்லவில்லையே? கொடுத்த பணத்தைக்கூட திருப்பிக் கொடுத்து விட்டானே?”

“ஆமாம். அப்போது பிரமோஷன் வரும் என்றும், ஏதோ அரியர்ஸ் வரும் என்றும் நினைத்திருந்தாராம். அதெல்லாம் இப்போதைக்கு வரப்போவதில்லை என்று தெரிந்து விட்டதாம், அதனால் ரொம்ப கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.”

பெரும்பாலான பெண்களைப் போலவே பாவானாவும் தவறு செய்துவிட்டாள். கணவனைப் பற்றிக் கெடுதலாகச் சொன்னால் பிறந்தவீட்டில் அவன் மதிப்பு குறைந்துவிடும் என்ற வருத்தம் அது. அதுவும் விஸ்வதிற்கு பாஸ்கர ராமமூர்த்தியிடம் அபரிமிதமான மதிப்பு வேறு!

“அப்படிக் கவலைப்பட வேண்டியது இல்லை என்று கடிதம் எழுதி போடு. நாலு நாளில் பணம் தருகிறேன். அனுப்பி விடுவோம்’ என்றான் விஸ்வம்.

வேலை சுலபமாகி விட்டதால் பாவனாவின் மனம் நிம்மதியடைந்தது. மறுநாளே விஸ்வம் நிலத்தை அடமானம் வைத்து இருபத்தையாயிரம் வாங்கி வந்தான். மாப்பிள்ளைக்கு சந்கோஜப்பட வேண்டாம் என்று கடிதம் எழுதி டிராப்ட் அனுப்பி வைத்தான். அது கிடைத்ததாய் நன்றி தெரிவித்து மாமனாருக்குக் கடிதம் போட்டான் மூர்த்தி.

****

என் பிரியமான மூர்த்தி,

நீங்கள் போய் பத்து நாட்கள் ஆகிவிட்டன. எனக்கோ பல யுகங்கள் ஆகிவிட்டாற்போல் இருக்கிறது. பணம் கிடைத்ததாய் அப்பாவுக்குக் கடிதம் போட்டுவிட்டால் போதுமா? உங்கள் அன்பார்ந்த மனைவி இங்கே இருப்பது நினைவு இல்லையா?

உங்களிடமிருந்து கடிதம் வந்தால் என்னை அழ வைக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என் தம்பியும், தங்கையும்... ஆனால் நீங்கள் அந்த அவகாசத்தையே தரவில்லை. நானோ ஒவ்வொரு நிமிஷமும் உங்களிடமிருந்து கடிதம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். அதையும் விட நீங்களே வந்து விடுவீர்கள் என்றும் எதிர்பார்க்கிறேன். எங்க தோட்டத்தில் உள்ளா பூக்கள் எல்லாம் கூட உங்கள் வருகைக்காக வாசல்பக்கம் பார்த்துக் கொண்டு இருக்கின்றன. சில மணி நேரங்களே மலர்ந்து தரையில் உதிர்ந்து கிடக்கும் பவழமல்லி கூட கடைசி நிமிடம் வரையில் உங்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

அவற்றைப் பார்க்கும் போது எனக்குக் கண்களில் நீர் துளிர்க்கிறது. வாசலில் பந்தலில் படர்ந்திருக்கும் ஜாதிமல்லிக் கொடியின் கதையோ வேறு. இவ்வளவு நாளாய் என் கூந்தலை அலங்கரிக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தது. இப்போதோ உங்கள் பாதத்தின் கீழே நசுங்கிப் போவதற்குத் துடித்தபடி, விடியலில் பூமழையை வாசல் முழுவது தெளிக்கிறது. ஆனாலும் உங்களுக்கு இரக்கம் இல்லை.

இனி மல்லிகைச் செடியைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். அதன் பூக்கள் என் கூந்தலை அலங்கரிக்க மாட்டாயாம். உங்கள் காலடியில் மிதியடியாய் இருக்கப் போவதில்லையாம். நம் படுக்கையின் மீது நம் இருவரின் உடல்களுக்குக் கீழே நசுங்கிப் போகத் துடித்துக் கொண்டு இருக்கின்றன.

உனக்கு எந்த வருத்தமும் இல்லையா என்று நினைக்கிறீங்க இல்லையா? எப்படிச் சொல்லுவேன்? என் உடலில் ஒவ்வொரு அணுவும் உங்கள் ஸ்பரிசத்திற்காகத் தவித்துக் கொண்டிருக்கிறது என்றும், குளிர்ந்த நிலவு கூட என்னைச் சுட்டு பொசுக்குகிறது என்றும். நாம் சந்தித்தால் நாட்கள் நோடிபோழுதில் கழிந்துவிடும். இவ்வளவு நொடிகளை வீணாக்குவது உங்களுக்கு அழகல்ல. சீக்கிரமாய் வந்துவிடுங்கள்.”

உங்கள் பாவனா

கணவனுக்கு எழுதிய முதல் கடிதம் அது. தபாலில் சேர்த்தது முதல் பதிலை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள். அந்தக் கடிதத்தைக் கண்டதும் உடனேயே புறப்பட்டு வந்துவிடுவான் என்று எண்ணியிருந்தது பொய்த்துவிட்டது. மூர்த்தி மாமனாருக்குக் கடிதம் எழுதினான். பாவனாவை சனிக்கிழமை ரயிலில் ஏற்றிவிட்டால் ஞாயிற்றுக் கிழமை ஸ்டேஷனுக்கு வருவதாய்.

‘எனக்கு எழுதினால் இப்பொழுதே புறப்பட்டு வந்து விடுவேன் என்று பயம் போலும்’ என்று தனக்குள் சிரித்துக் கொண்டாள். பாவனா அந்தச் சனிக்கிழமை ரயிலேறினாள், கூடவே ஏகப்பட்ட சாமான்களுடன்.

பெண்களுக்கு பிறந்த வீட்டிற்குப் போனால் மாமியார் வீட்டின் பெருமையையும், கணவனின் வருமானத்தை எல்லோரும் மதிக்க வேண்டும் என்று பாடுபடுவார்கள். செயல்களை விட வார்த்தைகள்தான் அங்கே பிரபாவத்தைக் காட்டும். ஏன் என்றால் பெண்ணிடமிருந்து பொருளை விரும்பும் பிறந்த வீட்டார் ரொம்ப குறைவு. ஆனால் பிறந்த வீட்டிலிருந்து போகும்போது மட்டும் ஏதோ ஒரு புது சாமான், புடவை இல்லா விட்டால் முகம் வாடிப் போய்விடும். அவற்றைக்காட்டி புகுந்த வீட்டில் பெருமையாய் சொல்லிக்கொள்வார்கள். அதிலும் மூத்த மகளாய் இருந்தால் இன்னும் அதிகம். முதலில் நடந்த சுபகாரியம் என்பதால் சம்பிரதாயங்களை தவறாமல் பின்பற்றுவார்கள். எல்லா பண்டிகைகளுக்கும் அழைத்து சீர்வரிசை செய்வார்கள். தங்கை, தம்பி முதலியோர் அக்காவுக்காக எதையும் விட்டுக் கொடுப்பார்கள். ‘பாவம் அக்கா! புது இடத்திற்குப் போக வேண்டியிருக்கிறதே’ என்ற இரக்கத்தோடு.

அத்தானுக்கு விருப்பமானது என்று சிலவும், அக்காவுக்குப் பிடிக்கும் என்று சில பணியாரங்களையும் தயாரித்தார்கள். போனதுமே கஷ்டப்படக்கூடாது என்று சில பொருட்கள், இங்கே விலை மலிவு என்று பருப்பு, அரிசி, பழவகைகள் என்று மேலும் சில பொருட்கள் சேர்ந்துவிட்டதால் ஏகப்பட்ட சாமான்கள் சேர்ந்துவிட்டன. மூர்த்தி ஸ்டேஷனுக்கு வருவான் என்று பாவனா எந்த மறுப்பும் சொல்லவில்லை.

ரயில் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குள் நுழையும்போதே பாவனாவின் கண்கள் பிளாட்பாரத்தை பரபரப்புடன் பார்க்கத் தொடங்கிவிட்டன. தன்னைக் கண்டதுமே அவனிடம் தோன்றும் உணர்வுகளைப் பற்றி எண்ணிக் கொண்டவள் வெட்கமடைந்தாள். இவ்வளவுநாள் பிரிவுக்குப் பிறகு வீட்டிற்குப் போனதுமே அவன் நடவடிக்கைகள் எப்படி இருக்குமோ? அதுவும் அவள் அப்படிப்பட்ட கடிதத்தை எழுதிய பிறகு.

ரயில் நின்றதும் மூர்த்தி கண்ணில் படவில்லை. கூலியைக் கொண்டு சாமான்களை இறக்கி வைத்து நின்றாள். ஐந்து நிமிஷங்கள் ஆகியும் அவன் ஜாடையே இல்லை.

அவள் வீட்டுக்குப் போய்ச் சேரும்போது பாஸ்கர் ராமமூர்த்தி தனியாய் இருந்தான் வீட்டில்.

"நீ வருவதற்குள் வீட்டை எல்லாம் சரி பண்ணி வைக்கணும் என்று கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன்" என்றான் அவள் வேறு கேள்வி கேட்கும் அவகாசம் தராமல்.

பாவனாவுக்கு பயமாய் இருந்தது. பாஸ்கர் ராமமூர்த்தி மனதில் எது இருந்தாலும் வெளியே பட்டென்று சொல்லிவிடுவான். கத்துவான், அடிப்பான். ஆனால் அவனிடம் தந்திரம் எதுவும் கிடையாது. வீட்டை சரி பண்ணுவது என்பது அவன் பண்ணும் வேலையில்லை. பண்ணவும் மாட்டான். அந்த விஷயம் அவளுக்கு நன்றாக தெரியும். ஆனாலும் இப்படிப் பொய் சொல்கிறான் என்றால் யாருடைய பாதிப்போ அவன்மீது இருக்கிறது என்று அர்த்தம். அது மிகவும் ஆபத்தானது.

பெரும்பாலான மனைவியர்கள் போலவே பாவனாவும் தவறு செய்தாள். முன்பின் அறிமுகமில்லாத இருவர் திருமணத்தால் ஒன்றிணைகிறார்கள். முதல் நாளிலிருந்தே ஒருத்தரைப் பற்றி இன்னொருத்தர் தெரிந்துகொள்ள முயற்சி செய்கிறார்கள். சில

நாட்களா வரை அவர்களுக்கு எதிராளியிடம் நல்ல குணங்கள்தான் தென்படுகின்றன. வேடிக்கை என்னவென்றால் எதிராளியின் பலவீனங்களைக் கூட அப்பொழுது அவ்வளவாக பொருட்படுத்தாமல் எளிதாக ஏற்றுக்கொண்டு விடுவார்கள். அவர்களுடைய உண்மை சொரூபத்தைத் தெரிந்து கொள்வதற்குள் தாமதமாகி விடுகிறது. இருவருள் ஆதிக்கம் படைத்த சுபாவம் கொண்டவர்கள் அதற்குள் அடுத்தவர் மீது அதிகாரத்தை நிலை நாட்டத் தொடங்கி விடுவார்கள்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு மனைவி வீடு திரும்பியிருக்கிறாள் என்ற நினைப்பே அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. தந்தையிடம் சொல்லி இருபத்தையாயிரம் உடனே அனுப்பச் செய்தாள் என்ற நன்றியைக் கூட காட்டவில்லை. அவள் கொண்டுவந்தவற்றில் தனக்குப் பிடித்தவற்றை, வசந்திக்குப் பிடித்தவற்றை எடுத்து அவன் தனியாக வைத்துக் கொண்டான்.

“என்னங்க? கடன் எல்லாம் தீர்ந்துவிட்டதா?” சாதாரணமாய்க் கேட்டாள் அவள்.

“ஏன்? கணக்குக் காட்டணுமா?” கடுமையாய் இருந்தது அவன் பதில்.

“அதில்லைங்க. இவ்வளவு பர்னிச்சர் எல்லாம் வாங்கி இருக்கீங்க. திரும்பவும் கஷ்டப்படப போறீங்களே என்றுதான்.” மென்று விழுங்கினாள்.

“இருந்த பணத்தில்தான் வாங்கினேன். நம் வீட்டுக்காகதானே? அடுத்தவங்களுக்கு வாங்கித் தரலியே?”

அவன் கத்தல் அக்கம் பக்கத்தார் காதுகளில் விழும்படியாய் பெரிதாய்த்தான் இருக்கும்.

பாவனாவால் அதற்குமேல் பேச முடியவில்லை. அவன் சந்தோஷமாய் இருந்த சமயம் பார்த்துக் கொஞ்சுவது போல் கேட்டாள்.

“ஏங்க? என் கடிதத்திற்கு பதிலே போடவில்லையே ஏன்?”

“உங்க வீட்டார் பார்த்தால் அழவைப்பார்கள் என்று நீதானே எழுதி இருந்தாய்?”

“அந்த மாதிரி அழ வைப்பத்தில் எவ்வளவு சந்தோஷம் இருக்கும் என்று உங்களுக்கு என்ன தெரியும்?”

“”அது இருக்கட்டும். ஆனாலும் அதென்ன கடிதம்? வேசியைப் போல் செக்ஸுக்காகத் தவித்துக் கொண்டிருப்பது போல்? வசந்தி மற்றவர்கள் அதைப்பார்த்து ஒரே சிரிப்பு. உனக்கு வெட்கம் என்பதே இல்லை.”

பாவனா அதிர்ந்துவிட்டாள். “நான் எழுதிய கடிதத்தை அவர்கள் எல்லோரும் பார்ப்பதா? சீ.. சீ.. கொஞ்சம் கூட பண்பு இல்லாதவர்கள்.” கோபமாகச் சொன்னாள்.

“ஏன்? நான்தான் காண்பித்தேன். நீயும் உன் தேவடியாள் புத்தியும்” என்றான் எரிச்சலுடன்.

“தேவடியாள் அந்த சுகத்திற்காக தவிக்கமாட்டாள். அவளிடம் போகிறவர்களுக்குத்தான் இருக்கும் அந்த தவிப்பு. மற்றவர்களின் கடிதங்களைப் படிப்பவர்களை விட தேவடியாள் எவ்வளவோ மேல்.” எரிச்சலை அடக்கிக் கொள்ள முடியாமல் சொல்லிவிட்டாள்.

“என்ன? வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்து வாயாடுகிறாயா? கொஞ்சம் சுயநினைவு இருக்கட்டும். நாக்கை அடக்கி பேசு. வீட்டுக்கு வந்ததுமே தொடங்கி விட்டது கழுத்தறுப்பு! சீ.” அவன் வெளியே போய்விட்டான்.

அவன் திரும்பி வரும்போது நள்ளிரவு ஆகிவிட்டது. கதவைத் திறந்ததுமே குப்பென்று நாற்றம் மூக்கைத் தாக்கியது. இதற்கு முன்னால் என்றுமே பாஸ்கர் ராமமூர்த்தி குடித்தது இல்லை. இது புதுப் பழக்கம்.

அந்தப் பழக்கத்திற்கு அவன் எவ்வளவு தூரம் அடிமையாகி விட்டிருந்தான் என்று அவளுக்கு வெகு சீக்கிரத்திலேயே தெரிந்துவிட்டது. அவனை மாற்ற வேண்டும் என்றும், அந்தப் பழக்கத்திலிருந்து மீட்க வேண்டும் என்றும் அவள் எடுத்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. நண்பர்கள் கூட்டம் அதிகமாகிவிட்டது.. அவர்கள் சொன்னதுதான் அவனுக்கு வேதம். குடித்துவிட்டு வருவதும், நள்ளிரவில் ரகளை செய்து பெரிதாக கத்துவதும் நித்தியபடி ஆகிவிட்டது. அக்கம் பக்கத்தருக்கு முன்னால் எவ்வளவு இளப்பமாய் விட்டான் என்று புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை அவன்.

இரவு பத்துமணி ஆகப் போகிறது. மூர்த்தி என்றும் போலவே இன்னும் வீடு திரும்பவில்லை. பாவனா சாப்பிட்டுவிட்டுப் புத்தகம் படித்தபடி உட்கார்ந்திருந்தாள். கோபிசந்த் எழுதிய நாவலைப் படித்துக் கொண்டிருந்தாள். ஒரு காலத்தில் அந்த நாவல் பிடிக்காமல் ஒதுக்கியிருந்தாள். அப்பொழுது அதைப் புரிந்து கொள்ள முடியாமல் அவ்வாறு எண்ணிவிட்டாள். அதைப் படிக்கப் படிக்க அவளுக்கு மூர்த்திதான் நினைவுக்கு வந்தான். தன்னுடைய இயலாமையை மூடி மறைக்க அவன் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்த வழி, குடிப்பது.

கதவு தட்டிய ஓசை கேட்டது. மூர்த்தியாக இருந்தால் பெயர் சொல்லி கூப்பிடுவான். யார் என்று தெரியவில்லை. பாவனா ஜன்னல் வழியாகப் பார்த்தால். பக்கத்துவீட்டு ராமநாதன்.

“அவர் இன்னும் வரவில்லை” என்றாள் ஜன்னல் வழியாகவே.

“அப்படியா? காலையில் எங்கள் வீட்டிலிருந்து ஸ்க்ரூ டிரைவர் வாங்கிக்கொண்டு போனான். அவசரமாய் தேவைப்படுகிறது. தரமுடியுமா?””

பாவனா கதவைத் திறந்தாள். “வாங்க உள்ளே. பார்த்து தருகிறேன்.” எவ்வளவு தேடியும் அது கிடைக்கவில்லை.

“பரவாயில்லை. நாளைக்குக் கேட்டு வாங்கிக்கொள்கிறேன்” என்றானே தவிர நாற்காலியை விட்டு எழுந்துகொள்ளவில்லை.

என்ன பேசுவதென்று அவளுக்குப் புரியவில்லை.

“உங்களைப் பார்த்தால் இரக்கமாய் இருக்கு. எப்படி சகித்துக்கொண்டு இருக்கீங்க அவரை?”

அவன் பேச்சைக் கேட்டதும் பாவனாவுக்கு பயம் ஏற்பட்டது.

‘உங்களைப் போன்ற அழகான மனைவி எனக்கு இருந்தால் ஆபீசுக்குக் கூடப் போகாமல் இருபத்திநாலு மணி நேரமும் அருகிலேயே உட்கார்ந்து இருப்பேன்.”

“நீங்க என்ன பேசுறீங்கன்னு உங்களுக்கே தெரிகிறதா?” கோபமாய்க் கேட்டாள்.

“அட! அதுக்குள்ளே கோபம் எதுக்கு? ஏதோ தனியாய் இருக்கீங்க. கம்பெனி தரலாமே என்று நினைத்தேன். அவ்வளவுதான்.”

“தேவையில்லை. நீங்க போகலாம்.”

“என்றைக்காவது தேவைப்பட்டால் கூப்பிடுங்கள். நான் எப்பொழுதும் தயாராய் இருப்பேன்.” அவன் போய்விட்டான் சிரித்துக்கொண்டே.

பாவனாவுக்கு துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. கணவனின் நடத்தை அவ்வாறு இருப்பதால்தான் அவன் அவ்வளவு தூரம் துணிந்திருக்கிறான். அன்றிரவு முழுவதும் அவள் தூங்கவே இல்லை. மூர்த்தியிடம் பேசவும் இல்லை. தந்தைக்கு கடிதம் எழுதாமல் முடியாது என்று தோன்றியது. ஆனால் அவர் வந்தாலும் என்ன பண்ணிவிடுவார்? மாப்பிள்ளையை அதட்டிக் கேட்கும் துணிச்சல் இல்லை அவருக்கு.

அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே தபால் வந்தது. தந்தையிடமிருந்து கடிதம். அதைப் படித்துவிட்டு அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டாள்.

பாஸ்கர் ராமமூர்த்தி பத்தாயிரம் வேண்டும் என்று கேட்டிருப்பதாகவும், கடன் வாங்கி அனுப்பி வைப்பதாகவும் எழுதியிருந்தார்.

பாஸ்கர் ராமமூர்த்தி ரொம்ப உற்சாகத்துடன் இருந்தான். மாமனாருக்குக் கடிதம் எழுதி ஒரு வாரம்தான் ஆகிறது. இன்றோ நாளையோ பணம் வந்துவிடும் என்ற நம்பிக்கை இருந்தது. வந்ததுமே நல்லதாய் ஒரு மைசூர் சில்க் புடவை வாங்கிக்கொண்டு போய் வசந்திக்குத் தரவேண்டும். அவள் சந்தோஷத்தோடு வந்து மேலே விழுந்தால் வெற்றி பெருமிதத்துடன் சிரிக்கவேண்டும். “இவ்வளாவு சீக்கிரத்தில் பணம் கேட்டால் தரமாட்டார்’ என்றாள் அவள். விஸ்வதிற்கு பாவானாவிடம் எவ்வளவு அன்பு என்று அவளுக்குத் தெரியாது.

அதைத் தொடர்ந்து பாஸ்கர ராமமூர்த்தியின் யோசனைகளை நிர்மலாவின் சொத்துமேல் தாவிற்று. பாவனாவை நல்ல விதமாய் வலையில் போட்டுக்கொள்ள வேண்டும். ஆவேசம் வந்தால் ஏதோ பெசிவிடுகிறாளே தவிர, கொஞ்சம் அன்பாய் இருப்பதுபோல் பேசினால் உருகிப் போய்விடுவாள். சீக்கிரத்திலேயே அவளைக் களத்தில் இறக்கி விட வேண்டும்.

அந்த பரமஹம்சாவைப் பற்றி நினைத்தாலே பயமாக இருக்கிறது. இந்தமுறை நிர்மலாவிடம் நேராக போக வேண்டும். சொந்த மகளைப் பார்த்ததுமே அவளால் அடையாளம் கண்டுகொள்ள முடியும். நடந்ததை எல்லாம் சொல்ல வேண்டும். என்ன இருந்தாலும் பெற்ற வயிறு! உணர்ந்துகொள்ளும்.

அன்பாய் இழுத்து அணைத்துக்கொள்வாள். தன் மகளை அழைத்து வந்ததற்கு வீட்டு மாப்பிள்ளையாய் அவனை மதிப்பாள்.

“மாமியாரே! உங்க சொத்துக்காக் இல்லை நாங்க வந்தது. என் தாய் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் இது. அவ்வளவுதான்” என்று சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட வார்த்தைகள் பெண்களிடம் நன்றாக வேலை செய்யும். யோசித்தவாறே ராமமூர்த்தி மெயின் ரோடை விட்டு ஒரு சந்துக்குள் நுழைந்தான். அதற்கும் பக்கத்தில் இருந்த சந்தில்தான் இருந்தது ஒயின் ஷாப்.

ஷோகேசுக்குள் இருந்த பாட்டில்கள் மேல் இருந்த பெயர்களைப் படித்துக் கொண்டிருந்த ராமமூர்த்தியின் தோளில் யாரோ கை வைக்கவும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். எதிரே முறுவலுடன் நின்று கொண்டிருந்த ஆளைப் பார்த்ததுமே அவன் உடல் சிலிர்த்தது. பக்திமானாய் இருக்கும் அவன் இந்த கடையில் தென்படுவான் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

‘திங்க் ஆஃப் தி டெவில்’ என்று நினைத்ததுமே எதிர்பட்டுவிட்டான். “என்னப்பா? நீ இங்கே இருந்தது எனக்கு எப்படித் தெரிந்தது என்றுதானே ஆச்சரியப்படுகிறாய்? அப்போதே சொன்னேன் இல்லையா? நான் சர்வாந்தர்யாமி என்று? நான் வீட்டில் உட்கார்ந்து கொண்டே உன்னைப் பற்றியும், உன் எண்ணங்களைப் பற்றியும் கண்டுபிடித்து விடுவேன். ஆஸ்பத்திரியில் ரொம்ப நாள் இருந்தாய் போலிருக்கு. இப்போ சௌக்கியம்தானே? எண்ணங்கள் சரியாக இருந்தால் ஆரோக்கியமும் சரியாக இருக்கும்.”

‘சௌக்கியம்தான்.” தொண்டையை செருமிக்கொண்டு மெதுவாய்ப் பதிலளித்தான் மூர்த்தி.

“குட்! அப்போதே சுவர்க்கதிற்குப் போயிருக்க வேண்டியவன் நீ. ஆனால் எனக்கு உன்மீது இறக்கம்தானே தவிர கோபம் இல்லை. அதனால்தான் வீட்டில் இருந்துகொண்டே உன்னைக் காப்பாற்றினேன். ஆனால் உன்னுள் சொத்தை பற்றிய யோசனை நீங்க மாட்டேன் என்கிறது. அடுத்த தடவை மட்டும் என்னால் காப்பாற்ற முடியாது. உன்னிஷ்டம்.”

பாஸ்கர் ராமமூர்த்தி பயந்து நடுங்கிவிட்டான். அந்த விஷயத்தை அவன் யோசித்து ஐந்து நிமிஷம் கூட ஆகவில்லை. அதற்குள் அவன் இப்படி இங்கே வந்ததைப பார்த்தால் உண்மையாகவே இவனிடம் ஏதோ சக்தி இருப்பதாய்த் தோன்றுகிறது. இவனுடனா தான் மோத நினைப்பது? இன்றைக்கு வீட்டிற்குப் போய்ச் செருவதற்குள் இன்னொரு விபத்து நடந்தாலும் ஆச்சரியப்பட வேண்டியது இல்லை.

அவனை உயிர் பயம் பிடித்துக்கொண்டது.

“இன்றும் பயமில்லை. அதான் சொன்னேனே? உன் யோசனைகளை நல்ல வழியில் இருக்கும் வரையிலும் உனக்கு எந்த ஆபத்தும் வராது.” பரமஹம்சா ஜெபியிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து காண்பித்தான். அது அவனுடைய போட்டோதான். “இதை உன்னிடம் வைத்துக்கொள். தினமும் பூஜை பண்ணிக் கொண்டிரு. இந்த வீபூதியை வைத்துக்கொள். நல்லது நடக்கும்.”

“சரி” என்று தலையை அசைத்தான் மூர்த்தி.

“போயிட்டு வா தம்பி! உன் பில்லை நான் கொடுத்துவிட்டுப் போய்க் கொள்கிறேன்.” அவன் தோளில் அன்போடு தட்டினான். பாஸ்கர் ராமமூர்த்தி தூக்கத்தில் நட்ப்பவனைப் போல் வெளியே நடந்தான்.

பரமஹம்சா ஜெபியிலிருந்து பணத்தை எடுத்து செல்ஸ்மேனிடம் தந்தான். அவனுக்குத் தேவையான வெளிநாட்டுச் சரக்கு அவன் காரில் அதற்கு முன்பே வைக்கப் பட்டுவிட்டது. அவன் இப்பொழுது ரொம்ப பணக்காரன். வெளிநாட்டுச் சரக்கைத்தான் பயன்படுத்துவான். அந்தச் சுற்றுவட்டாரத்தில் பரிச்சயம் ஆனவர்கள் யாரும் கண்ணில் படமாட்டார்கள் என்றுதான் அந்த கடையில் வாடிக்கையாய் வாங்கிக் கொண்டிருந்தான்.

23

அவன் தள்ளாடிக்கொண்டே வருவதை பாவனா கவனித்தாள். அவள் ஒருவினாடி மூச்சு விடவும் மறந்துவிட்டாள். அவளுக்குத் துக்கம் வரவில்லை. அதிர்ச்சி ஏற்பட்டது. அவ்வளவு போதையிலும் ராமமூர்த்தி தெளிவாய் பேசினான்.

“ஏய், கடிதம் ஏதாவது வந்ததா?”

“உங்களுக்கு எதுவும் வரவில்லை. எனக்குத்தான் எங்க அப்பா எழுதியிருக்கிறார்.” சுருக்கமாய் சொன்னாள்.

“பணம் அனுப்பினானா?”

“இல்லை.”

“எப்போ அனுப்புவானாம்?”

“அனுப்பமாட்டார். அனுப்ப வேண்டாம் என்று கடிதம் எழுதிவிட்டேன்.”

“ஏன்? எதற்காக?”

“வரதட்சணை வேண்டும் என்பவர்கள் முன்னாடியே கேட்கணும். கொடுக்க முடிந்தவர்கள் கொடுப்பார்கள். முடியாதவர்கள் அப்போதே இந்த இடம் வேண்டாம் என்று விட்டு விடுவார்கள். அப்போ அந்த மாதிரி சீர்திருத்த வாதியாய் பேசிவிட்டு, இப்போ இந்த ரகளை எதுக்கு?”

“என்ன? நான் ரகளை செய்கிறேனா? என்னை என்னவென்று நினைத்து விட்டாய்? உன் புருஷன் நான்! உன்னை

அனுபவிக்கும் உரிமை இருப்பவன். நான் கஷ்டப்பட்டு சம்பாதிப்பதை உனக்கு வாரியிறைத்து செலவழிக்கணும் என்ற அவசியம் இல்லை எனக்கு. வாயை மூடிக்கொண்டு சொன்னதை செய்."

"இவ்வளவு நாளாய் அப்படித்தான் விழுந்து கிடந்தேன். இனிமேல் சும்மா இருக்கப் போவதில்லை. ஏற்கனவே இருபத்தையாயிரம் உனக்காக விலை கொடுத்திருக்கிறேன். இப்போ எனக்கு அதிகாரம், உரிமை எல்லாம் வந்துவிட்டது. ஆனாலும் கையாலாகாதவனுக்கு இதைவிட அதிகவிலை கொடுப்பது அனாவசியம்."

அவள் வார்த்தைகள் முழுவதுமாய் உடனே புரியவில்லை. புரிந்ததுமே அதிர்ந்து விட்டான். பாவனா இவ்வளவு பெரிய அடிகொடுப்பாள் என்று அவன் கனவிலும் ஊகித்திருக்கவில்லை. போதை எல்லாம் இறங்கிவிட்டது. வியர்த்துக் கொட்டத் தொடங்கியது. அதற்குப் பிறகு கோபம் இருமடங்காயிற்று.

"ஆமாம்.. படுக்கை சுகத்திற்காக அவ்வளவு தூரம் கிடந்துத் தவிக்கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. ஆமாமாம். உன் தேவடியாள் குணம் மறந்துவிட்டது என் தவறுதான். கல்யாணத்திற்கு முன்னாடியே பழக்கப்பட்டுப் போனவள். இப்போ இல்லாவிட்டால் சங்கடமாகத்தான் இருக்கும்." "மேலும் வசைமாரி பொழிந்து கொண்டிருந்தான்.

பாவனாவுக்கு சுருக்கென்றது. கோபத்தில் அவன் பலவீனத்தைச் சுட்டிக்காட்டி விட்டாளே தவிர அவளுக்கு அந்த உத்தேசமில்லை. அவனிடம் உள்ள இந்தக் குறையைப் புரிந்து கொள்வதற்கு அவளுக்குப் பலநாட்கள் பிடித்தன. அது புரிந்ததும் அதை குணப்படுத்தக் கூடிய டாக்டர்கள் இருக்கிறார்களா என்று தேடிப்பார்க்க விரும்பினாள். அதுகூட ராமமூர்த்தியின்

பொருட்டுத்தான். அந்தப் பலவீனம்தான் அவனை இவ்வாறு நடந்து கொள்ளச் செய்கிறது என்பது அவள் உத்தேசம்.

சோர்வடைந்து போன ராமமூர்த்தி படுத்துக் கொள்வதற்காக எழுந்தான். ஷர்ட்டை கழட்டும் போது பாக்கெட்டில் ஏதோ இருப்பது தென்பட்டது. பரமஹம்சாவின் போட்டோ நினைவுக்கு வந்தது. எடுத்துப் பார்த்தான்.

'விபூதியை இட்டுக்கொள். நல்லது நடக்கும்' என்ற வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. முதல் முறையாய் ராமமூர்த்திக்கு பரமஹம்சாவிடம் பயத்தோடு பக்தியும் ஏற்பட்டது.

அவன் விபூதியை எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டான். பிறகு அடித்துப் போட்டாற்போல் தூங்கிவிட்டான்.

****

"என்னங்க? எங்கே பயணம்?" [பாவனாவால் கேட்காமல் இருக்க முடியவில்லை ஒருவாரமாய் பாஸ்கர ராமமூர்த்தி அவளுடன் பேசுவதில்லை.

"ஊருக்குப் போறீங்களா?" திரும்பவும் கேட்டாள்.

"இல்லை எமலோகத்துக்குப் போகிறேன்" என்றான் வெடுக்கென்று. அவள் கொஞ்ச நேரம் பதில் பேசவில்லை.

"எவ்வளவு நாள் கழித்து வருவீங்க?" புறப்படும்போது கேட்டாள்.

"ஏன்? யாரையாவது கூப்பிட்டு வைத்துக்கொள்ளப் போகிறாயா? இரவு பகல் பார்க்காமல் கூத்தாடிக்கொண்டிரு. ரொம்ப தவித்துப் போய்க் கொண்டிருக்கிறாய் இல்லையா?"

“நான் ஒன்றும் தவித்துப் போகவில்லை. இனி அந்தப் பேச்சை எடுக்காதீங்க. அப்படி கேட்டது தவறுதான்” என்றாள் கண்ணீருடன். அப்படிப் பேசியதற்கு ஏற்கனவே அவள் குமுறிப் போய்க் கொண்டிருந்தாள்..

“ஏன் எடுக்கக்கொடாது. இன்னும் உரக்கக் கத்துவேன். அக்கம் பக்கத்தார் எல்லோரும் கேட்கட்டும். எவனாவது ஒருத்தன் வந்து துணைக்குப் படுத்துப்பான். இல்லாவிட்டால் முன்னாடியே எவனுடனாவது தொடர்பு வைத்துக் கொண்டு விட்டாயா?”

“எவ்வளவு அனாகரீகமாய் பேசுறீங்க? நிறுத்துங்கள் உங்கள் உளறலை.” கோபத்துடன் கத்தினாள் பாவனா.

“ஆமாம். வரதட்சணை வேண்டாம் என்று சொன்னபோது நாகரீகம் இருக்கா இல்லையா என்று தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இப்போ அதெல்லாம் ஞாபகம் வ்னதுவிட்டது இல்லையா? அந்த சுதர்சனோடு ஊரெல்லாம் சுற்றினாயே? குடும்பத்தில் இருக்கும் ஒருத்தி பண்ணுகிற காரியாமா இது?” திட்டித் தீர்த்துவிட்டு போய்விட்டான்.

******

“பாவனா! உங்க அம்மா எவ்வளவு வருஷமாய் உடல்நலம் சரியில்லாம் படுத்திருந்தாள்?”

பாவானா நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள். விஸ்வம் எந்த எண்ணத்துடன் அந்தக் கேள்வியைக் கேட்டான் என்று புரியவில்லை.

“ஏறக்குறைய பதினைது வருஷம். அவ்வளவு வருஷத்தில் நான் ஒருதடவை கூட தவறான வழியில் போகவில்லை. உங்க அம்மாவை ஒரு வார்த்தைக் கூட சொன்னது இல்லை. இதையெல்லாம் நான் பெருமைக்காக சொல்லவில்லை. பாவனா! நீ விவரம் தெரிந்து எல்லாவற்றையும் பார்த்திருப்பவள். என்னிடமிருந்து நிறைய கற்றுக் கொண்டிருப்பாய் என்று நான் நினைத்தேன்..”

“தெரியும் அப்பா. எல்லாம் தெரியும். இன்னொரு கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொன்னபோது கூட பண்ணிக்காத உத்தம புருஷர் நீங்க.’ வெளியில் சொல்லவில்லை தலை குனிந்தபடி அமர்ந்திருந்தாள்.

“கல்யாணமான ஒரு வருடத்திற்குள்ளேயே உன்னைப் பற்றி இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்க வேண்டியிருக்கும் என்று என்னால் ஊகித்தும் பார்க்க முடியவில்லை. பாவனா! குழந்தைகளுக்கு என்னால் எதுவும் தர முடியாமல் போனாலும், நல்ல பண்புடையவர்களாய் வளர்த்தேன் என்று பெருமைப் பட்டிருந்தேன் இவ்வளவு நாளாய். நம் ஊரில் நம் வீட்டைப் பற்றி எல்லோரும் எவ்வளவோ உயர்வாய், எடுத்துக்காட்டி பேசிக் கொள்வார்கள். இந்த விஷயம் தெரிந்தால், பின்பு நம் நிலைமை அவர்களுக்கு மத்தியில் என்னவாகும்?”

“என் கஷ்டம் அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் புரியும் அப்பா. அவரும் வசந்தியும் சேர்ந்து எத்தனை விதமாய் என்னை வார்த்தைகளால் துன்புறுத்து வார்கள் தெரியுமா?”

“ஏன்? அவர்கள் இரண்டுபேருக்கும் சம்பந்தம் இருக்கு என்றும், அதனால்தான் உன்னைச் சரியாய் கவனிப்பதில்லை என்று நீ சந்தேகப்படுகிறாயா?”

“இல்லை அப்பா. அந்த விஷயத்தில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால எந்த அண்ணன் தங்கையும் அந்த மாதிரி நடந்துகொள்வதை நான் பார்த்தது இல்லை. அதான் கொஞ்சம் பாந்தம் இல்லாமல் இருக்கிறது.”

“நான் முன்னாடியே சொன்னேன், அவனிடமும் பலவீனம் இருக்கலாம் என்று.ம், அவற்றுக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்காதே என்றும். கடுகத்தனை விஷயத்தை மலையத்தனை ஆக்காதே. நீ கொஞ்சம் பொறுமையைக் கடைபிடித்தால், ஆவேசத்தில் முன்பின் யோசிக்காமல் வார்த்தைகளை பேசாமல் இருந்தாலே போதும். அந்த அளவுக்கு பொறுமை உன்னிடம் இருக்கும் என்றுதான் இவ்வளவு நாளாய் நம்பியிருந்தேன். என் நம்பிக்கையில் மண்ணை அள்ளி போட்டுவிட்டாய்.”

பாவனாவுக்கு புரிந்தது ஒன்றுதான். தந்தை அவள் வாதத்தைக் கேட்காமலேயே தீர்ப்பை அளித்துவிட்டார். அவரிடமிருந்து எந்த விதமான இரக்கமும், உதவியும் இனி அவளுக்கு கிடையாது. அவர் பிரச்சினையைப் புரிந்து கொள்ளாமல் போவதற்குக் காரணம் என்ன? தலைமுறை இடைவெளியா? அல்லது அவர் தன் அனுபவத்தை மட்டுமே வைத்துக் கொண்டு வாழ்க்கையைப் பார்ப்பதாலா?

பிரச்சனை போராட்டத்தை தோற்றுவிக்கும். போராட்டத்திலிருந்து நல்ல யோசனை பிறக்கும். அந்த யோசனை உள்மனப் போராட்டமாக இருந்தால் மனிதனிடம் மாற்றம் வரும். யோசனை சீரான வழியில் இருந்தால் மனிதன் உயர்ந்து விடுவான். இல்லாவிட்டால் கோழையாகி விடுவான். கோழைத்தனம் அவனை சீர்குலைந்து போவதற்கு வழி வகுக்கும்.

கணவனின் நடவடிக்கை, தந்தையின் யோசிக்கும் தோரணை பாவனாவை யோசனையில் ஆழ்த்திவிட்டன.

சிறிய தொடக்கம் அது.

24

நள்ளிரவு தாண்டியிருக்கும். சாஹிதிக்கு திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. ரொம்பவும் தாகமாய் இருந்தது. எழுந்து தண்ணீருக்காகப் பார்த்தாள். அறையில் எங்குமே இல்லை. அவளுக்கு ஜுரம் வந்தது முதல் நிர்மலா அந்த அறையிலேயேதான் படுத்துக்கொண்டாள். தாயின் தவிப்பைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு அன்பும், இரக்கமும் பெருக்கேடுத்துக் கொண்டே இருந்தன.

நிர்மலா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

சாஹிதிக்கு தூக்கம் வரவில்லை. தாகம் அதிகரித்தது. தாயை எழுப்புவதில் விருப்பம் இல்லாமல் மெதுவாய் எழுந்திருந்தாள். ரொம்ப சோர்வாக இருந்தது. அடிமேல் அடி வைத்துக்கொண்டே டைனிங் ஹாலை நோக்கி நடந்தாள். அவ்விடமெல்லாம் இருட்டாய் இருந்தது. விளக்கைப் போட சுவிட்சின் மீது போன கைகள் அப்படியே நின்றுவிட்டன.

“ஏதோ சத்தம் கேட்குது. அம்மா எழுந்துட்டாங்க போலிருக்கு சுவாமி.” ரங்கம்மாவின் குரல்.

“காலை வரையிலும் எழுந்திருக்க மாட்டாள். ஒன்றும் ஆகாது.” பரமஹம்சா சொல்லி கொண்டிருந்தான்.

“நிஜமாகவே என் வயிற்றில் குழந்தை பிறக்கப் போகுதா சுவாமி?”

“கண்டிப்பாக. உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு தெய்வ அம்சம் இருக்கும். அது கடவுளின் உத்தரவு. அந்த விஷயம் முந்தாநாள் உனக்காக பூஜை பண்ணியபோது தான் எனக்குத் தெரிந்தது.”

“உங்க நன்றியைத் தீர்த்துக் கொள்ளவே முடியாது சுவாமி. என்னைப் போன்ற வேலைக்காரிக்கிக் கூட கருணைக் காட்டி இருக்கீங்க. உண்மையிலேயே நீங்க கடவுளின் அவதாரம்தான்.” ரங்கம்மா பத்தி பரவசத்துடன் பேசிக்கொண்டிருந்தாள்.

சாஹிதி அறைக்குத் திரும்பி வந்துவிட்டாள். முன்பாக இருந்தால் இந்தச் சம்பவத்தைப் பார்த்து திக்பிரமை அடைந்து இருப்பாள். இப்பொழுது அந்த நிலைமை தாண்டிவிட்டது. எல்லாம் சாதாரண விஷயங்களாகவே தென்பட்டன.

ரங்கம்மா எவ்வளவு உறுதியாய் நம்புகிறாள் அவனை? இப்படிப்பட்ட ஆதரவு இல்லாதோர் எல்லோரையுமே கடவுளின் பெயரைச் சொல்லி நம்பவைத்து ஏமாற்றுவது இவனுக்குக் கைவந்த கலை போலும். ரங்கம்மா கிடக்கட்டும். படிப்பு அறிவு இல்லாதவள். புத்தி சாதுரியம் கிடையாது. ஆனால் தாய்? அவ்வளவு படித்துவிட்டு அவனை அவ்வளவு தூரம் நம்புவதும், கண்மூடித்தனமாய் வழிபடுவதும்... யோசிக்க யோசிக்க வருத்தமும், இயலாமையும் அவளை சூழ்ந்துகொண்டன.

சாஹிதி எழுந்து புத்தக அலமாரியைத் திறந்தாள். சிநேகிதி சொன்ன பெட்டிக்கடையில்தான் கிடைத்தது அந்த பவுடர். கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக்கொண்டு சுவைத்தாள். ஐந்து நிமிஷம் கழித்து இனிமையான மயக்கம்... காற்றில் மிதப்பது போன்ற உணர்வு. எந்த சிந்தனையும் இல்லை. அந்த மயக்கத்தின் தாலாட்டில் அப்படியே உறங்கிவிட்டாள். அந்த உறக்கத்தில்

சாஹிதிக்கு ஒரு கனவு வந்தது. ரங்கம்மாவையும், பரமஹம்சாவையும் சமையலறை தரையில் நிர்வாண கோலத்தில் பார்த்துவிட்ட நிர்மலா, காளியாய் மாறுகிறாள். அவனைத் தெருவில் இழுத்து வந்து துரத்தி துரத்தி அடிக்கிறாள்.

மறுநாள் காலையில் எழுந்ததுமே ஜுரம் முற்றிலுமாய் தணிந்து போய்ப் புத்துணர்ச்சி ஏற்பட்டது சாஹிதிக்கு. யாரோ வந்த சந்தடி கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். பரமஹம்சா முறுவலுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“ஏம்மா, தொந்தரவு செய்துவிட்டேனா?” அன்பாய்க் கேட்டான்.

சாஹிதிக்கு ஏனோ குணசேகரம், பரத்வாஜும் நினைவுக்கு வந்தார்கள். அவர்களைப் போலவே தானும் இவனை நன்றாக அழ\வைக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டே, படுக்கையிலிருந்து எழுந்து கொண்டாள்.

“இல்லை அங்கிள். வாங்க” என்று வரவேற்றாள்.

“உட்கார்.. உட்கார்.. நான் கொடுத்த மருந்து நன்றாக வேலை செய்திருக்கு. பார்த்தாயா? இன்றைக்கு தெளிவாய் இருக்கு உன் முகம்.”

“உண்மைதான் அங்கிள். உங்கள் கையால் எது கொடுத்தாலும் அது தெய்வ பிரசாதம் ஆகிவிடும் என்று ரங்கம்மா கூடச் சொன்னாள்.”

“பின்னே? அந்த விஷயம் எல்லோருக்குமே தெரிந்திருக்கிறது. ஆனால் நீ மட்டும் கொஞ்ச நாள் படிப்பிலேயே கவனம் செலுத்து. எதற்கும் லாயக்கு இல்லாத மாப்பிள்ளைகளைப் பற்றி

யோசிக்காதே. உன் மனதில் என்ன இருக்கு என்று எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அதைத் தெரிந்துகொள்.”

“என்னவோ அங்கிள். உங்களுக்குப் புரிந்தாற்போல் என் மனசு எனக்குப் புரிய மாட்டேங்கிறது. ரொம்ப குழப்பமாய் இருக்கு” என்றாள் சிரிப்பை அடக்கிக்கொண்டே. அவளுக்கு நேற்றிரவு கண்ட கனவு நினைவுக்கு வந்தது.

“நான் சொல்லட்டுமா? உனக்கு வேண்டியதை வேறு யாரோ பறித்துக்கொண்டு விட்டாற்போல் வருத்தமாய் இருக்கும். அப்போ தனியள் ஆகிவிட்டோம் என்று வருந்துவாய். ஃப்ரஸ்ட்ரேஷன் வந்துவிடும். என்ன பேசுகிறோம் என்று உனக்கே தெரியாமல் போய்விடும். அப்படித்தானே?”

“ஆமாம் அங்கிள். இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?” வியப்புடன் கேட்டாள்.

பரமஹம்சா எழுந்து அவள் அருகில் வந்தான். அவள் முகத்தைத் தன் பக்கமாய்த் திருப்பி, அவள் கண்களையே நேருக்கு நேராய்ப் பார்த்தபடி சொன்னான்.

“நீ எனக்காகப் பிறந்திருப்பதால்! நீ மனதில் என்ன நினைத்துக் கொண்டாலும் எனக்குத் தெரிந்து போய் விடுவதால்! அன்பு இருக்கும் இடத்தில்தான் பொறாமையும் இருக்கும். நான் எல்லோர் மீது அன்பு செலுத்துவதை உன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என்மீது இருக்கும் உன் மனதை வேறு ஆணின் பக்கம் திருப்ப முயன்று தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறாய். அதனால் உன்மீது உனக்கே கோபம் வருகிறது.”

“அப்படித்தான் போலிருக்கு. எனக்கு ஒன்றுமே தெரியவில்லை.”

“இன்னும் நீ சின்னப் பெண். அதான் இன்னும் கொஞ்சநாள் படிப்பில் கவனத்தைச் செலுத்தச் சொல்கிறேன். உன் மனப்போராட்டம் தணிவதற்கு கொஞ்ச நாள் ஆகும். அன்பு என்பது நாம் வேண்டும் என்கிற போது ஏற்படுவது இல்லை. வேண்டாம் என்று நினைத்தால் போய்விடக் கூடியது இல்லை. யார்மீது எதற்காக ஏற்படுகிறது என்றும் தெரியாது. நீ இந்த விஷயத்தில் அனாவசியமாக வருந்தாதே. நான் அவ்வப்பொழுது வந்து உனக்கு தைரியத்தை அளிக்கிறேன். அவகாசம் வந்ததும் என்னுடையவளாக்கிக் கொண்டுவிடுகிறேன். அதற்குப் பிறகு உன்னை எந்தச் சிந்தனையும் பாதிக்காது.” அவன் குனிந்து அவளுடைய இரு கன்னங்களிலும் முத்தமிட்டான். அதற்குப் பிறகு அவள் உதடுகளை நோக்கிக் குனியப் போனான்.

சாஹிதி கவரமடைந்தாள். “யாரோ வருகிறார்கள்” என்று சரேலென்று எழுந்து நின்றாள். பரமஹம்சா சட்டென்று வெளியே போய் விட்டான். அவள் அப்படியே நின்றுவிட்டாள்.

ஒரு தாயுடனும், அவளுடைய மகளுடனும் கூட குடும்பம் நடத்துவதாகச் சொல்லும் இந்த அயோக்கியன் சமுதாயத்தில் கடவுள் அவதாரம்! வீட்டுத் தலைவியுடனும், வேலைக்காரியுடனும் சமமாய் சரசம் புரியும் இவன் சீர்திருத்தவாதி! தாய்க்கு இவன்மீது அளவுகடந்த நம்பிக்கை. இன்றைக்கு அவளோடு இவ்வாறு பேசினான் என்று தெரிந்தால் தாயின் இதயம் வெடித்து விடாதா? ஆனாலும் சொல்லித்தான் ஆகவேண்டும். அவனுடைய உண்மை சொரூபம் தெரிந்தாலொழிய அவளுக்கு ஞானோதயம் ஏற்பாது. சாஹிதிக்கு வருத்தமாக இருக்கவில்லை. சந்தோஷமாக இருந்தது. முதல்நாள் கண்ட கனவு நினைவுக்கு வந்தது. இனி இந்தச் சிக்கலான முடிச்சு அவிழ்ந்து விடப்போகிறது.

வெளியே பரமஹம்சா போய்விட்டாற்போல் கார் சத்தம் கேட்டது. “சாஹிதி! கல்லூரிக்குப் போகப் போவதில்லை என்று சொன்னாயாமே? உடம்பு சரியாக இல்லையா?” ஏறணு நிர்மலா வந்தாள்.

“இல்லை மம்மி! வந்து..” நிறுத்தினாள்.

“என்ன நடந்தது?”

“நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. தந்தையின் ஸ்தானத்தை கொடுத்திருந்த ஆள் வந்து என்னை வைப்பாட்டியாக வைத்துக் கொள்வதாய் சொல்லி ஆறுதல் சொல்லிவிட்டுப் போனான். உன்னோடும், என்னோடும் ஒன்றாக குடும்பம் நடத்தக் கூடிய சாமர்த்தியம் படைத்தவனாம். என்னை முத்தமிட்டு மேலும் வாக்குக் கொடுத்திருக்கிறான்.”

அவள் வார்த்தை இன்னும் முடியக்கூட இல்லை. நிர்மலா சரேலென்று எழுந்துகொண்டாள். “சாஹிதி! என்ன பேச்சு இது?” என்று கோபமாய்க் கத்தினாள்.

சாஹிதி மெதுவாய்ச் சொன்னாள். “உண்மைதான் மம்மி. பரமஹம்சா அங்கிள்... இன்னும் அங்கிள் என்ன? உங்கள் கல்யாணம் நடந்த அன்றே எனக்குத் தந்தையாகி விட்டான். எனக்குத் திருமணம் செய்து வைப்பதில் அவனுக்கு விருப்பம் இல்லை. என் குணம் நல்லது இல்லை என்று பிரசாரம் செய்தான். ஏன் தெரியுமா? என்னுடனும் சரசம் புரிவதற்காக. ஏமாந்துவிட்டோம் மம்மி! அவன் குள்ள நரி என்று தெரியாமல் சொத்தை முழுவதும் அவன் கையில் ஒப்படைத்து விட்டோம்.”

“ஷட் அப்! உனக்குப் பைத்தியம் பித்துவிட்டது. என்ன பேசுகிறாய் என்று உனக்கே தெரியவில்லை.”

“அவனும் இதையேதான் சொன்னான் மம்மி! அவனைக் கண்டால் எனக்கு பைத்தியமாம். அதனால்தான் இப்படி ஆகிவிட்டேனாம். உனக்குத் தெரியாது. ரங்கம்மாவைக் கூப்பிட்டுக் கேள். நள்ளிரவு நேரத்தில் அவள் பக்கத்தில் படுத்து வருவது தெரியும். அப்படிப்பட்டவனை மதிப்பது நம்முடைய தவறு. என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் சாயந்திரம் வருவான் இல்லையா? அவனையே கேள். எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும்.” என்றாள் சாஹிதி ஆவேசமாய்.

அவள் வார்த்தைகள் முடியக்கூட இல்லை. நிர்மலா அழுதுகொண்டே அறைக்குள் போய்க் கதவைச் சாத்திகொண்டு விட்டாள்.

‘அம்மா வருத்தப்பட்டாலும் பரவாயில்லை. உண்மையைத் தெரிந்து கொண்டாள். அதுவே போதும்’ என்று நினைத்துக் கொண்டாள் சாஹிதி.

அன்று முழுவதும் அந்த வீட்டில் பயங்கரமான நிசம்ப்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. சாஹிதி பயப்படவில்லை. அவன் எப்பொழுது வருவான் என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலையில் அவன் வந்தான். அவர்கள் இருவரும் ரொம்ப நேரம் ஏதோ பேசிக் கொண்டார்கள். சாஹிதிக்கு பதற்றம் அதிகரித்தது. அதற்குப் பிறகு அவன் அவள் அறைக்கு வந்தான். அவன் முக அமைதியாய் இருந்தது. “அம்மா! சாஹிதி!” என்றான். அந்தக் குரலில் இருந்த அமைதி அவனை பயமுறுத்தியது.

நிமிர்த்து தீனமாய் பார்த்தாள்.

“பைத்தியக்காரி! எப்படியம்மா என்னைத் தவறாகப் புரிந்து கொண்டாய்? உன் உடல்நலம் சரியாக இல்லை என்று நினைத்தேனே தவிர இவ்வளவு தூரம் உன் மனம் கலங்கிவிட்டிருக்கும் என்று எனக்குத் தெரியாது. தவறு என்னுடையது தான். உன் கிரகநிலை சரியாய் இல்லை என்று தெரிந்தும் சரி பண்ணாமல் விட்டது, உன்னை உன்மத்த நிலைக்கு கொண்டு போய்விட்டது.”

அவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் குண்டாய் வெடித்தது. அவள் தைரியத்தைச் சின்னா பின்னமாக்கியது. ஆனாலும் துணிச்சலைக் கூட்டிக் கொண்டாள்.

“எனக்கு எந்த நோயும் இல்லை. கிரகங்கள் எல்லாம் சரியான வழியில்தான் செயல் படுகின்றன. நீங்க ஒன்னும் கடவுள் இல்லை. எல்லாவற்றையும் அம்மாவிடம் சொல்லிவிட்டேன்” என்றாள்.

“இவளுடைய போக்கைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. என்ன செய்வது?” நிர்மலா அழுது கொண்டிருந்தாள்.

“மம்மி! எனக்கு ஒன்றுமே இல்லை. இவன் பேச்சை நம்பாதே. நான் சொன்னதெல்லாம் உண்மைதான்.

“சாஹிதி! பைத்தியம் போல் அபாண்டமாய்ப் பழியைப் போடுகிறாய். உன் மனதில் என்ன இருக்கு என்று எனக்குத் தெரியாது என்று நினைத்துவிட்டாயா?” என்றான் பரமஹம்சா மென்மையான குரலில்.

“சாஹிதி! அவருடைய கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள். அப்படிப்பட்ட தெய்வத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதற்குப் பெரிய தண்டனையே கிடைக்கும். நானும்தான்

விவேகம் இல்லாமல் நடந்து கொண்டேன். நீ சொன்னதை எல்லாம் நம்பி அவரை உலுக்கி எடுத்து விசாரித்தேன். உன் மனதைப் பற்றியும், உடல்நிலையைப் பற்றியும் உடனுக்குடன் கடவுளிடம் பேசி தெரிந்துகொண்டு விட்டார்" என்றாள் நிர்மலா.

சாஹிதி வாயடைத்துப் போய் நின்றுவிட்டாள்.

"நிர்மலா! வருத்தப்படாதே. அவளுடைய தவறு எதுவும் இல்லை. எல்லாம் கிரகங்களின் கோளாறு. குழந்தை இவ்வளவு கஷ்டப்படுவதை என்னால் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. உடனே குணமாக்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன்." பரமஹம்சாவின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் உதிர்ந்தது. 'நம் சாஹிதி என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு இருக்கிறாள் என்றால் உள்ளூர எவ்வளவு குமுறிப் போயிருப்பாள்?'

"பார்த்தாயா? எவ்வளவு பரந்த மனம் அவருக்கு? அவர் சாட்சாத் கடவுள்! காலில் விழுந்து வேண்டிக்கொள்." நிர்மலா அழத் தொடங்கினாள்.

சாஹிதிக்கு மண்டை வெடித்துவிடும் போல் இருந்தது. என்ன நடக்கிறது? இவர்கள் நடந்துகொள்ளும் விதம்தான் என்ன? அவள் வார்த்தைக்கு மதிப்பே இல்லாமல் போய்விட்டது. உண்மையிலேயே அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?

பரமஹம்சா சொல்லிக்கொண்டிருந்தான்.

'உன் சொத்தை நான் கொள்ளையடித்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன் என்று உனக்கு சந்தேகமாய் இருக்கு போலிருக்கு. இல்லையாம்மா? அதனால்தான் இந்த மாதிரி அபாண்டமாய் பழியைப் போடுகிறாயோ என்று தோன்றுகிறது.

வேண்டாம் அம்மா. மனதில் அந்தமாதிரி எண்ணங்களை வளரவிடாதே. என் சாஹிதி கண்ணு அந்த மாதிரி யோசித்துப் பார்ப்பதைக்கூட என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. இந்த நிமிஷமே இதையெல்லாம் விட்டுவிட்டுப் போய் விடுகிறேன். என் மகளே என்னை தவறாக புரிந்துகொள்வதை என்னால் சகித்துக்கொள்ள முடியாது."

அவள் வாயடைத்துப் போய் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

எவ்வளவு சாமர்த்தியமான நாடகம்! ஒரே பாய்ச்சலாய் அவன் மேல் பாய்ந்து நகத்தால் முகத்தை பிராண்டிவிட வேண்டும் என்ற ஆவேசத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக்கொண்டாள். அவளுக்கு அவன்மீது கோபம் வரவில்லை. தாயின் மீதுதான் வந்தது. அது முற்றிலும் கோபம் கூட இல்லை. அனுதாபம்!! ஆதரவற்றத்தன்மை! வெறுப்பு! எல்லாம் கலந்த உணர்வு!

"இவளை எந்த பேயோ பிசாசோ பிடித்திருக்கிறது." நிர்மலா விசும்பிகொண்டே அங்கிருந்து போய்விட்டாள். அவனும் எழுந்திருந்தான். லேசாய் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஆயிரம் அர்த்தங்கள் பிரதிபலித்தன. அங்கிருந்து நிசப்தமாய் போய்விட்டான்.

ரொம்ப நேரம் சாஹிதி அப்படியே உட்கார்ந்திருந்தாள். கற்சிலையிடமாவது சலனம் இருக்குமோ என்னவோ. ஆனால் அவளிடம் சலனம் இல்லை. கடலில் ஓசையைப் போல் அவள் மனதில் எண்ணங்கள் ஆர்பரித்தன.

கொஞ்ச நேரத்தில் அவள் சுதாரித்துக்கொண்டு எழுந்தாள். ஒரு முடிவுக்கு வந்தவளாய் சந்தடி இல்லாமல் அவ்வறையை விட்டு வெளியே வந்தாள். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

கேட்டைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். ஆளரவமில்லாத வீதியும், விசாலமான நகரமும் அவளை வரவேற்பது போல் தென்பட்டன.

அவள் நடக்கத் தொடங்கினாள்.

தொலைவில் எங்கேயோ நாய் ஒன்று குறைத்துக் கொண்டிருந்தது. அவள் நடந்து கொண்டே இருந்தாள். அவ்வாறு எவ்வளவு தூரம் நடந்திருப்பாளோ தெரியாது. வயது வந்த ஒரு பெண் அவ்வாறு தனியாய் நடந்து போவது ஆர்வத்தைக் கிளப்பிவிட்டது போலும். இரு இளைஞர்கள் அவளைப் பின் தொடர்ந்தார்கள். கொஞ்சம் நேரம் கழிந்ததும் அவர்களில் ஒருவன் மேலும் உரிமை எடுத்துக்கொண்டு அவளிடம் நெருங்கி வந்து "ஹலோ!" என்றான். அவள் பயந்துபோய் நடையின் வேகத்தை கூட்டினாள். மக்கள் நடமாட்டமே இல்லை. அவள் பயம் அவர்களுக்கு உற்சாகத்தைத் தந்தது. ஒருத்தன் அவள் இடுப்பில் கையை வைத்தான். அவளுக்கு இப்படிப்பட்ட அனுபவம் புதுசு. எப்பொழுதும் காரில்தான் போவாள் அவள். அவர்களோ பேட்டை ரவுடீக்களை போலிருந்தார்கள். அவளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. வீட்டிலிருந்து புறப்பட்ட போது இருந்த ஆவேசம் இப்பொழுது இல்லை. பயந்து கத்தப் போனாள். அதைப் பார்த்துவிட்டு இன்னொருத்தன் அவள் வாயைப் பொத்தி கத்த முடியாமல் தடுத்துவிட்டு, இன்னொரு கையை அவள் முழங்காலுக்குக் கீழே வைக்கப் போனான்.

தொலைவில் மரங்களும், விளையாட்டு மைதானமும் தென்பட்டன. அந்த இடம் முழுவதும் இருட்டாய் இருந்தது. அவள் திமிறிக் கொண்டிருந்தாள். அடுத்தவனும் முதலாமவனுக்கு உதவி பண்ணத் தொடங்கினான். வானத்தில் பறவை ஒன்று தீனமாய் கத்திக் கொண்டே போயிற்று.

25

பரத்வாஜுக்கு அன்று இரவு எரிச்சலாய் இருந்தது. இலக்கியக் கூட்டத்திற்குப் போகவேண்டும் என்றாலே அவனுக்கு பயம். யாராவது வயதான எழுத்தாளர் தலைமை தாங்கி இலக்கியம் எப்படியெல்லாம் சீர்குலைந்து போகிறது என்று சொற்பொழிவு ஆற்றுவார். அங்கே வருபவர்கள் எல்லோருமே எழுதத் தெரியாதவர்கள் அல்லது எழுதாமல் தடுப்பவர்கள். அப்படிப்பட்ட சொற்பொழிவாளர்களுக்கு நடுவில் அவனுடைய பெயரையும் வலுக்கட்டாயமாக போட்டுவிட்டார்கள்.

அவனுக்கு முன்னால் மூன்று பேர் பேசினார்கள். அவர்கள் பேசியதெல்லாம் உண்மைதான். செக்ஸ், கொலை, கொள்ளை நிரம்பிய கதைகளைப் படித்துவிட்டு வாசகர்கள் கேட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள் இதுதான் அவர்கள் சொன்னது.

ஆனால் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த போது அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. அது இலக்கியக் கூட்டம். அங்கே இருந்தவர்கள் எல்லோருமே பெரும்பாலும் வாசகர்கள்தாம். அவர்கள் எல்லோருமே கேட்டுப் போனவர்களா? அல்லது இந்த கூட்டத்திற்கு வராத (கெட்டுப்போன) வாசகர்களுக்காக இந்த சொற்பொழிவு ஆற்றுகிறார்களா என்று அவனுக்குப் புரியவில்லை.

இந்த விஷயத்தைத்தான் அவன் தன் பேச்சில் சொன்னான். “எந்தப் பிரச்சனைக்குமே மூல காரணம் தனித்தன்மை இல்லாமல் போவதுதான். எந்த எழுத்தாளனுமே பிரச்சனை\க்கு பரிகாரம் சொல்லமாட்டான். மனிதர்கள் எப்படி வாழ வேண்டும் என்று மட்டும்தான் சொல்லுவான். ஒருவிதமாக சொல்லப் போனால் செக்ஸ் கூட ஒரு பிரச்சனைதான்.”

இந்தக் கடைசி வார்த்தைக்கு கூட்டத்திலிருந்து விசில் சத்தம் கேட்டது.. நள்ளிரவு நேரத்தில் இரானி ஹோட்டலில் தேநீர் குடித்துக்கொண்டே அமேஜான் காடுகளைப் பற்றி வாதாடும் மேதாவிகள் பத்துபேர் "டௌன்.. டௌன்" என்று கத்தினார்கள். அந்த ரகளைக்கு நடுவில் தலைமை தாங்கியவர் அவனை பேச்சை நிறுத்துக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார். அந்த எரிச்சலுடனேயே அவன் எஞ்சிய கூட்டத்திற்கு இருக்காமல் இடையிலேயே எழுந்து வந்துவிட்டான. தான் சொல்ல நினைத்தது அவர்களுக்கு புரியவில்லையோ அல்லது அவர்களுக்குப் புரியும் விதமாக தன்னால் சொல்ல முடியவில்லையோ என்று அவனுக்குப் புரியவில்லை.

அது புரியும் வரையில் அன்று இரவு முழுவதும் குடிப்பது என்று முடிவு செய்தான். அவனுடைய சந்தேகத்தைத் தீர்த்துவைக்கும் இரண்டு பெண்கள், அன்று இரவு, ஒருத்தரை அடுத்து ஒருத்தராய் எதிர்படப் போகிறார்கள் என்று அப்போது அவனுக்குத் தெரியாது.

அந்த விதமான மனநிலையில் அவன் பாரை நோக்கிப் போய்க் கொண்டிருந்த போது,, ஆளரவமற்ற அந்த வீதியில் சாஹிதியைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்த ரோமியோக்கள் தென்பட்டார்கள்.

விளக்கு வெளிச்சம் மேலே வந்து விழுந்ததும் அவர்கள் தம் முயற்சியை விட்டுவிட்டுப் பக்கத்து சந்துக்குள் ஓடிவிட்டார்கள்.

பரத்வாஜ் தன் வாகனத்தை நிறுத்திவிட்டு, அதிர்ச்சியால் நினைவு இழக்கும் நிலையில் இருந்த சாஹிதியை அதில் ஏற்றிக் கொண்டான்.

"நீ சாஹிதிதானே?"

அவள் பதில் சொல்லவில்லை.

“இந்த ராத்திரி வேளையில் தனியாய் எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?”

அவள் அதற்கும் பதில் சொல்லவில்லை. அவள் இன்னும் குழப்பத்திலிருந்து மீளவில்லை. வீடு என்ற சிறைச்சாலையிலிருந்து சுதந்திர உலகத்திற்குள் காலடி எடுத்து வைக்க வேண்டுமென்ற தவிப்புடன் வெளியே வந்த அடுத்த நிமிடமே இவ்வளவு பெரிய விபத்து நேர இருந்தது அவளை தளர்ந்துப் போகச் செய்தது.

அவள் மனநிலையை ஊகித்து அவன் எதுவும் பேசாமல் காரை ஒட்டிக் கொண்டிருந்தான்.

ரொம்ப நேரம் கழித்து அவள் தெறிக் கொண்டாள். அதற்குள் கார் நகர எல்லையைத் தாண்டி போய்க் கொண்டிருந்தது.

“நாம் எங்கே போய்க் கொண்டு இருக்கிறோம்?”

“அம்மாடி! பெசிவிட்டாய். எங்கே போகணும் என்று நீ சொல்லவில்லை. அதான் நீ தேறிக்கொள்ளும் வரையில் இப்படி ஒட்டிக்கொண்டு வந்தேன். எங்கே போகணுமோ நீ சொல்லு.”

“எனக்குத் தெரியாது.”

“வீட்டில் சண்டை போட்டுக்கொண்டு வந்துவிட்டாயா?” சந்தேகத்துடன் கேட்டான்.

“வீட்டில் இருக்க முடியாமல் வந்துவிட்டேன்.”

“எங்கே இருக்கலாம் என்று உத்தேசம்?”

அவள் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்துவிட்டு பிறகு மெதுவாய் “நான் சாகப் போகிறேன்” என்றாள்.

“ரொம்ப நல்ல முடிவு. ஆனால் எதுக்கு?”

“உங்களுக்குப் புரியாது. எனக்கும் இருக்கும் பிரச்சனைகள் வேறு யாருக்குமே இருக்காது.”

“ரொம்ப வேடிக்கையாய் இருக்கு.”

“எது?”

“எனக்கு இருக்கும் பிரச்சனைகள் வேறு யாருக்குமே இருக்காது என்று அரைமணி நேரத்துக்கு முன்னால் நானும் நினைத்தேன். நான் பேசிய கூட்டத்தில் ஜனங்கள் ரகளை செய்து, மேடையை விட்டு இறங்கும் வரையில் என்னை விடவில்லை. செத்துப் போனால்தான் என்ன என்ற அளவுக்கு ஆவேசம் வந்தது. அதனால்தான் போய்க் கொண்டிருக்கிறேன்.”

“நீங்க நிஜமாகத்தான் சொல்றீங்களா?”

“ஏன்? அந்த சந்தேகம் ஏன் வந்தது உனக்கு?”

“என் பிரச்சனைக்கும் உங்களோட பிரச்சனைக்கும் என்ன சம்பந்தம்? அதற்கு முன்னால் இது எந்த மூலைக்கு?”

‘இதே வார்த்தையை என் சமையல்காரனிடம் சொன்ன போது அவனும் இதே போலத்தான் சொன்னான். நான் தரும் ஐநூறு ரூபாய் எதற்குமே போறாது. மூத்த மகளை அவன் கணவன் விட்டுவிட்டுப் போய்விட்டான். அவளுக்கு மூன்று குழந்தைகள். மகன் ஒரு போக்கிரி. பத்து நாட்களுக்கு ஒரு முறை வந்து தந்தையை அடித்துப் போட்டு பணம் ஏதாவது இருந்தால் பிடுங்கிக் கொண்டு போவான். இரண்டாவது மகளுக்கு கேன்சர்.

இன்னும் ஆறு மாதங்களில் இறந்து விடுவாள் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள்."

"ப்ளீஸ்... நிறுத்துங்கள்."

"அவனுக்கு அடிக்கடி தாங்க முடியாத வயிற்றுவலி வந்துவிடும். முந்தாநாள் தான் எனக்கு ஒரு புது விஷயம் தெரியவந்தது. நான்கு நாட்களாய் பட்டினி கிடந்த போதும் சொல்லவே இல்லை. தன் வீட்டில் பட்டினியாய் இருப்பவர்களை நினைத்துக் கொண்டே இந்த வீட்டில் பார்ட்டிக்காக பிரியாணி சமைத்தது.."

"நிறுத்துங்கள்."

"நான் சொல்ல வந்தது என்னவென்றால், இந்த உலகத்தில் நிறைய பேர் தமக்கு இருப்பது போன்ற பிரச்சனைகள் வேறு யாருக்குமே இருக்காது என்று எண்ணிக்கொள்வார்கள். தம்மையும் தம்முடைய கஷ்டங்களையும் நெருக்கமாய் இருப்பவர்களே புரிந்து கொள்வதில்லை என்றும், தானாய் இருக்கக் கொண்டு இவ்வளவு கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்கிறோம் என்றும், வேறு யாராவதாக இருந்திருந்தால் என்றோ செத்துப் போயிருப்பார்கள் என்றும் நினைத்துக் கொள்வார்கள். இப்படிப்பட்ட நபர்களின் எண்ணங்கள் "தான்" என்ற வட்டத்தைத் தவிர அதைத் தாண்டி போகாது.அந்த எல்லையைத் தாண்ட முடிந்தால், அதற்குப் பிறகு எல்லாமே சந்தோஷம்தான் என்ற சின்ன விஷயத்தைகூட தெரிந்து கொள்ள மாட்டார்கள். அந்த எல்லையைத் தாண்டியவர்களுக்குத் தான் மூட் பாழாவது என்று எதுவுமே இருக்காது."

‘நதியில் அடித்துக் கொண்டு போகிறவனுக்குக் கரையில் உட்கார்ந்துகொண்டு ஒலிபெருக்கி மூலம் நீச்சல் கற்றுக் கொடுப்பது போல் இருக்கு உங்கள் சொற்பொழிவு.”

“குட் ஸ்டேட்மெண்ட். நல்ல எழுத்தாளர் ஆவாய். அதுசரி, இன்னும் நீ விஷயத்தைச் சொல்லவே இல்லை. இந்த ராத்திரி வேளையில் இப்படி வீட்டை விட்டுவிட்டு ஏன் வந்தாய்? உன் வளர்ப்பு தந்தை உனக்காகக் கூட லக்ஷ்மி பூஜை பண்ணுவதாய்ச் சொன்னாரா?”

அவள் வியப்புடன் நிமிர்ந்து “உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்றாள்.

“அவன் முதல் முறையாய் பார்த்த போதே அவன் உங்கள் வீட்டில் இருக்கும் பெண் இனத்தை, அது எறும்பாக இருந்தாலும் சரி, விட்டு வைக்க மாட்டான் என்று தோன்றியது.”

அப்பொழுதுதான் சொல்லத் தொடங்கினாள். கொஞ்சம் சூடு காட்டியதுமே வெண்ணெய் உருகத் தொடங்கிவிடுவது போல் அவள் மனதில் அதுவரையிலும் படிந்து போய் விட்டிருந்த உணர்வுகள் எல்லாம் வெளியில் வரத் தொடங்கின.

தன் தாயின் கன்னத்தில் படிந்திருந்த பற்குறியிலிருந்து, அவன் தன்னையும் எந்த விதத்தில் விரும்பினான் என்பதுவரை சொல்லிவிட்டு “இப்போ சொல்லுங்கள். யாருக்காவது இவ்வளவு பெரிய பிரச்சனை ஏற்பட்டிருக்குமா? நான் சாகணும் என்று நினைத்ததில் தவறு என்ன இருக்கு?” என்று கேட்டாள்.

“இப்போ சொத்து யார் பெயரில் இருக்கு?”

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு அவன் கேட்ட அசந்தர்ப்பமான முதல்கேள்விக்கு அவள் வியப்படைந்தவளாய் "தெரியாது" என்றாள்.

"நீ மேஜர் என்பதால் கொஞ்சம் சொத்து உன் பெயரில் எழுதி வைக்கச் சொல்லி கேட்கலாம்."

அவள் அதிர்ச்சி அடைந்தவளாய் "நீங்க என்ன பேசுறீங்க?" என்று கேட்டாள்.

அவளுடைய கேள்வியைப் பொருட்படுத்தாமல் அவன் தொடர்ந்தான். "அந்த வீட்டிலேயே நீ தனியாய் இருக்கலாம். உன் அனுமதி இல்லாமல் உன் தாயோ, உன் வளர்ப்புத் தந்தியோ உன் அறைக்குள் வரக்கூடாது என்று உத்தரவு போடலாம்."

"நீங்க இதையெல்லாம் ஏளனமாய் சொல்றீங்களா? அல்லது உண்மையாகத்தான் சொல்றீங்களா?"

'உன் வளர்ப்புத் தந்தைக்கும், உன் தாய்க்கும் நடந்த திருமண விஷயத்தை உன் உறவினர்களிடம் தெரிவிக்கலாம். பேப்பரில் போட்டோவைப் போடலாம். கரப் பத்திரங்கள் மூலமாய் அவனைப் பற்றிய உண்மைகளை பிரச்சாரம் செய்யலாம்."

"எங்க அம்மா தற்கொலை பண்ணிக்கொள்வாள்."

"உங்க அம்மாவுக்கு எப்போது பார்த்தாலும் அழுவதும், தற்கொலை பண்ணிக்கொள்வேன் என்று சொல்வதையும் தவிர வேறு வேலை எதுவும் கிடையாதா?"

“தயவு செய்து ஏங்க அம்மாவை ஒன்றும் சொல்லாதீங்க. அவள் பண்ணியது தவறுதான். எனக்குக்கூட தாங்க முடியாத கோபம் வரத்தான் செய்கிறது. அதற்காக சண்டை போட்டுக்கொண்டு பிரிந்து போகணும் என்று இல்லை எனக்கு.”

“சண்டை போட்டுக்கொண்டு பிரிந்துப் போகச் சொல்லி நானும் சொல்லவில்லை. அப்படிப்பார்க்கப் போனால் உங்க அம்மாவின் நடத்தையில் எனக்கு எந்த அசாதாரணமான தன்மையும் தென்படவில்லை. உங்க அம்மாவைப் போன்றவர்கள் பலபேர். கடுகளவு அன்புக்காக வாழ்க்கையைப் பணயமாய் வைத்து விடுவார்கள். தம் நடவடிக்கைகளுக்கு ஏற்றாற்போல் கொள்கைகளை உருவாக்கிக் கொள்வார்கள். அந்த மயக்கம் தமக்கு சந்தோஷத்தைத் தந்து கொண்டிருக்கும் வரையில் அதிலிருந்து வெளியேற மாட்டார்கள். அந்த மயக்கம் புடவை, பணமாகவும் இருக்கலாம். மாதர் சங்கம், சமுதாயத்தில் அந்தஸ்து போன்றவையாகவும் இருக்கலாம். துரதிர்ஷ்ட வசமாய் உங்க அம்மா விஷயத்தில் அது ஒரு “ஆண்” ஆக இருந்துவிட்டான். தன் வாழ்க்கையில் இழந்துவிட்டதை எல்லாம் அவன் மூலமாய் பெற்றுவிட வேண்டும் என்று எண்ணிவிட்டாள். அவள் அந்த மயக்கத்தில் எவ்வளவு மூழ்கிப் போயிருக்கிறாள் என்றால், தன் வாழ்க்கை போக்கையும், கொள்கைகளையும், தன்னோடு உன்னையும் சம்மதிக்கச் செய்வது கூட தவறு இல்லை என்று மனப்பூர்வமாக நம்பிவிட்டாள். இந்த விவகாரமெல்லாம் ரகசியமாக நடக்கணும் என்று அவள் நினைத்திருக்கவும் வாய்ப்பு இருக்கிறது இல்லையா?”

சாஹிதி வாயடைந்துப் போனவளாய் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் என்றுமே இந்தக் கோணத்திலிருந்து யோசித்தது இல்லை.

அதற்குள் அவன் சொன்னான். "அதுசரி, உன்ன பிரச்சனைக்கும், உன் வீட்டுக்கும் என்ன சம்பந்தம் என்றுதான் எனக்குப் புரியவில்லை. உன் படிப்பை நீ படித்துக் கொண்டு இருக்கிறாய். கல்யாணம் பண்ணிக்கொள்வதையோ அல்லது வேலைக்குப் போவதையோ நீயே தான் முடிவு செய்யப் போகிறாய். வாழ்க்கை என்றால் உங்க அம்மா, அவளுடைய கணவன் மட்டுமே இல்லையே? சாப்பாடு, துணிமணி, வீடு, படிப்பு எல்லாம் இருக்கும் நீயே இப்படிக் கோழையாகிவிட்டால் எப்படி சாஹிதி? யோசித்துப் பார்."

"காரைப் பின்னால் திருப்புங்கள்." சுருக்கமாகச் சொன்னாள் அவள்.

அவன் தன் வியப்பை தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டு காரைப் பின்னால் திருப்பினான். ஏறக்குறைய வீட்டை நெருங்கிவிட்ட போது சாஹிதி சொன்னாள். "ஒருத்தருக்கு மிகச் பெரிய பிரச்சினையாய் தோன்றுவது இன்னொருத்தருக்கு மிகச் சிறியதாகத் தோன்றலாம். அதற்காக ஏளனம் பண்ணத் தேவையில்லை. நீங்க ஏதோ என் பிரச்சனைக்கு தீர்வு சொல்லுவீங்க என்று யாரிடமும் சொல்லக்கூடாத எங்கள் குடும்பக் கதையெல்லாம் உங்களிடம் சொல்லிவிட்டேன். சொல்லி இளப்பமாகிவிட்டேன். ஒருத்தருக்குப் பசியின் கொடுமை இருக்கலாம். இன்னொருத்தருக்கு அருமையாய் வளர்த்த நாய் இறந்து விட்டதால் வேதனை ஏற்படலாம். முதலாவதுடன் ஒப்பிட்டால் இரண்டாவது எந்த மூலைக்கு என்று சொன்னால் அது அடுத்தவரை ஏளனம் பண்ணுவது போல்தான். அன்பு, பாசம் என்பவை கூட உண்டு. அவற்றை துண்டித்துக் கொள்வது அவ்வளவு எளிது இல்லை. நான் இப்படிப் பேசியதை நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளவில்லையே?"

“இல்லை. ஆனால் ஒரு விஷயத்திற்கு மட்டும் பதில் சொல்லு. நான் சொன்ன பரிகாரம் ரொம்ப மெடீரியலிஸ்டிக் ஆக இருப்பது உண்மைதான். ஆனால் செண்டிமெண்டை தழுவிக் கொண்டு நீ சாதித்தது இருப்பது வேதனைதானே? வரதட்சணை கொடுக்க முடியாமல் கல்யாணம் தடைபட்டு கஷ்டப்படுபவர்கள் சிலர். கல்லூரியில் ராகிங் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை பண்ணிக்கொள்பவர்கள் வேறு சிலர். எல்லாவற்றுக்கும் பரிகாரம் ஒன்றே ஒன்றுதான். தனித்தன்மையை வளர்த்துகொள்வது! மனிதன் தனக்கு எது வேண்டும் என்றும். எது தேவையில்லை என்றும் தெரிந்து கொள்ளணும். உன் தாய் உனக்குத் தேவையில்லை என்று நினைத்தாய் என்றால் பிரச்சனையே இல்லை. தாய் வேண்டும் என்று நினைத்தால் தாயோடு அவனையும் ஏற்றுக் கொள்வதுதான் இன்னொரு பரிகாரம்.”

“எவ்வளவு கொடுமையாய் பேசுறீங்க?”

“நாம்ப சுகமாய் இருக்கணும். நம்முடைய சுகம் யாருக்குமே இந்த உலகத்தில் துக்கத்தை ஏற்படுத்தி விடக் கூடாது. நம்முடைய தற்போதைய சுகம் நமக்கு குற்ற உணர்வை ஏற்படுத்தக் கூடாது. இந்த மூன்று கொள்கைகளை நம்பிய மனிதனுக்கு வாழ்க்கை முழுவதும் சந்தோஷம்தான். ஆனால் இந்த சுகத்திற்காக யார்மீதும் சார்ந்து இருக்காமல் சுயமுயற்சியால் சாதிக்க வேண்டும் அப்படி முயற்சி செய்து பார். கொஞ்ச நாள் கழித்து உன் தாயே உன்னைப் பாராட்டுவாள். உன் வளர்ப்பு தந்தை உன்னை சாதாரணமாகத் தொடவும் தயங்குவான். ஒரே பார்வையில் மனிதர்களைக் கட்டுபடுத்தி விடக்கூடிய அதிகாரம் உனக்கு வந்து சேர்ந்து விடும். கவலைகளைப் பற்றிக் கவலைப் படுவது குறைந்து விடும்.”

“அதுதான் எங்கள் வீடு. காரை நிறுத்தறீங்களா?”

‘இவ்வளவு நேரமாய் நான் சொன்னது ..”

“நல்ல கதையாய் எழுதுங்கள். சாதாரண மனிதர்கள் யாருமே பின்பற்ற முடியாத உயர்ந்த கொள்கைகள் இருக்கு அதில்.”

அவன் மனம் காய்ப்பட்டது. ஆனாலும் அவளுடைய தற்போதைய மனநிலையை புரிந்துக் கொண்டவன் என்பதால் சிரித்துவிட்டு “சரி, எழுதுகிறேன். ஆனால் நீ மட்டும் எதுவும் பண்ணிக் கொண்டு விட மாட்டேன் என்று வாக்குக்கொடு” என்றான்.

அவளும் தான் வாய்த் தவறி சொல்லிவிட்டதற்கு வருத்தமடைந்தவளாய் “சாரி, கண்டிப்பாக அப்படி எதுவும் பண்ணிக் கொள்ள மாட்டேன்” என்று காரை விட்டிறங்கிப் போய்விட்டாள்.

காரைத் திருப்பிக்கொண்டு போன பரத்வாஜ் நினைத்துக் கொண்டான். லாபம் இல்லை. இன்றைக்கு இரண்டு பேக்குகள் கூட போட்டாகணும். அங்கே கூட்டத்தில் சபையில் இருந்தவர்கள் கூட என்னைப் புரிந்துகொள்ளவில்லை. இங்கே பிரச்சனை இருக்கும் வாசகர்களும் கூட என்னைப் புரிந்துகொள்ளவில்லை. விமரிசனம் செய்பவர்கள் குத்திக் காட்டுவது போல் என்னால்தான் சமுதாய உணர்வுடன் தீர்வு சொல்ல முடியவில்லையா? இந்தப் பிரச்சனைக்குப் பரிகாரம்தான் என்ன?

சரியாக நான்கு மணிநேரம் கழித்து அவன் பிரச்சனைக்கும் பரிகாரம் கிடைத்தது

26

அன்றிரவு பாவனாவுக்கு ஏனோ ரொம்ப பதற்றமாக இருந்தது . அது எந்த காரணத்தாலும் ஏற்பட்ட பதற்றம் இல்லை . .இப்பொழுதெல்லாம் அப்படித்தான் இருந்து வந்தது கடந்த இரண்டு மாதங்களாய் பாஸ்கர் ராமமூர்த்தி மேலும் சாடிஸ்ட் ஆக மாறிக் கொண்டிருந்தான்வீட்டிலேயே க .ுடிக்கத் தொடங்கிவிட்டான்.

ஒருகாலத்தில் தந்தையின் பக்கபலம்தான் இருக்கிறதே என்று தைரியமாய் இருந்தாள் பாவனாஅவர் எதைச் செய்தாலும் . தீவிரமாய் யோசித்துப் பார்த்துவிட்டுத்தான் பண்ணுவார் என்பது அவளுடைய திடமான நம்பிக்கைஆனால் எப்போது விஸ்வம் .. தன கணவன் பக்கமாகவே சரிந்து பெசிநானோ அப்பொழுதிலிருந்தே அவள் தைரியமெல்லாம் கோழைத்தனமாக மாறிவிட்டது.துக்கம் தொண்டைக்குள் அல்ல .துக்கம் வந்தது . இதயத்தில் துக்கம்.

பாஸ்கர ராமமூர்த்தின் வேலை ரொம்ப சுலபமாகிவிட்டதுகை . நிறைய மாமனார் தந்த பணம் இருந்ததுமனம் போனபடி . செலவிழிக்கத் தொடங்கினான்அவன் குடித்துவிட்டு . வந்து கத்துவது அக்க பக்கத்தில் எல்லோருக்கும் பழகிப் போய்விட்டது. அந்த எல்லோருக்குள் ராமநாதன் ஒருவன். ராமநாதன் ஏதோ இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியின் ஏஜெண்ட் . பகல் முழுவதும் வீட்டிலேயே தான் இருப்பான்அவன் மனைவி . ஆபீசிற்குப போய்விட்ட சமயங்களில், அந்த தெருவில் உள்ள எல்லோர் வீட்டிற்கும் போய் அவர்கள் விஷயங்களில் எல்லாம் ரொம்ப அக்கரையுடன் தலையிட்டு, வம்பு பேசிவிட்டுத் திரும்புவான்பெண்களை . வலையில் வீழ்த்துவதற்கு அது ஒரு யுக்திஅந்தப் .யாருக்குமே சந்தேகம் வராது . 'பார்வை' கொண்ட

பெண்கள் மட்டும் அவன் பேச்சைப் புரிந்துகொள்வார்கள். இரண்டாம் பேருக்குத் தெரியாமல் காரியம் சுலபமாக நடந்து போய்க் கொண்டிருக்கும்.
அந்த விதமாய் அந்த தெருவில் அவனுக்குச் சில பெண்களுடன் நெருங்கிய உறவு இருந்து வந்ததுதெருவில் எல்லோருக்கும் . வேண்டியவனாகவும், நல்லவனாகவும் இருந்து வந்த ராமநாதனுக்கு ரொம்ப நாட்களாகவே பாவனாவின் மீது ஒரு கண் இருந்து வந்ததுஅவ்வளவு அழகான பெண் பாஸ்கர . ராமமூர்த்திகுப் போய் மனைவியாய் வாய்த்திருக்கிறாளே என்று எண்ணிக்கொண்டான்அவளைக் கவர்வதற்கு பலவிதமான . முயற்சிகள செய்யத் தொடங்கினான்.
முதலில் மைத்துனி உறவு கொண்டாடியபடி பேச்சுக் கொடுத்தான்பிறகு பால்பாகெட் . வாங்கித் தரத் தொடங்கினான் . போகப் போக ஒன்று அல்லது இரண்டு மணிநேராம் ஆற அமர உட்கார்ந்து கொண்டு விடுவான்ஜாதகம் பார்த்து ஜோசியம் . காதல் .சொல்வான் என்றால் என்ன என்று விளக்குவான்தன் . ம .மனைவியைப் பற்றிப் பேசுவான்னிதன் சந்தோஷமாய் வாழ்க்கையை அனுபவிப்பதில் தவறு இல்லை என்று உதாரணம் காட்டுவான். வசந்தியைத் திட்டித் தீர்ப்பான்.
இதில் வேடிக்கை என்னவென்றால் வேற்று ஆணுடன் கொஞ்ச நாட்கள் பேசிப் பழகிய பிறகுதான் அந்த ஆள் “அந்தப் பார்வையுடன்” தன்னிடம் பேசுகிறான் என்பதை பெண்கள் புரிந்துகொள்வார்கள் .பாவனாவுக்கு முதலில் புரியவில்லை . ஒருநாள் பிற்பகலில் ராமநாதன் வந்து கதவைத் தட்டினான் . அவள் கதவைத் திறந்ததுமே அவன் ஒரு பாக்கெட்டை அவசரமாய் அவள் கையில் திணித்துவிட்டு போய்விட்டான் . அதற்குள் இன்னொரு .அவள் புரியாமல் அதைப் பிரித்தாள் பாக்கெட் இருந்ததுஅப்படியே பிரித்துக்கொண்டே போகப் . போக கடைசியாய் ஒரு சாக்லேட், பாதி தின்றது இருந்தது .

பாவனா அருவருப்பு அடைந்தவளாய் அதைக் கொண்டு போய் குப்பைத்தொட்டியில் போட்டாள்.
தலையணையில் முகம் புதைத்து ரொம்ப நேரம் அழுது தீர்த்தாள்.
மறுநாள் பிற்பகல் அவன் கதவைத் தட்டியபோது அவள் திறக்கவில்லைஅதைத் . தொடர்ந்து தினமும் அதேபோல் நடந்ததுஅப்பொழுது அவன் என்ன சொன்னானோ . தெரியாது . .பாஸ்கர் ராமமூர்த்தி ஆத்திரமடைந்தான்
"கொஞ்சமாவது இங்கித ஞானம் வேண்டாமா? பாவம், வீட்டுச்சாவி இல்லாமல் கொஞ்ச நேரம் உட்கார்ந்துகொள்கிறேன் என்று சொன்னதற்கு துரத்தி அடித்துவிட்டாயா?" என்று கத்தினான்.
"அவன் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை." என்றாள் பாவனா.
"காமாலைக்காரனுக்கு உலகமே மஞ்சளாய்த் தான் தெரியும்உன் . புத்தி அந்த மாதிரியாய் இருப்பதால் அவனும் அப்படிப்பட்டவன் என்று எண்ணிவிட்டாயா?
அந்த நான்கு சுவர்களுக்கு நடுவில் நடந்ததை ராமநாதன் ஊகித்துக் கொண்டிருப்பான் போலும்மேலும் துணிந்து . .விட்டான்
பாவனா இருந்தது இரண்டு அறைகள் கொண்ட போர்ஷன் . குளியலறை பின்பக்கத்தில் இருந்ததுஅங்கே காத்திருந்து . இருட்டில் அவள் வந்ததுமே இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டு உதட்டில் அழுத்தமாய் முத்தம் பதித்தான்எதிர்பாராத . இந்தச் செயலுக்கு அவள் விக்கித்துப் போய்விட்டாள்அதையே . சாதகமாய் எடுத்துக் கொண்டு அவன் மேலும் முன்னேறப் போனான்பாவனா அவனிடமிருந்து . திமிறிக்கொண்டு உள்ளே ஓடிப்போய் கதவைச் சாத்திக்கொண்டு விட்டாள்.
ரொம்ப நேரம் வரையில் அவள் இதயம படபடத்துக் கொண்டிருந்ததுஇந்த மாதிரி . பிரச்சனைக்கூட யாருக்காவது

வருமா என்று நினைத்துக் கொண்டாள்கணவனிடம் . அதைச் சொல்லவில்லைதானே பாடம் புகட்டும் அளவுக்கு துணிச்சல் . .இருக்கவில்லை நாளைக்குத் தன் வாழ்க்கை என்னவாகுமோ என்ற பயம்கல்லூரியில் . படித்திருந்தால் இழுத்துக் கன்னத்தில் ஒன்று கொடுக்கும் தைரியம் இருந்திருக்கும் என்று தோன்றியது . கல்லூரியில் படித்தாலும் பெரும்பாலான பெண்களுக்கு ரோட் சைட் ரோமியோக்களை குறைந்தபட்சம் எதிர்த்துப் பேசும் தைரியம் கூட இருக்காது என்றும், தமக்குள் குமுறிக் கொண்டு இருப்பார்கள் என்றும் பாவனாவுக்குத் தெரியாது.
அதற்குப் பிறகு ராமன்சாதன் சில நாட்கள் கண்ணில் படவில்லை . கண்ணில் பட்டாலும் படாதது போல் போய்க் கொண்டிருந்தான் . அவளுக்கு நிம்மதியாக இருந்தது.
ஆனால் அது ஒரு டெக்னிக் என்று அவளுக்குத் தெரியாது . முதலில் கொஞ்ச நாட்கள் ஆர்வம் காட்டிவிட்டு பிறகு திடீரென்று விட்டுவிட்டால் பெண்களிடம் ஆர்வம் ஏற்படும் என்ற தியரி அவனுடையது.
ஆனால் பாவனாவிடம் அப்படிப்பட்ட ஆர்வமே இல்லாததால் அவனுடைய தியரி பொய்த்துவிட்டது.
பத்துநாட்கள் கழிந்தனஒருநாள் கதவு தட்டிய சத்தம் கேட்டு . சமையல் அறையில் வேலை செய்துக் கொண்டிருந்த பாவனா வந்து கதவைத் திறந்தாள்!ராமநாதன் .
“ராமமூர்த்தி இல்லையா?”
“இல்லைவெளியே போயிருக்கிறார் .” என்று அவள் கதவைச் சாத்தப் போன பொழுது, கதவைத் தள்ளிக்கொண்டே “என்னை ஒன்பது மணிக்கு வரச்சொன்னான்வந்துவிடுவான் . என்று நினைக்கிறேன்கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்க .ிறேன்” என்று உள்ளே வந்து உட்கார்ந்துவிட்டான்.
பாவனா சமையல் அறைக்குப் போய், தன் வேளையில்

ஆழ்ந்திருந்தாள்.

“சாக்லேட் நன்றாக இருந்ததா இல்லையா என்று சொல்லவே இல்லை.” சமையலறை வாசலில் வந்து நின்றான்பாவனா பதில் . .பேசவில்லை

“எவ்வளவு நாளைக்குத்தான் இப்படிக் கஷ்டபட்டுக் கொண்டு இருக்கப் போகிறாய்? அவன் விஷயம் எனக்குத் தெரியும் . கல்யாணம் ஆகி இரண்டு வருடங்கள் ஆகியும் உனக்குச் சுகம் இல்லை.உன்னைப் பார்த்தால் பாவமாய் இருக்கு .”

“வெளியில் போகிறாயா? சுடச்சுட இந்த சாமபாரை உன் மூஞ்சில் வீசட்டுமா?” பாவனா கோபமாய்க் கத்தினாள்.

“எல்லோரும் டிஉன் .பார்ப்பதில் மூழ்கிப் போயிருப்பாங்க .வி. கணவன் இன்னும் ஒரு மணி நேரத்திற்கு வரமாட்டான்” என்று நெருங்கி வந்தான்.

“கிட்டே வராதேவந்தால் கூச்சல் போட்டு அக்கம் பக்கத்தாரைக் . .கூப்பிடுவேன்”

“ரொம்பத்தான் நடிக்காதே நீ கத்தினாலும் உன் கணவன் . அடிக்கிறான் போலிருக்கு என்றுதான் எண்ணிக் கொள்வார்கள் தினமும் நடக்கிறது தானேஒருமணி நேரம் . இருக்குயாருக்கும் . தெரியப் போவதில்லை” என்று மேலும் அருகில் வந்து இடுப்புக்கு அருகில் கைய வைத்து மார்போடு அணைத்துக் கொண்டான். பெரிதாக கத்தப் போன அவள் வாயை அவன் உதடுகள் தடுத்து நிறுத்திவிட்டனபாவனா . திமிறினாள்ஏற்கனவே பலவீனமாய் . இருந்த அவளால் அவன் பலத்திற்கு முன்னால் எதுவுமே பண்ண முடியவில்லைஇந்தப் போராட்டத்திற்கு இடையே கதவு . திறந்துக் கொண்டதை அவள் பார்க்கவில்லை.

“எவ்வளவு நாளாய் நடக்கிறது இந்தக் கூத்து?” என்ற பாஸ்கர

ராமமூர்த்தியின் குரலைக் கேட்டதும் ராமநாதன் பாவனாவை விட்டுவிட்டான்ஒருவினாடி அந்த . அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் படியான நிசப்தம் ஏற்பட்டது. அந்த நிசப்தத்தைச் சிதறடித்தபடி, "பாவனாஇப்போ என்ன ! செய்வது?" என்றான் ராமநாதன்அவை .நான்கே வார்த்தைகள் . புரிவதற்கு அவளுக்கு நான்கு வினாடிகள் பிடித்தன. மனிதர்களில் அப்படிப்பட்ட ஸ்பான்டேனிடி)spontanity) இருக்கும் என்று அவளுக்கு அதுவரையில் தெரிந்திருக்கவில்லை . அவ்வளவு துரிதமாய் பிளேட்டை மாற்றி விடுவான் என்று எண்ணியிருக்கவில்லை.

பாஸ்கர் ராமமூர்த்தி இன்னும் சிலையாய் அப்படியே நின்று கொண்டிருந்தான். ஆனால் அவன் முகம் மெல்ல மெல்ல ஆவேசத்தால் சிவந்து கொண்டிருந்தது.

"இப்போ வேண்டாம்வந்துவிடுவான் என்று . .சொல்லிக்கொண்டுதான் இருந்தேன் அனாவசியமாய் பிடிபட்டுவிட்டோம்." முணுமுணுத்தாற்போல் சொல்லிவிட்டு ராமநாதன் பின் கதவைத் திறந்துகொண்டு போய்விட்டான் . ராமமூர்த்தி விருட்டென்று உள்ளே வந்து அவள் கன்னத்தில் பளீரென்று ஒரு அறை விட்டான்.

"தேவடியா மவளேநாள் முழுவதும் வீட்டில் இருந்துகொண்டு நீ ! பண்ணும காரியம் இதுதான் என்று சொல்லு" என்று அவள் கூந்தலைப் பிடித்துக் குனியச் செய்து முதுகிலும், கழுத்திலும் வெறி பிடித்தவன் போல் அடிக்கத் தொடங்கினான். கைகளால் தன்னைத் தடுத்துக்கொள்ளவும் அவளுக்கு வழியில்லாமல் போய்விட்டது. அவன் அடித்த அடியில் உதடு கிழிந்து ரத்தம் வரத்தொடங்கியது.

"இல்லைங்கஅவன்தான் உள்ளே .எனக்கொன்றுமே தெரியாது .

.வந்தான்" இரு கரங்களையும் கூப்பியபடி வேண்டிக்கொண்டே பதிலளித்தாள்யுக யுகமாய் . பாரதநாட்டுப் பெண்களுக்கு பிரதிநிதியாய் முழங்காலில் அமர்ந்துகொண்டு அவள் கணவனை பிராத்தித்துக் கொண்டிருந்தாள்.
அவனானால் அவளை கண்ணா பின்னாவென்று அடித்துக் கொண்டே கழுத்தைப் பற்றி மேலே தூக்கினான்.
"எவ்வளவு நாளாய் இந்த விவகாரம் நடந்து வருகிறது? இன்னும் எத்தனை பேருடன் உனக்கு சமபந்தம் இருக்கு?"
அவள் பதில் சொல்லும் முன் வாய்மீது இன்னொரு அடி விழுந்ததுவேகமாய் அவன் . பிடித்து தள்ளிவிட்டதில் அவள் தெருவில் வந்து விழுந்தாள்அதற்குள் . தெருவில் மக்கள் கூடிவிட்டார்கள்.
ராமநாதன் தன் மனைவியிடம் என்ன சொன்னானோ தெரியாது . அவள் கைகளை ஆட்டியபடி உரத்தக் குரலில் கத்திக்கொண்டிருந்தாள் ."என் வீட்டுக்காரர் அவள் ஷோக்குகளைப் பற்றி அடிக்கடி சொல்லிக்கொண்டுதான் இருந்தார்நான்தான் காதில் . போட்டுக்கொள்ளவில்லை . இன்னிக்கு குட்டு வெளிபட்டதுமே கதையையே மாற்றிவிட்டாள் மகராசி!"

அந்த வீதியில் இருந்த எல்லா பெண்களுமே பாவனாவின் அழகைப் பார்த்துப் பொறாமைப் படுபவர்கள்தாம்அந்த . தெருவில் இருந்த ஆண்களில் பெரும் பாலானவர்கள் பாவனாவை ஓரக்கண்ணால் சைட் அடித்தவர்ள்கள்தான்..
அவளுக்கு இவ்வாறு நேர்ந்ததில் பெண்களின் ஈகோ திருப்தி அடைந்தது .'இவ்வளவு அழகானவளுக்கு அத்தனை மோசமான குணம் இல்லாமல் எப்படி போகும்?' என்ற திருப்தி! தம் அழகற்றத்தன்மையை நினைத்து ஆறுதல் அடையும் தன்மை!
மனைவிமார்களைப் பார்த்து கணவன்மார்கள் பயந்தார்கள்.

பக்கத்தில் மனைவி மட்டும் இல்லாமல் இருந்தால் அதில் பாதிபேர் அவளுக்கு ஆதரவு தந்து இருப்பார்கள்ஆனால் அந்த . சின்ன .ஆதரவு சகமனுஷி என்ற நோக்கத்தில் இல்லை வீடாய்... தற்காலிகமாக..

இப்பொழுது மனைவிமார்களைத் திருப்திப் படுத்துவதற்காக ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாய் பேசத் தொடங்கினார்கள். "புருஷன் வெளியில் போனதுமே இவனைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டாளா? மைகாட்என்னைக் கூப்பிடாமல்) ! போய்விட்டாளே?) என்றான் ஒருத்தன்.

"ரொம்பவும் திமிர் பிடித்து அலையத் தொடங்கிவிட்டார்கள் . இப்படிப்பட்ட பெண்களை பிறந்தவீட்டுக்கு அனுப்பி .வைத்தாலும் ஆபத்துதான்

(இவளுடைய பிறந்த வீடு எங்கே என்று தெரிந்தால் நன்றாக இருக்கும்(

"எப்போ பார்த்தாலும் ஜன்னல் அருகிலேயேதான் நின்று கொண்டிருப்பாள்நான்) . எவ்வளவு முறை அப்படியும் அப்படியுமாய் அலைந்திருப்பெனோ?) என்றான் இன்னொரு கணவன்.

இப்பொழுது ராமனாதனுக்குத் துணிச்சல் வந்துவிட்டது. முன்பே சொன்னதுபோல் அந்த தெருவில் சில பெண்களுடன் அவனுக்கு உறவு இருந்து வந்ததுஇப்பொழுது இதில் . தன்னுடைய தவறு எதுவும் இல்லை என்று நிரூபித்துக் கொள்ளாவிட்டால், நாளைக்கு அவர்களைத் தனியாய்ச் சந்திக்கும் பொழுது கஷ்டம். எல்லோரிடமும் நீதான் என் தேவதைஎன் மனைவியையும் ., உன்னையும் தவிர வேறு எந்தப் பெண்ணையுமே எனக்குத் தெரியாது என்று ஒவ்வொருவரிடமும் தனிதனியாய்ச் சொல்லியிருக்கிறான்அதைக் காப்பாற்றிக் .

கொள்வதற்காக இப்பொழுது கடைசியில் பிரம்மாஸ்திரத்தை எடுத்துவிட்டான்.

“என்னவோ கூப்பிடுகிறாளே என்றுதான் உள்ளே போனேன் . என் கணவனுக்கு ஆண்மையில்லைஎனக்குக் குழந்தைகள் . என்றால் கொள்ளை ஆசைஇரண்டாம் பேருக்குத் . தெரியாது என்று சொல்லிக் கையைப் பிடித்தாள்.”

அங்கே திடீரென்று ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம்! பாஸ்கர் ராமமூர்த்தி ஆண்மை இல்லை என்ற செய்தி அவ்விடத்தில் வெடிகுண்டாய் வெடித்துவிட்டது. ஆண்கள் ஐயோ இந்தச் செய்தி முன்னாடியே தெரிந்து இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? இன்னும் தீவிரமாக முயற்சி பண்ணியிருக்கலாமே என்றெண்ணிக் கொண்டார்கள் . ராமநாதனை அவன் இலாகா பெண்மணிகள் எல்லோரும் அன்பாய் பார்த்தார்கள்தன் காதலன் பாவனாவைப் போன்ற . அழகியைக்கூட மறுத்துவிட்டான் என்ற உணர்வு அவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்திவிட்டதுராமநாதனுக்கு . வேண்டியதுகூட அதுதான்அவன் எய்த அம்பு நேராய் போய் தைத்துக் . .கொண்டது

பாவனாதான் அவனை அழைத்தாள் என்று அங்கே உறுதியாய் நிரூபிக்கப் பட்டுவிட்டது. கணவனின் குறையைப் பற்றிக் காதலனிடம் சொன்ன அந்தப் பெண்ணை எல்லோரும் அருவருப்புடன் பார்த்தார்கள்.

பாஸ்கர் ராமமூர்த்தியின் முகம் கொல்லனின் உலைக்களமாகிவிட்டதுஇத்தனை . அவமானத்தை எந்த ஆண்மகன்தான் தாங்கிக்கொள்வான்? அந்த ஆவேசத்தில் தானே ராமநாதனுக்கு இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லி செக்ஸ் ஸ்பெஷலிஸ்ட் அட்ரஸ் வாங்கிக்கொண்டதை மறந்துவிட்டான் . இப்பேோது இவ்வளவு பேருக்கு முன்னால் \ இந்தப் பெண் தன்

மானத்தை வாங்கிவிட்டாள்கோபம தலைக்கேற அவளை . அடிப்பதற்காகக் குனிந்தான். அதற்குள் ஒரு கை அவனைத் தடுத்தது. அது வசந்தியின் கை.

“அண்ணாஉனக்கு மூளை கலந்கிவிட்டதா !? நிறுத்து” என்றாள்.

“உனக்குத் தெரியாது வசந்திஇந்தத !◌ தேவடியாள்...”

“அண்ணா!” உருமினாள் வசந்தி .“உன் பண்பு என்னவாச்சு? கால்காசு வரதட்சணை வாங்கிக்கொள்ளாமல் பாவனாவைப் பண்ணிக்கொண்டது இதற்காகத்தானா?”

“ஆனால் இவள்...”

“தவறு செய்திருக்கலாம்தான் எவ்வளவு பெரிய தவறு . செய்துவிட்டோம் என்று தெரிந்துகொண்டால் அவள் உள்ளம் தகித்துக்கொண்டு போய் விடும்இந்த . உலகத்தாருக்கு முன்னால் முகத்தைக் காட்ட முடியாமல் தற்கொலை செய்துகொண்டு விடுவாள்அதானே தவிர நீ மிருகத்தனமாய் . .நடந்துகொள்ளாதே”

பாவனா வியப்புடன் வசந்தியை நோக்கினாள்அவ்வளவு . வேதனையிலும் கூட அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது .

வசந்தியாஇப்படிப் பேசுகிறாள்? நம்பவே முடியவில்லை.

“உனக்குத் தெரியாது வசந்தி” என்றான் ராமமூர்த்தி .“எவ்வளவு நாளாய் இந்த நாடகம் நடந்து வருகிறதோ? நான் இல்லாத நேரம் பார்த்து இந்த ராமனாதனைக் கூப்பிட்டு என்னைப் பற்றிப் பொய் சொல்லி இருக்கிறாள்அவன் !பாவம் . நல்லவனாய் இருக்கத் தொட்டு...” திரும்பவும் எல்லாம் நினைவுக்கு வந்ததும் திரும்பவும் ஆவேசப்பட்டான்.

“பாவனா மீது இனி ஒரு அடி விழுந்தால் நான் செத்துவிட்டதற்கு

சமம்!என்மீது ஆணை .” என்றால் வசந்தி. ஓங்கிய அவன் கை அப்படியே நின்றுவிட்டது. ‘எழுந்து பாவனா” என்று அவளை வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள் வசந்தி. நாடகம் மேலும் தொடரும் என்று நினைத்தவர்கள் எல்லாம் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள். “உண்மையிலேயே அவன் தெய்வம்தான்” என்று ராமமூர்த்தி பற்றி யாரோ பேசிக்கொண்டது பாவனாவுக்குக் கேட்டதுஅவள் . இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லைஅவளைச் . சோர்வு ஆட்கொண்டதுஎப்படி உள்ளே வந்தாளோ அவளுக்கே . தெரியாது.முன் அறையில் தரையில் அப்படியே சரிந்துவிட்டாள் . வசந்தி கதவைச் சாத்தினாள்.
இரவு பதினொரு மணி ஆயிற்றுமனதளவிலும் இவ்வளவு . அடிகளை தாங்கிக்கொள்ள பாவனாவால் முடியவில்லை . மயக்கம் வந்தவள் போல் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். உள்ளே ராமமூர்த்தி வசந்தியைப் பார்த்து “ஏன் இப்படிச் செய்தாய்? அவளை அப்படியே கழுத்தைப் பிடித்துத் தள்ளித் துரத்திவிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்குமே?” என்றான்.
“எங்கே துரத்துவாய்? நாளைக்கு அவள் கோர்ட்டுக்குப் போனால் என்ன பண்ணுவாய்?”
“கோர்ட்டுக்குப் போய்விடுவாளா? மூஞ்சியில் காறித் துப்புவார்கள்புருஷன் . வீட்டில் இல்லாத போது எதிர்வீட்டுக்காரனை அழைத்தாள் என்று..”
அவன் வார்த்தைகள் இன்னும் முடியவில்லைவசந்தி அலுத்துக் . .கொண்டாள்“அதை எல்லாம் கோர்ட்டில் நிரூபிக்க முடியாது . அவர்கள் யாருமே கோர்ட் வரையில் வரமாட்டார்கள்அப்படியே . வந்தாலும் உன் விஷயம் எல்லோருக்கும் தெரிந்துவிடும்.”

ராமமூர்த்தியின் முகம் வாடிவிட்டது .“அவ்வளவு தூரம் நான் யோசித்துப் பார்க்கவில்லை .ஆனால் ஒன்று மட்டும் நிஜம . அவள் இந்த வீட்டில் இருக்கக் கூடாதுஅவளை இனி ஒரு . நிமிஷம் கூட என்னால் சகித்துக்கொள்ள முடியாது.”

“சகித்துகொள்ளச் சொல்லி யார் சொன்னார்கள்?”

“பின்னே?”

“இங்கே வந்து நிலைமையைப் பார்த்ததும் ஒரு நல்ல யோசனை வந்து விட்டது எனக்கு.”

“என்ன யோசனை?”

“எல்லோருக்கும் முன்னால் நான் என்ன சொன்னேன்? எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம் என்று தெரிந்தால் அவள் உள்ளம் தகித்துக்கொண்டு போய்விடும்இந்த . உலகத்தாருக்கு முன்னால் முகத்தைக் காட்டமுடியாமல் தற்கொலை பண்ணிக்கொண்டு விடுவாள் என்றேன்நினைவு இருக்கா .?”

“ஆமாம்.”

“இப்போது அவள் தகித்துக் கொண்டு போனாலும் நம் இரக்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் செத்துப் போய்விட்டதாய் அக்கம் பக்கத்தில் எல்லோரும் நினைப்பார்கள் . நாளைக்கு ஏதாவது பிரச்சினை வந்தாலும் அதே விஷயத்தைத்தான் போலீசாரிடம் சொல்வார்கள்.”

ராமமூர்த்தி திக்பிரமையுடன் பார்த்தான் அவளைவசந்தி . .சிரித்துக்கொண்டே மேலும் சொன்னாள்

“அதோடு அவள் அப்பன் கொடுக்க முடிந்ததையெல்லாம் எப்படியும் தந்துவிட்டான். இனிமேல் ஒரு பைசா கூடா அவனிடமிருந்து பெயராதுஇவளுடன் எப்படியும் உனக்குச் . சரிபட்டு வராதுஇப்போ இவள் செத்தாலும் ., இத்தனை பேர்

சாட்சிகள் இருப்பதால் குட்டு வெளிப்பட்டுவிடும்கள்ளத் . தொடர்பு இருப்பது வெளியில் தெரிந்துவிட்டதால் அவளே தற்கொலை பண்ணிக்கொண்டாள் என்று...."

27

சரியாய் பத்து நிமிடங்களுக்குப் பிறகு பாவனாவுக்கு விழிப்பு வந்தது. தன்னை யாரோ தூக்கிக்கொண்டு போவது போன்ற கனவு. அதற்குள் அது கனவு இல்லை என்றும், நிஜம்தான் என்றும் புரிந்துவிட்டது. புரிவதற்கு முன்பு அவள் சமையல் அறையில் இருந்தாள் அவள். தரையில் பொத்தென்று போட்டார்கள். கத்தி கூச்சல் போடாமல் அவள் வாயைப் பொத்தினார்கள். வசந்தி கால்களைப் பிடித்துக்கொண்டாள். தலைமாட்டில் கணவன் இருந்தான்.

மண்ணெண்ணெய் வாசனை குப்பென்று வந்தது.

அவள் கத்தப் போனாள். வாயை அழுத்தமாய் பொத்தியிருந்ததால் கத்தல் வெளியே வரவில்லை. சமையலறையின் கொல்லைக் கதவு திறந்து இருந்தது. முன் கதவை உள்புறமாய்த் தாழிட்டார்கள். நெருப்புப் பற்றிக்கொண்டதுமே அந்த இரண்டாவது கதவை வெளிப்புறமாய்த் தாழிட்டுவிட்டால், சமையலறைக்குள் தாழிட்டுக்கொண்டு பாவனா தற்கொலை பண்ணிக்கொண்டு விட்டாள் என்று நினைப்பார்கள். அதுதான் அவர்களுடைய திட்டம்.

கணவன், நாத்தனார், மாமியார், மாமனார் எல்லோரும் சேர்ந்து மருமகளை உயிருடன் எரிப்பதைப் பற்றி பேப்பர்களில் படித்திருக்கிறாள். பலர் சொல்ல கேட்டிருக்கிறாள். ஆனால் இப்பொழுது தானே அந்தப் பலிகடாவாக மாறப் போகிறோம் என்று தெரிந்துவிட்டது. அவள் அவயவங்கள் சுவாதீனத்தில் இல்லை. எதிர்க்கலாம் என்றால் சாத்தியப்படவில்லை. அந்த

அதிர்ச்சியில் சலனம் ஒடுங்கிப்போய் அவர்களையே பார்த்தபடி இருந்துவிட்டாள்.

அந்த இருட்டில் தீக்குச்சியின் நெருப்பு நெருங்கி வந்து கொண்டிருந்தது புலப்பட்டது. அறை முழுவது மண்ணெண்ணெய் நாற்றம் பரவியிருந்தது.

கொள்ளியை தலையில் வைப்பார்கள். அவன் பாதத்திற்கு அருகில் பற்றவைத்தான்.

தீயைப் பார்த்ததும் அவளுக்கு சுயநினைவு வந்து விட்டாற்போல் இருந்தது. பயத்தினால் ஏற்பட்ட மயக்கம் விடுபட்டு விட்டது.

அவளுக்கு அந்தச் சக்தி எப்படித்தான் வந்ததோ தெரியாது. பலத்தை எல்லாம் கால்களில் கூட்டிகொண்டு காலால் ஒரு உதை உதைத்தாள். அந்த உதை அவன் வயிற்றுக்குக் கீழ் பகுதியில் பட்டுவிட்டது போலும். ஐயோ என்று முனகிக்கொண்டே அவன் கீழே சரிந்தான். கையைப் பிடித்துக் கொண்டிருந்த வசந்தியை சரேலென்று தள்ளிவிட்டு அவள் வெளியே ஓடினாள்.

அதே வேகத்தில் அவள் தெருவுக்கு வந்து சேர்ந்தாள். தெரு முழுவதும் இருட்டாகவும், ஆளரவமில்லாமலும் இருந்தது. குளிர்ந்த காற்று திடீரென்று வந்து தாக்கியது.

அத்துடன் அவள் ஆவேசம் சட்டென்று தணிந்துவிட்டது.

மண்ணெண்ணெயில் நனைந்த புடவையுடனும், நடுங்கும் கால்களுடனும், சிதறிய உள்ளத்துடனும், வியர்வை பெருக்கோடிய உடலுடனும் எந்தப் பக்கமாய் போகவேண்டும் என்று புரியாதவளாய் அவள் நடுத்தெருவில் நின்றாள். படிப்பும், தைரியமும் இல்லாத சராசரி இந்தியப் பெண்ணின் எதிர்காலத்தைப் போல் சுற்றிலும் சூழ்ந்திருந்த இருள். அவள்

குழப்பத்துடன் நடக்கத் தொடங்கினாள். நகரம் உறக்கத்தில் ஆழ்ந்து போய் ரொம்ப நேரம் ஆகியிருந்தது.

அவள் தெருமுனையில் திரும்பிக் கொண்டிருந்த போது ஒரு கார் வேகமாய் வந்தது. நள்ளிரவு வேளையில் ஹாரன் எதற்கு தேவையில்லாமல் அடிப்பானேன் என்று எண்ணியிருப்பான் போலும். அதே வேகத்தில் முனையில் திரும்பினான். அவளைப் பார்த்துவிட்டு அவசரமாய் ப்ரேக் போடப் போய், தடுமாற்றமடைந்து, காரை ஒரு பக்கமாய்த் திருப்பி, ஒரு குப்பைத்தொட்டியில் மோதிக்கொள்ளவிருந்து அதிர்ஷ்டவசமாய் தப்பி, ஒரு ஓரமாகக் கொண்டு வந்து நிறுத்தினான்.

மயிரிழையில் தப்பியது ஆபத்து. "நள்ளிரவில் ஒரு பெண் தனியாய் தெருவில் நடக்க முடிந்த அன்றைக்குத் தான் உண்மையான சுதந்திரம் கிடைதாற்போல் என்று காந்தி சொன்னாரே தவிர, நள்ளிரவில் தெருவுக்கு நட்டநடுவில் நடக்க முடிந்த அன்று என்று சொல்லவில்லை மேடம்!" என்றான் கழுத்தை வெளியில் நீட்டிக்கொண்டே.

பாவனா பதில் சொல்லவில்லை. அப்பொழுதுதான் கவனித்தான் அவன் மண்ணெண்ணெய் நாற்றத்தை. அது தான் குடித்த ஆல்கஹாலின் மணமா இல்லை வேறு ஏதாவதா என்று குழப்பமடைந்து மேலும் ஒரிருமுறை ஆழமாக மூச்சை எடுத்துக்கொண்டான்.

அதற்குள் பாவனா "தயவுசெய்து பஸ் ஸ்டான்ட் வரையிலும் லிப்ட் தர முயட்யுமா?" என்று கேட்டாள். அவன் சிரித்துவிட்டு "வேறு யாரையாவது முயற்சி செய்வது நல்லது. நான் அப்படிப்பட்டவன் இல்லை" என்றான்.

இம்முறை பாவனா குழப்பத்துடன் பார்த்தாள்.

“குடிபழக்கம் உண்டே தவிர விபச்சாரத்தின் தேவை இதுநாள் வரையிலும் வந்தது இல்லை. வேறு யாரையாவது நல்ல கஸ்டமரைப் பார்த்துகொள்வது நல்லது” என்றான்.

அவன் சொன்னது புரிந்ததுமே பாவனாவின் முகம் களையை இழந்தது. அவள் அங்கிருந்து போகக் கிளம்பியபோது “நில்லுங்கள். உங்களிடமிருந்து வருவது கிரோசின் வாடைதானே?” என்று கேட்டான்.

அவள் பதில் பேசவில்லை. அவன் காரைவிட்டிறங்கி அவள் அருகில் வந்து “என்ன நடந்தது? யார் நீங்க?’ என்று கேட்டான்.

“நான் நினைப்பதுப் போல் அந்த விதமான் பெண் இல்லை. பஸ் ஸ்டாண்டுக்குப் போகணும் உண்மையிலேயே” என்றாள்.

“காரில் ஏறிக் கொள்ளுங்கள்.”

அவள் ஏறிக்கொண்டதுமே அவன் கேட்டான். “நான் அனாவசியமான ஆர்வத்தைக் காட்டுவதாக நினைக்கவில்லை என்றால், அது கிரோசின்...”

“ஆமாம்.” தலை குனிந்தபடி சொன்னாள்.

அவன் நிசப்மாய் காரை ஒட்டிக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் கழித்து கேட்டான். “இந்த நேரத்தில் உங்க ஊருக்கு பஸ் இருக்குமா?”

“தெரியாது. இல்லாவிட்டால் காலை வரையிலும் வெயிட்டிங் ரூமிலேயே இருந்து கொள்கிறேன்.”

“கிரோசினில் தோய்ந்த இந்தப் புடைவையுடனா?”

அவள் பதில் பேசவில்லை.

“எந்த ஊருக்குப் போகணும் நீக?”

“தெரியாது.”

“உங்களுக்கு யாருமே இல்லையா?”

“இருக்காங்க. ஆனால் இந்த நிலையில் பெற்றவர்கள் கூட அடைக்கலம் தரமாட்டார்கள்.”

“பின்னே எங்கே போவதாக உத்தேசம்?”

“தெரியாது.”

அவன் அவளை வினோதமாய்ப் பார்த்தான். “உங்களுடைய பர்ஸ் எங்கே?”

“இல்லை.”

“பின்னே பணம் இல்லாமல் பஸ்ஸில் எப்படி ஏறுவீங்க?”

“ஏதோ ஒரு இடத்தில் இறக்கி விடுங்கள்.”

“என்ன பண்ணுவீங்க?”

“செத்துப் போகிறேன்.”

அவன் பதில் சொல்லவில்லை. கொஞ்ச நேரம் கழித்து கார் போய்க் கொண்டிருக்கும் திசையைப் பார்த்துவிட்டு “இப்போ

எங்கே போய்க் கொண்டு இருக்கிறோம்?" அவன் குடித்திருப்பதை உணர்ந்து பயந்துகொண்டே கேட்டாள்.

"எங்க வீட்டுக்கு. நாளைக் காலை வரையிலும் எங்க வீட்டிலேயே இருங்கள். எந்த விதமாய் சாவது நல்லது என்று என் மனைவியும், மூன்று குழந்தைகளும் உங்களுக்கு யோசனை சொல்லுவார்கள். அவர்கள் என் பேச்சை மதிக்காமல் சஸ்பென்ஸ், கிரைம் நாவல்கள் படிப்பார்கள். நான் யாரென்று சொல்லவே இல்லை இல்லையா? என் பெயர் பரத்வாஜ். நான் ஒரு எழுத்தாளர்."

"நீங்க. நீங்க.. எழுத்தாளர் பரத்வாஜ் நீங்கள்தானா?"

"இது கௌரவத்தோடு கூடிய ஆச்சரியமா? அல்லது பயத்தோடு கூடிய அருவருப்பா?"

அவன் பேச்சைக் காதில் வாங்கிக்கொள்ளாமலேயே அவள் சொன்னாள். "என் சிநேகிதிக்கு நீங்க ஒரு ஆட்டோகிராப் போட்டீங்க. அது இன்னும் ஞாபகம் இருக்கு."

"எந்த ஞாபகம்? எழுதிய ஞாபகமா? அல்லது ஆட்டோகிராப் ஞாபகமா?"

"ஆட்டோகிராப்தான். for a maan, an attraactive l..சொல்லிக் கொண்டிருந்த போதே அவன் இடைமறித்தான்.

"ஞாபகத்துக்கு வந்துவிட்டது. பெண்ணுக்கு ஆண், அல்லது கணவனுக்கு மனைவி இணைந்த புதிதில் அபூர்மான நபர் போலவும், சகல நற்பண்புகளும் நிறைந்து, கடவுள் தமக்காகவே அனுப்பிய பரிசு போலவும் தென்படுவார்கள். காலம் கரையக்

கரைய அந்த தெய்வீகத் தன்மையின் மதிப்பெடுகள் காணமல் போய்விடும். அதுதானே அந்த ஆடோக்ராப்!"

"ஆமாம் பரத்வாஜ் சார்! இப்போ என் வாழ்க்கையும் அப்படித்தான் ஆகிவிட்டது."

அவள் சொல்லத் தொடங்கினாள்.

****

தொலைவிலிருந்தே சாஹிதியைப் பார்த்துவிட்டு கூர்க்கா உள்ளே ஓடினான். வீடெல்லாம் விளக்குகள் போடப் பட்டிருந்தன. நள்ளிரவில் சூட்கேசுடன் திரும்பி வந்த மகளைப் பார்த்துவிட்டு, நிர்மலா ஹோவென்று கதறியபடி ஓடிவந்து கட்டிக்கொண்டாள்.

"நான் என்ன பாவம் செய்துவிட்டேன்? மகள் கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டுப் போய்விட்டாள் என்றால் அது எவ்வளவு மானக்குறைவு? ஆனாலும் நீயே இல்லை என்றால் எனக்கு இந்த வாழ்க்கை எதற்கு? இன்றிரவு மட்டும் நீ திரும்பி வராமல் போயிருந்தால் நான் தற்கொலை பண்ணிக்கொண்டு இருப்பேன்" என்று கதறித் தீர்த்துவிட்டாள்.

சாஹிதிக்கு அவளைப் பார்த்தாள் இரக்கமாய் இருந்தது. கோபத்தால் கொந்தளிப்பாள் என்று எண்ணிக் கொண்டிருந்த தாய், இப்படி மனம் கரைந்து போகும்படி அழுவதைப் பார்த்தபோது வருத்தமாக இருந்தது. "அழாதேம்மா. அதான் வந்துவிட்டேனே. நீ இவ்வளவு வருத்தப்படுவாய் என்று தெரிந்திருந்தால் நான் இப்படிப் பண்ணியிருக்க மாட்டேன். இனி

ஒருபோதும் இதுபோன்ற காரியத்தைச் செய்யமாட்டேன்" என்றாள்.

இந்தக் காட்சியை பரத்வாஜ் மட்டும் பார்த்திருந்தால் "கரைந்துபோன கஷ்டங்கள்" என்ற தலைப்பில் நாவலை எழுதியிருப்பானோ என்னவோ.

நிர்மலா கண்களைத் துடைத்துக்கொண்டாள். இருவரும் ஒருவரையொருவர் அணைத்தபடி அப்படியே உள்ளே போனார்கள்.

உள்ளே பூஜையில் பரமஹம்சா பத்மாசனமிட்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தான்.

நிர்மலா போய் அவன் பாதங்களில் விழுந்தாள். "உங்க தவத்தின் வலிமை அபாரம். நீங்கள் சொன்னது போலவே தியானதிலிருந்து எழுந்திருப்பதற்குள்ளாகவே மகள் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாள்."

பரமஹம்சா கண்களைத் திறந்து சாஹிதியைப் பார்த்துவிட்டு முறுவலித்தான்.

சாஹித்தி மௌனமாய் தன் அறைக்குள் போய்விட்டாள். அதுவரை இருந்து வந்த சந்தோசம் ஒரேயடியாய் மாயமாகிவிட்டது. அலமாரியில் தேடினாள். வேண்டியது கிடைத்தது. இந்த முறை இரு மடங்கு டோஸ் போட்டுக்கொண்டாள்.

தியானத்திலிருந்து எழுந்த பிறகு பரமஹம்சா குளித்தான். நேரம் இரவு பதினொன்றரை ஆயிற்று. நிர்மலா தலையில் மல்லிகைச் கரத்தை சூடிக் கொண்டிருந்தாள். "சாஹிதியுடன் பேசிவிட்டு வந்து விடுகிறேன் நிரமலா" என்று சாஹிதியின் அறைக்குள்

நுழைந்தான். அதற்குள்ளாகவே சாஹித்தி மயக்கத்தில் ஆழ்ந்து போய்விட்டாள். “கொஞ்சம் நகரும்மா” என்று வந்து படுக்கையில் உட்கார்ந்துக் கொண்டான்

“எதற்காக அப்படிப் போனாய் சாஹித்தி? நாங்க எவ்வளவு பயந்துவிட்டோம் தெரியுமா?”

“ஊம்.. ஊம்.”

நீ அப்படிப் போய்விட்டால் எப்படி வாழப் போகிறாய்? இவ்வளவு வசதிகளுடன் வளர்ந்தவள் இல்லையா?

“ஆமாம்... ஆமாம்.”

“நீ போய்விட்டால் உங்க அம்மா செத்துப் போய் விடுவாள். அம்மாவைக் கொல்லப் போகிறாயா?”

“கொல்லமாட்டேன். கொல்ல.... மாட்டேன்.’ அரை மயக்கத்தில் பதிலளித்தாள்.

“நம் குடும்ப விஷயத்தை வெளியே எங்கேயும் சொல்லக் கூடாது. சொன்னால் அப்பாவின் ஆன்மாவுக்கு நிம்மதி இருக்காது.”

“ஆமாம்.”

எதிர்காலத்தைப் பற்றிய பயத்தை,, சென்டிமென்டின் மீது பலவீனத்தை,, சமுதாயக் கட்டுபாடுகளை வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொள்ளவேண்டிய ஆதரவற்றத்தனமை ... ஆகியவற்றை அவள் மனதில் பதியும்படி பிரெயின் வாஷ் செய்து கொண்டிருந்தான் அவன்.

****

“உன் கதை முழுவதையும் கேட்டால் எனக்கு ஒன்றுதான் தோன்றுகிறது. எதிர்காலத்தைப் பற்றிய பயம், செண்டிமெண்டின் மீது பலவீனம், சமுதாயக் கட்டுபாடுட்களை வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஆதரவற்றதன்மை.. இவைதான் மனிதர்களை துன்புறுத்துகின்றன. வேதனைக்கு ஆளாக்குகின்றன” என்றான்.

பாவனா புரியாமல் விழித்தாள்.

ரஜனி அவளைப் பார்த்துச் சிரித்தாள். “எங்க அப்பா பேசுவது பாதி புரியாது விடுங்கள். நாவல்களில் வரும் பாத்திரங்கள் பேசும் மொழியில் பேசுவார்” என்றாள்.

பரத்வாஜ் பாவனாவை வீட்டிற்கு அழைத்து வந்தான். பரத்வாஜுக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன். மூத்தவள் ரஜனிக்கு பதினெட்டு வயது இருக்கும்.

பாவனா காரில் வரும்போதே அவனிடம் தன் கதையெல்லாம் சொன்னாள். சாஹிதியின் கதையைக் கேட்டு அவன் அவ்வளவாய் நெகிழ்ந்துவிடவில்லை. அவனுக்கு அது ஒரு பிரச்சனையாகவே தோன்றவில்லை.

ஆனால் இங்கே விஷயம் வேறு. குறைந்தபட்சம் ஆண்மைக் கூட இல்லாத ஒருவன், தான் ஆணாய் இருந்த ஒரே காரணத்திற்காக வரதட்சணை எதிர்பார்ப்பதும், ஆணாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக மனைவியை துன்புறுத்தி, ஆதரவற்றவளாய் ஆக்கியதும் தான் அவனை வருத்தத்தில் ஆழ்த்தியது.

“இதையெல்லாம் இவ்வளவு நாளாய் எப்படிச் சகித்துக் கொண்டு இருந்தாய்?”

‘பின்னே என்ன செய்வது?’ என்பதுபோல் பார்த்தாள் அவள்.

“இவ்வாறு இருப்பதைவிட வேறுவிதமாய் நம் வாழ்க்கை நன்றாக இருக்கும் என்று தோன்றியபோது, இதை விட்டுவிட்டு அவ்வாறு வாழ்வதில் தவறு என்ன இருக்கு? அப்படி ஏன் முயற்சி செய்யவில்லை?”

ரஜனி குறுக்கிட்டாள். “என்னப்பா? ரொம்பவும் சாதாரணமாய்ச் சொல்றீங்க? வாழ்க்கையும் சாப்பாடும் ஒன்றாகிவிடுமா? குழம்பு நன்றாக இல்லை என்று ரசத்தை ஊற்றிக்கொண்டு சாப்பிடுவதற்கு” என்றவள் பாவனாவின் பக்கம் திரும்பினாள். “நீங்க ஒன்றும் நினைத்துக் கொலாதீங்க. எங்க வீட்டில் இதுபோல் உதாரணம் காட்டித்தான் பேசிக்கொண்டு இருப்போம். சொல்லுங்கள் டாடி! இந்தப் பெண் தன் பழைய வாழ்க்கையை விட்டு வெளியே வந்திருக்க வேண்டுமா? அப்படி என்றால் நம் நாட்டில் பெண்களில் பாதிபேர் தம் குடும்பத்தை விட்டுவிட்டுத் தனியாய் இருந்தால் எப்படி இருக்கும் என்று பரிசோதனை பண்ண வேண்டியிருக்கும்” என்றாள்.

“நான் சொன்னது அது இல்லை. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கவலை.’எனக்குக் கல்யாணம் ஆகவில்லை. வரதட்சணை பிரச்னை! எனக்கு வேலை இல்லை. வேலையில்லாப் பிரச்சனை! என கணவன் சின்ன வீடு வைத்திருக்கிறான். பாதுகாப்புப் பிரச்சனை! இதுபோல் பலவிதமான பிரச்சனைகளால் கவலைப்பட்டுக்கொண்டு இருப்பார்கள். இந்தப் பிரச்சனைகளுக்கு சமுதாய உணர்வுடன் தீர்வு சொல்லும்

விதமாய் கதைகளை எழுதச் சொல்லி கேட்டுக்கொண்டு இருப்பார்கள். எல்லா பிரச்சனைகளுக்குமே தனித்தன்மை வளர்த்துக்கொள்வது ஒன்றுதான் வழி என்று சொன்னால் மட்டும் கேட்டுக்கொள்ள மாட்டார்கள். நேற்று இலக்கிய கூட்டத்தில் நடந்த ரகளை கூட நான் இப்படிச் சொன்னதற்குத்தான்."

"ஆனால் இந்தப் பெண்ணுக்குப் படிப்பும் இல்லை. பணமும் இல்லை அப்பா."

"அவிவிரண்டும் மட்டுமே இருந்தால் போதும் என்ற பட்சத்தில், அவை இரண்டும் இருக்கும் சாஹிதி என்ற பெண் எதற்காக தற்கொலை செய்துகொள்ள நினைத்தாள்?" எதிர்க்கேள்வி கேட்டான். யாருமே பேசவில்லை. மீண்டும் அவனே சொன்னான். "வாழ்க்கையை எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது புதிதாய்த் தொடங்கலாம் பாவனா! நாளையிலிருந்தே புது வாழ்க்கை எப்படித் தொடங்குவது என்று நீ முயற்சி செய்து தெரிந்துகொள். இதைவிட சந்தோஷமாய் ஏன் வாழ முடியாது என்பதை நிரூபித்துக்காட்டு" என்று எழுந்தான்.

ரஜனி சிரித்துவிட்டு "மொத்தத்தில் பாவனாவை நீ ரொம்ப கஷ்டப்படுத்தப் போகிறாய் அப்பா. முதலில் இந்தப் பெண்கள் இப்படி கஷ்டப்படுத்துபவர்களின் காரின் கீழே விழக்கூடாது. ஏதாவது இளைஞனுடைய காரின் கீழேயோ அல்லது மனைவி இறந்துவிட்ட நடுத்தர வயது மனிதரின் காருக்குக் கீழேயோ விழுந்திருக்கணும். அவனுடைய குழந்தைகளுக்கு ஆயாவாக போய்ச் சேர்ந்துவிட்டு, 'சுபம்' என்று போடுவதற்குக் கொஞ்சம் முன்னால் அவன் மார்பின் மீது சாய்ந்துவிடவேண்டும்" என்றாள். பரத்வாஜ் அவள் தலையில் தட்டிவிட்டு "இரவு ரொம்ப நேரமாகிவிட்டது போய் படுத்துக்கொள்" என்றான். அவள்

போன திசையையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் பாவனா. அவளையும் அறியாமல் கண்களில் நீர் கசிந்தது. ஒரு காலத்தில் அவளும் தந்தையிடம் இதுபோலவே நடந்துகொள்வாள்.

“என்ன யோசிக்கிறாய்? இன்று இரவு படுத்துத் தூங்கு. நாளைக்கு என்ன பண்ணலாம் என்று யோசிப்போம்.”

‘உங்க மகளை எனக்கு ரொம்பப் பிடித்துவிட்டது” என்றாள்.

“ஏன்?”

“அந்தச் சிரிப்பு, ஆர்வம், சுறுசுறுப்பு, சுவாதீனம்..”

“எங்கள் மொழியில் சொல்லணும் என்றாள் தன்னம்பிக்கை!”

“அவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் உங்களைப் போன்ற அப்பாவும், பணவசதியும், படிப்பும் இருப்பதால்தானே அந்த சுறுசுறுப்பு வந்திருக்கு?”

கதவுக்கு அருகில் போனவன் திரும்பி அவளைப் பார்த்தபடிச் சொன்னான்.

“உன் தியரி தவறு பாவனா. நான் சொல்ல வந்ததும் அதைத்தான். பிரச்சனையை சரியான கோணத்திலிருந்து பார்த்தால் பரிகாரம் கிடைக்கும். மரணத்தை சரியான கோணத்திலிருந்து வரவேற்க முடிந்தால், வாழ்ந்து கொண்டிருக்கும் வரை சந்தோஷம் கிடைத்துக்கொண்டே இருக்கும். அதற்குப் பரிபூர்ண எடுத்துக்காட்டு பிரெயின் ட்யூமரால் பாதிக்கப்பட்டு மரணத்தின் விளிம்பில் இருக்கும் என் மகள் ரஜனி.”

28

“ஜீவனி” காரியாலயம் தொடங்கப்பட்டு பத்தாண்டுகள் ஆகிவிட்டன. எந்த வழியும் இல்லாத அனாதைப் பெண்களுக்கு, துன்புறுத்தல் தாங்க முடியாமல் ஓடி வந்துவிட்ட பெண்களுக்கு அங்கே புகலிடம் கிடைத்து வந்தது. படிப்பறிவு இல்லாத அப்பாவிப் பெண்களுக்குக் கூட அங்கு இடம் உண்டு. அவர்களுக்கு ஏதாவது தொழிலில் பயிற்சி அளித்து, தம் கால்களில் தாம் நிற்கும் வரையிலும் அவர்களைப் போஷித்து வந்தது “ஜீவனி.”

ஜீவனியின் காரியதரிசி பாரதிதேவி. அவளுடைய பிடிவாதம், எடுத்துக்கொள்ளும் சிரமம்.. எதுவாய் இருந்தால் என்ன அந்த நிறுவனம் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டு இருந்தது.

பாரதிதேவிக்கு வயது அறுபது எழுபதுக்கு இடையில் இருக்கும்.. நாள் முழுவதும் சுறுசுறுப்பாய் வேலை செய்து வந்தாள். ஒரு நிமிடம் கூட வீணாக்க மாட்டாள். அந்த வயதில் அவளுடைய உற்சாகத்தையும், பொறுமையையும் பார்த்தவர்களுக்கு ஆச்சரியம் ஏற்படும். அவள் யோசிக்கும் முறை, தரும் ஊக்கத்தைப் பார்க்கும்போது எந்தப் பெண்ணுக்குமே தன் மீதே தனக்கு நம்பிக்கை ஏற்படும்.

பாவனாவை ஜீவனியில் சேர்த்துவிட்டுப் போய்விட்டான் பரத்வாஜ். இந்தக் கதையில் பரத்வாஜ் ஒரு கருவி மட்டும்தான். பாரதிதேவி நடந்ததை எல்லாம், விவரமாய் பாவனாவிடம் கேட்டுத் தெரிந்துகொண்டாள். அதற்குள் தன் எதிர்காலத்தைப் பற்றி திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்த பாவனாவுக்கு,

பரத்வாஜ் சொன்னபோது இருந்த தைரியம் நசிந்து போய், அதைரியம் ஏற்படத் தொடங்கியது. ஒரு பெண்ணாக பாரதிதேவி சமாதானப்படுத்தி, பரிவுடன் கேட்ட போது துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது.

“அம்மா! என்னைப் போன்ற வாழ்க்கை பகையாளிக்கும் வேண்டாம். கணவன், தந்தை, தம்பி, தங்கைகள் எல்லோரும் இருந்தும் யாரும் இல்லாத அனாதையாகிவிட்டேன் இப்போது. என் கதி என்ன?” விசும்பி விசும்பி அழுதாள்.

பாவனா முற்றிலும் தேறிக்கொள்ளும் வரையில் பாரதிதீவி எதுவுமே பேசவில்லை. அப்படிப்பட்ட கதைகளைக் கேட்டுக் கேட்டு மனம் மரத்துப் போய்விட்டது என்பதால் அல்ல. அழுகைதான் அவர்களைச் சமாதானப் படுத்தும் என்பதை அவள் அனுபவத்திலிருந்து புரிந்து கொண்டு இருக்கிறாள்.

“இதோ பார் பாவனா! நீ ரொம்பக் கஷ்டத்தில் இருக்கிறாய் என்பது உண்மைதான். ஆனால் ஒரு முறை வெளியே ஹாலில் இருக்கும் பெண்களைப் போய்ப் பார். அவர்களின் கதையைக் கேட்டுத் தெரிந்துகொள். உன்னைவிட துர்பாக்கியசாலிகள் நிறையப்பேர் இருப்பார்கள். உன் கணவனின் பணத்தாசையும், ஆண்மைக்குறைவும் உன்னை எந்த அளவுக்கு துன்புறுத்தியது என்று சொன்னாய். தாம்பத்திய உறவு என்ற பெயரில சிகரெட் நுனியால் சுட்டு, குண்டூசியால் குத்தி சந்தோஷம் அடையும் சாடிஸ்ட் கணவனிடமிருந்து தப்பித்துக்கொண்டு வந்த மனைவியர் இங்கே இருக்கிறார்கள். தாலி கட்டிய கணவனே பணத்திற்காக மனைவியை வேற்று ஆணிடம் ஒப்படைக்கப் போன பொழுது அருவருத்துக்கொண்டு தப்பித்து வந்த இளம் பெண்களும் இருக்கிறார்கள். சாப்பிடும் போது உன் கணவன் வாய் கூசும் வார்த்தைகளால் உன்னைத் திட்டுவதால் ஒரு கவளம்

சோறு கூட உள்ளே இறங்க மாட்டேன் என்கிறது என்றாய். நாள் முழுவதும் வேலை வாங்கிக்கொண்டு ஒரு பிடி சாப்பாடு கூட போடாமல் பட்டினி போட்டு கொலை செய்ய நினைத்த கணவன், மாமனார், மாமியாரிடமிருந்து தப்பித்து வந்த பெண்கள் இருக்கிறார்கள். பணத்திற்காக உன் கணவன் உன்னைக் கொடுமைப் படுத்தினான். உண்மைதான்.

லட்சக்கணக்கில் வரதட்சணை வாங்கிக்கொண்டு, மனைவி மாதந்தோறும் சம்பாதித்துக்கொண்டு வந்தாலும், பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்தது போதவில்லை என்று உடல் முழுவதும் சூடுபோட்ட போது, தப்பித்துக்கொண்டு இந்த நிறுவனத்தில் தஞ்சம் புகுந்தவர்கள் இருக்கிறார்கள்.

உன் கணவன் ஒரு பெண்ணை 'தங்கச்சி' என்று அழைத்துக்கொண்டே நெருக்கமாக பழகுவதாய் சொன்னாய். மனைவியின் கண்ணுக்கு எதிரிலேயே வெற்றுப் பெண்ணைப் படுக்கை அறைக்கு அழைத்துப் போகும் கணவன்மார்கள் இருக்கிறார்கள். அவர்களின் பிரச்சனைகளுக்கு முன்னால் உன்னுடையது உனக்கே ரொம்ப சின்னதாய்த் தோன்றக்கூடும். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கப் போகும் புனித இந்தியச் சமுதாயத்தில் தற்போதைய பெண்களின் நிலைமை இதுதான். இதற்குக் காரணங்கள் என்னெவென்று ஆராய முயற்சி செய்யாதே. ஒரு விஷயத்தை மட்டும் சொல்கிறேன். பெண்ணாக இருந்தாலும் சரி. ஆணாக இருந்தாலும் சரி, தன் உரிமைகளையும், சுதந்திரத்தையும் தானே சாதித்துக்கொள்ள வேண்டும்.

தன் கஷ்டங்களையே நினைத்துக்கொண்டு, கவலைப்பட்டுக்கொண்டு, எதிராளியின் இரக்கத்தை மட்டுமே எதிர்பார்த்துக்கொண்டு கழிப்பதால், ஏற்படப்போகும் லாபம்

எதுவும் இல்லை என்று தெரிந்து கொள்ளணும். இராமர் பிறந்த இந்தத் திருநாட்டில் பெரும்பாலான பெண்களுக்குத் திருமணமே ஒரு அக்னிப் பிரவேசம்தான் அம்மா!"

****

பதினைந்து நாட்கள் கடந்தன. பாவனா அந்த இல்லத்தில் இருந்த பெண்கள் எல்லோரைப் பற்றியும் நன்றாகத் தெரிந்துகொண்டாள். பல விதமான பிரச்சனைகள். கண்ணால் கண்டும் காதால் கேட்டும் இராத கஷ்டங்கள். அவளுக்கு இருந்த சொற்பமான படிப்பு அறிவு கூட அவர்களுக்கு இருக்கவில்லை. கூடைப் பின்னுதல், தையல் கற்றுக் கொள்வது, பூ வேலை செய்வது போன்ற வேலைகளை கற்றுக் கொண்டு வருகிறார்கள். தம் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்ற துணிச்சலை மேற்கொண்டு, கஷ்டப்பட்டு வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

பாவனாவுக்கு எந்தத் தொழிலைக் கற்றுக் கொள்வது என்று முதலில் புரியவில்லை. பள்ளிக்கூடத்தில் தையல், பூவேலை முதலியவற்றைக் கற்றுக் கொண்டிருந்ததாள். ஆனால் அதையே வாழ்க்கைக்கு ஆதாரமாக ஏற்படுத்திக்கொள்ள விருப்பம் இல்லை. அவள் பிரச்சனையை பாரதிதேவி தீர்த்து வைத்தாள்.

ஜீவனி போன்ற நிறுவனங்களில் பெண்களால் தயாரிக்கப் பட்ட பொருட்களை விற்பதற்கு பெண்கள் முன்னேற்ற நிறுவனம் ஒன்று நடத்தி வந்த ஷோரூம் ஒன்றில் பாவனாவுக்கு வேலை கிடைத்தது. அவள் படித்திருந்ததால் கணக்குகளை எழுதும் வேலையைக் கூட அவளிடமே ஒப்படைத்தார்கள்.

முதல் நாள் வேலைக்குப் புறப்படும்போது பாவனை மிகவும் பயந்தாள். வேலைக்குப் போக வேண்டியிருக்கும் என்று கனவிலும் எதிர்பார்த்து இராதது ஒரு காரணம். நான்கு பேருடன்

எப்படிப் பேசுவது? எப்படி நடந்து கொள்வது என்று தெரியாதது இன்னொரு காரணம். முதல் நாள் வாடிக்கையாளர்கள் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதில்கள் சொல்லக்கூடத் தயங்கினாள்.

அவளுடன் மேலும் இரண்டு சேல்ஸ் பெண்களும், கேஷ் கௌண்டர் கிளார்க்கும் வேலை செய்து வந்தார்கள். மாலையில் கணக்கைக் கூட்டிப் பார்த்துவிட்டு, கேஷை ஒப்படைத்துவிட்டு திருப்தியோடு வெளியே வந்தாள் பாவனா. கொஞ்சம் பழகிவிட்டால் இந்த வேலை செய்வது அவ்வளவு கஷ்டம் இல்லை. அந்தத் தன்னம்பிக்கையுடன் அவள் காற்றில் மிதப்பது போல் உற்சாகத்துடன் ஜீவனிக்குத் திரும்பி வந்தாள். கேட்டிற்கு அருகிலேயே சக சேல்ஸ் பெண் கமலா தென்பட்டாள்.

“உங்க அப்பாவாம். வந்து ரொம்ப நேரமாகிறது. உனக்காக விசிட்டர்ஸ் ரூமில் காத்துக்கொண்டு இருக்கிறார்” என்றாள்.

பாவனாவின் உற்சாகம் முழுவதும் வற்றிவிட்டது. தைரியத்தைக் கூட்டிக்கொண்டு விசிட்டர்களின் அறையை நோக்கி நடந்தாள். விஸ்வத்தின் முகம் கம்பீரமாய் இருந்தது. பாவனா மெதுவாக எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். விஸ்வம் அவளைக் கூர்ந்து நோக்கினான். பாவனா தலையக் குனிந்து கொள்ளவில்லை. “எப்போ வந்தீங்க அப்பா?” என்று கேட்டாள்.

“இன்று காலையில்தான். ஒரு வாரத்திற்கு முன்னாடியே வந்திருக்கணும். மாப்பிள்ளைக்குப் போன் பண்ணினால், “ஊருக்குப் போகிறோம், வராதீங்க” என்று சொன்னான். விஷயம் இது என்று எனக்குத் தெரியவே தெரியாது. ஏன் இந்தக் காரியம் செய்தாய் பாவனா?” அவன் குரலில் வருத்தமும், கோபமும் தோய்ந்திருந்தன.

பாவனாவுக்குச் சிரிப்பும் வந்தது. துக்கமும் வந்தது. 'ஏன் இந்தக் காரியம் செய்தாய்?' என்று கேட்டதிலேயே தவறு செய்துவிட்டாய் என்ற குற்றச்சாட்டும் தெரிகிறது.

"என்ன செய்துவிட்டேன் அப்பா? நடந்தது என்ன என்று அந்த பாஸ்கர் ராமமூர்த்தி உங்களிடம் எதைச் சொன்னான்?" என்று கேட்டாள். பாஸ்கர் ராமமூர்த்தி என்று குறிப்பிட்டதில் தொனித்த ஏளனம் விஸ்வத்தின் கவனத்திலிருந்து தப்பவில்லை.

"என்ன நடந்தது என்று நீ இங்கே இருப்பதைப் பார்த்தாலே புரிந்துப் போகிறதே. பிரச்சனைகள் எல்லோர் வீட்டிலும் இருக்கத்தான் செய்யும். அனுசரித்துக் கொண்டுதான் போகணும். நீ என்னிடம் வந்திருக்க வேண்டும். இந்த மாதிரி நடக்கிறது என்று எனக்கு ஒரு கடிதம் கூட போடவில்லை."

"எழுதி இருந்தால் என்ன செய்து இருப்பீங்க அப்பா?"

"மாப்பிள்ளையைக் கூப்பிட்டு சுமுகமாய் பேசியிருப்பேன். தவறு அவன் பேரில் இருந்தால் கண்டித்து இருப்பேன்."

"அப்படி என்றால், அடுத்த முறை கிரோசினை ஊற்றினால் முழுவதுமாய் எரிந்து போகும்படிப் பார்த்துக்கொள். பாதியில் அந்த மாதிரி தெருவில் ஒடும்படியாக பண்ணாதே என்று சொல்வீங்களா? பெட்ரோலாக இருந்தால் இன்னும் சுலபம் என்று யோசனை வழங்கி இருப்பீங்களா?"

"பாவனா!" விஸ்வம் கத்தினான். "அந்த நிலைமையில் எந்த ஆணாக இருந்தாலும் அப்படித்தான் ஆவேசப்படுவான். அவன் பண்ணியது தவறுதான். ஆனால் அவனுக்கு அவ்வளவு ஆவேசம்...."

விஸ்வத்தின் வார்த்தைகள் இன்னும் முடியக்கூட இல்லை. ”அப்படி என்றால் அவன் சொன்னதை நீங்ககூட நம்பறீங்களா அப்பா? அவனுக்கு என்னை இரண்டு வருடங்களாகத்தான் தெரியும். ஆனால் உங்களுக்கு? என்னை இருபது வருடங்களாகத் தெரியும். ஆனாலும் நீங்க என்னை நம்பவில்லை.” வேதனையுடன் சிரித்தாள்.

“தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய். அவனும் நமப்வில்லை. ஆனால் நாலுபேருக்கு முன்னால் ராமநாதன் அப்படிச் சொன்னதைப் பார்த்தால் எந்த ஆணுக்குத்தான் ரத்தம் கொதிக்காது? ஆனாலும் மருமகன் நடந்ததற்கு ரொம்ப வருத்தப்படுகிறான்.”

‘மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா. என்னால் வர முடியாது“ என்றாள் பணிவு நிரம்பிய குரலில்.

“பாவனா!” கோபமாய்க் கத்தினான் விஸ்வம். “முதலில் உன்னைப் பார்த்தால் நான் வளர்த்த மகள் பாவனாதானா என்று சந்தேகமாய் இருக்கு. சின்னச் சின்ன பிரச்சினைகளுக்கே எல்லோரும் இதுபோல் குடும்பத்தைக் கலைத்துவிட்டு வீட்டை விட்டுப் போய் விடுவார்களா? ஒரு ஒழுங்குமுறை, கட்டுப்பாடு கிடையாதா? முதலில் உன்னிடம் என்ன இருக்கிறது? படிப்பா? சொத்தா? என்ன நினைத்துக்கொண்டு வெளியே வந்தாய்?”

“மனத்துணிச்சல் அப்பா” மெதுவாய்ச் சொன்னாள் பாவனா.”சில நாட்களுக்கு முன்னால் ஒரு நள்ளிரவில் ஒரு பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ஒரு பெண்ணைப் பார்த்தேன். கேள்விப்பட்ட பெண்ணின் பெயர் சாஹிதி. பார்த்த பெண்ணின் பெயர் ரஜனி. நீங்க கேட்டீங்களே, உனக்கு என்ன இருக்கு சொத்தா, படிப்பா

என்று? அந்த இரண்டும் இருந்தும் கூட பிரச்சினையிலிருந்து வெளியே வரமுடியவில்லை சாஹிதியால். விதி எழுதி வைத்திருக்கும் துரதிர்ஷ்ட ரேகையுடன், பிரெயின் ட்யூமரால் பாதிக்கப்பட்ட நிலையிலும் ரஜனி என்ற பெண் கடவுளுக்கே சவால் விடுகிறாள். 'கடவுளே! நீ என் வாழ்க்கையை வேண்டுமானால் குறுக்கிவிடலாம். ஆனால் என் உதட்டில் புன்னகையை உன்னால் சிதறடித்து விட முடியுமா?' என்று. இரண்டு பேருமே இரண்டு வெவ்வேறு வழிகளில் எனக்கு வாழ்க்கையைக் காட்டினார்கள் அப்பா."

விஸ்வம் திக்பிரமை அடைந்தவனாய் மகளைப் பார்த்தான். பாவனா தலை குனிந்தபடியே தொடர்ந்தாள். 'நீங்க சொன்னது கூட உண்மைதான். எல்லோருமே குடும்பத்தை விட்டுவிட்டு இப்படித்தான் தெருவுக்கு வந்து விடுவார்களா என்று? இல்லை.. வராமல் போகலாம். குடும்பத்தில் அவர்களுக்கு எந்த விதத்திலேயாவது சுகம் இருந்திருக்கலாம். அல்லது குழந்தைகளின் நல்வாழ்வை எண்ணி, பயந்து கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். நான் இன்றைக்குத்தான் வேலையில் சேர்ந்திருக்கிறேன். சம்பளம் ரொம்ப குறைவு. இரண்டு வேளை சாப்பாட்டுக்கு கூட போதும் போதாமலும் இருக்கலாம். ஆனால் எதற்குமே ஏதோ ஒரு இடத்தில் 'தொடக்கம்' என்று இருந்து ஆகணும் இல்லையா?"

'சரி, போகட்டும். கொஞ்ச நாளைக்கு வந்து நம் வீட்டில் இரும்மா. உன் மனம் தேறிய பிறகு போகலாம்."

"மனம் தேறாது அப்பா. ஆவேசம் தணிந்துவிடும். நீங்கள் எல்லோரும் என்னைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டு கொஞ்சம் கொஞ்சமாய் அதைரியத்தை நம் பண்பாட்டுடன் கலந்து எனக்குப்

புகட்டுவீங்க. திரும்பவும் சாதாரணப் பெண்ணாய் மாறும் வரைக்கும் விடமாட்டீங்க. வேண்டாம் அப்பா. என்னை இப்படியே விட்டு விடுங்கள்."

"என்னால் ஏனோ உன் வாதத்தை ஏற்றுகொள்ள முடியவில்லை பாவனா. அவனுக்கென்ன வந்தது? இன்னொரு கல்யாணம் பண்ணிக்கொள்வான். நிம்மதியாய் குடும்பம் நடத்துவான். உன் விஷயம் அப்படி இல்லையே? உலகத்தில் தனியாய் வாழ்கிற பெண்ணின் வாழ்க்கை எவ்வளவு துர்லபம் என்று எனக்குத் தெரியும். அதோடு நாளைக்கு உன் தங்கைகளின் கல்யாணத்தைப் பற்றியும் யோசித்துப் பார்க்கணும் நீ. இப்படி ஓடிப் போகிற குணம் அவர்கள் ரத்தத்திலேயே இருக்கு என்று யாரும் நினைத்து விடக் கூடாது."

பாவனாவின் முகம் களையிழந்தது பெரும் முயற்சி செய்து ஆவேசத்தை அடக்கிகொண்டாள். "அப்பா! நீங்க எனக்குப் படிப்பு சொல்லித் தரவில்லை. அப்பாவிப் பெண்ணாய் வளர்தீங்க. பெண்பார்க்க வந்தவர்கள் ஆடைகளை அவிழ்க்கச் சொல்லி பரிசோதிதாலும் புன்னகை மாறாமல் பொறுத்துக் கொள்கிற பொறுமையைப் பழக்கினீங்க. கல்யாணம் பண்ணுவதற்கு முன்னால் உங்க மாப்பிள்ளை ஆண்மகன் தானா என்று ஏன் பரிசோதிக்கவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அதை விட்டுத் தள்ளுங்கள். தங்கைகளின் கல்யாணம் பிரச்சனையாகிவிடும் என்று சொல்றீங்க. நிலத்தை விற்றுவிடுங்கள். எனக்காக அடமானம் வைத்தீங்க இல்லையா? இரண்டாவது மகளுக்காக் அதை விற்று விடுங்கள். தம்பிக்கு வரதட்சணை வாங்கிக் கொள்ளுங்கள். பணம் குணத்தைக் காப்பாற்றும். நம் குடும்பத்தைப் பற்றி அப்போ யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள். நம் பண்பாடு கூட குறுக்கே நிற்காது."

“நீ பாவனாதானா?” சந்தேகத்துடன் கேட்டான் விஸ்வம்.

அவள் வேதனையுடன் சிரித்தாள். “இல்லை அப்பா! வாழக் காற்றுக்கொண்ட பெண். உங்கள் கண்ணோட்டத்தில் ஓடுகாலி!”

விஸ்வம் எழுந்துகொண்டான். “போய் வருகிறேன்” என்றான். வாசல் வரைக்கும் போனவன் நின்று “என் மகள் இப்படிப் பண்ணுவாள் என்றும், என்னோடு கூட இப்படிப் பேசுவாள் என்றும் கனவில் கூட எதிர்பார்த்திருக்கவில்லை. இனிமேல் எனக்கு மூத்த மகள் இல்லை என்று நினைத்துக் கொள்கிறேன்.”

அவள் கைகளைக் கூப்பி “நல்லது அப்பா” என்றாள், கண்களின் ஈரம் தந்தை கண்ணில் படாமல் இருக்க முகத்தைத் திருப்பிக்கொண்டே.

29

இரண்டு நாட்களுக்குப் பிறகு பாஸ்கர் ராமமூர்த்தி வந்தான். ஆள் கொஞ்சம் இளைத்தாற்போல் தென்பட்டான்.

“வீட்டை மாற்றிவிட்டேன். வந்துவிடு. வேறு யாருக்கும் தெரியாது” என்றான். அவள் விசிட்டர்ஸ் அறைக்கு வந்ததுமே.

“என்ன தெரியாது?”

“அதான்... நீயும் ராமநாதனும்.... அந்த விஷயம்...”

“நீங்க அந்த வீட்டை மாற்றியது அதற்காக இருந்திருக்காது அந்தத் தெருவில் உள்ள எல்லோருக்குமே உங்கள் ஆண்மைக்குறைவு பற்றி தெரிந்துவிட்டது என்பதால்.”

“வீட்டை விட்டுத் துரத்தினாலும் உன் திமிர் இன்னும் அடங்கவில்லை என்று சொல்லு.”

“நீங்க துரத்தியதாவது? நான்தானே உங்களை கால்களுக்கு நடுவில் உதை கொடுத்து வெளியேறினேன்.”

“பாவனா!”

“பெரிதாக கத்தாதீங்க. நீங்க எதுக்கு வந்திருக்கீங்க என்று எனக்குத் தெரியும். வாங்கிக்கொண்ட வரதட்சணைப் பணத்தை அப்பாவுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்குமே என்றுதானே?”

“செத்தாலும் தரமாட்டேன். உன்னைக் கோர்ட்டுக்கு இழுத்து அழ அழ வைக்காமல் போனால் என் பெயர் பாஸ்கர் ராமமூர்த்தி இல்லை” என்றான்.

அவளுக்கு எரிச்சலாய் இருந்தது. “உன்னிடமிருந்து விவாரத்து வாங்கிக்கொள்வதற்கு உன்னிடமுள்ள ஒரே ஒரு அவலட்சனமே போதும் ராமமூர்த்தி! போ... நானே உனக்கு விவாகரத்து தந்து விடுகிறேன். போய் அந்த வசந்தியையே பண்ணிக்கொள் போ” என்றாள்.

“என்ன சொன்னாய்?” ஆவேசத்தில் அவன் குரல் நடுங்கியது..

“ஆமாம். எப்படியும் உடல்ரீதியான சம்பந்தம் இருக்கப் போவதில்லை. அதனால் உங்கள் இருவருக்கும் பொருந்தும்” என்றாள் நிதானமாய்.

“தேவடியா மகளே! உன் நாக்கு அழுகிப் போய்விடும். எனக்கும் என் தங்கைக்கும் உள்ள உறவை கொச்சைப் படுத்துகிறாயா?”

“வயது வந்த எந்த தங்கையின் மடியிலும், அது உண்மையான அண்ணன் தங்கை பந்தமாக இருந்தால் எந்த ஆணுமே படுத்துக்கொள்ள மாட்டான், ஏதோ ஒரு பலவீனம் இருந்தால் தவிர. அது உடல்ரீதியாக இருக்கலாம், மனதளவிலும் இருக்கலாம்.”

“நீதி மொழிகள் பேசாதே. வீட்டுக்குத திரும்பி வரப் போகிறாயா இல்லையா? அதைச் சொல்லு.”

“வருகிறேன்.”

அவன் வியப்படைந்து “வருகிறாயா?” என்றான்.

“ஒரு நிபந்தனையின் பெயரில்.”

“அது என்ன?”

“எனக்கு ஒரு குழந்தைக்குத் தாயாகனும் என்று இருக்கு. யார் மூலமாய், எந்த முறையாய் என்று நீ கேள்வி கேட்கக் கூடாது.”

பாஸ்கர் ராமமூர்த்திக்கு ஒரு வினாடி புரியவில்லை.

பிறகு சாமி வந்தவன் போல் ஆடத் தொடங்கினான். “அடியேய்! காமவெறியால் புழுத்துப் போய் சாகப் போகிறாய். புருஷன் போறாதுன்னு ஊர் மேயப் போகிறாயா? நீ ஒரு பெண்தானா?”

“நானும் ஒரு பெண்தான் ராமமூர்த்தி! ரொம்ப சாதாரணமான பெண். தோட்டத்துச் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக்கொண்டே வாழ்க்கை அழகான பூந்தோட்மாய இருக்கும் என்று கனவு கண்டவள். வாசலில் கோலம் போட்டுக்கொண்டடே எதிர்காலமும் அதேபோல் இருக்கும் என்று அப்பவித்தனமாய் ஊகித்துக்கொண்டவள். படிப்பு இல்லாதவள். இதயம் முழுவதும் அதைரியம் மட்டுமே நிரம்பியிருப்பவள். கண்ட கனவெல்லாம் கரைந்துப் போக, கண் நிறைய நீரும், நடுங்கும் கை விரல்களும் மட்டுமே எஞ்சியிருப்பவள். என்னை இனி தொந்தரவு செய்யாதே. போய்விடு. நான் நாலு பேரைக் கூப்பிடுவதற்கு முன்பே, என் மாஜி கானவனின் அவமானத்தை நான் கண்ணாரக் காணும் துர்பாக்கியம் ஏற்படுவதற்கு முன்பே இங்கிருந்து போய்விடு.”

அவள் கைகளால் முகத்தைப் போத்திக்கொண்டாள்.

அவன் மௌனமாய் அங்கிருந்து திரும்பினான்.

*****

பாவனாவுக்கு வேலை நன்றாகப் பழகிப் போய்விட்டது. புன்னகை மாறாமல் பண்புடன் பேசுவதாலோ அல்லது முறுவலுடன் பிரகாசிக்கும் அவள் அழகின் காரணமாகவோ தெரியாது. வாடிக்கையாளர்கள் அவளிடம் திரண்டு வந்தார்கள்.

ஒருமுறை வெளி உலகிற்கு வந்துவிட்டதுமே அவளுக்கு பல விதமான கதவுகள் திறந்து கொண்டாற்போல் தோன்றியது. முக்கியமாய் “சுயேச்சை”க்கு அர்த்தம் புரிந்தது. சுயேச்சை எவ்வளவு சந்தோஷம் தரும் என்றும் புரிந்தது. ஆனால் அந்த சுயேச்சை பிற்பகலில் பக்கத்து வீட்டுக்காரியுடன் மாட்டினிக்குப் போவதால் வருவதோ, அல்லது நள்ளிரவு வரையில் பாய்பிரண்டுடன் சுற்றுவதால் வருவதோ இல்லை. வீட்டில்

இருந்த போது கணவன் வீட்டிற்குத் திரும்பி வருகிறான் என்றாலே பயமாய் இருக்கும். வசந்தியைப் பார்த்தால் அருவருப்பாய் இருக்கும். இப்பொழுது அதெல்லாம் இல்லை. காலையில் எழுந்துகொள்ள வேண்டுமே என்று நினைக்கும் போதே அதிருப்தியை ஏற்படுத்தும் 'நாளை'யை விட, காலையில் எழுந்ததுமே உற்சாகமாய் இருக்கும் "நாளை!" அதைக் காட்டிலும் மனிதனுக்கு வேண்டியது என்ன?

அதற்காக அவளுக்கு யோசிக்கும் திறனே இல்லை என்று சொல்லிவிட முடியாது. தந்தை இல்லை. கணவனும் இல்லை. இனி வேறு யாருக்காக என்ற எண்ணம் அவ்வப்பொழுது எழும். ஒரு நல்ல நட்புக்காக மனம் தவிக்கும். ஆனால் அதையும்விட முன்பாய் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது என்று அவளுக்குத் தெரியும். நாட்கள் நன்றாகப் போய்க் கொண்டிருந்தன. அந்த ஷோ ரூமுக்கு பெரும்பாலும் வெளிநாட்டுக்காரர்கள் தான் வருவார்கள். அவளுக்கு ஆங்கிலம் அவ்வளவு நன்றாகப் பேசத் தெரியாது. படிப்பும் குறைவுதான். அதற்காக என்ன பண்ணுவதென்று புரியவில்லை. தன் பிரச்சனையை பாரதிதேவியிடம் சொன்னாள்.

"அதற்கென்ன வந்தது? நான் படித்து கூட குழந்தைகள் எல்லோரும் பிறந்த பிறகுதான். தினமும் ஒரு மணிநேரம் நானே உனக்கு இங்கிலீஷ் பாடம் சொல்லித் தருகிறேன்" என்றாள்.

மறுநாள் முதல் அவள் சொல்லித் தரத் தொடங்கிவிட்டாள். பாவனாவின் ஆர்வத்தை கவனித்துவிட்டு "நீ பிரைவேட்டாய் டிகிரி எழுதாலமே பாவனா" என்றாள்.

"நானா? இவ்வளவு வேலைகளுக்கு நடுவிலா?" சங்கடத்துடன் பதிலளித்தாள் பாவனா.

“வேலை அதிகமாக ஆக ஓய்வும் நிறைய கிடைக்கும். பரீட்சைக்குக் கட்டு. எவ்வளவு நாள்தான் இதுபோல் சேல்ஸ் கேர்ளாக இருப்பாய்?”

பாவனா தலையை அசைத்தாள்.

ஒரு நாள் கடைக்கு ஆங்கிலேய தம்பதி வந்திருந்தார்கள். பத்து நிமிடங்கள் வித விதமான பொம்மைகளை எடுத்துப் பார்த்துவிட்டு, கடைசியில் ஒன்றை தேர்ந்து எடுத்துவிட்டு “இந்தப் பொம்மையின் விலை என்ன?” என்றார்கள்.

“ஐந்தாயிரம் ரூபாய். அதாவது ஏறக்குறைய நூறு டாலர்கள் சார்.”

“விலை அதிகம் என்று நினைக்கிறேன்.”

“இல்லை சார். தஞ்சாவூரைச் சேர்ந்த கலைஞன் ஒருவன் இருபது நாட்கள் கஷ்டப்பட்டு செய்த பொம்மை இது. ஒவ்வொரு அணுவிலும் அவருடைய கைத்திறன் தென்படும். இதுவே மிஷினில் தயாரிக்கப் பட்டிருந்தால் இன்னும் கூட நுணுக்கமாகத் தயாரிக்கப் பட்டிருக்கலாம். விலையும் கூட மலிவாய் இருக்கலாம். அனால் இதில் இருக்கும் அந்த கலைத்திறன் அதில் உங்களுக்குக் கிடைக்காது.”

“இந்த மூன்றாவது கண் என்றால் என்ன?”

“எங்களுடைய கடவுள் சிவ பெருமான். தீயவர்களை அடக்குவதற்காக மூன்றாவது கண்ணைத் திறந்தால் தீமைகள் எல்லாம் சாம்பலாகிவிடும் என்று எங்கள் புராணங்கள் சொல்லுகின்றன.”

“பேக் பண்ணிக் கொடுங்கள்.”

அவள் பேக் பண்ணிக்கொண்டிருக்கையில், அந்த தம்பதிகள் தமக்குள்ள பேசிக்கொண்டது தொலைவிலிருந்து கேட்டது. “அந்தப் பெண் ரொம்ப அழகாய் இருக்கிறாள் இல்லையா டியர்? இந்தியக் களை ததும்பும் முகம்.”

“ஆங்கில உச்சரிப்பு கூட நன்றாக இருக்கிறது.”

திடீரென்று மழைச்சாரலில்.நனைந்தாற்போல் இருந்தது. அதுவரையில் அவள் கவனிக்கவே இல்லை. யாருடைய உதவியும் இன்றி அவள் ஆங்கிலத்தில் பேசியிருக்கிறாள். கடினமான உணர்வுகளை நல்ல மொழிவளத்துடன் எடுத்துச் சொல்ல முடிந்தது அவளால். ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்றாலே ஏற்படும் தயக்கமோ, நடுக்கமோ கொஞ்சம் கூட இருக்கவில்லை..

சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்க வேண்டும் போல் இருந்தது. காற்றில் நீந்த வேண்டும் போலிருந்தது. உண்மையில் அது பெரிய விஷயம்கூட இல்லை. மிகவும் சின்ன விஷயம். ஆனால் அனுபவிப்பவர்களின் எல்லையைப் பொறுத்து இருக்கிறது, வெற்றியின் ஆனந்தம். அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் அது புரியும்.

அவளுக்கு அந்தச் சந்தோஷத்தை யாருடனாவது பகிர்ந்துகொள்ள வேண்டும் போல் இருந்தது. டைரக்டரியைத் தேடி பரத்வாஜ் நமபரைக் கண்டுபிடித்தாள். அவனுக்கு போன் பண்ணினாள்.

“ஹலோ!” அலுப்புடன் கேட்டது மறுமுனையிலிருந்து.

“நான்தான். பாவானா” பயந்தவாறு சொன்னாள்.

“எந்த பாவனா?’

“ஆறு மாதங்களுக்கு முன்னாடி உங்கள் வீட்டுக்கு நள்ளிரவில் வந்திருந்தேன். ஜீவனியில் கூட சேர்ந்தீன்களே .”

“ஓ... நீயா?”’

“நீங்க பிஸியாய் இருக்கீங்க போலிருக்கு.”

“இல்லை. மூட் நன்றாக இல்லை. எங்க எடிட்டர் செக்ஸ், வயலென்ஸ் இல்லாவிட்டால் எழுதுவதை நிறுத்தி விடுவது நல்லது என்று சொல்லிவிட்டார். இந்தத் தொல்லை எங்களுக்கு எப்போதும் இருப்பதுதான். சரி, விஷயம் என்னவென்று சொல்லு.”

பாவனா அன்றைக்கு நடந்ததைச் சொன்னாள். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு “குட்!” என்றான்.

“இதையெல்லாம் ஏனோ உங்களுக்குச் சொல்லவேண்டும் போல் இருந்தது. நான் ஒருமுறை உங்ககளைச் சந்திக்கவும் விரும்புகிறேன்.”

“வேண்டாம்” என்றான் சுருக்கமாய்.

அவள் அடியுண்டாற்போல் “ஏன்?” என்றாள்.

“எப்பொழுது பெண்ணானவள் தன் சந்தோஷத்தையோ, வருத்ததையோ பகிர்ந்துக் கொள்வதற்கு ஒரு வேற்று ஆணைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறாளோ, அப்பொழுதே அவனுள் இன்னொரு மனிதன் விழித்தெழுந்து கொள்வான். அவன் அபாரமான அறிவு படைத்தவனாகவும், காரியவாதியாகவும் இருந்தால் அவளை புகழ்ந்தோ அல்லது இரக்கத்தை

வெளிபடுத்தியோ நட்பை வளர்த்துக்கொள்வான் 'என் அப்பாவித்தனத்தை நீ இந்தவிதமாய் பயன்படுத்திக்கொள்வது நியாயம்தானா?' என்று பெண்ணாகப் பட்டவள் கேட்பாள், அந்த மயக்கத்திலிருந்து விடுபட்டதும்.'இதெல்லாம் உனக்கு விருப்பம்தான் என்று நினைத்தேன். அவ்வளவு விருப்பம் இல்லாதவள் முதலிலேயே ஜாக்கிரதையாய் இருந்திருக்கலாமே" என்பான் அவன். இந்த ரகளை எல்லாம் எதற்கு?"

அவள் மித மிஞ்சிய வியப்புடன் "உங்கள் வயது என்ன?" என்று கேட்டாள்.

பரத்வாஜ் வழுக்கைத் தலையைத் தடவிக்கொண்டான்.. "ஐம்பத்தைந்து. வயது ஏற ஏற, ஆண்களின் அம்புப் பொதியில் மேலும் சில அம்புகள் சேரும் பாவனா. அதை மறந்துவிடாதே.".

"பின்னே நீங்க இதை உங்கள் எழுத்துக்கள் மூலமாய் எல்லோருக்கும் சொல்லலாமே?"

அவன் பெரிதாய்ச் சிரித்தான். "இந்த உலகத்தில் ஒவ்வொரு வாசகனுமே எழுத்தாளன் எழுதிய ஒவ்வொரு கருத்தும் சமுதாயத்திற்காக என்று நினைத்துக்கொள்வான். தனக்காகவும் என்று நினைக்க மாட்டான். ரொம்ப சிரிப்பு வரக்கூடிய, வருந்தத்தக்க விஷயம் இது."

"பின்னே என்னிடம் எதுக்குச் சொன்னீங்க?"

"மனதளவில் முதிர்ச்சி அடைந்த மனிதனுக்கு 'காதல்' என்ற உணர்வு எவ்வளவு ஊக்கத்தை அளிக்குமோ, அதுபோலவே

முதிர்ச்சி அடையாத மனிதனுக்கு 'ஈர்ப்பு' எல்லாவிதத்திலேயும் தடையாய் இருக்கும்."

"இந்த வார்த்தைகளை நான் என்றுமே நினைவில் வைத்துக் கொள்வேன்" என்று போனை வைத்துவிட்டாள் அவள்.

*****

நகரத்தில் டாஸ்க் போர்ஸ் முற்றுகை திடீரென்று அதிகமாகிவிட்டதால் கஞ்சா கிடைப்பது கஷ்டமாகிவிட்டது. வழக்கமாக சப்ளை பண்ணிக் கொண்டிருந்த பெட்டிக்கடைக்காரன் தருவதை நிறுத்திக்கொண்டு விட்டான்.

சாஹிதியின் உயிர் துடிதுடிக்கத் தொடங்கிவிட்டது. இன்னும் கொஞ்ச நேரம் ஆனால் உயிரே போய்விடும் போல் இருந்தது அவளுக்கு. கல்லூரி எல்லைக்குள் தொலைவில் இருந்த மரத்தடியில் உட்கார்ந்திருந்தாள் அவள். அவள் நிலைமை எப்படி இருந்தது என்றால் ஒரு பொட்டலம் கஞ்சாவைத் தந்து என்னுடன் கொஞ்ச நேரம் இருக்கிறாயா என்று பரமஹம்சா கேட்டால் கூட ஒப்புக்கொண்டு விடுவாள் போலிருந்தது.

அந்த நேரத்தில் அவளுடைய பழைய சிநேகிதி தென்பட்டாள். அவளுக்கு அதைப் பழக்கப் படுத்தியிருந்தப் பெண்.

"இங்கே ஏன் உட்கார்ந்து இருக்கிறாய்?"

சாஹித்தி தன் பிரச்சனையைச் சொன்னாள்.

"ஆமாம். அந்தத் தொல்லை எனக்கும் வந்தது. ரொம்ப ரகசியமாய் பிளாக்கில் கிடைக்கிறது" என்று அட்ரஸைச் சொல்லிவிட்டு, தன்னிடமிருந்ததைக கொஞ்சமாய் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். சாஹிதிக்கு சஞ்சீவியே கிடைத்தாற்போல்

இருந்தது. பரபரக்க அதைப் பயன்படுத்தினாள். அது கலப்படமான சரக்கு என்பதால் அவளுக்குத் தலை சுற்றுவது போல் இருந்தது. அந்த இடத்திலேயே மரத்தில் சாய்ந்தவாறு கண்களை மூடிக்கொண்டாள்.

அவள் கண்களைத் திறந்தபோது ஒரு அறையில் இருந்தாள்.

“அப்பாடா! விழிப்பு வந்துவிட்டதா?” என்ற வார்த்தைகள் கேட்டன.

சுமார் நாற்பது வயது ஆசாமி அவளுக்குப் பக்கத்திலேயே ஸ்டூலில் உட்கார்ந்திருந்தான். அவள் சட்டென்று எழுந்துகொள்ள முயன்ற போது அவன் தடுத்தான்.

“நான் இங்கே எப்படி வந்தேன்?”

“மரத்தடியில் நினைவு இல்லாமல் விழுந்து கிடந்ததைப் பார்த்துவிட்டு இங்கே அழைத்து வந்தேன். எனக்குப் பயமாக இருந்தது. டாக்டரைக் கூப்பிடுவோமா என்று நினைத்துக் கொண்டிருந்த போது அதிர்ஷ்டவசமாய் உங்களுக்கு விழிப்பு வந்துவிட்டது. என்னதான் நடந்தது?”

“ஏதோ தலை சுற்றுவது போல் இருந்தது” என்றாள் உண்மை விஷயத்தைச் சொல்லாமல்.

“உங்களை இங்கே அழைத்துக்கொண்டு வருவது ரொம்ப கஷ்டமாகிவிட்டது, ரிக்ஷாகாரனுக்கு சந்தேகம் வராதவாறு.”

அவள் வெட்கமடைந்தவளாய் எழுந்து நின்று “நான் போய் வருகிறேன். தாங்க்ஸ்” என்றாள்.

“இப்பொழுதா? இந்த நேரத்திலா? இப்போ நேரம் என்ன தெரியுமா? நாலு மணி. விடியற்காலை மணி நான்கு.”

அவள் லேசாய் கத்தினாள். “மைகாட்! மணி நாலா?”

“இந்த நேரத்தில் வீட்டுக்குப் போய் அவர்களைக் கலங்கடிப்பதை விட காலையிலேயே போய் இரவு எந்த சிநேகிதியின் வீட்டிலேயோ தங்கிவிட்டதாய்ச் சொல்லுவது நல்லது என்று தோன்றுகிறது. யோசித்துப் பாருங்கள்.”

அதுவும் நல்லதுதான் என்று சாஹிதிக்குத் தோன்றியது. தாய்கூட வீட்டில் இல்லை. பஜனைக்காக தென்னாங்கூர் போயிருக்கிறாள்.

அவள் மௌனத்தை சாதகமாக எடுத்துக் கொண்டு அவன் எழுந்து “முகம் கழுவிக் கொள்ளுங்கள். காபி கொண்டு வருகிறேன்” என்று உள்ளே போனான். குற்ற உணர்வும், வெட்கமும் அவளை ஆட்டி படைத்தன. அவன் திரும்பி வருவதற்குள் அவள் கொஞ்சம் நீட்டாய் தயாராகியிருந்தாள்.

“உங்களுக்கு இன்னும் பயம் போகவில்லை போலிருக்கு. அம்மா, அப்பா கொபித்துக்கொல்வார்கள் என்று பயமாக இருந்தால், நான் வந்து சொல்கிறேன்.” காபியை அவளிடம் தந்தபடியே சொன்னான்.

“ச்சே.. அதெல்லாம் ஒன்றும் இல்லை. உங்களுக்கு அனாவசியமாய் சிரமம் தந்துவிட்டேன். உங்களுக்கு எப்படி நன்றியைச் சொல்லுவது என்று புரியவில்லை.”

“இதில் சிரமம் என்ன இருக்கு? உங்களைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்து இருந்தேன். அழகை ஆராதிப்பதற்கு ஒரு வாழ்நாள்

முழுவதுமே கூட போறாது என்று சொல்லுவான் என் நண்பன். மனதில் களங்கம் இல்லாத போது அழகை ரசிப்பதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன். தவறு என்று நீங்க நினைத்தால் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே புனிதமான உணர்வுடன்தான் பார்த்தேன்."

அவன் வார்த்தைகளில் நேர்மை தென்பட்டது. அவள் யோசித்துக் கொண்டிருந்தது தவறு, மன்னிப்பு.. அதைப் பற்றியில்லை. ஒரு சந்தோஷமான உணர்வு அவளைத் திக்குமுக்காட வைத்தது. அழகை பாராட்டினால் எந்தப் பெண்ணுக்குத்தான் சந்தோஷமாய் இருக்காது?

'ராத்திரி இரண்டு மணி வரையில் உங்களைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். அப்புறமாய் தேநீர் போட்டுக் குடித்தேன்."

சாஹிதி வியப்புடன் பார்த்தாள் அவனை.

"உங்க பொழுதுபோக்குகள் என்ன?"

அவளுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியவில்லை.

ஒவ்வொருவரும் தம்மையே கேட்டுக்கொண்டாலும், சரியான பதில் கிடைக்காத கேள்வி.

"பெயிண்டிங், கேரம்ஸ்" என்றாள். அவை ஹாபிஸ் அல்ல. அந்தப் பெயர்கள் தான் தெரியும், அவ்வளவுதான். பத்து வயது நிரம்பியிருக்கும் எவருக்குமே இந்த அளவுக்காவது தெரிந்திருப்பது சகஜம்தான். சாப்பிடுவது, படிப்பது, வம்பு பேசுவது என்னும் மூன்று பழக்கங்கள் உடைய மூன்று கோடி தமிழ்நாட்டு இளம் பெண்களுக்குள் அவள் ஒருத்தி.

அவன் அவளுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டான். நேரம் ஐந்து மணி ஆயிற்று. கிழக்கில் கொஞ்சம் வெளுக்கத் தொடங்கியது. அதனால் அவள் பயம் முழுவதும் தணிந்துவிட்டது. அவன் உட்கார்ந்துகொண்டே.

“ஊம். இப்போ சொல்லுங்கள். உங்களுக்கு கஞ்சா எப்போதிலிருந்து பழக்கம் ஆயிற்று?” என்றான்.

சாஹிதிக்கு பக்கத்தில் வெடிகுண்டு வெடித்தாற்போல் இருந்தது. முகம் வெளுத்துவிட்டது.

“நீ என்னைவிட வயதில் சிறியவள். அதனால் உன்னை நீ என்றே விளிக்கிறேன். உனக்குப் பக்கத்திலேயே கஞ்சா பொட்டலத்தைப் பார்த்தேன். அதானால் டாக்டரைக் கூப்பிடவோ, ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகவோ இல்லை. ரொம்பவும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டால் அப்படிச் செய்யலாம் என்று பக்கத்திலேயே விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். இதைக் கொண்டு நான் எப்படிப்பட்ட குணநலன் கொண்டவன் என்று புரிந்திருக்கும் உனக்கு. இன்னும் நீ என்னைப் புரிந்துகொள்ளவில்லையா சாஹிதி?”

அவள் தலை கவிழ்ந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

“பிரச்சனைகள் அதிகமாகிவிட்டால், அவற்றிலிருந்து மீள்வதற்கு இந்த மாதிரி பழக்கங்களுக்கு அடிமையாவது சகஜம்தான். என்னால் உன்னைப் புரிந்துகொள்ள முடியும். இரக்கம் காட்டுபவர்களோ, புரிந்துகொள்பவர்கள் இல்லாமல் போனாலோ மனிதனின் வாழ்க்கை எவ்வளவு நரகமாகிவிடும் என்று சொல்வதற்கு என் வாழ்க்கையே ஒரு உதாரணம்.” அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். அவன் கண்கள் ஈரமானதைப்

பார்த்து அவள் மனம் கரைந்தது. அவன் எழுந்து ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தபடி அப்படியே நின்றுவிட்டான்.

சாஹிதி அவனை நெருங்கி "என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"வேண்டாம். என் வேதனையைச் சொல்லி உன்னை வருத்தப்படுத்த மாட்டேன்" என்றான்.

அவன் பிரச்சனையைப் பற்றித் தான் கேட்டது தவறோ என்று நினைத்தாள் சாஹிதி. அந்த விஷயத்தைப் பற்றி அதற்குமேல் கேட்கவில்லை.

அவள் பேசாததைக் கொஞ்ச நேரம் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, அவன் வேகமாய் அலமாரியை நெருங்கி அதன் கதவைத் திறந்தான். அது முழுவதும் காலி மது பாட்டில்கள் நிரம்பி வழிந்தன.

"பார்த்தாயா சாஹிதி! என் உயிரை நான் எப்படி எரித்துக் கொண்டிருக்கிறேன் என்று பார்" என்றான்.

அவளுக்குத்தான் எவ்வளவு வயதாகிவிட்டது? இருபதுக்கு கொஞ்சம் கூடக் குறைவு. அந்த வயதில் இரக்கம், தயவு, நல்லத்தன்மை போன்ற நற்பண்புகள் நிறைவாய் இருக்கும்.

"உங்கள் வேதனைதான் என்ன?" என்று கேட்டாள்.

"என் மனைவி!" என்றான் அவன். "அவளுக்குப் பணத்தைத் தவிர வேறெதுவும் தேவையில்லை. காரும், நகைகளும் வேண்டும் என்கிறாள். என் வாழ்க்கையில் நான் அவற்றை எப்படி வாங்கித் தர முடியும்? லஞ்சம் வாங்க மாட்டேன். நேர்மைதான் முக்கியம்

என்று நம்புகிறவன் நான். என்னை விட்டுவிட்டு அவள் பிறந்தவீட்டுக்குப் போய்விட்டாள்."

சாஹிதி உருகிப் போய்விட்டாள். பெண்களில் இப்படிப்பட்டவர்கள் கூட இருப்பார்களா என்று நினைத்துக்கொண்டாள். "நீங்க வருத்தப்படாதீங்க" என்றாள்.

"இல்லை சாஹிதி! உனக்குத் தெரியாது. என் மனதில் அன்பைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பது போல் வாழ்ந்து வந்தேன். நான் நேசித்த பெண்ணுக்கு என் சகலத்தையும் அர்பணித்து விட வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தேன். அந்த அடியைத் தாங்க முடியாமல் குடிப் பழக்கத்திற்கு ஆளாகிவிட்டேன்." அவன் கண்களைத் துடைத்துக்கொண்டான்.

"இங்கே புடவை எல்லாம் இருக்கே? எது?"

அவன் அந்தப் பக்கம் பார்த்தான். "என் மனைவி அவ்வப்பொழுது வந்து கொண்டிருப்பாள். எனக்காக இல்லை. பணம் படைத்த அவள் ஆண் நண்பர்களைச் சந்திப்பதற்காக."

"மை காட்! அவள் அவ்வளவு தூரம் கொழுபெடுத்து அலைந்த போதிலும் நீங்க சும்மா இருக்கீங்களா?"

"அவரவர்களின் பாவத்தை அவர்கள்தான் அனுபவிக்க வேண்டும் சாஹிதி! என் வருத்தம் ஒன்றுதான். என் நல்ல குணத்தைக் கையாலாகாதத் தனமாய் நினைக்கிறாள். அதனால்தான் குடியை தஞ்சம் புகுந்தேன்."

"ஆனால் உங்க உடம்பு?"

“கஞ்சாவில் உன் உடம்பு பாழாகவில்லையா? இதுவும் அதுபோல்தான். மனதில் இருக்கும் வேதனையுடன் ஒப்பிட்டால் இந்த பழக்கங்கள், உடல் ஆரோக்கியம் ரொம்ப சிறியவை. உண்மையிலேயே வேதனையில் இருப்பவள் நீ. உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லையா?”

புரிந்துகொண்டாற்போல் அவள் தலையை அசைத்தாள்.

“நான் எல்லாவற்றையும், கடைசியில் என் மனைவியின் விஷயத்தையும் கூட சொல்லிவிட்டேன். ஆனால் உன் வேதனை என்னவென்று இந்த நண்பனிடம் சொல்ல மாட்டாயா?”

அவள் சொன்னாள். தன் குடும்பக் கதையை முழுவதுமாக சொல்லிவிட்டாள்.

கேட்டதுமே ஆவேசத்தால் நடுங்கிவிட்டான் அவன். அவள் சொல்லி முடித்த பிறகு, “எனக்கு உடனே உங்க அம்மாவைச் சந்திக்க வேண்டும் போல் இருக்கு” என்றான். தொடர்ந்து “இப்பொழுதே வேண்டாம். நம் சிநேகம் கொஞ்சம் வளர்ந்த பிறகு நானே வருகிறேன். ஆனாலும் இவ்வளவு வேதனையை இத்தனை நாளாய் இதயத்தில் எப்படி வைத்துக் கொண்டிருந்தாய் சாஹிதி? இவ்வளவு நாளாய் வேதனை என் ஒருத்தனுக்குத்தான் என்று நினைத்திருந்தேன். உலகத்தில் என்னைவிட வேதனையை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் கூட இருக்கிறார்கள் என்று இப்பொழுதுதான் புரிந்தது. ‘வேண்டியவர்கள்’ என்று நாம் நினைப்பவர்கள் தொலைவாக சென்றுவிட்டால் அந்தத் தனிமை வாழ்க்கை எவ்வளவு துர்லபமாய் இருக்குமோ அனுபவத்தில் புரிந்து கொண்டேன். என்னால் உன்னைப் புரிந்துகொள்ள முடியும். ஒரே திசையில் பயணிக்கும் இரண்டு படகுகளின் பயணிகள் நாம்.”

அப்பொழுது வந்தது துக்கம் அவளுக்கு. இந்த அளவுக்கு அனுசரணையாக இதுவரையில் அவளிடம் யாருமே பேசியது இல்லை. குளிர்ந்த காற்றுக்கு மேகம் மழையைப் பொழிந்தது போல் அதுவரையிலும் அவள் அடக்கி வைத்திருந்த கண்ணீர் வெளியே வரத் தொடங்கியது. அவன் அவளைத் தேற்றினான். கிழக்கே நன்றாக வெளிச்சம் வந்துவிட்டது.

சாஹிதி தேறிக்கொண்டு "நான் போய்வருகிறேன். இன்றைக்கு நீங்க செய்த உதவிக்கு ரொம்ப நன்றி" என்றாள்.

"நான்தான் உனக்கு நன்றி சொல்லணும். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு எனக்கு ஒரு உண்மையான சிநேகிதி கிடைத்திருக்கிறாள் என்று தோன்றுகிறது. சாஹிதி! புனிதமான நம் நட்பு என்றென்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கும் என்று வாக்குக் கொடு" என்று கையை நீட்டினான்.

அவன் அன்பிற்கு அவள் உருகிவிட்டாள். அவன் கை மேல் கை வைத்து "சரி" என்றாள். "திரும்பவும் எப்போ சந்திப்போம்?" இருவரும் வீட்டை விட்டு வெளியே வந்து கொண்டு இருக்கும் போது கேட்டான்.

"உங்கள் விருப்பம்."

"கல்லூரியை விட்டதுமே எங்க ஆபீசுக்கு வந்துவிடு. சேர்ந்து காபி குடிப்போம்."

"கார் வரும். டிரைவர் இருப்பான்."

"பிராக்டிகல்ஸ் இருக்கு. தாமதம் ஆகும் என்று சொல்லு."

அவள் கொஞ்சம் யோசித்தாள். போய் சொல்லுவது புதிது இல்லை. ஆனால் பழக்கம் இல்லை. ஆனாலும் அவன் வார்த்தையை மறுக்க முடியாமல் “சரி” என்றாள்.

“இன்ஷூரென்ஸ் கம்பெனி தெரியும் இல்லையா. அங்கே வந்து கேட்டால் யாராவது சொல்லுவார்கள். அதுசரி, என் பெயரை சொல்லவே இல்லையே? ராமநாதன்” என்றான்.”

30

ஒரு காலத்தில் முதலமைச்சராக இருந்து தற்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கும் சிதம்பர சுவாமிக்கு ஒரே மகன். அவன் பெயர் சாங்கபாணி. தந்தை முதலமைச்சராக இருந்த போது, பாணி ஏறக்குறைய நாட்டை ஆண்டு வந்தான். பிறகு கட்சிக்கு மெஜாரிட்டி கிடைக்காமல், எதிர்கட்சித் தலைவர் பதவியில் திருப்தி அடைய வேண்டிவந்தது. முதலமைச்சர் அளவுக்கு அதிகாரம் இல்லா விட்டாலும், காரியங்களைச் சாத்தித்துக்கொள்ளும் அளவுக்கு சாமர்த்தியம் இருந்தது சிதம்பர சுவாமிக்கு. முதலமைச்சராக இருந்த போது கோடிக் கணக்கில் பணத்தை விழுங்கி, அந்தப் பணத்தால் பல பேக்டரிக்களை நிறுவியிருந்தான். அவற்றை மகன்தான் பார்த்து வந்தான்.

சாரங்கபாணி சோக்குபேர்வழி சுற்றிலும் எப்போதும் நாலைந்து பேர் நண்பர்கள் இருக்காமல் முடியாது. மாலை வந்துவிட்டால் பிராந்தியும், விஸ்கியும் ஆறாய் ஓடவேண்டியதுதான். வியாபாரத்தையும், கேளிக்கையையும் கலந்து, வாழ்கையை அலட்சியமாக அனுபவிக்கும் ஆசாமி சாரங்கபாணி.

ஒரு சமயம் பேக்டரி லைசென்ஸ் விஷயமாய் ஒரு குமாஸ்தாவைப் பிடிக்க வேண்டியிருந்தது. அவன் யார் என்று விசாரித்து

“மாலையில் பார்ட்டிக்கு அழைத்துக்கொண்டு வா” என்று மேனேஜரிடம் சொன்னான். இப்படிப்பட்ட விஷயத்தில் லஞ்சத்தை விட பார்ட்டிகள் தான் நன்றாக வேலை செய்யும் என்பது பாணியின் நம்பிக்கை.

லைசென்ஸ் வழங்கும் ஆபீசில் அந்த வேலையைப் பண்ண வேண்டிய குமாஸ்தா யாரென்று விசாரித்தார் மேனேஜர்.

அவன் பாஸ்கர் ராமமூர்த்தி!

பாஸ்கர் ராமமூர்த்தி அன்று மாலை கெஸ்ட் ஹவுசுக்கு அழைக்கப்பட்டான். அவனுக்கு அது ஒரு அபூர்வமான அனுபவம். ஏ.சி. செய்யப்பட்ட படுக்கை அறைகள், மெத்தென்று கார்பெட், கண்ணாடிக் கதவுகள், விலை உயர்ந்த விஸ்கி, வித விதமான உணவு வகைகள்..

அதற்குப் பிறகு நான்கே நாட்களில் பாணிக்கு அந்த லைசன்ஸ் கிடைத்துவிட்டது. பாஸ்கர் ராமமூர்த்தி கூடவே இருந்து, எல்லா பிரிவுகளுக்கும் சென்று பைல் சீக்கிரமாய் நகரும்படி செய்தான். லைசென்ஸ் கிடைத்த அன்று பாணியை விட அவன்தான் மகிழ்ச்சி அடைந்தான்.

அன்றைக்குப் பாணி அவனைத் திரும்பவும் பார்ட்டிக்கு அழைத்தான். இந்த தடவை ராமமூர்த்தி தானே உரிமை எடுத்துக்கொண்டு எல்லோருக்கும் கிளாஸ் டம்ப்ளர்களில் ஊற்றி தானே சுயமாய்த் தந்தான். நடுவில் உணவு பதார்த்தங்கள் தீர்ந்துவிட்ட போது திரும்பவும் ஹோட்டலிலிருந்து வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தான். பீடாக்களை மறந்துவிட்ட போது திரும்பவும் போனான்.

இப்படிப்பட்டவர்கள் சாதாரணம்.

பணக்காரர்களோ, பிரமுகர்களோ நண்பர்களுக்கு பார்ட்டி வழங்கும் போது ராமமூர்த்தியைப் போன்றவர்கள் அந்தக் கூட்டத்தில் சேர்ந்துக் கொள்வார்கள். இவர்கள் வேலைக்காரர்கள் இல்லை. நண்பர்கள் என்றே குறிப்பிடப் படுவார்கள். ஆனால் வேலைகள் செய்து கொண்டிருப்பார்கள்.

“ராமமூர்த்தி! இந்த கிளாசில் கொஞ்சம் ஊற்று.”

“ராமமூர்த்தி! அந்த சோடாவை ஓபன் பண்ணு., ப்ளீஸ்”

“மூர்த்தி! இன்றைக்கு பரிமாறும் பொறுப்பு உன்னோடதுதான். எல்லோரும் ஃபுல் போதையில் இருக்கிறோம்.”

இப்படிப்பட்ட வேலைகள் மிக மரியாதையாய் இவர்கள் தலையில் கட்டப்பட்டு விடும். இவர்களும் அந்த வேலைகளை புன்முறுவலோடு ஏற்றுக்கொண்டு செய்வார்கள்.

நாலைந்து மாதங்களில் பாஸ்கர் ராமமூர்த்தி பாணிக்கு நெருங்கிய நண்பன் ஆகிவிட்டான்.

ஒருநாள் சாரங்கபாணியின் காரில் முன் சீட்டில் ராமமூர்த்தி உட்கார்ந்து போய்க் கொண்டிருப்பதைப் பாவனா வழியில் பார்த்தாள். அன்றைக்கு அதைப்பற்றி அவ்வளவாகப் போருட்புத்தவில்லை. பல நாட்களுக்குப் பிறகு அதுவே அவள் வாழ்க்கையில் ஒரு முக்கியமான மாற்றத்திற்குக் காரணமாகிவிட்டது.

*****

சாஹிதி பி.எஸ்.ஸி. பரீட்சையில் சாதாரண மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றாள். அவள் புத்திச்காலித்தனமும், நினைவாற்றலும் போதைப் பழக்கத்தினால் மழுங்கடிக்கப் பட்டுவிட்டன. எம்.எஸ்ஸி.யில் சீட் கிடைக்கவில்லை. எம்.ஏ.வில் சேர்ந்தாள்.

அந்தக் கல்லூரியில் சேர்ந்தது கூட வீட்டிலிருந்து வெளியே வந்துவற்காக ஏற்படுத்திக்கொண்ட ஒரு சாக்கு. அவ்வளவுதான். ஸ்டூடன்டுகளுக்குத்தான் போதைப்பொருட்கள் சுலபமாக கிடைக்கும் என்று அனுபவம் கற்றுக்கொடுத்தது. அவளை வகுப்பில் எப்போதுமே பார்க்க முடியாது. எந்த மரத்தின் அடியிலோ உட்கார்ந்து இருப்பாள். மணிக்கணக்காய் யோசித்துக்கொண்டே இருப்பாள். அந்த யோசனைகளுக்கு ஒரு உருவம் இருக்காது. அவ்வாறு மூளையைக் கொதிப்படையச் செய்துகொண்டு வீட்டிற்குத் திரும்பி வருவாள். களைத்துப் போன உடலுக்குத் தூக்கம் தேவையாய் இருக்கும். போதை பொருளை உட்கொண்டு உறக்கத்தில் ஆழ்ந்துவிடுவாள். அவள் கண்களுக்குக் கீழே உருவாகியிருந்த கருவளையம், இளைத்துப் போய்க் கொண்டிருந்த உடல் அவள் தாய்க்கு எந்த சந்தேகத்தையும் ஏற்படுத்தவில்லை. அவளுக்கு தற்சமயம் சனிதசை நடந்துக் கொண்டிருப்பதாய் பரமஹம்சா சொல்லியிருந்தான்..

“எக்ஸ்க்யூஸ் மி!” ஒரு பெண்ணின் குரலைக் கேட்டு நிமிர்ந்தாள் சாஹிதி. ரொம்ப அழகாய் இருந்தாள் அந்தப் பெண். திரும்பத் திரும்ப பார்க்கத் தூண்டும் அழகு. வெயிலில் அலைந்ததில் சற்று வாடியிருந்தாள். ஆனாலும் அதுகூட ஒரு கவர்ச்சியாகவே இருந்தது.

“யூனிவர்சிட்டி ஆபீஸ் எங்கே இருக்கு என்று தெரியவில்லை. அரைமணி நேரமாய் சுற்றிக் கொண்டிருக்கிறேன். அங்கே மாணவர்களைக் கேட்ட போது மிஸ்கைட் பண்ணிவிட்டார்கள். கொஞ்சம் வழி சொல்ல முடியுமா?’

“யூனிவர்சிட்டி ஆபீசுக்கு எந்த வேலையாய் போறீங்க?”

“நான் பி.ஏ. பார்ட் ஒன் பரீட்சை எழுதப் போகிறேன். அதற்கு பீசு கட்டுவதற்கு இன்றுதான் கடைசி நாள்.”

“அப்படியா! இரண்டு நிமிஷம் இருங்கள். எங்கள் கார் வந்துவிடு. அழைத்துக்கொண்டு போகிறேன்.

“உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்? வழி சொல்லுங்கள். நானே போய்க்கொள்கிறேன்.”...

“நடந்து போகணும் என்றாள் ரொம்ப தூரம். உங்களுக்கு டைம் கூட அதிகம் இல்லை. கொஞ்சம் இருங்கள். ஆனாலும் இவ்வளவு வெயிலில் வந்திருக்கீங்க. யாரையாவது அனுப்பியிருக்கணும்.”

“அனுப்புவதற்கு யாரும் இல்லை. ஆனாலும் திரும்பத் திரும்ப வர வேண்டியிருக்கும். ஒரு தடவை தெரிந்துகொண்டால் நல்லது இல்லையா?”

“உண்மைதான். அதோ கார் வந்துவிட்டது. வாங்க” என்று சாஹிதி எழுந்துகொண்டாள். பத்தே நிமிஷத்தில் அப்ளிகேஷன் கைக்கு வந்தது.

அவள் தடுத்தும் கேளாமல் ஹாஸ்டலுக்கு அருகில் டிராப் செய்வதாய் சாஹிதி அவளை காரில் ஏற்றிக்கொண்டாள்.

“முதலில் எங்கள் வீடு வரும். நான் இறங்கிக் கொள்கிறேன். டிரைவர் உங்களை இறக்கி விடுவான். பைதி பை, என் பெயர் சாஹிதி. உங்கள் பெயர்?”

“பாவனா!”

******

பாவனாவைப் பார்த்தும் அவன் திக்பிரமை அடைந்துவிட்டான். ஆளை அசத்தும் அழகு அவளுடையது.

ஆனால் உடனே சுதாரித்துக்கொண்டான். "யாரும்மா இந்தப் பெண்?" என்று நிர்மலமாய் கேட்டான் பரம்ஹம்சா.

"பாவனா!"

"உள்ளே அழைத்துகொண்டு வாம்மா. காபி கொடுக்காமலேயே அனுப்புகிறாயா?"

'நோ!' என்று சொல்ல நினைத்தாள் சாஹிதி. அதற்குள் கதவைத் திறந்துவிட்டான். பாவனா சங்கடத்துட்ன் காரை விட்டிறங்கி, அவர்களுடன் கூடவே உள்ளே போனாள்.

"போய் காபி கொண்டு வாம்மா" என்று சாஹிதியை உள்ளே அனுப்பினான். நிர்மலா கோவிலுக்குப் போயிருந்தாள்.

"எங்க சாஹிதியை உனக்கு எப்படி தெரியும்?"

"இப்பொழுதுதான் எனக்கு அறிமுகம் ஆனாள்" என்று சாஹிதி தனக்கு செய்த உதவியைப் பற்றிச் சொன்னாள். பரமஹம்சா ஒரு நிமிஷம் கண்களை மூடி கடவுளைத் தியானித்துவிட்டுக் கண்களைத் திறந்தான்.

"நீ பஸ்ட் கிளாசில் பாஸ் ஆவாய்" என்றான்.

பாவனாவின் கண்கள் வியப்பால் விரிந்தன. "உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று கேட்டாள்.

“கடவுளிடம் பிராத்தனை செய்தேன்.”

“உங்களுக்கு ஜோதிடம் தெரியுமா?”

அவன் சிரித்தான். ‘தெரியுமாவா? நான் ஜோதிடதையே மாற்றி அமைப்பவன். உண்மையில் உனக்கு செகன்ட் கிலாஸ்தான் வர வேண்டியது. ஆனால் கடவுளிடம் பிராத்தனை செய்தேன்.”

“உங்களுக்கு என் நன்றியை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை.”

“நீ எங்கே இருக்கிறாய்?”

“ஹாஸ்டலில்.”

“உன் தாய் தந்தையர்?”

அவள் பதில் சொல்லவில்லை. அவனே மேலும் சொன்னான். “உனக்கு சீக்கிரத்திலேயே திருமணம் நடக்கும். நல்ல வரன் வரும். உன்னைப் பார்த்தால் ஏதோ புரியாத அன்பு ஏற்படுகிறது. உன் சார்பில் நான் பூஜை செய்து விடுகிறேன்.”

அவளுக்குச் சிரிப்பு வந்தது. விஷயம் புரிந்துவிட்டது. அவனைப் பார்த்தாள். அவன் பார்வையிலேயே வசீகரண சக்தி இருந்தது. யாராக இருந்தாலும் ஆட்டி படைத்துவிட வல்லது. அவள் முறுவலை அவன் வேறு விதமாக புரிந்துகொண்டான்.

“நாளைக்கு உன் ஹாஸ்டலுக்கு வருகிறேன். பூஜைக்கு வேண்டியவற்றை நீயேதான் வாங்க வேண்டும். உங்க ஹாஸ்டல் எங்கே?”

பாவனாவுக்கு அவன் விஷயம் முற்றிலும் புரிந்து போய் விட்டது. இப்படிப்பட்டவர்கள் என்றுமே வெளிப்பட்டு விட மாட்டார்கள். பெண்கள் அவசரப்பட்டு "உங்க உத்தேசம்தான் என்ன? இப்படிப் பெண்களுடன் பேசுவதும், அட்ரெஸ் கேட்பது சரியா?' என்று கேட்டால், உடனே பிளேட்டை மாற்றிக்கொண்டு "நான் என்ன சொன்னேன்? நீதான் மனதில் ஏதேதோ எண்ணங்களை வைத்துக்கொண்டு ஏதேதோ ஊகித்துக் கொள்கிறாய்" என்று டபாயிப்பார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக இருந்தால் பூஜை சாமான்களை வாங்கி வைத்திருப்பாள்தான். ஆனாள் இப்போது... சிரிப்புதான் வந்தது.

"ஹாஸ்டல் இல்லைங்க. ஹாஸ்பிடல்! உங்க காதில் தவறாக விழுந்திருக்கிறது. நான் இருப்பது ஆஸ்பத்திரியில். கேன்சராய் இருக்குமோ என்று சந்தேகம். உங்க பூஜை மூலமாய் குணப்படுத்தினால் எப்பொழுதும் நன்றியோடு இருப்பேன்." முறுவலுடன் சொன்னாள். சாஹிதி கொண்டுவந்த காபியைக் குடித்துவிட்டு அங்கிருந்து வெளியேறினாள்.

பரமஹம்சா அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பாவனாவின் அழகு அவனை நெருப்பாய்த் தகித்துக் கொண்டிருந்தது.

*****

பிற்பகல் மணி ஒன்றடித்தது. மூன்று மணிவரையிலும் ஷோரூமை மூடிவிடுவார்கள். என்றும் போலவே பாவனா ஐந்து நிமிடங்களில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். பி.ஏ. முதல் பார்ட் நல்ல மார்க்குடன்

பாஸ் செய்ததும் அவளுக்கு தைரியம் வந்தது. பைனல் பரீட்சைகள் நெருங்கிக் கொண்டிருந்தன.

ஆனால் அன்றைக்கு மூட் சரியாக இருக்கவில்லை. காராணம் முதல்நாள் நடந்த சம்பவம்!

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்றும் மார்கெட்டுக்குப் போய் ஹாஸ்டலுக்குத் தேவையான காய்கறியை வாங்கி வரும் பணியை பாவனா மேற்கொண்டிருந்தாள். அன்றைக்கும் அதுபோலவே சிநேகிதியோடு போனாள்.

பக்கத்துக் கடையிலிருந்து பளுவான காய்கறிப் பையை சுமக்க முடியாமல் சுமந்தபடி வந்து கொண்டிருந்தாள் ஒருத்தி. சிநேகிதி அவளைப் பார்த்துவிட்டு "பாவம்! அந்தப் பையை சுமக்க முடியாமல் சிரமப்படுகிறாள். இந்தக் கூட்டத்திலிருந்து எப்படித்தான் வெளியேறப் போகிறாளோ" என்று கமென்ட் அடித்தாள். பாவனா இரக்கத்துடன் அவளைத் திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்தில் நிறம் மாறிவிட்டது.

"சுந்தரி!" என்று அருகில் போனாள்.

"பாவனா! நீதானா? சௌக்கியமா?" சுந்தரி மகிழ்ச்சி பொங்கக் கேட்டாள்.

"நான்தான். அதுசரி. என்ன இப்படி ஆகிவிட்டாயே? உடம்பு சரியாக இல்லையா?" எலும்புக்கூடாய் இருந்த சுந்தரியைப் பார்த்து, கவலையோடு கேட்டாள் பாவனா.

சுந்தரி பலவீனமாய் சிரித்துவிட்டு "நன்றாய்தான் இருக்கிறேன்" என்றாள்.

“ஞாயிற்றுக்கிழமைகூட உங்க அண்ணன் அண்ணியால் காய்கறிகளை தாமே வாங்கிக்கொள்ள முடியவில்லையா?”

“ஞாயிற்றுக்கிழமை ஒரே ஒருநாள்தானே அவர்களுக்கு லீவு.”

“அப்போ வாரத்தில் உனக்கு என்றைக்கு லீவு?” சட்டென்று கேட்டாள். சுந்தரி பதில் பேசவில்லை.

“நான் உங்கள் வீட்டுக்கு வந்தால் உனக்கு ஏதாவது ஆட்சேபணையா?

“என்ன பாவனா? கண்டிப்பாய் வா.”

சிநேகிதியிடம் சொல்லிவிட்டு, சுந்தரியோடு சேர்ந்து புறப்பட்டாள்.

“என்னவாச்சு சுந்தரி? உடம்பு சரியாக இல்லையா?” வழியில் கேட்டாள்.

“ராத்திரி வேளையில் இருமல் வருகிறது. ஓய்ச்சலாய் இருக்கு.”

“டாக்டரிடமாவது உன்னை அழைத்துக்கொண்டு போனார்களா?”

“பக்கத்துத் தெருவில் அரசாங்க மருத்தவர் கிளினிக்கில் காண்பித்தேன். அதுசரி, உன்னைப் பற்றி நிறைய கேள்விப்பட்டேன். என்ன நடந்தது பாவானா?”

“அதைப்பற்றி அப்புறமாய் பேசுவோம். முதலில் உன் சங்கதி என்ன? சுந்தரி! உன் உடம்பில் தெம்பு இருக்கும் வரையில் உங்க

அண்ணன் உனக்குக் கல்யாணம் பண்ணமாட்டான். அந்த விஷயம் தெரியுமா உனக்கு?"

"....."

'கொஞ்சம் சாப்பாட்டை இரையாய்க் காட்டிவிட்டு, இருபத்தி நான்கு மணிநேரமும் வீட்டில் வேலை செய்வதற்கு வேலைக்காரியைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டான் உன் அண்ணன். எட்டு வருஷமாய் கல்யாணம் பண்ணி வைக்காமல் மாடாய் வேலை வாங்கிவிட்டான். இவ்வளவு நாள் நடந்தது முடிந்த கதையாக இருக்கட்டும். இனிமேல் இப்படி நடக்கக் கூடாது. வா" என்று அவள் கையில் இருந்த பையை தானே வாங்கிக்கொண்டு படியேறி, வீட்டிற்குள் நுழைந்து தொபீறி என்று போட்டாள். மூர்த்தி சொகுசாய் கட்டில்மீது படுத்தபடி குழந்தைகளுக்குக் கதைச் சொல்லிக் கொண்டிருந்தான். சுந்தரியின் அண்ணி அவனுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு வெற்றிலைக்கு சுண்ணாம்புத் தடவியபடி ஊர் வம்பு பேசிக்கொண்டிருந்தாள்.

"சுந்தரி! உன் துணிமணி ஏதாவது இருந்தால் எடுத்துக்கொண்டு வெளியே வா" என்றாள் பாவனா அவர்கள் காதில் விழும் விதமாய்.

உள்ளேயிருந்து அவள் அண்ணி, ஒன்றும் புரியாமல் வெளியே வந்தாள். "எங்கே போகப் போகிறாள்? நீ யாரு? முதலில் அதைச் சொல்லு" என்றாள் கோபமாய்.

"சுந்தரியின் நலம்விரும்பி. போதிக் கழுதையாய் வேலை செய்வதிலிருந்து அவளைத் தப்பிக்க வைத்து என்னுடன் அழைத்துக் கொண்டு போக வந்திருப்பவள்"

“என்னங்க? அப்படிப் பார்த்துக் கொண்டு இருக்கீங்களே? இவள் யாரு என்னன்னு பாருங்கள், வெளியே துரத்துங்கள்” என்று ஏற\\கன்வன்மேல் எரிந்து விழுந்தாள். மூர்த்தி பாவனாவை விழி பிதுங்க அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

“உன் புருஷனுக்கு அவ்வளவு தைரியமும், நேர்மையும் இருந்திருந்தால் சுந்தரியின் நிலைமை இப்படி இருந்திருக்காது. ஞாயிற்றுக்கிழமை தான் ஒய்வு எடுத்துக்கொண்டு தங்கையை மார்கெட்டுக்கு அனுப்பி இருக்கமாட்டான். தைரியம் இருந்தால் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் புகார் கொடுக்கச் சொல்லு. நான் சுந்தரியை அழைத்துக்கொண்டு போகிறேன்.”

அந்தக் கத்தலைக் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் கூடி விட்டார்கள்.

“அநியாயம் நடந்து கொண்டிருக்கும் போது ஒருத்தரும் வாயித் திறக்க மாட்டர்கள். சண்டை நடந்தால் மட்டும் வேடிக்கை பார்க்க வந்து விடுவார்கள்.” பெரிய குரலில் கத்தினாள் பாவனா. அவரவர்கள் திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல் நழுவி விட்டார்கள். மூர்த்தி இன்னும் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான்.

“வா சுந்தரி! அந்த துணிமணிகூட இவர்களுடையது தானே. அவைகூட தேவையில்லை.”

சுந்தரி கைகளைக் கூப்பி “நீ போய் வா பாவனா! நான் வர மாட்டேன்” என்றாள்.

திடீரென்று முகத்தில் வெந்நீரைக் கொட்டினாற் போலாயிற்று பாவனாவுக்கு. திகைப்படைந்து நின்றுவிட்டாள். சுந்தரி அவள் தோளைப் பற்றி வெளியே அழைத்துவந்தாள்.

“என்னை மன்னித்துவிடு பாவனா! நீ பண்ணப் போன காரியத்திற்கு நன்றி. ஆனால் என்னால் வரமுடியாது. நான் வரமாட்டேன்.”

பாவனா இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. “ஏன்?’ என்றாள்.

“நான் ரொம்ப சாதாரணமான பெண் என்பதால். நான் இங்கேயே இதுபோலவே சமாதியாகி விடுகிறேன். நடைபிணமாய் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கு நான் ஒரு எடுத்துக்காட்டு. ஆனாலும் இந்த நரகத்திலிருந்து வெளியே வரும் துணிச்சல் எனக்கு இல்லை. என் ரத்தத்தோடு பண்பாட்டையும், நரம்புகளோடு பணிவையும், மூளையில் அதைரியத்தையும் நிரப்பி வளர்த்துவிட்டார்கள் யார் என்ன சொல்லுவார்களோ என்ற பயமும், குடும்பத்தை விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டாள் என்று சொல்லுவார்களோ என்ற சந்தேகமும், இருக்கிற கொஞ்ச நஞ்ச ஆதாரத்தையும் கைவிட்டால் இன்னும் ஆபத்து வருமோ என்ற அதைரியமும் என்னை மதிப்பாய் எங்க அண்ணன் வீட்டிலேயே வேலைக்காரியாய் இருந்துவிடச் சொல்கின்றன.”

பாவனா கண்ணிமைக்காமல் சுந்தரியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தலை குனிந்தாள். பாவனாவுக்கு அவகை மிரட்டி அடக்குவதில் விருப்பம் இல்லை. வாதங்களால் எண்ணங்கள் மாறாது என்று எண்ணியிருந்தாள் இத்தனை நாளாய். அனுபவங்களால் கூட மாறாது என்று தெரிந்துவிட்டது.

அவள் நிசப்தமாய்த் திரும்பினாள். “பாவனா!” என்ற அழைப்பைக் கேட்டு நின்றாள். சுந்தரி பின்னாலிருந்து நெருங்கி வந்தாள்.

“உனக்கு நினைவு இருக்கா? அந்த நாளில் படிப்பில் ஆர்வம் காட்ட மாட்டாய். எப்போதும் கனவு கண்டு கொண்டிருப்பாய். நான் எவ்வளவோ தடவை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். எல்லாவற்றையும் எடுத்துச் சொன்ன நான் கேவலம் வாயால் சொன்னதோடு மட்டுமே நின்றுவிட்டேன். நீ இன்றைக்கு என் அண்ணனை ஒரே பார்வையில் சிலையாய் நிற்க வைத்த விதத்தை, எங்க அண்ணியை ஒரே வார்த்தையில் வாயடைக்கச் செய்த விதத்தைப் பார்த்தபோது எனக்குச் சிறு பெண்ணைப் போல் குதித்து கும்மாள மிடவேண்டும் போலிருந்தது. போய் வா பாவனா! உன்னைப் பற்றி லட்சம் பேர் லட்சம் விதமாய் நினைக்கிறார்கள். நினைக்கட்டும். ஆனால் எங்கே போகணும் என்று தெரியாமல் நின்றுவிட்ட என்னைவிட இருட்டில் நடையைத் தொடர்ந்து கொண்டிருக்கும் நீயே மேல். குறைந்த பட்சம் ஒளியைக் காண்போம் என்ற ஆசையாவது எஞ்சியிருக்குமே உனக்கு.”

******

யோசனையிலிருந்து மீண்டாள் பாவனா. சுந்தரியின் நடவடிக்கையை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது. பழுக்கக் காய்ந்தால்தான் இரும்பு வளையும் அதற்கு முன்னால் எவ்வளவு சம்மட்டி அடிகள் விழுந்தாலும பயனில்லை என்று நினைத்துக்கொண்டாள். ஆனாலும் ஏதோ குழப்பம் மனதில். அந்தக் குழப்பமான உணர்வுகளை எப்படி போக்கடித்து கொள்வது என்று தெரியவில்லை. பேப்பரையும் பேனாவையும் எடுத்துக்கொண்டு தன் மனதில் இருந்த எண்ணங்களை ஒரு கதையாய் எழுதினாள்.

ஒரு இளம் பெண்ணுக்கு எத்தனையோ வரன்கள் வந்தாலும் வரதட்சணை காரணாமாக திருமணம் தள்ளிக்கொண்டே போகிறது. வயது இருபதெட்டாகிவிட்டது. இனி அதுதான் கடைசி வரன். இது நடக்காமல் போனால் தங்கைகளுக்கும்

விஷத்தைக் கொடுத்துவிட்டு (அக்காவுக்கு திருமணம் முடியாமல் அவர்களுக்கும் ஆகாது என்பதால்) தானும் செத்துப் போய் விடுவதாய் சொல்கிறார், பழமைவாதியான தந்தை.

மணமகன் வீட்டார் இருபதாயிரம் கேட்கிறார்கள். அந்தப் பெண் யோசித்துவிட்டு, ஒரு முடிவுக்கு வருகிறாள். ரகசியமாக ஒரு ப்ரோக்கரைப் பிடித்து ஐந்து ஆண்களுடன் ஐந்து நாட்கள் கழித்துவிட்டு, அந்தப் பணத்தைச் சம்பாதித்துக்கொண்டு திருமணம் செய்து கொள்கிறாள். அந்த விதமாய்க் குடும்பத்தைக் காப்பாற்றிவிட்டு அந்தற்குப் பிறகு கணவனுடன் சுகமாக இருக்கிறாள்.

இந்தக் கதை நான்கு பத்திரிகைகளிலிருந்து திரும்பி வந்து ஐந்தாவதில் பிரசுரமாயிற்று. புரட்சியைத் தோற்றுவித்தது. நிறையபேர் திட்டித் தீர்த்தார்கள். “கடவுளே! மென்மையான உணர்வுகள் இருக்க வேண்டிய பெண்ணிடம் இந்த விபரீதமான போக்கா?” என்று புலம்பினார்கள். எப்படி இருந்தால் என்ன? பெயர் வருவதற்கு புரட்சிதானே முதல்படி. அதைத் தொடர்ந்து அவள் எழுதிய கதைகள், கட்டுரைகள் வரிசையாக பிரசுரிக்கத் தொடங்கினார்கள். இந்த நேரத்தில்தான் அவள் வாழ்க்கையில் எதிர்பாராத முக்கியமான திருப்பம் ஏற்பட்டது

31

செக்ரடோரியட்டில் முதலமைச்சருக்கு முன்னால் உட்கார்ந்திருந்தாள் பாரதிதேவி. சுமார் நாற்பத்தைந்து நிமிடங்களாக அவர்களுடைய சர்ச்சை நீடித்துக் கொண்டிருந்தது.

"மாநில அரசு எல்லைக்கு உட்பட்டு ஒரு நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்று நினைக்கிறேன். பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு பரிகாரம் காண்ப்தற்கு அது உதவியாய் இருக்கும். அதன் அதிகாரிக்கு ஜட்ஜ் ஹோதா இருக்கும். இதெல்லாம் நான் வரப் போகும் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு செய்யவில்லை. எத்தனையோ அனாதைகளையும், துரதிர்ஷ்டசாலிகளையும் மனதில் வைத்துக்கொண்டு அரசாங்கம் இந்தக் காரியத்தைத் தொடங்கி இருக்கிறது" என்றார் முதலமைச்சர்.

அதில் போய் எதுவும் இல்லை. இருப்பதை வைத்துக்கொண்டு கொஞ்சத்தில் கொஞ்சமாவது பண்ணவேண்டும் என்று நோக்கமுடைய முதலமைச்சர் அவர்.

அவருக்குப் பக்கத்திலேயே கவர்னரும் இருந்தார். இருவரையும் பார்த்துவிட்டு பாரதிதேவி சொன்னாள். "ரொம்ப நல்ல உத்தேசம் சார். பெண்கள் காவல் நிலையத்திற்குப் போவதற்கும், புகார் கொடுப்பதற்கும் பயப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிறுவனம் ஏதாவது இருந்தால் உண்மையிலேயே நன்றாக இருக்கும்."

"அந்த நிறுவனத்திற்கு உங்களைச் சேர்மனாய் போடலாம் என்று இருக்கிறேன் மிசெஸ் பாரதிதேவி."

அவள் தடுமாறினாள். "நானா?" என்றாள்.

“ஆமாம். நீங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.”

“ஜீவனியின் வேலைகளே எனக்கு அதிகமாய் இருக்கு. நீங்கள் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் ஜீவனிக்கு அநியாயம் பண்ணுவது போல் ஆகிவிடும் என்று பயமாய் இருக்கு. திடீரென்று அரசாங்க வேலை என்றால் அதற்குப் பிறகு பைல்களைப் புரட்டிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்க வேண்டியதுதான். நான் இப்படிச் சொல்கிறேன் என்று தவறாக நினைக்காதீங்க.”

“என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இந்தப் பதவிக்கு பெண்களின் பிரச்சனைகளைப் பற்றி நன்றாக தெரிந்தவர்கள் இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோர்நுகிறது.”

“என்னிடம் பாவனா ஒரு பெண் இருக்கிறாள். அவளிடம் ஒருவிதமான துணிச்சலும், கண்ணுக்குத்தெரியாத புத்திசாலித்தனமும் இருக்கு. ரொம்ப கஷ்டன்களில் இருந்து தைரியமாக வெளியே வந்திருக்கிறவள். இந்தப் பதவிக்கு அந்தப் பெண்ணைப் போட்டால் நன்றாக இருக்கும் என்பது என் உத்தேசம்.”

“என்ன வயது இருக்கும்?”

“இருபத்தைந்து.”

முதலமைச்சர் புரியாமல் “இந்தப் பதவிக்கு அத்தனைச் சின்னப் பெண்ணா?’ என்றார்.

“புதிய பிரதமர் வந்ததும் நாடாளுமன்றத்தில் கூட அமைச்சர்களின் சராசரி வயது குறைந்துவிட்டது” என்றார் கவர்னர்.

“அந்தப் பெண் எழுதிய கட்டுரைகள் கூட ப்ரசுரமாய் இருக்கின்றன. இந்த ஆண்டு சாகித்ய அகாடமி பரிசுக்குக்கு அந்தப் புத்தகம் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.”

“என்ன படித்திருக்கிறாள்? அவளுடைய பின்னணி என்ன?”

“பின்னணி என்று எதுவுமே இல்லை. வீட்டை விட்டு வெளியேறிய போது பத்தாம் வகுப்புதான் படித்திருந்தாள். இப்பொழுது பி.ஏ. பைனல் எழுதியிருக்கிறாள்.”

முதலமைச்சர் உடனே பதில் சொல்லவில்லை. அவருக்கு பாரதிதேவியின் பதில் ருசிக்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்து “இதில் நிறைய பிரச்சனைகள் இருக்கு. எந்த அனுபவமும் இல்லாத நபரை இந்த போஸ்டில் போட்டால் நாளைக்கு அசெம்பிளியில் பிரச்சனை எழும்பலாம். உண்மையில் எனக்கு அந்தப் பெண் யார் என்றே தெரியாவிட்டாலும்,, நான் உறவினர்களிடம் அபிமானம் கொண்டு இந்த காரியத்தைப் பண்ணினேன் என்று எதிர்கட்சிக்காரர்கள் பிரசாரம் பண்ணுவார்கள்.”

கட்சியின் காரியதரிசி சிரித்தார். “எதிர்கட்சிக்கு எந்தச் சின்ன விஷயம் கிடைத்தாலும் பெரிசு பண்ணி வெளியே கொண்டு வந்து விடுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.”

“ஏன்?”

‘இதைத் தவிர பிரச்சனையைக் கிளப்புவதற்கு அவர்களுக்கு வேறு பெரிய விஷயம் எதுவும் இல்லை என்பதால்.”

அந்த நகைச்சுவைக்கு எல்லோரும் சிரித்தார்கள், முதலமைச்சரைத் தவிர. வரப்போகும் தேர்தலைப் பற்றி அவருக்கு டென்ஷனாகவே இருந்தது. எதிர்க்கட்சித்தலைவர் சிதம்பர சுவாமி கூட லேசுபட்ட ஆள் இல்லை. ஒரு காலத்தில் முதலமைச்சராக இருந்தவர். ஐந்தாண்டுகளுக்கு முன்னால் தம் கட்சி பெருத்த மேஜாரிட்டியுடன் வெற்றிபெற்ற விஷயம் உண்மைதான். ஆனால் இந்த முறை அவ்வளவு வராமல் போகலாம். எதிர்க்கட்சித் தலைவருக்கு அவகாசம் கிடைத்துவிட்டால், சும்மாயிருக்க மாட்டார். இதுபோன்ற சமயத்தில் அந்தப் பெண்ணை அத்தனை பெரிய போஸ்டில் போடுவதில் அவருக்கு விருப்பம் இல்லை.

“சரி, யோசித்து செய்வோம்” என்றார் சுருக்கமாக. அவருடைய எண்ணம் பாரதிதேவிக்குப் புரிந்துவிட்டது. எழுந்து கைகளைக் கூப்பி “போய் வருகிறேன்” என்றாள்.

“இந்தப் பதவியை நீங்க ஏற்றுக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் நீங்க சொன்னதும் உண்மைதான். இந்த அரசாங்க கும்பலில் மாட்டிக்கொண்டால், இப்போ செய்துக்கொண்டிருக்கிற தொண்டு கூட உங்களால் பண்ண முடியாது.”

அவர் சிரித்துவிட்டு வெளியே வந்துவிட்டாள்.

பாரதிதேவி ஜீவனி காரியாலயத்திற்கு திரும்பிய பொது பிற்பகல் ஒருமணியாகி விட்டிருந்தது. அவள் வந்த போது பாவனா அவளுக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும்

ஒரே எட்டில் அருகில் வந்தாள். பாவனியின் கையில் நாளேடு இருந்தது.

“நான்.... நான்..” உணர்ச்சிப் பெருக்கால் பாவனாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளியே வரவில்லை.

‘என்னவாச்சு பாவனா?”

“நம் பாவனா யூனிவேர்சிட்டியிலேயே முதலாவதாக பாஸ் பண்ணியிருக்கிறாள்.” பக்கத்தில் இருந்த லட்சுமி சொன்னாள்.

“நிஜமாகவா?’ வியந்துபோய் கேட்டாள் பாரதிதேவி. கண்ணீருடன் தலையாட்டிக்கொண்டே, சந்தோஷம் தாங்காமல் கைகளில் முகம் புதைத்துக்கொண்டு அழுதுவிட்டாள் பாவனா.

****

“உன்ன வளையலைக் கொடு” என்றான் ராமநாதன்.

“எதுக்கு?” வியப்புடன் கேட்டாள் சாஹித்தி.

“ஒருநாள் உன் ஞாபகமாய் வளையலை என்னிடம் வைத்துக்கொள்கிறேன்” என்று உரிமையுடன் அவள் கையிலிருந்த வளையலை உருவி எடுத்து ஜெபியில் வைத்துக்கொண்டான்.

அவளுக்கு இதெல்லாம் ஆச்சரியமாகவும், உத்வேகமாகவும் இருந்தது.

அவனே மேலும் சொன்னான் .”நான் ராத்திரி இப்படியே தூங்குகிறேன். இந்த வளையல்களின் ஓசை என் இதயத்திற்கு அருகில் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். என்

வாழ்க்கைக்கு இந்த ஒரு இரவே போதும்." அவன் கண்களில் ஈரம் பளபளத்தது. ஜெயிலிருந்து பேனாவை எடுத்துத் தந்து "என் கையில் எழுத மாட்டாயா?" என்றான்.

"என்ன எழுதுவது?" கேட்டாள் புரியாமல்.

"அதைக்கூட நான்தான் சொல்ல வேண்டுமா? உன் வயதில் பசங்க எப்படி இருக்கணும் தெரியுமா? சின்ன ஹின்ட் கொடுத்தால் போதும், அடுத்தடுத்து பின்னிக்கொண்டு போக வேண்டும்."

அவளுக்கு என்ன எழுதுவது என்று தெரியவில்லை. அவன் உள்ளங்கையில் ராமநாதன் என்று எழுதினாள்.

"இவ்வளவுதானா?" என்றான். "உன் பெயரையும் எழுது."

அவள் எழுதினாள். 'ராமநாதன் – சாஹிதி'

"ஜோடியாய் நம் இருவரின் பெயர்களும் நன்றாக இருக்கு இல்லையா? கடவுள் நம்மைப் போன்ற தனியர்களை இந்த விதமாய்த்தான் ஒன்று சேர்த்துவைப்பார் போலும். நீ மட்டும் அறிமுகம் ஆகாமல் இருந்திருந்தால் படிப்பும் பண்பும் இல்லாத என் மனைவியுடன் சமாளிக்க முடியாமல் இந்நேரம் தற்கொலை செய்து கொண்டிருப்பேன்."

சாஹிதிக்கு ஏனோ துக்கம் பொங்கி வந்தது. தந்தை இறந்து போன பிறகு இந்த அளவுக்கு ஆதரவு கூட அவள் யாரிடமிருந்து பெற்றது இல்லை. இவ்வளவு அன்பாய் அவளுடன் பேசியவர்கள் யாருமில்லை. அவள் கஷ்டங்களைப் புரிந்துகொண்டு ஆறுதல் சொன்னவர்கள் எவரும் இல்லை.

அவன் அவள் கையைத் தன கையில் எடுத்துக் கொண்டு ‘அப்போ நான் எழுத வேண்டாமா?” என்றான்.

“என்ன எழுதுவீங்க?”

அவன் ஒரு வினாடி யோசித்துவிட்டு “கையில் இடம் போதாது” என்று காகிதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு எழுதினான்.

“நாம் முதல் தடவை சந்தித்துக்கொண்ட போது இரண்டு மணிநேரம் பேசிக்கொண்டோம். இரண்டாவது தடவை மூன்று மணிநேரம் பேசிக்கொண்டோம். நம் இருபத்தி இரண்டாவது சந்திப்பிற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.”

“நன்றாக இருக்கு” என்றால் சாஹிதி. ராமநாதன் பெருமையுடன் சிரித்தான். உண்மையில் அது அவன் சொந்தமாக எழுதவில்லை. ஏதோ புத்தகத்தில் படித்தது. அந்த புத்தகத்தை எழுதியது பரத்வாஜ் ஆக இருப்பது யதேச்சையாக நிகழ்ந்தது.

அவள் கைகடியாரத்தைப் பார்த்துகொண்டு “அப்போ நான் கிளம்புகிறேன். அம்மா கொபித்துகொள்வாள்.” என்றாள்.

அவன் அவள் கேசங்களை விரல்களால் அளைந்தான். கூந்தலைக் கலைப்பது, இரு கன்னங்களிலும் தட்டிக் கொடுப்பது, திரும்பத்திரும்ப கைகளைப் பிடித்துக் கொள்வது, இதெல்லாம் அவனுடைய பழக்கங்கள்.

அவள் எழுந்துகொண்டாள். அவன் சிறிய பாக்கெட் ஒன்றை அவளிடம் கொடுத்து “உன்னோடு ஒப்பிட்டால் நான் ரொம்ப ஏழைதான். ஏதோ என்னால் முடிந்தது” என்றான்.

“என்ன இது?’ சங்கடத்துடன் கேட்டாள். இதெல்லாம் ஏதோ போல் இருந்தாலும் மனதில் சந்தோஷம். ஆனால் அது பரிசு கிடைப்பதால் வந்த சந்தோஷம் இல்லை. தன்னையும் ஒருவன் பொருட்படுத்துகிறான் என்ற உணர்வால் வந்த ஆனந்தம் அது.

அவள் கிளம்ப முற்பட்ட போது “நான் இன்னொரு வாக்கியம் எழுதட்டுமா?’ என்று கேட்டான்.

“எழுதுங்கள்.”

“கையில் இடம் போதாது., முதுகுப் பக்கம் எழுதுகிறேன். வீட்டுக்குப் போனதும் கண்ணாடியில் பார்த்துக்கொள்.”

“மைகாட்!” என்று கத்திவிட்டாள். ஐந்து நிமிடங்கள் கெஞ்சிய பிறகு ஒப்புக்கொண்டாள். அவள் திரும்பி நின்று கொண்டாள். ப்ளவுசுக்கு கீழே முதுகுப்புறம் எழுதத் தொடங்கினான்.

அவளுக்கு கிச்சு கிச்சு மூட்டுவது போல் இருந்தது. “இன்னும் எத்தனை நேரம் ஆகும்?”

“முடிந்துவிட்டது.”

இருவரும் கதவிற்கு அருகில் வந்து கொண்டிருந்த போது அவன் அவளைச் சட்டென்று தடுத்து நிறுத்தினான்.

“ஏன்?’ என்றாள் அவள்.

“ஒரு நிமிஷம் இரு. அவன் போகட்டும்.” தெருவில் போய்க் கொண்டிருந்த ஆளைச் சுட்டிக் காட்டினான்.

“யார் அது?”

“ஒரு காலத்தில் எங்க வீட்டுக்கு எதிரே இருந்தான். பாஸ்கர் ராமமூர்த்தி என்று பெயர். பாவம் அவன்! மனைவி யாருடனோ ஓடிவிட்டாள். அவள் குணம் நல்லது இல்லை. அவளைப் பார்த்தால் அந்த மாதிரி என்று நினைக்கவே முடியாது. அவ்வளவு பதிவிசாக இருப்பாள். சரி, நீ போகலாம்.”

சாஹிதி வீட்டுக்கு வந்தாள். இன்னும் முதுகில் பேனா அசைந்து கொண்டிருப்பது போலவே இருந்தது. கதவையெல்லாம் சாத்திவிட்டு, கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். பின்பக்கம் எழுத்துக்கள் வலம் இடமாக தென்பட்டதால் கூட்டிப் படிக்க வேண்டியிருந்தது.

“நம் முதல் சாந்திப்பில் கால்கட்டை விரலைப் பார்த்தேன். இரண்டாவது சந்திப்பில் கணுக்காலைப் பார்த்தேன். நம் ஐந்தாவது சந்திப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.”

அவளுக்கு ஏனோ முன்பு இருந்த சந்தோஷம் இப்பொழுது இல்லை.

****

ராமநாதன் வீட்டு வழியாகப் போன பாஸ்கர் ராமமூர்த்தி அந்த நேரத்தில் கெஸ்ட் ஹவுசுக்குப் போய்க் கொண்டிருந்தான். அன்றைக்கு சாரங்கபாணி பார்ட்டி கொடுக்கப் போகிறான். ராமமூர்த்தி பக்கத்திலேயே இருந்து ஏற்பாடுகளை எல்லாம் செய்து கொண்டிருந்தான்.

தந்தையில் தேர்தல் சம்பந்தப்பட்ட வேலைகளில் மூழிகியிருந்த போதிலும் இரவு வந்துவிட்டால் போதும், ரிலாக்ஸ் செய்து கொள்வது சாரங்கபாணியின் பழக்கம். மிக நெருக்கமான நண்பர்கள் என்று மூன்றுபேர் இருந்தார்கள் அவனுக்கு.

நாலுபேரும் சேர்ந்து பார்ட்டியைத் தொடங்கிய போது மணி ஏழாகிவிட்டது . “இவ்வளவு சீக்கிரமாகவா?” என்றார்கள் யாரோ.

“ஆமாம். மறுபடியும் நாளை காலையில் வேலைகள் இருக்கு. தேர்தல் நெருங்கிவிட்டது இல்லையா?”

‘எங்களுக்குக் கூட பார்ட்டி டிக்கெட் வாங்கித் தரக்கூடாதா? எம்.எல்.ஏ. ஆகிவிடுவோம்.” சிரித்துக் கொண்டே கேட்டான் ஒரு நண்பன்.

‘முதலில் எங்க அப்பா ஜெயிக்கட்டும்.”

“கண்டிப்பாய் ஜெயிப்பார். வேண்டுமானால் லட்ச ரூபாய் பந்தயம்.”

“மாஜி முதலமைச்சர் சிதம்பர சுவாமி ஜெயிக்காவிட்டால் வேறு யார் ஜெயிக்கப் போகிறார்கள்?”

‘விட்டுத் தள்ளுங்கப்பா. காலையில் கண்ணைத் திறந்தது முதல் அதே பேச்சு. இப்பவும் அதே டாபிக் எதுக்கு?” என்றான் சாரங்கபாணி.

‘வேறு பேச்சு பேசுவதற்கு இங்கே இன்னொரு ஜாதி இல்லையே? எல்லாமே ஆண்கள்தான்.”

“ஆமாம். ரொம்ப நாளாகிவிட்டது. இன்னிக்கி செலபரேட் பண்ணியாகணும்.”

“ராணி கம்பெனிக்கு ஆள் அனுப்புவோமா? ஜெயலக்ஷ்மி கம்பெனி நல்லா இருக்குமா?”

“அதெல்லாம் பழைய சரக்குடா. யாராவது பிரெஷ் இருந்தால் தவிர பிரயோஜனம் இல்லை.”

“இன்னிக்கு மட்டும் புது சரக்கு கிடைத்துவிட்டால் உங்க அப்பா தேர்தலில் ஜெயித்துவிட்டாற் போல்தான். அதையே நல்ல சகுனம் என்று வைத்துக்கொள்.”

சாரங்கபாணி யோசனையில் ஆழ்ந்தான். கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு “ஒரு பெண் இருக்கிறாள். ஆனால் பயந்துவிடுவாளோ என்றுதான்...” என்றான்.

எல்லோரிடமும் ஆர்வம் பெருகியது. “யாரது?” என்று சூழ்ந்துகொண்டார்கள்.

“ஆறு மாதங்களுக்கு முன்னால் அறிமுகம் ஆனாள். அம்மா அப்பா இல்லை. ஆசிரமத்தில் தங்கியிருக்கிறாள்” என்று பாஸ்கர் ராமமூர்த்தியை நோக்கித் திரும்பி “உனக்கு ஜீவனி பெண்கள் ஹாஸ்டலைத் தெரியுமா?’ என்று கேட்டான்.

ராமமூர்த்தி தெரியும் என்பதுபோல் தலையை அசைத்தான்.

“அந்த ஹாஸ்டலில் ஹரிணி என்று ஒரு பெண் இருக்கிறாள். எட்டுமணி வரைக்கும் விசிட்டர்ஸ் போகலாம். நான் இந்த மாதிரி இங்கே இருக்கிறேன் என்று சொல்லு. வருவாள். இவ்வளவு பேர் இருப்பதைச் சொல்லிவிடாதே. பயந்துவிடுவாள். ‘ஏதோ வேலை இருக்கு. ராத்த்ரி வரமாட்டேன்’ என்று சொல்லிவிட்டு வரச் சொல்லு. அவளுக்குப் பழக்கம்தான்.”

பாஸ்கர் ராமமூர்த்தி கிளம்பினான்.

“அவ்வளவு லூஸ் கேரக்டரா?” கேட்டான் ஒருவன்.

“இல்லை. கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி நச்சரிக்கிறாள்.”

******

பாஸ்கர் ராமமூர்த்தி தயங்கியபடியே ஜீவனி ஹாஸ்டலுக்கு வந்தான். பாவனா தென்பட்டால் என்ன சொல்லுவது என்பது அவள் சங்கடம்.

வாட்ச்மேனிடம் ஹரிணி வேண்டும் என்றான். இரண்டு நிமிடங்களில் அந்தப் பெண் வந்தாள்.

“உங்களை சாரங்கபாணி அழைத்து வரச் சொன்னார்” என்றான்.

“இந்த நேரத்திலா?” என்றாள். ஓரிரு முறை பாஸ்கர் ராமமூர்த்தியைப் பார்த்திருக்கிறாள் அவள்.

“ஆமாம். ஹாஸ்டலில் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு வரச் சொன்னார். கல்யாண விஷயமாய் பேசணுமாம்.”

அந்தப் பெண் உள்ளே போய் தயாராகி திரும்பி வந்தாள். இருவரும் கேட்டைத் தாண்டிக் கொண்டிருந்த போது பாவனா ரிக்ஷாவில் வந்து இறங்கினாள். இருவரையும் வியப்புடன் பார்த்தாள். ‘எங்கே போகிறாய்?’ என்று ஹரிணியிடம் கேட்போமா என்று நினைத்தவள் நன்றாக இருக்காது என்று விட்டுவிட்டாள். ராமமூர்த்தி முகத்தை மறைத்துக்கொண்டான்.

அவர்கள் இருவரும் போய்விட்டார்கள். இது நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு பாவனா தோட்டத்தில் உட்கார்ந்து, எதிரே காட்சியளித்த சிவப்பு ரோஜா மொட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மூன்று மாதங்களாய் அந்தச் செடியைப் பார்த்துக்கொண்டே வந்திருக்கிறாள் அவள். அந்தச் சின்ன பதியனைக் கொண்டு வந்து நட்டிருந்தாள் அவள். அது ஒவ்வொரு இலையாய்த் துளிர்த்து, மொட்டுவிடுவதற்கு மூன்று மாதங்கள் ஆயிற்று. பதினைந்து நாட்களுக்கு முன்னால் துளிர் இலைகளுக்கு இடையே மொட்டு விட்டிருந்தது. இன்றைக்கு இதழ்கள் விரியத் தயாராக இருந்தது. ஒரே ஒரு நாள் போதும், முழுவதுமாய் மலருவதற்கு.

இந்த மொட்டுக்கும், தன்னுடைய வாழ்க்கைக்கும் ஒற்றுமை இருக்கிறதோ. திருமணம் ஆகும் வரையில் நாட்கள் எவ்வளவு சலனம் இன்றி கழிந்துக் கொண்டிருந்தன? திருமணம் மற்றும் பிரிவு எல்லாமே ஒரு புயல் வந்து ஓய்ந்தாற்போல் எஞ்சி நின்றுவிட்டது. பி.ஏ. படிப்பு முடிந்துவிட்டது. எம்.ஏ.க்கு தயாராகிக் கொண்டிருக்கிறாள். இருபது ஆண்டுகள் வாழ்ந்த வாழ்க்கை தராத திருப்தியை, இரண்டு ஆண்டுகள் திருமண வாழ்க்கையில் பெற முடியாத திருப்தியை இந்த இரண்டு ஆண்டுகளில் பெற்றுவிட்டாள்.

ஒருபக்கம் வேலை, படிப்பு, இன்னொரு பக்கம் ஜீவனிக்காக பாடுபடுவது. ஓய்வுக்கு நேரம் கிடைக்காமல் போனாலும் ஆத்ம திருப்தியைத் தந்து கொண்டிருந்தன. அவள் யோசனையில் மூழ்கியிருந்த போதே.....

“பாவனா!’ என்று கலவரத்துடன் வந்தாள் பாரதிதேவி.

‘என்ன மேடம்?”

“ஹாஸ்டலிலிருந்து செய்தி வந்தது. ஹரிணி தூக்கமாத்திரையை சாப்பிட்டு விட்டாளாம். ஆபத்தான நிலையில் இருக்கிறாளாம். என்ன செய்வது?” கலங்கிப் போனவளாய் கேட்டாள்.

“நீங்க ஹாஸ்டலுக்குப் போங்க. நான் டாக்டருக்குப் போன் பண்ணி என்ன செய்யச் சொல்கிறார் என்று எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு வருகிறேன்.”

பாரதிதேவிக்கு இதனால்தான் பாவனா மீது பிரியம் அதிகம். பதற்றப்பட மாட்டாள். எந்த நிலையிலும் என்ன பண்ண வேண்டும் என்பதை நிதானமாக யோசித்து செயல்படுவாள்.

“சரி, சீக்கிரமாய் வா.” அவள் போய்விட்டாள்.

பாவனா டாக்டரைச் சந்தித்து வேண்டியதை எல்லாம் வாங்கிக்கொண்டு ஹாஸ்டலுக்கு வந்து சேர்ந்தாள்.

அந்தப் பெண்ணின் வயிற்றை சுத்தம் செய்துவிட்டு, ஆபத்து நீங்கிவிட்டதாய் டாக்டர் சொல்லும் வரையில் யாருக்குமே மனம் ஒரு நிலையில் இல்லை. இரவு முழுவது பாவனா அவள் அருகிலேயே உட்கார்ந்து இருந்தாள்.

ஒரு வாரமாகவே ஹரிணியிடம் ஏதோ மாறுதலைக் கவனித்து வந்தாள் அவள். எதுவுமே சொல்ல மாட்டாள். அழுதுகொண்டே இருந்தாள். கொஞ்சம் சமாதானம் அடைந்த பிறகு கேட்டுத் தெரிந்துகொள்வோம் என்று நினைத்திருந்தாள். அதற்குள் இந்தக் காரியத்தைச் செய்து விட்டாள் அவள்.

தற்கொலை செய்து கொள்வதற்கு எத்தனை துணிச்சல் வேண்டும்? அவ்வளவு துணிச்சல் வர வேண்டும் என்றால் எப்படிப் பட்ட நிலைமை எதிர்பட்டிருக்க வேண்டும்? அந்தப் பெண்ணின் முகத்தில் புனிதம் இருந்தது. அப்பாவித்தனம் நிரம்பியிருந்தது.

காலையில் ஹரிணிக்கு நினைவு திரும்பியதுமே எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகுதான் பாவனா

வெளியே வந்தாள். முதலில் ஹரிணி எதுவுமே சொல்ல மறுத்தாள். எத்தனையோ விதமாக தேற்றிய பிறகு வாயைத் திறந்தாள்.

எல்லாவற்றையும் கேட்ட பிறகு பாவனா சிலையாகி விட்டாள். இப்படிப்பட்டவை கூட நிகழும் என்று அவள் கனவிலும் ஊகித்திருக்கவில்லை. சுமார் ஒரு மணி நேரம் ஹரிணிக்கு தைரியம் சொன்னாள். மறுபடியும் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யக் கூடாது என்று வாக்குறுதி பெற்றுக் கொண்டாள். பாவனா பல விதமாக எடுத்துச் சொன்ன பிறகு ஹரிணி பழைய மனுஷி ஆனாள்.

“நாம் இதை எதிர்த்து நிற்க வேண்டும் ஹரிணி! இந்த போராட்டத்தில் நாம் தோற்றுப் போனாலும் நஷ்டம் இல்லை. உயிரை எடுத்துக் கொள்வதை விட இது ஒன்றும் பெரிய தோல்வி இல்லை. கடைசி மூச்சு இருக்கும் வரையில் போராடு. குறைந்த பட்சம் ஆத்ம திருப்தியாவது எஞ்சியிருக்கும்.”

ஹரிணி தலையை அசைத்தாள். அவளுக்கு இப்பொழுது புதிய தைரியம் வந்துவிட்டது.

32

சாரங்கபாணிக்கு இருபத்தைந்து வயது இருக்கும்அழகாய் ., கவர்ச்சியான தோற்றத்துடன் இருப்பான்பணத்தால் . உண்டாகும் கர்வம் கண்களில் தேன்பட்டுக் கொண்டிருந்தது . வந்தது புதிய நபர்தான் என்றாலும் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான்.

“என் பெயர் பாவனா .ஹரிணி விஷயமாய்ப் பேச வந்திருக்கிறேன்.”

நெற்றியில் வந்து விழுந்த கேசத்தை அலட்சியமாய் ஒதுக்கிக் கொண்டே “எந்த ஹரிணி?” என்று கேட்டான்.

“உங்களுக்கு எத்தனை ஹரிணிக்களை தெரியும்? தெரிந்த அத்தனை ஹரிணிக்களையும் நம்ப வைத்து ஏமாற்றி இருக்கீங்களா?

“நீங்க என்ன பேசுறீங்க என்று எனக்கு புரியவில்லைஎனக்கு . .எந்த ஹரிணியையும் தெரியாது”

“இந்தப் பெண்தான்.” போட்டோவை எடுத்துக் காட்டினாள் பாவனா.

“தெரியாது, இவளை எங்கேயுமே பார்த்தது கிடையாது.” அவன் கண்களில் பயம் தெரிந்ததுநிலையாய் ஒரு இடத்தை பார்க்க . .முடியாமல் இருந்தான்

“அப்படியா? உங்களுக்கோ, உங்க நண்பர்களுக்கோ இவளைத் தெரியாதுஅப்படித்தானே .?”

“தெரியாது.தெரியாது ..” எழுந்து உள்ளே போய் விட்டான்.

****

“வணக்கம்பாரதிதேவி அனுப்பியிருக்கிறாள் என்றால் .வாம்மா . ஏதாவது தொண்டு காரியமாக இருக்கும்ஆளும் கட்சியிடம் . அனுப்பாமல் என்னைப் போன்ற எதிர்க்கட்சிகாரனிடம் அனுப்பியிருக்கிறாள் என்றால் ஒருக்கால் நிதி உதவி சரியாக கிடைக்க வில்லை என்று நினைக்கிறேன்என்ன விஷயம் . சொல்லு?” என்றார் சிதம்பர சுவாமி.

பாவனாவுக்கு அருவருப்பாய் இருந்ததுஎன்ன . விஷயம் என்று தெரிந்து கொள்ளாமலேயே அரசியல் பூச்சு பூசுகிறார்.

“ஹரிணி என்ற பெண்ணைப் பற்றிப் பேச வந்திருக்கிறேன் . அவள் உங்க மகனின் சிநேகிதிவேலை வேண்டும் என்று வந்த . போது நீங்க சிபாரிசு செய்து அவளுக்கு வேலை வாங்கிக் கொடுத்திருக்கீங்க.”

“வாங்கிக் கொடுத்திருப்பேனாய் இருக்கும்அவ்வப்பொழுது யார் . யாரையோ அழைத்து வருவான்அவனுக் .கு இளகிய மனசு . முடிந்த வரையில் உதவி செய்து கொண்டே இருப்பான்அதுசரி .., இப்போ என்ன நடந்தது? வேலையில் ஏதாவது பிரச்சனையா? நிரந்தரம் ஆக்கவில்லையா?”

“அதெல்லாம் இல்லை .உங்க மகன் அவளை ஏமாற்றிவிட்டான் . அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி உங்க மகனிடம் சொலுங்கள்.”

“ஏமாற்றுவதா? அவன் அப்படிப்பட்ட ஆள் இல்லையே? அவனுக்கு முழு சுதந்திரம் கொடுத்திருக்கிறேன், கல்யாண விஷயத்தில்அவனுக்குப் பிடித்த பெண் யாராக . இருந்தாலும் தைரியமாக என்னிடம் வந்து சொல்லுவான்.”

“அவனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் உத்தேசம் இல்லை.”

“பாரும்மாமுன்பின் தெரியாத நீ வந்து ஏதேதோ கதையை . ஜோடித்து சொல்வதை நம்பி கல்யாணத்தைப் பண்ணுவதா? என்ன விஷயம் என்று என் மகனிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்விஷயம் கேட்டு .இரண்டு நாள் கழித்து வா . .சொல்கிறேன்”

“இல்லைஇப்பொழுதே உங்க மகனைக் கூப்பிட்டுக் . கேளுங்கள.”

‘அவன் வீட்டில் இல்லை.”

“எங்கே போனான் என்று தெரியாதா?”

“எனக்கு எப்படி தெரியும்? எந்த காரியமாய் போயிருக்கிறானோ?”

“ஆமாம்உங்க மகன் என்ன .உங்களுக்கு ஒன்றுமே தெரியாது . பண்ணுகிறான்? எங்கே போகிறான்? அவன் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள்? இதையெல்லாம் தெரிந்துகொள்ள நேரம் இல்லை உங்களுக்குஒரு பெண்ணைக் காதலிப்பது போல் . நடித்து ஏமாற்றிவிட்டான் உங்க மகன்ஒரு .அது மட்டுமில்லை . நாள் கெஸ்ட் ஹவுஸுக்கு அழைக்கச் செய்து தன் நண்பர்களுக்கு பரிசாக தந்திருக்கிறான்அப்பாவியாய் . வந்த அந்தப் பெண்ணை நாலு பேருமாய்ச் சேர்ந்து மிருகத்தை விட கேவலமாய் அனுபவித்திருக்காங்ககாதலனே இந்த விதமாய் ஏமாற்றி . விட்டதால் உலகத்தையே நம்ப முடியாமல் தற்கொலையை நாடிவிட்டாள் அந்தப் பெண்இதற்கு உங்க மகன்தான் . பதில் சொல்ல வேண்டும்.”

அவளுடைய ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டு சிதம்பர சுவாமியின் முகம் கோபத்தால் சிவந்தது.

“வார்த்தைகளை அளந்து பேசும்மாபாரதிதேவி . அனுப்பியிருக்கிறாள் என்று மரியாதை கொடுத்து உள்ளே வர அனுமதித்தேன்திரும்பவும் வரத் .இனி நீ போகலாம் . தேவையில்லை.” கோபமாய்ச் சொன்னார்.

“வர வேண்டியதில்லை என்று நீங்க சொன்னாலும் நான் இதை விடப் போவதில்லைஇந்த . ரகளை இத்துடன் நின்று போய் விடும் என்று நினைக்காதீங்கஇது ஆரம்பம் . மட்டும்தான்” என்று எழுந்து வந்துவிட்டாள் பாவனா.

சிதம்பர சுவாமி யோசனையில் ஆழ்ந்தார்தேர்தலுக்கு முன்னால் . இந்த ரகளை கொஞ்சம் தலைவலிதான்ஆனால் இதற்கு எந்த . அந்தப் பெண் .சாட்சியமும் இல்லை தானாகவே கெஸ்ட் ஹவுஸுக்கு வந்திருக்கிறாள்அவள் வந்ததற்கு சாட்சிகள் . இல்லைசாரங்கபாணியை ., அவன் நபர்களை வாயைத் திறக்க

வேண்டாம் என்று சொல்லிவிட்டால் போதும்அதற்கு மேல் . .யாரும் எதுவும் பண்ண முடியாது அப்போழுதோ நடந்த கற்பழிப்பை இப்பொழுது நிரூபிப்பது கஷ்டம்முதலமைச்சராகப் . போகும் தனக்கு மருமகளாய் ஆக வேண்டும் என்று திட்டம் போட்டு செய்த சதி இது என்று சொல்லி விடலாம். இந்த விதமாய் யோசித்து அவர் அதற்கு மேல் இந்த விஷயத்தைப் பற்றி கவலைப் படுவதை விட்டுவிட்டார். சாரங்கபாணியின் கும்பலில் பாஸ்கர் ராமமூர்த்தியும் இருக்கிறான் என்றும், அவனை எந்த இடத்தில் எப்படித் தட்டினால் விஷயம் வெளியே வரும் என்று அவனுடைய மாஜி மனைவியான பாவனாவுக்கு தெரிந்தாற்போல் வேறு யாருக்குமே தெரியாது என்ற விஷயம் சிதம்பர சுவாமிக்கு தெரிந்திருக்கவில்லை.

ஹரிணியைச் சம்மதிக்கச் செய்வதற்கு பாவனாவுக்கு இரண்டு நாட்கள் ஆயிற்று. அதற்காக எந்த விதமாகவும் வற்புறுத்தவும் இல்லை .“ஹரிணிஇப்போ உனக்கு ! இரண்டே வழிகள்தான் இருக்குநடந்ததை எல்லாம் மறந்துவிட்டு உங்க ஊருக்குப் . போய் ஏதோ ஒரு வரனைப் பார்த்து பண்ணிக் கொள்வதுஅல்லது . உனக்கு அநியாயம் செய்தவர்களை ஒரு கை பார்த்து விடுவது . இரண்டில் ஏதோ ஒன்றை தீர்மானித்துக்கொள்.”

“அவர்களை ஒரு கை பார்த்துவிடணும்’ என்றாள் ஹரிணி.

“இன்னும் கொஞ்ச நேரம் எடுத்துக் கொண்டு யோசித்துப் பாரு . ஒரு முறை இந்த விஷயம் வெளிப்பட்டு விட்டது என்றால், காட்டுத் தீயாய் பரவி விடும்உன் . முன்னாடி எல்லோரும் இரக்கம் காட்டினாலும், உனக்குப் பின்னால் காதைக் கடிப்பார்கள்நாலு . பேர் சேர்ந்து கற்பழித்த போது நீ எந்த நிலைமையில் இருந்திருப்பாய் என்று கற்பனை செய்து பார்ப்பார்கள் . இன்றைக்கு நீ எடுத்துக் கொள்ளும் முடிவை நினைத்து நாளைக்கு

வருத்தப் படக் கூடாது.”

“படமாட்டேன்.” ஹரிணி பாவனாவைப் பார்த்து மெல்லச் சிரித்தாள்அவள் குரலில் . உறுதி தெரிந்தது .“அன்றைக்கு டாக்டர்கள் என்னைக் காப்பாற்றி இருக்காவிட்டால், இதற்குள் மேல் உலகத்திற்குப் போயிருப்பேன்யோசித்துப் . பார்க்காமல் நான் எடுத்துக்கொண்ட முடிவு அதுஅந்த முடிவு அல்லாமல் . வேறு எதுவாக இருந்தாலும் நன்றாகத்தான் இருக்கும்உயிரை . மாய்த்துக் கொள்வதற்கு துணிந்து விட்ட நான் அதைக் காட்டிலும் பெரிதாய் இழப்பதற்கு வேறு என்ன இருக்கு? இதில் தோற்று போனாலும் பரவாயில்லை.முயற்சி செய்து பார்ப்போம் .” பாவனா திருப்தியுடன் தலையை அசைத்தாள்அன்று . மாலையில் அவள் பெண்கள் நலத்துறையின் டைரக்டரைச் சந்தித்தாள்பெண்கள் உரிமை பாதுகாப்பு . சங்கத்திற்கும் அவள்தான் கௌரவ காரியதரிசிஅவள் பாவனாவைப் . பார்த்ததுமே அடையாளம் கண்டுகொண்டாள்இருவரும் ஒரே . .ஊரைச் சேர்ந்தவர்கள்

“நீ விஸ்வம் வாத்தியாரின் மகள்தானே?”

“ஆமாம் மேடம்.”

“வாத்தியார் சௌக்கியமா? என்ன இப்படி வந்திருக்கிறாய்?”

‘அப்பா நலம்தான்உங்களுக்கு சங்கரன் வாத்தியாரை தெரியும் . இல்லையா?”

“தெரியும்என் மகளுக்குப் பத்து வருஷம் அவர்தான் அந்த ஊரில் . .வீணைக் கற்றுக் கொடுத்தார்”

“அவருடைய மகள் ஹரிணி விஷயமாய் பேச வந்திருக்கிறேன்.”

“ஹரிணியை எனக்கு நன்றாகத் தெரியும்ரொம்ப .நல்ல பெண் .

அவளுக்கு என்ன பிரச்சனை .சாது?”

“அவளை ஒருத்தன் ஏமாற்றிவிட்டான்கல்யாணம் . பண்ணிக்கொள்ளச் சொல்லி கேட்கப் போனால் ஏளனம் செய்து அனுப்பி விட்டான்தான் அனுபவித்ததோடு அல்லாமல் . நண்பர்களைக் கொண்டு கற்பழிக்கச் செய்துவிட்டான் அந்தப் . பெண் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்திருக்கிறாள்.”

“மை காட்இவ்வளவு நடந்ததா !? இதெல்லாம் அவள் அப்பாவுக்குத் தெரியுமா?”

‘தெரியாதுஹரிணி .நான் அந்தப் பையனிடம் போய் கேட்டேன் . யார் என்றே தெரியாது என்று டபாய்த்தான்அவன் எழுதிய . ஆனால் கையெழுத .கடிதங்கள் இருக்கு ◌ை நிரூபிக்க வேண்டும் .அவன் தந்தை ரொம்ப செல்வாக்கு இருப்பவர் . போலீசார் இந்த விஷயத்தில் எவ்வளவு தூரம் உதவி செய்வார்கள் என்று சொல்ல முடியாதுநான் . அவன் தந்தையையும் சந்தித்தேன்உங்களால் .திட்டி அனுப்பி விட்டார் . அவன் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா?”

“இந்த விஷயத்தை அத்தனை சுலபமாய் விட்டு விடக்கூடாது . சொல்லு, யாரும்மா அந்தக் கயவன்?”

“உங்க தம்பி சாரங்கபாணியே தான்.”

******

அலுவலகத்தில் வேலை பண்ணிக்கொண்டிருந்த பாஸ்கர் ராமமூர்த்தி அன்று ரொம்ப உற்சாகத்துடன் இருந்தான் . சாரங்கபாணி அவன் நண்பனாகி விட்டதை அறிந்து அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளச் சொல்லி ஓரிருவர் யோசனை வழங்கி இருந்தார்கள்.

“மாஜி முதலமைச்சரின் மகன் நண்பனாகி விட்ட பிறகு இன்னும்

இந்த வேலை எதுக்கு? ஏதாவது ஏஜென்சியாவது, லைசென்சாவது கிடைக்கும்படி செய்துகொள்" என்றார்கள். ஒருநாள் துணிந்து சாரங்கபாணியிடம் அவன் கேட்டுவிட்டான் . சாரங்கபாணி உல்லாசமாய் சிரித்துவிட்டு, 'அதற்கென்ன வந்தது? அப்படியே செய்து விடலாம்" என்றான். ராமமூர்த்தியின் சந்தோஷத்திற்கு அதுதான் காரணம்அந்த . சந்தோஷத்தில் அவன் வேலை செய்து கொண்டிருந்த போது, விசிட்டர்களின் அறையில் யாரோ வந்து காத்துக் கொண்டிருப்பதாய் ப்யூன் வந்து சொன்னான்ராமமூர்த்தி . .எழுந்து போனான் அங்கே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருந்தார்பாஸ்கர் . ராமமூர்த்தியின் இதயமே நழுவி விட்டாற்போல் இருந்ததுமுகமெல்லாம் . வியர்த்துக் கொட்டியது. "நீங்கதானா ராமமூர்த்தி!" கேட்டார் அவர். தொண்டை உலர, வார்த்தைகள் வெளிவர முடியாமல் அவன் தலையை அசைத்தான்.
"இப்படியே கேண்டீன் வரைக்கும் போய்ப் பேசுவோமா?" கேட்டார் இன்ஸ்பெக்டர். கசாப்புக் கடைக்காரனைப் பின் தொடரும் ஆட்டைப் போல் அவரைப் பின் தொடர்ந்து போனான்.
கேண்டீனில் போய் உட்கார்ந்த பிறகு சொன்னார் ."ஹரிணி என்ற பெண் உங்க எல்லோர் மீதும் புகார் கொடுத்திருக்கிறாள், கற்பழித்து விட்டதாக."
ராமமூர்த்தி மேஜையின் விளிம்பை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.அவன் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன .
"எனக்கு... எனக்கு ஒன்றும் தெரியாது" என்றான்.
"அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு போனது நீங்கதானே?"

ராமமூர்த்திக்கு நினைவு தப்பிவிடும் போல் இருந்தது . சாரங்கபாணி பக்கத்தில் இருந்தால் நன்றாக இருக்கும் என்று .தோன்றியது

”மிஸ்டர்.நீங்க பதில் சொல்லித்தான் ஆகணும் !”

“எனக்கு எதுவும் தெரியாதுஹரிணி யாரு என்றுகூட எனக்குத் . .தெரியாது”

“அவளுடைய ஹாஸ்டலுக்கு நீங்க போகவில்லையா?”

“ஹரிணி யார் என்றே எனக்குத் தெரியாது.”

‘என்னுடைய கேள்வி அது இல்லை.”

“எனக்கு எதுவும் தெரியாது.”

இன்ஸ்பெக்டர் அவனைக் கூர்ந்து பார்த்தார்மெல்ல அவரிடம் . .தீவிரம் மறைந்து முறுவல் இடம் பெற்றது

“மிஸ்டர் .நீ ரொம்ப பயந்தாங்கொள்ளியாய் இருக்கிறாய் ! இப்படிப்பட்ட விஷயங்கள் உனக்கு புதிது என்று நினைக்கிறேன்.”

“எனக்கு எதுவும் தெரியாது.”

“எனக்கு எல்லாமே தெரியும்அந்தப் பெண் எல்லோருடைய . பெயருடன் சேர்த்து அத்தனை விவரங்களையும் புகாரில் எழுதிக் கொடுத்திருக்கிறாள்எஞ்சிய . இருவரும் பெரிய பெரிய பதவியில் இருப்பவர்கள்நீதான் அனாவசியமாய் இதில் . சிக்கிக் கொண்டு விட்டாய்” என்று நிறுத்திவிட்டு, கொஞ்ச நேரம் கழித்து மெதுவாய்ச் சொன்னார் .“ஒரு பத்தாயிரம் கொடு.”

ராமமூர்த்தி குழப்பத்துடன் நிமிர்ந்து பார்த்தான்இன்ஸ்பெக்டர் . மெதுவாய் தலையை அசைத்தார் .“ஆமாம்நான் ஒருத்தன்தான் . உன்னை இந்தக் கேசிலிருந்து தப்பிக்க வைக்க முடியும் . எப்பொழுதோ பத்து நாட்களுக்கு முன்னால் நடந்த கற்பழிப்பு

இது.அந்தப் பெண் இப்போது ரிப்போர்ட் கொடுத்திருக்கிறாள் . ஆனாலும் கேசு என்றால் கேசுதானே? மீதி எல்லோரும் தப்பித்துக் கொண்டு விடுவார்கள்அந்தப் பெண்ணுக்காக . ஹ ாஸ்டலுக்குப் போனவன் நீதான்முதலில் . உன்னை அரெஸ்ட் பண்ணனும்மீதியை கோர்ட் முடிவு செய்யும் என்று . வைத்துக்கொள்ஒரு பெண்ணை ராத்திரி வேளையில் . அழைத்துக் கொண்டு போனது தவறுதானே? லாயர், கோர்ட் என்று நிறைய செலவு ஆகும்இதெல்லாம் எதுக்கு .? ஒரு பத்தாயிரம் கொடு கேசு .இல்லை என்று எழுதிக்கொண்டு பைலை முடித்து விடுகிறேன்" என்று இன்ஸ்பெக்டர் எழுந்து கொண்டார்.

"நாளைக்கு வருகிறேன்பை தி பை .பணத்தை ரெடி பண்ணி வை . .இந்த விஷயம் இரண்டாம் பேருக்குத் தெரிய வேண்டாம்" என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்ராமமூர்த்தி .

அப்படியேசிலையாய் நின்று விட்டான்அதற்குப் பிறகு . விடுவிடென்று போனை அணுகி சுமார் இரு மணிநேரம் சாரங்கபாணிக்காக முயற்சி பண்ணினான்தேர்தல் ரகளையில் . அவன் கிடைக்கவில்லைஇனி லாபம் இல்லை என்று நேராகவே . ஊரில் இல்லை .போனான் என்றார்கள்நேரமாக ஆக பதற்றம் . .அதிகரித்தது

இரவு எட்டு மணியாவதற்குள் நடைபிணமாகிவிட்டான்அந்த . நிலையில் வீட்டை அடைந்தவன் உள்ளே நுழைந்ததுமே வசந்தியின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது தீர்த்துவிட்டான்சுமார் அரை மணி நேரம் அழுத பிறகு . விஷயத்தையெல்லாம் சொன்னான்.

"நீ தான் ஒண்ணும் பண்ணவில்லையே? இதில் உன் தவறு என்ன இருக்கு?" என்றாள்.

"எங்க பெரியப்பாவின் மகனுடைய ஷட்டகன் டூடவுன் போலீஸ்

ஸ்டேஷனில் ஹெட்கானிஸ்டேபிள்அவனைச் சந்தித்தால் . என்ன?" என்றான்.

"கோர்ட்டுக்குப் போனால் வேலையிலிருந்து சஸ்பென்ட் பண்ணி விடுவார்களோ என்னவோ?" என்றாள் வசந்தி.

"இல்லை சமீபத்தில் .எங்க ஆபீஸ் குமாஸ்தாவை நிலத் தகராறு விஷயத்தில் கோர்ட்டுக்குக் கூப்பிட்டார்கள்அப்போ . சஸ்பென்ட் பண்ணவில்லை" என்றான் தன்னையே தான் தேற்றிக் கொள்வதுபோல்.

"போகட்டும்பத்து நாட்களுக்கு எங்கேயாவது போய்விட்டு . வந்தால் கேசை தள்ளி விடுவார்கள் இல்லையா?" என்றாள் அவள்.

"போதுமேக்குப் போய்விடும் .ஐ .பி.அப்போ கேஸ் சி ." என்றான்.

மிகச் சாதாரணமாக நடக்கும் விஷயம் இதுஆபத்து என்றால் . என்னவென்றே தெரியாதவர்களுக்கு சிறிய தொல்லை வந்தாலும் வெலவெலத்துப் போய்விடுவார்கள். தூக்கு மேடை வரையிலும் அவர்களுடைய எண்ணங்கள் போய் விடும்பக்கத்தி .ல் இருப்பவர்கள் தமக்குத் தெரிந்த எல்லையில் பால்கிவாலா, ஜெத்மலானி லெவலில் அறிவுரை வழங்கிக் கொண்டிருப்பார்கள். "ஒண்ணும் ஆகாது" என்று தமக்குத் தாமே தைரியம் சொல்லிக் கொள்வார்கள்.அடுத்த நிமிடமே தளர்ந்து போய் விடுவார்கள் . அன்று இரவு முழுவதும் வசந்தியும், ராமமூர்த்தியும் பேசிப் பேசி களைத்துப் போனார்கள்.

"சாரங்கபாணியைப் போய் சந்தித்துப் பார்அவன்தானே . இத்தனையும் பண்ணியது"

"அவன் ஊரில் இல்லை."

“வரும் வரையில் காத்திருக்கச் சொல்லு.”

“இன்ஸ்பெக்டர் பத்தாயிரம் கேட்கிறார்நாளைக்கு ஆபீசுக்கு . வந்து அரெஸ்ட் பண்ணிவிட்டால்?” வசந்தி பதில் பேசவில்லை. சின்ன சத்தம் கேட்டாலும் மிரண்டுப் போகத் தொடங்கினான் ராமமூர்த்திஎட்டு மணியளவில் ஒரு முடிவுக்கு வந்தவனாய் . .எழுந்திருந்தான்

“ஆபீசுக்கா? அங்கே போனால் இன்ஸ்பெக்டர் வருவாரோ என்னவோ?” என்றாள்

“வரணும் என்று நினைத்தால் நம் வீட்டு அட்ரெஸ் கூடத் தெரியும்இங்கே . இருந்தால் கூட வந்து அரெஸ்ட் பண்ணுவேன் என்று சொன்னார் இச்ன்பெக்ட்ர்நான் . நன்றாக யோசித்துப் பார்த்துவிட்டேன்இதையெல்லாம் அந்த ராட்சசி பாவனாதான் . கூட இருந்து செய்ய வைத்திருக்கிறாள்அன்று இரவு ஹாஸ்டல் . கேட் வாசலில் என்னை ஒரு மாதிரியாக பார்த்தாள் . இன்ஸ்பெக்டர் நல்லவராக இருந்ததால் முன்னாடியே வந்து சொல்லிவிட்டார்.பத்தாயிரம் கொடுத்து மீளுவதே நல்லது .”

“பத்தாயிரம் இப்போ எங்கே கிடைக்கும்?”

“லட்சாதிபதி ஆவதற்காக ஒரு ரகசியத்தை இவ்வளவு நாளாய் எனக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தேன். பத்தாயிரதிற்காக அதை இப்போது விற்கப் போகிறேன்.

33

லேட் சந்திரனின் வீட்டிற்கு பாஸ்கர் ராமமூர்த்தி போய்ச் சேர்ந்த போது மணி எட்டு அடிக்கவிருந்தது. கூர்க்கா கேட்டிற்கு அருகில் தடுத்து நிறுத்தினான்.

“ரொம்ப முக்கியமான விஷயம் என்று நிர்மலா அம்மாவிட்டம் போய்ச் சொல்லு” என்றான். கூர்க்கா போய்விட்டுத் திரும்பி வந்து “வரச் சொன்னாங்க” என்றான்.

ராமமூர்த்தி உள்ளே போனபோது நிர்மலா உட்கார்ந்திருந்தாள்.

“யார் நீங்க? என்ன வேண்டும்?” என்று கேட்டாள்.

“நான் ஆதிலக்ஷ்மியின் மகன். ஆதிலட்சுமி என்றால் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் உங்களுக்கு பிரசவம் பார்த்த நர்ஸ். என் தாய் சாகும் தருவாயில் என்னிடம் ஒரு ரகசியத்தைச் சொன்னாள். அதை உங்களிடம் சொல்லணும் என்றுதான் வந்திருக்கிறேன்” என்று பொருள் போதிய பாதியிலேயே நிறுத்திக் கொண்டான்.

‘சொல்லுங்கள்” என்றாள் நிர்மலா.

நள்ளிரவில் ஒரே சமயத்தில் இரு குழந்தைகள் பிறந்ததையும், பதிமூன்றாம் தேதி, வெள்ளிக்கிழமை தன் தாய் குழந்தைகளை மாற்றியதையும் விவரமாய்ச் சொன்னான். “அந்த விதமாய் உங்கள் உண்மையான மகள் விஸ்வம் என்பவரின் வீட்டில்

வளர்ந்தாள். சாஹிதி உங்களுடைய மகள் இல்லை" என்று முடித்தான்.

நிர்மலாவுக்கு இதையெல்லாம் நம்புவதா வேண்டாமா என்று தெரியவில்லை. குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள். "அந்தப் பெண் இப்போது எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

"நான் தற்சமயம் ரொம்ப சிக்கலில் இருக்கிறேன். பத்தாயிரம் கொடுத்தால் உங்க மகள் எங்கே இருக்கிறாள் என்று சொல்லுவேன்" என்றான்.

பத்தாயிரம் என்றதும் நிர்மலாவின் புருவம் உயர்ந்தது. "நீ உண்மையைச் சொல்கிறாயா, போய் சொல்கிறாயா என்று எப்படித் தெரியும்? இரு, இப்போதே போன் பண்ணி வரச் சொல்கிறேன்."

"யாரை?"

"பரமஹம்சாவை."

பரமஹம்சாவின் பெயரைக் கேட்டதுமே ராமமூர்த்தி நடுங்கிவிட்டான். துணிச்சலை வரவழைத்துக் கொண்டு எழுந்து நின்றவன் "எனக்கு நேரம் இல்லை. நீங்க உடனே பணம் தந்தால் சொல்கிறேன். ஒரு தடவை போய்விட்டேன் என்றாள் திரும்பி வரமாட்டேன்." மிரட்டினான்.

"பரமஹம்சா அவதார புருஷர். அவருக்குத் தெரியாதது எதுவுமே இல்லை. நாங்கள் அவரிடம் கேட்டுத் தெரிந்துக் கொள்கிறோம்" என்றாள் நிர்மலா.

”உங்கள் மகள் யாரென்று அவருக்குத் தெரியாது.” டபாயித்தான்.

“அவருக்குத் தெரியாமல் நான் எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டேன்.”

“எத்தனை மோசமானவர்கள் நீங்கள்? உங்க ரத்தத்தைப் பகிர்ந்து கொண்டு பிறந்த குழந்தை எங்கேயோ அநாதையாய் இருக்கிறாள் என்று சொல்லியும் எப்படிச் சாதாரணமாய் இருக்க முடிகிறது உங்களால்?”

நிர்மலா எழுந்து கொண்டாள். அவள் மனம் முழுவம் ஏதோ போல் சூனியமாக இருந்தது. அது வருத்தமா, அதிர்ச்சியா, வேதனையா என்று தெரியாத நிலை.

“அவர் ஒரு வாரம் கழித்து வருவார். அப்போ வந்து பார்” என்று உள்ளே போகத் திரும்பியவள் “யாரோ வந்து ஏதோ சொன்னால், பத்தாயிரத்தைத் தூக்கிக் கொடுத்து விட்டாயா என்று கோபித்துக் கொள்வார்” என்றாள்.

நிர்மலாவின் ஆதாரப்படும் குணத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அவ்வளவு பயங்கரமான விஷயம் தெரிந்த போதுகூட (அது உண்மையாக இருக்கட்டும், இல்லாமலும் போகட்டும்) அவள் பரமஹம்சாவையே நம்பினாள். அவ்வளவு தூரம் அவன் அவளை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தான்.

பாஸ்கர் ராமமூர்த்தி அப்படியே நின்றுவிட்டான். மிகச் சுலபமாய் நடந்து முடிந்து விடும் என்று எண்ணியிருந்தது இவ்வாறு திசைத் திரும்பி விட்டது. அவனை குழப்பத்தில் ஆழ்த்தி விட்டது.

“நீங்கள் ஏதாவது மனம் மாறி விஷயத்தைத் தெரிந்து கொள்ளநணும் என்று நினைத்தால் இதோ என் முகவரி.

பத்தாயிரத்தைக் கொண்டு வாங்க. ஒரு மணி நேரம்தான் அவகாசம். ஒரு மணி நேரம் கழித்து நான் கிடைக்க மாட்டேன்' என்று முகவரி இருந்த சீட்டை அவ்விடத்தில் வைத்துவிட்டு வெளியேறினான்.

*****

இரு கட்சிகளும் தங்களுடைய கட்சி சார்பில் வேட்பாளரைத் தேர்தெடுக்கும் பணியில் மும்முரமாக இருந்தன. ஆளும் கட்சியில் இருந்தவர்களுக்கு பிற்படுத்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், பெண்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய கட்டாயம். எதிர்க்கட்சியில் இருந்த சிதம்பரசுவாமி பெரும் அளவில் பணத்தைச் செலவழித்துக் கொண்டிருந்தார். போர்கால நடவடிக்கையைப் போல் தேர்தலுக்கு ஏற்பாடுகள் பண்ணிக் கொண்டிருந்தார். வேட்புமனுவை தாக்கல் செய்வதற்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தன.

சிதம்பரசுவாமியின் வீடு சந்தடியாய் இருந்தது. தேர்தலில் அந்தக் கட்சியின் சார்பில் நிற்க விரும்பியவர்கள் அதிகாலையில் ஐந்து மணிக்கே சிதம்பர சுவாமியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். சாரங்கபாணியும் தந்தைக்கு உதவி செய்யும் பணியில் மும்முரமாய் ஈடுப்பட்டிருந்தான். ஹரிணியின் விஷயத்தை அவன் பெரும்பாலும் மறந்து போய் விட்டிருந்தான்.

நேரம் ஆறுமணி ஆயிற்று. சூரியன் நன்றாக மேலே வந்துவிட்டான். பேப்பர்களைப் புரட்டியபடி எதற்காகவோ வெளியே பார்வையிட்ட சிதம்பரசுவாமி ஜன்னலுக்கு அப்பால் தென்பட்ட காட்சியைப் பார்த்துவிட்டு புருவத்தைச் சுளித்தார். "என்னடா? வெளியே என்ன நடந்து கொண்டு இருக்கிறது?" என்று கேட்டார். சாரங்கபாணியும் வெளியே பார்த்துவிட்டு சிலையாகி விட்டான்.

வீட்டிற்கு முன்னால் எதிர்ப்பு தெரிவிப்பதற்காக கூடாரங்களை நட்டுக் கொண்டிருந்தார்கள்.

“அநியாயம் பண்ணியவர்களை அரெஸ்ட் செய்ய வேண்டும்.”

“ஹரிணிக்கு நிகழ்ந்த அநியாயம் பெண் இனத்திற்கே அவமானம்” போன்ற பெனர்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

தந்தையும் மகனும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். சாரங்கபாணியின் முகம் கோபத்தால் சிவந்தது. அந்த சமயத்தில் நாளேடு வந்தது. முதல் பக்கத்திலேயே ஹரிணியின் போட்டோ இருந்தது. தான் கற்பழிக்கப் பட்டிருப்பதாய் ஹரிணி வெளிப்படையாய் ஸ்டேட்மென்ட் கொடுத்தத்தில் சலசலப்பு ஏற்பட்டு விட்டது.

ஹரிணியின் சார்பில் தான் போய் கேட்டதற்கு சிதம்பரசுவாமி சொன்ன பதிலும், சாரங்கபாணியின் நண்பர்களைப் பற்றிய விவரங்களையும் பாவனா கட்டுரை வடிவத்தில் எழுதி இருந்தாள்.

“அறிமுகம் ஏற்படுத்திக் கொண்டு, காதலிப்பது போல் நடித்து, தந்தையிடம் சிபாரிசு பெற்று வேலை வாங்கிக் கொடுத்து, அனுபவித்த வரையிலும் அனுபவித்துவிட்டு, கெஸ்ட் ஹவுசில் நண்பர்களுக்கு விருந்தாய் பகிர்ந்தளித்த மாஜி முதலமைச்சர் மகனின் லீலைகள்” என்று விவரமாய் எழுதி இருந்தார்கள்.

‘அதிகாரத்தில் இருக்கும் தலைவர்களின் அநியாயச் செயல்களை வெளிப்படையாய் விமரிசிக்கும் எதிர்க்கட்சித் தலைவர், தன் வீட்டில் நடந்த அநியாயம் தெரிந்திருந்தும், துணை போனது கண்டிக்கத் தக்கது’ என்று காரசாரமாக விமரிசித்து இருந்தார்கள்.

“பத்து லட்சதிற்குக் குறையாமல் மானநஷ்ட வழக்குப் போடுகிறேன்” ஆவேசத்தோடு கத்தினார் சிதம்பரசுவாமி. “தேர்தலுக்கு முன்னால் முகத்தில் சேற்றைப் பூசும் முயற்சி இது. அந்த ஆளும் கட்சிக்காரர்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வருகிறேன். இந்த குற்றச்சாட்டை எப்படி நிரூபிக்கப் போகிறார்கள் என்பதையும் பார்த்து விடுகிறேன்.”

காலையில் ஏழு மணிக்கு... அதாவது இங்கே இவ்வாறு உரையால்கள் நடந்து கொண்டிருக்கும் சமயத்திற்கு அங்கே முதலமைச்சரும் நாளேட்டை பார்த்துவிட்டார். அதற்குள்ளாகவே அவருக்கு எதிர்ப்பு சிபிரத்தைதைப் பற்றிய செய்தி எட்டியிருந்தது. பாரதிதேவிக்குப் போன் செய்தார். இதற்குப் பின்னால் இருந்தது பாவனா என்று தெரியவந்தது.

“யார் இந்த பாவனா? நீங்க அன்றைக்குச் சொன்னது அவளைப் பற்றிதானே?”

“ஆமாம். அந்தப் பெண்ணேதான். நீங்க அவளுக்கு தகுதிகள் போறாது என்று சொன்னீங்க. அவள் யூனிவர்சிடியிலேயே முதலாவதாய் வந்திருக்கிறாள்.”

“எந்த தைரியத்தில் எழுதியிருக்கிறாள் இதையெல்லாம்? எந்த சாட்சியும் இல்லாமல் போனால் நாளைக்குப் பெரிய ரகளை ஆகிவிடும்.”

“அவளுடைய மாஜி கணவனே பெரிய சாட்சி. ஹரிணியை இங்கே இருந்து அன்றைக்கு அழைத்துக் கொண்டு போனவனே அவன்தான்” என்றாள் அவள்.

காலையில் ஒன்பது மணிக்கு... அதாவது இந்த இந்த உரையாடல் நடந்த இரண்டு மணி நேரம் கழித்து, நிர்மலாவின் வீட்டிலிருந்து பாஸ்கர் ராமமூர்த்தி வீட்டிற்குத் திரும்பி வந்த போது அங்கே இன்ஸ்பெக்டர் காத்துக் கொண்டிருந்தார்.

ராமமூர்த்தி அவரைப் பார்த்து "இன்னும் அரைமணி நேரம் பொறுத்திருங்கள். பத்தாயிரம் கைக்கு வந்து சேரும்" என்றான் வேதனை கலந்த முறுவலுடன்.

"இதேதோ சின்ன கேசு என்று நினைத்தேன். எங்க எஸ்.பி. உடனே உன்னை அரெஸ்ட் பண்ணி அழைத்து வரச் சொன்னார்" என்றார் இன்ஸ்பெக்டர், அதே வேதனை நிரம்பிய முறுவலுடன். பத்தாயிரம் கை நழுவிப் போய் விட்ட வருத்தம் அவருக்கு.

காலை பதினொரு மணிக்கு... அதாவது மேற்கண்ட உரையாடல் நடந்த இரண்டு மணிநேரத்தில் இந்தக் கேசு சி.பி.சி.ஐ.டி. இடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பிறகு விஷயங்கள் வேகமாய் நடந்தேறின. பத்திரிக்கை நிருபர்கள் சாரங்கபாணியைச் சந்தித்தப் பொழுது இந்த விஷயயம் தனக்கு எதுவுமே தெரியாது என்றும், அரசியல் எதிரிகள் தன் தந்தையை வீழுத்துவதற்கு செய்த சதி திட்டம்தான் இது என்றும் சொன்னான். ஆனால் இந்த இன்டர்வ்யூ நடந்த ஒரு மணி நேரத்தில், பாஸ்கர் ராமமூர்த்தியை அரெஸ்ட் பண்ணிய விஷயம் தெரிந்தது. தந்தையும், மகனும் கலவரமடைந்தார்கள்.

அன்று மாலை ஆறரை மணிக்கு பாஸ்கர் ராமமூர்த்தி போலீசாரிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். அதுவரை எப்படியோ வீம்புடன் இருந்து வந்த அவன், மன உளைச்சலை தாங்க முடியாமல் நடந்த விஷயத்தை எல்லாம் சொல்லிவிட்டு,

ஹரிணியைத் தான்தான் அழைத்துச் சென்றதாய் ஒப்புக்கொண்டுவிட்டான்.

மறுநாள் பேப்பரில் முதல் பக்கத்தில் வலது கோடியில் “எனக்கு ஒன்றும் தெரியாது” என்ற சாரங்கபாணியின் வாக்மூலமும், இடது பக்க கோடியில் “ஹரிணியை நான்தான் அழைத்துச் சென்றேன்” என்று பாஸ்கர் ராமமூர்த்தி போலீசாரிடம் ஒப்புக்கொண்ட விதமும் பிரசுரிக்கப்பட்டடிருந்தன. நாமினேஷன் போடுவதற்குச் சரியாக இரண்டே நாட்கள் கெடு இருந்தது.

****

தொடர்ந்து எல்லா விஷயங்களும் வரிசையாய் நடந்தேறின. “நடந்தது என்னவோ நடந்துவிட்டது. ஹரிணியைத் தன் மருமகளாக ஏற்றுக்கொள்கிறேன்” என்று சிதம்பரசுவாமி செய்தியை அனுப்பினார். தேர்தல் வரப் போகும் சமயத்தில் இவ்வளவு ரகளை நிகழ்ந்தது அவருக்குப் பெரிய தலைவலியாய் இருந்தது. கற்பழிக்கப்பட்ட ஒரு பெண்ணை மகனுக்கு பண்ணிக்கொண்டால் அதன் மூலம் நல்ல பெயர் கிடைக்கும் என்றும், செய்த தவறு மூடி மறைக்கப்பட்டு விடும் என்பதும் அவருடைய உத்தேசம். ஆனால் ஹரிணி சம்மதிக்கவில்லை. பாவனாவும் ஒப்புக்கொள்ளவில்லை. “இதொன்றும் சினிமா இல்லை. இறுதி காட்சியில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதுமே ‘நான் உங்கள் காலடியில் விழுந்து கிடக்கும் அடிமை’ என்று பெண்ணானவள் கண்ணீர் மல்க வேண்டிக்கொள்வதற்கு” என்று சொல்லிவிட்டாள்.

சம்பந்தப்பட்ட இளைஞர்களை போலீசார் அரெஸ்ட் செய்தார்கள். அதற்கு மறுநாள் ஹரிணியின் தந்தை வந்து அவளை அழைத்துகொண்டு போய்விட்டார்.

“தவறு செய்தது என் மகள் இல்லை. அவளை நான் தண்டிக்க மாட்டேன்” என்றார் அவர். அப்பொழுதே ஒரு சீர் திருத்தவாதி ஹரிணியை மணந்து கொள்வதற்கு முன் வந்தான்.

ஹரிணிக்கு ஜீவனி காரியாலயத்தில் எல்லோரும் விடை கொடுத்து அனுப்பினார்கள். நியாயத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி அது. இதில் ஹரிணிக்கு தனிப்பட்ட முறையில் எந்த லாபமும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு அநியாயத்தை எதிர்த்து நின்றோம் என்ற திருப்தி அவள் கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

ஹரிணி கிளம்பிப் போன கொஞ்ச நேரத்தில் போன் மணி அடித்தது. பாரதிதேவி எடுத்துப் பேசினாள். அவள் முகத்தில் வியப்பு கலந்த திகைப்பு!

“யாரு மேடம்?” கேட்டாள் பாவனா.

“முதலமைச்சரின் அலுவலகத்திலிருந்து. உன்னை நாளைக்கு ஒரு முறை வரச் சொன்னார்கள்.”

“என்னையா? எதிர்கட்சித் தலைவரை அடக்கியதற்கு இவர்களுடைய பாராட்டுகளும், பரிசுகளும் எனக்கு வேண்டாம். அரசியலை இதில் கலக்க வேண்டாம்.”

“அது இல்லை பாவனா. அரசியலை கலக்கணும் என்று நினைத்தால் பேப்பரில் வந்த போதே முதலமைச்சர் உன்னைச் சந்தித்து இருப்பார். அப்போ கூட எந்த அறிக்கையும் தரவில்லை. அந்த அவகாசத்தை விட்டுவிட்டு, இப்பொழுது வரச் சொல்லி இருக்கிறார் என்றால், வேறு காரணம் ஏதாவது இருக்கணும். போய்ச் சந்தித்துவிட்டு வா” என்றாள் பாரதிதேவி.

பாவனா சரியென்று தலையை அசைத்தாள்.

அவளுக்கும் முதலமைச்சருக்கும் இடையே உரையாடல் பத்து நிமிடங்கள்தான் நிகழ்ந்திருக்கும்.

“அடுத்த மாதத்தில் தேர்தல் வருகிறது. எங்கள் கட்சியின் சார்பில் தேர்தலில் நிற்கணும்” என்றார் முதலமைச்சர். பாவனா சிலையாய் நின்றுவிட்டாள். தான் கேட்டுக் கொண்டிருந்தது கனவா நினைவா என்று புரியவில்லை. தானாவது தேர்தலில் நிற்பதாவது? ஆளும்கட்சி கூப்பிட்டு சீட் தருவது சாதாரண சமாச்சாரம் இல்லை. அது வேறு விஷயம்.

“நானா? எனக்கு அரசியலைப் பற்றி எதுவுமே தெரியாது. ஆர்வம் கூட இல்லை” என்றாள் குழப்பத்துடன்.

“அந்தத் தலைவரை தோற்கடித்து பாடம் கற்பித்ததற்காக இல்லை நான் இவ்வாறு கேட்பது. உன் கட்டுரைகளைப் படித்தேன். அநியாயத்திற்கு இலக்கான பெண்களுக்கு நீ செய்யும் உதவிகளைப் பற்றி கேள்விப்பட்டேன். உன்னைப் போன்ற படித்த பெண்கள்தான் நாட்டுக்குத் தேவை. அநியாயத்தைக் கண்டித்து எதிர்த்து நில். அதிகாரம் உன் கையில் இருந்தால் அதை இன்னும் சிறப்பாக செய்ய முடியும். சாரங்கபாணி அத்தனை அக்கிரமம் ஏன் செய்தான்? தந்தையின் கையில் அதிகாரம் இருந்ததால். அப்படிப்பட்ட அதிகாரம் உன் கையில் இருந்தால் நீ எவ்வளவு நல்ல வழியில் அதை பயன்படுத்தி இருப்பாய்? யோசித்துப் பார்.”

பாவனா கொஞ்ச நேரம் யோசித்தாள். சமயம் அதிகம் இல்லை. எங்கே தொடங்கிய வாழ்க்கை எங்கே போய் முடிகிறது?

இன்னொரு திருப்பம் .. திரும்பட்டுமே.

அவள் சம்மதிப்பது போல் தலைய அசைத்தாள். ஆளும் கட்சியின் சார்பில் சிதம்பரசுவாமிக்குப் போட்டியாய் பாவனாவை அதே தொகுதியில் நிற்க வைத்தார்கள்.

அரசியல் சதுரங்கத்தில் மிகப் பெரிய திருப்பம் அது. யாராலும் வீழ்த்த முடியாதது.

****

“மேடம்! நீங்க ஊக்கம் தந்தீங்க. உற்சாகத்துடன் ஒப்புக் கொண்டுவிட்டேன். ஆனால் இப்போது நினைத்துப் பார்த்தால், ரொம்பவும் பயமாக இருக்கிறது. நானாவது? தேர்தலில் நிற்பதாவது? எனக்கு அந்த சாமர்த்தியம் இருக்கா என்று சந்தேகமாய் இருக்கு.”

“இவ்வளவு சின்ன வயதில் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைப்பது அதிர்ஷ்டம்தான்.!”

“இரண்டு லட்சம் பேரை சம்மதிக்க வைக்கணும். பல ஆயிரக்கணக்கான பேருக்கு முன்னால் நின்று சொற்பொழிவு ஆற்றணும். இதெல்லாம் என்னால் முடியும் என்று நினைக்கிறீங்களா?”

“ஒருகாலத்தில் இந்தப் படிப்பும், வேலையும் உன்னால் முடியும் என்று நினைத்தாயா? உழைப்பால் முடியாதது எதுவுமே இல்லை என்று நீயே நிரூபித்துக் காட்டிவிட்டாய். இந்த வாய்ப்பு உனக்கு வந்தது உன்னுடைய உழைப்பின் பலன்தானே தவிர, வேறு இல்லை. இனிமேல் நீ கொஞ்சம் கூட நேரத்தை வீணாக்காதே. தினமும் எல்லா நாளேடுகளையும் படி. நாட்டின் அரசியல் நிலவரத்தை நன்றாகத் தெரிந்து வைத்துக்கொள். இந்த

விஷயத்தில் நீ எவ்வளவு அறிவை வளர்த்துக் கொள்கிறாயோ அவ்வளவு நல்லது.”.

அன்றைய தினத்திலிருந்து பாவனா படிக்கத் தொடங்கினாள். உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் விவகாரங்கள், வெளிநாட்டு உறவுகள் முறைகள்.. இவற்றைப் பற்றிப் படிக்கப் படிக்க ஆர்வம ஏற்படத் தொடங்கியது.

****

“நீங்க பண்ணுவது எதுவுமே நன்றாக இல்லை” என்றாள் பாவனா. அவள் முகம் சிவந்து விட்டிருந்தது. கோபத்தால் மூக்கின் நுனி அதிர்ந்து கொண்டிருந்தது.

“இதில் நன்றாக இல்லை என்று எதைக் குறுப்பிடுகிறீங்க?” கேட்டார் கட்சித் தலைவர்.

“நீங்க என்னைப் பற்றிக் கொடுத்து வரும் விளம்பரம். நான் வாழ்க்கையில் ரொம்ப கஷ்டத்தை அனுபவித்தவள், உண்மைதான். ஆனால் நான் ஏதாவது சாதித்து இருந்தால் அதை பெரிது பண்ணி டமாரம் அடித்துக் கொள்வதற்காக மட்டும் இல்லை.”

கட்சித் தலைவருக்கு அறுபத்தைந்து வயது இருக்கும். அரசியலில் நாற்பது ஆண்டுகள் அனுபவம் இருப்பவர்.

“அப்படி உட்காரும்மா.” அமைதியாய் சொன்னார் அவர்.

பாவனா உட்கார்ந்தாள்.

பிரபல பத்திரிக்கை ஒன்றில் பாவனாவின் போட்டோவைப் போட்டு, அவளே சுயமாய் எழுதியது போல் அவள் வாழ்க்கைக்

கதையைப் போட்டிருந்தார்கள். சில இடங்களில் மிகைப்படுத்தியும் இருந்தார்கள். இன்னும் சில பத்திரிகைகளில் அவள் எழுதிய கட்டுரைகள் திரும்பவும் இடம் பெற்றிருந்தன. அவற்றைப் பற்றி பிரமுகர்களின் கருத்துகளை சேகரித்துப் போட்டார்கள். இந்த விளம்பரம் எல்லாம் எதுக்கு என்பதுதான் பாவனாவின் கோபம்.

'பாரும்மா, நீ எப்போதாவது சதுரங்கம் ஆடியிருக்கிறாயா?" கேட்டார் அவர்.

"ஏன்? அதையும் ஒரு போட்டோ எடுத்து நேஷனல் சாம்பியன் ஆக வேண்டிய பெண். ஆனால் அவளுடைய தந்தை ஆடுவதற்கு அனுமதிக்கவில்லை என்று பேப்பரில் போடப் போறீங்களா?" கோபமாய்க் கேட்டாள்.

அவர் சிரித்தார். "அப்படிப் போடணும் என்றால் உனக்கு அந்த ஆட்டம் தெரிந்திருக்க வேண்டிய தேவை கூட இல்லை. அது போகட்டும். உனக்கு அந்த மாதிரி ஆட்டமாவது அல்லது வேறு ஏதாவது ஆட்டமாவது நன்றாகத் தெரியுமா?

"கேரம்ஸ் ஒன்றுதான் எனக்குத் தெரிந்த ஆட்டம்" என்றாள் பாவனா கூச்சத்தோடு.

"அப்போ ஒரு கேள்விக்கு நேர்மையாக பதில் சொல்லு. போர்ட்டில் உன் எதிரியின் ஒரே ஒரு காயின் இருக்கு. அதைப் போட்டுவிட்டால் அவனுடைய ஆட்டம் முடிவடைந்து விடும் உன்னுடையது இரண்டோ மூன்றோ காயின்கள் இருக்கின்றன. அப்போ என்ன செய்வாய்?"

"ரூலை மீறாத வரையில் என்னுடைய காயினைக் கொண்டு தடுக்க முயற்சி செய்வேன்" என்றாள் தயங்கிக்கொண்டே.

“கேரம்ஸ் போன்ற ஆட்டத்திலேயே கடைசி வரையில் ஜெயிப்பதற்கு நீ முயற்சி செய்வாய். அரசியல் ரொம்ப பெரிய விளையாட்டு பாவானா! வெற்றி தோல்வி எல்லாம் அப்புறம். கடைசி வரையிலும் ஜெயிக்கணும் என்கிற உறுதியோடு விளையாடி தீரனும்.”

“அவ்வளவுதான் என்று சொல்றீங்களா?” பாவானா அமைதியடைந்தாள்.

“அவ்வளவுதான். ஆனாலும் உன்னைப் பற்றி இவ்வளவு விளம்பரம் எதுக்கு பண்ணுகிறோம் என்று கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாயா? நீ கணவனை விட்டுவிட்டு வந்து விட்டாய் என்று நாலு பேருக்குத் தெரியும். நாளைக்கு உன் பெயரை நாமிநேஷனுக்கு அறிவிததுமே உன் எதிரி பண்ணப் போகும் முதல் காரியம் என்ன தெரியுமா? உன்னைப் பற்றி இல்லாதது போல்லாததைக் கற்பித்து வெளியிடுவது. அந்த விதமாய் மக்கள் பார்வையில் உன்னை குற்றவாளியாய் சித்தரிப்பார்கள். அவர்களுக்கு அந்த வாய்ப்பை நாம் தரக்கூடாது. உன் கதை இப்பொழுது மக்கள் மனதில் நன்றாகப் பதிந்து போய் விட்டது. அந்த விதமாய் நீ அவர்களுக்கு நெருக்கமாகிவிட்டாய். நாளைக்கு நீயே அவங்க தொகுதியில் நிற்கப் போகிறாய் என்று கேள்விப் பட்டதுமே ஒரு சிநேகிதியாய் நினைத்து ஓட்டுப போடுவார்கள். இப்போ நாம் எழுதியதில் பொய் எதுவும் இல்லை. அதானால் யாருமே விமரிசிக்க மாட்டார்கள். அப்படியே விமரிசித்தாலும் யாரும் பொருட்படுத்த மாட்டார்கள். அதுதான் நமக்கு வேண்டியது.”

“உண்மைதான். நான் அவ்வளவு தூரம் யோசித்துப் பார்க்கவில்லை. சாரி.”

அவள் வீடு திரும்பிய பொது அங்கே விஸ்வம் காத்திருந்தான்.

“எல்லோரும் சொக்கியமா அப்பா? ஏன் இப்படி இளைத்துப் போயிட்டீங்க? உடம்பு சரியாக இல்லையா?” பரிவுடன் விசாரித்தாள்.

“என் உடம்புக்கு ஒன்றும் இல்லை. நான் உன்னுடன் சில விஷயம் சீரியாஸாய் பேசணும்.”

“சொல்லுங்கள் அப்பா.” நிதானமாய் கேட்டாள், கட்சித் தலைவரின் வார்த்தைகளை நினைவுப் படுத்திக்கொண்டு.

“பத்திரிகையில் அதென்ன அப்படி எழுதுகிறாய்? எந்த உத்தேசத்தில் அப்படி எழுதுகிறாய்?” விஸ்வத்தின் குரலில் கோபம் பிரதிபலித்தது.

“என்னப்பா? இருக்கிற விஷயத்தைத் தானே எழுதினேன். அதில் பொய் எதுவும் இல்லை என்று உங்களுக்கே தெரியும்.”

“உனக்கு என் வேதனை புரியாதும்மா. மகள்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டிய என் கஷ்டம் உனக்குப் புரிய வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்துவிட்டாய். எந்த வரன் வந்தாலும் முதலில் மூத்த மகளைப் பற்றிய கேள்விதான் வருகிறது. இந்த ரகளை எல்லாம் அவர்களுக்குப் புரியாது. மூத்த மகள் திமிர் பிடித்து கணவனை விட்டுவிட்டு போய்விட்டாள் என்ற அபவாதம்தான் எஞ்சியிருக்கும்.”

பாவனா சிரித்தாள். “என் கல்யாணத்தைப் பண்ணிய அனுபவம் கொண்டாவது உங்க எண்ணங்களில் மாறுபாடு வந்திருக்க வேண்டும் அப்பா. தங்கைகளுக்கு கல்யாணம் முக்கியம் இல்லை. படிக்க வையுங்க. சொந்த காலில் நிற்பது போல் பொருளாதாரா சுதந்திரத்தை ஏற்படுத்துங்கள். கல்யாணம் பண்ணியாக

வேண்டும் என்று எவனோ ஒருத்தனுக்கு கட்டி வைக்காமல் மனித நேயம் உள்ள ஆணுக்குத் தந்து மணம் முடியுங்கள்."

"சொற்பொழுவு ஆற்றுவது சுலபம்தான். அது சரி, அரசியலில் சேரப் போகும் விஷயம் உண்மைதான் என்று சொல்லு."

"ஏன்? மறுபடியும் பாஸ்கர் ராமமூர்த்தி வந்து மடியில் தலை வைத்து அழுதானா?"

"இவ்வளவு ஏளனமாய் பேசாதே. அவன் இன்னும் சட்ட ரீதியாய் உன் கணவன்தான். அரசியல் ஒரு சாக்கடை. பெண்பிள்ளைகளுக்குத் தகுந்த துறை இல்லை. அது ஒரு புதைமணல். என் உலக அனுபவத்தினால் சொல்கிறேன். ஆவேசப்படாமல் யோசித்துப் பார். உன்னைப் போன்ற அனுபவம் இல்லாதவர்கள் தேர்தலில் நின்று ஜெயிப்பது கனவிலும் நடக்காது."

"உங்க அனுபவம் எப்படிப் பட்டது என்று இப்போ எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது அப்பா. விஸ்வத்தின் மகள் கணவனை விட்டுவிட்டுப் போய்விட்டாள். அரசியலில் சேர்ந்து பெரிய இவள் போல் தேர்தலில் நின்றாள். ஆனால் டிபாசிட் கூட கிடைக்காமல் தோற்றுப் போய்விட்டாள், பாவம்! என்று நாலு பேர் நினைத்துக் கொள்வார்களே என்றுதானே இந்த வருத்தமெல்லாம்? நான் சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள். அகம்பாவத்தோடு சொல்லவில்லை. தன்னம்பிக்கையோடு சொல்கிறேன். நான் தேர்தலில் வென்று தீருவேன். உங்கள் மகள் என்று இல்லாமல் என்னுடயை தந்தை என்று உங்களை சொல்லும்படியாய் செய்து காட்டுகிறேன். தன்னம்பிக்கையுடன் உழைத்தால் சாத்தியம் ஆகாதது எதுவும் இல்லை என்று என் அனுபவம் கற்றுக் கொடுத்திருக்கிறது. என்ன? கொஞ்சம் மனசாட்சியை

வஞ்சிக்கும்படி நேரலாம். ஆனால் மனசாட்சியை முற்றிலுமாய்க் கொன்றுப் போட்டு விட்டு வாழ்ந்து வருகிற உங்களைவிட மேல்தானே?"

"உன்னை மாற்றுவதோ, என்னைப் புரிந்து கொள்ளும்படி செய்வதோ கடவுளால் கூட முடியாது" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான் விஸ்வம்.

34

ரேடியோவில் "குந்தி விலாபம்" வந்து கொண்டிருந்தது

"ராமநாதன்! நீங்க என்னைக் காதலிக்கிறீங்களா?" தீனமாய் கேட்டாள் சாஹித்தி.

"உனக்கு இந்த சந்தேகம் ஏன் வந்தது?"

"என்னவோ, எனக்கு அப்படித் தோன்றுகிறது."

"நீ என்றுமே என் சாஹிதி தான். நான் காதலிப்பது உன்னைத்தானே தவிர உன் பணத்தையோ, சொத்தையோ இல்லை." அவளை அருகில் இழுத்துக் கொண்டான். அவன் மார்பில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

"சாஹிதி!"

"ஊம்."

"நாம் இருவரும் மனதளவில் இவ்வளவு நெருக்கமாகி விட்டோம். உடல்களை மட்டும் தொலைவில் வைத்திருப்பது நியாயமா?"

“வேண்டாம் ராமநாதன்! எனக்கு ஏனோ பயமாய் இருக்கு.”

“இந்த சிருஷ்டியில் ஆனந்தம் தருகிற எது ஒன்றுக்குமே முதலில் பயமாகத்தான் இருக்கும். கஞ்சாவை எடுத்துக் கொண்ட போது முதலில் பயந்தாய். அது சந்தோஷத்தைத் தரவில்லையா?” என்று அவள் மேல்தலைப்பை விலக்கினான். அவள் அவனையே சலனம் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் ஆனந்தம் இல்லை. துக்கமும் இல்லை. ஒரு பார்வையாளரைப் போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரேடியோவில் இன்னும் குந்தி விலாபம் வந்து கொண்டிருந்தது. அவன் ஷர்ட்டைக் கழற்றினான். அவள் தோளைச் சுற்றிலும் கையை போட்டு ஜாக்கெட் பட்டனை அவிழ்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது கதவை யாரோ தட்டிய சத்தம் கேட்டது. இருவரும் சட்டென்று விலகிக் கொண்டார்கள். அவன் கலவரமடந்தான். சாஹிதிக்கு மயக்கம் விடுபட்டாற்போல் இருந்தது.

அவன் அவளை பின் அறையில் மறைவாக இருக்கும்படி செய்துவிட்டுக் கதவைத் திறந்தான்.

எதிரே பாவனா! அவன் அதிர்ச்சி அடைதவனாய் பார்த்தான்.

அவள் சர்வ சாதாரணமாய் “வணக்கம். என் பெயர் பாவனா. நான் இந்தத் தொகுதியில் எம்.எல்.ஏ. வாய் நிற்கிறேன். உங்களுடைய ஓட்டை எனக்குப் போட்டு என்னை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்” என்றாள்

“நீயா? எம்.எல்.ஏ. வா?” என்றான்.

அவள் குரல் மாறிவிட்டது. “ஏன்? அதில் வியப்படைய என்ன இருக்கு?” என்றாள்.

“புருஷனை விட்டுவிட்டு ஓடிவந்து நீ செய்கிற காரியம் இதுதானா?”

“புருஷன் இல்லாத நேரத்தில் எதிர் வீட்டுக்குள் நுழைந்து நீ பண்ணும் காரியத்தை விட இது மேல்தானே?”

“பரவாயில்லையே? கூண்டுக் கிளி பேச கற்றுக் கொண்டுவிட்டதே?” என்றான்.

மூலையில் இருந்த பெண்களின் செருப்பு அவள் .கண்ணில் பட்டது. “நான் இங்கே வந்தது ஓட்டு கேட்பதற்கு. ஜனநாயகத்தில் மனிதனுக்கு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஓட்டுரிமை மட்டும் உண்டு இல்லையா? வீடு வீடாய் போய், “உங்கள் புனிதமான ஒட்டடை எனக்கே போடுங்கள் என்று கேட்டுப் பழக்கப்பட்டுப் போய் உங்க வீட்டிற்கும் தவறுதலாய் வந்துவிட்டேன். இந்த வீட்டில் இருப்பது புனிதமில்லாத ஒட்டு என்பதை மறந்துவிட்டேன்” என்று மேற்கொண்டு அவன் பதில் பேச இடம் கொடுக்காமல் அங்கிருந்து திரும்பி விட்டாள்.

முகம் சிவக்க கதவை படீரென்று சாத்திவிட்டு ராமநாதன் திரும்பினான். உள்ளே போய் “சாரி, சாஹிதி. யாரோ தேர்தலுக்கு ஓட்டு கேட்க வந்தாங்க” என்றான். ஒரு நிமிஷத்திற்கு முன்பிருந்த ராமநாதனுக்கும் இப்பொழுது தென்பட்ட ராமநாதனுக்கும் சம்பந்தமே இல்லை. ஆள் அமைதியோடு, அன்போடு இருந்தான்.

“நான் போய் வருகிறேன்” என்றாள் சாஹிதி. இந்தக் கொஞ்ச நேர இடைவெளியில் அவள் சுதாரித்துக்கொண்டு விட்டாள்.

“ஏன்? அதற்குள்ளேயா?”

“எனக்கு மூட் சரியாக இல்லை.” தலை குனிந்தபடி சொன்னாள்.

அவன் அவளை ஒரு வினாடி பார்த்துவிட்டு “அப்படி என்றால் சரி. வா கொண்டு விடுகிறேன்” என்றான். பாவனாவைப் பார்த்த பிறகு அவன் மனம் கலங்கி விட்டிருந்தது.

“வேண்டாம். நான் காரில் வந்தேன். யாராவது பார்த்தால் நன்றாக இருக்காது என்று தொலைவிலேயே நிறுத்தி வைத்திருக்கிறேன்” என்று அவள் கிளம்பினாள்.

தெருக்கோடியில் நிறுத்தி வைத்திருந்த காரை அணுகி முன் பக்கத்துக் கதவின் பூட்டைத் திறந்து உள்ளே உட்காரப் போனவள் பக்கத்து சீட்டில் இருந்த நபரைப் பார்த்துவிட்டு அதிர்ந்து விட்டாள். அங்கே பாவனா உட்கார்ந்திருந்தாள்.

“இந்தப் பக்கத்துக் கதவைப் பூட்ட மறந்து விட்டாய். வாழ்க்கையைப் போலவே காரைக் கூட சரியாக கவனிக்காமல் போனால் எப்படி சாஹிதி?”

“என்ன பேசுறீங்க நீங்க”

“ராமநாதன் வீட்டில் செருப்பைப் பார்த்தேன். அவன் கண்ணில் மிரட்சியைப் பார்த்தேன். வரும் போது உன் கார் கண்ணில் பட்டது. ஒன்றோடு ஒன்று கூட்டிப் பார்த்தபோது என் சந்தேகம் நிஜமாகிவிட்டது. அந்த ஆளின் வலைவீச்சு தெருவைத் தாண்டி நகரம் முழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது என்று புரிந்தது.”

“அவரைத் தெரியுமா உங்களுக்கு?”

‘அடி பைத்தியமே! அவனால்தான் நான் இப்படி ஆனதே’ என்று மனதில் நினைத்துக் கொண்டாள் பாவனா.

அதற்குள் சாஹிதி சொன்னாள். “அவர் எனக்கு நல்ல நண்பர். இருவருமே வாழ்க்கையில் முக்கியமானவற்றை இழந்து விட்ட துரதிர்ஷ்டசாலிகள்” என்றாள்.

பாவனா அவளை வியப்புடன் பார்த்து “என்னத்தை இழந்துவிட்டானாம் அவன்?” என்றாள்.

“அன்பை!”

பாவனா சாஹிதியை இரக்கத்துடன் பார்த்தாள். அவளுக்கு தேர்தல் வேலைகள் தலைக்கு மேல் இருந்தன. ஆனாலும் சாஹிதியை அப்படியே விட்டுவிட மனம் ஒத்துழைக்கவில்லை. “மாலையில் உனக்கு ஏதாவது வேலை இருக்கா?” என்று கேட்டாள்.

“ஒன்றும் இல்லை.”

“மாலையில் என்னோடு ஒரு மணி நேரம் இருக்க முடியுமா?”
“கண்டிப்பாய்.”

அன்று மாலையில் அவள் தன் தேர்தல் வேலைகளை ஒதுக்கிவிட்டு சாஹிதியைச் சந்தித்தாள். இருவரும் சேர்ந்து புறப்பட்டார்கள்.

“எங்கே போகிறோம் நாம்?’ சாஹிதி கேட்டாள்.

“சொல்கிறேன்” என்று காரை ஒரு ஆபீசுக்கு முன்னால் நிறுத்தச் சொன்னாள். “இங்கே யார் இருக்கிறார்கள்?’ என்று கேட்கப் போன சாஹிதி வார்த்தைகளை பாதியிலேயே நிறுத்திக் கொண்டாள். உள்ளேயிருந்து ராமநாதன் ஸ்கூட்டரில் வந்து கொண்டிருந்தான். ஸ்கூட்டரின் முன்னால் ஏழு வயது சிறுவன்

ஒருவன் நின்று கொண்டிருந்தான். பின் இருக்கையில் மனைவி உட்கார்ந்திருந்தாள். அவன் சிரித்துக் கொண்டே ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவள் தலையை அசைத்துக் கொண்டிருந்தாள். சந்தோஷமாக போய்க் கொண்டிருந்தார்கள். சாஹிதியின் முகம் வாடி விட்டது.

“அவள் யார்?” என்று கேட்டாள்.

“யார் மூலமாய் தனக்குச் சுகம் இல்லையென்று அவன் உன்னிடம் உளறினானோ அந்த மனைவி அவள். மிகவும் சந்தோஷமான குடும்பம் அவர்களுடையது. அவள் ஆபீசுக்குப் போய் விட்ட நேரங்களில் உன்னைப் போன்ற பெண்களிடம் இது போன்ற கதைகளை அளந்துக் கொண்டிருப்பான்” என்றாள் பாவனா.

சாஹிதி அழத் தொடங்கினாள். பாவனா அவள் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.

“நம்ப வைப்பது போல் கதைகளை ஜோடித்துச் சொல்லுவது ஆண்களுடைய சுபாவம். அவற்றை நம்பி மோசம் போகாமல் இருக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு. முன்பாக இருந்தால், இதெல்லாம் ராமநாதனின் தவறு என்று சொல்லி இருப்பேனோ என்னவோ. ஆனால் இப்போது உன்னுடைய அப்பாவித்தனத்தை என்னால் மன்னிக்க முடியவில்லை.”

சாஹிதி மேலும் பெரிதாக விசும்பிக்கொண்டே “நான் என்ன செய்யட்டும்? எல்லோருமே என்னை ஏமாற்றுகிறார்கள். வீட்டில் அம்மாவின் இரண்டாவது கணவன் கொடுக்கும் தொல்லையைத் தாங்க முடியாமல் வெளியே நட்புக்காக தவித்துப் போய் இப்படிப் பண்ணிவிட்டேன்” என்றாள்.

“உங்க அம்மாவின் இரண்டாவது கணவன் யார்?” ஆச்சரியமடைந்தவளாய் கேட்டாள் பாவனா.

“அன்றைக்கு நீங்க பார்த்தீன்களே, அவன்தான். பரமஹம்சா!” என்று தன் கதை முழுவதையும் சொன்னாள். பாவனா வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள். எல்லாம் கேட்டு முடித்த பின், “அவனுக்குப் பாடம் கற்பிக்காமல் போனாயா?” என்று கேட்டாள்.

“எப்படி?”

“எப்படியாவது? சொத்து முழுவதும் உன்னுடையது, உங்க அம்மாவுடையது. அம்மாதான் அப்பாவி. ஆனால் உனக்கென்ன வந்தது? படிப்பு இருக்கு. புத்திசாலித்தனம் இருக்கு. நினைத்தால் எப்படியாவது பாடம் கற்பிக்க முடியும்.”

“நீங்க அப்படியே பரத்வாஜ் போல் பேசுறீங்க.”

பாவனா வியப்போடு “பரத்வாஜை உனக்குத் தெரியுமா?” என்று கேட்டாள்.

“ஒரு நாள் இந்த கஷ்டங்களை எல்லாம் தாங்கிக்க முடியாமல் சூட்கேசை தூக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டேன். அன்று இரவுதான் அவர் என்னைச் சந்தித்தார். இப்போ நீங்க சொன்னதையே சொன்னார் அவர். எனக்கு தைரியம் போதவில்லை. திரும்பி வீட்டிற்குப் போய்விட்டேன்.

“பரவாயில்லை. இப்பவும் ஒன்றும் மிஞ்சி விடவில்லை. அந்த பரமஹம்சாவை ஒரு ஆட்டம் ஆட்டி வைப்போம்.”

சாஹிதியின் முகம் மலர்ந்தது. “அது மட்டும் நடந்தால் உங்கள் நன்றியை மறக்க மாட்டேன். கைமாறு பண்ணுவேன்.”

“பாவனா சிரித்தாள். “என்ன பண்ணுவாய்?”

“சொத்து முழுவதையும் எழுதித் தந்து விடுகிறேன்.”

“உன் சொத்து எனக்கு எதுக்கு? ஆனாலும், இதோ பார்... இந்த தேர்தல் முடியும் வரையிலும் பொறுத்திரு. நீ மட்டும் தளர்ந்து போய்விடக் கூடாது. அந்தப் பரமஹம்சா ஒரு குள்ள நரி. விதவிதமாக திட்டம் போடுவான். பாம்பு போல் பழி வாங்குவான். நீ தைரியமாய் இருக்கணும்.”

“கண்டிப்பாய் இருப்பேன். ஆனால் ஒரு கேள்வி கேட்கலாமா?”

“என்ன?”

“எனக்காக இதெல்லாம் ஏன் பண்ணுறீங்க?”

“உனக்காக மட்டுமே இல்லை. எனக்காகவும்தான். அன்றிரவு பரத்வாஜ் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுவிட்டு இந்தக் கஷ்டங்களிலிருந்து நான் எப்படி வெளியேறுவது என்று மட்டும்தான் யோசித்தேன். கஷ்டம் தருபவர்களை அப்படியே விட்டு விடக்கூடாது என்று இப்போ தோன்றுகிறது. பரமஹம்சா, ராமமூர்த்தி, ராமநாதன்.. இவர்களின் கைகளிலிருந்து ஒரு பாவனா விடுப்பட்டால் இன்னொரு சாஹிதி சிக்கிக் கொள்கிறாள். எல்லோருக்கும் பாடம் புகட்டணும். அதுசரி, ராமநாதன் மீது உனக்கு சாப்ட் கார்னர் எதுவும் இல்லையே?”

“சாப்ட் கார்னரா? இனி வாழ்நாளில் என்றுமே அவனைச் சந்திக்கப் போவதில்லை.” உறுதியாய் சொன்னாள் சாஹிதி. ஆனால் அது அத்தனை சுலபமாக முடியவில்லை.

*****

தேர்தல்கல் முடிவடைந்தன.

பாவனா ஐம்பதாயிரம் ஓட்டுகள் மெஜாரிட்டியுடன் வெற்றி பெற்றாள்.

எண்ணிக்கை முடிவடைந்து, முடிவுகளை அறிவித்த பொழுது, அவளால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. “எனக்கு இன்னும் இதெல்லாம் கனவைப் போலவே இருக்கு” என்றாள் கட்சித் தலைவரிடம்.

கட்சித் தலைவர் சிரித்தார். “எனக்கு இதல்லாம் ஆச்சரியமாய்த் தோன்றவில்லை. மக்கள் அபிப்பிராயம் வெள்ளத்தைப் போன்றது. காற்றின்போக்கைப் பொறுத்து அது வேகமாய் பரவும். அவருடைய மகன் அப்பாவிப் பெண்ணை ஏமாற்றினான். அதை நீ தைரியமாய் வெளிப்படுத்தினாய். அது போதும். அவருடைய இருபத்தைந்து அரசியல் வாழ்க்கை வெள்ளத்தோடு அடித்துக் கொண்டு போய்விட்டது. தாம் பண்ண முடியாததை இன்னொருத்தர் பண்ணிவிட்டால் மக்கள் ஐடென்டிஃபை பண்ணிகொள்வார்கள். உன் வெற்றிக்கு அதுதான் காரணம்.”

“அப்போ இந்த வெற்றி நெகடிவ் ஓட்டிங் மூலமாய் வந்ததுதானா? இது நிரந்தரம் இல்லையா?”

“அரசியலில் எதுவுமே நிரந்தரம் இல்லை. அது வெற்றியே இருந்தாலும் சரி, தோல்வியாய் இருந்தாலும் சரி.”

******

“வணக்கம். என் பெயர் பாவனா. என்ன நினைவிருக்கலாம்” என்றாள் கைகளைக் கூப்பியபடி பாவனா.

பரமஹம்சா அவளைக் கூர்ந்து நோக்கினான். எங்கேயோ பார்த்த நினைவு. ஆனால் ஞாபகம் வரவில்லை. தினந்தோறும் நிறைய பெண்பக்தர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் பாவனாவின் அழகு கண்களைத் திருப்பிக் கொள்ள முடியாதபடி இருந்தது.

“என்னை அன்றைக்கு சாஹிதி காரின் கொண்டு விட்ட போது நீங்க பார்த்தீங்க.”

“ஓ.. நீயா.. எப்படி இருக்கும்மா உன் உடம்பு?”

அவன் பேப்பர் படிக்க மாட்டான் என்று பாவனாவுக்குப் புரிந்துவிட்டது. தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று அவன் மூலமாய் பூஜைகளைப் பண்ணிக் கொண்டவர்கள் கூட பாவனாவைப் பற்றி அவனிடம் சொல்லவில்லை. அது அவன் துரதிர்ஷ்டம். கையை காற்றில் வீசி உள்ளங்கையைத் திறந்தான். சிவப்பு நிற குங்குமம் அவன் உள்ளங்கையில் மின்னிக் கொண்டிருந்தது.

“எடுத்துகொள். உன் சௌபாக்கியம் என்றும் தழைத்திருக்கும்” என்றான்.

பாவனா பக்தியோடு அந்த குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

“உங்க ஆசீர்வாதத்தால் என் உடம்பு சரியாகிவிட்டது. அது கேன்சர் இல்லை என்று சொல்லி விட்டார்கள். உங்கள் தரிசன பாக்கியம் கிடைத்ததுமே இவ்வளவு பெரிய ஆபத்து நீங்கிவிட்டது என்று தோன்றியது. அதான் இன்னொருமுறை உங்கள் தரிசன பாக்கியத்துக்காக வந்திருக்கிறேன். உங்களைப் பார்த்தால் ஏதோ புதிய சக்தி உள்ளேயிருந்து பொங்கி எழும்புகிறது.”

“ரொம்ப சந்தோஷம் அம்மா. பரமஹம்சாவை நம்பியவர்களை யாரையுமே துக்கம் நெருங்காது.” அவள் கையைத் தடவிக் கொண்டே சொன்னான். பாவனாவுக்கு ராமநாதனின் நினைப்பு வந்தது. இவன் மக்களை கவர்வது இந்த விதத்தில்தான் போலும் என்று நினைத்துக் கொண்டாள்.

சிரிப்பை அடக்கிக் கொண்டே “சாஹிதிக்கு எப்போ கல்யாணம் பண்ணப் போறீங்க?” என்று கேட்டாள்.

“பண்ணனும். ஆனால் யார் வந்தாலும் பெண்ணின் சொத்துக்காகவே வருகிறார்கள். அதுதான் வருத்தமாய் இருக்கு.”

“சொத்தெல்லாம் அவளுடைய அம்மா நிர்மலாவின் பெயரில்தானே இருக்கு? மகளுடைய பெயருக்கு எழுதி வைக்க வேண்டாம் என்று சொல்லி விடுங்கள். சொத்து கைக்கு வந்தால் சாஹிதி எல்லா பணத்தையுமே கஞ்சாவுக்கு செலவு பண்ணி நாசமாக்கி விடுவாள்.”

“ஓஹோ! சாஹிதி விஷயம் உனக்குக் கூட தெரியும் என்று சொல்லு. உன் சிநேகிதிதானே! எனக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. இந்த தொல்லைகளை எல்லாம் விட்டுவிட்டு

சன்யாசம் வாங்கிக்கொண்டு எங்கேயாவது போய் விடலாம் என்றாலும் பந்தங்கள் விட மாட்டேன் என்கிறது."

"எப்படிங்க விடும்? உங்க முதல் மனைவி இறந்து விட்டாள் என்றாலும், இரண்டாம் மனைவியும், மூன்றாம் மனைவியும் உயிரோடுதானே இருக்கிறார்கள்? அப்புறமாய் ரங்கம்மாவைப் போன்ற பெண் பக்தர்களின் கதி என்னவாகும்?"

திடீரென்று அந்த அறையில் நிசப்தம் சூழ்ந்து கொண்டது. பரமஹம்சா வியப்போடு அவளைப் பார்த்தான். அவள் லேசாய் சிரித்துக் கொண்டிருந்தாள். அவன் முகம் சிவந்தது.

"நீ என்ன சொல்கிறாய்? அதிகப் பிரசங்கம் பண்ண உனக்கு தைரியம் எப்படி வந்தது? சாஹிதி உன்னிடம் வந்து போதை மயக்கத்தில் எதையோ உளறி இருக்கிறாள். அப்படித்தானே?"

"உண்மைதான். சாஹிதி ஓரளவுக்குச் சொன்னாள். அவள் விஷயத்தை விட்டுத் தள்ளு. ரங்கம்மா என்ற சமையல்காரி வெளியே ஹாலில் உன் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய சேரியில் பஞ்சாயத்து நடந்ததாம். நீ தந்த தெய்வப் பிரசாதம் அவளுக்கு ஆபத்தைக் கொண்டு வந்திருக்கிறது. கணவன் உண்மையைத் தெரிந்துகொண்டு அவளை வீட்டைவிட்டு துரத்திவிட்டான். உனக்கு பாத சேவை பண்ணிக்கொண்டு குழந்தையின் பொறுப்பைத் தந்தையான உன்னிடமே ஒப்படைத்து பெரும் பேரு அடையணும் என்று காத்திருக்கிறாள்."

பரமஹம்சாவின் முகம் தொய்ந்துவிட்டது. "அந்த ரகளை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். உனக்குத் தேவையில்லை. நீ

இங்கிருந்து போய்ச் சேர் . என் பொறுமையைச் சொதிக்காதே" என்றான்.

"அம்மம்மா! அப்படிச் சொல்லிவிடாதே. நான் வந்த வேலை இன்னும் முடியவில்லை. இன்னொரு விஷயம்.. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நீ கொடுத்த சௌபாக்கியம் எனக்குக் கொஞ்சமும் பயன்படாது. நான் விவாகரத்துக்காக கோர்டில் கேஸ் பைல் பண்ணி இரண்டு மாதமாகிறது. உனக்கு ஜோசியம் சொல்லும் சக்தி கூட கிடையாது. அப்பாவி மக்களுக்கு எட்டாத வகையில் உன்னைப் பற்றிய உண்மைகள் நிறைய மறைந்து இருக்கின்றன. அதில் முக்கியமானது, நீ இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் சொத்து உன்னுடையது அல்ல. அதை நிரூபிப்பதற்காக வந்திருக்கிறேன். ஒரு காலத்தில் சோடா குடிக்கவும் வக்கு இல்லாமல் தகிக்கும் வெயிலில் நடந்து போவாய் நீ. இன்றைக்கு ஏ.சி. காரில் தவிர வேறெதிலும் சுற்றுவதில்லை. எப்படி? அதை விட்டுத் தள்ளு. சௌபாக்கியம் பெண்களுக்கு மட்டுமே உரியது இல்லை. நாளையிலிருந்து உன் வீடு உன் மூன்று மனைவியருடனும், ஆறு குழந்தைகளுடனும் கலகலவென்று இருக்கப் போகிறது. அதோடு இந்த விஷயத்திற்கு விளம்பரம் தந்து பத்திரிகையில் நான் எழுதும் கட்டுரைகளால் உன் எஞ்சிய பக்தைகளின் கணவன்மார்கள் எல்லோரும், தம் மனைவியரை அழைத்து வந்து மிகப் பணிவுடன் உனக்கு அர்பணித்துக் கொள்வார்கள். விரைவிலேயே நீ ஸ்ரீகிருஷ்ணரைப் போன்ற பெரிய மனிதனாகி விடுவாய்."

"என்ன துணிச்சல் உனக்கு? என்னைப் பற்றி பத்திரிகையில் எழுதப் போகிறாயா? உன் மீது மானநஷ்ட வழக்குப் போடுகிறேன் பார். உன்னை ஜெயிலுக்கு அனுப்புகிறேன்."

“கண்டிப்பாய் அனுப்பு. நான் மட்டும் உன்னை ஜெயிலுக்கு அனுப்ப மாட்டேன். மனைவிகளையும், குழந்தைகளையும் போஷிப்பதற்கு தெருவில் கையேந்தி பிச்சை எடுத்து சம்பாதிக்கும் நிலைக்கு அனுப்புகிறேன்.”

“உன்னை... உன்னை...”அவன் அவள் மீது பாயப் போனான்.

பாவனா சிரித்தாள். “என்னை ஒன்றும் பண்ண முடியாது உன்னால். என் உடம்பின் மீது உன் கை பட்டால் போதும். அடுத்த வினாடி என் செகரெட்ரி உள்ளே வருவார். அவர் அடிக்கும் அடி உன் உடம்பில் வெளியில் தென்படாது. கோர்ட்டுக்குப் போனாலும் கேஸ் நிற்காது. மேலும் உன் மேலேயே கேஸ் போடுவேன்.”

“உனக்கு செகரெட்ரியா? எதுக்கோ, பாவம்!” ஏளனமாய் சிரித்தான் அவன். தன்னை பயமுறுத்துவதற்காகதான் அவள் அவ்வாறு பேசுவதாய் நம்பினான் அவன்.

அவன் சிரிப்பைத் தன் குரலால் அடக்கியபடி பாவனா சொன்னாள்.

“ஆமாம். என் சேகரெட்ரி தான். அதான் சொன்னேனே, உன் சக்திக்கு எட்டாத உண்மைகள் இன்னும் இருக்கின்றன என்று. தற்சமயம் இந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. நான். என் தொகுதியில் சாஹிதி, ரங்கம்மா என்ற இரு பெண்கள் கொடுத்த புகாரின் ஆதாரமாய் விசாரணை செய்வதற்கு உன்னிடம் வந்தால், என்னையே கற்பழிக்க முயன்றாய் என்று நாளைய பேப்பரில் எழுதச் செய்கிறேன். எதற்கும் நல்லது. நாளை முதல் எல்லா பேப்பர்களையும் வாங்கிப் புரட்டு. என்னதான் சுவாமிகளாய் இருந்தாலும் இதுபோன்ற

விஷயங்கள் பேப்பர் மூலமாய்தான் தெரியும்” என்று அங்கிருந்து போய்விட்டாள்.

பரமஹம்சா சுதாரித்துகொள்ள ரொம்ப நேரம் ஆயிற்று. பிறகு யோசனையில் ஆழ்ந்தான். “யார் இந்த பாவனா? தன்னை எதற்காக இவ்வாறு மிரட்டுகிறாள்? சாஹிதிக்காகவா? சிநேகிதிக்கு உதவி செய்யும் எண்ணமா? இதற்கு நிர்மலா சம்மதித்தாளா?

நிர்மலாவின் நினைவு வந்ததுமே தைரியம் வந்து விட்டது. அந்த அப்பாவிப்பெண் தன் பக்கம் இருக்கும் வரையில் தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. அவளிடம் பேசுவோம் என்று போன் அருகில் சென்றான். அதற்குள் போன் மணி ஒலித்தது.

“நான்தான் ராஜலக்ஷ்மி. உங்களை எல்லா இடத்திலும் தேடிக் கொண்டிருக்கிறேன். என்ன செய்துகிட்டு இருக்கீங்க? இங்கே குடி மூழ்கிப் போய்க் கொண்டிருக்கு” என்றாள். அவள் வாய்த் துடுக்குத்தனம் அவன் அறியாதது இல்லை.

“என்ன நடந்தது?”

“இந்த வீடு நம் சொந்த வீடா இல்லையா? அதைச் சொல்லுங்க முதலில்.” உலுக்கி எடுத்தாள் போனில்.

ஊட்டி ரேஸில் எதிர்பாராமல் எழுபத்தையாயிரம் இழந்துவிட்ட போது, அந்த வீட்டை வாங்கப் போவதாய் போய் சொல்லி, அவள் சொந்த நிலத்தை விற்கச் செய்து பணத்தை எடுத்துக் கொண்டான். நிர்மலாவின் வீட்டை தன் சொந்த வீடு என்று சத்தியம் பண்ணினான். இப்பொழுது லக்ஷ்மி அதைப் பற்றிக் கேட்க வேண்டிய காரணம்?

“சொல்லுங்கள். வீடு நம்முடையது என்றால் காலி பண்ணச் சொல்லி நோட்டீஸ் ஏன் வந்திருக்கு?” அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் வெடி குண்டாய் வெடித்தது. காலி பண்ணச் சொல்லி நோ...ட்...டீ....ஸ்!

“இதோ நான் வருகிறேன். அப்புறமாய்ப் பேசுவோம்” என்று போனை வைத்துவிட்டான் அவன். நோட்டீஸ் யார் கொடுத்திருப்பார்கள்? சாஹிதியா? அவளுக்கு அத்தனைத் துணிச்சல் எப்படி வந்தது? யோசித்தபடியே வெளியே வந்தான்.

வாசலில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள் ரங்கம்மா. மடியில் குழந்தை.

“அந்தம்மா யாரோ தெரியாது. என் விஷயம் எல்லாம் கேட்டுக்கிட்டு இங்கே கூட்டிக் கொண்டு வந்தாள் சாமி. என்னை இங்கனே இருக்கச் சொல்லிடுத்து” என்றாள் பணிவுடன்.

அவளை ஒதுக்கித் தள்ளிவிட்டு பரமஹம்சா வெளியே நடந்தான். நிலைமை எவ்வளவு மோசமாய் மாறப் போகிறது என்று அவன் ஊகித்திருக்கவில்லை.

அன்றே அவன் பங்களூருக்குப் போய்விட்டான். பதினைந்து நாட்களுக்குப் பிறகு அவன் திரும்பி வந்தான். விமான நிலையத்திற்கு எப்போது போல் கார் வரவில்லை. அவனுக்குக் கோபம் வந்தது. டாக்சியைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான். வீட்டு வாசலில் பூட்டு தொங்கிக் கொண்டு இருந்தது. வீட்டிற்கு முன்னால் சிம்மாசலம் இருந்தான், ஒரு காலத்தில் தான் வேலையை விட்டுத் துரத்திய வேலைக்காரன்!

“வீடு, பேக்டரி எல்லாத்தையும் தன் ஆதீனத்தில் எடுத்துக் கொள்ளச் சொல்லி யாரோ லாயரை ஏற்பாடு செய்து

கொண்டாங்களாம் சின்னம்மா. அவர் பூட்டிக்கொண்டு போய்விட்டார். பெரியம்மா, சின்னம்மா இரண்டு பெரும் ஊருக்குப் போயிருக்காங்க. நிர்மலாம்மா உங்களுக்கு எழுதிக் கொடுத்த பத்திரங்களை எல்லாம் கொடுத்துவிட்டுப் போகச் சொன்னாங்க. இல்லா விட்டால் நோட்டீஸ் அனுப்புவாங்களாம்."

"பின்னே நீ எதற்காக இங்கே இருக்கிறாய்?"

"இரண்டு மாத சம்பளம் கொடுத்துவிட்டு, சர்வென்ட் க்வார்டரில் இருந்துகொண்டு வீட்டை பார்த்துக் கொள்ளச் சொன்னாங்கய்யா."

"ஒரு தடவை பூட்டைத் திற. உள்ளே என் துணிமணி எல்லாம் இருக்கு. எடுத்துக் கொள்கிறேன்."

'சாவி என்னிடம் இல்லை. உங்க துணிமணி எல்லாம் ஒரு சூட்கேசில் போட்டு வைத்திருக்கிறாங்க. கொண்டு வருகிறேன், இருங்கள்" என்று உள்ளேயிருந்து சூட்கேஸ் கொண்டு வந்து கொடுத்தான்.

"ஒரு தடவை சாவியைத் தாடா. என் இந்திரா விகாஸ் பத்திரங்கள் எல்லாம் உள்ளேதான் இருக்கு."

"இன்னும் விகாஸம் எங்கே இருக்கு? எல்லாமே இருட்டுதானுங்க." ஜோக் அடித்தான்.

"மூடு வாயை. போய் ஆட்டோவை பிடித்துக் கொண்டுவா."

"அருகில் கிடைக்காதுங்க. வீட்டை விட்டுவிட்டு ஒரு நிமிஷம் கூடப் போகக் கூடாதுன்னு வார்னிங் கொடுத்திருக்கிறாங்க.

ராத்திரி வேளையில் திருட்டு பயம் ஜாஸ்தின்னு சொன்னாங்க. நீங்க வந்தால் இன்னும் ஜாக்கிரதையாய் இருக்கச் சொன்னாங்க."

"கிழித்தாய் போ."

"நான் எப்போதும் எதையும் கிழிக்கலைங்க. ஒரு நாளும் தவறான காரியங்கள் செய்தது இல்லை" என்றான் சிம்மாச்சலம் ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே.

பரம்ஹம்சாவின் முகம் சிவந்துவிட்டது. சூட்கேசை எடுத்துக்கொண்டு இரண்டாவது வீட்டிற்கு வந்த போது வீட்டிற்கு முன்னால் லாரி நின்று கொண்டிருந்தது. சாமான்களை ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன இது? நான் வராமல் வீட்டை ஏன் மாற்றுகிறாய்?" கோபமாய் கேட்டான் ராஜலக்ஷ்மியை.

"இது நம் வீடுன்னு ஏமாற்றினாய். அவர்கள் நோட்டீஸ் அனுப்பி விட்டார்கள். ஆனாலும் உனக்கு நான் எதுக்கு? அதான் துணைக்கு ரங்கம்மாவும், குழந்தையும் இருக்காங்களே?"

"லக்ஷ்மி.. நீ .. நீ என்னை விட்டுப் போகிறாயா?" நம்ப முடியாதவனாய் கேட்டான்.

"ஆமாம். நிர்மலாவுக்கு ஏற்பட்ட கதி எனக்கும் வந்து விடக் கூடாது என்றுதான்." விடுவிடென்று வெளியே நடந்தாள். அவன் தடுக்கப் போனபொழுது பின்னாலேயே வந்த ரங்கம்மா "வாங்க சாமி. அவள் போனால் போகட்டும். நான் தான் இருக்கிறேனே உங்களுக்கு பாதசேவை பண்றதுக்கு" என்றாள்.

“சீ.. போ” என்று அவள் பிடியிலிருந்து கைகளை உதறிக் கொண்டான் பரமஹம்சா. இயந்திர கதியில் இதையெல்லாம் செய்து கொண்டிருந்தானே தவிர சாஹிதியை எப்படி எதிர்த்து நிற்பது என்று அவன் மனம் யோசித்துக் கொண்டிருந்தது.

35

பதினைந்து நாட்களாய் பீடி தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருந்ததுபாவனாவின் தொகுதியில் சில . ஆயிரக்கணக்கான பீடி தொழிலாளர்கள் வசித்து கொண்டிருந்தார்கள்.’அதில் நிறைய பேர் பெண்கள்தான் . அவள்களுடைய ஓட்டுக்கள் தான் அவளுக்கு நிறைய கிடைத்தன .

பாவனா அவர்கள்சார்பில் சமரசம் பண்ண ,முயன்றாள்.

“மேடம்நீங்கள் எங்கள் நிலைமையைக் கூட புரிந்து ! பீடி .கொள்ளணும் உற்பத்தியில் வரும் லாபம் மிகவும் குறைவு . இப்போ கூலியை அதிகரித்தால் பீடியின் விலையையும் உயர்த்த வேண்டியிருக்கும்” என்றார் பேக்டரி முதலாளி.

“கடந்த வருஷத்தில் நீங்க நான்கு முறை விலையை உயர்த்தி இருக்கீங்கஉங்கள் லாபத்தில் பங்கு கொடுக்காமல் இருப்பது . அநியாயம் இல்லையா?”

“லாபம் எங்கே அதிகமாச்சு ,மேடம்,? ஒரு பக்கம் இலையின் விலையும், இந்தப் பக்கம் புகையிலையின் விலையும் எவ்வளவு உயர்ந்து இருக்குன்னு பாருங்கள்” என்று காகிதத்தை அலட்சியமாய் முன்னுக்குத் தள்ளினான்.

பாவனா அந்த காகிதத்தை இரண்டு வினாடிகள்தான் பார்த்தாள்.

“இந்த கணக்கெல்லாம் தவறுஇன்கம்டாக்ஸ் காரர்களுக்கு . காட்டுவதை எனக்குக் காட்டாதீங்கபீடி இலைகள் நம் . நீங்க போட்ட ரேட் .நாட்டிலேயே கிடைப்பவைதான் மட்டும்

குஜராத் போன்ற வட மாநிலங்களுக்கு சப்ளை பண்ணுவதுநீங்க . போட்டிருக்கும் புகையிலையின் விலை மார்கெட் ரேட்நாங்கள் . தரும் கண்ட்ரோல் ரேட் இல்லைஇதைக் கொண்டு உங்கள் . லாபம் எவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்லட்டுமா?"

அவன் முகம் வாடி விட்டதுஇருபத்தைந்து வயதே உடைய . இந்தப் பெண், அரசியலுக்குப் புதிது, இவ்வளவு விஷயங்களை சேகரித்துக் கொண்டிருப்பாள் என்று நினைக்கவில்லை.

"சாரி மேடம் .எங்க செகரெட்ரி தெரியாமல் தவறு செய்திருப்பார் ! சொல்லுங்கள், இப்போ என்ன செய்யச் சொல்றீங்க?"

"கூலியை பத்திலிருந்து பதினைந்திற்கு உயர்த்துங்கள்கட்சியின் . நிதிக்க ஐம்பதாயிரமும், பெண்கள் நல நிதிக்கு பத்தாயிரமும் கொடுங்கள்பீடி விலையை . பதினைந்து பைசாவுக்கு உயர்த்துங்கள்."

"ரொம்ப கஷ்டம்.அது போதாது மேடம் ."

"அப்படி என்றால் பேக்டரியை அரசாங்கம் உடைமையாக்கிக் கொண்டு விடும்முதலமைச்சர் .இதை நான் சொல்லவில்லை . .சொன்னது தான்"

அரைமணியில் எல்லாவற்றுக்கும் சம்மதித்துவிட்டுப் போனார் அவர்.பாவனா லேபர் யூனியன் செகரெட்ரியை அழைத்தாள் .

"நிர்வாகம் சம்மதிப்பதாய் இல்லைகூலி இரண்டோ மூன்றோ . .உயர்த்துவதாக சொல்கிறார்கள்"

"வேலை நிறுத்தம் தொடரும்" என்றான் அவன்.

"அதனால் லாபம் என்ன?" கேட்டாள் பாவனா ."கைவசம் உள்ள சரக்கை பிளாக்கில் விற்றுக் கொள்வார்கள் அவர்கள்எவ்வளவு . நாட்களுக்கு பட்டினி கிடப்பீங்க?"

“லாபம் இல்லை மேடம்தொழிலாளர்களை குறைவாக எடை . .போடாதீங்க”

அவள் அவனைக் கூர்ந்து பார்த்தாள்இந்தப் பக்கத்தில் . நிர்வாகத்தினரும், அந்தப் பக்கம் யூனியனும் சரி இரண்டு பேரும் பொய்யும் பித்தலாட்டமும் தான். செகரெட்ரி கையில் பத்தாயிரம் விழுந்தது.

“கூலியை ஐந்து ரூபாய் உயர்த்துவதற்கு சம்மதிக்க வைக்கிறேன் . உங்கள் யூனியனை எங்கள் கட்சியுடன் இணைக்கச் .செய்யுங்கள்”

சந்தோஷமாய் ஒப்புக் கொண்டான் அவன்.

“நாளைக்கு உங்கள் சேரியில் மீட்டிங் ஏற்பாடு செய்யுங்கள்நான் . .வந்து பேசுகிறேன்’

“சரி மேடம்.”

மேடையேறி ஒரு மணி நேரம் பிரசங்கம் செய்தாள் பாவனா. “ஐந்து ரூபாய் கூலி உயர்த்துகிறோம்” என்று சொன்னதுமே கைத்தட்டல் ஒலி வானை எட்டியது .“உங்கள் உடல்நலம் பற்றி கூட யோசித்து வருகிறோம்விரைவி .ல் புதிய காப்பீடு திட்டம் ஒன்றை அறிமுகம் செய்கிறோம்புகையிலை ஒவ்வாமையினால் . ஏற்படும் நோய்களை குணமாக்குவதற்கு இந்தச் சேரியில் சிறப்பு டிஸ்பென்ஸரியைத் திறக்கப் போகிறோம்.”

ஐந்து நிமிடங்கள் வரை அந்த எல்லையில் வாழ்த்து முழக்கங்கள் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

கூட்டம் வெற்றிகரமாய் முடிந்தது.

******

தமிழகத்தைப் புயல் மூன்று நாட்கள் உலுக்கி எடுத்துவிட்டது. முக்கியமாய் கடலோரப் பிரதேசங்கள் அதிகமாய் பாதிக்கப்

பட்டனஇயற்கை . சீற்றமடைந்தால் என்ன விளைவு ஏற்படும் என்று அந்த எல்லைகளில் சுற்றுப் பயணம் செய்து பார்த்தால் புரியும்.

பசி குடலைப் பிடுங்கும் .மனித நேயம் நசிந்து போய்விடும் . இறந்து உப்பிப் போயிருக்கும் உடல்களிலிருந்து நகைகளை கையாளும் காட்சிகள் ஒரு புறம், இறந்து விட்டவர்களை அதிர்ஷ்டசாலிகளாக எண்ணி, பிழைத்துக் கரையேறியதற்காக வருந்தும் துரதிர்ஷ்டசாலிகள் இன்னொரு புறம்இழந் .தது உடையாக இருக்கலாம்கயிற்றுக் . கட்டிலாகவும் இருக்கலாம் . திரும்பவும் சம்பாதித்துக் கொள்வதற்கு பல ஆண்டுகள் பாடுபட வேண்டியிருக்கும்.

முதலமைச்சர் அந்த இடத்தில் கேம்ப் போட்டிருந்தார்மத்திய . உள்துறை அமைச்சர் அந்த இடத்திற்கு வந்து சேரும் போது மாநில அமைச்சர்களில் பலர் அங்கே கூடியிருந்தார்கள் . .மயானத்தில் பண்டிகை கோலாகலம் என்பது போல் டிவி கேமிராக்கள், பத்திரிக்கை நிருபர்கள் கூட்டத்தால் அந்த இடம் சந்தடியாய் இருந்தது.

பாவனா முதல் பேட்சிலேயே அந்த இடத்திற்குப் போய்விட்டாள் . நிருபர்களின் சலசலப்பு கேமிராக்காளின் சந்தடி இவற்றுடன் சம்பந்தம் இல்லாமலேயே வேலைகளை செய்து கொண்டிருந்தாள்வாலண்டியர்களை ., ஊரில் இருந்த இளைஞர்களை திரட்டி வேலைகளை உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள்அவளிடம் ஏதோ புரியாத கம்பீரமும் ., கண்களில் மிடுக்கும் இருந்தன.

எல்லாம் துடைத்துக் கொண்டு போய்விட்டதுஎல்லோருக் .கும் உதவி கிடைக்கும்படி பார்க்க வேண்டும்குடிசையில் இருப்பவன் . வீட்டில் உள்ள எல்லோரையும் வரிசையில் நிற்க வைப்பான் . சந்தர்ப்பம் கிடைத்தால் இன்னொரு தடவை அனுப்பவும் தயங்க

மாட்டான்நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன் தானே வந்து . கொடுத்ததை கூச்சத்துடன் வாங்கிக் கொண்டு போவான் . கொஞ்சம் மேல் மட்டத்தில் இருப்பவன் கைநீட்டி கேட்பதற்குத் தயங்கி தொலைவில் நின்றபடி பார்த்துக் கொண்டிருப்பான். பாவனா ஒவ்வொருவரிடமும் போய் விசாரித்து விட்டு உதவி பண்ணிக் கொண்டிருந்தாள்அவளிடமிருந்த உண்மையான . அது .அன்பு எல்லோரையும் கவர்ந்தது முதலமைச்சரின் கவனத்தையும் ஈர்த்து விட்டதுபத்து நாட்களின் உழைப்பு .. நற்பலன்களை கொண்டு வந்தாலும் அவளுடைய உடல்நலம் பாதிக்கப் பட்டுவிட்டதுஜுர . மயக்கத்தில் இருந்த அவளை சென்னைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். குணமாவதற்கு ஒரு வாரம் பிடித்ததுஅவள் ஆஸ்பத்திரியிலிரு .ந்து வெளியேறிய பொழுது நாடு முழுவதும் அவளைக் கொண்டாண்டிக் கொண்டிருந்ததுஅதிகாரத்தில் . இருக்கும் கட்சியை விமரிசிப்பதற்கு கடுகளவு வாய்ப்பு கிடைத்தாலும் தவற விடாத பத்திரிக்கை ஒன்று அவள் சேவைகளைப் பாராட்டி தலையங்கம் எழுதி இருந்தது.

பாவானாவுக்கு ரொம்ப திருப்தியாய் இருந்ததுவிளம்பரதிற்காக . அரசாங்கம் செய்ய வைக்கும் பாராட்டு விழாக்கள் இல்லை அவைஉண்மையான இதயத்திலிருந்து பொங்கி . வெளி வந்த அன்பிற்கு எடுத்துக்காட்டு.

ஒரு பக்கம் பாவனா இவ்வாறு வேலைகளில் ஆழ்ந்து தத்தளித்துக் கொண்டிருக்கையில், இன்னொரு பக்கம் அமைச்சர்களின் கூட்டணி கவலையில் ஆழ்ந்து போகும்படியான ஆபத்து ஏற்பட்டதுஇப்படிப்பட்ட நேரத்தில் ஓய்வில்லாமல் வேலை . செய்ய வேண்டிய ஹோம் மினிஸ்டர் மட்டும் சுற்றுப் பயணத்திற்கு வரவில்லைஅவர் . சிபாரிசு செய்த நபருக்கு சேர்மன் பதவி கிடைக்கவில்லைஅதனால் விரோதம் . ஏற்பட்டுவிட்டதுஇதை .யே சாக்காய் வைத்துக் கொண்டு

எதிர்கட்சியினர் அவருடன் பெச்சு வார்த்தைத் தொடங்கினார்கள். “அமைச்சர் கூட்டணியில் முக்கியமான பதவியில் இருக்கும் நபர இவ்வாறு எதிர்க்கட்சியுடன் கைகோர்ப்பது கட்சிக்கு பெரிய அடியாய் மாறக்கூடும்என்று . கட்சித் தலைவர் எச்சரித்தார். “என்ன பண்ணலாம்?” முதலமைச்சர் யோசனையுடன் கேட்டார், ‘அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிட வேண்டும்.” “மை காட்.அப்படி என்றால் கட்சியில் இருக்கவே மாட்டார் !” “அவர் கட்சியில் எப்படியும் இருக்க மாட்டார்இப்போ அவர் . தானாகவே அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வெளியே போய்விட்டால் மக்களுக்கு நடுவில் அவருடைய செல்வாக்கு பெருகிவிடும்நாமே முதலில் அவரை . நீக்கிவிட்டோம் என்றால், அதற்குப் பிறகு அவர் கட்சியை விட்டு விலகிவிட்டாலும் ‘அமைச்சர் பதவி போய் விட்டதால் கட்சியை விட்டு விலகிப் போய்விட்டார்’ என்று பிரசாரம் பண்ணலாம்.” அரசியலில் ஏற்ற இறக்கங்களை எத்தனையோ சந்தித்த முதலமைச்சர் கூட சிலையாய் தலைவரின் பக்கம் பார்த்தார் . அரசியல் சதுரங்கத்தில் எந்த காயை எப்போ நகர்த்துவது என்று தெரிந்திருக்க வேண்டும்எதிரியை மூச்சுவிட முடியாதபடி . வீழ்த்த வேண்டும்.

“ஹோம்மினிஸ்டரை நீக்கிவிட்டு....” கட்சித் தலைவர் மேலும் எதோ சொல்லப் போனார்.

“ஹோம் மினிஸ்டரை மட்டுமே இல்லைஅமைச்சர்களின் . கூட்டத்தையே மாற்றி விடுவோம்கட்சி எதிர்ப்பு வாதிகள் . எல்லோரும் ஒரேயடியாடியாய் போய்விட்டால் கட்சி மேலும் வலுவாக இருக்கும்.” என்றார் முதலமைச்சர்.

“இந்த யோசனையும் நன்றாகத்தான் இருக்கு” என்றார் கட்சித்

தலைவர்.

****

அதே சமயத்தில் பாவானா வெளியே தோட்டத்தில் இருந்தாள் . நேரம் பதினொன்றரைத் தாண்டிவிட்டதுதோட்டம் முழுவதும் . .நிலா வெளிச்சத்தில் தோய்ந்து இருந்தது பார்க்க வேண்டிய பேப்பர்களை எல்லாம் பார்த்துவிட்டு, பதில் தர வேண்டியவற்றை குறித்துக் கொண்டு பக்கத்தில் வைத்தாள்தூக்கம் வராததால் . எழுந்து வெளியே வந்தாள்.
அந்தத் தோட்டத்தைப் பார்க்கும் போது அவளுக்குச் சிறுவயது நினைவுக்கு வந்ததுபோட்டிப் போட்டுக்கொண்டு . தங்கைகளுடன் சேர்ந்து தொட்ட வேலை செய்தது நினைவுக்கு வந்தது.

அசெம்பிளி மெம்பர் ஆன பிறகு மக்களுக்கு இடையிலும், கட்சியிலும் நல்ல பெயர் எடுத்து விட்டிருந்தாள். எல்லோருக்கும் வேண்டியவளாக இருந்தாள்ஆனாலும் ஏதோ . அதிருப்தி . ஆனால் அந்த அதிருப்தி சந்தோஷத்தைப் பகிர்ந்துக் கொள்ள யாருமே இல்லை என்பதால் வந்தது அல்ல.
ஒரு பக்கம் தொழிலாளர்களை, இன்னொரு பக்கம் முதலாளிகளை சிதறடித்து லஞ்சத்தைக் காட்டி சமரசம் பண்ணி வைப்பதும், கட்சிக்கும், கட்சி நலநிதிக்கும் லாபத்தை ஏற்படுத்துவது... “பதவி” என்றால் இதுதானா?

ஒருகாலத்தில் பாஸ்கர் ராமமூர்த்தி குடித்து விட்டு வந்த போது, அரசாங்கம் இதை ஏன் தடை செய்யவில்லை என்று நினைத்துக் கொள்வாள்இப்பொழுது அரசின் . சார்பில் அந்தத் தொழில்களை எல்லாம் ஊக்கப் படுத்த வேண்டும்வேலையில்லா . திண்டாட்டமும், ஜீவன ஆதாரமும் காரணங்கள்!
இதுதானா தன்னுடைய வெற்றி?

பரமஹம்சா பத்து பேர் பெண்களை ஏமாற்றி வெற்றியைச் சாதித்து விட்டதாக நினைக்கிறான் தானோ .கோடிக் கணக்கான மக்களை நம்பச் செய்து வெற்றியைச் சாதித்து விட்டதாக நினைக்கிறாள் .“பிறருக்கு நல்லது செய்யா விட்டாலும் பரவாயில்லைகேட்டது மட்டும் . செய்யாமல் இருந்தால் போதும்” என்பது ஒரு காலத்து கொள்கை .“பிறருக்கு தீமை செய்யாமல் இருப்பது சாத்தியப் படாது. கொஞ்சம் பேருக்காவது நல்லது பண்ணுஅதுதான் உன் பெருந்தன்மை .” என்பது இன்றைய கொள்கையாகிவிட்டது

‘ஏன் இவ்வளவு எதிர்மறையாக யோசிக்கிறாய்? ஒன்றுமே செய்ய முடியாத இயலாமை நிலையிலிருந்து இந்த அளவுக்காவது செய்ய முடிந்ததே என்ற திருப்தி இல்லையா?’ கேட்டது மனசாட்சி. ‘எங்கிருந்து எதுவரையில் இந்தப் பயணம்?’ என்று கேட்டது சோர்வு.

கள்ளமில்லாமல் மரத்தின் நிழலில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைப் பருவம். அன்பையும், அபிமானத்தையும் குழைத்து கோலமிட்ட அந்த வீட்டுமுற்றத்தில் கழித்த வாழ்க்கையின் முதல் பக்கங்கள்சுந்தரியின் நெருக்கம் !, சைலஜாவின் நட்பு, துளிர்த்தவுடன் கிள்ளியெறியப்பட்ட முதல் காதல்வசந்தி !, சாஹிதி, பரமஹம்சா!

சாஹிதியின் நினைப்பு வந்ததுமே “பாவம், அந்தப் பெண் என்ன செய்கிறாளோ?” என்று நினைத்துக் கொண்டாள்தான் . தூண்டிவிட்ட தைரியத்தில் அந்தப் பெண் கடைசி வரையிலும் பரமஹம்சாவை எதிர்த்து நிற்பாளா? தாய் பக்கத்து தாக்குதல் அதிகரித்துவிட்டால் திரும்பவும் தளர்ந்து போய்விடுவாளா?

பாவனா இந்த விதமான யோசனைகளில் ஆழ்ந்திருந்த போதே போன் மணியடிக்கும் சத்தம் கேட்டதுஅவள் . உள்ளே போய் ரிசீவரைக் கையில் எடுத்து "ஹலோ!" என்றாள். "கங்கிராட்சுலேஷன்ஸ்உன்னை ஹோம் மின !ிஸ்டராய் தேர்ந்தெடுக்க இப்பொழுதுதான் முடிவு செய்திருக்கிறோம்." மறுமுனையிலிருந்து முதலமைச்சரின் குரல் கேட்டது. அவளுக்குத் தான் கேட்டதை நம்புவதா, கூடாதா என்று புரியவில்லைஅவள் . நிலைமையைப் புரிந்து கொண்டாற்போல் "கேபினெட் முழுவதையுமே மாற்றிவிட்டு, எல்லோரையும் புதிதாக எடுத்துக் கொண்டோம்இப்பொழுதுதான் லிஸ்ட் . பைனலைஸ் பண்ணினோம்" என்று அவர் சொல்லிக் கொண்டே போனார்.

பாவானா கேட்டுக்கொண்டே ஜன்னல் வழியாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சீட்டுக்கட்டில் சீட்டுகள் ஒன்று சேர்ந்தாற்போல் வாழ்க்கையில் ஆனந்தமும் துக்கமும் கலந்த சங்கமம்.

நிலா வெளிச்சத்தைப் பேலாவில் நிரப்பி வைத்துக்கொண்டு ஒரு தேவதை மேகத்தின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு பூமியை நோக்கித் தெளித்துக் கொண்டிருந்தாற்போல் வீட்டின் முன் எல்லையெல்லாம் பாலாய் காய்ந்து கொண்டிருந்தது வெண்ணிலவு.

நடந்து கொண்டிருக்கும் விஷயங்களைப் பார்த்துக்கொண்டே, வெறுமே உட்கார்ந்திருக்கும் பார்வையாளனைப் போன்றவன் இல்லை பரமஹம்சாதன் பக்கத்து . ஆயுதங்களை சேகரித்துக் கொள்ளக் கூடியவன்.

"பரமஹம்சா சீரியஸ்ஸ்டார்ட் இம்மீடியட்லீ ." என்று தந்தியைக் கொடுத்து தாயையும், மகளையும் திரும்பி வரவழைத்துக்

கொண்டான்அவன் உடல் நலம் சரியாக . இருக்க வேண்டும் என்று ஆயிரம் தெய்வங்களை வேண்டிக்கொண்டே வந்தாள் நிர்மலா.

“என்னை இப்படி நட்டாற்றில் தள்ளிவிட்டு போய்விடலாம் என்று இருந்தாயா நிர்மலா?” இரக்கம் தொனிக்கும் குரலில் கேட்டான்.

“ஐயோஎன்ன பேச்சு இது !?” என்றாள்.

“பின்னே வீட்டைக் காலி பண்ணச் சொல்லி லாயர் நோட்டீஸ் வந்ததே? இதெல்லாம் என்ன?”

“நோட்டீஸா? எனக்கொன்றும் தெரியாதே? சாஹிதிதான் சொன்னாள் .‘நான்தான் மேஜராகிவிட்டேன் இல்லையா . இனிமேல் எல்லாவற்றையும் நானே பார்த்துக் கொள்கிறேன்’ என்று எனக்கு ஏனோ பயமாய் இருக்கு .அவள் ஒரு பைத்தியம் . உங்க மனதை ஏதாவது கஷ்டப் படுத்தி இருந்தால் மன்னித்து விடுங்கள்.”

“சாஹிதி விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்.”

“சாஹிதி என்றதும் நினைவுக்கு வருகிறதுஒருநாள் யாரோ வந்து . சாஹிதி உங்க மகள் இல்லைபத்தாயிரம் கொடுத்தால் ., உங்கள் உண்மையான மகள் யார் என்று சொல்கிறேன் என்றான்.” பரமஹம்சாவின் புருவம் முடிச்சேறியது “யார் அது” என்றான் கடுமையாய்.

“யாரோ பாஸ்கர் ராமமூர்த்தியாம்.”

‘அதுக்கு நீ என்ன சொன்னாய்?”

“உங்களைக் கேட்டுக் கொண்டு சொல்வதாய்ச் சொன்னேன்.”

“நல்ல வார்த்தைச் சொன்னாய்பணம் படைத்தவர்கள் மீது .

லட்சம் பேருக்கு கண் இருக்கும்அதை எந்த விதத்திலாவது . அதுசரி .கறக்கப் பார்ப்பார்கள், நான் வந்த காரியத்தையே மறந்துவிட்டேன்நீ உங்க சொத்து அத்தனைக்கும் என்னை . கார்டியனாய் நியமித்து எழுதிக் கொடுத்த பேப்பர்கள் இவை . நீயே எடுத்துக் கொள்."

நிர்மலா திக்பிரமை அடைந்தவளாய், "இதெல்லாம் எதுக்கு?" என்றாள்.

"உங்க சொத்துக்கு நான் ட்ரஸ்டியாய் இருப்பது சாஹிதிக்குப் பிடிக்கவில்லை போலிருக்குஇதில் அவளுடைய தவறுகூட . அவள் சொன்னது போல் .எதுவும் இல்லை அவளும் பெரியவளாகி விட்டாள் இல்லையா?"

நிர்மலா பெரிதாக அழுதுகொண்டே "அப்படி எல்லாம் சொல்லாதீங்க அதைவிட .என்னைக் கொன்றுப் போட்டு விடுங்கள்நன்றாக இருக்கும் ." என்றாள்.

"இல்லை நிர்மலாநான் இதையெல்லாம் யோசித்துப் . பார்த்துவிட்டுத் தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்இந்தச் . சொத்தெல்லாம் நீ சொந்தமாக சம்பாதித்தது இல்லை . அவன் மகளான சாஹிதி அதை தன் விர .சந்திரனுடையது ுப்பம் போல் அனுபவிக்கலாம்உன்னை ஏமாற்றித் தன் சொத்தை நான் . அபகரித்துவிட்டேன் என்று நாளைக்கு போலீஸில் புகார் கொடுத்தால் கஷ்டமாகிவிடும் இல்லையா? இப்பொழுதெல்லாம் சாஹிதியின் நடவடிக்கையைப் பார்த்தால் அதற்குக்கூட துணிந்து விடுவாள் என்றுதான் தோன்றுகிறது."

"என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் அந்தக் காரியத்தைப் பண்ண விடமாட்டேன்."

"கடவுளின் உத்தரவு இருந்தால் உயிர் போவது அத்தனைக்

கஷ்டம் ஒன்றும் இல்லை நிர்மலா" என்று தன் கையில் இருந்த காகிதங்களைக் கிழித்தெறிந்தான். நிர்மலாவின் திருமணம் பரம்ஹம்சாவுடன் நடந்த போது சாஹிதி எழுதிக் கொடுத்த பவர் ஆப் அட்டார்னி கடிதங்கள் அவை.
அவன் சொன்னது போல் அவற்றை சாஹிதி எப்பொழுது வேண்டுமானாலும் திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம்அவற்றுக்கு . .மதிப்பு இல்லை
"உனக்கு என் வார்த்தையின் மீது மதிப்பு இருந்தால் இதோ, இதில் கையெழுத்துப் போடு" என்று மேலும் சில காகிதங்களை அவளுக்கு முன்னாள் தள்ளினான்அவள் . அவற்றில் கையெழுத்துப் போட்டாள்.
"என்னெவென்று நீ ஏன் கேட்கவில்லை?"
"நீங்கள் சாட்சாத் கடவுள்உங்களைக் கேள்வி கேட்பதா !?"
"ஆனாலும் சொல்ல வேண்டிய கடமை என்னைச் சேர்ந்தது . சொத்து முழுவதும் சாஹிதியின் கணவனைச் சேரவேண்டும் என்றும் சாஹிதிக்கு அதன் மீது உரிமை இல்லை என்றும், கல்யாணம் ஆகும் வரையில் சொத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னிடம் ஒப்படைப்பதாயும் நீ எழுதிக் கொடுத்த பேப்பர்கள் இவைபுரிந்ததா .?"
"சாஹிதி உங்களுக்கு ஏதோ ரொம்ப கொடிய அபராதம் செய்திருக்கிறாள். இல்லாவிட்டால் உங்களுக்கு இவ்வளவு கோபம் வராது." கவலையோடு சொன்னாள் நிர்மலா.
"கோபம் இல்லைகஞ்சா மயக்கத்தில் மிதந்து கொண்டிருக்கும் . சாஹிதியைக் காப்பாற்றுவதற்குத்தான் இந்த முயற்சி எல்லாம் . .என்னை நம்பு நிர்மலா"
வானமே இடிந்து தலையில் விழுந்தாற்போல் அதிர்ச்சி ஏற்பட்டது

நிர்மலாவுக்கு .“என்னது?” என்றாள் திக்பிரமை அடைந்தவளாய்.

“ஆமாம்அதற்காகத்தான் நான் ஜாக்கிரதையை .

சாஹிதி கஞ்சா போன்ற .மேற்கொண்டேன் போதை பொருளுக்கு அடிமையாகி இருக்கும் விஷயம் எனக்கு என்றோ தெரியும்நான் . கடவுளிடம் கேட்டேன் .“சுவாமிநான் நடமாடும் இடத்தில் ! இப்படிப்பட்ட பாதகம் நடப்பது நியாயமா?’ என்று கர்மபலனை அனுபவிக்காமல் தீராது சாஹிதிக்கு கல்யாணம் ஆகும் வரையில் இந்தப் பழக்கம் போகாது என்றார்அதனால்தான் . அதுவரையில் இந்தச் சொத்து அவள் கைக்குக் கிடைக்கக் கூடாது என்று என்னைக் கொண்டு இதுபோல் எழுதி கையெழுத்து வாங்கிக் கொண்டேன்சாஹிதியின் கல்யாணம் . இன்னும் ஆறுமாதத்தில் நடக்கப் போகிறதுஅன்று முதல் உங்களுக்கு நல்ல காலம் . ஆரம்பித்து விடும்.”

“.என் கண்முன்னால் வளர்ந்து பெரியவளான என் மகள் சாஹிதி, போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டாளா?”

“ஆமாம் நிர்மலா அதனால்தான் அவளுக்கு .சல்லிக்காசு கூட கிடைக்கக் கூடாது என்றும், அவள் கணவனுக்கு சொத்து போய்ச் சேரும் வரையிலும் நான் கார்டியன் என்றும் உன்னைக் கொண்டு எழுத வைத்தேன்உன் மகள் போதைபொருளுக்கு அடிமையாகி . விட்டாள் என்றும், சுயமாய் முடிவெடுக்கும் நிலையை இழந்து விட்டாள் என்றும்கூட இந்தப் பேப்பர்களில் குறிப்பிட்டு உள்ளேன்உங்க குடும்பத்தைக் . காப்பாற்றுவதற்கு எனக்கு வேறு வழி தெரியவில்லைஆறு மாதத்திற்குள் சாஹிதியை . திருத்தி வழிக்குக் கொண்டு வரும் பொறுப்பு என்னைச் சேர்ந்ததுஅதைப் . பற்றி நீ கவலைப் படாதே.”

அவள் குனிந்து அவன் பாதங்களில் விழுந்தாள் .“உங்களுக்கு என்

நன்றியை எப்படி எடுத்துச் சொல்லுவேன்?" என்றாள். அவன் இரக்கம் ததும்பச் சிரித்தான்.

36

"எனக்காக்தானே இந்த எதிர்பார்ப்பு?"

வீட்டிற்கு முன்னால் இருந்த தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டு ஏதோ யோசித்தவாறே இருந்த சாஹிதி, திடுக்கிட்டுப் பார்த்தாள். பரமஹம்சா முறுவலுடன் நெருங்கி வந்தான். சாஹிதி பயந்துவிட்டாள்.

பாவனாவின் தூண்டுதல் பேரில் அவனுக்கு எதிர்பதமாய் இத்தனைக் காரியங்களையும் பண்ணினாள். ஆனால் அவனே எதிர்ப்பட்ட பொழுது வாயில் வார்த்தை வரவில்லை.

அவனே மேலும் பேசினான். "அனாவசியமாய் என்னோடு மோதிக்கொண்டு விட்டாய். இதையெல்லாம் உனக்குப் பின்னால் இருந்து கொண்டு அந்த பாவனாதான் ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும். ஆனால் உன்னுடைய கோபம் உண்மையான கோபம் இல்லை. என்மீது ஊடல் கோபம். அதானே?"

சாஹிதியின் இதழ்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. உள்ளே இருந்து ஆவேசம் பொங்கி எழும்பிக் கொண்டிருந்தது. ஆனால் எதுவும் செய்ய முடியாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

"நீ உன் தாய் என்ன நினைப்பாளோ என்று யோசிப்பதாய் தோன்றுகிறது. நான் சொன்னால் நிர்மலா மறுக்க மாட்டாள். ஆனாலும் உனக்கு அந்தப் பயம் இருந்தால் ஒரு காரியம் பண்ணு. நாளைக்கே ஒரு வீட்டைப் பார்த்து வைக்கிறேன். நாளை மறுநாள் இரவில் சூட்கேஸ் எடுத்துக் கொண்டு போய்விடு. நான் அடிக்கடி

வந்து சந்திக்கிறேன். இரண்டாம் பேருக்குத் தெரியாது. நிர்மலாவுக்கு மெதுவாய் சொல்லிக் கொள்ளலாம்."

"சீ.. நீயும் ஒரு மனிதன்தானா? என் பெற்ற தாயுடன் குடும்பம் நடத்திக்கொண்டே என்னோடும் உறவு கொள்ள விரும்புகிறாயா?"

"சாஹிதி! நான் இந்த பூமியில் அவதாரம் எடுத்திருக்கும் கடவுள். உனக்குத் தெரியாதவை கூட எனக்குத் தெரியும். நீ எனக்காகவே பிறந்து இருக்கிறாய். அன்றைக்கு சீதை ஸ்ரீ ராமனுக்காக ஒரு இடத்தில் பிறந்து இன்னொரு இடத்தில் வளர்ந்தாற்போல் யாருடைய வயிற்றிலேயோ பிறந்த நீ இங்கே நிர்மலாவின் வீட்டில் வளர்ந்து வருகிறாய். அவ்வளவுதானே தவிர நீ நிர்மலாவின் மகள் இல்லை. நாமிருவரும் தெய்வப் பிறவிகள். நான் ஸ்ரீ மகாவிஷ்ணு, நீ மகாலக்ஷ்மி."

சாஹிதிக்குப் புரியவில்லை. கண்கள் அகல விரிய பார்த்துக் கொண்டே இருந்தாள். அவன் சொன்னதை ஏற்றுக் கொள்வதற்கோ புரிந்து கொள்வதற்கோ மனம் ஒத்துழைக்கவில்லை.

அவன் மேலும் சொன்னான். "பிரம்மா தன் மகளான சரஸ்வதியை மணம் செய்து கொண்டார். அது போலவே இதெல்லாம் நான் தோற்றுவித்த மாயைதான். உன்னை அடைவதற்காக விதியின் உருவத்தில் இந்த வீட்டிற்கு உன்னை கொண்டு வந்து சேர்த்தேன். இனி நிர்மலாவைப் பற்றி நீ வருத்தப்பட வேண்டியதில்லை. அவள் உன் தாய் இல்லை."

"பொய்!" கத்தினாள்.

“இல்லை. உண்மை.” என்றான் அவன். “பொய் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை. உன்னோடு கூட அதே சமயத்தில் இன்னொரு குழந்தையும் பிறந்தது. தெய்வத்தின் உத்தரவு, அதாவது என்னுடைய ஆணையின் படி அந்தக் குழந்தைகளை மாற்றிவிட்டாள் ஒரு நர்ஸ். அந்த நர்ஸின் மகன் பாஸ்கர் ராமமூர்த்தி என்பவன் தற்சமயம் ஜெயிலில் இருக்கிறான். குடிசையில் வசிக்க வேண்டிய நீ ராஜபவனத்திற்கு வந்தாய் ஆனாலும் இதெல்லாம் யாருக்குமே தெரிய வேண்டிய அவசியம் இல்லை. சொத்தை எல்லாம் உன் கணவன் பெயரில் எழுதி வைத்து அதற்குக் கார்டியனாய் என்னை நியமித்து இருக்கிறாள் நிர்மலா. கார்டியன் மற்றும் கணவன் நானே ஆவேன்.

என் காதல் சாம்ராஜ்ஜியதிற்குள் காலடி எடுத்து வைத்து, பயமில்லாமல் சகல சௌக்கியங்களையும் அனுபவி. அந்த பாஸ்கர் ராமமூர்த்தி என்பவன் முதலில் என்னை சந்தித்தான். அதற்குப் பிறகு உங்க அம்மாவைச் சந்தித்து இருக்கிறான் போலும். உங்க அம்மா ஒரு பைத்தியம். நான் சொன்னால் தவிர எதையும் நம்பமாட்டாள். சொத்து உன் கையைத் தாண்டி வெளியில் போய்விடக் கூடாது என்று உங்க அம்மாவிடம் பொய் சொன்னேன். உன்னையும், என்னையும் சேர்த்து வைப்பதற்காகவே என்னைப் பொய் சொல்ல வைத்தார் கடவுள். அந்தக் கடவுளே இவ்வளவு நாளும் நிர்மலாவை நான் சொன்னதை கேட்கும்படியாக செய்யவைத்தார். இனியும் செய்ய வைப்பார். நிர்மாவிடம் எனக்கு இருப்பது நண்பனின் மனைவி என்ற கடமை. உன்னிடம் எனக்கு இருப்பது காதல். வேண்டுமானால் என் கண்களுக்குள் உற்றுப் பார்” என்று திரும்பினான்.

எப்பொழுது போனாளோ தெரியாது, சாஹிதி அந்த இடத்தை விட்டு உள்ளே போய் விட்டிருந்தாள். அந்த இடத்தில் சிலையாய் நின்று கொண்டிருந்தாள் நிர்மலா.

******

சூறாவளியாய் வீட்டிற்குள் நுழைந்தாள் சாஹிதி. நடுங்கும் விரல்களுடன் நம்பரை டயல் செய்தாள். "ஹலோ! ஹோம் மினிஸ்டர்ஸ் ஆபீஸ்."

"எஸ்"

"மேடம் பாவனாவிடம் பேச வேண்டும் அர்ஜென்ட்!"

"நீங்க யாரு மேடம்?"

"சாஹிதி என்று சொல்லுங்கள்" என்றாள். வெளியே தோட்டத்தில் இருந்த பரமஹம்சாவையோ, தாயையோ பொருட்படுத்தவில்லை. அவள் மார்பு வேகமாய் படபடத்துக் கொண்டிருந்தது. ஒரு நிமிஷத்திற்குப் பிறகு பாவனா லைனுக்கு வந்தாள்.

"என்ன? அத்தனை டென்ஷனோடு இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"பாஸ்கர் ராமமூர்த்தி என்ற ஒரு ஆள் ஜெயிலில் இருக்கிறான். அவன் எங்கே இருக்கிறான் என்று உங்க செல்வாக்கை பயன்படுத்தி அவசரமாய் கண்டுபிடிக்கணும்." அவசர அவசரமாய் பேசினாள்.

"எதுக்கு?"

“என் பிறப்பின் ரகசியம் ஒன்று அவனுக்குத் தெரியும். எல்லா விஷயங்களையும் நேரில் வந்து சொல்கிறேன். முதலில் இதைக் கண்டுபிடியுங்கள்.”

“பாஸ்கர் ராமமூர்த்தி எங்கே இருக்கிறான் என்று தேட வேண்டிய அவசியம் இல்லை. எனக்குத் தெரியும்.”

“எப்படி?”

“அவன் என் மாஜி கணவன் என்பதால்.”

“மைகாட்!”

“இப்போ சொல்லு. விஷயம் என்ன?”

****

முன்பின் அறிவிப்பு கொடுக்காமல் ஜெயிலுக்குள் வந்து கொண்டிருக்கும் ஹோம் மினிஸ்டரை பார்த்து, வார்டன் கலவரமடைந்தார்.

“பாஸ்கர் ராமமூர்த்தி எந்த செல்?” மற்ற எந்த விவரமும் கேட்காமல் நேராகக் கேட்டாள்.

“கூப்பிடச் சொல்றீங்களா மேடம்?”

‘தேவையில்லை. நாங்களே போகிறோம். தனிப்பட்ட முறையில் பேசணும்.”

“சரி மேடம்.”

அவள் போனபோது ராமமூர்த்தி செல்லில் சுவற்றில் சாய்ந்த நிலையில் உட்கார்ந்து ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அவளைப் பார்த்துவிட்டுச் சட்டென்று எழுந்து நின்றான். அவள் உள்ளே நுழைந்தாள்.

“நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்.”

“ஏன் அப்படி நினைக்கிறாய்?”

“நான் உன் கணவன். நீ ஹோம் மினிஸ்டர் பதவியில் இருக்கிறாய். என்னை வெளியே கொண்டு வரத்தானே வந்திருக்கிறாய்?”

“ரொம்பக் குறைவாக எடைபோட்டு விட்டாய். என்னை கிரோசின் ஊற்றி கொளுத்திய குற்றத்திற்கும் சேர்த்து எப்படி தண்டனை தரலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.”

ராமமூர்த்தியின் முகம் சிவந்தது. “பின்னே எதுக்கு வந்தாய்?” என்று கேட்டான்.

“உன் தாய் ஆதிலக்ஷ்மி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் குழந்தைகளை மாற்றினாள் இல்லையா?”

“ஆமாம். அந்த விஷயம் உனக்கு யார் சொன்னது? பரமஹம்சாவா? நிர்மலாவா?”

“யார் சொன்னால் என்ன? சாஹிதியின் உண்மையான தாய் யார்? நிர்மலாவின் உண்மையான மகள் எங்கே இருக்கிறாள்?”

“எதுக்கு?”

“எனக்கு வேண்டும்.”

“நான் சொல்ல மாட்டேன்.”

“ஏன்? எதற்காக சொல்ல மாட்டாய்?”

“அதனால் எனக்கு என்ன லாபம்?”

“இவ்வளவு நடந்தும் உனக்கு இன்னுமா புத்தி வரவில்லை?” என்றவள் “சாஹிதி!” என்று அழைத்தாள். சாஹிதி உள்ளே வந்தாள். “இந்தப் பெண்ணைப் பார். இவளைத்தான் உன் தாய் நிர்மலாவின் பக்கத்தில் படுக்க வைத்திருக்கிறாள். தன்னுடைய உண்மையான தாய் தந்தை யாரென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று துடிக்கிறாள். மனிதநேயத்திற்கு கட்டுப்பட்டாவது இவளுடைய பெற்றோர் யார் என்று சொல்ல வேண்டிய பொறுப்பு உன் மீது இருக்கிறது. நீ சொல்ல மறுத்தால் எப்படி சொல்ல வைக்கணும் என்று எனக்குத் தெரியும்.”

“உன்னால் எனக்கு எந்த உதவியும் செய்ய முடியாதா பாவனா?” தீனமாய் கேட்டான்.

பாவனாவுக்கு அருவருப்பு ஏற்பட்டது. கோபமும் வந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு “சரி, செய்கிறேன். சொல்லு” என்றாள்.”

“பிராமிஸ்?”

“பிராமிஸ்!”

‘சாஹிதி விஸ்வத்தின் மகள்” என்றான். பாவனாவுக்குச் சட்டென்று புரியவில்லை. ஏதோ மேகத்திரை விலகினாற்போன்ற உணர்வு.

“அப்படி என்றால்.. அப்படி என்றால்..” இடையிலேயே நிறுத்திக் கொண்டு விட்டாள்.

“இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் பதிமூன்றாம் தேதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு நேரத்தில் என் தாய் மாற்றிய குழந்தைகள் நீங்கள் இருவரும்தான். சந்திரன், நிர்மலாவின் குழந்தை நீ தான்.”

“நோ!” கத்திவிட்டாள் பாவனா. அவளுக்குத் தன் தாய் நினைவுக்கு வந்தாள். விஸ்வம் நினைவுக்கு வந்தார். தங்கைகள் நினைவுக்கு வந்தார்கள். தன் வீடு, தோட்டம் எல்லாம் நினைவுக்கு வந்தன. எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் ஒன்றையடுத்து இன்னொன்றாய அவள் நினைவுத் திரையில் மளமளவென்று வேகமாய் சுழன்றன.

சாஹிதியின் நிலைமையோ அதைவிட மோசமாக இருந்தது. ஆனால் அதில் வருத்தத்தைவிட குழப்பம்தான் மிகுதியாய் இருந்தது. நிர்மலா தன்னுடைய தாய் இல்லை என்று நினைத்த போது...

ஆச்சரியம்! வருத்தமாக இருக்கவில்லை.

தாயின்பால் தன்னுடைய உறவு இவ்வளவு பற்று இல்லாததா? நினைத்தாலே அவளுக்கு வியப்பாக இருந்தது. மனதில் ஏதோ ஒரு மூலையில் கொஞ்சம் சந்தோஷம். அது சுயேச்சைக்கு சம்பந்தப்பட்டது. தனக்கு இனி எந்த பந்தங்களும் இல்லை. தன் தாய் தந்தை யாரென்று தெரிந்து கொள்ளும் ஆர்வமும்

ஏற்படவில்லை. வாய்விட்டு சிரிக்க வேண்டும் போல் இருந்தது. கஞ்சாவை புகைக்க வேண்டும் போல் இருந்தது.

பாவனா ராமூர்த்தியை நோக்கித் திரும்பினாள். "நீ சொன்னது எல்லாம் உண்மைதானா?" என்று கேட்டாள்.

"உண்மைதான் சொல்கிறேன். உங்க இரண்டு பேரில் ஒருத்தருக்கு தொடையில் மச்சம் இருக்கும். மச்சம் இல்லாத குழந்தையின் துடையில் அதே இடத்தில் என் அம்மா ஒரு அடையாளத்தை ஏற்படுத்தி இருக்கிறாள். என் தாய் இறக்கும் போது என்னிடம் சொன்ன விஷயம் இது. அன்று முதல் சந்திரனின் மகளை தேடத் தொடங்கினேன். விஸ்வத்தின் விலாசம் ஆஸ்பத்திரியில் பழைய ரிக்கார்டுகளில் கிடைத்தது. அந்த விலாசத்தைத் தேடிக் கொண்டு வந்த போதுதான் நீ தென்பட்டாய்."

"உண்மை விஷயத்தை மறைத்து வைத்து, பெரிய சீர்திருத்த வாதியைப் போல் என்னை மணந்தாய். லட்சக்கணக்கான் சொத்திற்கு அதிபதியாகி விடலாம் என்று நினைத்தாய் இல்லையா?" அவனை அருவருப்புடன் பார்த்துக் கொண்டே கேட்டாள் பாவனா.

வரதட்சணையை எதிர்பார்க்காமல் தன்னை மணந்து கொண்டான் என்று அவளுக்கு மனதில் அவன் பால் இதுவரை கொச்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த மதிப்பு கூட இப்போது போய் விட்டது.

ராமமூர்த்தி பதில் பேசவில்லை. பாவனா சாஹிதியின் பக்கம் பார்த்தாள். அந்தப் பெண்ணைப் பார்த்தால் கவலையாய் இருந்தது. இரத்தம் முழுவதும் வற்றிவிட்டாற்போல் முகம் வெளிறி இருந்தது.

"வா, போகலாம்" என்றாள்.

இனி அங்கே வேலை எதுவும் இல்லை என்பதுபோல், தூக்கத்தில் நடப்பவள் போல் சாஹிதி பின்னால் திரும்பினாள்.

உள்ளே இருந்து அவன் சொன்னான். “பாவானா! என்னுடைய தண்டனை குறையும் வழியைச் சொல்கிறேன் என்று சொன்னாயே?”

அவள் நின்று மெதுவாய் சொன்னாள். “இந்த கற்பழிப்பு கேசில் உனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று நாளைக்குக் கோர்ட்டில் சொல்லு ராமமூர்த்தி. உன்னுடைய குறையைப் பற்றி மனைவியாய் நானும் சர்டிபிகேட் தருகிறேன். தண்டனை பெரும்பாலும் குறைந்து விடும். அது ஒன்றுதான் நான் உனக்கு செய்யக் கூடிய உதவி.”

“ஆனால் ஏன் விஷயம் எல்லோருக்கும் தெரிந்து போய் விடுமே?”

“உனக்கு இரண்டே வழிகள். ஆண்மகனைப் போல் தண்டனையை அனுபவிப்பது, ஆண்மை இல்லையென்று நிரூபித்துவிட்டு வெளியே வருவது.”

“இரண்டில் எது தேவலை என்கிறாய்?”

“வசந்தி இல்லாமல் இதுவரையில் நீ வாழ்க்கையில் எந்த முடிவையும் சொந்தமாக எடுத்துக் கொண்டதில்லை. இதை ஒன்றாவது எடுத்துக் கொள்.” சாஹிதியுடன் சேர்ந்து வெளியே நடந்தாள் அவள்.

“என்னுடைய தாய் தந்தை யார்?” வெளியே வந்ததும் கேட்டாள் சாஹிதி.

“அப்பாவின் பெயர் விஸ்வம். ஸ்கூல் வைஸ் ப்ரின்ஸிபாலாய் ஒய்வு பெற்றார். தாய் இறந்துவிட்டாள்.”

சாஹிதி அந்த வார்த்தைகளை காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஏதோ யோசனையில் சொன்னாள். “மனிதர்களில் ஜீன்ஸ் பாதிப்பு நிறைய இருக்கும் என்று நினைக்கிறேன். எங்க அப்பா, அதாவது உங்க அப்பா சந்திரன் ரொம்ப கெட்டிக்காரர். எல்லா பிசினெஸ் விஷயங்களையும் தன்னந்தனியாகவே பார்த்துக் கொள்வார். அந்தக் குணாதிசயம்தான் உங்களுக்கும் வந்திருக்கும் போலிருக்கு.”

பாவனா பதில் பேசவில்லை. சாஹிதி மேலும் சொன்னாள். “நீங்க போய்க் கொள்ளுங்கள்.. அம்மா எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்.”

“நீ?” ஆச்சரியத்துடன் கேட்டாள்.

“இனி அந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்க மாட்டேன். அந்த வீடு, சொத்து, எல்ல்லாம் உங்களுடையதுதான்.”

“முட்டாள்தனமாய் பேசாதே. வா.”

“வரமாட்டேன்.”

பாவனா எரிச்சலும், கோபமும் கலந்த குரலுடன் “நீ என்ன பேசுகிறாய் சாஹிதி? நான் அவ்வளவு தூரம் பணத்தின் பால் மோகம் கொண்டவள் போல் தென்படுகிறேனா? எனக்கும் எந்தச் சொத்தும் தேவை இல்லை. நீயும், நானும், அம்மாவும் எல்லோரும் சேர்ந்தே இருக்கலாம். இதுகூட சொத்துக்காக நான் சொல்லவில்லை. பிரமஹம்சாவை இப்பொழுது எனக்கு வந்து

சேர்ந்திருக்கும் புது ஹோதாவால் எதிர்ப்பதற்காகக் கேட்கிறேன்" என்றாள்.

"நான் எங்க அப்பாவையும், தம்பி தங்கைகளையும் பார்க்கணும்." ஒரு முடிவுக்கு வந்தவளாய்ச் சொன்னாள் சாஹிதி.

'எதுக்கு அவர்களுகெல்லாம் இந்த விஷயம் தெரியணும்?' என்று சொல்லப் போன பாவனா அந்த எண்ணத்தைக் கைவிட்டாள். அவ்வாறு வேண்டாம் என்று சொல்வதற்கு அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஒருக்கால் தன் தந்தை கூட தான் இல்லாமல் சாஹிதியைப் போன்றவள் மகளானதற்கு சந்தோஷப்படுவாரோ என்னவோ? அந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை அவள் என்றோ இறந்துவிட்டாள். சாஹிதியின் பிரவேசத்தை அவள் ஏன் தடுக்க வேண்டும்? 'சரி போ. ஆனால் உனக்காக நானும் அம்மாவும் இங்கே காத்துக் கொண்டு இருப்போம் என்பதை மட்டும் மறந்து விடாதே. நீ அவர்களை சந்தித்துவிட்டு உடனே திரும்பி வந்துவிடுகிறேன் என்று வாக்குறுதி அளித்தால் உன்னை அனுப்புகிறேன்" என்று கையை நீட்டினாள்.

'சும்மா பாத்துவிட்டு வந்து விடுகிறேன். விஷயத்தைக் கூட அவர்களிடம் சொல்ல மாட்டேன். என்னைப் போன்ற மகளை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது." சுய இரக்கத்துடன் சொன்னாள் சாஹிதி. அவளைப் புரிந்து கொண்டாற்போல் மௌனமாய் இருந்து விட்டாள் பாவனா.

"நான் அங்கே காரில் போகிறேன், இங்கிருந்து இப்படியே." ஏதோ புரியாத வெறுப்புடன் சொன்னாள் சாஹிதி.

"உங்க அம்மாவிடம் கூட சொல்ல மாட்டாயா?"

‘எங்க அம்மா இல்லை. உங்க அம்மா.” காரில் ஏறிக் கொண்டே சொன்னாள். “உங்க அம்மா உனக்காகக் காத்துக் கொண்டு இருப்பாங்க. பரமஹம்சாவும் அங்கேதான் இருப்பான். அந்தக் கயவன் பண்ணிய அயோக்கியத்தனத்தை எல்லாம் அம்மா காதால் கேட்டாள்.”

*****

பரமஹம்சா நிர்மாவைப் பார்த்தான். லட்சம் ஓல்ட் ஷாக் அடித்தாற்போல் சிலையாய் நின்று விட்டாள் அவள். முகத்தில் இருந்த ரத்தமெல்லாம் வடிந்து விட்டாற்போல் வெளுத்து விட்டிருந்தது.

கடலில் அலையடுத்து அலையாய் வந்து கற்பாறையை மோதியது போல் உண்மை யடுத்து உண்மை தெரிய வந்து அவளை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தது. அவள் யோசிக்கவில்லை.

சலனமில்லாத அந்த நிலையிலேயே அவன் அவளை அனைத்துப் பிடித்துக் கொண்டு அழைத்துச் சென்றான். தூக்கத்தில் நடப்பவளைப் போல் அவன் கூடவே போனாள் அவள். காரில் ஏற்றி உட்கார வைத்து ஸ்டார்ட் பண்ணினான்.

“கடவுள் ஆடும் சதுரங்கத்தில் நீங்கள் எல்லோரும் பகடைக் காய்கள். சம்பவங்கள் நிகழும் போது அதனை திறமையாக கையாளக் கூடியவன் நான். கிருஷ்ண பரமாத்மா குருக்ஷேத்ர சங்கிராமத்தின் போது தூது நடத்தியது போல் நான் இந்த விதமாய் நிகழ்வுகளை சமாளித்துக் கொண்டு போகிறேன். விதியின் கையில் பகடைக் காய்களைப் போல் உங்களை ஆட்டுவிப்பதற்காகவே கடவுளின் அம்சமாய் நான் பிறந்திருக்கிறேன். உன் மகள் முன்னால் என்னை அவ்வாறு பேச வைத்தது கடவுள்தான். நீ என்னைப் புரிந்து கொள்வாய். எனக்கு

உன் வாழ்க்கையை நைவேத்தியம் செய்ததால் அவ்வாறு புரிந்து கொள்ளும் சக்தியை நானே உனக்கு தந்தேன்.”

அவன் கார் பிரதான சாலையில் நுழைந்தது.

எதிரே வந்த காரில் பாவனா இருந்தாள். அவள் இவர்களைப் பார்த்துவிட்டுக் காரைப் பின்னால் திருப்பச் சொன்னாள். மெய்க்காப்பாளர்களுடன் கூட வந்த அவள் கார், பின்னுக்குத் திரும்புவதற்குள்ளாகவே பரமஹம்சாவின் கார் ட்ராபிக்கில் கலந்து மாயமாகிவிட்டது.

பாவனாவின் மனம் தீங்கை எடை போட்டது. அவன் கார் எங்கே இருந்தாலும் சரி, கண்டிபிடிக்கச் சொல்லி உத்தரவிட்டாள். ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவன் கார் குன்றின் மேல் இருந்த சிறிய முருகன் கோவிலுக்கு முன்னால் நின்று கொண்டிருப்பதாக செய்தி வந்தது.

கோவில் பக்கமாய் அவன் அவளை அழைத்துக் கொண்டு போனபடி சொன்னான். “ஸ்ரீகிருஷ்ணரின் அவதாரம் முடிவடையும் முன் யாதவர்களுக்கு இடையே கலகம் ஏற்பட்டது. இராமர் தீய சகுனங்களைக் கண்டு தன் அவதாரம் முடிவடையப் போவதாய் உணர்ந்து கொண்டார். என் பேச்சை நீ கேட்டது கூட அதுபோலவே நடந்து விட்டது. உன் பிறவிப்பயன் முடிவடைந்து விட்டது நிர்மலா. இனி நீ போகலாம். எனக்காக மேல் உலகத்தில் காத்துக் கொண்டிரு. நானும் வேலைகளை முடித்துக் கொண்டு சீக்கிரத்தில் வந்து விடுகிறேன்.”

அவளும் அவனும் குன்றின் விளிம்பில் நின்று கொண்டிருந்தார்கள். கீழே பள்ளத்தாக்கு போன்ற அதள பாதாளம்.

அவன் அவள் தோள் மீது கையை வைத்தான். “போ நிர்மலா.”

அதை வசீகரணம் என்பார்களா அல்லது ஹிப்னாடிசம் என்பார்களா தெரியாது. அவள் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவளைப் போல் அவ்வளவு உயரத்திலிருந்து கீழே குதித்துவிட்டாள். சிறிய ஓசையுடன் கழுத்து எலும்பு உடைந்து, ரத்தம் பக்கத்தில் இருந்த கற்கள் மீது தெறித்தது. மக்கள் ஓட்டமாய் ஓடி வந்து கூடி விட்டார்கள். எல்லாம் நிமிட நாழிகைக்குள் நடந்து முடிந்து விட்டது.

அவன் படியிறங்கி கீழே வந்து சேருவதற்குள் பாவனா அங்கே வந்தாள். அவள் தொலைவிலிருந்தே நிர்மலா கீழே விழுந்ததைப் பார்த்தாள். கண்முன்னாலேயே அவ்வளவு பெரிய கொடுமை நிகழ்ந்ததை, தன் வாழ்க்கையில் எத்தனையோ திருப்பங்களை கண்டிருக்கும் பாவனா கூட இந்த காட்சியைக் கண்டு அதிர்ச்சி அடைந்துவிட்டாள்.

கிழிந்த பட்டம் மரக்கிளையில் மாட்டிக்கொண்டு படபடப்பது போல் நிர்மாவின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. 'அம்மா...அம்மா.." என்று எண்ணிக கொண்டாள் மனதிற்குள். நிர்மலாவும் அவளை அடையாளம் தெரிந்து கொண்டுவிட்டாள் போலும். அவள் வலதுகையைத் தூக்க முயன்றாள். பாவனா கண்ணீர் மல்கிய கண்களுடன் தாயைப் பார்த்தாள். அவளிடம் தன் உருவ ஒற்றுமை இருந்தது தெளிவாய் தெரிந்தது.

போலீசார் மக்களை தொலைவிற்குத் தள்ளிவிட்டு வளையமாய் நின்றார்கள். தாயின் தலையை மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள் பாவனா. பரமஹம்சா ஒருத்தன்தான் நின்று கொண்டிருந்தான் பக்கத்தில்.

நிர்மலா பேச முயன்று திரும்பவும் தோற்றுவிட்டாள். "நான்தான் அம்மா, உன்னுடைய மகள். அம்மா! ஒரு வார்த்தை சொல்லு போதும். உன் மரண வாக்குமூலத்தால் இந்த ராட்சசனைத் தூக்கு மேடைக்கு அனுப்பி வைக்கிறேன். இவன்தானே உன்னைத்

தள்ளி விட்டான்? இந்தக் கயவன்தானே சொத்துக்காக உன் உயிரை பறித்தான்?”

நிர்மலா மெதுவாய்க் கண்களை நிமிர்த்தி பரமஹம்சாவைப் பார்த்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பாவனா அவ்விருவரையும் பார்த்தபடி இருந்தாள். அங்கு ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம்.

நிர்மலா தன் சக்தியை எல்லாம் திரட்டிக்கொண்டு இரு கைகளையும் மேலே தூக்கினாள். கைகளைக் கூப்பி பரமஹ்ம்சாவை வணங்கினாள்.

அவள் தலை சாய்ந்துவிட்டது.

1987 ல் ஜோன்ஸ் என்பவன் தன் குட்டு வெளிப்பட்டு விடும் என்று தெரிந்ததும் போலீசார் வருவதற்குள் இறந்துப் போகச் சொல்லி ஆணையிட்டதுமே சுமார் ஐநூறு பக்தர்கள் மனைவி குழந்தைகளுடன் சைனேட் குடித்து இறந்துவிடார்களாம்.

எத்தனையோ மனைவியர்கள் வரதட்சணை கொடுமையால் இறக்கும் சமயத்தில் தம் கணவனுக்கு இதில் சம்பந்தம் இல்லை என்று வாக்குமூலம் கொடுத்துவிட்டு அவர்களை காப்பாற்றி இருக்கிறார்கள். எத்தனையோ மூடர்கள் புதையலுக்காக சொந்தக் குழந்தைகளைப் பலி கொடுத்திருக்கிறார்கள். இதெல்லாம் பாவனா படித்திர்க்கிறாள். ஆனால் இப்போது நேரடியாகப் பார்க்கிறாள். ஆதாரப்படும் குணம் உடைய நபர்கள் எவ்வளவு கண்மூடித்தனமாய் நம்புகிறார்கள் என்பதை சுயமாக கண்களால் பார்த்தாள்.

அவளுக்கு சாஹிதியின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. ஜீன்ஸ்! தன் தாய் இவ்வளவு அதைரியசாலியா? மனதளவில் இவ்வளவு பலவீனமானவளா?

அவள் தன் தாயின் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு திறந்திருந்த கண்களை மூடினாள். இதயம் கனத்தது. கண்கள் கசிந்தன. அவளுக்குத் தன் தாய் அருந்ததி நினைவுக்கு வந்தாள். கேன்சர் நோயால் வேதனை அனுபவித்துக் கொண்டிக்கும் போது கூட அவளுக்காகவே தவித்துப் போய்க் கொண்டிருந்த தாய்! கஷ்டம் என்ற உலைக்களத்தில் வெந்து புனிதமாகிவிட்டாள் அந்தத் தாய்! சுகம் என்றெண்ணிக் கொண்டிருந்த ஹோமத்தீயில் வெந்து சாம்பலாகி விட்டாள் இந்தத் தாய்.

தன் மீது நிழல் பட்டதும் சுதாரித்துக் கொண்டாள் பாவனா. பரமஹம்சா நிர்மாவின் மீது குனித்து கண்ணீர் மல்க சொல்லிக் கொண்டிருந்தான். "நிர்மலா! என்னை மன்னித்துவிடு. உள்ளோடு கூட நானும் வந்திருக்க வேண்டியவந்தான். ஆனால் இங்கே நான் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. அதனால்தான் நின்றுவிட்டேன்."

"உன் கொட்டம் இனி பலிக்காது என்று தெரிந்து, இவ்வளவு கொடுமைக்கு வழி வகுத்து விட்டாயா? உன்னை நம்பிய வரையில் உயரத்தில் வைத்திருந்தாய். உன் உண்மை சொரூபம் அவளுக்குத் தெரிந்து விட்டது என்றதுமே அந்த உயரத்திலிருந்து தள்ளிவிட்டாய். நீ ஒரு மனிதன் தானா?" என்று கத்தினாள்.

"தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய் பாவனா. ஹோம் மினிஸ்டருக்கு இவ்வளவு ஆவேசம் உதவாது."

"ஷட்டப்! நீ என்ன செய்தாய் என்று எனக்கு எல்லாமே தெரியும். இதற்காக நீ தண்டனை அனுபவித்துதான் தீர வேண்டும்."

“இந்தக் கோர்ட்டுகளுக்கு என்னைத் தண்டிக்கும் சக்தி கிடையாதும்மா. நான் இந்த நீதிமன்றங்களுக்கு அப்பாற்பட்டவன்.”

“நீ எதற்குமே அப்பாற்பட்டவன் இல்லை. நீ ஒரு சைக்கோபாத்! கீழ்த்தரமான ஆசைகளால் உன்னை நீயே கடவுள் என்று சொல்லிக்கொண்டு அந்த பிரமையில் திருப்தி அடையும் சைகிக் நீ.”

“அஞ்ஞானம் என்றும் அந்தகாரத்தில் சிக்கி தவித்துக் கொண்டிருக்கும் உன்னைப் போன்ற சிஷ்யைகளை மன்னிப்பதே தெய்வத்துவம். ஒரு காலத்தில் நீயும் என் காலடியில் வந்து விழுவாய் என்று என் தெய்வாம்சம் கூறுகிறது. இருள் விலகிப் போகும் அந்த நாளுக்காக, காத்திருந்துதான் ஆக வேண்டும்.”

“இருள் விலகப் போகும் அந்த நாளுக்காகத்தான் நானும் காத்திருக்கிறேன் பரமஹம்சா! சொத்தை எல்லாம் உன் பெயரில் எழுதி வாங்கிக் கொண்டு, பிறகு..” என்று சொல்லிக் கொண்டிருந்த அவள் வார்த்தைகளை இடைமறித்துச் சிரித்தான் அவன்.

‘சொத்து என் பெயரில் இல்லை இப்பொழுது. நான் சாஹிதிக்கு கார்டியன் மட்டும்தான். அதானால் பணத்திற்காக நான் அவளைக் கொன்று விட்டதாய் உன்னால் நிரூபிக்க முடியாது. அவள் கீழே விழுந்த பிறகு சாகும் தருவாயில் கூட என்னை வணங்கினாள். அதனை இங்கே அத்தனை பெரும் பார்த்தார்கள். குன்றின் மேல் அழைத்துச் சென்றது மட்டும்தான் நான் செய்தது. தள்ளியது நான் இல்லை. எந்த விதத்தில் நீ என்னைத் தூக்கு மேடைக்கு அனுப்பப் போகிறாய்?”

அவன் முகத்தில் சிரிப்பு மறைந்தது. மெதுவாக உள்ளங்கையை விரித்தான். “உள்ளங்கையில் இந்த மச்சத்தைப் பார்த்தாயா பாவனா! சந்திர மேட்டில் மச்சம் இருப்பவர்களை யாராலுமே எதுவும் செய்ய முடியாது. என்றுமே வெற்றி அவனுக்குத்தான்.”

நிர்மலாவின் உடலை வேனில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். பாவனா தாயைப் பார்த்தாள். ஒன்றாக இணைந்திருக்க வேண்டிய பந்தம். ஒன்று சேருவதற்குள் அறுந்து விட்டது. அவள் ஹோம் மினிஸ்டரின் தாய் என்று தெரிந்தால் அங்கு நிலைமை எப்படி மாறி இருக்குமோ?

காதலித்தாலும், துன்புறுத்தினாலும் ஆணிடம் வழிவழியாய் தெய்வத்தையே கண்ட இந்தியப் பெண்களின் வாரிசாக அவள் போய்க் கொண்டிருந்தாள். பாவனை ஏன் அழுது கொண்டிருக்கிறாள் என்று அங்கிருந்த யாருக்குமே தெரியாது. பரமஹம்சா அவளுக்கு என்னவாக வேண்டும் என்றும் தெரியாது. மூவருக்கும் இடையே வினோதமான பந்தம் அது.

அம்புலென்ஸ் நகர்ந்தது. அவன் போய் விட்டான்.

சாஹிதியை உடனே அழைத்து வரச் சொல்லி உத்தரவிட்டாள். அதிகாரிகள் கிளம்பிப் போனார்கள்.

அவள் மட்டுமே எஞ்சி நின்றாள். அவளோடு கூட நிசப்தமும். அந்த நிசப்தத்திலிருந்து அவள் மெதுவாய் தன உள்ளங்கையை விரித்தாள். அவள் உள்ளங்கை நடுவில் சிறிய மச்சம்.

37

நிர்மலாவின் மரணம் சாஹிதியிடம் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. ஆனால் அது வெளியில் தெரியக் கூடியது இல்லை. தன் தாய் எப்படி இறந்தாள் என்று பாவனா சொல்லிக் கொண்டிருந்த பொழுது அமைதியாக கேட்டுக் கொண்டாள். அவளுடைய சலனமற்றத் தன்மையைப் பார்த்துப் பாவனாவுக்கு பயம் ஏற்பட்டது. எல்லாவற்றையும் கேட்டுவிட்டு "அவன்தான் கொன்றிருக்கிறான்" என்றாள்.

பாவனா பதில் பேசவில்லை.

"அவனைக் கொன்று விடுகிறேன்" என்றாள் சாஹித்தி திரும்பவும். பாவனா அவளை இரக்கம் ததும்பப் பார்த்தாள். சாஹிதியைப் போன்றவர்களால் ஒன்றுமே பண்ண முடியாது. பண்ணவும் மாட்டார்கள். எப்பொழுதும் 'பண்ணி விடுவோம்" என்று எண்ணிக் கொண்டிருப்பார்கள். அவ்வளவுதான்.

'சொத்தை எல்லாம் உனக்கு வரப் போகிற கணவனுக்கு எழுதி வைத்திருக்கிறாள் உன் தாய். உன் மனநிலை சரியாக இல்லை என்றும், அதனால் பரமஹம்சாவை கார்டியனாய் நியமித்து இருப்பதாகவும் உயிலில் எழுதப் பட்டுள்ளது. உன் தாய் அந்தப் பேப்பர்களைப் படித்தும் இருக்க மாட்டாள். கேட்டதுமே கையெழுத்து போட்டிருப்பாள். தன் மீது எந்த சந்தேகமும் வராதபடி கவனமாய் வலையைப் பின்னி இருக்கிறான் பரமஹம்சா. கோர்ட்டுக்குப் போனால் நாம் ஜெயிக்கலாம். அப்படி ஜெயிக்க வேண்டும் என்றால் ..." பாவனா சற்று நிறுத்தி மெதுவாய் சொன்னாள். "நீ இந்தப் போதைப் பொருள் பழக்கத்தை விட்டுவிட வேண்டும் சாஹித்தி."

“அதுமட்டும் கஷ்டம். இந்த உலகத்தில் எனக்கு ஆனந்தத்தைத் தருகிற வழி, அது ஒன்றுதான்.” வேதனையுடன் சிரித்தபடி சொன்னாள். “ஆனாலும் அந்த சொத்து என்னுடையது இல்லை, சந்திரன் மகள் நீதான்.”

இரக்கம், கோபம், எரிச்சல் எல்லாம் நிரம்பிய உணர்வில் சாஹிதியைப் பார்த்தாள் பாவனா. அந்த சமயத்தில் அவளுடன் வாதம் புரிய விரும்பாமல் “நான் இரண்டு நாட்கள் கழித்து வந்து சந்திக்கிறேன். என்ன பண்ணலாம் என்பதைப் பற்றி அப்பொழுது பேசுவோம். நாளை மாலை டி.வி. யில் என் பேச்சு வரப் போகிறது. முடிந்தால் எனக்காக ஒரு முறை அதைக் கேளு” என்று அங்கிருந்து போய் விட்டாள்.

அவள் கீழே வந்து காரில் ஏறப்போன அதே சமயத்தில் பரமஹம்சாவின் கார் காம்பவுண்டிற்குள் நுழைந்தது. மிக விலையுயர்ந்த கார்.

“இங்கே ஏன் வந்தாய்?” கோபமாய்க் கத்தினாள்.

தனக்கே உரிய வெற்றிப் பெருமிதத்தோடு சிரித்தபடி “என்னம்மா இது? சாஹிக்கு நான் கார்டியன். அவள் நல்லது கெட்டதைப் பார்க்க வேண்டியது என் கடமை.” என்றான். அவன் பேச்சில் ‘நீதான் அனாவசியமாய் இங்கே வந்திருக்கிறாய்’ என்ற மிரட்டல் இருந்தது.

பாவனாவின் முகம் சிவந்துவ்ட்டது. அவள் தோல்வி அவளுக்கே தெரிந்து கொண்டிருந்தது. பரமஹம்சாவின் திட்டம் தெளிவாய்ப் புரிந்துவிட்டது. சாஹிதி மானசீகமாய் இறந்து போகும் வரையில் அவன் விட்டு வைக்க மாட்டான். இந்தப் போராட்டத்தைத் தாங்கமுடியாமல் அவள் அவனை மணந்து கொண்டாலும்

ஆச்சரியமில்லை. ஒரு கொலைக்காரன் இவ்வளவு மதிப்போடு சமுதாயத்தில் நடமாடிக் கொண்டிருந்தாலும் யாராலும் எதுவுமே செய்ய முடியவில்லை. அது போதாது என்று தம்முடைய பிரச்சனைகளை அவனிடம் சொல்லிக் கொள்வார்கள். அவனும் கையை உயர்த்தி அவர்களுக்கு அபயஹஸ்தம் காட்டுவான். அந்த விதமாய் வலையில் சிக்கிக் கொண்டு விடுகிறார்கள்.

ஏதோ ஒன்றைச் செய்தாக வேண்டும். என்ன செய்வது? ஆபீசுக்குப் போகும் போது வழியெல்லாம் அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள்.

இது இங்கே இப்படி இருக்கும் போது அங்கே சாஹிதி தன் அறையில் சலனமின்றி உட்கார்ந்து இருந்தாள். பரமஹம்சா பத்து நிமிடங்கள் பேசிவிட்டுப் போய்விட்டான். அவளைத் தன் பேச்சால் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டு போய் விட்டான். வார்த்தைகளுக்கு அவ்வளவு சக்தி இருப்பது அவனுடைய பேச்சைக் கேட்டால்தான் புரியும். அவை இதயத்தைப் பிளக்க வல்லவை. தேன் மழையை பொழிய வல்லவை. தீயாய்ச் சூழ்ந்துகொள்ளும் வல்லவை. அன்பு மழையைப் பொழிய வல்லவை.

அவன் போய்ச் சேர்ந்ததும் எப்போதையும் விட மூன்று மடங்கு அதிகமாய் கஞ்சாவை எடுத்துக் கொண்டாள் அவள்.

அதே சமயத்தில் போன் மணி அடித்தது. அவள் ரிசீவரைக் கையில் எடுத்துக் கொண்டு “ஹலோ!” என்றாள்.

“நான்தான் ராமநாதன்.”

அவள் இதழ்கள் பற்களுக்கு இடையே வெறுப்போடு அழுந்தியது. “என்ன?” என்றாள் சுருக்கமாய்.

“அம்மா போய் விட்டாளாமே? பேப்பரின் படித்தேன். எனக்கு எவ்வளவு துக்கம் வந்ததோ வார்த்தைகளில் சொல்ல முடியாது. நான்கு நாட்களாய் தூக்கமே இல்லை. கப்பல் போன்ற அந்த வீட்டில் நீ தன்னந்தனியாய் இருப்பதை ஊகித்துப் பார்த்தாலே வருத்தமாய் இருக்கு. இவ்வளவு நாளாய் நீ என்னை ஏன் சந்திக்கவில்லை என்றும் புரிந்தது. நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். இந்த பந்தங்களை எல்லாம் முறித்துக்கொண்டு வந்து உன்னுடன் தங்கி விடலாம் என்று இருக்கிறேன். எனக்கு நீ... உனக்கு நான்.”

அவள் இதயத்திலிருந்து துக்கம் பொங்கிக் கொண்டு வெளி வந்தது. “உண்மையாகவா?” என்றாள்.

“ஆமாம் சாஹித்தி.”

“என் சொத்தை எல்லாம் அம்மா வேறு யாருக்கோ எழுதி வைத்துவிட்டு, அவனை என் கார்டியனாய் நியமித்து இருக்கிறாள். இப்போ நான் சாதாரண சாஹிதிதான். அப்படியும் என்னைக் காதலிக்கிறீங்களா?”

“உன்னை உனக்காவே காதலிக்கும் காதலன் நான் என்ற சினிமா பாட்டை கேட்டது இல்லையா சாஹிதி?”

“அப்போ உங்கள் மனைவி?”

“மனம் ஒன்று சேராத இடத்தில் மனிதர்களால் ஒன்று சேர்ந்திருக்க முடியாது. அவளுக்கு விவாகரத்து தந்து விடுகிறேன்.”

“மாலையில் பார்க்கில் சந்திப்போம்.”

“நிஜமாகவா? என்மீது கோபம் போய்விட்டதா?”

சாஹிதி சிரித்தாள். “உங்கள் மீது கோபம் எதுக்கு? மாலையில் வாங்க.”

****

மறுநாள் காலையில் சாஹிதி ராமநாதனின் வீட்டிற்குப் போனாள். அவன் இல்லை. அவன் மனைவி லக்ஷ்மி இருந்தாள்.

தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டு நேராய் விஷயத்திற்கு வந்தாள் சாஹிதி.

“இதையெல்லாம் உங்களுக்குச் சொல்றது உங்கள் குடும்பத்தைப் பிளப்பதற்காகவோ, உங்களுக்கு இடையில் சண்டையைக் கிளப்பி விடுவதற்காகவோ இல்லை. ஒரு ஆணை வாழ்க்கைத் துணைவி தவிர வேறு யாராலுமே திருத்த முடியாது. இதோ இந்த டேப்பை கேளுங்கள். நேற்று மாலையில் உங்கள் கணவர் பார்க்கில் என்னோடு பேசிய பேச்சுக்கள்.”

லக்ஷ்மி முகம் சுளித்து, “என்ன இது? இதெல்லாம் என்ன?” என்றாள்.

“உங்கள் கணவர் உங்களை விவாகரத்து பண்ணிவிட்டு என்னைப் பண்ணிக்கப் போகிறாராம்.”

“யாரடி நீ?”

நேராய் அம்பு போல் வந்த அந்த வார்த்தைகளைக் கேட்டு சாஹித்தி வெலவெலத்து விட்டாள். ஆனாலும் மெல்லச் சுதாரித்துக் கொண்டு சொன்னாள். “அவருடைய பேச்சைக்

கேட்டு ஏமாந்து கடைசி தருணத்தில், அதிர்ஷ்டவசமாய் தப்பித்துக் கொண்டு விட்டவள். இந்த கேசட்டைக் கேளுங்கள். இதன் உதவியால் அவரைத் திருத்திக் கொள்ளுங்கள். அவருக்கு உங்களால் எந்த சுகமும் இல்லையாம். இந்த வார்த்தைகளைக் குறைந்த பட்சம் அப்பாவிகளான சின்னப் பெண்களிடம் சொல்லாமல் இருக்கச் சொல்லுங்கள். வேற்று மனுஷியிடம் தன் மனைவியைப் பற்றி இளப்பமாகப் பேசுபவன் கணவனாய் இருக்க யோக்கியதை இல்லை. அவருக்கு நயமாய் எடுத்துச் சொல்லுங்கள்.

நான் இதையெல்லாம் அவர் மீது கோபத்தாலோ வெறுப்பாலோ சொல்லவில்லை. என்னைப் போன்ற அப்பாவிகளை அவருடைய் பிடியிலிருந்து உங்கள் ஒருவரால்தான் தப்பிக்க வைக்க முடியும். அதனால்தான் சொல்கிறேன்."

"முதலில் நீ வெளியில் நட." ஆள்காட்டி விரலை நீட்டி கத்தினாள். "எங்க வீட்டுக்கே வந்து என் கணவரை ஏசுகிறாயா?"

"ஐயோ! நான் ஏசவில்லைங்க. கணவன் மனைவி ஒருத்தரை ஒருத்தர் ஏமாற்றிக் கொண்டிருந்தால் இனி அந்தக் குடித்தனம்.."

"எங்க குடித்தனம் எப்படி இருக்கணும் என்று சொல்வதற்கு நீ யாரடி? கொழுப்புப் பிடித்து இப்படி வீதியில் அலைகிறாயா? என் கணவனை விட்டால் உனக்கு வேறு யாரும் கிடைக்க வில்லையா? ஆனாலும் ஆண்களுக்கு லட்சம் விவகாரங்கள் ஆயிரம் குறைகள் இருக்கத்தான் செய்யும். அவரவர்கள் ஜாக்கிரதையில் அவரவர்கள் இருக்க வேண்டும். அவ்வளவுதானே தவிர இப்படி வீடு வீடாய் போய் புகார் சொல்லுவதைத் தவிர உனக்கு வேறு வேலை இல்லையா?

பணத்துக்காக வலை விரித்தாயா? சிவப்பாய் இருக்கிறானே என்று பின்னால் சுற்றுகிறாயா?"

சாஹிதி நடுநடுங்கி விட்டாள். ஆனால் அது ஆவேசத்தினால் வந்த நடுக்கம் இல்லை. துக்கத்தினால் வந்த நடுக்கம். அரும்பாடு பட்டு அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

'இதையெல்லாம் சாட்சிய ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினால் உங்கள் கணவரை அதட்டி மிரட்டி, பயமுறுத்தியோ அல்லது நல்லவிதமாய் எடுத்துச் சொல்லியோ திருந்த வழி பண்ணுவீங்க என்று நினைத்தேன். அதற்காக நான் இதையெல்லாம் சொன்னதுமே நீங்க என் கையைப் பற்றிக் கொண்டு 'என் கண்களைத் திறந்து வைத்தாய் அம்மா' என்று சொல்லுவீங்க என்று எதிர்பார்க்கவில்லையே தவிர, நான் போன பிறகாவது உங்கள் கணவருக்கு புத்திமதி சொல்வீங்க என்று நினைத்தேன்.

கொஞ்சம் பாதுகாப்புக்காக பெண் ஒருத்தி இவ்வளவு தூரம் மனசாட்சியை வசித்துக் கொண்டு மனதாலும் வாக்காலும் கணவனை சப்போர்ட் செய்வாள் என்று நினைக்கவில்லை."

"இங்கிருந்து போகிறாயா? போலீசைக் கூப்பிடட்டுமா?"

முதல் முறையாய் சாஹிதி சிரித்தாள். "நான் யாரென்று தெரியாமல் இப்படிப் பேசுறீங்க. உங்கள் கணவரைப் போலீசாரைக் கொண்டு அரெஸ்ட் செய்ய வைக்கணும் என்றால் இந்த கேசட் ஒன்றே போதும்" என்று அங்கிருந்து போய்விட்டாள்.

****

மறுபடியும் புயல் வீசத் தொடங்கிவிட்டது. காலையிலிருந்து இடைவிடாமல் மழை பெய்து கொண்டிருந்தது. வெளியே இடியும்

மின்னலும். மாலைக்குள் அது சீற்றமடைந்தது. சரியாய் அந்தச் சமயத்தில் தான் டி.வி.யில் பாவனாவின் பேட்டி தொடங்கியது.

“மிகச் சாதாரணமான ஒரு குடும்பத்தில் பிறந்து மிகச் சிறுவயதிலேயே அமைச்சராகி விட்டீர்கள். இந்த வெற்றியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?”

விஸ்வத்தின் குடும்பத்தார் முழுவதும் டி.வி. யைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அக்காவை அந்தப் பதவியில் பார்த்த தம்பி தங்கைகள் உணர்ச்சி வசப்பட்டு கைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள். விஸ்வத்தின் மனம் முழுவதும் இருவேறு வேறு உணர்வுகளால் தத்தளித்துக் கொண்டிருந்தது. டி.வி. யில் மகள் ‘பார்த்தாயா அப்பா! சாதித்துவிட்டேன்’ என்று தன்னைப் பார்த்து சிரிப்பது போல் இருந்தது.

தன் அபிப்ராயம்தான் தவறோ என்ற உணர்வு ஏற்பட்டது அவனுக்கு.

“ஒருவர் முன்னுக்கு வரவேண்டும் என்றால் தேவையானது உழைப்பும் உறுதியும்.” பாவனா சொன்னாள்.

“உழைப்பு மட்டுமே இருந்து விட்டால் போதுமா? படிப்பு, பணம், புத்தி சாதுரியம்.. இதெல்லாம் தேவையில்லை நினைக்கிறீங்களா?”

“ஒரு காலத்தில் எனக்கு அந்த மூன்றுமே இல்லை. ஏதோ சாதாரண படிப்பு, புத்தி சாதுரியம்தான் இருந்தன. கையில் சல்லிக்காசு இல்லாத நிலைமை! உழைப்பு இருந்தால் எதையும் சாதித்து விடலாம் என்று எனக்கு சில குறிப்பட்ட சூழ்நிலையில் புரிந்தது. படிப்பும் பணமும் இருந்துவிட்டால் எல்லாவற்றையும் சாதித்து விட முடியும் என்று நினைப்பது தவறு. தேவையானது

தன்னம்பிக்கை. அது இருந்துவிட்டால் எப்படியாவது சந்தோஷமாக வாழ்ந்து விட முடியும்.”

‘கரெக்ட்!’ என்று எண்ணிக கொண்டாள் டி.வி. யைப் பார்த்துக் கொண்டிருந்த சாஹிதி. ஒரு காலத்தில் அவள் படிப்பில் முதலிடத்தில் இருந்த மாணவி. கை நிறைய பணம். ஆனாலும் அவள் இதுபோல் கூனிக் குறுகிப் போய் நடைபிணமாய் மாறிவிட்டாளே? காரணம் என்ன?

சாஹிதியின் கேள்விக்கு பதில் பாவானாவின் பேட்டியிலேயே கிடைத்து விட்டது. பேட்டி எடுத்துக் கொண்டிருந்த பெண் பாவனாவைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள். “குறிப்பிட்ட சூழ்நிலையில் புரிந்தது என்று சொன்னீர்கள். அந்தச் சூழிநிலைகள் என்னவென்று விவரிக்க முடியுமா?”

“மனிதன்... முக்கியமாய் பெண் தன் மூன்று எதிர்கள் யார் என்று தெரிந்துகொள்ள முடிந்தது.”

எதிரே இருந்த பெண்ணின் முகத்தில் ஆர்வம். “பெண்ணுக்கு மூன்று எதிரிகள் யார் மேடம்?”” என்று கேட்டாள் ஆர்வத்துடன்.

“”பாதுகாப்பு இல்லாத உணர்வு, தாழ்வு மனப்பான்மை உணர்வு, அன்பில்லாத உணர்வு.”

‘கொஞ்சம் விவரித்துச் சொல்ல முடியுமா?”

“இருட்டில் இருக்கிறோம் என்று திகிலடைந்து உட்கார்ந்துவிட்டால், வாழ்க்கையின் முடிவு வரையில் தீப்பெட்டி கூட்டிலேயே இருந்துவிடும். எவ்வளவு மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அந்த வாழ்க்கையிலிருந்து வெளியே

வர முடியாமல் போவதும், வெளியே வந்தால் என்னவாகுமோ என்று கூனிக் குறுகிப் போவதும்தான் பாதுகாப்பு இல்லாத உணர்வு. நான் எதற்குமே பயன்பட மாட்டேன் என்று நினைத்துக் கொள்வது தாழ்வு மனப்பான்மை உணர்வு! அடிக்கடி தன்னைப் பற்றியே யோசிப்பது, சிறிய பிரச்சனை வந்தால் கூட அளவுக்கு அதிகமாய் பயப்படுவது இதன் லட்சணம். இது நம்மிடம் இருப்பது தெரிந்துவிட்டால் எதற்கும் உதவாத சந்நியாசி கூட நம்மை பயமுறுத்த முயற்சி செய்வான். மூன்றாவது அன்பு இல்லாமை உணர்வு! தன்னை யாரும் விரும்ப மாட்டார்கள் என்று சந்கோஜத்துடன் ஒதுங்கி இருப்பது. பெண் என்பவள் கொஞ்சம் மிடுக்குடன் இல்லாவிட்டால், எதிர்த்த வீட்டு பெரிய மனுஷன் கூட ஜன்னல் வழியாய்க் கையை நீட்டுவான்."

டி.வி. யைப் பார்த்துக் கொண்டிருந்த பரத்வாஜ் ஆர்வத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு வாழ்க்கையில் திரில்லிங்கை ஏற்படுத்திய சந்தர்பங்கள் மிகவும் குறைவு. நள்ளிரவில் கிரோசினில் நனைந்த உடையோடு ஆதரவில்லாமல் நின்றிருந்த பாவனாவுக்கும் இந்த பாவானாவுக்கும்தான் எவ்வளவு வேறுபாடு! ஆனாலும் பரத்வாஜ் யோசித்துக் கொண்டிருப்பது அது இல்லை. எத்தனையோ எழுத்தாளர்கள், எத்தனையோ பக்கங்களில் எழுதிய கருத்துக்களை அவள் அழகாய் நான்கே வரிகளில் சொல்லிவிட்டாள்.

தன் வாழ்க்கையில் எதிர்ப்பட்ட மூன்று பேர்கள் – பிரமஹம்சா, ராமநாதன், ராமமூர்த்தி மூவரும் பெண்ணின் பலவீனத்தை எப்படி கேஷ் பண்ணிக் கொண்டார்கள் என்பதை மூன்று வாக்கியங்களில் சொல்லிவிட்டாள். அவள் சொன்னது முற்றிலும் உண்மை. எந்தப் பெண்ணுக்காக இருந்தாலும் இந்த மூன்று பிரச்சனைகளைத் தவிர வேறு என்ன இருக்கும்?

“கடைசிக் கேள்வி மேடம். இதையெல்லாம் நீங்க அதிர்ஷ்டமாய் நினைக்கிறீங்களா?”

“அதிர்ஷ்டம் என்றால்?”

அந்தப் பெண் தடுமாற்றமடைந்து “அதான்... ஜாதகம், அதிர்ஷ்டம், இவ்வாறு ஹோம் மினிஸ்டர் ஆனது” என்றாள்.

பாவனா சிரித்தாள். “ஹோம் மினிஸ்டர் வரைக்கும் வராமல் இருந்திருந்தாலும் நிச்சயமாய் இதைவிட சந்தோஷமாய் இருந்திருப்பேன். அதற்காக எல்லா மனைவிகளையும் குடும்பத்தை விட்டுவிடச் சொல்லவில்லை. தாங்க முடியாத கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு வாழ்வதை விட, இருப்பதைக் கொண்டு இன்னும் ஆனந்தமாய் வாழ்வது எப்படி என்று எப்போதும் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று மட்டுமே சொல்கிறேன். இனி ஜாதகம் என்கிறீர்களா? நான் பதிமூன்றாம் தேதி வெள்ளிக்கிழமை நள்ளிரவில் பிறந்தேன். ஆங்கிலேயர்களுக்கு மிகவும் கெட்ட நாள் அது. அதே நேரத்தில் என் சிநேகிதி கூட அதே ஆஸ்பத்திரியில் பிறந்தாள். பிறந்த முகூர்த்த நேரத்திலேயே விதி என் ஜாதகத்தை மாற்றிவிட்டது. ஆனாலும் சந்தோஷமாய்த்தான் இருக்கிறேன். இருவரின் ஜாதகம் ஒன்றுதான் என்றாலும் நான் டிவி. யில் பேட்டி அளித்துக் கொண்டிருக்க்றேன். அந்தப் பெண் டி.வி. யைப் பார்த்துக் கொண்டிருப்பாள். அதுதான் வித்தியாசம்.”

சிரிப்பு அலைகள்.

நிகழ்ச்சி முடிவடைந்தது.

38

சாஹிதி எழுந்து டி.வி. யை அணைத்துவிட்டுக் கீழே வந்தாள். வீடு முழுவதும் ஆளரவமில்லாமல் இருந்தது. வெளியே மழை சொவேன்று பெய்து கொண்டிருந்த சத்தம் கேட்டது. அவள் படி இறங்கிக் கொண்டிருந்த போது அப்பொழுதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்... மழைத் தாரைகள் உடம்பிலிருந்து சொட்டச் சொட்ட...

ராமநாதன்!

“என்னது? இந்த வேளையில் வந்திருக்கிறாய்? என்ன வேண்டும் உனக்கு?” பயத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்.

”எங்க வீட்டிற்குப் போய் என் மனைவியிடம் ஏதேதோ உளறினாயாமே?” ஓரடி முன்னோக்கி வைத்தான்.

அவள் பார்வை கதவின் மேல் விழுந்தது. அவன் ஏற்கனவே அதைச் சாத்தியிருந்தான்.

விகாரமாய்ச் சிரித்துக் கொண்டே “நீ என் மனைவியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாற்போல் நானும் உன்னைப் பற்றி உலகத்துக்கு அத்தனையும் சொல்லிவிடலாம் என்று இருக்கிறேன். நீ எழுதிய லெட்டரை வெளிப்படுத்தப் போகிறேன்.”

சாஹிதி நடுங்கிவிட்டாள். காதல் என்று எண்ணிவிட்ட கவர்ச்சியில் என்றோ எழுதியக் கடிதம் அது.

“சொல்லு! நானும் உன்னைப் பற்றி அப்படிப் பண்ணினால் எப்படி இருக்கும்?” சிரித்தான்.

“அப்படி நான் பண்ணாமல் இருக்கணும் என்றால் இன்றிரவு என்னோடு கழிக்கணும். அல்லது புதிதாய் சொத்து வந்திருப்பதால் ஒரு லட்சம் என் கையில் கொடுத்துவிடு. ஜான்சி ராணி போல் தைரியமாய்ப் போய் என் மனைவியிடம் சொன்னதற்கு நான் உனக்குக் கொடுக்கும் தண்டனை இது.”

ஒரு காலத்தில் ‘என் வாழ்க்கையின் ஒளி நீதான்’ என்று சொன்னவன் இன்று எவ்வளவு குரூரமாய் தென்படுகிறான்.

அவளுக்குப் பயமாக இருக்கவில்லை. ஆனால் துக்கமாக இருந்தது. தன்னைப் பற்றியில்லை. மனிதர்களைப் பார்த்து. மனிதர்கள் வெளியில் ஒருமாதிரியாகவும், உள்ளுக்குள் இன்னொரு மாதிரியாகவும் இருப்பார்கள் என்று அவளுக்குத் தெரியாது. பரமஹம்சா ஒருத்தன்தான் அவ்வாறு இருப்பதாய் எண்ணியிருந்தாள். எல்லோருமே அப்படித்தானா?

அவனிடமிருந்து குப்பென்று நாற்றம் அடித்தது. குடித்துவிட்டு வந்திருப்பான் போலும். வேடன் கையில் அகப்படாமல் ஓடும மான்குட்டியைப் போல் அவள் அந்த அறையில் அங்கும் இங்கும் ஓடியதைப் பார்த்து அவன் உறுதி அதிகமாகிவிட்டது. வெளியே காற்றின் ஓசை அவள் கத்தலை விழுங்கி விட்டது. வெளியே மழை வலுத்தது. வானம் குமுறிக் கொண்டிருந்தது. பூமி வெடித்து விடும் போல் இடி இடித்துக் கொண்டிருந்தது. அவன் கைகளுக்கு இடையில் அவள் நைட்டீ சிக்கிக் கொண்டுவிட்டது. அதற்குள் அவள் கைக்கு மேஜைமீது வைத்திருந்த பூந்தொட்டி தட்டுப்பட்டது. அதை எடுத்து அவன் முகத்தில் பலமாக அடித்தாள். அவன் சட்டென்று ஓரடி பின் வாங்கினான். வரிசையாய் மூன்று முறை அவள் அதனால் அடித்ததுமே அவன் முகம் சப்பையாகி விட்டது. நேற்றியிலிருந்தும், மூக்கிலிருந்தும் கொட்டிய ரத்தத்தோடு பயங்கரமாக காட்சி அளித்தான்.

அவள் போனை நோக்கி வேகமாய் ஓடி மறு முனையிலிருந்து “பாவானா ஹியர்” என்று கேட்டதுமே ‘நான்தான் சாஹிதி” என்றாள் கலவரத்துடன். அந்த பதற்றத்தில் பின்னாலிருந்து அவன் எழுந்து வந்ததைக் கவனிக்கவில்லை. அவள் போனில் ஏதோ சொல்ல வரும் போது திடீரென்று முதுகில் எரிச்சல் ஏற்பட்டது. ராமநாதன் ஆத்திரத்துடன் அவள் முதுகில் கத்தியால் குத்தினான். அவள் வீலென்று அலறிக்கொண்டே திரும்பினாள். அவன் திரும்பவும் கத்தியை ஓங்கினான். ஐந்து நிமிடங்கள் கழித்து பாவனா பரபரப்புடன் அங்கே வந்து சேருவதற்குள் இருவரும் மூலைக்கு ஒருவராய் விழுந்துக் கிடந்தார்கள்.

சாஹிதியைச் சுற்றிலும் ரத்தம் குளம் கட்டி இருந்தது. அம்பு பட்ட பறவையைப் போல் இருந்தாள் அவள்.

“சாஹிதி... சா..ஹி ...தி..” என்றாள் பாவனா அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டு. சாஹிதியின் கண்கள் அதற்குள் மூடிக் கொண்டிருந்தன.

“அவன்... அவன் செத்துவிட்டானா?” என்றாள் ஹீனஸ்வரத்தில். பாவனா திரும்பிப் பார்த்தாள். ராமநாதன் நினைவற்று விழுந்துக் கிடந்தான். மூச்சு மெல்ல வெளி வந்து கொண்டிருந்தது.

“என்ன? என்ன நடந்தது?” கேட்டாள் பாவனா, அவள் தலையைக் கைகளில் எடுத்துக் கொண்டாள்.

“பாவனா.. எனக்கு... எனக்கு ஒரு உதவி பன்னுவாயா?”

‘சொல்லு சாஹிதி. கண்டிப்பாய் செய்கிறேன்” என்றாள் பாவனா, அவளை அணைத்துப் பிடித்துக் கொண்டு. சாஹிதியின் உடம்பிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் உயிர் போய்க் கொண்டிருந்தது தெரிந்தது.

சாஹிதி சக்தியை வரவழைத்துக் கொண்டு சொன்னாள். “அம்மாவின் அஸ்தியை இன்னும் கங்கையில் கரைக்கவில்லை.”

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாமல் பாவனா அவளைக் குழப்பத்துடன் பார்த்தாள். சாஹிதியின் குரல் பலவீனமாய் ஒலித்தது. “என்னோட மனிதர்கள் என்று எனக்கு யாருமே இல்லை. அம்மாவின் அஸ்தியை கங்கையில் கரைப்பதற்கு ஏற்பாடு பண்ணுகிறாயா?” தீனமாய் கேட்டாள்.

பாவனாவின் கண்களில் கண்ணீர் பொங்கி வந்தது. வாழ்க்கையில் எத்தனையோ வேதனைக் காட்சிகளைக் கண்டிருக்கும் பாவனா அவள் கோரிக்கையைக் கேட்டு மனம் கரைந்துவிட்டாள். வாழ்ந்து வந்த நாளெல்லாம் அந்தப் பெண் எவ்வளவு தனிமையை அனுபவித்து வந்திருக்கிறாள் என்றும் மனதளவில் எவ்வளவு தூரம் குன்றிப் போயிருக்கிறாள் என்று அந்த ஒரு கோரிக்கையின் மூலமே தெரிந்தது.

அவளை மேலும் இறுக்கமாய் அணைத்துக்கொண்டே “கண்டிப்பாக” என்றாள் கண்கள் பனிக்க.

சாஹிதி பெரும் முயற்சி செய்து கைகளை தூக்கினாள். “அம்மாவின் அஸ்தியை கங்கையில் கரைப்பதற்கு முன்னால் அந்த அயோக்கியன் பரமஹம்சாவின் ... அஸ்தியையையும் .... கங்கையில்... க...ரை..க்க ...ணு ..ம். அவ்...வா....று... வாக்குத்..... த...ரு... வா...யா?” புயலில் சிக்கிக் கொண்ட மலரைப் போல் பாவனாவின் இதயம் துடிதுடித்தது.

‘எவ்வளவு வேதனையை அனுபவித்து இருப்பாள் என் சிநேகிதி! உன் வருத்தத்தை எல்லாம் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இனிமையான கனவுகளுடன், நிம்மதியாய் கொசுவலைக்குள் உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் தந்தையாய் உள்ளே

நுழைந்தான். ஒவ்வொரு நாள் அதிகாலையிலும், உதய பாஸ்கரனின் கிரணங்கள் நிர்மலமாய் தட்டி எழுப்ப வேண்டிய வைகறைப் பொழுதில் புயலைத் தோற்றுவித்தான். தந்தை மகள் உறவை மறந்து காமத்தை நாடினான். தாயைக் கொன்றான். உயிரோடு இருந்த வரையிலும் துன்பத்தையே தந்தான். உன் பகையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. உன் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்."

பாவனா சாஹிதியின் கையில் தன் கையை வைத்தாள். சாஹிதியின் இதழ்களில் ஆனந்தத்தின் கடைசி முறுவல்... வானத்திலிருந்து உதிர்ந்த நட்சத்திரம் மேகங்களுக்கு இடையே மோதிக்கொண்டு, இடியின் தாக்கலுக்கு நலிந்து, மின்னலின் சூட்டில் வெந்து, எல்லையில்லாத சூனியத்தில் ஒன்றறக் கலந்துவிட்டது. எங்கேயோ பிறந்த ஒரு குழந்தை எங்கேயோ வளர்ந்து, இம்மனிதர்களுக்கு இடையே ஒன்ற முடியாமல் பரந்த சூனியத்தை நோக்கிப் போய் விட்டது.

வெளியில் மழை கொஞ்சம் விட்ட போதிலும் ஜன்னல் கண்ணாடியில் மழை நீர்த் திவலைகள் தெறித்து விழும் சத்தம் இன்னும் அப்படியே கேட்டுக் கொண்டிருந்தது.

ராமநாதன் மூர்ச்சைத் தெளிந்து லேசாய் அசைந்தான். பாவனா கொஞ்சம் சுதாரித்துக் கொண்டு அவன் பக்கம் பார்த்தாள்.

"என்னை ஆஸ்பத்திரிக்கு சீக்கிரமாய் அழைத்துக் கொண்டு போங்க. என் உயிர் போய்க் கொண்டே இருக்கு."

பாவனா சாஹிதியின் உடலைத் தரையில் கிடத்தினாள். சாஹிதியைச் சுற்றிலும் ரத்தம் குளமாய் தேங்கி இருந்தது. பாவனா ராமநாதனிடம் வந்தாள்.

“ஆஸ்பத்திரி... ஆம்புலென்ஸ்... ஆம்புலென்ஸ்..’ முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அவள் அவனை இரு கைகளாலும் சிரமப்பட்டு தூக்கிக்கொண்டு வெளியே வந்தாள். பாரத்தை முழுவதும் அவள் மீதே போட்டான். மூக்கு உடைந்து, கண்களுக்குக் கீழே தோல் வழண்டு, தலையிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இன்னும் ஐந்து நிமிடங்களில் ஆஸ்பத்திரியில் சேர்க்காமல் போனால் உயிர் பிழைப்பது கஷ்டம்.

அவள் அவனைக் காரில் படுக்க வைத்துவிட்டு ஸ்டீரிங் முன்னால் உட்கார்ந்து காரை ஸ்டார்ட் பண்ணினாள்.

மழையைக் கிழித்துக் கொண்டு கார் புறப்பட்டது. ‘தாங்க்ஸ்” என்று முணுமுணுத்தான். அதற்குள் டெலிரியம் ஸ்டேஜ் தொடங்கி விட்டிருந்தது. முன்னோக்கி துள்ளி விழுந்தான் அவன். அவள் பொருட்படுத்தவில்லை. “தாகம்.. தாகம்” என்றான்.

அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவள் கவனம் எல்லாம் கார் ஓட்டுவதிலேயே நிலைத்திருந்தது.

பத்து நிமிடங்கள் ஆயிற்று. கார் ஒரு ஏரியின் பாலத்தின் மேல் வந்து சேர்ந்தது. கீழே நீரின் வேகம் உக்கிரமாய் இருந்தது.

அவள் காரை நிறுத்தினாள். அவள் முகத்தில் எந்த உணர்வுகளும் இருக்கவில்லை. வெளியில் மின்னிய போது ராமநாதன் மேலும் பயங்கரமாய், விகாரமாய் தென்பட்டான். மனதில் இருந்த விகாரத்துடன் ஒப்பிட்டால் அது ரொம்ப குறைவுதான். அவள் அவனைப் பார்த்தாள். பத்துபேருக்கு முன்னால் தன்னைக் குற்றவளியாக்கியது... கணவன் அடித்த போது யாருமே பார்க்காதவாறுரு கண்ணைச் சிமிட்டி வெற்றிப் பெருமிதத்துடன் சிரித்தது நினைவுக்கு வந்தது.

அவள் அப்படியே காத்திருந்தாள், அவன் நாடியைப் பரிசோதித்துக் கொண்டே....

அப்படியே பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

இரண்டு நிமிஷம் கழித்து உயிர் போய்விட்டது. அவள் காரிலிருந்து அவன் உடலை வெளியே இழுத்து பாலத்தின் விளிம்பு வரையிலும் கொண்டு வந்தாள்.

'சாரி, ராமநாதன்! நீ எனக்குப் பண்ணிய துரோகத்திற்கு உன் பிணத்தை மீன்களுக்கு உணவாக போட்டாக வேண்டிய கட்டாயம்" என்று கீழே தள்ளிவிட்டாள்.

பிரவாகத்தில் அவன் உடல் அடித்துக் கொண்டு போயிற்று.

அவள் வேகமாய் சாஹிதியின் வீட்டிற்குத் த்ரயும்பி வந்தாள். சாஹிதி இன்னும் அப்படியே விழுந்து கிடந்தாள். அவள் கைக்குட்டையை சுற்றிக்கொண்டு போனை எடுத்து பரமஹம்சாவின் நம்பரை டயல் செய்தாள். மறுமுனையிலிருந்து அவன் குரல் ஹலோ என்று கேட்டதுமே "அங்கிள்! நான் தான் சாஹிதி. நீங்க அர்ஜென்டாய் இங்கே வர முடியுமா?" என்று அவன் பதிலுக்குக் காத்திருக்காமல் போனை வைத்துவிட்டாள். மழையின் சத்தித்தில் தன் குரலை அடையாளம் கண்டு கொள்வது கஷ்டம் என்று அவளுக்குத் தெரியும்.

அதற்குப் பிறகு அவள் ராமநாதனின் கையிலிருந்து விழுந்து கிடந்த கத்தியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். வாசற்கதவின் கைப்பிடியோடு அதைக் கயிற்றால் கட்டினாள். இருட்டில் அது கண்ணுக்குத் தெரியவில்லை. கத்தியின் பிடியைக் கைக் குட்டையால் சுத்தமாகத் துடைத்தாள். கதவை வெறுமே சாத்திவிட்டு இருட்டில் நின்றாள். அவள் இந்தக் காரியத்தை

எல்லாம் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் தேர்ச்சி பெற்ற நபர் போல் செய்தாள்.

அதற்குள் தொலைவில் கார் வரும் ஓசைக் கேட்டது.

பரமஹம்சா போட்டிகோவில் காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான். கதவின் கைப் பிடியைக் கையால் பிடித்துத் தள்ளினான். கதவு திறந்து கொண்டது. அவனுக்குச் சந்தேகம் வரவில்லை.

விடிவிளக்கு வெளிச்சத்தில் சாஹிதி சோபாவின் மீது படுத்துக் கொண்டிருப்பது தென்பட்டது. "ஏன் இப்படி இருட்டில் படுத்துக்கொண்டு இருக்கிறாய்?" போய் பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டு கேட்டான்.

அதற்குள் வெளியே பாவனா கதவின் கைப்பிடியோடு கட்டியிருந்த கத்தியைப் பிரித்தாள். ஜன்னல்வழியே உள்ளே வீசியெறிந்தாள்.

"என்ன சத்தம்?" என்றான் பரமஹம்சா.

அவள் மெயின் கேட்டிற்கு வெளியே வந்தாள். வலது பக்கம் காம்பவுண்ட் சுவருக்குப் பக்கத்தில் அவள் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தொலைவில் இரு போலீசார் ரோந்து வந்து கொண்டிருந்தார்கள்.

'இதென்ன ஈரம்? அழுது கொண்டு இருக்கிறாயா? அசடே! உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? தனியாய் இருந்ததால் பயமாக இருந்திருக்கும். இனிமேல் நான் உன்னோடு கூடவே இருக்கிறேன். என்னோடு கழிப்பதன் மூலம் இன்றிரவிலிருந்து உன் வாழ்க்கையே மாறிவிடப் போகிறது. கடவுளின் அம்சம் உன்னுள் நுழைந்து புனிதமானவளாக மாற்றிவிடப் போகிறது" என்று அவளைத் தடவினான். ஈரம தட்டுப்பட்டது.

“ஏன், அழுகிறாயா? என்றான். அப்பொழுதுதான் கேட்டது ஏதோ ஓலம் போன்ற சத்தம்.

காரில் உட்கார்ந்துகொண்டு வீலென்று அலறிய பாவனா, உடனே காரைக் கிளப்பி பங்களாவுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தி உள்ளே நுழைந்தாள்.

காரிலிருந்து இறங்கி ஓட்டமாய் ஓடிப படிகளில் ஏறினாள். சைக்கிளில் வந்து கொண்டிருந்த கானிஸ்டேபிள்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

முதலில் ஒரு அலறல், பிறகு போலீஸ் விசில் சத்தம் கேட்டதுமே பரமஹம்சாவுக்குச் சந்தேகம் வந்து சட்டென்று எழுந்து ஸ்விட்சைப் போட்டான்.

திடீரென்று வெளிச்சம் வந்ததால் அந்த வெளிச்சத்திற்குக் கண்கள் கூசவே ஒரு வினாடி கண்களை அழுத்தமாக மூடித் திறந்தான். பக்கத்தில் சாஹிதியின் உடல், சுற்றிலும் ரத்தம், தொலைவில் கத்தி தென்படவே கலவரமடைந்து விட்டான். அவன் உடம்பிலும் ரத்தம் ஒட்டிக கொண்டிருந்தது.

அதற்குள் கதவிற்கு அருகில் பெரிதாய் “கொலை! ஐயோ, கொன்றுவிட்டான்” என்று கேட்கவே, நிமிர்ந்து பார்த்தான். வாசலுக்கு அருகில் சிம்மாசலம் கத்திக் கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னாடியே படியேறி வேகவேகமாய் வந்துக் கொண்டிருந்தாள் பாவனா. போலீஸ் விசில் சத்தம் மிக அண்மையில் கேட்டது.

பரமஹம்சா பயந்துவிட்டான். நடுநடுங்கியபடி “நான் இல்லை. நான் இந்தக் கொலையைச் செய்யவில்லை” என்று பெரிதாய்க் கத்தினான். போலீசார் பாவனாவைப் பார்த்ததும் சல்யூட் செய்தார்கள்.

‘ஒருத்தர் இங்கேயே இருந்து இன்னொருத்தர் இன்ஸ்பெக்டரை அழைத்துக் கொண்டு வாங்க. அந்தப் போனைத் தொட வேண்டாம். அதன்மேல் சாஹிதியின் விரல் அடையாளம் இருக்கும்” என்றாள் பாவனா நிதானமாய்.

****

அதற்குப் பிறகு சம்பவங்கள் துரித கதியில் நடந்தேறின.

அன்றிரவு சாஹிதியிடமிருந்து கலவரத்தோடு வந்த தொலைபேசி அழைப்பை பாவனாவுக்கு கனெக்ஷன் கொடுத்ததாக பி.ஏ. சொன்னான். தான் போனபொழுது பரமஹம்சா சாஹிதியின் பக்கத்தில்ருந்து எழுந்து கொண்டிருந்தான் என்று சிம்மாசலம் சொனான். அந்த வீட்டிலிருந்து அலறல் கேட்டது என்றும், தாம் போனபொழுது சாஹிதி இறந்த நிலையில் விழுந்துக் கிடந்தாள் என்றும் கானிஸ்டேபிள்கள் சாட்சி சொன்னார்கள். கத்தியின் மீது பரமஹம்சாவின் விரல் ரேகைகள் கிடைத்தன.

குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்த பரமஹம்சாவுக்கு கத்தியின் மீது தன் விரல்ரேகைகள் எப்படி வந்திருக்கும் என்றுதான் புரியவில்லை. தான் போனபொழுது இறந்துகிடந்த சாஹிதி எப்படி அலறி இருப்பாள்? அந்தக் குரல் சாஹியின் குரல் இல்லை என்று அவன் ஒருத்தனுக்குத்தான் தெரியும். ஆனால் அவன் வாதத்தை அவன் லாயர் கூட நம்பவில்லை. இறுதி சாட்சியம் பாவனாவுடையது. அவள் கூண்டில் ஏறி நின்றுகொண்டு சத்தியம் பண்ணிவிட்டுச சொல்லத் தொடங்கினாள்.

“எனக்கு அன்றிரவு சாஹிதியிடமிருந்து போன் வந்தது மிஸ்டர் ஜஸ்டிஸ்! பரமஹம்சா குடித்திருக்கிறான் என்றும், தனக்குப் பயமாக இருப்பதால் உடனே வரச் சொல்லியும் போன்

பண்ணினாள். போன் கட் ஆகும் முன் கதறல் கேட்டது. "அங்கிள்! உங்களுக்கு இது நியாயமில்லை. விடுங்கள்' என்ற சாஹிதியின் வார்த்தைகள் ரிசீவரிலிருந்து கேட்டன. நான் உடனே புறப்பட்டேன்."

"போய்!" கத்தினான் பரமஹம்சா.

'மிஸ்டர் பரமஹம்சா! நீங்க நடுவில் குறுக்கிட வேண்டாம்." எச்சரித்தார் ஜட்ஜ். பாவனா தொடர்ந்தாள்.

"நான் போனபொழுது கடைசியாய் அலறல் சத்தம் கேட்டது. என்னோடு கூட சிம்மாச்சலமும் இருந்தான். அந்த நேரத்தில் தெருவில் போய்க் கொண்டிருந்த இரண்டு கானிஸ்டேபிள்கள் உள்ளே வந்தார்கள். முதலில் நான் போனேன். பரமஹம்சா கத்தி வீசி எரிந்ததைப் பார்த்தேன். சாஹிதி எனக்குப் போன் பண்ணிய ரிசீவர் இன்னும் மேஜை விளிம்பில் தொங்கிக் கொண்டே காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. தனியாய் இருந்த சாஹிதியைக் கற்பழிக்க முயன்றதில்..."

"ஐ அப்ஜெச்ட் பர் இட்" என்றார் டிபென்ஸ் லாயர். 'சாட்சி எதையெதையோ ஊகித்துக் கொண்டு பேசுகிறார்."

"நான் ஊகித்துக் கொண்டு பேசவில்லை. பரமஹம்சா மூலமாய் தான் எவ்வளவு நரகவேதனையை அனுபவித்து வந்திருக்கிறாள் என்று சாஹிதி தன் டைரியில் எழுதியிருக்கிறாள். இதோ அந்த டைரி. மிஸ்டர் ஜஸ்டிஸ்! இவ்வ்வளவு துன்பம் பகைவர்களுக்குக் கூட வரவேண்டாம். தாயை மணந்துக் கொள்கிறேன் என்று ஏமாற்றி மோசம் செய்துவிட்டான். மகளை விரும்பினான். பணத்துக்காக துன்புறுத்தினான். 'நீ எனக்குத் தந்தையைப் போன்றவன். என் பெற்ற தாய்க்குக் கணவன். நீ என் மீது ஆசை

வைப்பது தவறு' என்று அந்தச் சின்னப் பெண் கைக் கூப்பி வேண்டிக் கொண்டபோதும் கேட்காமல், கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு துரத்தினான். மகளையே மானபங்கம் பண்ண முயன்ற இந்த பரமஹம்சாவை எந்த விதமாய் தண்டிக்கப் போகிறீர்கள்? கடவுள் அவதாரம் என்று விட்டு விடப் போகிறீர்களா? சாட்சாத் கடவுள் என்று தொழப் போகிறீர்களா?"

கேலரியில் இருந்த சிம்மாசலம் எழுந்து நின்று கால் செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டான். "இந்தத் திருட்டு ராஸ்கல் கடவுள் அவதாரமா? டேய் பாவி மகனே!" என்று செருப்பை வீசி எறிந்தான். ஜனங்கள் அதற்குள் பாவனாவின் வார்த்தைகளால் தூண்டப்பட்டு இருந்தார்கள். சிறிய சந்தர்ப்பம் கிடைத்ததும் அவர்களுடைய ஆவேசம் கட்டுக்குள் அடங்காமல் போய்விட்டது. சாமியார் போல் நடமாடிக்கொண்டு மகளையே கற்பழிக்க முயன்றான் என்று தெரிந்ததுமே யார் சும்மா இருப்பார்கள்? செருப்புகள் வெள்ளமாய் வந்து மூழ்கடித்தன. நீதிமன்ற வரலாறிலேயே என்றுமே நடந்திராத இந்தச் செயலுக்கு ஜட்ஜ் திகைப்படைந்து போனாலும், உடனே தேறிக் கொண்டு ஜனங்களை எச்சரித்தார்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு நிலைமை கட்டுக்குள் வந்தது.

தீர்ப்புப் படித்துக் காட்டப்பட்டது.

"பயந்த நிலையில் சாஹிதி செய்த போன் கால் பாதியிலேயே கட் ஆனது, பாவனா வந்த போது கேட்ட அலறல் சத்தம், கத்தியின் மீது விரல் ரேகைகள் பதிந்து இருப்பது.. எல்லாமாய் சேர்ந்து பரமஹம்சாவை குற்றவாளியாய் நிரூபிக்கின்றன. சாஹிதியின் டைரியில் எழுதியதைக் கொண்டு பரமஹம்சா எப்படிப்பட்டவன்

என்று தெளிவாகப் புரிகிறது. இப்படிப்பட்ட கீழ்த்தரமான்வர்கள் இருப்பது சமுதாயத்திற்கு வெட்கக்கேடு.

கொலை குற்றத்திற்காவும், கற்பழிக்க முயன்றதற்காகவும் பரமஹம்சாவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது."

கோர்ட் வராண்டாவில் அவனை அழைத்துச் சென்று கொண்டிருந்த போது பாவனா எதிர்பபட்டாள். அவன் நின்று சொன்னான். "ஜனங்கள் அன்று ஏசுவை புரிந்து கொள்ளவில்லை. இன்றைக்கு என்னையும் புரிந்து கொள்ளவில்லை. இந்த ஜனங்களுக்காக நான் இரக்கப்படுகிறேன். உயிரை தியாகம் செய்கிறேன்."

"கண்டிப்பாக தியாகம் செய்யுங்கள் சுவாமி. உங்கள் மரணத்தை ஜனங்கள் கருணையோடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்" என்றாள் பாவனா அந்த சைக்கோபாத்திடம். "அது போகட்டும். நீங்கக் எனக்கு ஒரு உதவி பண்ணனும். மரணம் அடைந்த பிறகு உங்க உடல் எனக்கு வேண்டும்."

"எதுக்கும்மா? என் உடலை பத்திரப்படுத்தி வைக்கும்படி அந்தக் கடவுள் உனக்கு உத்தரவு கொடுத்து இருக்கிறாரா?"

"இல்லை சுவாமி. உங்க அஸ்தியை கரைத்த பிறகுதான் என் தாயின் அஸ்தியைக் கரைப்பேன் என்று அவளுடைய மகளுக்கு வாக்குறுதி கொடுத்துள்ளேன். அதனால்தான்" என்று மெதுவாய் தன் உள்ளங்கையை விரித்தாள். அவள் உள்ளங்கை நடுவில் மச்சம்!

பரமஹம்சாவின் முகம் களை இழந்தது.

****

இரவு பதினோரு மணி அடித்தது.

தெருவோரத்தில் யாரோ கையை உயர்த்தி லிப்ட் கேட்டதால் பாவனா கரை நிறுத்தினாள். அவனைப் பார்த்துவிட்டு "நீங்களா?" என்றாள். அவன் பரத்வாஜன்.

அவன் வந்து காரில் ஏறிக்கொண்டே "ரொம்ப நாட்களுக்குப் பிறகு சந்திக்கிறோம் இல்லையா. ஹோம் மினிஸ்டராய் இருந்துகொண்டு எஸ்கார்ட் இல்லாமல் இந்த வேளையில் கிளம்பி இருக்கிறாய்? அந்தக் காலத்து ராஜாக்களைப் போல் நாடு எப்படி இருக்கு என்று வேவு பார்ப்பதற்காகவா?" சிரித்துக் கொண்டே கேட்டான்.

அவள் சிரிக்கவில்லை. "காலையில் பரமஹம்சா தூக்கிலிடப் பட்டான்" என்றாள்.

"ஆமாம். பேப்பரில் படித்தேன்."

"காலையிலிருந்து மனசே சரியாக இல்லை. சாதித்தது வெற்றிதான் என்றாலும் ஏனோ அத்ருப்தி. அதனால்தான் இப்படித் தனியாய் கிளம்பிவிட்டேன்."

தொலைவிலிருந்து மைக்கில் "எந்தரோ மகானுபாவுலு" என்று தியாகராஜ கீர்த்தனை ஒலித்துக் கொண்டிருந்தது.

"இந்தப் பக்கமாய் எங்கே கிளம்பினாய்?"

"ஒரு காலத்தில் இந்த சந்துக்குள்ளே குடியிருந்தோம்."

அவன் பதில் சொல்லவில்லை. கோவிலில் இருந்து ஒலித்துக் கொண்டிருந்த பாட்டின் கிராமபோன் ரிக்கார்ட் பழுதடைந்து

விட்டது போலும் “எந்தரோ... எந்தரோ...எந்தரோ..” என்று திரும்பத் திரும்ப பாடிக் கொண்டிருந்தது.

“சரியான இடத்தில்தான் நின்று விட்டது” என்றாள் பாவனா. “எத்தனையோ ஆண்கள் பெண்களை துன்புறுத்துவதற்காக, அவர்களை எப்படியெல்லாம் அடக்கிக் காலடியில் அடக்கி வைப்போம் என்று பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அன்று டி.வி. பேட்டியில் கூட இதையேதான் சொன்னேன். உங்களைப் போன்ற எழுத்தாளர்கள் சமூக விழிப்புணர்வோடு கதைகளை எழுத வேண்டும். அப்பொழுது தான் பெண்ணினத்திற்கு விமோசனம் கிடைக்கும். ஒவ்வொரு ஆணும் ஏமாற்று பேர்வழிதான் என்று எழுதுங்கள். என்னையே உதாரணமாய் எடுத்துக் கொள்ளுங்கள். என் வாழ்க்கையில் ஒருவன் கூட நல்லவன் தென்படவில்லை. இந்த உலகமே பொய்யும் பித்தலாட்டம் நிரம்பியது. ஏன் சிரிக்கிறீர்கள்?”

“ஒன்றும் இல்லை. கல்யாணம் ஆவதற்கு முன் நீ தமிழ் நாவல்களை நிறைய படிப்பாயோ?”

“இல்லை.”

“.....”

“நீங்க எதுக்கு சிரித்தீங்க? அதைச் சொல்லுங்கள் முதலில்.”

“அமைச்சர் ஆவதற்கு முன் நீயும் கதைகள் கட்டுரைகள் எழுதி இருக்கிறாய் இல்லையா. உன் கதையையே ஒரு நாவலாய் எழுதி, முடிவில் “அன்பார்ந்த வாசகர்களே, பரத்வாஜ் கடைசியில் ஏன் சிரித்தான்?’ என்று முடித்துவிடு. பழைய நாவலில் நகலாய் இருந்தாலும் நன்றாக இருக்கும்.

கிராமபோனைச் சரி செய்து விட்டார்கள் போலும். “அந்தரிகி வந்தனமுலு” என்று பாட்டு திரும்பவும் தொடங்கியது.”

(நிறைவடைந்தது)